ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

ஶாஸ்த்ரஜந்யஜ்ஞாந யோகஜந்யஜ்ஞாநங்களைவிட

ஆயிரமடங்கதிஶயித்த

பகவத்ப்ரஸாதஜந்ய தத்வயாதாத்ம்யஜ்ஞாநவித்தமராய்

ப்ரபந்நஜநகூடஸ்தராய் எழுந்தருளியிருக்கும்

மஹாப்ரபாவரான

நம்மாழ்வாருடைய

பகவதநுபவ பரீவாஹரூபமான, த்ராவிட

வேதஸாகரமாகிய

திருவாய்மொழி

எட்டாம்பத்து

இதற்கு

தெள்ளாரும் ஞானத்திருக்குருக்கைப்பிரான் பிள்ளான்

அருளிச்செய்த ஆறாயிரப்படியும்,

அன்போடழகிய மணவாளஜீயரருளிச் செய்த

பன்னீராயிரப்படி உரையும்

தெள்ளியதா நம்பிள்ளை செப்புநெறிதன்னை

வள்ளல் வடக்குத்திருவீதிப் பிள்ளை அருளிச்செய்த

ஈடு முப்பத்தாறாயிரப்படியும்,

ஸபாபண்டிதரான

ஸ்ரீமான், புதுப்பட்டு-திருவேங்கடாசாரியரால்

பரிசோதிக்கப்பட்டு

ஸ்ரீவைஷ்ணவ கிரந்த முத்ராபக சபையாரால்

சென்னை,

ஸ்ரீநிகேதன முத்ராக்ஷர சாலையில்

அச்சிட்டு ப்ரசுரம் செய்யப்பட்டது.

பிரஜோத்பத்தி ௵

விலை ரூபா 2—0—0]   1931   [தபால்சார்ஜி வேறு.

146, தங்கசாலைத்தெருவில் ஷை சபையில் கிடைக்கும்,

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

திருவாய்மொழி

எட்டாம்பத்து

முதற்றிருவாய்மொழி

தேவிமார் - ப்ரவேஸங்கள்.

ஆறு ;—(தேவிமாராவார்) கீழ்த்திருவாய்மொழியிலே மநோரதித்தபடி பெறுமையாலே அத்யந்தமவஸந்நராய், எம்பெருமானுடைய வாஸ்ரிதவாத்ஸல்யாதிகுணங்களை யதிஸங்கைபண்ணும்படி கலங்கி, " காணுமாறருளாய் " என்று கூப்பிடுகிறார். *

ப.—எட்டாம்பத்தில். இப்படி யேழாம்பத்திலே - உபாயநிவர்த்யமான விரோதி ப்ராபல்யத்தையநுஸந்தித்து, தந்நிவ்ருத்திப்ரகாரத்தை யிப்பத்திலே யநுஸந்திப்பதாக, விரோதிநிவர்த்தகனுடைய வாஸ்ரிதாகாங்க்ஷாதீந ஸாந்நித்யத்தையும் ஸ்வவிஷயத்திலே ஸங்கமுண்டேயாகிலும் இதரஸங்கமற்றார்க்கல்லது ஸுலபனல்லனென்னுமத்தையும், ஸ்வாஸ்ரிதஜநவிஸ்லேஷத்தில் தான் அஸஹாயனென்னும்படியான ப்ரேமஜநகத்வத்தையும், ஆஸ்ரிதவிஷயத்திலத்யந்ததுர்மோசமான விரோதிகளைப்போக்கி அவர்கள் ஸம்பத்தே தன் ஸம்பத்தாயிருக்குமாகாரத்தையும், ப்ராப்யபூதனை தன்பக்கலிலே ப்ராவண்யமுண்டானால் ப்ரதிபந்தகம் தன்னடையே கழலுமென்னுமிடத்தையும், ஆஸ்ரித விரோதியைப் போக்குகைக்கு ஆஸந்நமாயிருக்கு மிருப்பையும், அந்தஸ்த்திதனாய்க்கொண்டு அஸேஷவிரோதிநிவர்த்தகனும்படியையும், அப்ருதக்ஸித்தமான வாத்மஸத்தியைப்ரகாசிப்பித்து ஔபாதிக தோஷத்தினுடையவநிதூரீகரணத்தையும், அபாஸ்ததோஷனான வதிகாரியை யதிஸயிததாஸ்யாம்ருதத்திலே மக்நனாக்கும்படியையும், ஸ்வதாஸ்யத்தினு மதிகமான ஸ்வகீயதாஸ்ய போகத்தை ப்ரகாசிக்கும்படி தத்விரோதிநிவர்த்தந ப்ரகாரத்தையுமருளிச்செய்து, பூர்வநிரூபிதமான விரோதியினுடைய நிவ்ருத்திக்ரமத்தை யுபபாதித்தருளுகிறார்.

இதில் முதற்றிருவாய்மொழியில், அடிமைசெய்யப்பாரித்த வர்ச்சாவதாரஸ்தலத்திலே ஆஸாநுரூபமான வபிமதம் ஸித்தியாமையாலே ஆர்த்தராய் மிகவும்பகவதநுபவாகாங்க்ஷைநடக்க, அந்தவாகாங்க்ஷைக்கு ஹேதுவான அநவதிகவிபூதிபூர்த்தியையும், அந்தவிபூதிரக்ஷணார்த்தமான வவதாரங்களினுடைய வதி

ஶயிதபோக்யதையையும், ஆஶ்ரிதபவ்யதாவிஶிஷ்டமான வநிஷ்டநிவர்த்தகத்வத்தையும், ஆஶ்ரிதாநாஶ்ரிதவிபாகேந வுண்டான வநுகூலப்ரதிகூலரூபத்தையும் அஶேஷப்ரகாரரக்ஷகத்வத்தையும், அகிலாத்மபாவத்தையும், அசேஷப்ரகாரபோக்யதையையும், ஆஶ்ரிதஸம்ரக்ஷணார்த்தமான க்ஷீரார்ணவஶாயித்வத்தையும், அதிஶயிதபுருஷார்த்தமான ப்ராப்யதேஶவர்த்தித்வத்தையும், ஆஶாநுரூபோபகாரத்தால்வந்த வத்யந்தமஹத்தையையு மநுஸந்தித்து, ஏவம்ப்ரகாரவிஶிஷ்டனான ஸர்வேஶ்வரன், தம்முடைய வாகாங்க்ஷாநுரூபமாக முகங்காட்டியாஶ்வஸிப்பித்த ப்ரகாரத்தையருளிச்செய்கிறார்.

ஈடு ;—பிராட்டிமாரோடே நித்யபரிகாரம்ஸேவிக்க, பர்யங்கவித்யையிற்சொல்லுகிறபடியே திருவநந்தாழ்வான்மேலே ஸர்வேஶ்வரன், நாம்பாடின திருவாய்மொழிகேட்கைக்காகத் திருவாறன்விளையிலே யெழுந்தருளியிருந்தான்; நாமங்கேபோய்த்திருவாய்மொழி கேட்பித்து அநுகூலவ்ருத்திகளையும்பண்ணி யநுபவிப்போமென்று பாரித்தார் ; அதுமநோரதமாத்ரமாய், நினைத்தபடிதலைக்கட்டப் பெற்றதில்லை. பிராட்டிமாரருகே யெழுந்தருளியிருக்க, நித்யஸூரிகளுண்டாயிருக்க, நினைத்தபடி கார்யஞ்செய்து தலைக்கட்டுகைக்கீடான வைஶ்வர்யம் குறைவற்றிருக்க, ஆஶ்ரித ருகந்தவற்றைத்தனக்குத் திருமேனியாகக்கொண்டு உதவும ஸ்வபாவனாயிருக்க, எனக்குருசியிற் குறைவற்றிருக்க, நினைத்தபரிமாற்றம் பெறாதொழிவோமே என்று வெறுத்தார்.

இவர்தாம் ஸர்வேஶ்வரன்பக்கல் தமக்குத்தஞ்சமாக நினைத்திருப்பது இரண்டு ஸ்வபாவத்தை;—ஆஶ்ரிதபரதந்த்ரனா யிருக்கு மிருப்பையும், ஸ்வவ்யதிரிக்த ஸமஸ்தவஸ்துக்களும் தனக்குப்ரகாரமாகத்தான் ப்ரகாரியாய், இவற்றுக்குவந்த வ்யஸநம் தனக்குவந்ததாக நினைத்திருக்கும் ப்ராப்தியையுமாயிற்று ; அவையிரண்டும் தம்பக்கல் கார்யகரமாகக்கண்டிலர் ; நானொருவன் தோற்றி ஸர்வேஶ்வரனுக்கு இவையும் பொய்யாகப்புகுகிறதோ என்றதிஶங்கை பண்ணினார். “ குணஜ்ஞாநத்தாலே ஜீவிக்குமவர் குணங்களிலே யதிசங்கைபண்ணினால் ஜீவிக்கமாட்டாரே. இவர்தம்மை நாமிழக்கவொண்ணாது, இவரை ஸமாதாநம்பண்ணும் விரகேதோ ” என்று பார்த்து, “ வாரீர், நீர்கண்டதெல்லாவற்றிலு மதிஶங்கைபண்ணுகிறதென், நாமுமக்கொன்றும் செய்திலோமோ, இவ்வளவாக வுபகரித்தநாம் மேலுள்ளதும் செய்வோங்காணும், நீரிங்ஙனேயதிசங்

கைபண்ணவேண்டா" என்று, தன்னுடைய விஸ்ரம்பணீயத்வ ப்ரமுகமான கல்யாணகுணங்களையும், தானிவ்வளவாகப்பண்ணின வுபகாரங்களையுங்காட்டி, இவருடைய வதிஶங்கையைத்தீர்த்து ஸமாதாநம்பண்ண, ஸமாஹிதராய், அத்தை யநுஸந்தித்தினிய ராகிறார்.

(க) [ப்ராஜ்ஞ இத்யாதி] [ப்ராஜ்ஞ:-ப்ராஜ்ஞ:] தம்மாலே யபிமதம்பெற விருப்பார் அறிவிற்குறையா லிழக்கவேண்டாதபடி தம்மளவையு மவர்களளவையுமறிகைக்கீடான வறிவுடையவர். [க்ருதஜ்ஞஶ்ச- க்ருதஜ்ஞஶ்ச] கிட்டுமவன்தன்பக்கல் வைமுக்யம்பண்ணுமதுதவிர்ந்து ஓரடிவரநின்ற வெல்லையுமறிவர். [ஸாநுக்ரோஶஶ்ச - ஸாநுக்ரோஶஶ்ச] அறிவுகொண்டுகாரியங்கொள்ளவு மறியாதே யிருக்குமவர்களுக்கு, அவர்களிழவை யநுஸந்தித்து "ஐயோ" என்றிரங்குமவராயிருப்பர் [ராகவ:-ராகவ:] இது இவர் தம்மைத்தோற்றிவந்ததல்ல, குடிப்பிறப்பாலே. [ஸத்வ்ருத்த: - ஸத்வ்ருத்த:] பரஸம்ருத்த்யேகப்ரயோஜநராயிருப்பர். [ப்ராக்யாத: - க்யாத:] இப்படியெதிரிகள் கோஷ்டியிலும்ப்ரஸித்தர். [நிரநுக்ரோஶஶங்கே - நிரநுக்ரோஶஶங்கே] இக்குணங்களையுடைய பெருமாளை யித்தசையில் எனக்கு முகங்காட்டக்காணாமையாலே, இக்குணங்களொன்றுமில்லாதந்ருஶம்ஸரோபாதியாக ஶங்கியாநின்றேன்; அவர்க்கு இக்குணங்களுண்டாகாதொழியாதிறே. [மத்பாக்யஸங்க்ஷயாத் - மத்பாக்யஸங்க்ஷயாத்] என்னுடைய பாக்யஹாநியாலே யாமித்தனையிறே. "அறிவொன்றுஞ்சங்கிப்பன் வினையேன்" என்கிறாரிறேயிவரும். இத்திருவாய்மொழிக்கு ஆளவந்தாரருளிச்செய்யும் ஶ்லோகமிது.

முதற்பாட்டு.

தேவிமாராவார்திருமகள்பூமி ஏவமற்றமரராட்செய்வார் *
மேவியஉலகம்மூன்றவையாட்சி வேண்டுவேண்டுருவம்நின்னுருவம் * பாவியேன்தன்னைஅடுகின்ற கமலக்கண்ணது ஓர்பவளவாய்மணியே * ஆவியே! அமுதே! அலைகடல்கடைந்த அப்பனே காணுமாறுஅருளாய். (க)

(க) ரா-ஸு-உ-சு-கரு.

ப;—முதற்பாட்டில், நிரவதிகவிபூதியுக்தனாய், விஶ்லேஷத்தில் தரியாதபடிபண்ணும் போக்யதையையுடைய வுன்னை நான் காணும்படி யிரங்கவேணுமென்கிறார்.

(இ ள்.) தேவிமார் — உன்னழகுக்கும் பெருமைக்குந் தகுதியானதேவிமார், ஆவார் - ஆவார், திருமகள் - உனக்குநிரதிஶயஸம்பத்ரூபையானலக்ஷ்மியும், பூமி - ஸமஸ்தவிபூத்யபிமாநிநியான பூமியும், மற்று - அதுக்குமேலே பின்னையும், இவர்களோடேகூடவிருக்கிறநீ, ஏவ - (௧) ‚‚ஸ்வயந்து ருசிரே தேசே க்ரியதாமிதிமாம்வத ’’ என்கிறபடியே நியோகிக்க, ஆட்செய்வார் - கைங்கர்யம்பண்ணுவார்கள், அமரர் - நித்யஸூரிகள்; மேவிய - உன்னோடேப்ருதக்ஸித்தமாம்படி பொருந்தி, மூன்றவை - ப்ரதாநபுருஷகாலாத்மகமான த்ரைவித்யத்தையுடைய, உலகம் - லோகங்கள், ஆட்சி - ஆஜ்ஞாநுவிதாயிகள்; வேண்டு - அவற்றினுடைய ரக்ஷணார்த்தமாக தத்ததவஸ்தோசிதமாயும், வேண்டு - ஸ்வாபிமதமுமாயுமிருக்கிற, உருவம் - ரூபங்கள், நின்-உனக்கு, உருவம் - அஸாதாரணரூபங்கள்; இந்த வுபயவிபூதி நிர்வஹணத்தைக்காட்டினவளவன்றியே, பாவியேன்றன்னை - இவ்வாகாரத்தை யநுபவிக்கப்பெறாத பாபத்தையுடையவென்னை, அடுகின்ற - முடிப்பாரைப்போலேநலிகிற. கமலம் - நிரதிஶயபோக்யமான தாமரைபோன்ற, கண்ணது - கண்ணும், ஓர் - அத்விதீயமான, பவளம் - பவளம்போன்ற, வாய் - அதரஶோபையையுமுடைத்தான, மணியே - நீலரத்நம்போலே தர்ஶநீயனாய், ஆவியே - வ்யதிரேகத்தில் தரிக்கவொண்ணாதபடி ப்ராணபூதனாய், அவ்வளவன்றியே, அமுதே - அழிந்தஸத்தையையுண்டாக்கு மநவரதபோக்யமானவம்ருதமாய், அர்வாசீநாம்ருதத்தி லபேக்ஷையுடையார்களுக்கும், அலைகடல்கடைந்த - அருந்தொழில் செய்து கொடுக்கும், அப்பனே - அதிஶயிதோபகாரகனானவனே, அப்படி ஆயாஸிக்கவேண்டாதபடி, காணுமாறு- கண்டநுபவிக்கும்படியாக, அருளாய் - க்ருபைபண்ணியருளவேணும். (௧)

ஆறு ;—லக்ஷ்மீபூமி நீளாநாயகனாய், * ஶேஷஶேஷாஶந கருடப்ரமுக நாநாவிதாநந்த பரிஜந பரிசாரிகா பரிசரித சரணயுகளனாய், நிகிலபுவந நிர்மாண த்ராண ஸம்ஹாராதிலீலனாய், ஆஶ்ரித பரித்ராணார்த்தமாக விச்சாநுகுண விக்ரஹனாய், ஸ்வஸௌந்தர்யஹ்ருதாஶேஷ மநோநயந கமலதளாயதலோசநனாய், அத்யுஜ்ஜ்வல வித்ரும ஸமாநவதநனாய், நீலரத்நஸத்ருஶ திவ்யரூபனாய், எனக்கு தாரக

(௧) ரா-ஆர-௧௫-எ.

னாய், போக்யனாய், ப்ராணதஜநஸம்ஹித நிர்வர்த்தநைக ஸ்வபாவனாயிருந்த வுன்னைக்காணுமாறருளா யென்கிறார். (௧)

ஈடு ; அவ ;—முதற்பாட்டு. பிரியில் தரிக்கவொண்ணாதபடி நிரதிஶயபோக்யனான நீ, உன்னை நான்காணும்படி க்ருபைபண்ணியருளவேணுமென்கிறார்.

(தேவிமாரித்யாதி) (௧) “ நகஶ்சிந்நாபராத்யதி - நகஶ்சிந் நாபராத்யதி ” என்பாருமருகேயிருக்க, எனக்கு க்லேசப்படவேண்டுகிறதேதுவென். (௨) [மித்ரமௌபயிகம் - மித்ரமௌபயிகம்] ராவணன் பிராட்டி திருமுன்பேநின்று சிலவற்றை ஜல்பிக்கப்புக்கவாறே ; ப்ரஜைநலிந்ததென்னாத்தாய் சீறுளிறே, ஜநநியானமுறையாலே; அவனநர்த்தங்கண்டு ஹிதமருளிச்செய்கிறாள். “ அவர்திருவடிகளிலேசரணம்புகு” என்றால், அவன் தாழ்வாகநினைத்து இசையானென்னுமத்தாலே - தோழமைக்கொள்ளென்கிறாள் ; அவர் (௩) “ மித்ரபாவேந - மித்ரபாவேந ” என்பர், இவள் “ மித்ரமௌபயிகம் - மித்ரமௌபயிகம் ” என்னும். அவ்வருகுபோனாலும் பரமஸாம்யாபத்தியிறேகொடுப்பது. எனக்கு ஶத்ருவாயிருப்பாரோடு உறவுபண்ணவேண்டுகிற தென்னென்னுமே [ஸ்தாநம்பரீப்ஸதா - ஸ்தாநம்பரீப்ஸதா] கெடுவாய், வழிபறிப்பார்க்கும் தறையிலே கால்பாவிநின்றுகொள்ளவேணுமே. உன்குடியிருப்பையாசைப்பட்டாயாகி லித்தனையுஞ்செய்யவேணும். எனக்கொரு குடியிருப்பும் வேணுமோ, ஆகாஶசாரிகளாயன்றோவிருப்பது நாங்களென்று அவனுக்கு நினைவாக [வதஞ்சாநிச்சதா - வதஞ்சாநிச்சதா] அவரம்புகள் ஆகாசத்திலே நடவாதோ. [கோரம் - கோரம்] உன்னைச் சிங்கவிளக்கெரித்துக்கொல்லாதே நற்கொலையாகக்கொல்லும்போதும் அவரைப்பற்றவேணுங்காண். [த்வயா - த்வயா] பல சொல்லியென், உனக்கவர்வேணும். [அஸௌ - அஸௌ] அவர் படியுனக்குத்தோற்றுகிறதில்லையோ. உருவு வெளிப்பாட்டாலே முன்னிலையிவளுக்கு; அச்சத்தாலே முன்னிலையாகத்தோற்றும் அவனுக்கு; தீரக்கழிய வபராதம்பண்ணி நிற்கிறவென்னைக்கைக்

(௧) ரா-யு-௧௧௬-௪௪. (௨) ரா-ஸு-௨௧-௧௯.
(௩) ரா-யு-௧௮-௩.

கொள்ளுவரோவென்ன [புருஷர்ஷப:-புருஷர்ஷப:] நீசெய்தவற்றை யொன்றாக நினைத்திருப்பாரொருவரல்லர், புருஷோத்தமர் காண்.

(தேவிமாராவார் திருமகள்பூமி) அவர்கள்புருவம் நெளிந்தவிடத்தேயுனக்குக் காரியஞ்செய்யவேண்டும்படி வல்லபைகளாயிருக்கிற பெரியபிராட்டியாரு மாண்டாளாரும்; (௧) "நகஶ்சிந்நாபராத்யதி - நகஶ்சிந்நாபராத்யதி" என்று பொறைக்கு உவாத்தாயிருக்குமொருத்தி, "பொறுப்பதெத்தை, குற்றந்தானுண்டோ" என்று அந்தப்பொறைவிளையும் பூமியாயிருக்குமொருத்தி. அவர்களருகேயிருக்க எனக்கிழக்கவேண்டுகிறதென் (ஏவ) கைங்கர்யந்தானுத்தேஶ்யமானவோபாதி ஏவிக்கொள்ளுகையு முத்தேஶ்யமென்கை; (௨) "க்ரியதாமிதிமாம்வத - க்ரியதாமிதிமாம்வத" மின்னிமுழங்கி வில்லிட்டுவர்ஷிக்கும் மேகத்வநிபோலே, கம்பீரமாயிறே திருமிடற்றோசைதானிருப்பது. (மற்றமரராட்செய்வார்) இச்சேர்த்தியில்கிட்டி நின்றடிமைசெய்வார் நித்யஸூரிகள். மற்றென்பது - துல்யவிகல்பத்தையாயிற்று. திருமுலைத்தடத்திலே யணைந்தால் பிராட்டிமார்க்குண்டான வினிமை இச்சேர்த்தியிலேகைங்கர்யப்பண்ணப்பெறுகையாலே யிவர்களுக்கு முண்டாம்; (௩) "ரமமாணாவநேத்ரய: - ரமமாணாவநேத்ரய:" என்கிறபடியே, ஸ்வரூபாநுரூபமாயிறே ஸுகங்களிருப்பது. பெருமாளுக்கும் பிராட்டிக்கு மந்யோந்ய ஸம்ஶ்லேஷத்தால் பிறக்குமரஸம், இருவருமானசேர்த்தியைக்காண்கையாலே பிறக்கும் இளையபெருமாளுக்கு. (அமரராட்செய்வார்) (௪) "வேதம்வல்லார்களைக்கொண்டு" என்கிறபடியே அவர்களும் புருஷகாரபூதராயிறே யிருப்பது.

பிராட்டிமாரு மருகேயுண்டாய், "மற்று" என்று அவர்களோடொக்க விகல்பித்துச்சொல்லலாம்படியான நித்யஸூரிகளுமுண்டானாலும், ஐஶ்வர்யத்திலே குறையுண்டாகில் கார்யஞ்செய்யவொண்ணாதிறேயென்னில் (மேவியவித்யாதி) கீழும்மேலும் நடுவுமானலோகங்களைச்சொல்லுதல், த்ரிவிதசேதநரையுஞ் சொல்லுதல்.

(௧) ரா யு-௧௧௯ ௪௪.
(௨) ரா-ஆர-௧௫-௭.
(௩) ரா-பா-௧-௩௧.
(௪) ௪-௯-௮.

(மேவிய) லோகத்துக்கு இவன் ரக்ஷகனென்றால் தகும்படியிருக்கு மென்னுதல்; ராஜ்யந்தான்பொருந்தியிருக்குமென்னுதல், (க) [த்ரைலோக்யமபி நாதேந யேந ஸ்யாந்நாதவத்தரம் - த்ரைலோக்யமபிநாதேநயேநஸ்யாந்நாதவத்தரம்] த்ரைலோக்யத்தையும் கையடைப்பாக்கினாலும், ரக்ஷ்யம்சுருங்கி ரக்ஷகத்வப்பாரிப்பேவிஞ்சியிருக்கும். (வேண்டுவேண்டுருவம் நின்னுருவம்) அவ்வோரக்ஷணத்துக்கு வேண்டினவேண்டினவென்னுதல், (உ) * இச்சாக்ருஹீத-இச்சாக்ருஹீதமென்னுதல், ஆஸ்ரிதருகந்தவற்றையே தனக்குத் திருமேனியாகக்கொள்ளுமென்னுதல்.

(பாவியேன்றன்னை) புருஷகாரமுமுண்டாய், விபூதியையுமுடையனாய், ஆஸ்ரிதாதீநமான விக்ரஹத்தையு முடையனாயிருக்க, இழக்கைக்கடியான பாபத்தைப்பண்ணினவென்னை. அந்தகார்ஹஸ்த்யத்துக்குப் புறம்பானவேனையென்கிறார். (அடுகின்ற) முடிகின்ற. (ங) * உயிர்க்கெல்லாம் தாயாயளிக்கின்ற தண்டாமரைக்கண்ணை யுடையவனே. (பவளவாய்) (ச) "ஸவிலாஸஸ்மிததாரம் பிப்ராணம் முகபங்கஜம் - ஸவிலாஸஸ்மிததாரம்பிப்ராணம்முகபங்கஜம்" என்கிற ஸ்மிதத்தையுடையவனே. (மணியே) விடாயர் முகத்தே குளிர்நீர்வெள்ளத்தை வெட்டிவிட்டாப்போலே ஸ்ரமஹரமானவடிவையுடையவனே. இவைகிடீ ரெனக்குபாதகமாகிறது.

(ஆவியே) ஒருவாயுவிசேஷமன்று வர்க்குப்ராணன்; நாய்ச்சிமாரோடும் நித்யஸூரிகளோடுங்கூடிக் கண்ணும்வாயும் வடிவுமாயாயிற்று இவருடைய ஆவியிருப்பது. (அமுதே) தாரகமான ப்ராணனாய், போக்யவஸ்துவைப்புறம்புதேடவேண்டாதே போக்யமும் தானேயாயிருக்கை; போக்யமும் தானானால் ஸாதித்துக்கொள்வாரிவரன்றிக்கே உபாயமும் தானேயாயிருக்கை. (அலைகடல்கடைந்தவப்பனே) ப்ரயோஜநாந்தரபரர்க்கு பரியனசெய்து அபேக்ஷிதங்களைச்செய்யு முபகாரகனே. உமக்குச்செய்யவேண்டுவதென்னென்ன (காணுமாறருளாய்) எனக்குக் கடல்கடையவேண்டா, அவ்வடிவைக் காட்டவமையும்; வடிவைக்காண்கை-ப்ராப்யம், அருள்-ப்ராபகம்.

(க) ரா-அயோ-உ-கங.   (உ) வி-பு-சு-ரு-அச.

(ங) தி-மொ-எ-க-க.   (ச) வி-பு-ரு-கஎ-உக.

"ப்ராப்யப்ராபகங்கள் நீயே" என்றிருப்பார்காரியஞ் செய்யலாகாதோ, (க)

இரண்டாம்பாட்டு.

காணுமாறருளாயென்றென்றேகலங்கிக் கண்ணநீரலமர * வினையேன் பேணுமாறெல்லாம்பேணி நின்பெயரே பிதற்றுமாறு அருள்எனக்குஅந்தோ! * காணுமாறுஅருளாய்காகுத்தா! கண்ணா! தொண்டனேன்கற்பகக்கனியே! * பேணுவாரமுதே! பெரியதண் புனல்சூழ் பெருநிலமெடுத்தபேராளா! (உ)

ப.—அநந்தரம், "வேண்டுவேண்டுருவம் நின்னுருவம்" என்றுசொன்ன வவதார விக்ரஹபோக்யதையையநுஸந்தித்து நான் க்லேசியாதபடி கண்டநுபவிக்கும்படி க்ருபைபண்ணி யருளவேணுமென்கிறார்.

(இ-ள்.) *காணுமாறு - காணும்படி, அருளாய் - க்ருபைபண்ணவேணும், என்றென்று - என்று பலகாலுஞ்சொல்லி, கலங்கி - காணப்பெறாமையாலே கலங்கி, கண்ண - கண்ணினுடைய, நீர் - நீர், அலமர - பரவாநிற்க, வினையேன் - காணப்பெறாத பாபத்தையுடையேனான நான், உன்னை ஆசைப்பட்டும் நீயாதரியாதவளவில், பேணும் - ஆத்மாத்மீயங்களையுமிழந்தும், பலகாலும் சரணம்புக்கும், மோஹித்தும், இப்படி ஆதரிக்கும், ஆறு - ப்ரகாரம், எல்லாம்- எல்லாம், பேணி - ஆதரித்து, அவ்வளவிலுங்கிடையாமையாலே, நின்-உன், பெயரே - திருநாமங்களையே, பிதற்றுமாறு - சொல்லிக்கூப்பிடும்படியாக விறே, எனக்கு - எனக்குப்பண்ணின, அருள் - அருள்; அந்தோ - ஐயோ ஆசாலேசமுடையாரு மநவரதமநுபவிக்க, எனக்கிப்படிபலித்தது; ஆனபின்பு, காகுத்தா - ககுஸ்த்த வம்சத்திலே பிறந்து காட்டோடு நாட்டோடு வாசியறக் காட்சிகொடுக்குத்மவனாய், கண்ணா - க்ருஷ்ணனாயவதரித்துப் பெண்பிறந்தாரெல்லாருங் கண்டநுபவிக்கும்படி யெளியனாய், இவ்வளவன்றியே, தொண்டனேன் - சபலனான வெனக்கு, கற்பகம் - நீதானே யுன்னை ப்ரகாசிதப்பித்வௌதார்யத்தையுடையையாய், கனியே - அப்போதே நுகரவேண்டும்படி பக்வபலபூதனாய், பேணுவார் - ஆசையுடையார்க்கு, அமுதே - ஸத்தாஹேதுவான நித்யபோக்யமாய், பெரிய - அபர்யந்தமாய், தண் - சீதளமான, புனல் - ப்ரளயஜலத்திலே, சூழ் - அழுந்தின, பெருநிலம் - மஹாப்ருதிவியை, எடுத்த- எடுத்த, பேராளா-மஹாபுருஷனே, முழுகவும்மீட்கவும்வேண்டா, காணுமாறு- நான்கண்டநுபவிக்கும்படி, அருளாய் - க்ருபைபண்ணியருளவேணும்.* (உ)

ஆறு ;—(காணுமாறருளாய்) இப்படி, காணுமாறருளா யென்றென்றேகலங்கிக் கண்ணநீரலமரவினையேன், இதற்குமே லில்லை யென்னும்படி யாசைப்பட்டாலும், உன்திருநாமங்களையே சொல்லிக் கூப்பிடப்பெறுமித்தனையோ வெனக்கருளுமருள். இங்ஙனன்றிக்கே, காணுமாறருளாய் காணவொண்ணுமோ வென்னில்; காணவேணுமென்றபேக்ஷித்தார்க்கு, சக்ரவர்த்திதிருமகனும் ஸ்ரீவஸுதேவர் திருமகனும்வந்து திருவவதாரம்பண்ணியன்றோ வுன்னைக் காட்டிக்கொடுத்தருளிற்று; நெஞ்சாலே யநுபவிக்கலாம்படி உன்னை யெனக்கு போக்யமாகத் தந்தருளின பரமோதாரனல்லையோ, மற்றுமாசைப்பட்டாரெல்லார்க்கு முன்னை போக்யமாகக் கொடுக்குமவனல்லையோ, *மஹார்ணவாந்தர் நிமக்நமான ஜகத்தையெடுத்து ரக்ஷித்தருளின பரமகாருணிகனல்லையோ, காணுமாறருளாயென்கிறார். (உ)

ஈடு ; அவ;—இரண்டாம்பாட்டு. காணவேணுமென்று மிகவும் நோவுபட்டிருக்குமிருப்பையோ என்திறத்துச் செய்தருளப்பார்த்தது ; நானிங்ஙன் படாதே யுன்னைக்காணும்படி க்ருபைபண்ணியருளவேணுமென்கிறார்.

(காணுமாறருளாய்) ஒருகால் " காணுமாறருளாய் " என்றால், அப்போதே செய்யக் காணவிட்டால், " நாமே ப்ரவர்த்தித்துப் பெறுகிறோம் " என்றிருக்குமவரன்றே. வர்ஷதாரையாலல்லது தரியாத சாதகம்போலே அவனருளே பார்த்திருக்குமவராகையாலே, திரியட்டும் " காணுமாறருளாய் " என்கிறார். (என்றென்றே) பலகாலும் வார்த்தையித்தனையே. " புறம்பேயுமொருபுகலுண்டு " என்றிருக்கிலிறே அத்தைப்பற்றுவது. (கலங்கி) கலக்கமேயாயிற்று ஏறிவருவது ; (க) "ஜடிலம் சீரவஸநம்—ஜடிலம்சீரவஸநம்" (கண்ணநீரலமர) நிரம்பின வேரிகளுக்குப் பரீவாஹம்போலே. கலங்கின கலக்க முள்ளடங்காமல் கண்ணநீராய் ப்ரவஹியாநிற்கும்.

(வினையேன்) இதுக்கு முன்பு இவ்வஸ்துவைக்காண வாசைப்பட்டாரில் கலங்கிக் கண்ணநீர்பாய்ந்தறிவாரில்லைகிடீர். " காணவேணும் " என்கிற ஆசாலேசமுடையார்க்குத் தன்னைக்காட்டி அவர்கள் கண்ணநீரையுந் துடைக்குமவனை யாசைப்பட்டுக் கிடையாதே, கண்ணுங் கண்ணநீருமாம்படியான பாபத்தைப்பண்ணி

(க) ரா-அயோ-கoo-உக.

னேன். (பேணுமாறெல்லாம்பேணி) பேணுகை - ஆசைப்படுகை; முதலிலே அயோக்யனென்றகன்று, "அவன் விரும்பாத நானு மென்னுடைமையு மெனக்குவேண்டா" என்று ஆற்றாமையாலே மடலெடுக்கையிலேகைவைத்து, பலபடியும் ப்ரபத்திபண்ணி, ப்ர ணயரோஷம் தலையெடுத்துக் கிலாய்ப்பதுஞ் செய்தவிடத்திலும். (நின்பெயரே பிதற்றுமாறருளெனக்கு) நீ யெனக்கருளப் பார்த்தபடி நின்பெயரே பிதற்றுமாறாய்விட்டது. உன்னைப்பெறாத வ்யஸநத் தாலே உன்னுடைய திருநாமங்களைச்சொல்லி அக்ரமமாகக் கூப்பி டும்படியோ நீயெனக்குப் பண்ணும் க்ருபை. நீசவிஷயங்களை யாசைப்பட்டுக் கூப்பிடுமது தவிர்ந்து நம்பேரைச்சொல்லிக் கூப்பி டும்படி பண்ணினோமாகில் இனி யென்னென்றிருக்கிறாயோ. ஸம் ஸாரிகளில் வ்யாவ்ருத்தியோ எனக்குவேண்டுவது, என்னபிமதம் பெறவேண்டாவோ?

(வினையேன் பேணுமாறெல்லாம்பேணி) பேணுதல் - ஆசைப் படுதல். ஆசைப்படும்வழியெல்லாமாசைப்பட்டு. பலவழியுண்டோ ஆசைப்பாட்டிலென்னில்; உண்டு. வகுத்தவிஷயத்திலாசை, அபி மதவிஷயத்திலாசை. இவர்க்கு வகுத்தவிஷயம் அபிமதமாயிருக் கும். வகுத்தவிஷயத்திலாசை க்ரமமாயிருக்கும், அபிமதவிஷ யத்திலாசை வரம்பழிந்திருக்கும். வகுத்தவிஷயத்தி லாசைக்கு, அவனைக் கால்கட்டக்கிடைக்கும்; அதுவும் செய்தாரிறே, (க) "நோற்றநோன்பு," (உ) "ஆராவமுது," (௩) "மானேநோக்கு," (௪) "பிறந்தவாறு," (௫) "உலகமுண்ட பெருவாயன்," இவற் றிலே. அபிமதவிஷயத்திலாசைக்கு, அபிமதன்பாடேறத் தூது விடுகை தொடக்கமாக மடலெடுக்கை முடிவாகத்துணிகை; அவை யுமெல்லாம் செய்தாரிறே, (௬) * அஞ்சிறையமடநாரை தொடக்க மாக, (எ) "மாசறுசோதி," (அ) "வைகல்பூங்கழிவாய்," (௯) "பொன்னுலகாளீர்" இத்யாதிகளிலே. இப்படி பேணுமாறெல் லாம் பேணியும், நின்பெயரே பிதற்றுமாறோ நீயெனக்கருளுமரு ளென்கிறார். (அந்தோ) உன்னை நீ பிரிந்தறியாய், பிரிந்தாரைக் கண்டறியாய். நித்யஸூரிகள் பிரிந்தறியார்கள், ஸம்ஸாரிகள் பிரி

(க) ௫-எ- (உ) ௫-அ- (௩) ௫-௯-
(௪) ௫-௧௦ (௫) ௬-௧௦ (௬) க-௪
(எ) ௫-௩- (அ) ௯-க (௯) ௬-அ-

வறியார்கள் ; இவ்வாற்றாமை யுடையேன் நானொருவனுமே யா யிற்று.

(காணுமாறருளாய்) திருவாறன்விளையை யணித்தாக்குதல், எனக்கவ்வளவும் கால்நடை தருதல் செய்யும்படி பண்ணாய். இப்படி நீரெங்கே யருளக்கண்டு நிர்ப்பந்திக்கிறதென்ன (காகுத்தா) (க) "கக-ஷ தவம்ஸ்ரெளவர்யாதி-கருத்ஸ்த்தவம்ஸேவிநுகா: ப்ரயாந்தி." (உ) [ரூபஸம்ஹநநம் - ரூபஸம்ஹநநம்] ஸம்ஸ்த் தாநந்தன்னை. [லக்ஷ்மீம்-லக்ஷ்மீம்] ஸமுதாயஸோபையை. [ஸௌகுமார்யம்-ஸௌகுமார்யம்] அநுகூலர்க்கு மடுத்துப்பார்க்கப்பொறா திருக்கை. [ஸுவேஷதாம் - ஸுவேஷதாம்] தாபஸவேஷம். [தத்ருஸுர்விஸ்மிதாகாரா: - தத்ருஸுர்விஸ்மிதாகாரா:] விஸ்மி தாந்த:கரணராய்க்கொண்டு கண்டார்கள். ஆர்தானென்னில் [வநவாஸிந: - வநவாஸிந:] படைவீட்டிலுள்ளார் காணப்பெறா தத்தைச் சருகிலே தின்று தூற்றிலே கிடந்தவர்கள் பெற்றார்கள். அது ஒருகாலமங்ஙனேசெய்து போனோமாகில் அதுகொண்டுவிளைக் கிறீரோவென்ன (கண்ணா) ருஷிகளுக்கேயன்றிக்கே, (ங) "தாஸா ஸாமாவிரபூத்" என்று இடைச்சிகளுக்கு மிடை யர்க்குங்காட்டிற்றிலேயோ ? புறம்புதேடிப்போகிறதென். (தோண் டனேன் கற்பகக்கனியே) ஸப்தாதி விஷயங்களிலே யங்யபரனாய், அவற்றிலே சபலனாய்த்திரிகிறவென்னை, அத்தைத் தவிர்த்துஉன்னை ஸர்வஸ்வதானம் பண்ணினவனே!

(பேணுவாரமுதே) நீயேவந்து மேல்விழாநின்றால் "அல்லோம்" என்றார்க்கு நிரதிஸய போக்யனானவனே. (பேரியவித்யாதி) ஆரு ன்னைப்பேண ப்ரளயங் கொண்ட ஜகத்தையெடுத்து ரக்ஷித்தது. ப்ரளயார்ணவம்சூழ்ந்த மஹாப்ருதிவியை அதினின்று முத்தரித்த பெரியோனே. உன்னை யாசைப்படுதல், ஆபத்தை யறிவித்தல் செய் யமாட்டாத ஜகத்தையன்றோ ரக்ஷித்தது ; நீயறிய வாபத்துண்டா மத்தனையன்றோ ரக்ஷிக்கவேண்டுவது. (பேராளா) ரக்ஷ்யத்தினள வல்லாத ரக்ஷகனுடைய பரிப்பு. (உ)

(க) வி-பு-ச-உ-எஎ- (உ) ரா-ஆர-க-கரு- (ங) பாக-கo-ரு2-உ

மூன்றாம்பாட்டு.

எடுத்தபேராளன்நந்தகோபன்தன் இன்னுயிர்ச்சிறுவனே ! * அசோதைக்கு அடுத்தபேரின்பக்குலவிளங்களிறே ! அடியனேன் பெரியஅம்மானே ! * கடுத்தபோரவுணனுடலிருபிளவாக் கையுகிராண்டஎங்கடலே ! * அடுத்ததோருருவாய் இன்றுநீவாராய் எங்ஙனம்தேறுவர்உமரே ? (௩)

ப —அநந்தரம், ஆஸ்ரித பவ்யனுய்க்கொண்டு அநிஷ்டத்தை நிவர்த்திப்பிக்கும் நீ என்னவஸ்த்தாநுரூபமாக வாராதவளவில் உன்னைப் பற்றினவர்களெங்ஙனே விஸ்வஸிப்பரென்கிறார்.

(இ ள்.) எடுத்த - தரித்ரன் மஹாநிதியை யெடுத்தாப்போலே யுன்னை யெடுத்துக்கொண்ட, பேராளன் - பெரியவனுன, நந்தகோபன்றன் - நந்தகோபனுக்கு, இன் - நிரதிஸயபோக்யமான, உயிர் - ப்ராணனுய்க்கொண்டு, சிறுவனே - பவ்யனுயத்யந்த ஸைஸவத்தையுடையனுய், தேவகியார்பிரிந்திருக்க, அசோதைக்கு - யசோதைக்கு, அடுத்த - வந்துகிட்டின, பேரின்பம் - (க) "தொல்லையின்பத்திறுதி" என்கிறபடியே நிரதிஸயாநந்தாவஹனுய், குலம்- அக்குலத்துக்கு. இளங்களிறே - ஆனைக்கன்றுபோலே செருக்கனுய் வர்த்திப்பானுய், தாயுந்தமப்பனுமாக நினைத்திராதே, அடியனேன் - அடியேனுனவெனக்கு, பெரிய - உன் பெருமையெல்லாங்காட்டி யெட்டாதிருக்கும், அம்மானே - ஸ்வாமியாய், ப்ரபலமாய், கடுத்தபோர் - யுத்தகண்டூதி விஞ்சியிருக்கிற, அவுணன் - ஹிரண்யாஸுரனுடைய, உடல் - சரீரம், இருபிளவா - இரண்டு பிளப்பாம்படி, கை - கையில், உகிர் - உகிரை, ஆண்ட - பரிகரமாகவுடையையாய் எங்கடலே - இப்படி யாஸ்ரிதவிஷய வாத்ஸல்யத்துக்கு ஜலதியானவனே, நீ, அன்றுபோலே, இன்று - இன்றும், அடுத்தது - அநுரூபமான, ஓர், உருவாய் - வடிவைக்கொண்டு, வாராய் - வருகிறிலை, ஒருவிஷயத்திலுதவாதிருந்தால், உமர் - உன்னைத் தஞ்சமென்றிருப்பார், எங்ஙனம் - எங்ஙனே, தேறுவர் - விஸ்வஸிப்பார்?

ஒன்றேடொன்றடுத்த ரூபமென்று - நாஸிம்ஹரூபமாகவுமாம். (௩)

ஆறு.—(எடுத்த) அயத்நேந நிதியெடுத்தாப்போலே யெடுத்தநுபவிக்கலாம்படி ஸ்ரீநந்தகோபர்க்கும், யசோதைப்பிராட்டிக்கும் பரமஸுலபனுய், ஸ்ரீப்ரஹ்லாத ப்ரதிஜ்ஞாஸமய ஸம்பூதனுய், தத்

(க) பெரு-திருஎ-அ

விரோத்யஸுரநிரஸநோசித ஸ்ரீந்ருஸிம்ஹரூபனுய், நகராங்குர கோடிவிதாரித தத்புஜாந்தரனுய், தத்விதாரணஹேதுபூத நிரவதி காஶ்ரிதவாத்ஸல்ய மஹோததியா யிருந்துவைத்து, ஆஶ்ரிதனுனை யெனக்கரியையாயின்று நீவருகிறிலை; வாராதொழிந்தால், உன்னுடைய வாஶ்ரித வாத்ஸல்யகுணைக தாரகரான வாஶ்ரிதஜநங்களெங்ஙனே தரிக்கும்படி யென்கிறுர். (௩)

ஈடு ; அவ ;—மூன்றும்பாட்டு. ஆஶ்ரித ஸுலபனுயிருக்கிற நீயின்றுவந்து என்னுபத்தை நீக்காதொழியில், உன்குணமே ஜீவனமாயிருக்கிற வாஶ்ரிதருன்னை யெங்ஙனே விஶ்வஸிக்கும்படி யென்கிறுர்.

(எடுத்தபேராளன்) நிதியெடுத்துக் கொண்டாப்போலே யுன்னையெடுத்துக்கொண்ட பாக்யாதிகன். இருவருமொக்க நோன்புநோற்க அவர் பெற்று முகத்திலே விழிக்கப்பெருதே போரவிட்டிருக்க, நிதியெடுத்தாப்போலே யெடுத்து புத்ரமுகங்கண்டவரிறே. முன்பு ரிக்தனுய்ப்போந்தவன் தனக்க ஜீவிக்கப்புக்கவாறே, "இவனெடுப்பெடுத்தான்" என்பர்களிறே. (பேராளன்) பெரியோன். அவன் பெருமையோபாதியும் போருங்கிடீ! என் சிறுமையும். "நீமகனுகவேணும்" என்பார்க்கோ முகங்காட்டலாவது. ஸ்ரீநந்தகோபருடைய நற்சிவன் கண்ணுக்குத்தோற்ற வொருவடிவுகொண்டு திரிகிறவித்தனை.

(அசோதைக்கடுத்த) ஒக்கநோற்கச்செய்தேயும் க்லேசம் மிக்கிருக்குமிறே, உடம்புநொந்து பெற்றவளாகையாலே; இவள் ப்ரஸவவேதனை யநுபவியாதிருக்கப் பெற்றுக் கொடுநின்றுளித்தனை. கிட்டிக்கொண்டுநிற்கக் கண்டதித்தனை ;(க)"ஊஉஶ-ஃவஷு வ-ஊராஸாயமெஶாஊாஜா த்ராஜஜ-த தர்ஶசப்ரபுத்தாஸாயமெஶா தாஜாதமாத்மஜம்" (பேரின்பம்) நிரதிசயஸுகத்தை விளைத்தவன்.(உ) "தொல்லையின்பத்திறுதிகண்டாளே" என்னும்படி அவளுக்கு நிரதிஶயாநந்தத்தை விளைத்தானுயிற்று. * அந்தமில் பேரின்பத்தை * சிற்றின்பமாக்கினுன். (குலவிளங்களிறே.) இடைக்குலத்துக்குஆனைக்கன்றுபோலே ஶ்லாக்யமானவனே. அபிஜாதமாய், பருவத்தாலே ஆகர்ஷகமா யிருப்பதொரு மத்தகஜம்போலே, யசோதைப்பிராட்

(க) வி-பு-ரு-௪-௨௩ (உ) பெரு-தி-எ-அ

டிக்குப் பிடிகொடாதே திரியும்படி யென்னவுமாம். அகப்பட்டாலு மானைக் கன்றுபோலே யாயிற்றிருப்பது (௧) "தறியார்ந்தகருங்க ளிறே போலநின்று" என்கிறபடியே - ஒருகம்பத்தோடே சேர்ந்த களியானைபோலே யாயிற்றுக் கட்டுண்டுநிற்கும்போது மிருக்கும் படி. [தடங்கண்கள்பனிமல்கும்] இவள் (௨) "யதிஶக்நோஷி-யதி ஶக்நோஷி" என்றால், பின்னையவனுக்குக் கண்ணநீர்பாய்கைக்கு மேற்பட்டில்லை; ஸர்வஶக்தி அஶக்தனென்று தோற்றவிருக்கையிறே இவள் நியமிக்க வல்லளாகிறது. [தன்மையானை] ஆஶ்ரிதரிட்ட வழக்காகையே ஸ்வபாவமாகவுடையவனை. (அடியனேன் பெரியவம் மானே) உன்னை "மகன்" என்றிருப்பார்க்கோ வுதவலாவது, முறை யுணர்ந்திருப்பார்க்குஉதவலாகாதோ. நான் முறையிலேநின்றவாறே நீயும் முறையிலே நில்லாநின்றாய் - "அடியேன்" என்று நான் சொல்ல, நீ ஈஶ்வரனாயிராநின்றாய்.

(கடுத்தவித்யாதி) யுத்தகண்டூதியை யுடையனான ஹிரண்யா ஸுரனுடலை யிரண்டுபாதியாம்படி. (கையுகிராண்ட) "படையாண் டான்" என்னுமாபோலே. (எங்கடலே) (௩) "ஈஹாவிஷ்ணும் - மஹாவிஷ்ணும்" என்னும்படி பெரியகிளர்த்தியோடேவந்து ப்ரஹ் லாதனுக்கு உதவினவது தம்பேறாயிருந்தபடி. (அடுத்ததோருரு வாய்) இவனெங்கே காட்டப்புகுகிறா னென்றறியாமையாலே யெங் குமொக்கச் சினைத்துக்கொடு நின்றான். ஒன்றையறுதியிட்டுத் தோற்றப்பற்றாதபடி அவன் மிகைக்கையாலே அப்போதைக்குயோக் யமான வடிவைக்கொண்டு. (௪) "நரஸ்ருத்தநுஞ்சக்ருத்வாஸிம் ஹஸ்ருத்தநுந்தயா-நரஸ்யார்த்ததநும்க்ருத்வாஸிம்ஹஸ்யார்த் ததநும்ததா" என்கிறபடியே அவன் வரத்திலேயகப்படாத வடி வைக்கொண்டு. பதற்றத்தாலே ஒன்றினுடையு மொன்றின்தலை யையும் சேர்த்துக்கொண்டு வந்தானென்றுமாம். அடுத்ததோருரு வாயாயிற்றுக்கடுத்த போரவுணனுடல்பிளந்தது.

(இன்றுநீவாராய்) அன்று மின்றுமாயிற்று உதவவேண்டுவது, அன்றுஉதவினாய், இன்றுஉதவுகிறிலை. விபரீதஜ்ஞானமுடையார்க்கு உதவினாய், யதாஜ்ஞானமுடையார்க்கு உதவினாய், இவ்விரண்டுகோடிக்

(௧) திருமொழி ௨-௧௦-௩- (௨) வி-பு-௫-௯-௧௧௫-
(௩) ந்ருஸிம்ஹமந்த்ர- (௪) பாரத-

கும் புறம்போநான். "மகன்" என்று கலங்கினவனுக்கு உதவினாய், (க) "[illegible]" என்னும் தெளிவுடையவனுக்கு உதவினாய், "என்றென்றேகலங்கி" என்கிற கலக்கமுடைய வெனக்கேபோ வுதவலாகாதது. நீவாராதொழிந்தாலும் ஜீவிக்கவாசையுடையார்க்கேயிறே யுன்னைக்காற் கட்டவேண்டுவது. அதுகிடக்கிடீர், ஆனால் நீரேதுக்குப் படுகிறீரென்ன (எங்ஙனம் தேறுவருமரே) இவ்வளவில் நீமுகங்காட்டாவிட்டால், உன் குணஜ்ஞாநத்தாலே ஜீவிக்குமவர்கள் பிழைப்பார்களோ. "உன் குணங்களேதஞ்சம்" என்றிருக்கிறவர்கள் எங்ஙனே யுன்னைவிஶ்வஸிக்கும்படி யென்னுதல். (ங)

நான்காம்பாட்டு.

உமருகந்துகந்த உருவம்நின்னுருவமாகி உன்தனக்கு அன்பரானா ரவர் * உகந்தமர்ந்தசெய்கை உன்மாயை அறிவோன்றும்சங்கிப்பன்வினையேன் * அமரதுபண்ணி அகலிடம்புடைசூழ் அடுபடையவித்த அம்மானே! * அமரர்தம் அமுதே! அசுரர்கள்நஞ்சே! என்னுடை ஆருயிரேயோ! (ச)

ப.—அந்தரம், ஆஶ்ரிதாநாஶ்ரிதவிஷயங்களி லநுகூலனுமாய் ப்ரதிகூலனுமாயிருக்கையாலே,உன்னுடைய ரூபகுணசேஷ்டிதங்கள் ஆஶ்ரிதாதீநமென்று நினைக்கிறவறிவு ஸங்கநீயமாகாநின்றதென்கிறார்.

(இ-ள்.) அது - ஶாஸ்த்ரமுகத்தாலே லோகப்ரஸித்தமான, அமர் - யுத்தத்தை, பண்ணி - உண்டாக்கி, அகல் - விஸ்தீர்ணையான, இடம் - பூமியினுடைய, புடை - பரிஸரமெங்கும், சூழ் - சூழ்ந்திருப்பதாய், அடு - கொலையிலே உத்யுக்தையான, படை - ஸேனையை, அவித்த - நிஶ்ஶேஷமாக நஸிப்பித்த, அம்மானே - ஸ்வாமியாய், பூமியளவன்றியே, அமரர்தம் - அநுகூலரான தேவர்களுக்கு, அமுதே - அதிஶயிதபோக்யமாய், அசுரர்கள் - ப்ரதிகூலரான வஸுரர்களுக்கு, நஞ்சே - ப்ராணவிநாஶஹேதுவான நஞ்சாய், உபயாகாரத்தாலும், என்னுடை - எனக்கு, ஆருயிரே - தாரகனானவனே, உமர் - உனக்கஸாதாரண ஶேஷபூதரானவர்கள், உகந்துகந்த - எப்போதுமுகந்த, உருவம் - ரூபமே, நின் - உனக்கு, உருவமாகி - ரூபமாய், உன்றனக்கு - அவ்வடி

(க) வி-பு-கக-அசு-

விலே, அன்பராணுரவர் - அன்பையுடையானவர்கள், உகந்து - ஆதரித்து, அமர்ந்த - அநந்யப்ரயோஜநமாக, செய்கை-அடிமைசெய்கைக் கீடாயிருக்கிற, உன் - உன்னுடைய, மாயை - ஆஸ்சர்யசேஷ்டிதங்களை, அறிவு - அறியும், ஒன்றும் - இதொன்றையுமகப்பட, சங்கிப்பன் - ஸங்கியாநிற்பன், வினையேன் - தஞ்சமாகநினைத்திருக்கு மர்த்தத்திலே ஸங்கைபிறக்கும் படியான பாபத்தையுடையநான்; ஓ - ஓ என்று - தம்மிழவுதோன்ற வருளிச்செய்கிறுர்.

ஆறு ;—(உமருகந்து) ஆஸ்ரிதவிரோதி நிரஸநைக ஸ்வபோகனுய், ஆஸ்ரித பரமபோக்யனுய், ஆஸ்ரிதவிரோதிநாஸகத்வைக ஸ்வரூபனுய், எனக்கு தாரகனுயிருந்தவுன்னுடைய வாஸ்ரிதேச்சாதீந திவ்யாவதார திவ்யசேஷ்டிதத்வ ரூபமான வாஸ்ரிதவாத்ஸல்யகுணமொன்றுமே யெனக்குதாரகம்; நீவாராமையாலே, அதுவு மென்னுடைய பாபத்தாலே பொய்யோவென்று ஸங்கியாநின்றே னென்கிறுர். (௪)

ஈடு ; அவ ;—நான்காம்பாட்டு. “உன்னை யாஸ்ரிதரிட்டவழக் காக்கிவைப்புதி” என்னு மறிவொன்றுமே தரித்திருக்கிறநான், அதுவும் பொய்யோவென்று ஸங்கியாநின்றேனென்கிறுர்.

(உமருகந்துகந்தவுருவம்நின்னுருவமாகி) உனக்கஸாதாரணராயிருப்பார் மாறுதே யுகந்தவடிவை யுனக்குத் திருமேனியாகக் கொள்ளுவுதியென்னுதல்;உனக்குநல்லராயிருக்குமவர்கள் உகந்தத்தாலே நீயுகந்து அது உனக்கு வடிவென்னுதல்.(௧) “யெயயமாஉரா ப௰ஹ்ரௌஜ தாஂஸ்ததைவ௰ஜாமஹ்ஹம் - யேயதாமாம்ப்ர பத்யந்தே தாம் ஸ்ததைவபஜாம்யஹம்” என்னுமாபோலே. (௨) “தமருகந்தவெவ்வுருவம்” இத்யாதி. (உன்றனக்கன்பராணுரவர்) உன்பக்கல் ப்ரேமபரவசராயிருக்குமவர்கள்.

(உகந்து) அத்யாதரத்தைப்பண்ணி. (அமர்ந்தசெய்கை யுன் மாயை) ப்ரயோஜநநிரபேக்ஷமாகக் கிட்டவேண்டும்செயல்கள், உன்னுடைய வாஸ்சர்யசேஷ்டிதங்கள். (அறிவொன்றும்சங்கிப்பன்) இந்தவொருகுணத்தையும்பற்றின வறிவாயிற்று இவர்க்கு ஸத்தாஹேது; அதிலேயாயிற்று இப்போது இவர்க்கதிசங்கை வர்த்திக்கிறது. (வினையேன்) நாரொருவன் கண்ணுஞ்சுழலையிட் டதிசங்கைப

(௧) கீதை-௪-௧௧- (௨) ௧-திருவ-௪௪-

ன்னுங்காட்டில், ஸ்வரூபாநுபந்தி குணங்களில்லையாகாதிறே; அதி லேயதிசங்கைபண்ணுகிறது நான்பண்ணினபாபமிறே; (க) "வஹ்ராக்ஷீவ்ராஜ்ஞஸ்ஸுதஜஸ்ய ஸ்வாநகோஷஸ் ஸ்ராவவ: । ஸஹ்யதே தாதி ரநகோஷஸ் ஸ்வஸ்யஜஸ்ய க்ஷோரஹ்ருவ்யம் ஸம்க்ஷேபாத் - க்யாத: ப்ராஜ்ஞ: க்ருதஜ்ஞஸ்ச ஸாநுக்ரோஸஸ்ச ராகவ: । ஸத்வ்ருத்தோ நிரநுக்ரோஸஸ் ஸங்கே மத்பாக்யஸங்க்ஷயாத்" இப்படிப்பட்ட குணங்களுடையவர்க்கு நானதிஸங்கைபண்ணுங்காட்டில் அவையில்லையாகிற தன்றிறே; நான் ஸங்கிக்கைக்கடி யென்பாக்யஹாநியென்றுளிறே.

(அமரதுபண்ணி) ஆஸ்ரிதபக்ஷபாதியென்னுமிடத்துக்கு உதாஹரணங்காட்டுகிறார். அந்தவமரைப்பண்ணி; மஹாபாரதமிறே; பூமிப்பரப்படைய நெளியும்படியிறே வந்துசூழ்ந்துகொண்டது. (சூழ்படை) ஸர்வதோதிக்கமாகச் சூழ்ந்துகொண்டு கொல்லவந்த ஸேனையையவித்த. தூர்வர்க்கமடையக் காட்டுத்தீக்கிளர்ந்தாப் போலேகிளர்ந்து, "ஸாரதி, ஸாரதி" என்று வாய்பாறிக்கொண்டு வந்துமேற்ற, அவர்கள் கிளர்த்தியை யவித்தானுயிற்று.(உ) "மழை கொலோவருகின்றது" என்று சொல்லுகிற க்ருஷ்ணனுகிற காளமேகமிறே யேறியவித்தது. (அம்மானே) ஸர்வஸ்வாமியாயிருந்து வைத்து ஆஸ்ரித பக்ஷபாதத்தாலே அநாஸ்ரிதரையும் கிழங் கெடுத்துப் பொகட்டானித்தனை.

(அமரர்தமமுதே) தேவர்களுக்காக வாஸுர ப்ரக்ருதிகளோடே யம்பேற்றுப்பண்ணின வ்யாபாரங்களாலே அவர்களுக்கு நிரதிஸய போக்யனுயிருக்கும்படி. (அசுரர்கள்நஞ்சே) ஜந்மத்தாலே யஸுரர்களாயும் ஸ்வபாவத்தாலே யஸுரர்களாயு முள்ளவர்களுக்காற்ற வொண்ணுத நஞ்சானவனே. (என்னுடையாருயிரேயோ) எனக்கு ஸத்தாஹேதுவானவனே. தேவர்களுக்கு போக்யனுய் அஸுரவர்க்கத்துக்கு நஞ்சாயிருக்கிற விருப்பு தமக்குஸத்தாஹேதுவாயிருக்கிறபடி. (ச)

(க) ரா-ஸு-உக-கந. (உ) பெரியா-தி-ந-ச-க.

ஐந்தாம்பாட்டு.

ஆருயிரேயோ! அகலிடமுழுதும் படைத்திடந்துண்டுமிழ்ந் தளந்த * பேருயிரேயோ! பெரியநீர்படைத்து அங்குறைந்து அது கடைந்தடைத்துடைத்த * சீரியரேயோ! மனிசர்க்குத்தேவர்போல த் தேவர்க்கும்தேவாவோ! * ஒருயிரேயோ? உலகங்கட்கெல் லாம் உன்னைநான் எங்குவந்துறுகோ? (ரு)

ப.—அநந்தரம், ஸர்வப்ரகாரரக்ஷகனுன வுன்னை நான் யத்நம்பண்ணிக் காண்பதெங்கே யென்கிறார்.

(இ-ள்.) (க) "ப்ராணஸ்ய ப்ராண:-ப்ராணஸ்யப்ராண:" என்கிற படியே தாரகமான ப்ராணிகளுக்கு தாரகனுகையாலே, ஆருயிரே - பரிபூர்ண ப்ராணபூதனுய், அகல் - விஸ்தீர்ணமான, இடம் - ஜகத்தை, முழுதும் - எல் லாம், படைத்து - ஸ்ருஷ்டித்து, இடந்து-ப்ரளயத்திலழியாமலிடந்தெடுத்து, உண்டு - வயிற்றிலே வைத்துநோக்கி, உமிழ்ந்து- உமிழ்ந்து வெளிநாடுகாட்டி, அளந்த - அந்யாபிமாநமறும்படி யளந்துகொண்ட, பேருயிரே - ஸர்வாதிக ஶேஷியாய், ஜகத்தை யுஜ்ஜீவிப்பிக்கைக்காக, பெரியநீர்-மஹாஜலமான ஏகார் ணவத்தை, படைத்து - ஸ்ருஷ்டித்து, அங்கு - அங்கே, உறைந்து - கண் வளர்ந்தருளி, அது - தத்கார்யமான க்ஷீரார்ணவத்தை, கடைந்து - கடைந்து, அடைத்து - தத்ஸஜாதீயமான கடலையடைத்து, உடைத்த-ஸம்ஸாரிகளுக்கு தீர்த்தஹேதுவாம்படி தநுஷ்கோடியாலே யுடைத்த, சீரியரே - ஆஶ்ரிதரக்ஷ ணத்திலாத்மாவோபாதி சீரியனுய், மனிசர்க்கு - மநுஷ்யாதிகளுக்கு, தேவர் போல - தேவர்களுத்தேஶ்யரானவோபாதி, தேவர்க்கும் - தேவர்களுக்கும், தேவா - உத்தேஶ்யதயா ஆஶ்ரயணீயனுய், உலகங்கட்கெல்லாம் - ப்ராண கம்யமான ஸகலபதார்த்தங்களுக்கும். ஓருயிரே - ஏகாத்மாவானவனே, உன் னை - ஶரீரத்துக்காத்மாவைப்போலே தாரகனுமாய், ஶேஷியுமாய், பரிவனு மாய், உத்தேஶ்யனுமாய், அவ்வாத்மாக்களைப்போலே ஸ்வருபபேதமில்லாதபடி ஸகலசேதநாசேதநங்களுக்கு மேகநியந்தாவான வாத்மாவான வுன்னை யொழிய, நான் - த்வதேகதாரகனுமாய், த்வதேகஶேஷபூதனுமாய், த்வதேகரக்ஷ்யனு மாய். த்வதேகாஶ்ரயனுமாய், த்வதேகநியாம்யனுமாயிருக்கிற நான், எங்கு - எங்கே, வந்து - வந்து, உறுகோ - கிட்டுவேன்.

(க) கேநோபநிஷத்-உ-க.

ஸ்வதந்த்ரனை யுன்னுடைய யத்நம் பலபர்யந்தமாமதொழிய ஸர்வப்ரகார பாரதந்த்ரனை நான் யத்நம்பண்ணிக் கிட்டுவதொன்றுண்டோவென்று.

ப்ரதிபதம், ஓ! வென்றது- அத்தலை யித்தலையாவதே! என்கிற வெறுப்பைக்காட்டுகிறது. (ரு)

ஆறு ;—(ஆருயிரேயோ) நீரே யுபாயங்களையநுஷ்டித்து என்னைப்ராபிக்குமத்தனையன்றோ வென்னில் ;

எனக்கு தாரகனாய், நிகிலஜகந்நிர்மாண மஹார்ணவ நிமக்ந ஜகதுத்தரண நிகரணோத்கிரண விக்ரமண ஹேதுபூத பரமகாருண்யவிஶிஷ்டனாய், பயோநிதி மதந மந்த்ரந பந்தந பேதந ஹேதுபூத ப்ரணயித்வகுண யுக்தனுமாய், ஆத்மகுணங்களாலும் ரூபகுணங்களாலும் மநுஷ்யரிற் காட்டில் தேவர்களெத்தனை விலக்ஷணராயிருப்பார், அப்படியே தேவர்கள் மநுஷ்யரென்னும்படி அந்தகுணங்களால் விலக்ஷணனாய், ஸர்வலோகங்களுக்கு மாத்மாவாயிருந்த வுன்னை நான் என்னுடைய யத்நத்தாலே யெங்ஙனே ப்ராபிக்கும்படி யென்கிறார். (ரு)

ஈடு ; அவ ;—ஐந்தாம்பாட்டு. (க) "ஶாஸ்த்ரபலம்ப்ரயோக்தரி" என்று பேறு உம்மதானால் ஸாதநம் உம்முடைய தலையிலே யாகவேண்டாவோ வென்ன ; நான் யத்நம் பண்ணி வந்துகாண வென்றொரு பொருளில்லைகாணென்கிறார்.

(ஆருயிரேயோ) உயிர்நீயாயிருக்க நானென்ன ஸாதநாநுஷ்டானம்பண்ணி வந்து கிட்டுவேன் ; ஶரீரரக்ஷணமாத்மாவதன்றோ, ஶரீரந்தான் தன்னை ரக்ஷித்துக்கொள்ளவோ. ஸம்பந்தமேயோ, அநுஷ்டானமுமில்லையோவென்கிறார் (அகலிடமுழுதும்படைத்து) (உ) "ஸோகாமயத பஹுஸ்யாம்" என்று பூமிப்பரப்படங்க ஸ்ருஷ்டித்து, ப்ரளயத்திலே நோவுபட மஹாவராஹமாயெடுத்துக்கொண்டேறி, திரிய ப்ரளயம்வர வயிற்றிலேவைத்து நோக்கி, உள்ளே கிடந்து தளராதபடி வெளிநாடுகாண வுமிழ்ந்து, மஹாபலியாலே யபஹ்ருதமான தசையிலே யெல்லை நடந்துமீட்டுக்கொண்டு, இப்படி யந்த துர்த்தசைகளிலே அபேக்ஷாநிரபேக்ஷமாக வுணர்ந்து நோக்கும்நீயே, இதுகிட்டும் விரகு பார்க்கவேண்டாவோ. (பேருயிரேயோ) பெரியோனே.

(க) பூர்வமீமாம்ஸை. (உ) சாந்தோ-உ-உ.

(பெரியநீரித்யாதி) ஸர்வவிஷயமாகப்பண்ணும் வ்யாபாரத்தோடு பிராட்டிக்காகப் பண்ணும் வ்யாபாரத்தோடு வாசியற்றிருக்கும்படி. (பெரியநீர்படைத்தங்குறைந்து) ஏகார்ணவத்தை ஸ்ருஷ்டித்து, ஸ்ருஷ்ட்யர்த்தமாக வதிலேகண்வளர்ந்து. (அதுகடைந்து) பிராட்டியை லபிக்கைக்காக அத்தைக்கடைந்து, அவளோட்டை ஸம்ஶ்லேஷத்துக்காக அத்தையடைத்து, அவ்வருகுண்டான ராக்ஷஸர் வந்து ஆஶ்ரிதரை நலியாதபடி அத்தையுடைத்த. (சீரியரேயோ) நித்யாஶ்ரிதரையோடு அல்லாதாரோடுவாசியற விஷயீகரிக்கும் சீர்மையுடையவனே. (மனிசரித்யாதி) ஐஶ்வர்யத்தாலும்கௌரவ்யதையாலும மநுஷ்யர்களுக்கு தேவர்களிருக்குமாபோலே யாயிற்று, அந்த தேவர்களிற் காட்டில் ஸர்வேஶ்வரனிருக்கும்படி.

(ஒருயிரேயோ வுலகங்கட்கெல்லாம்) கேவலஶரீரமோ, ஆத்மாவோ, ஹிதசிந்தைபண்ணுவார்; நானுன்னைப் பெறுகைக்கு ஸாதநாநுஷ்டாநம்பண்ணுகிறேன், உன்னைப்போலே யிருப்பதொரு தத்த்வாந்தரமுண்டாகில் சொல்லிக்காண். உயிராயிருக்கிற வுன்னை ஶரீரபூதனான நானென்ன ஸாதநாநுஷ்டாநத்தைப்பண்ணி வந்துகிடடுவேன். ஆத்மா ஶரீரத்துக்கு ஹிதசிந்தைபண்ணுமதொழிய, ஶரீரம் ஸ்வரக்ஷணத்தைப்பண்ண வென்பதொன்றுண்டோ. ஆதாரமாய் நியந்தாவாய் ஶேஷியாயிருக்கிற நீயொழிய, ஆதேயமாய் நியாம்யமாய்ஶேஷமானவிது ஸ்வரக்ஷணத்தைப்பண்ணவோ. ஆதாராதேய நியந்த்ருநியாம்யபாவங்களாலே ஶரீரலக்ஷணமிதுக்குண்டானபின்பு, அல்பசைதந்யமும் "நீயேகடவாய்" என்கிற ப்ரதிபத்திக்குக் கண்டவித்தனையன்றி ஸாதநாநுஷ்டாநம் பண்ணக்கண்டதோ.

(௫)

ஆறும்பாட்டு.

எங்குவந்துறுகோ? என்னையாள்வானே! ஏழுலகங்களும்நீயே * அங்கவர்க்கமைத்ததெய்வமும்நீயே அவற்றவைகருமமும்நீயே * பொங்கியபுறம்பால்பொருளுளவேலும் அவையுமோநீயின்னேயானால் * மங்கியஅருவாம்நேர்ப்பமும்நீயே வான்புலனிறந்ததும்நீயே.

(௬)

ப.—அநந்தரம், கார்யகாரணாவஸ்த்த ஸகலபதார்த்தங்களும் நீயிட்டவழக்காம்படி ஸர்வாத்மபூதனுகையாலே யெங்கேவந்து கிட்டுவதென்கிறார்.

(இ-ள்.) என்னை - என்னை, ஆள்வானே - இவ்வளவும்வா நிர்வஹித்தவனே, ஏழுலகங்களும் - ஸாதநாநுஷ்டாநம்பண்ணுவார்க் கநுஷ்டாநஸ்த்தலமாயும் ப்ராப்யமாயுமுள்ள ஸமஸ்தலோகங்களும், நீயே-நீயிட்டவழக்கு, அங்கு-அந்தலோகங்களில், அவர்க்கு-பலார்த்திகளான வாராதகர்க்கு, அமைத்த - பலப்ரதமாகவு மாராத்யமாகவும் சமைத்துவைத்த, தெய்வமும் - தைவங்களும். நீயே - நீயிட்டவழக்கு, அவற்றவை - அத்தைவங்கள்விஷயமாக, கருமமும் ஆராதநரூபமான வவ்வோகர்மங்களும், நீயே - நீயிட்டவழக்கு, பொங்கிய - இந்தலோகங்களிற்காட்டில்விஞ்சி, புறம்பால் - புறம்பான, பொருள் - மஹதாதி ஸமஸ்தபதார்த்தங்கள், உளவேலும் - ப்ரமாணப்ரஸித்தமாய்த்தோன்றின வுண்டாகிலும், அவையும் - அவையும், நீ - நீயிட்டவழக்கு, மங்கிய - ஸம்ஹ்ருத்யவஸ்த்தமாய் நாமரூபாஹிதமான, அருவாம் நேர்ப்பமும் - ஸூக்ஷ்மசித்சித்தும், நீயே - நீயிட்டவழக்காயிருக்கும், வான் - பரமாகாசத்தில், புலனிறந்ததும் - அதீந்த்ரியமான முக்தாத்மவர்க்கமும், நீயே - நீயிட்டவழக்காயிருக்கும், இன்னே - இப்படி, ஆனல் - ஸர்வாத்மபூதனுதலினுல், நான் - த்வதேகநிர்வாஹ்யனுனநான், யத்நம்பண்ணி, உன்னை - உன்னை, எங்கு - எங்கே, வந்து - வந்து. உறுகோ - கிட்டுவேன். (௬)

ஆறு ;—(எங்குவந்து) ஸர்வலோகங்களும், தத்ஸமாராத்யமான அக்நீந்த்ராதிதைவமும், அவற்றினுடைய க்ரியைகளும், லோகத்துக்குப் புறம்புள்ள பதார்த்தங்களும், ப்ரக்ருதி ஸம்யுக்தமாய் கர்மஸங்குசித ஜ்ஞாநமாய் ஸூக்ஷ்மமாயிருந்த புருஷஸமஷ்டியும் கர்மஸம்பந்தரஹிதமாய், ப்ரக்ருதி விநிர்முக்தமாய், பரிஶுத்தமாயிருந்த வாத்மஸ்வரூபமும் நீயே ; ஆதலால், என்னுடைய யத்நத்தாலுன்னை நானெங்ஙனே ப்ராபிக்கும்படி ; இதற்குமுன்பு நிர்ஹேதுகமாக வென்னை விஷயீகரித்தாப்போலே, இன்னமு முன்க்ருபையாலே விஷயீகரித்தருளாயென்கிறார்.

பூர்வோக்தமான வாத்மஶரீரபாவம் இந்த ஸாமாநாதிகரண்யமென்னுமிடஞ் சொல்லிற்றாயிற்று. (௯)

ஈடு ; அவ ;—ஆறும்பாட்டு; உக்தார்த்தத்தை விஸ்தரிக்கிறார்.

(எங்குவந்துறுகோ) மேருசிகரத்திலே நிற்கிறவொருவனை யொருபங்கு சென்றுகிட்டவோ. (என்னையாள்வானே) இவ்வளவும் வரநின்றேன் நானாகிலன்றோ மேலும் நான்வந்து கிட்டப்பார்ப்பது. (ஏழுலகங்களும்நீயே) ஸகலலோகங்களும் நீயிட்டவழக்காம்படியிருக்கிறவனே. அபேக்ஷைவர்த்திக்கிற வென்னைபொழிய விமுகராயிருப்பார் தானோ ஸ்வாதீநராயிருக்கிறார் (அங்கவர்க்கமைத்த தெய்வமும்நீயே)அவர்களைக் குடிமைகொள்ளுகிற தேவதைகளும் நீயிட்டவழக்கு. (அவற்றவைகருமமும்நீயே)அவ்வோ தேவதைகளுடைய ஸ்ருஷ்ட்யாதிவ்யாபாரங்களோதான் அவர்கள்பக்கல் கிடக்கிறது. ஆக, இவ்வருகுண்டான கார்யவர்க்கம் த்வததீநமென்னுமிடஞ் சொல்லிற்று.

(பொங்கியவித்யாதி) ஒன்றுக்கொன்று விஸ்த்ருதமாய், அண்டத்துக்குப் புறம்பாய், அதுக்குக்காரணமான மஹதாதிகளென்று சிலவுண்டாகில், அவையுமுன்னதீநம். (மங்கியவித்யாதி) கார்யாகாரமடங்கவழிந்து ஸூக்ஷ்மாவஸ்த்தையை பஜித்திருக்கிற அவ்யக்தமும் நீயிட்டவழக்கு. (வான்புலனிறந்ததும்நீயே) இவற்றின்படியன்றிக்கே, வானாய் - அவ்யக்தத்தையும் வ்யாபிக்கவற்றாய், சக்ஷுராதிகரணங்களுக்கவிஷயமாயிருந்துள்ள காரணமான ஜீவஸமஷ்டியும் நீயிட்டவழக்கு. பத்தாத்மஸ்வரூபமும் நீயிட்டவழக்கென்கை. (இன்னேயானால் - எங்குவந்துறுகோ) அர்த்ததத்த்வமிதுவானபின்பு, எங்கேவந்து கிட்டக்கடவேன்.

“மங்கியவருவாம் நேர்ப்பமென்று-பத்தஸமஷ்டி” என்றும், “வான்புலனிறந்ததென்று-முக்தஸ்வரூபத்தைச் சொல்லுகிறது” என்றும் பிள்ளான். அப்போது, அஸத்ஸமமாய் ஸூக்ஷ்மமான வாத்ம ஸமஷ்டியென்றும், பரமபதத்திலேயாய் அதீந்த்ரியமான முக்தாத்ம ஸ்வரூபமென்றும் நிர்வாஹம். இத்தால் சொல்லிற்றாயிற்றென்னென்னில்; கார்யாவஸ்த்தையோடு காரணாவஸ்த்தையோடு முக்தனான வவஸ்த்தையோடு வாசியற உன்னை பார்த்திருக்கவேண்டினபின்பு, நானென்காரியத்துக்குக் கடவேனாகையென்றொரு பொருளுண்டோ.

(சு)

ஏழாம்பாட்டு.

இறந்ததும்நீயே எதிர்ந்ததும்நீயே நிகழ்வதோநீ இன்னேயானால் * சிறந்தநின்தன்மை அதுவிதுவுதுவென்று அறிவொன்றும் சங்கிப்பன்வினையேன் * கறந்தபால்நெய்யே! நெய்யினின்சுவையே! கடலினுளமுதமே! * அமுதில் பிறந்த இன்சுவையே! சுவையது பயனே! பின்னைதோள் மணந்தபேராயா! (எ)

ப.—அநந்தரம், ஸர்வப்ரகார போக்யபூதனான நீ, காலோபாதிகமாயும் தேஸோபாதிகமாயுமுள்ள ஸமஸ்தபதார்த்தங்களையும் ப்ரகாரமாக வுடையையாயிருப்புதியென்கிற வித்தத்த்வஜ்ஞாநத்தையும் ஸங்கிக்கும்படி பண்ணுகின்றது உன்னைக் கிட்டப்பெறாத விழவென்கிறார்.

(இ-ள்.) கறந்த - கறந்தபோதே, பால் - ஸ்வாபாவிகரஸத்தையுடைத்தான பாலாய், நெய்யே - அதில் ஸாராம்ஸமான நெய்யாய், நெய்யின் - நெய்யினுடைய, இன் - இனிய, சுவையே - ரஸமாய், இப்படி லௌகிகபோக்யமன்றியே திவ்யபோக்யமாம்படி, கடலினுள் - கடலிலேபிறந்த, அமுதமே - அம்ருதமாய், அமுதில் - அந்த வம்ருதத்திலே, பிறந்த - உத்பந்நமாய், இன்சுவையே - லோகோத்தரமான வினிமையாய், சுவையது - அவ்வினிமையால் பிறந்த, பயனே - ப்ரயோஜநமான ஸுகமாய், இப்படி ப்ராக்ருத போக்யமாமளவன்றியே, அநந்யப்ரயோஜநர்க்குநிரதிஸயிதபோக்ய பூதனும்படி, பின்னை - நப்பின்னைப்பிராட்டி, தோள் - திருத்தோளோடே, மணந்த - ஸம்ஸ்லேஷித்த, பேராயா - மஹாப்ரபாவனான க்ருஷ்ணனே, வினையேன் - உன்னுடைய நிரதிஸயபோக்யதையை யநுபவிக்கப்பெறாத பாபத்தையுடைய நான், இறந்ததுமெதிர்ந்ததும் நிகழ்வது - பூதபவிஷ்யத்வர்த்தமாந காலோபலக்ஷித ஸகலபதார்த்தங்களும், நீயே - தனித்தனியே நீயிட்டவழக்கு, இன்னே - இப்படி, ஆனால் - ஆனபின்பு, அது - தூரஸ்தமாயும், இது - ஸந்நிஹிதமாயும், உது - அதூர விப்ரக்ருஷ்டமாயுமுள்ள தேஸோபலக்ஷித ஸகலபதார்த்தங்களும், சிறந்த - விலக்ஷணமான, நின் - உன்னுடைய, தன்மை - ஸ்வபாவங்கள், என்று - என்று, அறிவு - அறிகிறவித்தத்வஜ்ஞாநம், ஒன்றும் - ஒன்றையுமகப்பட, சங்கிப்பன் - குலையப்புகுகிறதோவென்று ஸங்கியாநிற்பன். (எ)

ஆறு;—(இறந்ததும்நீயே) பூதபவிஷ்யத்வர்த்தமாந ஸகலஜந்துஜாதத்துக்கு மாத்மாவாய் ரக்ஷகனுமிருந்த வுன்னுடைய நிந்த நிரவதிககாருண்யத்தையும் பொய்யோவென்று ஸங்கியாநின்றேன்.

இப்படி யதிஶங்கைபண்ணுவானென்னென்னில் ; நிரவதிக போக்ய பூதனாயிருந்த வுன்னைக் காணப்பெறாதொழிந்தால் ஶங்கை பிறவாதோவென்கிறார். (எ)

ஈடு ; அவ ;—ஏழாம்பாட்டு. ஸகலபதார்த்தங்களு முனக்கு ப்ரகாரதயா ஶேஷமாய், நீ ப்ரகாரியாய், நீயே அவற்றுக்கு நிர்வாஹகனென்னு மறிவொன்றுங் கொண்டுதரித்திருக்கிற நானென் பாபத்தாலே அதிலு மதிஶங்கைபண்ணா நின்றேனென்கிறார்.

(இறந்ததித்யாதி) "இக்காலத்துக்கு நான்கடவென், மற்றொருகாலத்துக்கு வேறேசிலர்கடவர்" என்றுதான் உன்னாலே சொல்லலாமோ. பூதகாலத்திலுள்ளாரோடு பவிஷ்யத்காலத்திலுள்ளாரோடு வர்த்தமாநகாலத்திலுள்ளாரோடு வாசிபற எல்லாரும் த்வததீநர். "இன்னேயானால்-எந்துவந்துறுகோ" என்று கீழிற்பாட்டோடே யந்வயம். (சிறந்தநின்தன்மை யதுவிதுவுதுவென்று) தூரஸ்த்தமாயும், ஸந்நிஹிதமாயும்; அதூர விப்ரக்ருஷ்டமாயுமுள்ள ஸகலபதார்த்தங்களும், ஶேஷித்வத்தாலே சிறந்திருந்துள்ள வுன்னுடையப்ரகாரம். (இன்னேயானால்) இறந்ததும்நீயே யென்னுதல், சிறந்தநின் தன்மையென்னுதல்.

இப்படி காலத்ரய வர்த்திபதார்த்தங்களும் நீயிட்ட வழக்காகையாலே ஸகலபதார்த்தங்களு முனக்கு ப்ரகாரமென்னுதல், தூரஸ்த்தமாயும் ஸந்நிஹிதமாயும் அதூர விப்ரக்ருஷ்டமாயுமுள்ள பதார்த்தங்களுனக்கு ப்ரகாரமாயற்றால் காலத்ரயவர்த்தி பதார்த்தங்களும் நீயிட்டவழக்கென்னுதல். (என்றறிவொன்றும்சங்கிப்பன்) தன்னையொழிந்ததடங்கலும் தனக்கு ப்ரகாரமாய்த்தான் ப்ரகாரியாயிருக்கையாலே, இவற்றுக்கு வந்ததுதனக்கு வந்ததாக நினைத்திருப்பானொருவனென்கிற வறிவாயிற்று இவர்க்கு ஜீவிக்கைக்கு ஹேது ; அதொன்றிலு மதிஶங்கைபண்ணாநின்றேன், அதுதனக்குக் கார்யகரமல்லாமையாலே. (வினையேன்) கலக்கத்தாலே யதிசங்கை பண்ணுங்காட்டில் அவன் ஸ்வரூபமில்லையாகாதிறே ; எனக்கு இப்புத்திபிறக்கைக்கடி யென்பாபமிறே. (க) "ஸஜ்ஜோஹ்ருஷ்டோஸ்ய ... யாஸ-ஸந்தேமத்பாக்யஸங்க்ஷயாத்" கீழில திஶங்கைக்குமிதுக்கும்

(க) ரா-ஸு-உக-கந.

கெடுவாசியுண்டு. ஆஶ்ரிதபரதந்த்ரனென்கிற ஸ்வபாவத்தாலே அதிசங்கைபண்ணிறல் ஆஶ்ரயணத்திற் குறையாலேயென்று நினைத்திருக்கலாம்; இதில் அவனுடைய ஸத்பாவத்திலேயிறே யதிஶங்கை. ப்ரகாரியாய்க் கொண்டிறே அவனுடையஸத்தை. ஸ்வவ்யதிரிக்தங்கள் அவனுக்கு ப்ரகாரமாய்க்கொண்டிறே யுண்டாவது.

இப்படி ஸ்வரூபத்தி லதிஶங்கை வர்த்திக்கைக்கடியென்னென்னில்; அதிஶங்காஹேது சொல்லுகிறது (கறந்தபாலித்யாதி) வ்யதிரேகத்தில் ஜகத்து உபஸம்ஹ்ருதமென்று நினைக்கவேண்டும்படியான வுன்போக்யதாப்ரகர்ஷம் அதிஶங்காஹேது. (கறந்தபால்) கறந்தபோதை ரஸத்தைநினைக்கிறது; அல்லது கறவாதபாலில்லையிறே; உபாதி விஶேஷத்தால் வந்தரஸவிஶேஷத்தை வ்யாவர்த்திக்கிறது. (நெய்யே) அதில் ஸாராம்ஶம். (நெய்யினின்சுவையே) நெய்யிலினியசுவையானவனே (கடலினுளமுதமே) மஹத்தத்வத்தைக் கலக்கி அதில் ஸாராம்ஶமாக வாங்கின வம்ருதம்போலே போக்யனானவனே. (அமுதில்பிறந்தவின்சுவையே) அதில் ரஸாம்ஶத்தைச் சொல்லுகிறது. (சுவையதுபயனே) ரஸாநுபவ ஸுகரூபமானவனே; ஒன்றிலொன்று மேற்பட்ட ரஸாம்ஶங்களைச்சொல்லி, அதுபோராமையாலே தன்னையே சொல்லுகிறது (பின்னைதோள்மணந்தபேராயா) ஒரு மிதுநாநுபவமாயிற்று இவர்க்குபோக்யம். ஸம்ஸாரியை அவனநுபவிப்பிக்குமாபோலே யாயிற்று ஆநந்தமயனை அவளநுபவிக்கும்படி. இருவருடைய சேர்த்தியழகாயிற்று இவர்க்குபோக்யம்.

எட்டாம்பாட்டு.

மணந்தபேராயா! மாயத்தால்முழுதும் வல்வினையேனையீர்கின்ற * குணங்களையுடையாய்! அசுரர்வன்கையர்கூற்றமே! கொடியுபுள்ளுயர்த்தாய்! * பணங்களாயிரமுடையபைந்நாகப்பள்ளியாய்! பாற்கடற்சேர்ப்பா! * வணங்குமாறுஅறியேன் மனமும் வாசகமும்செய்கையும்யானும் நீதானே. (அ)

ப.—அநந்தரம், ஆஶ்ரித ஸம்ஶ்லேஷார்த்தமாகவும் விரோதி நிரஸநார்த்தமாகவும் திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளுகிற நீயிட்டவழக்காம்படியென் காரணங்களும் காரியான நானும் உனக்கு ப்ரகாரமானபின்பு நான் வணங்குவனென்றொரு ப்ரகாரமறிகிறிலேனென்கிறார்.

(இ-ள்.) மாயத்தால் - ஆஸ்சர்யசேஷ்டிதங்களாலே, முழுதும் - அகில பதார்த்தங்களையும், மணந்த-அபிமதையோடே செறிந்துகப்பிக்கும், பேராயா - பெருமையையுடைய க்ருஷ்ணனாய், வல்வினையேனை - அப்படி ஸம்ஸ்லேஷிக்கப்பெறாத ப்ரபலபாபத்தை யுடையேனான வென்னை, ஈர்கின்ற - ஸர்வ காலமு மீராநிற்கிற, குணங்களை - ஶீல ஸௌலப்ய ஸௌந்தர்யாதிகளான குணங்களை, உடையாய் - ஸ்வபாவமாகவுடையையாய், வன்கையசுரர் - ஆஸ்ரித விரோதிகளான ப்ரபலாஸுரர்க்கு, கூற்றமே - ம்ருத்யுவாய், கொடிய - அவர்கள் கண்டபோதே முடியும்படியான, புள் - பெரியதிருவடியை, உயர்த்தாய் - கொடியாகவுடையையாய், இப்படி ஜகத்ரக்ஷணார்த்தமாக, ஆயிரமும் - ஆயிரம், பணங்கள் - பணங்களை, உடைய - உடையனுமாய், பை - அதிவிஸ்தீர்ணமான, நாகம் - திருவநந்தாழ்வானாகிற, பள்ளி - படுக்கையை, ஆய் - உடையையாய்க்கொண்டு, பாற்கடல் - திருப்பாற்கடலிலே, சேர்ப்பா - கண் வளர்ந்தருளுகிறவனே, மநமும் வாசகமும் செய்கையும் - மநோவாக்காயரூப கரணங்களும், யானும் - கரணியான நானும், உனக்கு ப்ரகாரமாய்க்கொண்டு, நீதானே - நீதானேயாம்படியா யிருந்தது, ஆகையால், வணங்கும் - வணங்குகைக்கு, ஆறறியேன் - ஒருகர்த்தாவையுமறிகிறிலேன், கரணங்களையுமறிகிறிலேன். (அ)

ஆறு ;—(மணந்தபேராயா) உம்முடைய வபேக்ஷிதம் செய்ய வேண்டுமாகில் ஓரஞ்ஜலிமாத்ரமாகிலும் பண்ணமாட்டீரோவென்னில் ; அதுக்குத் தரம் மேலிட்டு, ப்ரவணஸ்வபாவனாகையாலும், (க) “ [illegible] - ஹ்ருதயாங் யாமமந்தேவ ஜநஸ்யகுணவத்தயா ” என்றும் ப்ரக்ரியையாலே, முழுதும் வல்வினையேனாயிருந்த வென்னையுங்கூட வீராநின்ற ஸௌஶீல்யாதி கல்யாணகுணங்களை யுடையையா யிருக்கையாலும் ஆஸ்ரிதவிரோதி நிரஸநைக ஸ்வபாவனாயிருக்கையாலும், ஆஸ்ரிதருடைய வாபத்துக்கு உதவவருகைக்கீடான பெரியதிருவடியை இவ் யவாஹநமாக வுடையனாகையாலும், திருநாட்டில் நின்றும்வந்து ஆஸ்ரிதருடைய வாபத்தைப்போக்கப் பற்றாமை யணித்தாகத் திருப்பாற்கடலிலேவந்து திருவநந்தாழ்வான்மேலே கண்வளர்ந் தருளுகையாலும், மத்ஸ்வரூபகரண சேஷ்டிதங்கள் த்வத் ஸங்கல்பா

(க) ரா-அயோ-உசு-உ.

யத்தமாய் த்வதாத்மகமாய் த்வச்சரீரமாகையாலும், என்னுலொரு செயலில்லை ; ஆதலால், வணங்குமா றறியேனென்கிருர். (அ)

ஈடு; அவ ;—எட்டாம்பாட்டு. ஏதேனுஞ் செய்தாலும் பேறு உம்மதாய் உமக்காஸ்ரயிக்கைக்குக் கரணங்களுமுண்டாளுல் நீரே யத்நிக்கவேண்டாவோ வென்ன ; ஆத்மாத்மீயங்களடைய வுன்ன திநமானபின்பு என்னுல் செய்யலாவ தொன்றில்லை; நீயே ரக்ஷிக்க வேணுமென்கிருர்.

(மணந்தபேராயாமாயத்தால்) அபிநிவேஸத்தாலே நப்பின்னைப் பிராட்டி தோளோடே ஸம்ஸ்லேஷித்த பேராயனே. நப்பின்னைப் பிராட்டியிற்காட்டி லிடைத்தனத்தில் க்ருஷ்ணனுக்குண்டான வேற் றம். (முழுதும்வல்வினையேனை யீர்கின்றகுணங்களையுடையாய்) (முழுதும்-ஈர்கின்றகுணங்கள்) சில குணங்களீரச் சில குணங்கள் தாரகமாகையன்றிக்கே, எல்லாமொக்க வீரும்படியான குணங்களை யுடையவனே. உன் குணங்களாகையும் நானகையுமே நோவுபடு கைக்கடி. (வல்வினையேன்) சிலர் குணஜ்ஞாநத்தாலே ஜீவித்தி ருக்க, அது பாதகமாம்படி பாபத்தைப்பண்ணினேன். (ஈர்கின்ற) நலிந்ததாய்விடுகிறதில்லை. அம்புபட்டபுண் மருந்திட்டாற்றலாம்; குணத்தால்வந்த நோய்க்குப் பரிஹாரமில்லையே.

(அசுரர்வன்கையர்கூற்றமே) முன்கையிடுக்கரான வஸுரர் களுக்கு அந்தகன் தண்ணீரென்னும்படி கூற்றமானவனே. (கொடி யபுள்ளுயர்த்தாய்) கண்டபோதே ப்ரதிபக்ஷத்தை மாய்க்கவல்ல பெரியதிருவடியைக் கொடியாக வுடையவனே ; ப்ரதிபக்ஷத்தை முடிக்கைக்குத் தான்வேண்டா, கொடியைக்காணவமையும். (பணங் களித்யாதி) ஸ்வஸ்பர்ஸத்தாலே விகஸிதமான பணங்களையுடைய னும், பகவதநுபவ ஹர்ஷத்துக்குப் போக்குவிடாகப் பலதலைகளை யுமுடையனும், ஸர்வேஸ்வரனுக்கும் பிராட்டிமார்க்கும் நினைத்தபடி பரிமாறுகைக்கிடான பரப்பையுடையனுமாயிற்றுத் திருவநந்தாழ் வா னிருப்பது ; அப்படிப்பட்டிருக்கிறவனைப் படுக்கையாக வுடை யவனே. (பாற்கடல்சேர்ப்பா) ஆஸ்ரிதர் கூக்குரல் கேட்கைக்காகத் திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தவனே.

(வணங்குமாறறியேன்) பரமபதத்தைவிட்டுத் திருப்பாற்கட லிலே சாய்ந்து என்னுடைய ரக்ஷணத்துக்கு முற்பாடனுயிருக்கிற

வுனக்கு நானொரு கிஞ்சித்காரம் பண்ணினேனாகைக் கொருவிரகறி கிறிலேன். அறியாதொழிகிறதென், உமக்கு மநோவாக்காயங்களுண்டு, அவற்றுக் காஶ்ரயம் நீருண்டு, வணங்கத் தட்டென்னென்ன (மனமுமித்யாதி) எனக்கா யிருப்பதொரு நெஞ்சும் வாக்கும் செய்கையும் எனக்காயிருப்பதொரு நானுமுண்டாகவேணுமே, எல்லாம் நீயிட்டவழக்கா யன்றோ விருக்கிறது; வணங்கவேணுமென்னும் நினைவுண்டு, வணங்கும்ப்ரகார மறிகிறிலேன். (அ)

ஒன்பதாம்பாட்டு.

யானும்நீதானே யாவதோமெய்யே அருநரகவையும் நீயானால் * வானுயரின்பமெய்திலென் ? மற்றைநரகமேயெய்திலென் ? எனிலும் * யானும்நீதானாய்த்தெளிதோறும்நன்றும் அஞ்சுவன் நரகம்நானடைதல் * வானுயரின்பம்மன்னிவீற்றிருந்தாய் ! அருளுநின்தாள்களை எனக்கே. (கூ)

ப.—அநந்தரம், இவ்வறிவோடே யெங்குமிருந்தாலும் குறைவற்றிருக்க, து:க்காத்மகமான ஸம்ஸாரத்திலிருக்க வஞ்சாநின்றேன், நிரதிஶய புருஷார்த்தமான ப்ராப்ய தேசவர்த்தியான வுன்திருவடிகளைத் தந்தருளவேணுமென்கிறார்.

(இ-ள்.) யானும்-அஹம்புத்தி வ்யவஹார விஷயமானநானும், நீதானே-த்வத்ப்ரகார பூதனாகையாலே நீ தானேயாயிருப்பன்; இப்படி (க) "ஸோஹம் [illegible] - அஹம்வைத்வமஸி பகவோதேவதே" என்று, ஆவது - இவ்வர்த்தம், ப்ரமாண ப்ரஸித்தமாகையாலே, மெய்யே - பரமார்த்தம், அரு - துஸ்தரமாய், நரகவையும் - து:கோத்தரமான ஸம்ஸாரத்தில் வஸ்துக்களானவையும், (உ) "[illegible]-ஸர்வம்கல்விதம்ப்ரஹ்ம" என்கிற மர்யாதையாலே, நீ - த்வத்ப்ரகார பூதங்கள், ஆனால் - ஆனபின்பு, வான் - விலக்ஷணமானவுனக்கு ஶேஷமான வாத்மாவுக் கநுரூபமான பரமபதத்தில், உயர் - உச்ச்ரிதமான, இன்பம் - ஆநந்தத்தை, எய்திலென் - பெற்றிருக்கிலென், மற்றை - அவிலக்ஷணமாய் ஸ்வாதந்த்ர்யாவஹமாய் து:கோத்தரமாகையாலே யதுக்கெதிர்த்தட்டான, நரகமே - ஸம்ஸாரநிரயத்தை, எய்தில் - பெறில், என் - என், எனிலும் - என்கிற வர்த்தஸ்த்திதியானது லோகத்திலே வ்யவஹரித்துப்போரிலும், யானும் - ஜ்ஞாநாநந்தலக்ஷ

(க)

(உ) சாந்தோ-ங-கச.

ணமாய் விலக்ஷணமான அஹமர்த்தம், நீதாநுய் - அகிலஹேயப்ரத்யநீக கல்யாணைகதாநநு நீயாம்படி த்வத்ப்ரகாரமாக, தெளிதொறும் - உணர்ந்தபோதெல்லாம், நரகம் - ஸம்ஸாரநிரயத்தை, நான் - நான், அடைதல் - கிட்டுகையை, ஸ்ரீ கௌஸ்துபத்தைச் சேற்றிலே புதைத்தவோபாதி, நன்றும்-மிகவும், அஞ்சுவன் - அஞ்சாநின்றேன், வான் - பரமவ்யோம ஶப்தவாச்யமான பரமபதத்திலே, உயர் - அவாங்மநஸகோசரமாம்படி உச்ச்ரிதமான, இன்பம் - ஆநந்தத்தை, மன்னி - உடையையாய்க்கொண்டு, நிரந்தரமாக, வீற்று - உன்னுடைய ஸர்வஶேஷித்வ வ்யாவ்ருத்தி தோன்ற, இருந்தாய் - எழுந்தருளியிருக்கிறவனே, அவ்விபூதியிலுள்ளாரநுபவித்தடிமைசெய்கிற, நின் - உன், தாள்களை - திருவடிகளை, எனக்கு - எனக்கு, அருளு - தந்தருளவேணும். (கூ)

ஆறு ;—(யானுநீதானே) உம்முடைய ஸ்வரூபமுட்பட ஸர்வமும் நானே யென்னுமிடமறிந்தீராகில் உமக்கென்பக்கல் அலப்தாம் ஶமுண்டோ வென்னில் ;

ஸர்வமும் நீயேயாதலால், இவ்விடத்தே யிருந்தத்தோடு திருநாட்டிலிருந்தத்தோடு வாசியில்லை நிரூபிக்கில்; அப்படியேயாகிலும், ஸர்வமும்நீயே யென்னுமிடத்தை யறியச்செய்தேயும், திருநாட்டிலே நீயேயாயிருக்குமிருப்பைக்காணாதே யிருக்குமிவ்விருப்பாகிற நரகத்தை மிகவு மஞ்சாநின்றேன் ; அருளு நின்தாள்களை யெனக்கே யென்கிறார். (கூ)

ஈடு ; அவ ;—ஒன்பதாம்பாட்டு. “ ஸகல பதார்த்தங்களும் நீயிட்டவழக்கு ” என்கிற விந்தஜ்ஞாநத்தோடே யிருக்குமிடத்தில் ஸம்ஸாரத்தோடு பரமபதத்தோடு வாசியில்லையேயாகிலும், இந்த ஜ்ஞாநத்துக்கு விரோதியான ஸம்ஸாரத்திலிருக்க வஞ்சாநின்றேன்; இதுக்கநுகூலமான பரமபதத்திலே யென்னைக் கொடுபோகவேணுமென்கிறார்.

(யானுநீதானேயாவதோமெய்யே) நான் “ நீ ” என்கிற சொல்லுக்குள்ளே யடங்கும்படி யுனக்கு ப்ரகாரமாய், நான் ப்ரஹ்மஶப்த வாச்யனும்படி யிருக்கிற விவ்வர்த்தமோ, அது ஸத்யம். (க) “ ஆத்மேதி தூபகச்சந்தி க்ராஹயந்தி ச - ஆத்மேத்யேவதுக்ருஹ்ணீயாத் ” (உ) “ அஹம் ப்ரஹ்மாஸ்மி ... - அஹம்மநுரபவம்ஸூர்யஶ்ச ” என்

(க) போதாயந:. (உ) ப்ருஹ-ங-ச-கO.

றிறே முக்தர்பாசுரம். (மெய்யே) அதில் ஸம்ஶயமில்லை. (அருநரக வையும்நீ) எனக்குப் பொறுக்கவொண்ணாதே கால்வாங்கியல்லது நிற்கவொண்ணாதபடியான ஸம்ஸாரமும் நீயிட்டவழக்கு. இதிப்போது சொல்லுகிறது, நீ நினைத்தவன்று கழித்துத்தரவல்லை யென்கைக்காக. ஆக, நானுமெனக்கு விரோதியான ஸம்ஸாரமும் உனக்கு ப்ரகாரம். (ஆனால்) அர்த்ததத்த்வமிதுவானால்.

(வானுயரின்பமெய்திலென்) ஶேஷத்வ ஜ்ஞாநத்தோடே திருநாட்டிலேபோய் நிரதிஶயாநந்தத்தைப் பெற்றிருக்கிலென். (மற்றை நாகமேயெய்திலென்) ஸுகத்துக்கும் ஶேஷத்வஜ்ஞாநத்துக்குமெதிர்த்தட்டான ஸம்ஸாரத்திலே யிருக்கிலென். உடையவன் வைத்த விடத்திலே கிடக்குமத்தனையன்றோ வென்றோரர்த்ததத்த்வமுண்டு; (எனிலும்) இவ்வர்த்த மிப்படியானாலும்.

(யானுநீதானாய்த்தெளிதோறும்) இஸ்ஸம்ஸார முனக்குப்புறம்பென்கிற வாகாரத்தாலன்றிக்கே, "நானுனக்கத்யந்தஶேஷபூதன்" என்கிற தெளிவு பிறக்கப்பிறக்க. (நன்றுமஞ்சுவன்நரகம்நானடைதல்) ஶேஷத்வஜ்ஞாநமுண்டானபின்பு ஶேஷவஸ்து ஶேஷிசெட்டபடிகண்டு அவனெல்லைக்குள்ளே கிடக்குமித்தனையன்றோ; நம்மை நிர்ப்பந்திக்கக்கடவனோ வென்றிறே தேவர்க்குநினைவு; உனக்கிது நினைவானாலும், இஸ்ஸம்ஸாரத்திலிருப்பை நான் மிகவு மஞ்சாநின்றேன், ஶேஷத்வ ப்ரதிபத்திக்கு விரோதியாகையாலே. நீரஞ்சுங்காட்டில் நம்மாற் செய்யலாவதுண்டோ வென்னில் (வானுயரின்பம் மன்னிவீற்றிருந்தாயித்யாதி) இதுவேயன்றிக்கே, நித்யவிபூதியிலே நிரதிஶயாநந்தயுக்தனாய், உன்னுடைய ஶேஷித்வ வ்யாவ்ருத்தி தோற்ற விருப்பதோ ரிருப்புண்டு; அவ்விருப்பிலே யென்னை யழைத்து அஸாதாரணர் பரிமாற்றத்தை யெனக்குத்தரவேணும். (௯)

பத்தாம்பாட்டு.

தாள்களை எனக்கேதலைத்தலைச்சிறப்பத் தந்த பேருதவிக்கைம்மாறு * தோள்களையாரத்தழுவி என்னுயிரை அறவிலைசெய்தனன் சோதீ! * தோள்களாயிரத்தாய்! முடிகளாயிரத்தாய்! துணைமலர்க்கண்களாயிரத்தாய்! * தாள்களாயிரத்தாய்! பேர்களாயிரத்தாய்! தமியனேன்பெரியவப்பனே. (௧௦)

ப.—அநந்தரம், ஆஸ்ரிதருபோபகாரத்துக்குத் தாம்பண்ணின ப்ரத்யுபகாரத்தாலே அத்தலையிற்பிறந்த ஔஜ்ஜ்வல்யத்தையு மதிஸயித வைபவத்தையுமருளிச்செய்கிறார்.

(இ-ள்.) "அருளுகின்றாள்களை யெனக்கே" என்ற வாசைக்கீடாக, தாள்களை - அத்திருவடிகளை, எனக்கே - எனக்கஸாதாரணமாம்படி, ஸேஷத்வப்ரதிஸம்பந்தியாகவும், ஆஸ்ரயண ப்ரதிஸம்பந்தியாகவும், கைங்கர்ய ப்ரதிஸம்பந்தியாகவும், தலைத்தலை - மேன்மேலென. சிறப்ப - சிறக்கும்படி, தந்த - தந்தருளின, பேருதவி - மஹோபகாரத்துக்கு, கைம்மாறு - ப்ரத்யுபகாரமாக. அபூர்த்தமான, என் - என், உயிரை - ஆத்மவஸ்துவை, உபகாரஸ்ம்ருதியிலுண்டான ஹர்ஷாதிஸயத்தாலே, தோள்களை - தோள்கள், ஆர - நிரம்பும்படி, தழுவி - † பூர்த்தவஸ்துவை யாலிங்கநம்பண்ணுமாபோலே அத்யாதரம்பண்ணி, இஷ்டவிநியோகார்ஹமாம்படி, உபகார ப்ரத்யுபகாரங்களிலுண்டான க்ரயவிக்ரய ஸமாதியாலே, அறவிலை - அறவிலை, செய்தனன் - செய்துதந்தேன்; சோதீ - (௧) "அதுவுமற்றாங்கவன்றன்னது" என்று மீளாதே, உபகாரஸ்ம்ருதியிலுண்டான கலக்கத்தாலேபண்ணின ஸமர்ப்பணத்தை ஹர்ஷப்ரகர்ஷத்தாலே, உன்னது பெற்றாயாயிராதே பெறாப்பேறுபெற்றாயான ஔஜ்ஜ்வல்யத்தையுடையவனே, இந்தவடிவிலொளியளவன்றிக்கே, பஹுமுகமாகத்தழைத்த, (௨)"ஆயிரந்தோளால்" என்கிறபடியே, தோள்கள் - உபகாரகமான திருத்தோள்கள், ஆயிரத்தாய் - ஆயிரத்தையு முடையையாய், (௩) "ஸஹஸ்ர ஸீர்ஷா - ஸஹஸ்ரஸீர்ஷா" என்கிறபடியே, முடிகள் - திருமுடிகள், ஆயிரத்தாய் - ஆயிரத்தையுமுடையையாய் "ஸஹஸ்ராக்ஷ:-ஸஹஸ்ராக்ஷ:" என்கிறபடியே துணை - இணையான, மலர் - மலர்போன்ற, கண்கள் - திருக்கண்கள், ஆயிரத்தாய் - ஆயிரத்தையுமுடையையாய், "ஸஹஸ்ரபாத் - ஸஹஸ்ரபாத்" என்கிறபடியே. தாள்கள் - திருவடிகள், ஆயிரத்தாய் - ஆயிரத்தையுமுடையையாய், (௪) "நாமஸஹஸ்ரவாந்-நாமஸஹஸ்ரவாந்" என்கிறபடியே, பேர்கள் - திருநாமங்கள், ஆயிரத்தாய் - ஆயிரத்தையுமுடையையாய். தமியனேன் - அறிவையும் ஸங்கிக்கும்படி தனிமைப்பட்டவெனக்கு, பெரியவப்பனே - உன் பெருமைக்கீடாக வுபகரித்த ஸ்வாமியானவனே.

இப்படி யௌஜ்ஜ்வல்யத்தையும் வைபவத்தையு முடையவனே, எனக்கு மஹோபகாரகனானவென்றுமாம்; "என்னுயிரை யறவிலைசெய்தனன்" என்றந்வயம். (௧௦)

---

(௧) ௭-௯-௧௦. (௨) தி-மொ-௫-௭-௪.
(௩) புருஷஸூக்தம். (௪) பார. † (பா) அபூர்த்த.

ஆறு ;—(தாள்களை) ஸம்ஸாரிகளெல்லாரும் ப்ராக்ருதவிஷயைக தாரக போஷக போக்யராயிருக்கச்செய்தே, என்னை யுன்திருவடிகளையே தாரக போஷக போக்யமாயிருக்கும்படி பண்ணியருளினாய் ; இந்த மஹோபகாரமே யமையாதோ, இவ்வுபகாரத்துக்குக் கைம்மாறாக வென்னுடைய வாத்மாவை யுனக்கே யடிமையாகத் தந்தேனென்னும் ப்ரீதியாலே ஸம்பாவித்து, தம்முடைய வாத்மாவை ஆத்மாந்த ஶேஷமாகக்கொடுத்து, இந்த மஹோபகாரத்தைப் பண்ணின வுன்னை யொருகால் காணவேணும். காண வெளிதோ வென்னில் ; காணவேணுமென் றபேக்ஷித்த வாஸ்ரிதர்க் காக வன்றோ, நீயஸங்க்யேய திவ்யரூபங்களையும், அஸங்க்யேய கல்யாண குணங்களையு முடையையாயிருக்கிறது, உன்னையொழிய வொரு க்ஷணமாத்ரமும் செல்லாதிருக்கிறவெனக்கும் அரியையாகலாமோ பிரானேயென்கிறார். (கo)

ஈடு ; அவ ;—பத்தாம்பாட்டு. தாம்மநோரதித்தபடியே திருவடிகளைத் தந்தருளின மஹோபகாரத்துக்கு ப்ரத்யுபகாரமாக விவ்வாத்மவஸ்துவை யுனக்குத் தந்தேனென்கிறார். இப்போது திருவடிகளைக் கொடுக்கையாவது - ஸம்ஸாரத்தோடு பொருந்தாதபடியையும் தன்னையொழியச் செல்லாதபடியையும் தமக்குப்பிறப்பித்த தன்மையை ப்ரகாஶிப்பிக்கை.

(தாள்களையெனக்கே தலைத்தலைச்சிறப்பத்தந்த) (க) " பலரடியார் முன்பருளிய " என்கிறபடியே-ஸ்ரீவாத்ஸல்யபகவான், முதலாழ்வார்கள் தொடக்கமானாருண்டாயிருக்க, என்பக்கலிலே விஶேஷ கடாக்ஷம்பண்ணி, மிகச்சிறக்கும்படிதந்த. பூர்ணமாகத்தந்தவென்கை. (பேருதவி) கொள்ளுகிறவென் தரத்திலன்றிக்கே, தன்தரத்திலே தருகை. (கைம்மாறு) ப்ரத்யுபகாரமாக. (தோள்களையாரத்தழுவி) ஒருவனுக்கொருவன் கந்யகையை யணைத்துக் கொடுக்குமாபோலே, இங்குமணைத்துக் கொடுக்கலாம்படி அபூர்த்தமான வாத்மவஸ்து, தானுந்தோளுமாய்ப் பணைத்ததாயிற்று உபகார ஸ்ம்ருதியாலே. (உ) "எனதாவியாவியும் நீ - எனதாவியார் யானார்," (௩) "மனமும் வாசகமும் செய்கையும் யானுநீதானே" என்பதானவற்றை மறந்

(க) எ-கo-ச.   (உ) உ-௩-ச.

(௩) எ-க-அ.

தார் ஹர்ஷத்தாலே. (என்னுயிரையறவிலைசெய்தனன்) என்னுடைய வாத்மவஸ்துவை தேவர்க்கநர்ஹமாம்படி யறவிலை செய்து தந்தேன்.

(சோதீ) இவர் தம்மதல்லாததொன்றைத் தம்மதாக ப்ரமித்துக் கொடுத்தாப்போலே, அவனும் தன்னதல்லாததொன்றைப் பெற்றாப்போலே ப்ரமித்து உஜ்ஜ்வலனாகாநின்றான். (க) "விஜ்வர: - விஜ்வர:" என்னும்படி யிராநின்றான். (தோள்களித்யாதி) முன்பிழவாலே கூப்பிட்டவர் தரித்து ப்ரத்யுபகாரத்திலே யிழிந்தபடியைக் கண்டு, அத்தாலே அவனுக்குப் பிறந்த பௌஷ்கல்யத்தைப் பேசுகிறார். உபகார ஸ்ம்ருதியாலே யிவருடைய வாத்மவஸ்து தானுந் தோளுமாய்த் தளிர்த்தாப்போலே, * ஸதைகரூபமான வடிவும் ஸதஸாகமாயிற்று.

ஒரு ஸம்ஸாரியை லபித்து அவாப்த ஸமஸ்தகாமனான விவன் இப்படி ஹ்ருஷ்டனானானென்கிறவிது கூடுமோவென்னில்; ஸார்வ பௌமனான க்ஷத்ரியனுக்கோர் புத்ரன் பிறந்தால், அபிமதையான மஹிஷியைக் கண்டாலே சாபலமின்றிக்கே யொழியுமோ. அவாப்த ஸமஸ்தகாமத்வமும் ப்ரமாணஸித்தமாய், ஆச்ரிதவாத்ஸல்யமும் ப்ரமாண ஸித்தமானால் அப்படியே கொள்ளுமத்தனையன்றோ?. எனக்கு ஹர்ஷத்தைப் பிறப்பித்து, அந்த ஹர்ஷத்தைக்கண்டு அத்தாலே தானிப்படி விஸ்த்ருதனானதே! யென்று கொண்டாடுகிறார்.

(தமியனேன்) இவன் ஸ்வரூபத்தில் பராச்ரித பாரதந்த்ரயத்தில் மதிசங்கைபண்ணினபோதை வெறுமையை நினைத்துச்சொல்லுகிறார். (பெரியவப்பனே) பண்ணின வுபகார மோரளவுபட்டிருந்ததில்லையே!. என்பக்கலிலே யொருநன்மையுண்டாய்ச் செய்தாயல்லையிறே, ப்ராப்தியாலே செய்தாயத்தனையிறே. (க௦)

பதினோராம்பாட்டு.

பெரியவப்பனைப்பிரமனப்பனை உருத்திரனப்பனை * முனிவர்க்கு
உரியவப்பனைஅமரரப்பனை உலகுக்கோர்தனியப்பன்தன்னை *
பெரியவண்குருகூர்வண்சடகோபன் பேசினஆயிரத்துள்ளும் *
உரியசொல்மாலை இவையும்பத்து இவற்றால் உய்யலாம்தொண்டீர்!
நங்கட்கே. (கக)

(க) ரா-பா-க-அ௫.

ப.—அநந்தரம், இத்திருவாய்மொழி ஆத்மோஜ்ஜீவந ஹேதுவென்று பலத்தை யருளிச்செய்கிறார்.

(இ-ள்.) பெரியவப்பனை - ஸர்வாதிக ஸ்வாமியாய், பிரமன் - ஸகலஸ்ரஷ்டாவான ப்ரஹ்மாவுக்கு, அப்பனை - உத்பாதகனாய், அப்படியே, உருத்திரன் - ஸம்ஹாரகர்த்தாவான ருத்ரனுக்கும், அப்பனை - உத்பாதகனாய், முனிவர்க்கு - ஜ்ஞாநாதிகரான ஸநகாதிமுநிகளுக்கு, உரியவப்பனை - அஸாதாரண சேஷியாய், அமரர் - அவஸிஷ்டரான தேவர்களுக்கு, அப்பனை - உத்பாதகனாய், இப்படி, உலகுக்கு - ஸகலலோகத்துக்கும், ஓர் - அத்விதீயனான, தனியப்பன்றன்னை - ப்ரதாந நாயகனானவனை - பெரிய -பெரிய, வண் - ஸம்பத்தையுடைத்தான, குருகூர் - திருநகரிக்கு நிர்வாஹகராய், வண் - ப்ரபந்த நிர்மாணமுகத்தாலே மஹோதாரரான, சடகோபன் - ஆழ்வார், பேணின - அத்யந்தாபி நிவேஸம்பண்ணி யாதரித்துச்சொன்ன, ஆயிரத்துள்ளும் - ஆயிரந் திருவாய்மொழிக்குள்ளும், பகவத்போக்யதாதிகுண ப்ரதிபாதகத்தில், உரிய - உரிய, சொன்மாலை - ஸப்தஸந்தர்ப்பத்தை யுடைத்தாயிருக்கும், இவைபத்தும் - இவைபத்தும், இவற்றால் - இவற்றாலே, தொண்டீர் - இதர விஷயங்களிலே சபலராய்த் தொண்டராய்த் திரிகிறவர்களே, நங்கட்கு-அநாதிகால மங்யபரான நமக்கு, உய்யலாம் - உஜ்ஜீவிக்கலாம். (கக)

இது - எழுசீராசிரியவிருத்தம்.

ஆறு ;—(பெரியவப்பனை) ப்ரஹ்மாதி ஸகல ஸுரகணங்களுக்கும், ஸர்வலோகத்துக்கு மீஸ்வரனாயிருந்த நீயே உன்திருவடிகளைத் தந்தருளவேணுமென்றாசைபட்டு, (க) "ப்ரஜேஶஶூர மஹேஶ ... யாக்ஷேமங்கேமத்பாக்யஸங்க்யாத்" என்று பிராட்டி சொன்னாப் போலே சொன்ன உரிய சொன்மாலையான வித்திருவாய்மொழியை வல்லார்க்கு எம்பெருமானைப்பெறலாம்; நான் பட்டபாடு படவேண்டா. நீரிப்பாடுபடுவா னென்னென்னில்; இக்கண்ணாலே யிப்போதே காணவேணுமென்று படுகிறேன்; எம்பெருமானைப் பெறாதொழிகிறேனென்று படுகிறேனல்லே னென்கிறார். (கக)

ஈடு ; அவ ;—பதினோராம்பாட்டு. நிகமத்தில் - இத்திருவாய்மொழியிற்சொன்ன வர்த்தத்தை ஸங்க்ரஹேணசொல்லி, இத்தை யப்யஸிப்பார்க்கு ஸர்வேஶ்வரனை லபித்து உஜ்ஜீவிக்கலா மென்கிறார்.

(க) ரா-ஸு-உ௪-௧௩.

(பெரியவப்பனை) உபயவிபூதியுக்தனை. (பிரமனப்பனை) சதுர்த்தச புவநேஸ்வரனான ப்ரஹ்மாவுக்கு உத்பாதகனானவனை. (உருத்திரனப்பனை) அவன் புத்ரனான ருத்ரனுக்கும் நிர்வாஹகனானவனை. (முனிவர்க்குரிய வப்பனையென்கிறது) ஸநகாதிகளுக்கு ப்ரஹ்மபாவனையே யாகையாலே, உரியவென்று-அண்மைசொல்லுகிறது. (அமரரப்பனை) தேவர்களுக்கு உத்பாதகனானவனை. (உலகுக்கோர்தனியப்பன்றன்னை) இப்படிப்பிரித்துச்சொல்லுகிறதென்? ஸகலலோகங்களுக்கு மேகநிர்வாஹகனானவனை. (க) "தைவதம் தேவதாநாஞ்ச-பூதாநாம்யோவ்யய: பிதா" என்றிறே யிருப்பது. இப்போதிவை சொல்லுகிறதென்னென்னில்; நிதியெடுத்தவன் "இன்னதுகண்டேன், இன்னதுகண்டேன்" என்னுமாபோலே; ஸ்வரூபத்திலும் குணத்திலும் மதிசங்கைபண்ணினபோது இழந்தாராயிருந்தவற்றை லபிக்கையாலே யிவற்றைப்பிரித்துச் சொல்லுகிறார். முனிவர்க்குரிய வப்பனையென்று - ஆஸ்ரித பவ்யதையைச் சொல்லுகிறது.

(பெரியவண்குருகூர்) ரக்ஷகன் தாழ்த்தவாறே அதிசங்கை பண்ணுகையும், உபகார ஸ்ம்ருதியாலே ஹ்ருஷ்டராகையுமாகிற விவற்றுக்கடி அவ்வூரில் பிறப்பென்கை. (வண்சடகோபன்) மாநஸாநுபவ மாத்ரமாய்விடாதே, ப்ரபந்தீகரித்த வௌதார்யம். (பேணினவாயிரத்துள்ளுமுரிய சொன்மாலை யிவையும்பத்து) அவனைத்தாமாசைப்பட்ட படியைச்சொன்னபத்து. (உரியசொன்மாலை) (உ) "யதோவாசோ நிவர்த்தந்தே" என்று மீளுகையன்றிக்கே, பகவத்குணங்களுக்கு நேரேவாசகமாகை. (இவற்றுலுய்யலாந்தொண்டீர்நங்கட்கே) அநாதிகாலம் பகவத்விமுகராய், விஷயாந்தரப்ரவணராய், (௩) "ஸஏவ-அஸந்நேவ" என்கிறபடியே அஸத்ஸமராயிருக்கிற நமக்கு, "ஸஏநம்-ஸந்தமேநம்" என்கிறபடியே உஜ்ஜீவிக்கலாம். (கக)

எட்டாம்பத்து முதற்றிருவாய்மொழி முற்றிற்று.

(க) ஸஹஸ்ரநாமா. (உ) தை-ஆந-க.

(௩) தை-ஆந-௬.

ஸ்ரீமதேராமாநுஜாய நம:

எட்டாம்பத்து

இரண்டாந்திருவாய்மொழி

நங்கள் - ப்ரவேஶங்கள்.

ஆறு ;—(நங்கள்வரிவளை) இந்த வ்யஸநம்முறுகி எம்பெருமானோடே கலந்துபிரிந்த பிராட்டியாய், காணவேணுமென்று கூப்பிடுகிறார்.

ஸ்ரீவைகுண்டநாதனான ஸர்வேஶ்வரனும், "'உன்னுடைய கடாக்ஷலக்ஷ்யமாகப் பெறுவதுகாண்' என்றாசைப்பட வேண்டும்படியான வடிவையுடைய நீ யாசைப்படுகைக் கீடாயிருப்பதொரு விஷயமுண்டோ, நீயாசைப்பட்ட விஷயமேது" என்றும், "உனக்குச்செல்லுகிற வ்யவஸாயமேது" என்று மிவளுடைய தோழிமார் கேட்க ;

ப.—இரண்டாந்திருவாய்மொழியில், தம்முடைய ஆகாங்க்ஷாநுரூபமாக அகவாயிலே அவன் வந்து முகங்காட்டினபடியை யநுஸந்தித்தவர், அவனுடைய பூர்த்தியைக்கண்டு பாஹ்ய ஸம்ஶ்லேஷம்பண்ண அபிநிவேஶித்து அதித்வரிதசித்தராய், ப்ராப்யபூதனான ஈஶ்வரனுடைய அதிகம்யத்வஸூசகமான ஸௌலப்யாதி குணவத்தையையும், அநுபாவ்யாகாரத்தையும், ஆகர்ஷகமான ஆபிரூப்யத்தையும், அநிஷ்ட நிராஸகமான பரிகரவத்தையையும், அபரிச்சேத்யமான ஔஜ்ஜ்வல்யாதிஶயத்தையும், ஆஶ்ரித ஜ்ஞானர்க்கு மவகந்துமஶக்யதையையும், அபிநிவேஶஜநகமான ஆகாரவிஶேஷங்களையும், அந்யஸக்தவிஷயத்தில் அஸுலபதையையும், அநந்யார்ஹத்வாபாதகத்வத்தையும், சித்தாபஹாரியான திவ்யவிக்ரஹோச்ச்ராயத்தையு மநுஸந்தித்து, ஏவம்பூதனான ஸர்வேஶ்வரனை யநுபவிக்குமிடத்து இவ்வருகுண்டான அநுபவத்தில் ஸங்கமற்றாலல்லது ஸித்தியாதென்றறுதியிட்டு த்வரையாலே ஆர்த்தரானதம்முடைய ஆர்த்தியை யாற்றுகைக்காக நிஷேதோந்முகரான ஸுஹ்ருத்ப்ரப்ருதிகளைக்குறித்துத் தம்முடைய நிஸ்ஸங்கதையை வெளியிட்டப்ரகாரத்தை நாயகனான ஈஶ்வரனைப்பிரிந்த நாயகியானவள் தன்னுடைய அபிஸரணோத்யோகத்தாலே தோழிமார் தாய்மாரோடு தான்வளர்த்தகிளி பூவை மயில் குயில்களோடு வாசியற ஸர்வர்பக்கலிலும் ஸங்கமற்றுத் தன்னுடைய ஸ்த்ரீத்வாதிகுணங்களையு மநாதரித்து அவன் வடிவழகிலே யபஹ்ருதசித்தையான ஆகாரத்தைப்பேசின பாசுரத்தாலே யருளிச்செய்கிறார்.

ஈடு ;—கீழிற்றிருவாய்மொழி ப்ராபகப்ரதாநம், இது ப்ராப்ய ப்ரதாநமாயிருக்கிறது. கீழே அவன் குணங்களிலும ஸ்வரூபத்திலு மதிஶங்கை பண்ணித்தெளிந்து, “ வணங்குமாறறியேன் ” என்று தந்தலையில் ஸாதநயோக்யதையைத்தவிர்த்து, “ யானுநீதானேயா வதோமெய்யே ” என்று அவன்பக்கல் ந்யஸ்தபரதையைச்சொல்லி, இப்படி ப்ராஸங்கிகமாக “ அவனேப்ராபகன் ” என்னுமிடத்தை நிஷ்கர்ஷித்தார்.

அவனே ப்ராபகனுமிடத்தில் பேற்றுக்கு விளம்பஹேதுவில்லை யாயிருக்க, அவன்வந்து முகங்காட்டாதொழிகைக்கு ஹேதுவுண்டாக வேணுமென்று பார்த்தார் ; அதில் அவன்பக்கல் பார்க்கலாவ தொன்றில்லை, இதுக்கடி நம்பக்கலிலே யாகவேணும் ; (க) “ உசெஜ வஹ்ருதம் கிம்ஸ்விந்நஹ ஹ ஸ்விந்நஸம்ஶய:- மமைவதுஷ்க்ருதம்கிஞ் சிந்மஹதஸ்திநஸம்ஶய: ” என்றாளிறே பிராட்டி. இவருமப்படியே, “ நெடுநாள் ஸம்ஸரித்துக்கண்ட தெல்லாவற்றிலும் ருசிபண்ணிப் போந்தோம், நம்முடைய பூர்வவ்ருத்தத்தையும் நமக்கிப்போதுள்ள வளவையும் ஸர்வஜ்ஞனவ னறியாமையில்லை ; நாமறியாதிருக்க, அவனறிய வவன்பக்கல் ருசியிலே நமக்குக்குறையுண்டாகவேணும்” என்று பார்த்து, “ அதுண்டாகவுமாம், இல்லையாகவுமாம், புறம் புண்டானவற்றில் ருசியில்லை யென்னுமிடத்தை அவன்திருவுள்ளத் திலே படுத்துவோம் ” என்று பார்த்து, ப்ராப்யவிரோதிகளிலும், ப்ராபகவிரோதிகளிலும் தமக்கு ருசியில்லாமையை அந்யாபதேசத் தாலே யருளிச்செய்கிறார்.

ஸர்வேஶ்வரனோடு கலந்துபிரிந்தா ளொருபிராட்டி, அவன் தானே வரக்கண்டிருக்கையன்றிக்கே. * அபிசாரிகையாய் அவனி ருந்ததேசத் தேறப்போவதாக வொருப்பட ; இத்தையநுஸந்தித்த தோழிமார் தொடக்கமானார், “ உனக்கிதாகாதுகாண் ” என்று ஹிதஞ்சொல்லி மீட்கப்பார்க்க, அவர்களைக்குறித்து, தோழிமார் தொடக்கமானவர்களிலும் மற்றுமுள்ளவர்களிலும் நசையில்லா மையை அவர்களுக் கறிவிக்கிற பாசுரத்தாலே தமக்கு நசையில்லா மையை அவன் திருவுள்ளத்திலே படுத்துகிறார்.

(க) ரா-ஸு-௨௮-௨௮.

முதற்பாட்டு.

நங்கள்வரிவளையாயங்காளோ! நம்முடையேதலர்முன்புநா
ணி * நுங்கட்குயானொன்றுரைக்கும்மாற்றம் நோக்குகின்றேன்
எங்கும்காணமாட்டேன் * சங்கம்சரிந்தனசாயிழந்தேன் தடமுலை
பொன்னிறமாய்த்தளர்ந்தேன் * வெங்கண்பறவையின்பாகன் எங்
கோன் வேங்கடவாணனைவேண்டிச்சென்றே. (க)

ப —முதற்பாட்டில், ஸர்வஸுலபனான திருவேங்கடமுடையானை யபி
நிவேசித்து என்னுபாண ஸோபையோடு ஆபிருப்யத்தோடு வாசியற விழந்தே
னென்று தோழிமார்க் கறிவிக்கிறார்,

(இ-ள்) வரி - வரியையுடைத்தான, வளை - வளையையுடையாயிருக்கிற, நங்கள் - நம்முடைய, ஆயங்காளோ - ஆயங்காள், நம்முடை - ஸமாநஸுகதுஃகைகளான வுங்களைப்போலன்றியே, ஏதலர் - ஹிதவசனம்பண்ணி மீட்கத்தேடுகிறவர்களாகையாலே ஸாத்ரவகோடியிலே நிற்கிறதாயார், அயலார், முன்பு - முன்பு, நாணி - சொல்லநாணி, நுங்கட்கு - அந்தரங்கைகளான வுங்களுக்கு, யான், உரைக்கும் - சொல்லலாவது, ஒன்று - ஒரு, மாற்றம் - வார்த்தையானது, நோக்குகின்றேன் - பாராநின்றேன்; எங்கும் - எல்லாவழியாலும், காண - இந்த்விகாரஹேதுவைப் பாசுரமிட்டுச்சொல்லும்படிகாண, மாட்டேன் - மாட்டுகிறிலேன், ஆகலால்-என்விகாரங்கொண் டறியுமித்தனை, அதாவது, வெம் - ஆஶ்ரிதவிரோதிகளை யழியச்செய்யும் வெவ்விய, கண் - பார்வையையுடைய, பறவையின் - பெரியதிருவடியைநடத்தும், பாகன் - நிர்வாஹகனாய், அந்தவாஹ நாதிஷ்டாநத்தைக்காட்டி, எம் - என்னையடிமைகொண்ட, கோன் - ஸ்வாமியாய், அநுபவிக்கைக்கீடாக, வேங்கடம்- திருமலையிலே, வாணனை - ஸுலபனாய்வந்து நிற்கிறவினை, வேண்டி - இவ்வாகாரங்களடியாகவபிநிவேசித்து, சென்று - நடந்து, சங்கம் - என்னுடைய சங்குவளைகளானவை, சரிந்தன - சரிந்துகழன்றன, சாய் - ஸ்வாபாவிகமான வடிவிலொளியும், இழந்தேன் - இழந்தேன், தடம் - பெரிய, முலை - முலைகள், பொன்னிறமாய் - பசப்பாலே பொன்னிறமாய், தளர்ந்தேன் - ஶிதிலசரீரையானேன்.

நிர்த்தோஷப்ரமாணருடனாய், நிருபாதிக ஸம்பந்தயுக்தனாய், நிரவதிக ஸௌலப்ய விஶிஷ்டனானவனென்று கருத்து. (க)

ஆறு ;—உகவாதார்முன்பு என்னுடைய வவஸாதத்தை வ்யஞ்ஜிப்பிக்கையிலுள்ள லஜ்ஜையாலும், அவஸாதந்தான் நிரவதிகமாயு

மிருக்கையாலே அதுக்கு வாசகமாயிருப்பதொரு ஶப்தம் காணாமை யாலும் என்னுடைய வ்யவஸாயத்தை உங்களுக்குச் சொல்லமாட்டு கிறிலேன். இப்படி வ்யவஸாயம்வருகைக் காசைப்பட்டதென்னென்னில்; திக்ஷ்ண நிரீக்ஷண நிர்த்தக்த ப்ரதிபக்ஷனான பெரிய திருவடியை வாஹநமாகவுடைய திருவேங்கடமுடையானை யாசைப்பட்டு, சங்கம் சரிந்தன சாயிழந்தேன் தடமுலை பொன்னிறமாய்த் தளர்ந்தே னென்கிறார். (க)

ஈடு ; அவ ;—முதற்பாட்டு; தோழிமாரானவர்கள், "உகவாதா ரெதிரன்றோ லஜ்ஜிக்கவேண்டுவது, எங்களுக்கு லஜ்ஜிக்கவேணு மோ, உனக்கோடுகிற தசையைச்சொல்லு" என்ன, பிறர்க்குமறைத்து உங்களுக்குச் சொல்லலாம் வார்த்தை பார்த்தவிடத்து ஒன்றுங் காண்கிறிலே னென்கிறாள்.

(நங்கள்வரிவளை) முன்பு உங்களோடொன்றேடு வாஸியறவெல்லார்க்குமுண்டானவளை. (க) "ஏக ஏவ ... ஏகம்" [illegible] துக்கம்ஸுகஞ்சமிநா" என்று ஸுகதுக்கங்களொன்றாகச் சொல்லிப்போந்த நீங்கள் அநுஷ்டானத்திலே வந்தவாறேபேதிப்பதே!. இப்போதநுஷ்டானத்தில் பேதமென்னென்னில் ; கையிலேகண்டிலோமோ. நான் சங்கையற்றிருந்தேன்; நீங்கள் சங்கையுடையீர்கோளாயிருந்திகோள். (வரிவளை) வரியையுடையவளை யென்னுதல், தர்ஶநீயமானவளை யென்னுதல். இவளை தரிப்பிக்கைக்காக அவர்களும் வருந்தி தரித்திருப்பார்களிறே. பிராட்டியைப் பிரிந்தவிடத்தில் பெருமாளிற்காட்டிலும் "தம்முடைய காவற்சோர்வாலேவந்தது" என்று தளர்த்திபிராட்டித் திருக்கச்செய்தேயும், பெருமாள் தளருவரென்று தம்முடைய தளர்த்தி தோற்றாதபடி இளையபெருமாள் தரித்திருந்தாப்போலே, இவர்களும் தரித்திருப்பர்கள் வளையை.

(ஆயங்காளோ) தோழிமாரிலும் தாமுண்டாயிருக்க, இப்போதெல்லாரு மொருபடிப்பட்டிருக்கிறார்கள். (ஆயங்காள்) தோழிமீர். (ஓ) விஷாதாதிஶயஸூசகம். அவர்களை ஸம்போதித்துவைத்து வார்த்தை சொல்லுவதுக்கு முன்னே விஷண்ணையாகிறாள். இவ்விஷாதஹேதுவைப் புறம்புள்ளார்க்கு மறைத்தாயாகிலும் எங்களுக்குச் சொல்லவேண்டாவோ, உனக்கோடுகிறதசையைச் சொல்லா

(க) ரா-கிஷ்-இ-க௮.

யென்ன (நம்முடையித்யாதி) தோழிமாரிப்போது ஹிதஞ்சொல்லி மீட்கப்பாராநின்றார்களாகிலும், பெறுமிடத்தில் விழுக்காட்டிலொத் திருக்கையாலே-நம்முடையேதலரென்கிறாள். ஏதலர்-ஶத்ருக்கள். இவளுக்குச்சில ஶத்ருக்களில்லையிறே; ஹிதஞ்சொல்லி மீட்கப் பார்க்கிற தாய்மாரிறே ஶத்ருக்கள். (ஏதலர்முன்புநாணி) ஶத்ருக் கள் முன்புலஜ்ஜித்து. (நுங்கட்கு) தோழிமாரான வுங்களுக்கு (யானித்யாதி) நானொருவார்த்தை சொல்லவேணுமென்றாராய்ந்து பாராநின்றேன்; (எங்குங்காணமாட்டேன்) இதுக்கொருபாசுரமிட் டுச் சொல்லவேணுமென்று பார்த்தவிடத்து ஒருபடியாலும் க்ஷமை யாகிறிலேன்.

மாட்டேனென்கிறதென், சிலர்க்கு மறைத்து ஆப்தர்க்குச் சொல்லத்தட்டென்னென்ன (சங்கம்சரிந்தன) நானித்தை யார்க்கு மறைத்து ஆர்க்குவெளியிடுவது. "ஜமஉஷுஸிகூ - ஜகதஸ்த மிதம்" என்றாப்போலே காணுமிருக்கிறது. இவளைக் கிடையாத போது நாயகனில்லை, நாயகனில்லாதபோது உபய விபூதியுமில்லை. அதாவது - இவள்கையும் வளையுமாயிராதவன்று நாயகனுளனாகமாட் டான்; இருவருமான சேர்த்தியிலே யுண்டாகக்கடவ வுபயவிபூதியு மழியும். (சாயிழந்தேன்) அவனோடேகலந்து பெற்றதாய், அவன் வருமளவும் தரிக்கைக்குக் கைம்முதலான வெழிலையுமிழந்தேன். (த டமுலையித்யாதி) அவன் வந்தாலும் ப்ரயோஜநமில்லாதபடி அவன் கைம்முதலுமழிந்தது. (தடமுலை) போக்தாவாலுண்டாக்கவொண் ணாத பரப்பையுடையமுலை. (பொன்னிறமாய்) விவர்ணமாய். க்ஷேத்ரம் மணலீடாய்ப் போமாபோலே. (தளர்ந்தேன்) இழந்தவை வந்தாலும் தொங்குகைக் காஶ்ரயமில்லை.

(வெங்கட்பறவையின் பாகனெங்கோனித்யாதி) இழந்த விழ வுக்கு ஹேதுசொல்லுகிறது. (வெங்கட்பறவை) வெவ்வியகண்ணை யுடைய பெரியதிருவடி. வருமிடத்தில் ப்ரதிபந்தகங்களையும் போக் கிக்கொடுவருமென்னுதல். ஸம்ஶ்லேஷத்தைப்பிலே பிரித்துக்கொடு போமென்னுதல். (க) "கக ஞாக ஞாஹூஉயஃ-அக்ரூரஃக்ரூ ரஹ்ருதயஃ" (பறவையின்பாகனெங்கோன்) பெரியதிருவடி முதுகி லிருப்பைக்காட்டியாயிற்று என்னையநந்யார்ஹையாக்கிற்று. (வேங்க

(க) வி-பு-ரு-கஅ-௬0.

டவாணனை) பரமபதத்திலிருப்பை யாசைப்பட்டேனல்லேன், நமக்குக்காட்சிதருகைக்கு வரநின்றவிடத்தே. (வேண்டிச்சென்றே) நம்மை வேண்டிவந்தவனை நாம் வேண்டிச்சென்று. நாமாசைப்பட்டுச் சென்றென்றபடி. அவன்றான் வரக்கண்டிருக்கையன்றிக்கே, அவனிருந்த தேசத்தளவும் சென்றபேக்ஷிதம் பெறுமையாலே, சங்கம் சரிந்தன. (சென்று) பால்சென்றாப்போலே சென்றற்றென்றுமாம்.

இரண்டாம்பாட்டு.

வேண்டிச்சென்றொன்றுபெறுகிற்பாரில் என்னுடைத்தோழியர்நுங்கட்கேலும் * ஈண்டிதுரைக்கும்படியையந்தோ! காண்கின்றிலேன்இடராட்டியேன்நான் * காண்தகுதாமரைக்கண்ணன்கள்வன் விண்ணவர்கோன்நங்கள்கோனைக்கண்டால் * ஈண்டியசங்கும்நிறைவும்கொள்வான் எத்தனைகாலம்இளைக்கின்றேனே. (உ)

ப.—அநந்தரம், அநுபாவ்யாகார விஶேஷத்தையுடையனான வவனபஹரித்தவளை முதலானவற்றை வாங்குகைக்கு எத்தனைக்காலம் க்லேசிக்கிறேன், உங்களுக்ககப்பட விதுசொல்லும் விரகறிகிறிலேனென்கிறாள்.

(இ-ள்.) சென்று - இவன்பாடே சென்று, ஒன்று - ஒன்று, வேண்டி - வேண்டி, பெறுகிற்பாரில் - பெறவேணுமென்றிருப்பாரில், என்னுடை - எனக்கஸாதாரணைகளான, தோழியர் - தோழிமாரான, நுங்கட்கேலும் - உங்களுக்கேயாகிலும். ஈண்டு - இவ்விடத்தில், இது - இந்தவவஸாதஹேதுவை, இடராட்டியேன் - து:காபிபூதையான, நான் - நான், சொல்லி யாறவேண்டியிருக்கச்செய்தே, உரைக்கும்படியை - சொல்லும்படியை, அந்தோ - ஐயோ!, காண்கின்றிலேன் - காண்கிறிலேன்; து:கமேதென்னில், காண் - எப்போதும் காண்கைக்கு, தகு - தக்கிருப்பதாய், தாமரை - விகாஸம், செவ்வி, குளிர்த்தி, நாற்றங்களாலே தாமரைபோன்றிருக்கிற, கண்ணன் - கண்ணையுடையனாய், கள்வன் - பார்வையாலே தன் பவ்யதையைக் காட்டி வஞ்சித்து ஸர்வஸ்வாபஹாரம்பண்ணின க்ருத்ரிமனாய், இக்கண்ணழகாலே, விண்ணவர் - ஸூரிகளையடங்க, கோன் - அலற்றப்பண்ணுமவனாய், அப்படி, நங்கள் - என்னையும், கோனை - ஈடுபடுத்தினவனை, கண்டால் - கண்டால், ஈண்டிய - என் பக்கலில் நின்று மங்கேபோய்க்குவிந்த, சங்கும் - வளைகளையும், நிறைவும் - ஸ்த்ரீத்வாதிபூர்த்தியையும், கொள்வான் - வாங்கிக்கொள்ளுகைக்காக, எத்தனை - எத்தனை, காலம் - காலமுண்டு, இளைக்கின்றேன் - தளர்ந்து க்லேஶிக்கிறேன்,

ஆறு ;—(வேண்டிச்சென்று) நீ யாசைப்பட்டவிஷயம் - திருவேங்கடமுடையானாகில் அது யுக்தம் ; உனக்குங்கூட ஸ்ப்ருஹணீயனானவனாகிலும், நீயாசைப்பட்டால் கிடையாததுண்டோவென்னில் ; ஆசைப்பட்ட பொருள் பெறுவாரெல்லாரிலும் தலையாயிருக்கச்செய்தேயும், ஆசைப்பட்டுப்பெறாதே நான்படுகிறவ்யஸநம் வாசாமகோசர மாகையாலே வ்யஸநப்படுமத்தனையல்லது உங்களுக்குச் சொல்லுகைக் கொருசொல்லு சொல்லக்காண்கிறிலேன். அவனை யாசைப்பட்டால் உத்தரக்ஷணம் பெறுதொழியில் தளர்ந்துகொண்டு நிற்குமித்தனையோ வென்னில் ; ஸதாநுபூயமாந மானாலும் அபூர்வதர்ஸநீயமாய், புண்டரீகதளாமலாயதமான திருக்கண்களையுமுடையனாய் தத்ஸௌந்தர்ய பரிமுஷித ஸகலஜந மநோநயநனாய், * அயர்வறுமமரர்களதிபதியா யிருந்துவைத்து, என்னையடிமைகொண்ட பரமஸீலனாயிருந்த வவனை யாசைப்பட்டுப் பெறாதே என்னுடைய வலயாதி பூஷணங்களையும், ஆத்ம குணங்களையுமிழந்து, அவை கொள்கைக்கு நான் வருந்துகிற தெத்தனைகாலமுண்டென்கிறார். (௨)

ஈடு ; அவ ;—இரண்டாம்பாட்டு. “ இப்படியானாலும் அந்தரங்கைகளான வெங்களுக்கு நோவிற் சொல்லலாகாததுண்டோ சொல்லாய் ” என்ன, து:க்காநுபவத்தால்வந்த விளைப்பின் மிகுதியாலே உங்களுக்குச் சொல்லும் பாசுர மறிகிறிலேனென்கிறாள்.

(வேண்டிச்சென்றொன்று பெறுகிற்பாரில்) என்பக்கலிலே வந்தொன்றை யபேக்ஷித்துப் பெறுமவர்களில் தலையான வரிசையையுடைய தோழிமாரான வுங்களுக்காகிலும். (என்னுடைத்தோழியர்) உயிர்த்தோழியர். சென்றென்றது - வந்தென்றபடி. அங்ஙனன்றிக்கே, பதபங்கத்தைப்பண்ணி, (வேண்டிச்சென்றொன்றுபெறுகிற்பார் இல்)அவனையொன் றபேக்ஷித்துச்சென்றாரில் ஓரபேக்ஷிதம் பெற்றாரில்லை ; (௧) “ ஸக்ருதேவ ஹி ஸோப்யர்ச்ய:- ஸகலபல ப்ரதோஹி விஷ்ணு:,” (௨) “ வேண்டிற்றெல்லாந்தரும் ” என்கிறவிடம் உக்திமாத்ரமே ” என்றொரு தமிழன் நிர்வஹித்தான்.

(ஈண்டு) இப்போது. முன்பெல்லாம் சொல்லிப் போந்தேனேயாகிலு மிப்போது சொல்லலாவது காண்கிறிலேன். (இது) எல்லா

(௧) வி-த-மாங்கள்யஸ்த. (௨) ந-கூ-ரு.

வற்றிலும் பாசுரமிட்டுச் சொல்லிப் போந்தேனே யாகிலும், இது சொல்லுகைக்குப் பாசுரங்காண்கிறிலேன். (உரைக்கும்படியை) நெஞ்சிலே விஷமூர்ந்தாப்போலே யூராநின்றது, பாசுரமிட்டுச் சொல்லலாவதில்லை. (அந்தோ! காண்கின்றிலேன்) எனக்கோடுகிற தசையை யுங்களுக்குச்சொல்லி யகஞ்சுரிப்படுத்தி தரிக்கைக்குக்கேட்கிற வுங்களிலுமெனக்குத் தேட்டமாயிருக்க, பாசுரங் காண்கிறிலேன். (க) "ஹாஹெளவெரவயாறுெசு-பரலாபைரேவதார் யதே" (இடராட்டியேன்நான்) நோவாட்டியேன் நான். என்னிடருக்கன்றிக்கே, "சொல்லு, சொல்லு" என்றலைக்கிற வுங்களுக்கன்றிக்கே, துஃக்கப்படுகிற நான்.

(காண்டகுதாமரைக்கண்ணன்) காணத்தக்கிருந்துள்ள கண்ணையுடையவன். ஸதா தர்ஶநயோக்யமான கண்கள். விகாஸம், செவ்வி, குளிர்த்தி, நாற்றம், இவற்றால் பங்கஜஸத்ருஶமாயிருக்கை, (கள்வன்) நோக்காலே தன் செல்லாமையை யாவிஷ்கரித்து, என்னுத்மாத்மீயங்களை யபஹரித்தவன். (விண்ணவர்கோன்நங்கள் கோனை) நித்யஸூரிகளைப்போலே யென்னை யநந்யார்ஹையாக்கினவன். ஒருவிபூதியாகப் படுத்தினபாட்டைக்கிடீர்! என்னை யொருத்தியையும் படுத்திற்று. (கண்டால்) காணப்பெற்றால்.

(ஈண்டியசங்கும்) திரண்டவளையையும். ஒருவலம்புரியிடந்த விடத்தே ஆயிரம்சங்குசேரும். (உ) * வலம்புரியாழியன் - வேங்கடவேதியனிறே. (நிறைவும்) அடக்கத்தையும். (கோள்வான்) கொள்ளுகைக்காக. தன்பக்கல் தொங்காதவை யெல்லாவற்றுக்கும் புகல் அங்கேயென்றிருக்குமே. இவளுக்குக் கைமுதல் அங்கேயிறே. இதுவாகிலுன்துணிவு காலஞ்சென்றவாறே நீயே யிளைத்து மீளுகிறுயென்ன. (எத்தனைகாலமிளைக்கின்றேனே) இதுசொல்லிப் பகட்டக் கேட்பனோ, இவ்வாசையோடே யெத்தனைகால முண்டிளைத்துப் போருகிறது. (உ)

(க) உத்-ரா-ச (உ) தி-மொ-கூ-கூ-கூ.

மூன்றாம்பாட்டு.

காலம்இளைக்கிலல்லால்வினையேன்நான் இளைக்கின்றிலன்
கண்டுகொண்மின்* ஞாலமறியப்பழிசுமந்தேன் நன்னுதலீர்! இனி
நாணித்தானென் ?* நீலமலர்நெடுஞ்சோதிசூழ்ந்த நீண்டமுகில்வண்
ணன்கண்ணன்கொண்ட * கோலவளையோடுமாமைகொள்வான்
எத்தனைகாலமுங்கூடச்சென்றே. (௩)

ப.—அநந்தரம், அதிஶயிதாபிரூப்யத்தை யுடையவனைச் சென்று கிட்டி என்வளை தொடக்கமானவை வாங்குமிடத்தில், நீங்கள் "அவன் துர்லபன்" என்று விலக்கிலும், காலம் முடிந்துபோகிலும், நான் கிட்டியல்லது விடே னென்கிறாள்.

(இ-ள்.) நீலம் - நீலநிறமாய், மலர் - விகஸிதமாய், நெடும் - அபரிச்சேத்யமான, சோதி - தேஜஸ்ஸாலே, சூழ்ந்த - சூழப்பட்ட, நீண்டமுகில் - மஹாமேகம்போலே யிருக்கிற, வண்ணன் - நிறத்தையுடைய, கண்ணன் - க்ருஷ்ணன், கொண்ட - அபஹரித்துக்கொண்ட, கோலம் - தர்ஶநீயமான, வளையொடு - வளையோடேகூட, மாமை - என்னிறத்தை, எத்தனைகாலமும்-அநேககாலம், கூடச்சென்றே - கூடச்சென்றேயாகிலும், கொள்வான் - கொள்ளுகைக்காக, ஞாலம் - லோகம், அறிய - அறியும்படி, பழி - துணிந்து புறப்பட்டாளென்கிற பழியை, சுமந்தேன் - சுமந்தேன், நல் - அழகிய, நுதலீர் - நுதலையுடைய தோழிமீர், இனி - இனி, நாணித்தான் - லஜ்ஜித்து, என்- என்ன ப்ரயோஜநமுண்டு, ஆதலால், காலமிளைக்கிலல்லால் - காலமிளைத்து முடிந்து போமதொழிய, வினையேன் - அவன் துர்லபனானாலும் விடமாட்டாத பாபத்தையுடைய, நான் - நான், இளைக்கின்றிலன் - இளைத்துவிடுகிறேனல்லேன், கண்டுகொண்மின் - இது ப்ரத்யக்ஷித்துக்கொள்ளுங்கோள். (௩)

ஆறு ;—(காலமிளைக்கில்) அவனை யாசைப்பட்டுப்பெறாதே உனக்குள்ளவையுமிழந்து அவை பெறுகைக்கு நெடுங்காலம்வருந்தியும் பெறாதபின்பு, இனித்தான் வருந்தினால் கிடைக்குமோ ; இனியவை பெறுகையில் வருந்தாதே விட்டாலாவென்னில் ; நிரவதிக நீலஜ்யோதிః பரிவ்ருத மஹாவலாஹக ஸத்ருஶமான திருமேனியையுடையனான க்ருஷ்ணனாலே யபஹ்ருதமான கோலவளையொடுமாமை கொள்வான் உத்யுக்தையான நான் எத்தனைகாலம் கூடச்சென்றாகிலும் கொள்வன்; இக்காலதத்த்வந்தான் முடிந்துபோமத்தனையல்லது

நான் கொண்டல்லதுவிடேன், இத்தைக்கண்டு கொண்மின். அவன் றனுசைப்பட அவனுக்குமரியையா யிருக்கக்கடவ நீ அவனை யா சைப்பட்டால் உனக்குப் பழிவருமென்று லஜ்ஜையில்லையோ வென் னில் ; ஞாலமறியப் பழிசுமந்தேன் நன்னுதலீரினி நாணித்தாவெ ன்னென்கிறாள். (ந)

ஈடு ; அவ ;—மூன்றாம்பாட்டு. நாங்கள்சொல்ல மீண்டிலையா கிலும் எட்டவொண்ணாத விஷயமாகையாலே நாட்சென்றவாறே நீயேமீளுவுதி, எங்கள்வார்த்தைக்கு மீண்டாயாக வமையாதோவெ ன்ன ; காலதத்த்வம் முடியிலும் நானவனைக் கண்டல்லது விடே னென்கிறாள்.

(காலமித்யாதி) (க) "ஸநாதி ஸம்ஸாரம் க்ஷேத்ரஜ்ஞம் ... -அநாதிர்பகவாந்காலோநாந்தோஸ்ய" என்கிறகாலம் முடிந்து போமித்தனையல்லது நானிளைத்துமீளுகிறிலேன். (நானிளைக்கின்றி லன்) (உ) "நகாலஸ்தத்ர வை ப்ரபு:-நகாலஸ்தத்ரவைப்ரபுஃ" என்று காலத்துக்கு மவ்வருகான விஷயத்தை விளாக்கொலை கொண்ட வயிற்றிவேசத்தையுடைய நான் மீளுவனோ. (வினையேன்) "துர்லபம்" என்றாலும் மீளவொண்ணாதவிஷயத்திலே கைவைக்கும்படியான பாபத்தைப்பண்ணினேனென்னுதல், நீங்கள் சொன்னவார்த்தை நெஞ்சில் படாதபடியான பாபத்தைப்பண்ணி னேனென்னுதல். இப்போ திங்ஙனே சொன்னாயாகிலும் மேலநுஷ் ட்டிக்கிறாய் நீயேயென்ன (கண்டுகொண்மின்) ப்ரத்யக்ஷிக்கலான வர்த்தம் பிறர்பக்கலிலே கேட்டறியவேணுமோ.

உன்றுணி விதுவானபின்பு எல்லாருமொக்கப் பழிசொல்லுகி றார்களிறேயென்ன (ஞாலமறியப்பழிசுமந்தேன்) இன்றோ நான்பழி சுமந்தது ; (ந) "நாடுமிரைக்கவே" என்றவன்றே பழிசுமந்திலே னோ. "பழிசுமந்தேன்" என்னுமதுவார்த்தையோ, ஸ்த்ரீத்வப்ர யுக்தமான லஜ்ஜையை நோக்கவேண்டாவோவென்ன (நன்னுதலீரி னிநாணித்தாவென்) நம்மழகழிவதற்குமுன்பன்றோ அவைநோக்க வேண்டுவது, ஜகத்ப்ரஸித்தமாய் விட்டதாகில் இனிலஜ்ஜித்தென்ன ப்ரயோஜனமுண்டு. (நன்னுதலீர்) நுதல்-நெற்றி. உங்கள்முகத்தி

(க) வி-பு-க-உ-உஅ. (உ) பார-மோக்ஷ-

(ந) இ-ந-கூ0.

லெழிலழியாதிருக்க என்முகத்தி லெழில்குடிபோனபடி கண்டிகோ ளே ; இந்த நெடுவாசியைப்பார்த்தன்றோ வார்த்தைசொல்லுவது.

அதுகிடக்க, அவன் ஸௌந்தர்யம் நம்மைநினைத்தபடி செய்ய வொட்டாநின்றதோ வென்கிறதுமேல் (நீலமலரித்யாதி) நீலமான நிறத்தையுடைத்தாய் (மலர்) விஸ்த்ருதமாய். (நெடும்) அபரிச்சே த்யமாய். (சோதிசூழ்ந்த) தேஜஸ்ஸாலே சூழப்பட்டு, அபரிச்சேத்ய மாயிருப்பதொரு காளமேகத்தின் நிறம்போலே யிருக்கிற நிறத்தை யுடையனாய், அவ்வடிவைப்பாரார்த்த மாக்கினைக்குமவ னபஹரித்த தர்ஶநீயமான வளையோடேகூட அவன் வாய்புலற்றும் நிறத்தை யும் மீட்டுக்கொள்ளுகைக்காகக் காலமெல்லாம் கூடச்சென்றும் - ஞாலமறியப்பழிசுமந்தேன் நன்னுதலீர்நிராணித்தானென். (எத்த னைகாலமும் கூடச்சென்று) நெடுங்காலம் ஸம்ஶ்லேஷார்த்தமாகச் சென்றென்னுதல். (௩)

நான்காம்பாட்டு.

கூடச்சென்றேன் இனியென்கொடுக்கேன் ? கோல்வளைநெஞ் சத்தொடக்கமெல்லாம் * பாடற்றொழியஇழந்துவைகல் பல்வளை யார்முன்பரிசழிந்தேன் * மாடக்கொடிமதிள்தென்குளந்தை வண் குடபால்நின்றமாயக்கூத்தன் * ஆடற்பறவையுயர்த்தவெல்போர் ஆழிவலவனைஆதரித்தே. (௪)

ப.—அநந்தரம், ஆஶ்ரிதாநிஷ்ட நிவர்த்தகமான வாயுதாதி பூர்த்தியையு டையவனைக் கிட்டவேணுமென்று நினைத்து, ஸர்வஸ்வாபஹாரம்பிறந்த நானி னியெத்தைக்கொடுப்பதென்கிறாள்.

(இ-ள்.) மாடம் - மாடங்களையும், கொடி - கொடியோடுகூடின, மதிள் - மதிளையுமுடைத்தாய், தென் - நன்றான, குளந்தை-திருக்குளந்தையில், வண்- அழகிய, குடபால் - மேற்பக்கத்திலே, நின்ற - நின்ற, மாயக்கூத்தன் - ஆஶ்ச ர்ய சேஷ்டிதயுக்தனாய், ஆடல் - ஹர்ஷத்தாலே தர்ஶநீயகதியான, பறவை- பெரியதிருவடியை, உயர்த்த - மேற்கொண்டிருப்பானாய், ஆஶ்ரிதவிரோதிநிர ஸநத்தில், வெல் - வெற்றியையுடைத்தான, போர் - போரையுடையனான, ஆழி - திருவாழியை, வலவனை - வலத்திலேயுடையனானவனை, ஆதரித்து - ஆதரித்து, கூட - ஸம்ஶ்லேஷிக்கவேணுமென்று, நான், கோல் - அழகிய, வளை - வளை, நெஞ்சம் - நெஞ்சு, தொடக்கமெல்லாம் - தொடக்கமானவை

யெல்லாம், பாடு - என்பக்கல், அற்று - ஶேஷியாமல், ஒழிய - விட்டுப்போம் படியாக, இழந்து - இழந்து, பல் - பல, வளையார் - வளையையுடையபெண்டு கள், முன் - முன்னே, வைகல், நெடுங்காலமுண்டு, பரிசு - என்ஸ்வபாவம், அழிந்தேன் - அழிந்துபோய், இனி - இனி, என் - எத்தை, கொடுக்கேன் - கொடுப்பேன்.

ஆழிவலவனென்று - வல்லவனென்றுமாம், நெஞ்சத்துளக்கமென்று - நெஞ்சோடுண்டான துவக்கிழந்தேனென்றுமாம். (ச)

ஆறு ;—(கூடச்சென்றேன்) இதுக்குமுன்பு அவனை யாசைப் பட்டு உன்னுடைய வுபகரணங்களை யிழந்தாப்போலே, இனியுள்ள வற்றையுமிழவாதே யவனை யாசைப்படத் தவிர்ந்தாலோவென்னில்; ஹேமகிரிஶிகர ஸத்ருஶ ப்ராஸாதாலங்க்ருதமாய், த்வஜவிராஜித ப்ரகாரபரிவ்ருதமாய், தக்ஷிணதிக் திலகபூதமாயிருந்த திருக்குளந் தையில் பரமோதாரமான மேலைத்திக்கிலே, வைநதேயவாஹநனாய், விஜிதரிபுநிகர ஸுதர்ஶந விராஜித தக்ஷிணபுஜனாய்க்கொண்டு, ஸங்க்ருத்தவத்தர்ஶநீயனும்படி நின்றருளினவனை யாதரித்துக் கூடச்சென்றேன். சென்று, கோல்வளை நெஞ்சத்தொடக்கமெல் லாம் பாடற்றொழியவிழந்து வைகல்பல்வளையார் முன்னே யென் ஸ்வபாவமெல்லாமிழந்தேன்; இனி யென்கொடுக்கேனென்கிறார்.

ஈடு ; அவ ;—நான்காம்பாட்டு. உன் துணிவிதுவாக இன்ன முள்ளதடைய விழக்கிறாயிறேயென்ன ; இனிநானெத்தை யிழப்ப தென்கிறாள்.

(கூடச்சென்றேன்) நான்முடிந்து ஒருதலையேயாம்படி கிட்டி னேனென்னுதல், ஸம்ஶ்லேஷார்த்தமாகச்சென்று கிட்டினேனென் னுதல். (இனியென்கொடுக்கேன்) பண்டேயெல்லா மிழந்த பின்பு இனியெத்தை யிழப்பது.

(கோல்வளையித்யாதி) தர்ஶநீயமானவளை, நெஞ்சுதொடக்க மானவையெல்லாம் என்பாடற்று வாஸனையோடே போம்படியாக விழந்து. அவன் விபூதியோபாதி போரும் இவள் பரிகரத்தின்பரப் பும். (வைகல்பல்வளையார் முன்பரிசழிந்தேன்) கழற்றிப்பூணு மாப ரணமு மிழவாதவர்கள்முன்பே, கழற்றவேண்டாத வாபரணமான பரிசுண்டு-ப்ரகாரம்-லஜ்ஜை, அத்தையிழந்தேன்.

(மாடக்கோடிமதிள் தென்குளந்தை) மாடங்களையும், கொடி போடேகூடின மதிளையுமுடைத்தான தென்குளந்தையிலே. (வண்குடபால்நின்ற) அழகிதான மேலைபார்ஶ்வத்திலேநின்ற. இதுவுமொரு பரத்வஹேதுபோலே. (மாயக்கூத்தன்) ஆஶ்சர்யசேஷ்டிதன். (ஆடல் பறவையுயர்த்த) ஸர்வேஶ்வரவாஹநமென்னும் ஹர்ஷப்ரகர்ஷத்தாலே களித்தாடாநின்றுள்ள பெரியதிருவடியாலே வஹிக்கப்பட்டிருப்பானாய். (வெல்போராழிவலவனை) புக்கபோரிலே வென்றல்லது மீளாத திருவாழியை வலவருகேயுடையனாயிருக்கிற ஸர்வேஶ்வரனை யாசைப்பட்டு.

[மாடக்கொடிமதிள் தென்குளந்தை வண்குடபால் நின்ற - ஆடல்பறவையுயர்த்த வெல்போராழிவலவனை - மாயக்கூத்தனை - ஆதரித்து-கூடச்சென்றேன் - கோல்வளைநெஞ்சத் தொடக்கமெல்லாம் பாடற்றொழிய விழுந்துவைகல் பல்வளையார் முன்பரிசழிந்தேன்-இனி பெண்கொடுக்கேன்] என்றந்வயம். (௪)

ஐந்தாம்பாட்டு.

ஆழிவலவனை ஆதரிப்பும் ஆங்கவன்நம்மில்வரவுமெல்லாம்* தோழியர்காள்! நம்முடையமேதான்? சொல்லுவதோ இங்கு அரியதுதான் * ஊழிதோறூழிஒருவனாக நன்குணர்வார்க்கும் உணரலாகா * சூழலுடையசுடர்கொளாதித் தொல்லையஞ்சோதிநினைக்குங்காலே. (ரு)

ப.—அநந்தரம், தத்த்வஜ்ஞராயிருப்பார்க்கும் அபரிச்சேத்யமான வதிஶயிதௌஜ்ஜ்வல்யத்தை யுடையனான ஸர்வேஶ்வரனை யாசைப்படுகையும், அவன் நமக்கு முகங்காட்டுகையும், நம்முடையவளவேயா யிருக்கிறதோவென்கிறாள்.

(இ-ள்.) நினைக்குங்கால் - ஆராய்ந்து பார்க்குமளவில், தத்த்வத்தை, நன்கு - நன்றாக, உணர்வார்க்கும் - உள்ளபடி யறியவல்லார்க்கும், ஊழிதோறூழி - காலதத்த்வமுள்ளதனையும், ஒருவனாக - ஏவம்வித ஸ்வபாவனாயிருப்பானொருவனாக, உணரலாகா - பரிச்சேதித்தறியவொண்ணாதபடி, சூழல் - ஆஶ்ரிதரை யகப்படுத்திக்கொள்ளும் சூழ்ச்சியாகிற சேஷ்டிதங்களை, உடைய - உடையனாய், சுடர் - ஸ்வரூபபரிணாமம் வாராதபடி யுபாதாநமாகையும், உபாதாநமான தானேநிமித்தமாகையும், சிதசித்பரிணாமம் தனக்குத் தட்டாதபடியுமாகிற

தேஜஸ்ஸை, கொள்-உடைய, ஆதி-காரணபூதனாய், தொல்லை - நித்யாஸாதாரணமாய், அம் - அப்ராக்ருதமான, சோதி-ஜ்யோதிர்மயரூபத்தை யுடையனாய், ஆழிவலவனை-கையுந்திருவாழியுமான ஸர்வேஶ்வரனை, ஆதரிப்பும்-ஆதரித்தாஶ்ரயிக்கையும், ஆங்கு - ஆஶ்ரயணாவஸ்த்தையில், அவன்-ஸர்வஸ்மாத்பரத்வத்தோபாதி ஸௌஶீல்யத்தையு முடையவன், நம்மில் - ஆஶ்ரிதைகளான நம் பக்கலிலே, வரவும் - வருகையும், அபேக்ஷிதங்கள் செய்கையும், எல்லாம் - எல்லாம், நம்முடையதே தான் - நம்மளவிலே யுடையோ மாதோ, தோழியர்காள் - என்னோபாதி யிவ்விஷயத்தில் வாசியறியும் தோழிமீர்காள், ஸர்வஸாதாரணமான ஸௌலப்ய ஸௌஶீல்யாதிகள் கிடக்க, சொல்லுவதோ - ஸ்வைரமான தௌர்லப்யம் சொல்லுகையோ, இங்கு - இங்கு, அரியதுதான் - அரியதாயிருக்கிறது. (௫)

ஆறு ;—(ஆழிவலவனை) அவனை யாசைப்பட்டால் பெறவொண்ணாது, துஷ்ப்ராபன், அவனை யாசைப்படவேண்டாவென்னில்; * பரஞ்ஜ்யோதிஸ்ஸான ஸர்வேஶ்வரனை நினைக்கப்புக்கால் ஜ்ஞாநவதா மஹேஶ்வரர்களான ஸநகாதி முனிகளுக்கு மூழிதோறூழி கூடினாலு மொருவனாக வுணரவொண்ணாத திவ்யசேஷ்டிதங்களையும், தேஜஃப்ரப்ருத்யஸங்க்யேய கல்யாணகுணத்தையுமுடையா னொருவனாகிலும் அந்த சங்கசக்ரகதாதரனா யிருந்தவனை யாசைப்படுகையும், ஆசைப்பட்ட நம்போல்வார்பக்கல் அவன்வருகையும், நாம் தொடங்கியோ; இப்படி யரியனா யிருக்கச்செய்தே, ஆசைப்படுவாரும் பெறுவாருமெத்தனைவர்; " அவனரியன், அவனையாசைப்படவேண்டா " என்று சொல்லுகை யெளிதென்றுச்சொல்லு மித்தனையோ வென்கிறார். (௫)

ஈடு ; அவ ;—ஐந்தாம்பாட்டு. வாங்கமநஸ்ஸுக்களுக் கெட்டவொண்ணாத விஷயத்திலே அதிப்ரவணையா யேதுக்கு துஃகப்படுகிறாயென்ன ; ஆனாலு மவனை யாஶ்ரயிக்கையும் அவனாலே விஷயீக்ருதராகையுமான விம்மர்யாதை நம்மைத்தோற்றி யுண்டாயிற்றோ அநாதியன்றோ வென்கிறாள்.

(ஆழிவலவனையாதரிப்பும்) திருவாழியை வலவருகேயுடையனவனை யாஶ்ரயிக்கையும்.(ஆங்கு) ஆஶ்ரயணதசையிலே.(அவன்) மேன்மையோபாதி நீர்மையுடையனானவன். (நம்மில்வரவுமெல்லாம்) ஆஶ்ரயித்த நாயிருந்த ப்ரதேசங்களிலேவந்து விஷயீகரிக்

கையுமாகிற விவையெல்லாம். (தோழியர்காள்) என்னோபாதி யிவ் விஷயத்திலே யவகாஹித்தி கோளல்லிகோளோ. (நம்முடையமே தான்) நம்மளவதோ. அவனை யாஸ்ரயிக்கையும் அவனபேக்ஷிதம் செய்கையுமாய்ப் போருகிறவிது நம்மைத்தோற்றிப் புதியதாகவிட்ட தொரு மர்யாதையோ. (சோல்லுவதோ விங்கரியதுதான்) அர்த்த ஸ்திதி யேதேனுமாயிருக்க. தோற்றிற்றுச் சொல்லுகையோ வரியது. நிவாரகரில்லையென்று ப்ரதிபந்நங்களைச் சொல்லக்கடவதோ.

அவன்கிட்ட வரியனாயிருக்கிறமை யில்லையோவென்ன ; அது தானும் நான்சொல்லக் கேட்கவேண்டாவோ வுங்களுக்கு (ஊழியித் யாதி) [நன்குணர்வார்க்கும்-ஒருவனென்று-ஊழிதோறூழி-உணர லாகா] எத்தனையேனு மதிஸயிதஜ்ஞாநரா யிருப்பார்க்கும், கால மெல்லாம் கூடி யறியப்புக்காலு மறியப்போகாது ஏவம் விஸிஷ்ட னென்று. (சூழலுடைய) கிட்டினாரை யகப்படுத்திக்கொள்ளுகைக் கீடான விரகுகளை யுடையனாயிருக்கும். (சுடர்கோள்) தேஜ: ப்ர ப்ருத்யஸங்க்யேய கல்யாணகுணங்களை யுடையவன். (ஆதி) ஜகத் காரணபூதன். (தோல்லையஞ்சோதி) ஸ்வாபாவிகமாய், நிரவதிகதே ஜோரூபமாய், இதரவிஸஜாதீயமான திவ்யவிக்ரஹத்தை யுடையனா யிருக்கும். (நினைக்குங்கால்) அவன் பெருமையை யாராயப்புகில்.

[நினைக்குங்கால்-நன்குணர்வார்க்கும்-ஒருவனாக - ஊழிதோறூ ழி-உணரலாகாச் சூழலுடைய சுடர்கொளாதித்தொல்லையஞ்சோதி- ஆழிவலவனை யாதரிப்பும், ஆங்கவன் நம்மில் வரவுமெல்லாம், தோ ழியர்காள், நம்முடையமேதான், சொல்லுவதோ விங்கரியதுதான்] விலக்ஷண வஸ்துவே ஸுலபமானால், பற்றவடுக்குமோ விடவடுக்கு மோ வென்கிறாள். (௫)

ஆறும்பாட்டு.

தோல்லையஞ்சோதிநினைக்குங்கால் என்சோல்லளவன்று, இ மையோர்தமக்கும் * எல்லையிலாதனகூழ்ப்புச்செய்யும் அத்திறம் நிற்கஎம்மாமைகோண்டான் * அல்லிமலர்த்தண்துழாயும்தாரான் ஆர்க்கு இடுகோ இனிப்பூசல் ? சோல்லீர் * வல்லிவளவயல்சூழ் தடந்தை மாமலர்க்கண்வளர்கின்றமாலே. (௬)

ப.—அநந்தரம், அதிஸயிதஜ்ஞாநர்க்கும் அவகந்து மஸக்யமாம்படி ஸம் ஸயஜநகனான வவன் நம்மோடே ஸம்ஸ்லேஷித் தீடுபடுத்தினபின்பு, வேறார்க் குக் கூப்பிடுவோமென்கிறாள்.

(இ-ள்.) நினைக்குங்கால் - ஆராயப்பார்த்தோமாகில், தொல்லை - அஸா தாரணமாய், அம் - அநவதிகமான, சோதி - அவனுடைய தேஜஸ்ஸானது, என் - என்னுடைய, சொல்லளவு - சொல்லிலடங்குமது, அன்று - அன்று, இமையோர்தமக்கும்- அதிஸயிதஜ்ஞாநரான ப்ரஹ்மாதிகளுக்கும், நிஷ்கர்ஷிக்க வொண்ணாதபடி, எல்லையிலாதன - அபர்யந்தமான. கூழ்ப்பு - ஸம்ஸயத்தை, செய்யும் - விளைக்கும், அ - அந்த, திறம் - மேன்மையிடையாட்டம், நிற்க - நிற்க, வல்லி - பூங்கொடியும், வளம் - அழகிய, வயல்- வயலும், சூழ்-சூழ்ந்த, குடந்தை - திருக்குடந்தையிலே, மா - ஸ்லாக்யமான, மலர் - தாமரைபோலே யிருக்கிற, கண் - திருக்கண்கள், வளர்கின்ற - வளரும்படி சாய்ந்தருளின, மால் - ஆஸ்ரிதவ்யாமோஹத்தை யுடையவனுக்கொண்டு, எம்-என், மாமை-நிறத்தை, கொண்டான் - அபஹரித்தான்; அல்லி - பூந்தாரினுடைய, மலர்-விகாஸத்தையுடைத்தான, தண்டுழாயும்- திருத்துழாய்மாலையையும், தாரான்-தருகிறிலன், இனி - நாமவனாலேநலிவுபட்டபின்பு, நலிந்தவவனையொழிய, ஆர்க்கு - ஆரிருக்கலாரிட்டு, பூசலிடுகோ- கூப்பிடுவோம், உறவுசெய்தகப்படுத் தினவனை யொழிய வுறவில்லாதார்க்குக் கூப்பிட்டுப்ரயோஜநமென், சொல் லீர் - சொல்லிகோள். (சு)

ஆறு ;—(தொல்லையஞ்சோதி) அவனரியனல்லனோவென்னில்; நாம் சொல்லுமளவோ வவனுடைய வருமை; ப்ரஹ்மாதிதேவர் களுக்குங்கூட வறியவொண்ணாத ஸ்வரூபஸ்வபாவங்களையுடையா னொருவனல்லனோ; அத்திறம்நிற்க, என்னை விஷயீகரித்தருளுகைக் காகத் திருக்குடந்தையிலே புகுந்துவைத்து என்னுடைய ஸர்வஸ் வத்தையு மபஹரித்துத் தன் திருவடிகளி லல்லிமலர்த்தண்டுழா யும் தருகிறிலன். இப்படி யந்யாயஞ்செய்த வவனையொழிய மற்று ரைக்கூப்பிடுவோம், சொல்லீரென்கிறார். (சு)

ஈடு ; அவ ;—ஆறும்பாட்டு. நீ சொல்லுகிறபடியே யெளியனல்லன், துர்லபனென்ன ; ஸுலபனாகிலும் துர்லபனாகிலும் தன்னை யொழியச் செல்லாதபடி நம்மைப்புகுரா நிறுத்தினவன் வாசலிலே கூப்பிடாதே, ஸம்பந்தமில்லாதார் வாசலிலேயோ கூப்பிடுவதென் கிறாள்.

(தோல்லையஞ்சோதிநினைக்குங்கால்) ஆராயப்புக்கால், இதர விஸஜாதீயமான விக்ரஹத்தையுடையவன். (என்சோல்லளவன்று) அவனுடைய வைலக்ஷண்யம் என்னுடைய பேச்சினளவன்று. நான்முகன் பலயிருந்து சொல்லுமளவோ அவன்பெருமை, (இமையோரித்யாதி) எத்தனையேனும் மதிமயங்கிதஜ்ஞாநரான ப்ரஹ்மாதிகளுக்கு மளவிறந்த ஸம்சயங்களைப் பண்ணுகிறக்கும். (க) "யஜ்ஞாய ஸம்வாஹ்வ ஸூராஜா நாதிவாஸம்வேதேஷு யந்நாயம்பகவாந்ப்ரஹ்மா ஜாநாதிபரமம்பதம்" (உ) "நமோ ராஹ்ய: கேநசித் க்வசித் க்ருதாஹ யஃகேநசித்க்வசித்" இதன்றிக்கே, இமையோரென்கிறது-நித்யஸூரிகளையாய், அவர்கள் (௩) * சூட்டுநன்மாலைகள் தூயனவேந்திநிற்க, தான் * ஈட்டியவெண்ணெய் தொடுவுண்ணப் போரும்படியாகவுமாம்.

(அத்திறம்நிற்கவேம்மாமைகோண்டான்) அம்மேன்மையுங் கிடக்கச்செய்தே, தன் ஸௌந்தர்யாதிகளைக்காட்டி யென்னிறத்தைக் கொண்டான்; என்னோடே யிட்டுகொண்டல்லது தரியாதானாய், நம்முடைய நிறத்தைக்கொண்டது தன்னுடைய வைலக்ஷண்யத்தைப் பாராதேயன்றே. (அல்லிமலர்த்தண்டுழாயுந்தாரான்) நம் நிறத்தைக்கொண்டால் தன்னோடே ஸ்பர்சமுள்ள தொன்றைத் தந்து நம்மை யுஜ்ஜீவிப்பிக்கலாமிறே, அது செய்கிறிலன்; அது செய்தானாகில் பூவுக்கிட்டோம்போலும் என்றிருக்கலாமே. (ஆர்க்கிடுகோவினிப்பூசல்சோல்லீர்) நம்மை நலிந்தவன் வாசலிலே கூப்பிடாதே ஆர்வாசலிலே கூப்பிடுவோம், சொல்லீகோள்.

(வல்லியித்யாதி) பூங்கொடிபடர்ந்த சோலைகளும், வளவிதான வயல்களும்சூழ்ந்த திருக்குடந்தையிலே கண்வளர்ந்தருளுகிற ஸர்வேச்வரன். (மாமலர்க்கண்வளர்கின்றமால்) ப்ராப்தனானவன் மலர்ந்த தாமரைப்பூப்போலே யிருக்கிறகண் என்னளவில லரக்காண்கிறிலேன். விசேஷகடாக்ஷம்பண்ணக் காண்கிறிலேனென்கை. கூக்குரல்கேட்கைக்கு ஸந்நிஹிதனென்கை; [வல்லிவளர் வயல்சூழ்குடந்தை மாமலர்க்கண்வளர்கின்றமால் - தொல்லையஞ்சோதி யென்று தொடங்கி, ஆர்க்கிடுகோ வினிப்பூசல்சொல்லீர்] என்றந்வயம். (௬)

(க) வி-பு க-௯-௫௬. (உ) பார-மோக்ஷ-௭௯-௪.

(௩) திருவி-௨௧.

ஏழாம்பாட்டு.

மாலரிகேசவன் நாரணன் சீமாதவன் கோவிந்தன் வைகுந்த
னென்றென்று * ஓலமிடஎன்னைப்பண்ணிவிட்டிட்டு ஒன்றும்உரு
வும்சுவடும்காட்டான் * ஏலமலர்க்குழலன்னைமீர்காள்! என்னு
டைத்தோழியர்காள்! என்செய்கேன்? * காலம்பலசென்றும்காண்
பதாணை உங்களோடெங்களிடையில்லையே. (எ)

ப.—அநந்தரம், அபிநிவேஶஜநகமாய் ஆஶ்ரிதோபகாரகனுடைய வாகாரங்களை யநுபவித்திட்டநான் அநேககாலஞ்சென்றேயாகிலும் கண்டல்லது விடேன், விலக்குகிற வுங்களோடெங்கள்பக்க லொருதொடக்கமில்லை யென்கிறாள்.

(இ-ள்.) மால் - ஆஶ்ரிதவ்யாமுக்தனானவன், அந்தவ்யாமோஹத்தாலே, அரி - அவர்கள் பாபங்களை யபஹரிக்கும் ஸ்வபாவத்தையுடையவன், நிவ்ருத்தபாபரானவர்க்கு நித்யாநுபாவ்யமான ஆணையாம்படி, கேசவன் - ப்ரஶஸ்தகேசனானவன், நாரணன் - இப்படிச்சொன்ன வ்யாமோஹாதிகளுக்கெல்லாம் தளமான நிருபாதிக ஸம்பந்தத்தையுடையவன், சீமாதவன் - இக்குணங்களை ப்ரவ்ருத்தமாக்கும் லக்ஷ்மிக்கும் பதியானவன், ஶ்ரிய:பதித்வ நாராயணத்வங்கள் நிறம்பெறும்படிபிறந்து, கோவிந்தன் - ஆஶ்ரிதபவ்யனானவன், வைகுந்தன் - பவ்யதையைக்கண்டு ஆஶ்ரயித்தார்க்குக்கொடுக்கும் பரிபூர்ண விபூதியையுடையவனே, என்றென்று - என்றென்று இந்த ஸ்வபாவங்களைப்பலகாலுஞ்சொல்லி, ஒரு கார்யார்த்தமாகவன்றியே, ஓலமிட-ஆர்த்த்யதிசயத்தாலே கூப்பிடும்படி, இதுவே ஸ்வபாவமாக. என்னை - என்னை, பண்ணி - பண்ணி, விட்டு - கைவிட்டு, இட்டு - போகட்டு, ஒன்றும் - ஒருப்ரகாரத்தாலும், உருவும் - தன்வடிவையும், சுவடும் - தன்னைக் கிட்டுகைக் கீடாயிருப்ப தோரடையாளத்தையும், காட்டான்- காட்டுகிறிலன்; என்னைவிலக்குவதாக வுத்யோகித்து, ஏலம்-ஏலம்போலே ஶ்ரமஹரமான பரிமளத்தையும், மலர் - பூவையுமுடைத்தாயுள்ள, குழல் - குழலையுடைய, அன்னைமீர்காள்- அன்னைமீர்காள், ஏவம்விதைகளாய், என்னுடை - எனக்கஸாதாரணைகளான, தோழியர்காள் - தோழிமீர்காள், அவனீடுபடுத்தி முகங்காட்டாதொழியில், என் செய்கேன் - என்னாலே செய்யலாவதென்னுண்டு, இப்போதைக்கு விட்டப்பிடியெனிலும், பலகாலம் - காலதத்த்வமுள்ளதனையும், சென்றும் - சென்றாலும், ஆணை - ஆணையே, காண்பது - காணக்கடவேன், உங்களோடு - இந்த வ்யவஸாயத்தைக் குலைக்கநினைக்கிற வுங்களோடு, எங்கள் - எனக்கு, இடை - ஒருஸம்பந்தம், இல்லை - இல்லை.

கேவலம் ஆணையென்றது - அவன் நாமக்ரஹணம் பண்ணுமைக்கென்று கருத்து. அல்லது; உறவில்லாத விவர்களை யாணையிடக்கூடாதிறே. (எ)

ஆறு ;—(மாலரி) இப்படி கூப்பிடச்செய்தேயும் தன்னைக்காட்டாதிருக்கிற வவனை யாசைப்படுவாருண்டோவென்னில்; ஆஶ்ரித வத்ஸலன், ஆஶ்ரிதார்த்திஹரன், ஆஶ்ரிதவிரோதிநிரஸநஸ்வபாவன், ஸர்வஶக்தி, ஸமஸ்தகல்யாணகுணநிதி, ஶ்ரிய:பதி, பரமசீலவான், ஸ்ரீவைகுண்டநிலயனென்று கூப்பிடும்படி பண்ணிவிட்டிட்டு ஒன்று முருவும் சுவடுங்காட்டான்; ஏலமலர்க்குழலன்னைமீர்காள், என்னுடைத் தோழியர்காள், என்செய்கேன் ; வ்யஸநம் பொறுக்கலாயிருக்கிறதில்லை; காலம்பலசென்றும் உங்களாணையே, கண்டல்லது விடேன், நீங்களிதற்கு விரோதத்தைப்பண்ணில் உங்களோடு முறவில்லையென்கிறார். (எ)

ஈடு ; அவ ;—ஏழாம்பாட்டு. அவனைக்கண்டு முடிகை யரிது, விடவல்லையேயென்று உறவுமுறையாரலைக்க; அவன் குணங்களிலே யகப்பட்ட நான் காலமெல்லாம் கூடவாகிலும் அவனைக்கண்டல்லது விடேன், தத்விரோதிகளான வுங்களோட்டை ஸம்பந்தம் எனக்கு வேண்டாவென்கிறாள்.

(மால்) ஆஶ்ரிதர்பக்கல் வ்யாமோஹமே வடிவாகவுடையவன். (க)* பொய்ந்நின்றஞானந்தொடங்கி இவ்வளவும்வரக்கூப்பிடப்பண்ணின வ்யாமோஹம். (அரி) விரோதிநிரஸநஶீலன். (கேசவன்) காலமெல்லா மநுபவியாநின்றாலும் மீளவொண்ணாதபடி ப்ரஶஸ்த கேசன். (நாரணன்) ஆஶ்ரிதவத்ஸலன். (சீமாதவன்) அதுக்கடியான ஶ்ரிய:பதியானவன். (கோவிந்தன்) அவளோட்டைச் சேர்த்தியாலே ஆஶ்ரிதர்க்குக் கையாளாயிருக்குமவன். (வைகுந்தன்) இதுக்கெல்லாமடியான மேன்மையையுடையவன். (என்றென்று) நிரந்தரமாக. (ஓலமிட) காரியப்பாடறக்கூப்பிடும்படி.

(என்னைப்பண்ணி) (உ) "ஸ்ருஷ்டஸ்த்வம் வநவாஸாய = ஸ்ருஷ்டஸ்த்வம்வநவாஸாய" என்கிறபடியே, இதுவேயாத்ரையாகப்பண்ணி. (விட்டு) என்னைத் தன்பக்கலினின்றும் பிரித்து. (இட்டு) அசேதநவத்பொகட்டு. (ஒன்றுமுருவும்சுவடும்காட்டான்) தன்வடிவைக்காட்டுகிறிலன், தானிருந்தவிடத்துக் கோரடையாளங்காட்டுகி

(க) திருவி-க (உ) ரா-அயோ-சப-௫.

றிலன். (க) "தாஸா ஈவிர ஸ்ரு க-தாஸாமாவிரபூத்" என்கிறபடியே வடிவைக்காட்டுதல், ராமாஶ்ரமத்தில் ஸ்ரீபரதாழ்வானுக்கு தூமாதிகளடையாளமானாப்போலே, இருந்தவிடத்துக்கொருஸூசகம் காட்டுதல் செய்கிறிலன்.

(ஏலமலர்க்குழலன்னைமீர்காள்) நீங்கள் பண்டிருக்குமாபோலே நானுங்களை யென்றுகாணக்கடவேன். (ஏலமலர்) ஏலம்போலே கமழுகிற பரிமளத்தையுடைய மலர். (என்னுடைத்தோழியர்காள்) உங்களுக்கு ஹிதஞ்சொல்லி மீட்குமதில்லை, என்ப்ரியமேயிறே உங்களுக்கு உத்தேஶ்யம். (என்செய்கேன்) ஓரடையாளமும் காணாத நானினி யெத்தைச்செய்வேன்.

எங்களைக்கேட்கில் விடவடுக்குமென்ன (காலம்பலசென்றும் காண்பது) காலமெல்லாம் கூடவாகிலும் கண்டல்லதுமீளேன், அது செய்து தலைக்கட்டலாவதொன்றல்லகாணென்ன (ஆணை) விடுகிறவர்களாணையிடாளிறே, பற்றுகிறவனாணையிடுகிறாள். இப்படி துணியச்செய்தேயும் ஹிதஞ்சொல்லத் தொடங்கினார்கள் (உங்களோடெங்களிடை யில்லை) உங்களோடெனக்கொரு ஸம்பந்தமில்லை, எனக்கு நீங்கள் ஹிதஞ்சொல்லவேண்டா. (எ)

எட்டாம்பாட்டு.

இடையில்லையான்வளர்த்தகிளிகாள்! பூவைகள்காள்! குயில்காள்! மயில்காள்! * உடையநம்மாமையுஞ்சங்கும்நெஞ்சும் ஒன்றுமொழியவொட்டாதுகொண்டான் * அடையும்வைகுந்தமும்பாற்கடலும் அஞ்சனவெற்புமவைநணிய* கடையறப்பாசங்கள்விட்ட பின்னையன்றி அவன் அவைகாண்கொடானே. (அ)

ப.—அநந்தரம், நிஸ்ஸங்கர்க்கல்லது அவன் ஸுலபனாகாதபடியாலே முன்பே பந்துவர்க்கத்தில் ஸங்கராஹித்யஞ் சொன்னாள், தன் லீலோபகரணங்களான ஶுகஶாரிகாதி விஷயமான ஸங்கராஹித்யத்தைச் சொல்லுகிறாள்.

(இ-ள்.) யான் - யான், வளர்த்த - வளர்த்துப்போந்த, கிளிகாள் - கிளிகாள்; பூவைகாள் - பூவைகாள், குயில்காள் - குயில்காள், மயில்காள் - மயில்

(க) பாக-க0-ரு உ-உ.

காள், உங்களுக்கு, என்பக்கல், இடை - அவகாசம், இல்லை - இல்லை, நம்முடைய - நம்முடையதான, மாமையும் - நிறத்தையும், சங்கும் - வளையையும், நெஞ்சும் - நெஞ்சையும், ஒன்றும் - ஒன்றும், ஒழிய - அபேக்ஷிக்க, ஒட்டாது - ஒட்டாதே, கொண்டான் - அபஹரித்துக்கொண்டவன், அடையும் - எட்டாதபடி போயிருக்கிற, வைகுந்தமும்-பரமபதமும், பாற்கடலும் - திருப்பாற்கடலும், அஞ்சனவெற்பும் - திருமலையுமாகிற, அவை-ப்ராப்யஸ்தலங்களானவை, நணிய - கிட்டியநுபவிக்கக்குறையில்லை, பாசங்கள் - இதாவிஷயத்தில் ஸங்கங்களை, கடையற - ஸவாஸநமாக, விட்ட - விட்ட, பின்னை - பின்பு, அன்றி - அல்லது, அவன் - ப்ராப்யபூதனானவன்; அவை - அந்த, போகஸ்த்தாநங்களை, காண் - காண, கொடான் - கொடான். (அ)

ஆறு ;—(இடையில்லை) தன்னை ப்ரதிபந்திக்கிற வன்னைமாரோடு முறவறச்செய்தேயும் அவனைக்காணுதொழிந்தவாறே, தான் வளர்த்த தன்னுடைய லீலோபகரணமானகிளிகள், பூவைகள், குயில்கள், மயில்களென்கிற இவற்றோடுள்ள ஸம்பந்தமாகாதே அவனைக் காண்கைக்கு ப்ரதிபந்தகமென்றுபார்த்து, அவற்றைநோக்கிச்சொல்லுகிறாள். அவன் நம்முடையநிறமும், வளையும், நெஞ்சும் தொடக்கமாகவுள்ள ஸர்வஸ்வத்தையு மபஹரித்துக்கொண்டுபோனானாகிலும், பரமப்ராப்யமான திருநாடும், திருப்பாற்கடலும், திருமலையும் தன்னையாசைப்பட்டார்க்குக்காணல் நணியவாகில் காட்டாதொழிவானொன்றில் ; உங்கள் பக்கலுள்ள ஸங்கம் நிச்சேஷமாகப் போனாலல்லது அவனவைகாண்கொடான், ஆதலால் இனியுங்களோடு முறவில்லையென்கிறாள். (அ)

ஈடு ; அவ;—எட்டாம்பாட்டு. கிளிகள் தொடக்கமான லீலோபகரணங்களில் தனக்குண்டான வநாதரத்தைச் சொல்லுகிறாள்.

(இடையில்லை) என்பக்கலுங்களுக் கோரவகாசமில்லை. (யான் வளர்த்தகிளிகாள்) பழமைகொண்டு பின்னேட்டுகிறீர்கோளிறே நீங்களும். (பூவைகள்காளித்யாதி) முன்பு இவளாதரித்தவை, அவனுடைய லீலோபகரணங்களிலும் குவாலிறே ; அவையெல்லாவற்றிலும் நசையற்றபடி. (உடையவித்யாதி) எல்லாவற்றிலும் நசையற்றபடிக்கு ஹேதுசொல்லுகிறது. நம்முடைத்தானநிறமும், வளையும், நெஞ்சும், பாஹ்யங்களோடு ஆந்தரங்களோடு வாசியற நம்பக்கலொன்றுமபேக்ஷியாதபடி கைக்கொண்டவன்.

(அடையும்வைகுந்தமும்) சேரும் பரமபதமும். இத்தலையிலுள்ளதெல்லாம் நேராகக்கொண்டு, எட்டவொண்ணாத நிலத்திலே போய்ப்பாரித்து வெற்றிகொண்டாடியிருந்தானென்கை. (பாற்கடலும்) அத்தோடு தோள்தீண்டியான திருப்பாற்கடலும். (அஞ்சனவெற்பும்) திருமலையும் பரமபதத்தோடொக்கச் சொல்லலாயிருக்கிறதாயிற்று. (அவைநணிய) ப்ராப்யபூமியானவை, கிட்டிய - கிட்டிற்றின. ஆறலநுபவிக்கத் தட்டென்னென்ன; அவன் சுவையுடையவன், புறம்பேயு மொருவிஷயத்திலே நசைகிடக்க ஸ்வாநுபவத்தைக் காட்டிக்கொடான். (கடையித்யாதி) பின்னுட்டாதபடி ஸவாஸநமாக பாஹ்யருசிபோனாலல்லது போகஸ்தாநங்களைக் காட்டிக்கொடான். கீழ் "வணங்குமாறறியேன்" என்று ப்ராபகாபாஸங்களை விட்டார்; இங்கே ப்ராப்யாபாஸங்களை விடுகிறார். (அ)

ஒன்பதாம்பாட்டு.

காண்கொடுப்பானல்லன் ஆர்க்கும்தன்னைக் கைசெயப்பால
தோர்மாயந்தன்னால் * மாண்குறள்கோலவடிவுகாட்டி மண்ணும்
விண்ணும்நிறையமலர்ந்த * சேண்சுடர்த்தோள்கள்பலதழைத்த
தேவபிராற்குஎன்நிறைவினோடு * நாண்கொடுத்தேன் இனியென்
கொடுக்கேன்? என்னுடைநன்னுதல்நங்கைமீர்காள்! (கூ)

ப.—அநந்தரம், வாமநவேஷத்தைக்காட்டி அநந்யார்ஹமாம்படி ஜகத்தையளந்துகொண்ட ஸர்வேஶ்வரனுக்கு என்னுடைய பூர்த்தியோடே லஜ்ஜையுமிழந்தேன், இனி யெத்தைக்கொடுப்பேனென்கிறாள்.

(இ-ள்.) ஆர்க்கும்-எத்தனையேனு மளவுடையார்க்கும், ஸ்வயத்நத்தாலே தன்னை - தன்னை, காண - காண, கொடுப்பான் - கொடுக்குமவன், அல்லன் - அல்லனாய்வைத்து, ஆஶ்ரிதார்த்தமாக, மாயந்தன்னால் - தன் வஞ்சனத்தாலே, கைசெய் - கைத்தொழிலுக்கு, அப்பாலது - அப்பாலாய், ஓர் - அத்விதீயமான, கோலம் - ஸௌந்தர்யத்தையுடைய, மாண் - அர்த்தியான, குறள்வடிவு-வாமநவேஷத்தை, காட்டி - காட்டி, அநந்தரத்திலே, மண்ணும் - பூமியும், விண்ணும் - ஊர்த்வலோகமும், நிறைய - நிறையும்படியாக, மலர்ந்த - விஸ்த்ருதனாய், சேண் - ஓங்கி, சுடர் - உஜ்ஜ்வலமான, பல - பல, தோள்கள்-தோள்களும், தழைத்த - தழைத்திருக்கிற, தேவபிராற்கு - ப்ரஹ்மருத்ராதிபதியான

வனுக்கு, என் - என்னுடைய, நிறைவினோடு-ஸ்த்ரீத்வபூர்த்தியோடேகூட, நாண் - லஜ்ஜையையும், கொடுத்தேன் - கொடுத்தேன்; என்னுடை- என்னோடுறவுடையீர்களாய், நல் - உஜ்ஜவலமான, நுதல் - நெற்றியையுடைய, நங்கைமீர்காள்-குறைவற்றவர்களே, ஸ்வரூபஸ்வபாவங்களிரண்டுமிழந்தபின், இனி-இனி, என் - எத்தை, கொடுக்கேன் - கொடுப்பேன். (அ)

ஆறு ;—(காண்கோடுப்பானல்லன்) உனக்குத் தன்னைக்காட்டானோ வென்னில் ;

ஸ்வவ்யதிரிக்தவிஷயஸங்கம் விட்டாலல்லது ஆர்க்குந் தன்னைக்காட்டானென்று அவற்றை நோக்கிச் சொல்லி, தத்தர்ஶநார்த்தமான ஸ்வோத்யோகத்தை ப்ரதிபந்திக்கைக்காக, "அவனையாசைப்பட்டு, இதுக்குமுன்பு உன்னுடைய வுபகரணங்களை யிழந்தாப்போலே இன்னமுள்ளவற்றை யிழவாதே யிருக்கப்பார்க்கில் அத்தை விடு" என்று அந்யராயிருப்பார் சொல்ல ; அவர்களைநோக்கி, "ஸர்வஜ்ஞனுப் ஸர்வஶக்தியாயிருந்த ஸர்வேஶ்வரனாலு மிப்படி நிர்மிக்க முடியாது" என்னும்படி யாஶ்சர்யமாய், நிரதிஶயஸௌந்தர்யவிஶிஷ்டனுமாய், ஸர்வ வஶீகரணமான தன்னுடைய மாண்குறள் கோல வடிவுகாட்டி, மஹாபலியுடைய ஸர்வேந்த்ரியங்களையு மபஹரித்து, நெய்தல் பூவலர்ந்தாப்போலே ஸர்வலோகமும் நிறையும்படி மலர்ந்த திருமேனியையும், கற்பகச்சோலை தழைத்தாப்போலே தழைத்த நிரதிஶயோஜ்ஜ்வலமான திருத்தோள்களையு முடையனாயிருந்த தேவபிரானுக்கு என்னிறைவினோடு நாண்கொடுத்தேன், இனி யென் கொடுக்கேன், என்னுடை நன்னுதல் நங்கைமீர்காளென்று சொல்லுகிறார். (அ)

ஈடு; அவ ;—ஒன்பதாம்பாட்டு. "இதுவே துணிவாகில் ஆத்மாத்மீயங்களை நேராக விழக்கிறாயிறே" என்ற தாய்மாரைக்குறித்து முன்பே யடையவிழந்திலேனோ, இனி யெத்தை யிழப்பதென்கிறாள்.

(காண்கொடுப்பானல்லனார்க்குந்தன்னை) ஸ்வயத்நத்தாலே காணநினைப்பாரெத்தனையேனு மதிஶயிதஜ்ஞாநரேயாகிலும், தன்னைக்காட்டும் ஸ்வபாவனல்லன். (கைசெயவித்யாதி) (மாயந்தன்னால் கைசெயப்பாலதோர்-கோலம்-மாண்குறள் - வடிவுகாட்டி) மாயந்தன்னால்-க்ருத்ரிமத்தாலே, க்ருத்ரிமமாவது உபயவிபூதியுக்தனை தான்

ஒன்றுமில்லாதானாய் வருகையும், ஸ்ரிய:பதியான தன்னை அர்த்தியாக்குகையும், சிறுகாலைக்காட்டிப் பெரியகாலாலே யளந்துகொள்ளுகையும். (கைசேயப்பாலதான-கோலவடிவு) கைசெய்கைக்கப்பாலதான வழகையுடைய வடிவு. கைசெய்கையை-"கைசெய்" என்று குறைத்துக்கிடக்கிறது. அக்ருத்ரிமமான கோலமென்னுதல். அன்றிக்கே, கருவி உயிர்பெற வெழுதினாப்போலே யிருந்துள்ள கோல வடிவென்னுமாம்.

(மாண்குறள்-வடிவு) இரப்பிலே தகணேறி அபரிச்சேத்யனான தான் வாமநவேஷனாய். (கோலவடிவு) இப்படி அழிவுக்கிட்ட வடிவுக்கு ஆலத்திவழிக்கவேண்டியிருக்கை. (காட்டி) மஹாபலியை வஞ்சிக்கைக்காக அக்ருத்ரிமமான வழகையுடைய மாண்குறளான வடிவைக்காட்டி. (மண்ணும்விண்ணும்நிறையமலர்ந்த) கையிலே நீர்விழுந்த ஸமநந்தரம் ஸமஸ்தலோகங்களும் விம்ம வளர்ந்த. (சேண்சுடர்த்தோள்கள் பலதழைத்த) நீண்டு ஒளியையுடைத்தாய் கல்பகதரு பணைத்தாற்போலே பலதோள்களையுடையவன். (தேவபிராற்கு) இந்த்ரனிழந்த ராஜ்யத்தைக்கொடுத்து தேவர்களுக்கு உபகாரகனானவனுக்கு. (என்னிறைவினோடுநாண்கொடுத்தேன்) நானிரண்டு ராஜ்யமிழந்தேன். இந்த்ரன் ராஜ்யம்பெற்றுப்போனான்; மஹாபலி ஔதார்யம்பண்ணிப்போனான், நானெனக்கு ஸர்வஸ்வமுமான வடக்கத்தையும் லஜ்ஜையையு மிழந்தேன்.

(இனியென்கொடுக்கேன்) இனிமேத்தைக்கொடுப்பேன். (என்னுடைநன்னுதல்நங்கைமீர்காள்) து:க்கமறியாமையாலே அழகிலும் குறைவற்று, பரிபூர்ணைகளாய், எனக்கு ஹிதஞ்சொல்லலாயிறே யுங்களுக்கு. கீழே நாலாம்பாட்டிலே "இனியென்கொடுக்கேன்" என்று சொல்லிற்று, இதுக்கும் அதுக்கும் வாசியென்னென்னில்; பெரிய திருவடி முதுகிலிருப்பிலும் கையுந்திருவாழியுமான சேர்த்தியிலுந் தோற்று மாயக்கூத்தனை யாதரித்துக் கலக்கச்சென்று கிட்டாமை யாலே வந்த விழவு அதில்; ஸ்ரீ வாமநனுடைய வழகிலும் சீலத்திலும் தோற்ற மஹாபலியைப்போலே ஸர்வத்தையு மிழந்தேனென்கிறது இதில். (௬)

பத்தாம்பாட்டு.

என்னுடைநன்னுதல் நங்கைமீர்காள்! யான் இனிச்செய்வ தென்? என்னெஞ்சு என்னை * நின்னிடையேனல்லேனென்று நீங்கி நேமியும்சங்கும்இருகைக்கொண்டு * பன்னெடுஞ்சூழ்சுடர்ஞாயிற் றோடு பால்மதியேந்தி ஓர்கோலநீல * நன்னெடுங்குன்றம்வருவ தொப்பான் நாள்மலர்ப்பாதம்அடைந்ததுவே. (௧௦)

ப.—அநந்தரம், மநோஹாரியா யுத்துங்கமான வடிவழகையுடைய அவன் திருவடிகளிலே யென்னெஞ்சானது என்னைவிட்டு ப்ரவேசித்தது, நீங்கள் நியமிக்கிறதுக்கு என்னாற்செய்யலாவ தென்னென்கிறாள்.

(இ-ள்.) *என் - எனக்கு பவ்யமாய்ப்போந்த, நெஞ்சு - நெஞ்சானது, நின் - அவன் விஶ்லேஷித்துப்போன வனக்கு, இடையேனல்லேன் - காணமாவேனல்லேன், என்று - என்று, என்னை - காணியானவென்னை, நீங்கி - விட்டகன்று, நேமியும் - திருவாழியையும், சங்கும் - ஸ்ரீபாஞ்சஜந்யத்தையும், இருகை - இரண்டுதிருக்கையிலும், கொண்டு - ஏந்திக்கொண்டு, பல் - பலவாய், நெடும் - பரந்து, சூழ் - சூழ்ந்த, சுடர் - சுடரையுடைத்தான, ஞாயிற்றோடு - ஆதித்யனோடேகூட, பால் - பால்போலே வெளுத்தநிறத்தையுடைய, மதி - சந்த்ரனையும், ஏந்தி - தன் கொடுமுடிகளிலே யேந்தி, ஓர் - அத்விதீயமாய், கோலம் - தர்ஶநீயாகாரமாய், நீலம் - நீலநிறத்தையுடைத்தாய், நல் - தாது வைசித்ர்யாதிகளாலுண்டான வைலக்ஷண்யத்தையுடைத்தாய், நெடும் - உத்துங்கமான, குன்றம் - மலை, வருவது - நடந்துவருவது, ஒப்பான் - ஒத்து ஆஶ்ரிதர்க்குவந்து தோற்றுமவனுடைய, நாள் - அபிநவமான, மலர் - தாமரை போலே யிருக்கிற, பாதம் - திருவடிகளை, அடைந்தது - அடைந்தது, என்னுடை - என்னோடுறவுடையீகோளாய்வைத்து, என்னீடுபாடறியாதபடியாலே, நன்னுதல் - அவயவஶோபையாலும், ஆத்மகுணத்தாலும், நங்கைமீர்காள் - பூர்ணைகளாயிருக்குமவர்களே, யான் - உங்களைப்போலன்றியே ஈடுபட்ட நான், இனி - அஸஹாயையாம்படி நெஞ்சுமிழந்தபின்பு, உங்கள் நியமநத்துக்கு, என் - எத்தை, செய்வது - செய்வேன்.* (௧௦)

நெஞ்சுடையாரன்றோ தரித்திருப்பதென்று கருத்து.

ஆறு ;—(என்னுடை) *" ஆகிலுமவனை யாசைப்படுகையிடல்ல" என்று அவர்கள்சொல்ல; நான் தோழிமாரைவிட்டாப்போலே யென்னெஞ்சு என்னை நின்னிடையே னல்லேனென்று நீங்கி, ஶங்க*

சக்ர கதாதரனாய், நீலமான திருமேனியையுடையனாய், நிரவதிக தீப்தியுக்த திவாகர நிஶாகராலங்க்ருத நிரதிஶய ரமணீய வரணீய ஜங்கம நீல மஹா (ஶ) சலம்போலேயிருந்தவனுடைய நாண்மலர்ப்பாதமடைந்தது; யானினிச்செய்வதென், என்னுடை நன்னுதல் நங்கைமீர்காளென்கிறார். (௧௦)

ஈடு ; அவ ;—பத்தாம்பாட்டு. எல்லாஞ்செய்தாலும் ஹிதைஷிகளான நாங்கள் சொல்லிற்றுக் கேட்கவேணுங்காணென்ன ; நீங்கள் சொன்ன வார்த்தைகேட்கைக்கு நெஞ்சுவேணுமே, அது அவன் பக்கல் போயிற்றென்கிறாள்.

(என்னுடைநன்னுதல்நங்கைமீர்காள்) எனக்குறவு முறையாரான நீங்கள், வடிவழகிலும் ஸ்த்ரீத்வத்திலும் குறைவற்றிருக்கையாலே நிர்த்து:கைகளாயிருந்தீர்கோள். (யான்) நானெல்லாமிழந்து அவஸந்நையானேன். (இனிச்செய்வதென்) இப்படியானபின்பு, எத்தைச்செய்வேன். இவற்றைமீட்கவோ, அவனை நியமிக்கவோ.

எல்லாவளவிலும் தரித்திருக்கவேண்டாவோவென்ன ; அதுக்கும் நெஞ்சுவேண்டாவோ வென்கிறாள் (என்னெஞ்சு) எல்லாவவஸ்த்தையிலு மெனக்கு பவ்யமானநெஞ்சு. (என்னை) தன்னைக்கொண்டு ஜீவிக்க விருக்கிற வென்னை. (நின்னிடையேனல்லேனென்று நீங்கி) உன்னோடெனக் கடையில்லையென்றகன்று. (க) *உத்பபாத கதாபாணி—இத்யுக்த்வாபருஷம்பண்ணிப்போயிற்று. ப்ராப்திசொல்லிமீட்கவொண்ணாதபடி (உ) "ஸஹ்ருதம்ஸம்யா—ஸந்ந்யஸ்தம்மயா" என்று போயிற்று. உங்களுக்கு நான் நின்றநிலையிறே யென்னெஞ்சு எனக்கவ்வருகேபோனபடி.

(நேமியுமித்யாதி) பின்தொடர வொண்ணாதபடி கடலிலேயாயிற்றுப்புக்கது. வெறும்புறத்திலே யாலத்திவழிக்க வேண்டியிருக்கிற விரண்டுகையிலு மாழ்வார்களைதரித்து, பலவாய் தூரப்போயெங்குமொக்க வ்யாபிப்பனவான வொளிகளையுடைய வாதித்யனோடே பாலோடொத்த தேஜஸ்ஸையுடைய சந்த்ரனையேந்தி, அத்தேஜஸ்ஸுக்களுக்குப் பரபாகமாய், இதரவிஸஜாதீயமாய், கண்டார் கண்குளிரும்படி நீலமாய், மற்றுமநுக்தமான வழகுகளையுடைத்

(க) ரா. யு. ௧௭. ௧. (உ) யதிதர்ம.

தாய், அபரிச்சேத்யமாயிருப்பதொருமலை நடந்துவருமாபோலே யாயிற்று ஆழ்வார்களை யேறித்திக்கொண்டுலாவும்படி. (நாண்மலர்ப் பாதமடைந்ததுவே) செவ்விப்பூவிலே வண்டுபடிந்தாப்போலே சேர்ந்தது-யானினிச்செய்வதென். (௧0)

பதினோராம்பாட்டு.

பாதமடைவதன்பாசத்தாலேமற்றவன்பாசங்கள்முற்றவிட்டு* கோதில்புகழ்க்கண்ணன்றன்னடிமேல் வண்குருகூர்ச்சடகோபன் சொன்ன * தீதிலந்தாதியோராயிரத்துள் இவையுமோர்பத்துஇசை யோடும்வல்லார் * ஆதுமோர்தீதிலராகி இங்குமங்கும் எல்லாம் அமைவார்கள்தாமே. (௧௧)

ப.—அநந்தரம், இத்திருவாய்மொழியை யிசையோடே யப்யஸிக்கவல்லவர்கள், உபயவிபூதியிலும் பகவதநுபவ பரிபூர்ணராயிருப்பரென்று பலத்தை யருளிச்செய்கிறார்.

(இ-ள்.) பாதம் - திருவடியை, அடைவதன் - ப்ராபிக்கையிலுண்டான, பாசத்தாலே - அபிநிவேசத்தாலே, மற்ற- இதரவிஷயமாய், வன்-ப்ரபலமான, பாசங்கள் - பாசங்களை, முற்ற - நேராக, விட்டு - விட்டு, இப்படி இதரஸங்க மறுகையாலே, கோது - கோது, இல் - அற்ற, புகழ் - புகழையுடைய, கண்ணன் றன் - க்ருஷ்ணன், அடிமேல் - திருவடிகள் விஷயமாக, வண் - தம்முடைய பாவவ்ருத்தியை ப்ரபந்தீகரித்த பரமௌதார்யத்தையுடைய, குருகூர்ச் சடகோபன் - ஆழ்வார், சொன்ன - அருளிச்செய்ததாய், தீது - அர்த்தாந்தர ப்ரஸ்தாவமாகிறதீது, இல் - இன்றியே, அந்தாதி - அந்தாதியாய், ஓர் - அத்விதீயமான, ஆயிரத்துள் - ஆயிரத்துள், ஓர் - கடலிலே முத்துப்பட்டாப்போலே அத்விதீயமான, இவை - இவை, பத்தும் - பத்தையும், இசையோடும் - இசையோடேகூட, வல்லார் - அப்யஸிக்கவல்லவர்கள், அவித்யாகர்ம வாஸநா ருசி ப்ரக்ருதிஸம்பந்த ரூபதோஷங்களில், ஆதும் - ஏதேனும், ஓர்-ஒரு, தீது - தோஷம், இலராகி - இன்றியே, இங்கும் - இந்தவிபூதியிலும், (௧) "த்ரு-ஷ்டௌ ஜிவாத்மஜீவ-துஷ்யந்திசரமந்திச" என்கிறபடியே குணநுபவபரிபூர்ணராய், அங்கும் - அந்தவிபூதியிலும், (உ) "ஸோஶ்நுதே ஸர்வாந்காமாந்-ஸஹ ப்ரஹ்மணா விபஶ்சிதா" என்கிறபடியே அவாப்த ஸமஸ்தகாமராய்க்

---

(௧) கீதை - ௧0-௯. (உ) தை-ஆந-உ-௧.

கொண் டாங்யாதிநராய், எல்லாமமைவார்கள்தாமே - ஸர்வப்ரகார பரிபூர்ணரா வர்கள். (கக)

இது - எண்சீராசிரியவிருத்தம்.

ஆறு ;—(பாதமடைவதன்) திருவடிகளைச்சேரவேணுமென்னு மாசையாலே, தத்வ்யதிரிக்தவிஷயஸங்கத்தை நிஶ்ஶேஷமாகவிட்டு, ஸ்வவ்யதிரிக்த ஸகலவிஷய ஸங்கநிவர்த்தகமான கல்யாணகுணங் களையுடையனான கண்ணன் றன்னடிமேல் வண்குருகூர்ச் சடகோ பன்சொன்ன நிரவத்யமான வித்திருவாய்மொழியைவல்லார், நிரஸ் த ஸமஸ்தது:க்கராய், அங்குமிங்கு மெல்லாப்படியாலும் பரிபூர்ண ரென்கிறார். (கக)

ஈடு ; அவ ;—பதிறோராம்பாட்டு நிகமத்தில் - இத்திருவாய் மொழிவல்லார், அவித்யாதி ஸகலதோஷங்களும் நீங்கி, இஹலோக பரலோகங்களில் தாங்களே க்ருதக்ருத்ய ராவரென்கிறார்.

(பாதமித்யாதி) திருவடிகளைக் கிட்டுகையிலுண்டான ஸங்கத் தாலே புறம்புண்டான ஷலிய ஸங்கங்களை நிஶ்ஶேஷமாகவிட்டார். இதுவாயிற்று இத்திருவாய்மொழியிற் சொல்லிற்றாயிற்று. புறம் புள்ள பற்றுக்களற்றுத் திருவடிகளை யாசைப்பட்டவரல்லர் ; (க) "மாற்பால்மனஞ்சுழிப்ப மங்கையர் தோள்கைவிட்டு" என்கிறபடியே திருவடிகளில் ஸங்கத்தாலே ஔபாதிகமான பாஹ்யஸங்கத்தைத் தவிர்ந்தவர். (கோதில்புகழ்) திருவடிகளில் ஸங்கத்துக்குமுதல் அவ னுடைய கல்யாணகுணங்கள். குணங்களுக்குக் கோதாவது-தன்னை யொழியப்புறம்பேயும் நசைபண்ணும்படி யிருக்கை. (கண்ணன் றன்னடிமேல்) இப்புகழையுடைய க்ருஷ்ணன் திருவடிகளிலே யா யிற்றுச் சொல்லிற்று. பரமோதாரரான வாழ்வாரருளிச்செய்த.

(தீதிலந்தாதி) ப்ரபந்தத்துக்குத் தீதாவது-கதாந்தர ப்ரஸ் தாவம். ராமவ்ருத்தாந்தத்தைச் சொல்லப்புக்கு, ஸாப்ரஹ்மண் யோத்பத்தி, புஷ்பகவர்ணநம், இவை தொடக்கமானவற்றிலே யிழி கை; (உ) "நாராயணகயாசிர: - நாராயணகதாமிமாம்" என்று யுத்தப்ரகாராதிகளைச்சொல்லுகை. (ஓராயிரத்துள்ளிவையுமோர் பத்திசையோடும்வல்லார்) அத்விதீயமான வாயிரந்திருவாய்மொழி

(க) ந-திருவ-கச. (உ) பாரத.

யில் இப்பத்தை ப்ரீதிப்ரகர்ஷத்தாலே சொல்லுமவர்கள். (ஆதுமோர் தீதிலராகி) அவித்யாதி தோஷங்களும் நீங்கும். புறம்புள்ள நசை யற்றிருக்கச்செய்தே ப்ரபந்தம் தலைக்கட்டுகைக்காக விருக்குமதுவு மவர்களுக்கில்லை.

(இங்குமங்குமெல்லாமமைவார்கள்தாமே) இஹலோகத்தோடு பரலோகத்தோடு வாசியறக் குறைவற்றிருப்பர்கள். இஹலோகத்தில், (க) "க்ருதக்ருத்யா꞉ ப்ரதீக்ஷந்தே" என்கிறபடியே சமைந்திருப்பர்கள்; பரலோகத்தில், (உ) "அஹம்ஸர்வம் கரிஷ்யாமி" என்று குறைவற்றிருப்பர்கள். (தாமே) (ஈப்பவரன் மூழங்கைத்தண்ணீர் வேண்டா,) உபயவிபூதியிலும் தாங்களே ப்ரதாநராவர்கள். (கக)

எட்டாம்பத்து இரண்டாந்திருவாய்மொழி முற்றிற்று.

(க) இதிஹாஸஸமுச்சயம்-௩-௪௦. (உ) ரா-அயோ-௩௧-௨௫.

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

திருவாய்மொழி

எட்டாம்பத்து

மூன்றாந்திருவாய்மொழி

அங்குமிங்கும்-ப்ரவேஶங்கள்.

ஆறு ;— (அங்குமிங்கும்) இப்படி யெம்பெருமானைப்பிரிந்து வ்யஸநப்படுகிற தமக்கு ஒரு துணையின்றியே யிருக்கிறபடியை யருளிச்செய்கிறார்.

ப.— மூன்றாந்திருவாய்மொழியில், அவனுடைய நிஸ்ஸங்கஸௌலப்யதையை யநுஸந்தித்து, இதர ஸங்கநிவ்ருத்தி பூர்வகமாகத் தாம் தத்விஷயத்திலே ஸக்தரானபடியை யநுஸந்தித்தவர், அவனாஶ்ரித ரக்ஷணார்த்தமாக விந்த விபூதியிலே தன் போக்யதையையும் ஸௌகுமார்யத்தையும் பாராதே ஆஸுர ப்ரக்ருதிகளும் அந்யபரருமான திரள்களுக்கு நடுவே அஸஹாயனாய்வந்து வர்த்திக்கிற விதுக்கஞ்சி; அவனுடைய வதிஶயித போக்யதையையும், விரோதி நிரஸநோத்யுக்தமான வாயுதவத்தையையும், ஸஹாயாந்தர ராஹித்யத்தையும், க்ஷணகாலம் காணாதொழியிலும் கல்பமாம்படி அச்சத்தை விளைக்கும்படி ஆபிரூப்யாதிஶயத்தையும், ஆயாஸஸஹமல்லாத ஸௌகுமார்யத்தையும், ரமணீய விக்ரஹனாய்வைத்து விரோதிநிரஸநார்த்தமாக வ்யாபரிக்கும்படியையும், இஞ்சித்தாகாராநுகுணமான ஶ்ரிய:பதித்வத்தையும், அஶேஷ ஜநஸம்ஶ்லேஷ ஸ்வபாவத்தையும், அதிஶயிதஜ்ஞாநர்க்கு மறியவரியவாகாரத்தையும், அத்யந்த விலக்ஷணபுருஷரும் ஸேவிக்கும்படியான வதிஶயிதஶக்தியோகத்தையு மநுஸந்தித்து, ஏவம்ப்ரகார விஶிஷ்டனானவன் தன்னழகையும் மார்த்தவத்தையும் பாராதே ப்ரதிகூல பூயிஷ்டமான ஸம்ஸாரத்திலே அஸஹாயனாய்வர்த்திக்கிறவளவிலே அடிமைசெய்யப் பெற்றிலோமென்று தளர்ந்தவர், அவன் தன்னுடைய வாஶ்ரித ஸாமக்ர்யத்தையும் அதிஶயிதஶக்தியையுங் காட்டக் கண்டு ஸமாஹிதரா யுகந்து தலைக்கட்டுகிறார்.

ஈடு ;— கீழிற்றிருவாய்மொழியில் பத்தாம்பாட்டிலே - "ஓர் கோலநீல நன்னெடுங்குன்றம் வருவதொப்பான்" என்று வடிவழகை யநுஸந்தித்தவாறே, தாம்பட்ட க்லேஶத்தைமறந்து, "இவ்வடிவோடே ஸம்ஸாரத்திலே தனியேவந்தவதரித்து உலாவாநிற்கும்;

ஶத்ருக்களும், மத்யஸ்தரும், ப்ரயோஜநாந்தரபரருமாய், இவனுக்குப் பரிவுடையா ரொருவருமின்றிக்கே யிருக்கிற ஸம்ஸாரத்திலே, ஆர்த்திகளுடையவபேக்ஷிதங்களைப் பூரிக்கைக்காக ஸம்ஸாரிஸஜாதீயனாய், சிலர்க்குப் பரதந்த்ரனாயும், (சிலரார்த்தித்ததுவே வ்யாஜமாக) அவதாரத்துக்குப் பிற்பட்டார்க்குக் கோயில்களிலும் க்ருஹங்களிலும் ஸந்நிஹிதனாயும் வர்த்திக்கிற விவனுடைய ஸௌகுமார்யமறிந்து பரியக்கடவாரொருத்தருமில்லை; நானுமுதவப்பெறுகிறிலேன்" என்று அவன் தனிமைக்கு வெறுத்து பீதராக; "'நமக்குப் பரிவரில்லை' என்று பயப்படவேண்டா, முமுக்ஷுக்களும் முக்தரும் நித்யஸித்தரும் நமக்குப் பரிகையே யாத்ரையாயிருக்குமவர்களன்றோ, நமக்குத்தான் வேறே சிலர் பரியவேண்டியிருந்ததோ" என்று ஸர்வேஶ்வரன் தன் ஸர்வஶக்தித்வத்தைக்காட்டி ஸமாதாநம்பண்ண ஸமாஹிதராய் ஹ்ருஷ்டராகிறார்.

"ஸர்வேஶ்வரனுக்குப் பரிகைக்குத் தமக்குக் கூட்டாவாரில்லையென்று தம் தனிமைக்கு வெறுக்கிறார்" என்றுஞ் சொல்லுவர்கள். "நித்யஸூரிகள் பகவதநுபவத்திலே அந்யபரர், ஸம்ஸாரிகள் ஶப்தாதிகளிலே அந்யபரர்; ப்ரஹ்மேஶாநாதிகள், தங்களுக்காக (௧) 'நீணகர்நீளெரிவைத்தருளாய்' என்று அவனை அம்புக்கிலக்காக்குதல், ஏவித்தேவைகொள்ளுதல் செய்வர்களாகையாலே, பரிகைக்குத் தமக்கொரு துணையில்லை." என்று தம் தனிமைக்கு வெறுக்கிறார். ஶேஷவஸ்துவுக்கு "ஶேஷியோரக்ஷகன்" என்னும் வெளிச்சிறப்பு அறிவுக்குமுதலடி; ஶேஷவஸ்துவாகில், ஶேஷிக்கதிஶயத்தைவிளைத்துத் தன்ஸ்வரூப ஸித்தியாகையாலே, "அவன் ரக்ஷ்யன், நாம்ரக்ஷகர்" என்னுமளவும் செல்லவறிகை - ஸ்வரூபத்தை யுள்ளபடி யுணருகையாவது.

முதற்பாட்டு.

அங்குமிங்கும் வானவர்தானவர்யாவரும் *
எங்குமினையையென்று உன்னையறியகில்லாதுஅலற்றி *
அங்கம்சேரும் பூமகள்மண்மகள்ஆய்மகள் *
சங்குசக்கரக்கையவனென்பர் சரணமே. (௧)

---

(௧) திருவி-௧௨.

ப.—முதற்பாட்டில், உன்னுடைய நிரதிஶயபோக்யதையை யறியாதே, உன் ஶக்தியோகத்தையேசொல்லி அநுகூல ப்ரதிகூல விபாகமற அபிமதஸாதநமென்றுநிற்பர்களென்கிறார்.

(இ-ள்.) அங்கும் - ஊர்த்த்வலோகங்களிலும், இங்கும் - பூமியிலும், எங்கும் - பாதாளாதிகளான ஸமஸ்த ப்ரதேஶங்களிலும், வானவர் - அநுகூலரான தேவர்களும், தானவர் - ப்ரதிகூலரானவஸுரர்களும், யாவரும் - ததாவிதரான மநுஷ்யாதிகளுமெல்லாம், உன்னை - அநுபாவ்ய மஹிஷ்யாதி விஶிஷ்டனானவுன்னை, இனையை - இவ்விதபோக்யன் என்று - என்று, அறியகிலாது - அறியமாட்டாதே, அலற்றி - ரக்ஷகத்வைகாந்தமான ஸர்வஶக்தியோகாதிகளைச் சொல்லிக்கூப்பிட்டு, பூமகள் - புஷ்பபரிமளம் வடிவுகொண்டாப்போலேயிருக்கிற லக்ஷ்மியும், மண்மகள் - கந்தவதியாகையாலே போக்யதையேவடிவான பூமியும், அவ்வளவேயன்றியே, ஆய்மகள் - ஆபிஜாத்யாதிக்யத்தையுடைய நீளையும், ஸௌந்தர்ய ஸௌகுமார்யாதிகளிலே யகப்பட்டு, அங்கம் - திருமேனியை, சேரும் - பிரியாமல்பொருந்தி யநுபவிக்கும்படியாய், சங்குசக்கரம் - அநுபாவ்யரான வாழ்வார்களை, கையவன் - கையிலேயுடையனாயிருக்கிறவிவன், போக்யபூதனென்றநுபவியாதே, புருஷகாரபூர்த்தியையுமுடையனாகையாலே, சரணம் - அபீஷ்டபல ஸாதநபூதன், என்பர் - என்றுநிற்பர்கள்.

ப்ரதிகூலரானவஸுரவர்க்கத்தைப்பற்றவும் ஶேஷித்வம் ஸாதாரணமாகையாலே, ஸ்வாபீஷ்டஸித்த்யர்த்தமான ஶரண்யத்வமுமுண்டென்றுகருத்து. ப்ரயோஜநாந்தரபரரானவர்களும், இவனுடைய ஸௌந்தர்ய ஸௌகுமார்யாதிகளை யநுஸந்தித்து, பரிவராகப்பெற்றதில்லையென்று வெறுத்தாராயிற்று (க)

ஆறு;—ஸ்வர்க்காதிலோகங்களிலும், இந்த லோகத்திலும், மற்றுமெங்கும் வர்த்திக்கிற தேவதாநவ ப்ரக்ருதி ஸமஸ்தாத்மாக்களும், ஏவம்பூதனென்று உன்னை யுள்ளபடியறியாதே, லக்ஷ்மீபூமி நீளாநாயகனாய், ஶங்கசக்ரகதாதரனாய், பரமப்ராப்யனாயிருந்தவுன்னைத் தங்களுக்கு ப்ராப்யமான க்ஷுத்ரைஶ்வர்யத்துக்கு உபாயமென்பர்; ஆதலால், எனக்கு அவர்கள் துணையல்லரென்கிறார்.

ஈடு ; அவ ; — முதற்பாட்டு. இதில், முதற்பாட்டில், உன் ஸௌகுமார்யத்தையறிந்து பரிகையன்றிக்கே, தங்களுக்கு இஷ்டப்ராப்தி ஸாதநமென்றிருப்பர்களென்று ஐஶ்வர்யார்த்திகளை க்ஷேபிக்கிறார்.

(அங்குமிங்குமித்யாதி) உபரிதநலோகங்களிலும், பூமியிலும். (எங்கும்) அநுக்தமான பாதாளாதிகளிலும் (வானவர்) அநுகூலர், (தானவர்) ப்ரதிகூலர். (யாவரும்) இரண்டுவகையுமான மநுஷ்யாதிகளும். (இனையையென்றுன்னை) (உன்னை-இனையையென்று) ஸர்வஶேஷியான வுன்னை, இப்படிப்பட்டவனென்று - நிரதிஶய ஸௌகுமார்யயுக்தனென்று. இவர் நெஞ்சில் அவன் ஸௌகுமார்யமேயாயிற்று உறைத்திருப்பது; கருமுகை மாலைபோலேயிருக்கிறவன்படியறியாதே.

(அறியகிலாது) அறியாதே. பரியவறியாமைக்கு, அநுகூலரான தேவர்களோடு, ப்ரதிகூலரான வஸுரர்களோடு, இவ்விரண்டுங்கூடின மநுஷ்யரோடு வாசியில்லை. அவனைப் பரியக்கண்டவர்கள் எல்லாருமென்றிருக்கிறாராயிற்று இவர். (அலற்றி) (க) "யஸ் ஸர்வஜ்ஞஸ் ஸர்வவித்" (உ) "பராஸ்ய ஶக்திர்விவிதைவ ஶ்ரூயதே ஸ்வாபாவிகீ ஜ்ஞாநபலக்ரியா ச" என்று, தங்களுடைய ரக்ஷணத்துக்குடலான வசநங்களைக் கதறுகிற்பர்கள். உன்னை ரக்ஷ்யனென்றறியார்கள்.

(அங்கஞ்சேருமித்யாதி) இதுக்குமேல் ஸௌகுமார்யத்தையு மழகையுஞ்சொல்லுகிறது. (பூமகள் மண்மகளாய்மகள் - அங்கஞ்சேரும்) அவனை யாஶ்ரயிக்கைக்குப் புருஷகாரமாகப் பிராட்டிமாருண்டென்பர்கள். (௩) "ந கஶ்சிந் நாபராத்யதி" என்பாரும், "குற்றத்தை யுணருகிறதென், பொறுக்குமித்தனையன்றோ" என்பாரும், முதலிலே குற்றங்காணுதபடி ஸ்வபோக்யதையை முன்னிடுவாரும் அங்கே யுண்டென்பர்கள். (ச) "வடிவாய் நின்வல மார்பினில் வாழ்கின்ற மங்கையும்பல்லாண்டு" என்று அச்சேர்த்திக்கு மங்களாஶாஸநம் பண்ணுவாரில்லை.

(சங்சக்கரக்கையவன்) கையுந் திருவாழியுமானவழகை யநுபவிக்கைக்கிழிவாரில்லை; நம்விரோதியைத் துண்டிக்கைக்குக் கையிலே திவ்யாயுதங்களையுடையவனென்பர். (க) "வடிவார்சோதிவலத்

(க) முண்டக-க. (உ) ஶ்வே-௬.
(௩) ரா-யு-கககூ-சச. (ச) திருப்பல்லா-உ.

துறையும் சுடராழியும்பல்லாண்டு" என்னவேண்டியிருக்குமே இவர்களுக்கு. (என்பர்சரணமே) (சரணம்-என்பர்) அபிமதஸாதநமென்பர். அபிமதமென்றறிவாரில்லை - ஸௌகுமாரவிஷயமென்றறிவாரில்லை. முந்தானையேற்றல், எதிரிகளம்புக் கிலக்காக்குதல் செய்வர்கள்.

இரண்டாம்பாட்டு.

சரணமாகிய நான்மறைநூல்களும்சாராதே *
மரணம்தோற்றம் வான்பிணிமூப்பென்றிவைமாய்த்தோம் *
கரணப்பல்படை பற்றறவோடும்கனலாழி *
அரணத்திண்படையேந்திய ஈசற்குஆளாயே. (௨)

ப.—அநந்தரம், விரோதி நிரஸகபரிகரவானானவனைக்கொண்டு கேவலம் ஜராமரணாதி நிவ்ருத்தியைப் பண்ணிக்கொள்ளுகிற கேவலரை, ஶேஷத்வ ஸாதர்ம்யத்தாலே யுடன்பட்டுநின்று க்ஷேபிக்கிறார்.

(இ-ள்.) த்ரைகுண்யபுருஷர்களுக்கு, சரணமாகிய - புகலிடமாய், ஐஶ்வர்ய தத்ஸாதந ப்ரதிபாதகமான, நால் - நாலுவகைப்பட்டதாயிருக்கிற, மறை- வேதங்களாகிற, நூல்களும்-ஶாஸ்த்ரங்களை, சாராதே - (க) "யாமிமாம் புஷ்பிதாம் வாசம் ப்ரவதந்த்யவிபஶ்சித:। வேதவாதரதா: பார்த்த நாந்யதஸ்தீதி வாதிந:" என்று மேலெழத்தோன்றுகிற வர்த்தங்களை ப்ரதிபத்திபண்ணப்பற்றுதே. * நிஸ்த்ரைகுண்யராய்க்கொண்டு, முமுக்ஷுக்களாய், காணம் - பாதகோபகரணங்களையுடைத்தாய், பல் - பஹுவிதமான, படை - ஶத்ருஸேனைகள், பற்று - பற்று, அற - அற, ஓடும் - ஓடும்படி, கனல்-தீப்தமாகிற, ஆழி-திருவாழியாழ்வானாகிற, அரணம் - க்ஷேமங்கரமாய், திண் - ஸ்திரமான, படை - ஆயுதத்தை, ஏந்திய - உடையனான. ஈசற்கு - ஸர்வேஶ்வரனுக்கு, ஆளாய் - ஶேஷபூதராய்வைத்து, ஶேஷத்வாநுரூபமான வதிஶயத்தைவிளைத்துப்பரியாதே, மரணம் - மரணம், தோற்றம் - ஜந்மம், வான்-பெரிய, பிணி - வ்யாதி, மூப்பு - ஜரை, என்று - என்று சொல்லுகிற, இவை - ஷட்பாவவிகாரங்களை, மாய்த்தோம் - கழித்துக்கொண்டுவிட்டோமித்தனையிறே.

தாதர்த்யம் ஸ்வரூபமாயிருக்க, ஸ்வார்த்தபரராகை அநுரூபமோவென்று கருத்து. (௨)

(க) கீதை ௨-௪௨

ஆறு ;—(சரணமாகிய) இப்படி ஐஶ்வர்யார்த்திகள் துணையல்லரென்றருளிச்செய்து, கைவல்யார்த்திகளும் தமக்குத் துணையல்லரென்கிறார்.

ஐஶ்வர்யோபாய விதாயக ஶாஸ்த்ரங்களை விட்டு மோக்ஷோபாய விதாயக ஶாஸ்த்ரத்தை யவலம்பித்த நாமும், அப்ராக்ருத ஸ்வாஸாதாரண திவ்யரூப விஶிஷ்டனாய், ஶங்கசக்ரகதாதரனை பரமபுருஷனை ஶுபாஶ்ரயமாக வநுஸந்தித்து, இந்த்ரியஜயத்தைப் பண்ணி, ஸம்ஸாரநிவ்ருத்திமாத்ரத்தை ப்ராப்யமாகப்பற்றினோமித்தனையிறே; அவன் திருவடிகளை ப்ராப்யமாகப் பற்றிற்றிலோமிறே; ஆதலால், நீங்களு மெனக்குத் துணையல்லீரென்கிறார்.

தம்மோடவர்களுக்குண்டான வைஶ்வர்ய வைராக்யரூப ஸாம்யத்தாலே கைவல்யார்த்திகளை அஸ்மச்சப்தத்தாலே வ்யபதேஶிக்கிறார். (உ)

ஈடு; அவ;—இரண்டாம்பாட்டு. "ஐஶ்வர்யம்போலே நிலைநில்லாத தொன்றன்றேயிது, நித்யமாயிருப்பதொன்றன்றோ" என்று ஆத்மலாபத்துக்காக வுபாஸிக்கிற கேவலர் வந்துதோற்ற, அவர்களை க்ஷேபிக்கிறார்.

(சரணமித்யாதி) (க) "த்ரைகுண்யவிஷயா வேதா:—த்ரைகுண்யவிஷயாவேதா:" என்கிறபடியே ஐஶ்வர்யதத்ஸாதநங்களை ப்ரதிபாதிக்கிற பூர்வபாகத்தி லிழியாதே, அத்தைவிட்டு மோக்ஷத்தை யுபதேஶிக்கிற வேதாந்தபாகத்திலே புகுராநின்று, ஸர்வேஶ்வரனை யாஶ்ரயித்து, ஶரீரஸம்பந்தத்தை மாய்த்தோ மித்தனையன்றோ! நாம் செய்ததென்று க்ஷேபிக்கிறது.

(சரணமாகிய) ஐஶ்வர்ய தத்ஸாதந விஷயஜ்ஞாநஸாதநமான. (நான்மறைநூல்கள்) சதுர்வேதமாகிற ஶாஸ்த்ரங்கள். நூல்-ஶாஸ்த்ரம். நூலென்று-பிரித்து, ஆகமாதிகளைச் சொல்லுகிறதென்றுமாம். நான்மறையாகிற ஶாஸ்த்ரமென்றே யருளிச்செய்வது. (உ) "வேதஶாஸ்த்ராவிரோதிநா – வேதஶாஸ்த்ராவிரோதிநா" என்னக்கடவதிறே. (மரணம்தோற்றம்) ஜந்மமரணங்கள், ப்ரபலவ்யாதி, ஜரைதொடக்கமான ஷட்பாவவிகாரங்களை மறுவலிடாதபடி கழித்துக்

(க) கீ-உ-சரு. (உ) மநு-கஉ-க0க.

கொண்ட வித்தனையிறே நாமும்செய்தது. பூஜாவசநம் க்ஷேபத்திலே.

(கரணப்பல்படையித்யாதி) உபகரணங்களை யுடைத்தாய்ப் பலவகைப்பட்ட ஶத்ருஸேநை நிஶ்ஶேஷமாக வேவும்படி ஜ்வலியாநின்ற திருவாழியென்னுதல்; கரணக்ராமங்களை விஷயங்களினின்றும் நிஶ்ஶேஷமாக-பற்றற, ஓடும்படி கனலாநின்றிருந்துள்ள திருவாழியென்னுதல். (அரணத்திண்படை) ஆஶ்ரிதர்க்கரணாய், ஶத்ருக்களாலே பேதிக்கவொண்ணாதபடியா யிருக்கை. (திண்படை) ஈஶ்வரன்விடிலு மாஶ்ரிதரை விடாதவென்றுமாம். (ஏந்தியவீசற்கு) திருவாழியை யேந்துகையாலே ஸர்வேஶ்வரனானவனுக்கு (ஆளாயே) அவர்களா ளானையாவதென்னென்னில்; பகவத்ப்ராப்திகாமனோபாதி பகவத்பஜநமும் அந்திமஸ்ம்ருதியு முண்டாகையாலே சொல்லுகிறது. ஆளாயே-மரணந்தோற்றம் வான் பிணி மூப்பென்றிவைமாய்த்தோம். (௨)

மூன்றாம்பாட்டு

ஆளுமாளார் ஆழியும்சங்கும்சுமப்பார்தாம் *
வாளும்வில்லும்கொண்டு பின்செல்வார்மற்றில்லை *
தாளும்தோளும் கைகளையாரத்தொழக்காணேன் *
நாளும்நாளும்நாடுவேன் அடியேன்ஞாலத்தே. (௩)

ப.—அநந்தரம், விரோதிபூயிஷ்ட்டமான ஜகத்தில் ஆஶ்ரிதரக்ஷணார்த்தமாக ப்ரவ்ருத்தனானவனுடைய ஸஹாயாந்தராஹித்யத்தை யநுஸந்தித்து, நானடிமைசெய்யும்படி காணப்பெறுகிறிலேனென்று வெறுக்கிறார்.

(இ-ள்.) ஞாலத்து-ராவண துர்யோதந ஸமான ப்ரதிகூலர் வர்த்திக்கிற ஜகத்திலே. ஆளும் - பரிவராயிருப்பாராளும், ஆளார் - வேணுமென்றங்கீகரிக்கிறிலர், தாம் - அடுத்துப் பார்க்கபொறாத ஸௌகுமார்யத்தையுடைய தாம், ஆழியும் - திருவாழியையும், சங்கும் - திருச்சங்கையும், சுமப்பார் - மலையெடுத்தாப்போலே, வஹிப்பர், அப்படியானாலும். வாளும்-நந்தகத்தையும், வில்லும்-ஸ்ரீசார்ங்கத்தையும், கொண்டு - கொண்டு, (௧) “[illegible] ப்ருஷ்டதஸ்துதநுஷ்பாணி:” என்கிற இளையபெருமாளைப்போலே,

---

(௧) ரா-ஆ-௧௧-௧.

பின்செல்வார் - பின்செல்லுகைக்கு, மற்று - வேறொருவர், இல்லை - இல்லையாயிராநின்றது; நான் பின்செல்லவென்று நினைக்கிலும், தாளும் - (க) "த்ருத்ருஹமாதிநுத்யமதாங்கராமிகம்" என்னும்படி நடக்கிற திருவடிகளையும், தோளும் - (உ) "ஸாலஸ்யாமவல்லைபொர-பாஹுச்சாயாமவஷ்டப்த:" என்று நிழல்செய்கிற திருத்தோள்களையும், கைகளை - என்கைகளைக்கொண்டு, ஆர - பூர்ணமாக, தொழ - தொழுதடிமைசெய்கைக்கு, காணேன் - என்கண்ணாலே காணப்பெறுகிறிலேன், அடியேன் - ஸேஷத்வமே ஸ்வரூபமான நான், ஸேஷிக்க ப்ரயோஜநமான ஸேஷவ்ருத்தியே ஜீவநமாகையாலே, பசியர் சோறு தேடுமாபோலே, நாளும் நாளும் - நாள்தோறும், நாடுவன் - தேடாநின்றேன். (௩)

ஆறு ;—(ஆளுமாளார்) தன் தனிமையினுடைய ப்ரஸங்கத்தாலே அவன் தனிமையை நினைத்து, "அவன் தனிமைக்கு உதவப்பெற்றிலேன்" என்று சொல்லிக்கொண்டு தம்முடைய தனிமையைச் சொல்லுகிறார்.

மாரீச நிரஸநார்த்தமாகவாதல், கரதூஷண நிரஸநார்த்தமாகவாத லெழுந்தருளும்போது, துணையின்றியே, தன்னுடைய ஸங்கசக்ராதி திவ்யாயுதங்களைத் தானே சுமந்துகொண்டு போகாநிற்கும்; வாளும் வில்லுங்கொண்டு பின்செல்வார் மற்றில்லை; தானெழுந்தருளும்போது அவனுடைய திவ்யாயுதங்களைச் சுமந்துகொண்டு, அவன் திருவடிகளையும் திருத்தோள்களையும், என்னுடைய கைகளினுடைய விடாய்தீரும்படி தொழக்காணப் பெறுகிறிலேன்; (௩) "காஞ்சநாஸ்ரமபுத்ரஜோநிவாஸாவலோக நாவிஸ்வாவளீ தா-காந்தாரமத்யேவிஜநேவிஸ்ருஷ்டாபாலேவகந்யாவிலலாபஸீதா" என்ற பிராட்டியைப்போலே, அவனைக் காணவேணுமென்றாசைப்பட்டு, நாளும்நாளும் இந்த லோகமாகிற காட்டிலே தனியே கிடந்து கூப்பிடாநின்றேனென்கிறார். (௩)

ஈடு ; அவ ;—மூன்றாம்பாட்டு. ப்ரயோஜநாந்தர பரர்க்காகத் தன் வாசியறியாதே பெதிரிடவல்ல ஸம்ஸாரத்திலே தனியே வர்த்தியாநிற்கும், அங்குத்தைக்கு ரக்ஷையாக நானுதவப் பெறுகிறிலேனென்றிறுதாகிறார்.

(க) ரா-அயோ ௩-உஅ. (உ) ரா-ஸு-௩ச-௩க.
(௩) ரா-ஸு-உ௮-உ.

(ஆளுமாளார்) விபூதித்வயத்திலும் பரிகைக்காளில்லை, தனியே யொருவரை யாளவேணுமென்றிருக்கிறார். நித்யஸூரிகள் பகவதநுபவத்திலே அந்யபரர், ஸம்ஸாரிகள் ஶப்தாதிகளிலே அந்யபரர். (ஆழியும் சங்கும் சுமப்பார்தாம்) ஆபரணமான திவ்யாயுதங்கள், அவன் ஸௌகுமார்யத்தாலே மலையெடுத்தாப்போலே சுமையாய்த் தோற்றுகிறது இவர்க்கு. எதிரிகளுக்கு அஸ்த்ரமாய் அநுபவிப்பார்க்கு ஆபரணமாயிருக்கிறவை. (தாம்) தம்மைப் பார்த்துக் கொள்ளவேண்டாவோ?;

(௧) * எப்போதும் கைகழலா நேமியானன்றோ, அவனுக்கு நிரூபகங்களானவிவை சுமையோவென்ன; அது தான் செய்கிறது? (வாளும்வில்லுங்கொண்டு) இளையபெருமாளைப்போலே ஒருவர் பின்னே கொண்டுசென்றாலாகாதோ. "ஆளுமாளார், சுமப்பார்தாம், பின் செல்வார்மற்றில்லை) என்கிறது-" பரிவரான நீர் அவற்றுக்கன்றோ" என்று தம்மை பேசுவாராக. (தாளுந்தோளும்) நடக்கும்போது நடைச் சக்ரவத்துப் பிடிக்கும்படியாயிற்று மாறிமிடும் திருவடிகளிருப்பது. (௨) "ஸந்தஃப்ரயயௌராமஃ-அக்ரதஃப்ரயயௌ ராமஃ" என்னக்கடவதிறே. அத்தையும், வீசுதோள்களையும். (கைகளையார) "வயிறாரவுண்ண" என்பாரைப்போலே. (தொழக்காணேன்) தொழுகையும், பரிகையும், பர்யாயம்போலேகாணும். தொழக்காணப் பெறுகிறிலேன். நமஸ்ஸப்தத்தால் - எனக்கன்று, அவனுக்கென்றிறே சொல்லுகிறது. தொழுகையும், நமஃ என்கையும், பர்யாயமிறே.

(நாளுந்நாளுந்நாடுவன்) அவன்தனிமையை யநுஸந்தித்து, "அவனுக்கென்வருகிறதோ" என்று நாள்தோறு மாராயாநிற்பன். ஸம்பந்தம் நித்யமானால் தத்கார்யமான பரிவும் நித்யமாகக் கடவதிறே. (அடியேன்) ஸ்வரூபஜ்ஞாநமுடைய நான்; ஶேஷிக்கதிஶயத்தை விளைக்கையே ஶேஷவஸ்துவுக்கு ஸ்வரூபமென்றறிந்த நான். (ஞாலத்தே) பரமபதத்திலேயிருந்து அஸ்த்தாநே பயஶங்கைபண்ணுகிறேனே. ப்ரஹ்மாஸ்த்ர ப்ரயோகம்பண்ணுவார், நாகபாஶத்தையிட்டுக் கட்டுவார், அழைத்துவைத்து மல்லரையிட்டு வஞ்சிக்

(௧) பெரியதிருவ-௮௭. (௨) ரா-ஆர-௧௧-௧.

கத்தேடுவார், பொய்யாஸநமிடுவாராகிற தேசத்திலே வர்த்தியா நின்றால் நானஞ்சாதே செய்வதென். (௩)

நான்காம்பாட்டு.

ஞாலம்போனகம்பற்றி ஓர்முற்றுருவுருவாகி *
ஆலம்பேரிலை அன்னவசஞ்செய்யும்அம்மானே! *
காலம்பேர்வது ஓர்காரிருள் ஊழியொத்துளதால் * உன்
கோலங்காரெழில் காணலுற்று ஆழும்கொடியேற்கே. (௪)

ப.—அநந்தரம், அஸஹாயனான வடதளஶாயியினுடைய வாபிருப்யத்துக் கென்னப்ரமாதம் வருகிறதோவென் றஞ்சிக்கலங்கின ப்ரகாரத்தை யருளிச்செய்கிறார்.

(இ-ள்.) ஓர் - அத்விதீயமாய், முற்று - அதிமுக்தமான, உருவாகி - வடிவையுடையையாய், ஞாலம் - மஹாஜகத்தை, போனகம் - போஜநமாக, பற்றி அமுதுசெய்து, ஆல் - ஆலென்று, பேர் - பேர்சொல்லலாமளவானது, இலை - ஓரிலையிலே, அன்னவசஞ்செய்யும் - இடம்வலங்கொண்டு கண்வளர்ந்தருளுகிற, அம்மானே - ஸ்வாமியானவனே, அந்தப்ரளயத்திலே யென்னப்ரமாதம் வருகிறதோவென்று, கார் - காளமேகத்தின், எழில் - எழிலையுடைத்தான, உன், கோலம் - வடிவழகை, காணலுற்று - காணவேணுமென்று நிர்ப்பந்தித்து, ஆழும் - அச்சத்தாலே யாழங்காற்படும்படியான, கொடியேற்கு- கொடிய பாபத்தையுடையவெனக்கு, பேர்வது - ஒருக்ஷணத்தில்நின்றும் க்ஷணாந்தரத்திலேபேருகிற, காலம் - காலாவகாஶமானது, ஓர் - அத்விதீயமான, காரிருள்- காடாந்தகாரத்தையுடைத்தான, ஊழியொத்து - கல்பம்போலே, உளது - ஆகாநின்றது.

உன்னுடைய வகடிதகடநாஸாமர்த்த்யமான ஶக்தியோகமும் ஸர்வாக்ஷகத்வபூர்த்தியும் அச்சத்துக்குறப்பாமென்று கருத்து. (௪)

ஆறு ;—(ஞாலம்) ஓர் முற்றுருவுருவாய், அந்தப்பிள்ளைத்தனத்தாலே ஸர்வலோகங்களையு மமுதுசெய்து, பெரியவெள்ளத்திலே சிறியதோராலிலையிலே, யசோதைப்பிராட்டியைப்போலே யிருப்பாளொருதாயாருமின்றியே, தனியே கண்வளர்ந்தருளுகிறதசையில் துணையாயிருக்கப்பெறாமையாலும், உன் வடிவழகைக்காண வாசைப்பட்டுப் பெறாமையாலும், அகாதமான துக்கார்ணவத்திலே நிமக்நனாய்க்

கிடக்கிற வெனக்கு ஒருக்ஷணமானது அந்தகாரமயமான ராத்ரியுகமாய்ச் செல்லுகிறதென்கிறார். (ச)

ஈடு ; அவ ;—நான்காம்பாட்டு; இவரிப்படியஞ்சினவாறே, ப்ரளயாபத்திலின்றும் ஜகத்தை யெடுத்து வயிற்றிலேவைத்து நோக்கினவனன்றோ நான், நீர் நமக்கு பயப்படவேண்டாகாணுமென்று தான் ஸர்வரக்ஷகனாயிருக்கிற விருப்பைக்காட்டினான் ; ஸர்வரக்ஷகமான வஸ்துவாகாதே ப்ரளயத்திலே யகப்படப்புக்கதென்று அதுக்குமஞ்சுகிறார்.

(ஞாலம்போனகம்பற்றி) "இதுநமக்கு ஸாத்யமாது" என்றறியாதே, பூமிப்பரப்பையன்றோ வயிற்றிலே யெடுத்துவைத்தது. "வெண்ணெயும் ஸாத்மியாது" என்றிறே இவரிருப்பது. (ஓர்முற்றுருவுநவாகி) ஒரு கொறுட்டிலே தெறித்தால் மற்றைக்கொறுட்டாலே பால்பாயும் பருவமாயிற்றுப்பருவம். யசோதாஸ்தநந்தயத்துக்கும் கீழாயிறேயிருப்பது இந்த மௌக்த்யம் ப்ரளயாபத்திலே வரையாதே ரக்ஷித்தரக்ஷகத்வமும், அகடிதகடநாஸாமர்த்யமும் இவர் நெஞ்சில் படுகிறதில்லை ; ஸௌகுமார்யமேயாயிற்று இவர்க்குத் தோற்றியிருக்கிறது.

(ஆலம்பேரிலை) அங்கொருதொட்டிலிலே கிடக்கப்பெற்றது, இங்கொருபவனை வாலிலையிலேயாயிற்றுத் திருக்கண்வளர்ந்தருளுகிறது. (பேரிலை) பெருகிறவிலை. முகிழ்விரிகிறவிலை. (க) "[illegible] [illegible] — கதந்வயம் [illegible] [illegible] ஸாகாயாம் வடவ்ருக்ஷஸ்ய பல்லவேத்விதிவிஸ்மித:" (உ) "இளந்தளிரில் கண்வளர்ந்த" என்கிறபடியே. ஆலிலையென்று-ஒருபேர்மாத்ர மென்னுதல்; பெரியவிலையென்று - விபரீதலக்ஷணையாய், சிற்றிலையென்றாதல்.

(அன்னவசஞ்செய்யும்) உணவுக்கீடாக இடம்வலங்கொள்ளும்; யசோதைப்பிராட்டி தொட்டிலில்பண்ணும் வ்யாபாரமெல்லாம் பண்ணுமாயிற்று அதுக்குள்ளே. (ங)* கிடக்கில்தொட்டில் கிழியவுதைத்

(க) பார-ஆர-கஅஅ-கூச. (உ) தி-மொ-உ-௧0-௧0.

(ங) பெரியா-தி-க-க-கூ.

இடும் அதில்; தனக்கு ஸாத்மியாதபூமியை அமுதுசெய்கையும், "ஸாத்மியாது" என்றறியாத முக்தனுகையும், ப்ரளயத்திலே அல்பாவகாசமான வாலிலேயிலே கண்வளர்ந்தருளுகையும், அதிலே கிடந்தவிடத்தில் கிடவாதே வ்யாபரிக்கையும், இவையெல்லாம் பயஸ்தாநமாயிருக்கிறதாயிற்று இவர்க்கு. (அம்மானே) ஸர்வரக்ஷகனுனவனே. ஒருகாபுருஷனுக்கு வந்ததொன்றன்றிக்கே ஸர்வரக்ஷகனுனவனுக்கு வந்ததொன்று இதுவு பயஸ்தாநமாகிறது இவர்க்கு.

(காலமித்யாதி) உன்தனிமையை யநுஸந்திக்க வநுஸந்திக்க, ஒரு க்ஷணத்தினின்றும் க்ஷணாந்தரத்திலே பேருகிற நடுவில் ஸந்திமாத்ரம், மஹாந்தகாரமான கல்பமாய்க்கொண்டு நெடுகாநின்றது எனக்கு. (உன்கோலம் காரேழில்காணலுற்று) உன்னுடைய கறுத்தவெழிலான கோலமென்னுதல்; மேகத்தினுடைய வெழில்போலேயிருந்துள்ள வழகென்னுதல். (காணலுற்றுழுங்கொடியேற்கு) மங்களாஸாஸநம் பண்ணுகைக்கு உன்னழகிய வடிவைக்காண வாசைப்பட்டுப் பெருதே நோவுபடுகிற மஹாபாபியான வெனக்கு. ஸம்ஸாரபயம் அவனை யாஸ்ரயிக்கப்போம்; ஒருகாலத்திலும் முடியாதே நித்யமாயிருப்பதொருபய மநுவர்த்திக்கும்படியான பாபத்தைப்பண்ணினேன். "ரக்ஷகனுக்கென்வருகிறதோ" என்கிற பயத்துக்கு முடிவில்லையே. (௪)

ஐந்தாம்பாட்டு.

கோடியார்மாடக் கோளூரகத்தும்புளிங்குடியும் *
மடியாதின்னே நீதுயில்மேவிமகிழ்ந்ததுதான் *
அடியாரல்லல்தவிர்த்தஅசைவோ ? அன்றேல் * இப்
படிதான்நீண்டுதாவிய அசைவோ ? பணியாயே. (ரு)

ப — அநந்தரம், திருக்கோளூரிலும் திருப்புளிங்குடியிலும் முசியாதே கண்வளர்ந்தருளுகிறது, ஆஸ்ரிதவிரோதி நிவர்த்தநத்தாலும் த்ரிவிக்ரமாபதாநத்தாலும் வந்த வாயாஸமோ வென்கிறார்.

(இ-ள்.) விரோதிகளு மறியலாம்படி, கொடி - கொடிகள், ஆர்-செறிந்த மாடம் - மாடத்தையுடைய, கோளூர் - திருக்கோளூர்க்கு, அகத்தும்-உள்ளும், பலவிடத்தில் படுக்கைபடுத்தது அலேசலின் மிகுதியென் றுபாஸிக்கலாம்படி புளிங்குடியும் - திருப்புளிங்குடியிலும், மடியாது - மீளாதே, இன்னே - ஒரு

படிப்படவிப்படி, துயில்மேவி - கண்வளர்ந்தருளினவத்தாலே, நீ - நீ, மகிழ்ந்தது தான் - உகப்புப்பிறந்திருக்கிறவிது, ஆஶ்ரிதவிரோதிகளான ராவணாதிகளை நிரஸித்து, அடியார் - அவர்கள், அல்லல் - து:க்கத்தை, தவிர்த்த - போக்கின, அசைவோ - அலைச்சலாலேயோ, அன்றேல் - அதல்லவாகில், இ - இந்த, படிதான் - பூமியை, நீண்டு - ஒருநாளே வளர்ந்து, தாவிய - அளந்துகொண்ட, அசைவோ - ஆயாஸமோ, உன் திருமிடற்றோசையில் வாசியாலே நான் உன் ஆயாஸத்தின் மிகுதி யறிகைக்காகவும், நொந்தவிடமறிகைக்காகவும், பணியாய் - அருளிச்செய்யவேணும்.

அளந்ததாளைப்பிடித்தல், எய்த்த தோளைப்பிடித்தல் செய்கையிலே இவர்க்குக்கருத்து. (ரு)

ஆறு ;—(கொடியார்) "அந்த விழவுதீரவேணும்" என்று ஆஶ்ரிதர்க்கு ஆத்மப்ரதாநம் பண்ணுகைக்குக் கொடிகட்டிக்கொண்டிருக்கிற திருக்கோளூரிலும் திருப்புளிங்குடியிலும் போய்ப்புக்கவிடத்திலே, தம்மைத் திருக்கண்ணாலே பார்த்தருளுதல், ஒருவார்த்தை யருளிச்செய்தல், ஒரு திவ்யசேஷ்டிதத்தைப் பண்ணுதல் செய்தருளாதே யொருபடியே கண்வளரக்கண்டவாறே; நீ யொருபடியே கண்வளர்ந்தருளுகிறது ஆஶ்ரிதவிரோதி நிரஸநஜநிதஶ்ரமத்தாலேயோ, அன்றிக்கே, த்ரைலோக்ய விக்ரமணஜநித ஶ்ரமத்தாலேயோ வென்றுகொண்டு, இவனுக்கொரு வ்யஸநமுண்டானதாக ஶங்கித்து வ்யஸநப்படுகிறார். (௬)

ஈடு ; அவ ;—ஐந்தாம்பாட்டு. ப்ரளயார்ணவத்திலே தனியே கண்வளர்ந்தருளுகிறானென்று பயப்பட்டவர் பயந்தீர, பரிவருமுண்டாய், நிர்ப்பயமான திருக்கோளூர் திருப்புளிங்குடி தொடக்கமானவிடங்களிலே கண்வளர்ந்தருளுகிறபடியைக் காட்டிக்கொடுக்க, அதுதானு மிவர்க்கு பயஹேதுவாயிற்று.

(கொடியார்மாடக் கோளூரகத்தும்) கொடிமிக்க மாடங்களையுடைய திருக்கோளூரிலும் ஶத்ருக்கள் கிடந்தவிடமறிந்து அபிசரிக்கும்படி கொடிகட்டிக்கொண்டு கிடக்கவேணுமோ. கொடிக்குபயப்படவல்லார் இவரைப்போலில்லை. கம்ஸபயத்தாலே யொளித்து வளர்ந்தாப்போலே யிருக்கலாதோ. இந்த பயமில்லையிறே கீழிற்பாட்டில்; அநுகூல ப்ரதிகூல விபாகமற ஸம்ஹ்ருதமாய்க் கிடக்கை

யாலே. (புளிங்குடியும்) இதுவுமொரு பயஹேது. பலவிடங்களிலும் படுக்கை படுகிறது ஸ்ரமத்தின் மிகுதியென்றிருக்கிறார்.

(மடியாது) இடம் வலங்கொள்ளாதே யென்னுதல்; மடியென்று-சோம்பாய், சோம்பாதே யென்னுதல். அதாவது-நமக்காக விவன் கிடக்கிறானென்றறிந்து "பரிகைக்கொருத்தரைப் பெற்றிலோம்" என்றிராகாதொழிகை. (இன்னே) இப்படியே (௧) "கிடந்ததோர் கிடக்கை" என்னுமித்தனையொழிய, பரிமாறிடப்போகாதிருக்கை. (நீ துயில்மேவிமகிழ்ந்ததுதான்) * அவிகாரியாயிருக்கிற நீயொருபடியே கண்வளர்ந்தருளி, அத்தாலே பிணியறுகைக்கு ஹேதுவென். இவன் முகத்திலே தெளிவுண்டாயிருந்தது, அதுக்கடி முன்பே யொருஸ்ரமமுண்டானதயிறே யென்றிருக்கிறார்; ஸ்ரமமுடையார்க்கு உறங்கவுறங்க முகந்தெளிந்து வரக்காண்கையாலே.

(அடியாரல்லல்தவிர்த்தவசைவோ) திருவடிகளிலே சரணம்புகுந்த விக்த்ராதிகளுக்காக ராவணாதிகளை யழியச்செய்து, அவர்களுடைய துக்கங்களைக்கெடுத்த விளைப்போ. (அன்றேல்) அன்றியே. (இப்படியித்யாதி) அன்றேபிறந்து அன்றேவளர்ந்து ஸுகுமாரமான திருவடிகளைக்கொண்டு காடுமோடையு மளந்துகொள்ளுகையாலே திருவடிகள்நொந்தோ. (பணியாயே) தோள்நொந்தோ, திருவடிகள் நொந்தோ, அருளிச்செய்யாய்; தோள்நொந்ததென்னில் தோளைப்பிடிக்க, தாள்நொந்ததென்னில் தாளைப்பிடிக்கவு மருளிச்செய்யவேணும். ஸ்வரஸாதங்கொண்டறியலாமென்று கேட்கிறார். உகந்தருளின விடங்களிலும் செய்யமுடியாததில்லை, சொல்ல நினையாமலிருக்கிறானித்தனையென்றிருக்கிறார். (௫)

ஆறும்பாட்டு.

பணியாஅமரர் பணிவும்பண்பும்தாமேயாம் *
அணியாராழியும்சங்கமும் ஏந்துமவர்காண்மின் *
தணியாவெந்நோய் உலகில்தவிர்ப்பான் * திருநீல
மணியார்மேனியோடு என்மனம்சூழவருவாரே. (௬)

ப.—அநந்தரம், நித்யஸூரிகளுக் கநுபாவ்யமான நிரதிஶயபோக்ய விக்ரஹத்தோடே ப்ரதிகூல பூயிஷ்டமான விஜ்ஜகத்தில் "என்னுகிறதோ" என்று என்னெஞ்சு கலங்கும்படி வாராநின்றானென்கிறார்.

---

(௧) திருமாலை-௨௩.

(க) " நகிஜூ பரிஷத்ரூபோர்ஹத்" என்கிறபடியே ஓரவஸ்தையிலும், பணியா-ஔபாதிகமாக வாகிலும் வேறொருவர்காலில் பணியவேண்டாதபடி. அமரர் - *அநந்யாதிபதிகளான நித்யஸூரிகளுடைய, பணிவும் - ஸ்வரூப ப்ரயுக்தமாய் ஸ்வாபாவிகமான பணிவுக்கும், பண்பும் - அவர்கள் ஜ்ஞாநப்ரேமாதி ஸ்வபாவங்களுக்கும், தாமேயாம் - தாமே விஷயமாய்க்கொண்டு, அணி - ஆபரணரூபமான, ஆர் - போக்யதையையுடைய, ஆழியும் - திருவாழியையும், சங்கமும் - திருச்சங்கத்தையும், ஏந்தும் - அவர்களுக்கநுபாவ்யமாம்படி யேந்தியிருக்கும், அவர்காண்மின் - அவர்கிடீர், அப்படியிருக்கச்செய்தே, உலகில்-லோகத்தில் தணியா - ஒருகாலும் தணியாமல் நடக்கக்கடவதாய், வெம் - அதிஶயிதபரிதாபஹேதுவான, நோய் - அவித்யாகர்மவாஸநாருசி ப்ரக்ருதி ஸம்பந்த ரூபவ்யாதிகளை, தவிர்ப்பான் - கழிக்கைக்காக, திரு- அந்த நித்யஸூரிகளுக்கு நித்யாநுபாவ்யமாய் நிரதிஶய ஸௌந்தர்ய ஸௌகுமார்யாதி ஸம்பத்தை, ஆர்-உடைத்தான, நீலமணி - நீலரத்நம்போலேயிருக்கிற, மேனியோடு - திருமேனியோடேகூட, ' இவ்வடிவழகுக்கென்ன தீங்குவருகிறதோ '' என்று, என் - என், மனம் - மநஸ்ஸானது; சூழ-ப்ரமிக்கும்படி, வருவார்-ஸம்ஸாரத்திலேவருவர்.

ஆறு ;—(பணியாவமரர்) ஸ்வாஶ்ரித சதுர்முகாதி தேவர்களுக்கு ஸ்வேதர ஸகலஜநாபிவந்த்யத்வ நிரதிஶயைஶ்வர்ய ப்ரதருமாய், ஸகலலோகதுஃக நிரஸநார்த்தமாக ஸ்வாத்மவிபூஷண ஶங்க சக்ராதி திவ்யாயுததரனுமாய், நிரதிஶய ரமணீய நீலரத்ந ஸத்ருஶனுமாயிருந்த வவனை யாசைப்பட்டுக்கிடீர்? நாணிப்பாடு படுகிறதென்கிறார். (௬)

ஈடு ; அவ ;—ஆறும்பாட்டு. நீரிங்ஙனேகிடந்து படுகிறதென், ஸர்வரக்ஷகனன்றோ அவனென்ன; நித்யஸூரிகள் பரியவிருக்கக்கடவவன் ஸம்ஸாரத்திலே அவ்வடிவோடேவந்து உலாவாநின்றால் நாணிப்படி படாதேசெய்வதென்னென்கிறார்.

(பணியாவமரர்) வேறே சிலரைப் பணிய ஸ்பாவமையில்லாத நித்யஸூரிகள். முன்பு அஸேவ்யர் காலிலேகுனிந்து ஒருநாளிலே யநுகூலித்து, (உ) " அழுக்குடம்பெச்சில்வாய் '' என்றநுதபித்து, பின்பு வகுத்தார்காலிலே குனிந்தவர்களல்லர். பணித்தல் பணிதல் செய்யாதவர்கள். இத்தால்-முந்தரை வ்யாவர்த்திக்கிறது. (பணி

(க) பாக-கக ஹி சுக. (க) திருக்குறு-கஉ.

வும்பண்பும்தாமேயாம்) அவர்கள் பணிவுக்கும் ஜ்ஞாநாதிகுணங்களுக்கும் தாமே விஷயமாயிருக்குமவர்.

(அணியாராழியும் சங்கமுமேந்தும்) ஸர்வாபரணமும் தானேயாகப் போரும்படியான திவ்யாயுதங்களை தரித்து, நித்யஸூரிகளுக்குக்காட்டிக்கொடுத்தால் அவர்களும் அஸ்த்தாநே பயஶங்கைபண்ணி மங்களாஶாஸநம் பண்ணும்படியாயிற்றிருப்பது. அவர்களுக்கும் நான்பட்டது படவேணும். (அவர்காண்மின்) அவர்கிடீர் பயஸ்த்தாநத்திலே பிறக்கிறார்.

தமக்கொரு ப்ரயோஜநத்துக்காகத் தான் வருகிறாரோ (உலகில்-தணியாவெந்நோய்-தவிர்ப்பான்) (தணியாவெந்நோய்) ஒருநாளும் முடியாததாபத்ரயாதிகள் (திருநீலமணியார்மேனியோடு) நீலமணிபோலே ஶ்ரமஹரமாய் ஸுகுமாரமானவடிவோடே. இங்கே வரவேண்டினால் அவ்வடிவோடே வரவேணுமோ. (என்மனம்) அந்த ஸுகுமாரமானவடிவோடே ஸம்ஸாரத்திலே புலாவுகிறானென்றறிந்த வென்மநஸ்ஸானது. (சூழவருவாரே) சுழன்றுவரும்படி வருகிறவர். தணியாவெந்நோய்-தவிர்ப்பான் உலகில் வருகிறவரென்றுமாம். (௬)

ஏழாம்பாட்டு.

வருவார்செல்வார் வண்பரிசாரத்துஇருந்த * என்
திருவாழ்மார்வற்கு என்திறம்சொல்லார் செய்வதுஎன் ? *
உருவார்சக்கரம் சங்குசுமந்து இங்குஉம்மோடு *
ஒருபாடுழல்வான் ஓரடியானும்உளனென்றே. (எ)

ப.—அநந்தரம், கிஞ்சித்கரிக்கைக்குப் பிராட்டியோடே திருப்பரிசாரத்திலேயிருக்கிறவர்க்கு உமக்குப் பரிவனாயிருப்பானொருவிங்கானுண்டென்று ஒருவருஞ் சொல்லுகிறிலரென்று வெறுக்கிறார்.

(இ-ள்.) வருவார் - அங்குநின்றும் வருவார், செல்வார் - இங்குநின்றும் செல்லுவாராகிறவர்கள், வண் - விலக்ஷண ஸம்பத்தையுடைத்தான, பரிசாரத்து - திருப்பரிசாரத்திலே, என் - என்னை யடிமைகொள்ளுகைக் கீடாக, இருந்த - எழுந்தருளியிருக்கிற, திருவாழ்மார்வற்கு - ஸ்ரீமானுக்கு, உரு - வடிவழகால், ஆர் - பொருந்தமான, சக்கரம் - திருவாழியையும், சங்கும் - திருச்

சங்கையும், சுமந்து - தரித்துக்கொண்டு, இங்கு- இந்தவிபூதியிலே, உம்மோடு- உம்மோடேகூட, ஒருபாடு - பார்ஶ்வவர்த்தியாய்க்கொண்டு, உழல்வான் - திரிவான், ஓர் - அத்விதீயனுயிருப்பானொரு, அடியானும் - அடியானும், உளன் - உளன், என்று - என்று, என் - என், திறம் - இடையாட்டம், சொல்லார் - சொல்லுகிறிலர்கள்; வருகிறவர்கள் தம்மை யழைத்துவாராமையாலும், போகிறவர்களொரு மறுமாற்றம் கேளாமையாலும் இவர்கள் வரத்தும்போக்கும் தமக்காகவென்று நினைத்து, சொல்லுகிறிலரென்கிறார்; இவர்கள் சொல்லாதவளவில் அவரறிந்தங்கீகரிக்கைக்கு, செய்வது - செய்யலாவது, என் - ஏதென்று வெறுக்கிறார். (எ)

ஆறு ;— (வருவார்) நாணிப்பாடுபடாநிற்கச்செய்தே அவனெழுந்தருளா தொழிகிறது என்னுடைய வ்யஸந மறியாமையென்று பார்த்து;

ஸ்வகார்யார்த்தமாகப் போகிறாரும் வருகிறாரும் திருப்பரிசாரத்தேறப் போகிறாராகவும் அங்குநின்று வருகிறாராகவும் நிஶ்சயித்து, அவர்கள், திருப்பரிசாரத்திலே யெனக்குத்தாயும் தந்தையுமாய் என்னைத் தேடிக்கொண்டிருக்கிற வென்திருவாழ்மார்வற்கு, நிரதிஶய தர்ஶநீய ஸௌந்தர்ய ஶங்காதி திவ்யாயுதங்களைச் சுமந்துகொண்டு இந்தலோகத்திலே தனியே யெழுந்தருளும்போது பின்னே சாயையைப்போலே திரிவானொ ரடியானுமுளனென்று என்திறஞ்சொல்லார், செய்வதென்னென்கிறார். (எ)

ஈடு ; அவ ;—ஏழாம்பாட்டு. இங்கேவந்து திருப்பரிசாரத்திலே யெழுந்தருளியிருக்க நானுதவப்பெறாதே அவஸந்நனானல், ஓரடியானுமுளனென்று அவனுக்கறிவிப்பாரையும் பெறுகிறிலோமென்கிறார்.

(வருவார்செல்வார்) திருநகரியினின்றும் திருப்பரிசாரத்திலே மஹாபதமாக †விசங்கைநிற்கும். ஸ்வகார்யத்தாலே த்வரித்துப்போவாரைத் தம்தசையை யறிவிக்கப்போகிறார்களென்றும், அங்குநின்றும் வருவாரைத் தம்மை யழைக்கவருகிறார்களென்று மிருப்பர். இயக்கமற்றிருக்கிற தன்றுடைர். திருப்பரிசாரத்தி லிருப்புக்குப்பரியவேணும். அதுக்குமேல் பிராட்டியோட்டைச் சேர்த்திக்குப்பரிய

---

† இசங்குகை - நடக்கை.

வேணும். (௧) "அஹம் ஸர்வம் கரிஷ்யாமி-பவாம்ஸ்து ஸஹ வைதேஹ்யா" என்றிளையபெருமாளைப்போலே தொடர்ந்துபோயடிமை செய்யவேண்டும்படியாயிற்று இங்கிருக்கிறவிருப்பு.

(என்திறஞ்சோல்லார்) சொன்னவார்த்தை கேட்பிப்பாரில்லாமை சொல்லாதொழிகிறாரல்லர்கிடீர். (என்திருவாழ்மார்வற்கு) என் ஸ்வாமிநி ஸந்நிதியாகையாலே சொன்னவார்த்தை விலைச்செல்லுங்கிடீர். (செய்வதேன்) இதுக்கென்றாற் செய்யலாவதென். ஸ்வகார்யபராய்ப் போவார்களாகில்; அவர்களங்குப்போனால் சொல்லும்பாசுரமேதென்ன (உருவார்சக்கரமித்யாதி) அழகுமிக்கிருந்துள்ள வாழ்வார்களை ஸாதரமாக தரித்தென்னுதல், திருமேனிக்கெல்லாம் வேறோராபரணம் வேண்டாதே தானே யாபரணமாகப் போரும்படியான வாழ்வார்களை தரித்து. (இங்கு) பரிவரின்றிக்கேயிருக்கிற ஸம்ஸாரத்திலே.

(உம்மோடோருபாடுழல்வான்) இடைவிடாதே யொருபார்ஶ்வத்தைப்பற்றித்திரிவான். ஒருபார்ஶ்வத்துக்கு இளையபெருமாளுண்டிறே. (ஓரடியானுமுளனென்றே) அநந்யப்ரயோஜநனாயிருப்பானொருவனுளனென்று. (௨) "வாஸுதேவஸ் ஸர்வமிதி ஸ மஹாத்மா ஸுதுர்லப:" என்கிறபடியே ஒருவனில்லையென்று கைவாங்கியிருப்பர்; அதுவேண்டா, ஒருவனுளனென்று என்னிடையாட்டம் சொல்லுகிறிலர்கள், செய்வதென். (எ)

எட்டாம்பாட்டு.

என்றேஎன்னை உன்னேரார்கோலத்திருந்தடிக்கீழ் *
நின்றேயாட்செய்ய நீகொண்டருளநினைப்பதுதான் ? *
குன்றேழ்பாரேழ் சூழ்கடல்ஞாலம்முழுவேழும் *
நின்றேதாவிய நீள்கழலாழித்திருமாலே! (அ)

ப.—அநந்தரம், அகிலவஸ்து ஸம்ஶ்லேஷ ஸ்வபாவனான நீ உன் திருவடிகளிலே நானடிமைசெய்யும்படி யங்கீகரிப்பதென்றென்கிறார்.

(இ ள்,) ஏழ்குன்று - ஸப்தகுலபர்வதங்களையும். ஏழ்பார் - ஸப்தத்வீபங்களையும், சூழ் - சூழ்ந்த, கடல் - அவ்வோ ஸமுத்ரங்களையும், ஏழ்ஞாலமும் -

---

(௧) ரா-அயோ-௩௧-௨௫. (௨) கீதை-எ-௧௯.

பூம்யாதியான ஸப்தலோகங்களையும், முழு - முழுக்க, நின்றே - நின்ற நிலையிலே நின்று, தாவிய - கவடடித்துக்கொண்ட, நீள் - நெடிய, கழல் - திருவடிகளையுடையனும், ஆழி - அந்த சேஷித்வ ஸூசகமான திருவாழியையுடையனும், திருமாலே - ஸ்ரிய:பதியானவனே, என்னை - உனக்கு சேஷபூதனாய்ப் பரிவனுமிருக்கிறவென்னை, உன் - ஸுகுமாரனும் போக்யபூதனுமா யுன்னுடைய, ஏர் - அழகு, ஆர் - விஞ்சின, கோலம் - ஆபரணசோபையையு முடைத்தாய், திருந்து - ஸ்வாபாவிக ஸௌந்தர்ய விசிஷ்டமான, அடிக்கீழ் - திருவடிகளின்கீழே, நின்றே - ஒருகாலும் பிரியாதேநின்று, ஆட்செய்ய - உன்னுடைய ஸ்ரிய:பதித்வ ஸௌகுமார்யாதிகளுக்கீடாக மங்களாசாஸநம்பண்ணியடிமைசெய்வேனும்படி, நீ - நீ, கொண்டருளி - உன் திருவுள்ளத்தாலே அங்கீகரித்து, நினைப்பதுதான் - இது முழுக்க நிர்வஹிப்பதாக நினைத்தருளுவதுதான், என்று - என்றாயிருக்கிறது.

கொண்டருள நினைப்பதென்றுஞ் சொல்லுவர். என்றேலென்றதில், ஏல் - அசை. (அ)

ஆறு;—(என்றேலென்னை) அவன் ஸர்வஜ்ஞனல்லனோ, அறிந்தருளாமையுண்டோ நினையாமையல்லதென்று பார்த்து;

என்னையுன்னேரார்கோலத் திருந்தடிக்கீழ் நின்றேயாட்செய்யும்படி நீ விஷயீகரித்தருள நினைப்பது தானென்றென்றபேக்ஷித்து, பின்னையும்பேக்ஷிதம் செய்தருளா தொழிந்தவாறே, நாமொருபாயாநுஷ்டானம் பண்ணுமையாலாகாதே அபேக்ஷிதஞ் செய்தருளா தொழிகிறதென்று பார்த்து, உன்னுடைய க்ருபையாலே நிர்ஹேதுகமாக ஸர்வலோகத்தையு மளந்தருளினாப்போலே, அடியேனுடைய வபேக்ஷிதம் செய்தருளாயென்கிறார். (அ)

ஈடு; அவ;— எட்டாம்பாட்டு. பிறரைவிடீர், உன்திருவடிக்கீழே பரிகைக்கு நிலையாளாக வென்னைக் கொள்வதென்றென்று அவன் றன்னைக்கேட்கிறார்.

(என்றே) உம்முடைய கார்யம் செய்கிறோமிறே யென்ன; அது தானென்றென்கிறார். (என்னை) உனக்குப் பரிந்தன்றி உளேனாகாதிருக்கிறவென்னை. (உன்னித்யாதி) உன் அழகு மிக்க வொப்பனை திருந்தின திருவடிகளின் கீழே; மங்களாசாஸநம் பண்ணியல்லது நிற்கவொண்ணாத திருவடிகளென்கை. (நின்றேயாட்செய்ய) (க)

(க) யஜு-ஸம-கா-க-ப்ர அ-ப-அ.

ஜெஹிஜெஷஜாஜிகெ-தேஹிமேததாமிதே" என்று ப்ரயோஜநத்தைக் கொண்டுபோகையன்றிக்கே, விடாதே யடிமைசெய்ய (நீ கொண்டருள) நான் இடந்தானை கண்டேறுகையன்றிக்கே, அடிமை செய்வானென்று திருவுள்ளத்தே கொண்டருள. (நினைப்பதுதான்) (நின்றேயாட்செய்ய - நினைப்பதுதான்) அவன் நினைவுக்கே பலவ்யாப்தியுள்ளது. தம்மபிநிவேசம் அப்ரயோஜகமென்றிருக்கிறார்.

(குன்றேழித்யாதி) "வண்பரிசாரத்திருந்த" என்று - எழுந்தருளியிருக்கிற விருப்புத்தனக்குப் பரியவேண்டியிருக்க, அதிமாநுஷமான செயலைச்செய்தால் மங்களாசாஸநம்பண்ணியே நிற்கவேண்டாவோ. ஸப்தகுல பர்வதமென்ன, ஸப்தத்வீபமென்ன, அவற்றைச்சூழ்ந்த ஸப்தஸமுத்ரமென்ன, இப்படி யேழுவகைப்பட்ட பூமியை யடைய நின்றநிலையிலே நின்றளந்து கொண்டருளும்படி நீண்ட திருவடிகளை யுடையையாய், கையுந் திருவாழியுமான ஸ்ரியஃபதியே. ஸங்கசக்ராதி திவ்யாயுதங்களையுடைய ஸ்ரியஃபதியாய் வைத்து, காடுமேடையுமான பூமியையடைய நின்ற நிலையிலே ஸுகுமாரமான திருவடிகளைக்கொண்டளந்த ஸ்ரமஹ்தீர ஸிஸிரோபசாரம் பண்ணப்பெறும் நாளொன்றென்கை. அரியனசெய்யவல்ல நீ, நானுன்திருவடிகளைக்கிட்டி நின்றடிமை செய்யும்படி நினைத்தருளவேணுமென்றுமாம். (அ)

ஒன்பதாம்பாட்டு.

திருமால்! நான்முகன் செஞ்சடையனென்றிவர்கள் * எம்
பெருமான்தன்மையை யாரறிகிற்பார்? பேசியேன்? *
ஒருமாமுதல்வா! ஊழிப்பிரான்! என்னையாளுடை *
கருமாமேனியன்என்பன் என்காதல்கலக்கவே. (கூ)

ப.—அநந்தரம், அதிஸயிதஜ்ஞாநரான ப்ரஹ்மாதிகளும் உன் ஸௌகுமார்ய மறியாமையாலே, என்ப்ரேமம்கலக்க நான் பரிவனுய்க் கூப்பிடாநின்றேனென்கிறார்.

(இ-ள்.) திரு - பெரியபிராட்டியார்க்கு, மால்-வல்லபனுன வைலக்ஷண்யத்தையுடையவனே, நான்முகன் - ஸ்ருஷ்டியில் பஹுமுக வ்யாபாரனுன ப்ரஹ்மாவும், செஞ்சடையான் - தப:பரனுன ருத்ரனும், என்று-என்றுப்ரஸித்

தரான, இவர்கள் - இவர்கள், எம்பெருமான் - எனக்குஸ்வாமியாய் ஸர்வாதிக ஞன வுன்னுடைய, தன்மையை - ஸௌந்தர்ய ஸௌகுமார்யாதியான ஸ்வாபாவிக வைலக்ஷண்யத்தை, அறிகிற்பார் - அறியவல்லார், ஆர் - ஆர்தான், என் - என்னுடைய, காதல் - ப்ரேமமானது, கலக்க - நெஞ்சைக்கலக்க, ஒரு - அத்விதீயமான, மாமுதல்வா - பரமகாரணபூதனே, ஸ்ருஷ்டமான வாத்மாக்களுக்கு, ஊழி - காலாநுரூபமாக, பிரான் - உபகாரகனனவனே, என்னை - என்னை, ஆளுடை - அடிமைகொண்ட, கரு - ஶ்யாமளமான, மாமேனியன் - விலக்ஷண விக்ரஹயுக்தனே, என்பன் - என்று சொல்லாநிற்பன்; உன் ஸௌகுமார்யத்தைப் பாராதே, † "மாதுர்யமே!" என்று பிராட்டியஞ்சும்படி ஜகதுத்பாதநத்தைப் பண்ணுவது, உத்பந்நரான சேதநர்க்கு ஆபத்துத்தோற்றுங்காலந்தோறும் உபகாரகனாய் வ்யாபரிப்பது, என்போல்வாரை யங்கீகரிக்கைக்காக அழகியவடிவைக்கொண்டு வருவதாகப் புக்கவாறே உன்னுடைய ஸௌகுமார்யத்துக் கஞ்சாநின்றேன்; அவாங்மநஸகோசரமான விந்த ஸௌகுமார்யத்துக்கு, பேசியென் - என்னபாசுரமிட்டுச் சொல்லுவது. (ரு)

ஆறு ;—(திருமால்) ஆகிலுமென்னை யுள்ளபடி யறிந்தேத்தினாலல்லது உம்முடைய வபேக்ஷிதம் செய்யக்கடவதென்னென்னில்; திருமால் எம்பெருமானயிருந்த வுன்னுடைய ஸ்வரூபரூபகுண விபூதிகளை ஸர்வஜ்ஞரான ப்ரஹ்மாதிகள் தாமறியவல்லரோ; இவ்வர்த்தமுபபாத்யமோ; ஆனபின்பு, அதிக்ஷுத்ரனான நானறிந்தேத்துகையாவதென்னென்ன; அங்ஙனேயாகில், அத்விதீய பரமகாரணபூதனே, (க) "காலசக்ரம் ஜகச்சக்ரம் யுகசக்ரஞ்ச கேஶவ:। ஆத்மயோகேந பகவாந் பரிவர்த்தயதே நிஶம்" என்று சொன்னபோலே, ஸங்கல்பமாத்ரத்தாலே க்ருதத்ரேதாதி ஸகல யுகப்ரவர்த்தகனே, ப்ராக்ருத க்ஷுத்ரவிஷய ப்ரவணனான வென்னையுங்கூடத் தோற்பித்தடிமையாக்கவல்ல * நிரவதிக ஸௌந்தர்ய ஸௌகுமார்யலாவண்ய யௌவநாத்யநந்த குணநிதியாய், * நீலமேக ஸத்ருஶமான திவ்யரூபத்தையுடையவனேயென்று சொல்லுவானென்னென்னில்; காதலாலே கலக்குண்டு சொன்னேன், நானறிந்து சொன்னே னல்லேனென்கிறார். (சு)

(க)   † (பா) வுர்தூாயமே.

ஈடு ; அவ ;—ஒன்பதாம்பாட்டு. நமக்குப்பரிய ப்ரஹ்மாதிகளுண்டாயிருக்க, நீரிங்ஙனஞ்சுகிற தென்னென்ன ; அவர்கள் உன் ஸௌகுமார்ய மறிவர்களோ வென்கிறார்.

(திருமால்) திருமாலென்று நிஷ்கர்ஷித்து ஸம்போதிக்கிறார். நீயும் பிராட்டியுமான சேர்த்திக்கு மங்களாசாஸநம்பண்ணுவர்களோ அவர்கள். (நான்முகன்) ஸ்ருஷ்டிக்குறுப்பான பலமுகங்களையுடையனாய், அதிலே அந்யபரனானவன். (செஞ்சடையான்) ஸாதகவேஷந்தோற்ற நிற்கிற ருத்ரன், தன்னபிமதலாபத்திலே அந்யபரன். (எம்பெருமான்றன்மையை) ஸர்வேஶ்வரனான வுன்னுடைய ஸௌகுமார்யத்தை. (ஆரறிகிற்பார்) சிலராலே யறியலாயிருந்ததோ, அந்யபரராயிருக்கிறவர்கள் உன் ஸௌகுமார்யத்தை யறியவல்லர்களோ. அநந்யபரரானாற்றான் தேவருடைய ஸௌகுமார்யந்தான் சிலராலறியலாமோ. (பேசியென்) இதுசொல்லி யென்னப்ரயோஜநமுண்டு. அவர்களைப் பரிவராக்கவோ, உன் ஸௌகுமார்யத்தைப் பரிச்சிந்நமாக்கவோ.

அவர்கள் நம்மை யறியமாட்டார்களாகில் அறிந்தநீர் பேசிக்காணீரென்ன ; என்னாற்றான் செய்பலா யிருந்ததோவென்கிறார். (ஒருமாமுதல்வா) விலக்ஷணமான பரமகாரணமானவனே. (ஊழிப்பிரான்) காலோபலக்ஷித ! ஸகலபதார்த்தங்களுக்கும் ஸ்வாமியானவனே. (என்னையித்யாதி) புறம்பே அந்யபரனான வென்னை அநந்யபரனும்படிபண்ணின வடிவையுடையவனே. (என்பன்) இவ்வளவிறே யென்னளவும். ஸர்வநிர்வாஹகனாய் வடிவழகிலே யென்னைச் சேர்த்துக்கொண்ட விதிறே யென்னைக் கலங்கப்பண்ணிற்று.

(என்காதல்கலக்கவே) என்னுடைய ப்ரேமமானது நானஞ்சும்படி கலங்கப்பண்ண, உன்வடிவழகிலும் மேன்மையிலும் கலங்கிச்சொன்ன வத்தனைபோக்கி, உன் ஸௌகுமார்யத்தை யெல்லை கண்டு சொன்னேனல்லேன். ப்ரேமாந்தனாய்க்கொண்டு சொன்னேனத்தனைபோக்கி, நெஞ்சொழிந்து சொன்னேனல்லேன் ; ப்ரயோஜநாந்தர பரரான ப்ரஹ்மாதிகள் பரிவு முனக்கு ஸத்ருஶமன்று, ப்ரேமாந்தனான வென்பரிவு முனக்கு ஸத்ருஶமன்றென்றதாயிற்று.

பத்தாம்பாட்டு.

கலக்கமில்லாநல்தவமுனிவர் கரைகண்டோர் *
துளக்கமில்லாவானவர் எல்லாம்தொழுவார்கள் *
மலக்கமெய்த மாகடல்தன்னைக்கடைந்தானை *
உலக்கநாம்புகழ்கிறபது என்செய்வது? உரையீரே. (௧௦)

ப.—அநந்தரம், முமுக்ஷுக்களோடு முக்தர்களோடு நித்யஸூரிகளோடு வாசியற நமக்குப் பரிவராயிருக்க, நாம் ஶக்திமான்களாயிருக்க நீரஞ்சவேண்டா வென்ன; ஆஶ்ரித ஜநஸாமக்ர்யத்தையும் அதிஶயித ஶக்தியோகத்தையு மநுஸந்தித்து ஸமாஹிதராகிறார்.

(இ-ள்.) ப்ரஹ்மபாவநாநிஷ்டராகையாலே, கலக்கம் - ஸாம்ஸாரிக ஸ்வபாவங்களாகிற கலக்கம், இல்லா - அற்ற, நற்றவம் - ஜ்ஞாநரூப தபஸ்ஸையுடைய, முனிவர் - ஸநகாதிமுனிகள், கரைகண்டோர் - (௧) "ஸோऽத்வந: பாரமாப்நோதி" என்கிறபடியே ஸம்ஸாரத்வாவைக் கரைகண்டமுக்தர், அஸ்ப்ருஷ்ட ஸம்ஸாரகந்தராகையாலே, ஒருகாலும், துளக்கம் - சலநம், இல்லா - அற்ற, வானவர் - நித்யஸூரிகள், எல்லாம் - எல்லாரும், தொழுவார்கள் - பரிவராய்க்கொண்டு தொழுது மங்களாஶாஸநம் பண்ணுமவர்கள், மா - அபரிச்சிந்நமான, கடல்தன்னை-ஸமுத்ரத்தை மலக்கமெய்த - கலங்கும்படி, கடைந்தானை - கடைந்த ஸர்வஶக்தியுக்தனை, நாம், உலக்க - முடியக்கண்டு, புகழ்கிறபது - புகழுவல்லோமாகையாகிறவிது, என்செய்வது - என்செய்ததாயிற்று, உரையீர் - சொல்லிகோளென்று, லௌகிகரைப்பார்த்துச் சொன்னாயிற்று. (௧௦)

ஆறு ;—(கலக்கமில்லா) அவனை யறிந்தேத்தினீராலோ வென்னில் ;

அஸ்கலிதஜ்ஞாநராய், நிரதிஶய பக்தியுக்தராய், பகவதநுபவைக போகரான * அயர்வறுமமரர்கள், அவனுடைய கல்யாணகுண மஹோததியினுடைய விக்கரைகண்டார், பகவத் பரிசர்யைக போகரான நித்ய ஸித்தபுருஷர்கள், அவன் திருவடிகளில் ஸ்துத்யாதி பரிசர்யை பண்ணுவார், அக்ஷோப்ய மஹோததியை க்ஷுபிதமாம்படி கடைந்தருளினவன் பரிசர்யை பண்ணப்படுகிறவன், இப்படி இருக்கிற வவனை நாமுள்ளபடி யறிந்து புகழுகையாவதென். ஆகில்

(௧) கடவல்லி-௩-௯-

நீர் புகழ்வானென்னென்னில்; என்காதலென்னைக் கலக்காநின்றால் நான் செய்வதென்; ஆனபின்பு, உன்க்ருபையாலே அடிமைகொண்டருளவேணுமென்கிறார். (௧௦)

ஈடு; அவ;—பத்தாம்பாட்டு. இவர் பயத்தைப்பரிஹரிக்கைக்காக நமக்குஸநகாதிகள் முக்தர்நித்யஸூரிகள் இவர்கள் கிட்டிநின்று பரிமாறுகிறார்கள்; நாந்தாம் அரியசெயல்களும் செய்யவல்லோமிலரானபின்பு. நீர் நமக்கஞ்சவேண்டா காணுமென்ன; முன்பு பயஹேதுக்களானவைதானே பயநிவ்ருத்திக்குடலாய், அத்தை யநுஸந்தித் தினியராகிறார். இவர்தமக்கின்னபோது இன்னது பயஹேதுவாம், இன்னபோதின்னது பரிஹாரமாமென்று தெரியாதிறே.

(கலக்கமில்லாநற்றவமுனிவர்) தங்கள் ஜ்ஞாநத்துக்கு விஷயங்களால்வரும் கலக்கமின்றிக்கே, மஹாதபஸ்ஸுக்களை யுடையராய் மநநஶீலரான ஸநகாதிகள். (கரைகண்டோர்) முக்தர் (துளக்கமில்லாவானவர்) துளக்கம்-நடுக்கம். ஸம்ஸாரஸ்பர்ஶமில்லாத நித்யஸூரிகள். துளக்கம் - சலநம். அதாவது - ஸங்கோசம். (எல்லாந்தொழுவார்கள்) முமுக்ஷுக்களும் முக்தரும் நித்யஸித்தருமான இவர்களடிமை செய்கிறவர்கள். அடிமையாவது-ஸ்வாமிக்கதிஶயத்தைப் பண்ணுதாகையாலே, மங்களாஶாஸநமிறே. (மலக்கமித்யாதி) மஹத்தத்த்வமான கடலை க்ஷுபிதமாம்படி கடைந்த பெருமிடுக்கன். பரிகிறவர்கள் தாங்களும் குழைச்சரக்காம்படி பெருமிடுக்கனென்கை.

(உலக்கவித்யாதி) அவன்படியை நேராகவறியாத நாம் பரிவிலேயிழிந்து முடியப்பேசப்புக்கது, என்செய்தோமானோம், சொல்லிக்கோள். முன்பு தன்மிடுக்கைக்காட்டின விடங்களில் அத்தை ப்ரதிபத்திபண்ணாதே அதுதன்னையேசொல்ல, இப்போது ஸமாஹிதமாயற்றது, இப்ப்ரபந்தம் தலைக்கட்டக் கடவதாகையாலேயாதல், ஈஶ்வரனுடைய ஜீவநாத்ருஷ்டத்தாலே யாதலிறே. (௧௦)

பதினோராம்பாட்டு

உரையாவெந்நோய்தவிர அருள்நீள்முடியானை *
வரையார்மாட மன்னுகுருகூர்ச்சடகோபன் *
உரையேய்சொல்தொடை ஓராயிரத்துள் இப்பத்தும் *
நிரையேவல்லார் நீடுலகத்துப்பிறவாரே. (௧௧)

ப.— அநந்தரம், இத்திருவாய்மொழியை யப்யஸித்தார்க்கு பலமாக ஸம்ஸாரநிவ்ருத்தியை யருளிச்செய்கிறார்.

(இ-ள்.) உரையா - வாசாமகோசரமாம்படி, "ஸௌகுமார்யாதிகளுக் கென்னவருகிறதோ" என்று அதிஶங்கையைப்பிறப்பித்து, வெம் - பரிதாபஹேதுவான, நோய் - கலக்கமாகிறநோயானது, தவிர - தீரும்படியாக, அருள் - தன்னுடைய விபூதிபூர்த்தியையும் ஶக்திபூர்த்தியையுங்காட்டின, நீண்முடியானை - ஸர்வாதிகஶேஷியானவனை, வரை - வரை, ஆர் - செறிந்தாப்போலேயிருக்கிற, மாடம் - மாடங்கள், மன்னு - ஸ்த்திரமாம்படியாயிருக்கிற, குருகூர் - திருநகரிக்கு நிர்வாஹகரான, சடகோபன் - ஆழ்வாருடைய, உரை - உக்திப்ரகாரமாய், ஏய் - செறிந்த, சொல்தொடை - சொற்றொடையை யுடைத்தாய், ஓர் - அத்விதீயமான, ஆயிரத்துள் - ஆயிரத்துள், இப்பத்தும் - இப்பத்தையும், நிரையே - அடைவுபட, வல்லார் - சொல்லவல்லவர்கள், நீடு - விஸ்தீர்ணமாய், உலகத்து - பகவத்விஷயத்துக்குப் பரிவரில்லாத விஸ்ஸம்ஸாரத்திலே, பிறவார் - பிறவார்.

இது - கலித்துறை. (கக)

ஆறு ;—(உரையா) துர்வசமாய் காலாக்நி ஸத்ருஶமாயிருந்த விரஹ (வ) கர்மத்தாலுள்ள ஸந்தாபம் தவிரும்படி நிரதிஶயவிஷயீகாரஸூசகமான காருண்யமய ப்ரகம்பநத்தாலே தம்மைவிஷயீகரித்த வெம்பெருமானைச் சொன்ன வித்திருவாய்மொழியை வல்லார், * ஸம்ஸாரமருகாந்தாரத்தில் பிறவாரென்கிறார். (கக)

ஈடு; நிகமத்தில் - இத்திருவாய்மொழி யப்யஸிப்பார், அவன் தனிமைகண்டு பயப்படும் ஸம்ஸாரத்தில் பிறவாரென்கிறார்.

(உரையாவெந்நோய்) வாசாமகோசரமாய், அதிக்ரூரமானநோய். தம்மளவில் ஸாத்மிக்கையன்றிக்கே, "உபயவிபூதிநாதனுக்கென் வருகிறதோ" என்றஞ்சினநோயிறே. (தவிரவருள்நீண்முடியானை) இதுபோம்படிக்கீடாகவருளும் ஸ்வபாவனான உபயவிபூதிநாதனை. "இவர்பயம்போம்படி 'உம்முடையவபேக்ஷிதம் செய்கிறோம்' என்று ப்ரகம்பநம் பண்ணினான்போலேகாண்" என்றம்மங்கியம்மாள். இவ்வாழ்வாருடைய பயம்நிவ்ருத்தமானபின்பாயிற்று உபயவிபூதிக்கும் ரக்ஷகனைச் சூடினமுடியும் நிலைநின்றதாயிற்று.

(வரையாரித்யாதி) இவர்பயம் நிவ்ருத்தமானவாறே ஸம்ருத்தமுமாய் ஸ்திரமுமாயிற்றுத் திருநகரியும். (உரையேயித்யாதி) உக்தியால் சேர்ந்தசொற்றொடையையுடைத்தாய் விலக்ஷணமான வாயிரம். (இப்பத்தும் நிரையேவல்லார்) இப்பத்தை அடைவுதப்பாம லப்யஸிக்கவல்லார். தமக்குப்பிறந்த கலக்கத்தாலே, இதிலிழிவார்க்கும் அடைவுபட அநுஸந்திக்கவொண்ணாதென்றிருக்கிறார். (நீடுலகத்துப்பிறவாரே) இப்பூமிப்பரப்பையடைய அநுஸந்தித்தால் பரப்பேயாய், ஸர்வேஶ்வரன் தனிமைக்குப் பரியவொருவரைக் கிடையாத வித்தேசத்திலேபிறவார்கள்; ஒருநாடாக மங்களாஶாஸநம்பண்ணுகிறதேசத்திலேபோய் நித்யாநுபவம் பண்ணப்பெறுவர்.

மூன்றும் திருவாய்மொழி முற்றிற்று.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

எட்டாம்பத்து.

நான்காம் திருவாய்மொழி.

வார்கடா - ப்ரவேஶங்கள்.

ஆறு ;—(வார்கடாவருவி) இப்படி விரஹக (வ்ய)ஸநாபிதப்தரான ஆழ்வாருடைய விடாயைப்போக்கி யருளுகைக்காக, முன்னமே திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாற்றங்கரையிலே, ஒருதாமரைத் தடாகம் நின்றாற்போலேதான் நின்றருளினபடியைக்காட்டக்கண்டு, ப்ரீதியாலே, ஸஜல மநோநயநஹாரி திவ்யசேஷ்டித ஸௌலப்ய ஸௌந்தர்யாதி கல்யாணகுணகண ஸர்வேஶ்வரத்வங்களைப்பேசி, அந்தத்தாமரைத்தடாக மிருந்தவிடத்தேறச் செல்லவேணுமென்கிறார். *

ப:—நாலாந்திருவாய்மொழியில், கீழ் அவனுடைய ஸௌகுமார்யத்தாலே தனிமைக்கஞ்சின இவருடையபயந்தீரும்படி பரிவரையும் ஶக்தியையுங்காட்டி யாஶ்வஸிப்பித்த ஸர்வேஶ்வரன், "இவரிப்படி யஞ்சிற்று விரோதிபூயிஷ்டதேஶமென்றாயிருக்கும், நம்முடைய விரோதிநிவர்த்தகத்வத்தையும் ஜகத்ஸ்ருஷ்ட்யாதி ஶக்தியையுங்காட்டுவோம்" என்று இவர்திருவுள்ளத்திலே ப்ரகாஶிப்பிக்க; அவனுடைய அகிலவிரோதி நிவர்த்தகத்வத்தையும், அஶேஷ ஜகத்விஷயமான ஸ்ருஷ்ட்யாதிவ்யாபாரத்தையும், ஆஶ்ரிதாபத்ஸகத்வத்தையும், ஆஶ்ரிதார்த்தமான வதிஶயித வ்யாபாரத்தையும், ஆஶ்ரயணீயஸ்தலாந்தர விலக்ஷணமான தேஶவிஶேஷஸ்திதியையும், ஆஶ்ரயணீயதா வைலக்ஷண்யத்துக் கடியான ஸர்வப்ரகாரோபகாரகத்வத்தையும், அநபாயமான வாபிரூப்யாதிஶயத்தையும், ஜகஜ்ஜந்மாதிஹேதுத்வத்தையும், ஸ்ரஷ்ட்ரு ஸ்ருஜ்யாதி விபாகமில்லாத ஸர்வாத்மபாவத்தையும், ஸத்தாவிபூதிஹேதுவான நிருபாதிக ஶேஷித்வத்தையுமநுஸந்தித்து, ஏவம்பூதனான ஸர்வேஶ்வரன், பரிவரான வைதிகாக்ரேஸருடைய ஸம்பத்தைத் தனக்குஸம்பத்தாம்படி திருச்செங்குன்றூரிலே யெழுந்தருளிநின்ற வதிஶயத்தை யநுஸந்தித்து ஸந்துஷ்டராகிறார்.

ஈடு;—"ஸர்வேஶ்வரன் ஸம்ஸாரிகளுடைய வபேக்ஷையே யாலம்பநமாக ஸம்ஸாரத்திலே வந்தவதரித்துத் தனியே யுலாவாநிற்கும்; ஸம்ஸாரிகளும் தந்தாமபேக்ஷிதங்களைப்பற்றக்கிட்டுமதொழியவிவன்

வாசியறிந்து பரியக்கடவாரில்லை, என்புகுகிறதோ" என்றஞ்சின விவர்க்கு, அந்தவச்சந்தீரும்படி "நமக்குப்பரிவருண்டு, ஒருத்தர் பரியவேண்டாதபடியான மிடுக்கும் நமக்குண்டு" என்று தன்படிக்களைக்காட்டி ஸமாதானம்பண்ண ஸமாஹிதராய்நின்றார் - கீழ்;

இதில்-இவராகிறார் ப்ரேமஸ்வபாவராயிருப்பர், * காதல்மையலேறிக்கலங்கி, "முக்தரும் நித்யருமிங்கில்லையே, ஸநகாதி முமுக்ஷுக்கள் நல்லதபஸ்ஸும் மநநத்யாநமும் விடமாட்டார்கள், கடல்கடைந்தது தேவயோநியிலேயன்றோ" என்று கலங்குவர். இன்னம் இவர்க்கிது மறுவலிடக்கூடுமென்றுபார்த்து, மறுவலிடாதபடி தன் ஸௌர்யவீர்யாதி குணங்களையும், ஸ்ருஷ்ட்யாத்யத்புதகர்மங்களையும் எதிரிட்டவிரோதி வர்க்கத்தை வேரோடேவாங்கிப் பொகடவல்லஸக்தியையும் காட்டிக்கொடுத்து, அதுக்குமேலே, "அதிஸயித ஜ்ஞாநஸக்திகராய்த்தனக்குப்பரிவாராயிருப்பார் மூவாயிரம் ப்ராஹ்மணருண்டு" என்று காட்டிக்கொடுக்கக்கண்டு க்ருதார்த்தராய், அவன்வடிவழகிலேயும் நெஞ்சுசென்றநுபவித் தினியராகிறார்.

ஸ்ரீவிபீஷணாழ்வான் (க) "ராவணம் ஸரணம் கத꞉ - ராகவம் ஸரணங்கத꞉" என்று வந்து விழுந்தபோது, மஹாராஜர் பெருமாள் பக்கல் ப்ரேமத்தாலேகலங்கி, தூணுக்கென்று, "இவன் சொன்னவார்த்தை பெருமாள் திருச்செவியிலே படுமாகில் சாலத்தப்பாம்" என்று, "நாயன்றே, ராவணப்ராதா - ராக்ஷஸஜாதி, அவன் புகுரக்கடவனல்லன்" என்ன, "இவர்நம்பக்கல் பரிவாலேசொல்லுகிற வார்த்தை, நம்மிடுக்கைக்காட்டவே தெளிவர்" என்று பார்த்து, (உ) "பிஸாசாந் தாநவாந் - பிஸாசாந் தாநவாந்" இத்யாதியாலே தம்முடைய மிடுக்கைக் காட்டக்கண்டு அவரச்சந்தீர்ந்து, (ங) "கிமத்ர சித்ரம்-கிமத்ரசித்ரம்" என்றினியராணப்போலவும், மல்லயுத்தத்தில்(ச) "நஸமம் யுத்தமித்யாஹு꞉-நஸமம் யுத்தமித்யாஹு꞉" என்கிற பார்ஸ்வஸ்த்தருடைய பயத்தை, அவர்கள் ஸந்நிதியிலே க்ருஷ்ணன் மல்லரை யழியச்செய்து தீர்த்தருளிணப்போலவும், தம்முடைய பயத்தைப் போக்கியருள, அத்தாலே க்ருதார்த்தராய், "இனி நமக்குதாரகபோஷக போக்யங்கள் இவனல்லதில்லை" என்று

(க) ரா-யு-கஎ-கக- (உ) ரா-யு-கஅ உங.
(ங) ரா-யு-கஅ-ஙக- (ச) வி-பு-ஞ-

ப்ரீதராய், முன்பு அழகைக்கண்டு பரிவாலே பீதரானவர், அழகிலே நெஞ்சுசென்றநுபவித்து க்ருதார்த்தராய்த் தலைக்கட்டுகிறார். *

முதற்பாட்டு.

வார்கடாவருவியானை மாமலையின் மருப்பிணைக்கு வடிறுத்துருட்டி * ஊர்கோள்திண்பாகனுயிர்செகுத்து அரங்கின்மல்லரைக் கொன்று சூழ்பரண்மேல்* போர்கடாவரசர்புறக்கிட மாடமீமிசைக் கஞ்சனைத்தகர்த்த* சீர்கோள்சிற்றாயன்தி ருச்செங்குன்றூரில் திருச்சிற்றாறு எங்கள்செல்சார்வே. (௧)

ப:—முதற்பாட்டில், குவலயாபீடம் முதலான அகில விரோதிநிரஸக னான சீர்கொள் சிற்றாயன் வர்த்திக்கிற திருச்செங்குன்றூர் நமக்கு நிர்ப்பய மான வாஶ்ரயணீயஸ்தலமென்கிறார்.

வார் - பாய்கிற, கடா - மதமாகிற, அருவி - அருவியையுடைய, ஆனை- ஆனையாகிற, மா - பெரிய, மலையின் - மலையினுடைய, மருப்பு - கொம்புகளாகிற, இணை - சேர்ந்த, குவடு - சிகரங்களை, இறுத்து - முறித்து, உருட்டி - அநாயாஸேந ஆனையையுருட்டி, ஊர்கொள் - ஆனை கொம்புமுறிந் திருக்கவும் நடத்திக்கொடுவரவல்ல சிக்ஷையில், திண் - திண்மையையுடையனான, பாகன் பாகனுடைய, உயிர்-ப்ராணனை, செகுத்து - அழித்து, அரங்கத்திலே, அரங்கில் - ரங்கமத்யகதரான, மல்லரை-சாணூரமுஷ்டிகராகிறமல்லரை, கொன்று- கொன்று, சூழ் - ரங்கம்சூழ்ந்த, பரண்மேல் - மச்சுக்களிலே நிற்பாராய், போர்- போரை, கடா - நடத்தக்கடவ, அரசர்- ராஜாக்கள், புறக்கிட-புறகிட்டுப்போம் படியாக, மாடமீமிசை - உத்துங்கமான மாடத்தில் மேல்நிலத்திலே யிருக்கிற, கஞ்சனை-கம்ஸனை, தகர்த்த - பசலைக்குடமுடைத்தாப்போலே தள்ளிக்குதித் துடைத்துப் பொகட்ட, சீர் - வீரஸ்ரீயை, கொள் - உடையவனாய். சிறு - பாலனான, ஆயன் -க்ருஷ்ணனெழுந்தருளி நிற்கிற, திருச்செங்குன்றூரில் - திருச் செங்குன்றூரிலே, திருச்சிற்றாறு - திருச்சிற்றாறனது, எங்கள்-எங்களுக்கு, செல்-சென்று கிட்டுகைக்கு, சார்வு - ஆஶ்ரயணீயஸ்தலம். (௧)

ஆறு ;—நிஷ்யந்தமாக மதஜலமாகிற ஸரித்தையுடைத்தான குவலயாபீடமாகிற மஹாசலத்தினுடைய தந்தங்களாகிற சிகரங் களை முறித்துருட்டி, ஊர்கொள் திண்பாகனுயிர் செகுத்து, கஜ தந்தவராயுததரராய், நம்பி மூத்தபிரானும்தானும், கர்வலீலாவ

லோகிதங்களையுடைய விரண்டெலிம்ஹங்கள் ஸூத்ரம்ருகங்கள் நடுவே புக்காப்போலே, ரங்கமத்யத்திலே போய்ப்புக்கு மல்லரைக் கொன்று, மஞ்சோபரிஸ்த்திதராய், இதம்பூர்வம் யுத்தத்தில் பராஜிதரான ராஜாக்கள் த்ரஸ்தராய்க் கெடும்படி யெழப்பாய்ந்து, மஞ்சோர்ந்தஸ்திதஸ்த்தனை கம்ஸனை, * வெண்ணெய்விழுங்கி வெறுங்கலத்தை வெற்பிடையிட்டத னோசைகேட்டு விளையாடினாப் போலே தகர்த்த சீர்கொள் சிற்றாயன் திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாறு எங்களுக்கு ப்ராப்யமென்கிறார். (க)

ஈடு ; அவ :—முதற்பாட்டு. குவலயாபீடம் முதலான ப்ரதிகூலரை நிரஸித்த சீர்கொள் சிற்றாயனுடைய திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாறெங்களுக்கு நிர்ப்பயமான புகலென்கிறார்.

(வார்கடாவருவியானைமாமலையின்) வாராநின்றுள்ள மதஜலமான வருவியையுடைய வானையாகிறமா மலையினுடைய. கடா-மதம். மதகரமான த்ரவ்யங்களைத் தீற்றிப் பிச்சேற்றி, புகுகிற வாசலிலே நிறுத்தினான், ப்ரமாதத்தாலே வந்ததென்று மாதுலனாய்க் கண்ணநீர்விழவிட்டுத் தானிருப்பானாக. (க) "புகுவாய்நின்றபோதகம் வீழப்பொருதான்" என்னக்கடவதிறே. (மருப்பிணைக்குவடிறுத்து) மருப்பாகிற விணைக்குவடுகளையிறுத்து, கொம்பாகிற சிகரங்களை அநாயாஸேந முறித்து. அம்மலையிலே யிரண்டுசிகரங்களை யொடித்தாப்போலே. (உருட்டி) கொம்புகளைப் பறித்தவாறே யுளுக்காந்து, திருவடிகளாலே அநாயாஸேந தள்ளி.

(ஊர்கொள்திண்பாகன்) உயிருள்ள பதார்த்தத்தை நடத்துமாபோலே நடத்தவல்லனாயிற்று சிக்ஷாபலத்தாலே. திண்ணியனாய் ஆனையை நடத்துகிற பாகன். (உயிர்செகுத்து) அத்தைத் தள்ளினாலும் இவனுயிர்போகாதவன்று அத்தை முடித்ததாகாதுகாணாத, (அரங்கின்மல்லரைக்கொன்று) ஆனையின் கொம்புக ளிரண்டையுமிருவருங்கொண்டு ரங்கமத்யத்திலே புக்கவளவிலே, அச்செருக்குப் பொறாமையாலே, யுத்தோந்முகராய் வந்த சாணூரமுஷ்டிகர்களைக்கொன்று. ஆனை திர்யக்காகையாலே விரகறியாதேபட்டது. அது போயிற்றாகிலும் மல்லருண்டென்று கம்ஸன் நினைத்திருந்தவர்களை யழியச்செய்தபடி. (உ) " நவஸம்யுக்தத்ருஹா:- ஸம்

(க) தி-மொ-க-ரு-க (உ) ரா-யு-கறுரு-க

மம்யுத்தமித்யாஹு:" என்று பெண்கள் முதலான பார்ஶ்வஸ்த்தரடங்கக் கூப்பிட்டு ப்ரதாந ஸமயத்திலே, அவர்கள் பயமெல்லாம் போம்படி அநாயாஸேந மல்லரைக்கொன்று. (சூழ்பரண்மேல்) சுற்றுமுண்டான மஞ்சத்தின்மேலே நின்று.

(போர்கடாவரசர்புறக்கிட) சதுபடையை வெற்றியுண்டாம்படி கடாவிப்போருமரசர் (௧) "ஜலநாநபவிஶாரத:-ஸேநாநய விஶாரத:" என்கிறபடியே தாசித்தலையிலே வெற்றியோடல்லது மீளாதபடி படைபொருத்தி யுத்தத்தை நடத்தவல்ல ராஜாக்கள் முதுகுகாட்டி யோடும்படியாக. (மாடமீமிசை) (௨) "தங்ஜாத்வேவ ஹ்ருஷித:- துங்கமஞ்ச வ்யவஸ்த்தித:" என்கிறபடியே, உயர்ந்த மாடத்திலே யிருக்கிற. தனக்கு பயமெவ்வளவுண்டு. அவ்வளவுமுயர்த்தினையிற்று மாடத்தை (கஞ்சனைத்தகர்த்த) அவனிருக்கிறவிடத்தளவு மெழப்பாய்ந்து, (௩) "கஞ்சன்குஞ்சிபிடித் தடித்தபிரான்" என்கிறபடியே-மயிரைப்பிடித்துக் கீழேவிழவிட்டு மேலே பாய்ந்து பசளைக்கலம்போலே யுடைத்தான்; (௪) "அவஜ்ஞயாஹதம் த்ருஷ்ட்வா க்ருஷ்ணேந மதுரேஶ்வரம் - அவஜ்ஞயாஹதம் த்ருஷ்ட்வா க்ருஷ்ணேநமதுரேஶ்வரம்" என்கிறபடியே (௫) "கேஶேஷ்வாக்ருஷ்ய விகளத்கிரீடமவநீதலே ஸகம்ஸம்பாதயாமாஸ தஸ்யோபரிபபாதச - கேஶேஷ்வாக்ருஷ்ய விகளத்கிரீடமவநீதலே। ஸகம்ஸம்பாதயாமாஸ தஸ்யோபரிபபாதச" "ராஜத்ரோஹிகளைக் கொல்லும்போது ராஜசிஹ்நங்களை வாங்கிக் கொல்லுமாபோலே, தான்கொடுத்த முடியைவாங்கிக் காண்கொன்றது" என்று அம்மங்கியம்மாள் பணிப்பர்.

(சீர்கோள்சிற்றுயன்) பருவம் நிரம்பாதிருக்கச்செய்தே வீரஶ்ரீயால் குறைவற்றிருக்கிறவன். (திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாறு) புலிநின்றதாறுபோலே ப்ரதிகூலர்தங்களுக்கஞ்சவேண்டுமூர். (எங்கள்) மஹாராஜர், பெரியாழ்வார், ஶ்ரீவிதுரர், நாம், பிள்ளையுறங்காவில்லிதாஸர், இங்ஙனொத்தபரிவர். (செல்சார்வே) நிர்ப்பயஸ்த்தாநமென்று புகும்புகல், கிழியர்க்கோடினபயம் நீங்கிற்றென்னுமிடம் இயல் தழைப்பிலே தெளிந்திருக்கிறபடி கண்டதே. (௧)

(௧) ரா-அயோ-௧-௨௯. (௨) வி-பு-௫-௨௦-௨௯. (௩) தி-மொ-௫-௪௦-௫.
(௪) வி-பு-௫-௨௦-௧௦, (௫) வி-பு-௫-௨௦-௮௪.

இரண்டாம்பாட்டு.

எங்கள்செல்சார்வுயாமுடையமுதம் இமையவரப்பன்என்னப்பன் * பொங்குமூவுலகும்படைத்தளித்தழிக்கும் பொருந்துமூவுருவன்எம்மருவன் * செங்கயலுகளும் தேம்பணைபுடைசூழ் திருச்செங்குன்றூர்த்திருச்சிற்றாறு அங்கு அமர்கின்ற * ஆதியானல்லால் யாவர்மற்றுஎன் அமர்துணையே ? (உ)

ப:—அநந்தரம், அசேஷஜகத்விஷயமான ஸ்ருஷ்ட்யாதி வ்யாபார ஸமர்த்தனாய்த் திருச்செங்குன்றூரி லெழுந்தருளி யிருக்கிறவனல்லது எனக்கு நற்றுணையில்லையென்கிறார்.

எங்கள் - எங்களுக்கு, செல் - சென்றாச்ரயிக்கப் படுவதான, சார்வு - புகலிடமாய், புகலிடமாமளவன்றியே, யாம் - நாம், உடை - உடையோமான, அமுதம் - போக்யமுமாய், இமையவர் - அஸ்கலிதஜ்ஞாநரான ஸூரிகளுக்கு, அப்பன்-உபகாரகனாய், அப்படியே, என் - எனக்கும், அப்பன் - உபகாரகனாய், பொங்கு-ஸம்ருத்தமான, மூவுலகும் - லோகத்ரயத்தையும், படைத்து - ஸ்ருஷ்டித்து, அளித்து-ரக்ஷித்து, அழிக்கும் - ஸம்ஹரிப்பானாய், பொருந்து - இதுக்குப்பொருந்தின, மூவுருவன்-மூர்த்தித்ரயத்தையுமுடையவனாய், இவ்வாகாரங்களெனக்கு ப்ரகாசிக்கும்படி, எம் - எனக்கு, அருவன் - அந்தராத்மாவாய், அப்படியே முகந்தோன்றாமை நிற்கையன்றியே, கண்கண்டநுபவிக்கும்படி, செம் இளமையாலே சிவந்த, கயல் - கயல்கள், உகளும் - உகளிக்கும்படி, தேம், தேன்-விஞ்சின, பணைபுடை - மருதநிலத்தாலே, சூழ் - சூழப்பட்ட, திருச்செங்குன்றூர் - திருச்செங்குன்றூரில், திருச்சிற்றாறு - திருச்சிற்றாறாகிற அங்கு - விலக்ஷணதேசத்திலே, அமர்கின்ற - பொருந்திவர்த்திக்கிற, ஆதியான் - ஸகல ஸத்தாஹேதுபூதனானவன், அல்லால் - அல்லது, மற்று - வேறு, என் - எனக்கு, அமர் - அநுரூபமான, துணை - ஸஹாயம், யாவர் - ஆர்தான்,

பணை - நீர்நிலமுமாம். (உ)

ஆறு:—(எங்கள்செல்சார்வு) நமக்கு ப்ராப்யமாய், நமக்கு போக்யமாய், *அயர்வறுமமரர்களதிபதியாய், எனக்கு ஸ்வாமியாய் நிகிலபுவநநிர்மாண த்ராண ஸம்ஹாரணு தினோலனாய், த்ரிமூர்த்திரூபனாய், ப்ரதிகூலஜநதுர்த்தர்சனாய். ஸர்வகாரணமாய், மதமுதிதமீநாகுல மதுமிளித ஸலில ஶீதளஶ்யாமளா பஹுளா பலாஶ ஸுரபி

குஸுமதருநிகர பரிவ்ருதமான திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாற்றங் கரையமர்கின்றவனல்லது மற்றெனக்கொரு துணையில்லையென்கிறார்.

ஈடு: அவ:—ஜகத்ஸ்ருஷ்ட்யாதி ஸமர்த்தனாய்த் திருச்செங்குன்றூரிலே நின்றருளினவனல்லது எனக்கு நற்றுணையில்லையென்கிறார்.

(எங்கள்சேல்சார்வு) அநுகூலராயிருப்பார்க்கெல்லாமஞ்சவேண்டாதபுகல், (யாமுடையமுதம்) புகலேயாய், போக்யவஸ்து வேறே தேடவேண்டாதேயிருக்கை. "எங்கள், யாம்" என்னப்பலருண்டே;* கேசவன்றமர்க்குப் பின்புதனியரல்லரே; (க) "குன்றமெடுத்தபிரானடியாரொடு மொன்றிநின்றசடகோபன்" என்று, அவர்களோடொன்றிநின்று சொல்லுகிற சொல்லிறே. (இமையவரப்பனென்னப்பன்) நித்யஸூரிகளை யடிமைகொண்டாப்போலேயென்னை யடிமைகொண்டவன். குறைவற்றார்க்கும் ஸத்தாஹேதுவாய், குறைவுக்கெல்லையான வெனக்கும் ஸத்தாஹேதுவானவன்.

(போங்கித்யாதி) விஸ்த்ருதமான த்ரைலோக்யத்தையுமுண்டாக்கி ரக்ஷித்தழிக்குமவன், (போருந்துமூவுருவன்) இச்செயல்களுக்குப் பொருந்தின மூன்றுவடிவை யுடையவன்; ப்ரஹ்மாந்தர்யாமியாய்ஸ்ருஷ்டிக்கும்; ருத்ராந்தர்யாமியாய் ஸம்ஹரிக்கும். ஸ்வேநரூபேண நின்று பாலநத்தைப் பண்ணும். பொருந்துகையாவது ரஜஸ்தம: ப்ரசுரரான ப்ரஹ்மாதிகளோடு திவ்யவிக்ரஹத்தோடு வாசியற்றிருக்கை. (எம்மருவன்) அல்லாதார்காரியம்நம்புத்த்யதீநமாயிருக்குமத்தனையல்லது, நங்காரியம் அல்லாதார் நினைவின்படியல்லகாணுமிருப்பது" என்றெனக்கறிவித்து, என் பயநிவ்ருத்தியைப்பண்ணி எனக்கு தாரகனானவன், (க) [உத்பத்திஸ்திதிநாஸாநாமஹேதுர்ஹேதுரீஸ்வர: - உத்பத்திஸ்த்திநாஸாநாமஹேதும் ஹேதுமீஸ்வரம்] ஸ்வேதர ஸகலங்களும் தன்னினைவிலேயாய், தானொருவன் நினைவின்படியன்றிக்கே யிருக்கிறபடியைக்காட்டியென்னை தரிப்பித்தவன்.

(சேங்கயலுகளும்) யௌவநத்தாலே சிவந்தகயல்கள் களித்துவர்த்திக்கும் தேசம். பரிவரில்லையென்று முன்பே க்லேசிதது,

(க) வி-பு-க-கூ-௩௯.

பின்பு * வார்கடாவருவியாய் ப்ரீதராகவேண்டாதே, ஸகல பதார்த்தங்களும் களித்தேவர்த்திக்கும் தேசமென்கை. (தேம்பணைபுடைசூழ்) தேனையுடைத்தான நீர்நிலங்கள்சூழ்ந்தவென்னுதல், மருதநிலத்தாலேசூழபட்ட வூரென்னுதல். (அங்கமர்கின்ற) அவதாரங்கள்போலே தீர்த்தம் ப்ரஸாதியாதே நித்யவாஸம் பண்ணுகிறவூர். (ஆதியான்) ஸர்வகாரணமானவனென்னுதல், எனக்குஸத்தாஹேதுவானவனென்னுதல். ப்ரஜைக்கு ப்ரத்யாஸந்நமாக வர்த்திக்கும் தாயைப்போலே, என் ஸத்தையை நோக்கிக்கொண்டிருக்கிறவன். (அல்லால்யாவர்மற்றேன்னமர்துணையே) இவனையொழிய வெனக்குச் சேர்ந்த துணையில்லை, அல்லாதார் கழுத்துக்கட்டியாதல்; துணையென்று பேராய், ஆபத்திலேகூட வழுதல் செய்யுமித்தனை. (௨)

மூன்றாம் பாட்டு.

என்னமர்பெருமான் இமையவர்பெருமான் இருநிலமிடந்தஎம்பெருமான் * முன்னைவல்வினைகள்முழுதுடன்மாள என்னையாள்கின்ற எம்பெருமான் * தென்திசைக்கு அணிகொள் * திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாற்றங்கரைமீபால் நின்ற எம்பெருமான் * அடியல்லால் சரண் நினைப்பிலும் பிறிதில்லைஎனக்கே. (௩)

ப.—அநந்தரம், வாராஹரூபியாய் ப்ரளயாபத்திலே பூமியையிடந்தெடுத்து ரக்ஷித்தவன் திருவடிகளொழிய வேறுபாயமில்லையென்கிறார்,

(இ - ள்.) இமையவர்-நித்யஸூரிகளுக்கு, பெருமான் - நிர்வாஹகனைப்போலே, என்-எனக்கு, அமர்பெருமான்-அநுரூபநாயகனாய், இருநிலம்-மஹாப்ருதிவியை, இடந்த-ப்ரளயாபத்தி லீடுபடாம லிடந்தெடுத்த, எம்பெருமான் என்னுடைய நாதனாய், அப்படியே, முன்னை-அநாதியாய், வல்-ப்ரபலமான வினைகள்-பாபங்கள், முழுது-எல்லாம், உடன்-ஏகோத்யோகத்திலே, மாள நசிக்கும்படி, என்னை-என்னை, ஆள்கின்ற-அடிமைகொண்டருளுகிற, எம்பெருமான்-பெருமையையுடையனாய், தென்திசைக்கு-தெற்குத்திக்குக்கு, அணி அலங்காரமாக, கொள்-கொள்ளப்படுவதான திருச்செங்குன்றூரில்-திருச்செங்குன்றூரில், திருச்சிற்றாற்றங்கரை-திருச்சிற்றாற்றங்கரையின் மீபால்-மேல்பக்கத்திலே, நின்ற-நின்றநிலையழகிலே, எம்பெருமான்-என்னையடிமையாக்கினவனு

டைய, அடி-திருவடிகளை, அல்லால்-ஒழிய, எனக்கு-என்னுடைய, நினைப்பிலும்-மநோரதத்தையிலும் பிறிது-வேறொரு, சரண்-புகல், இல்லை-இல்லை.

ஆறு;—(என்னமர்) பரமஸூரி ஸம்ஶ்லேஷைகபோகனுயிருந்துவைத்து, மத்ஸம்ஶ்லேஷைகபோகனுய், மத்ஸ்வாமியாய், மஹார்ணவமக்நையான பூமியையெடுத்தருளினுப்போலே ஸ்வவிரஹஜநிதநிரவதிகவ்யஸந மஹார்ணவநிமக்நனுன வென்னை யெடுத்தருளி, ஸ்வவிஷய கைங்கர்யைகபோகப்ரதனுய், தக்ஷிணதிக்பாகபூஷணமான திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாறங்கரை மீபால்நின்ற வெம்பெருமானுடைய திருவடிகளல்லது மற்று நினைப்பிலு மெனக்கொரு ப்ராப்யமில்லையென்கிறார். (ங)

ஈடு; அவ;—ஸ்ரீவராஹமாய் ப்ரளயங்கொண்ட பூமியையெடுத்தருளி, திருச்செங்குன்றூரிலே நின்றவனுடையதிருவடிகளல்லது வேறு மநோரதத்திலு மெனக்கு சரணமில்லையென்கிறார்.

(என்னமர்பெருமா னிமையவர்பெருமான்) * அயர்வறுமமரர்களதிபதியாய், எனக்கமர்ந்த ஸ்வாமியாயுள்ளான், நித்யஸூரிகள தனக்குப் பரிவரா யிருக்கிற விருப்பைக் காட்டி, நானஞ்சாதபடி பண்ணி யென்னுடைய ஶேஷத்வத்தை நிர்வஹித்தவன், (இருநிலமித்யாதி) ப்ரளயங்கொண்ட மஹாப்ருதிவியை யெடுத்த தன் ஸாமர்த்யத்தைக் காட்டி யென்னையடிமைகொண்டவன், ப்ரளயங்கொண்ட பூமியோபாதி ஸர்வரும் தனக்குக் குறைசரக்காயிருக்கிறபடியைக் காட்டித் தம் பயத்தைக் கெடுத்தானென்கை.

(முன்னையித்யாதி) ப்ராக்தநமான ப்ரபலகர்மங்களை வாஸனையோடேபோக்கி யென்னையடிமைகொள்ளுகிற ஸ்வாமி, ஸௌர்யவீர்யாதிகளைக்காட்டி, கீழெனக்குப் பிறந்த பயமெல்லாம்போம்படி யென்னையடிமைகொண்டவனென்கை, வல்வினையென்கிறது—பக்திபாரவஶ்யத்தையாயிற்று, அதிறே "ஸர்வஶக்திக்கென்வருகிறதோ" என்னும் பயத்தைப்பிறப்பித்தது.

(தென்திசையித்யாதி) ஆர்யர்களிகழ்ந்த பூமியான தெற்குத்திக்குக் காபரணமானவூர், (மீபால்நின்றவெம்பெருமான்) மேலைத்திக்கில் நிலையு முத்கர்ஷஹேதுவாய், இவர்க்கு பயநிவ்ருத்திக்குடலாயிருக்கிறது, திகபேக்ஷையாயிறே பரத்வமிருப்பது, (அடியித்

யாதி) அவன் திருவடிகளொழிய மற்று ரக்ஷகமாயிருப்பதொரு வஸ்து மனோரதத்திலுமில்லை. (௩)

நான்காம் பாட்டு.

பிறிதில்லையெனக்குப் பெரியமூவுலகும் நிறையப் பேருருவமாய் நிமிர்ந்த * குறியமாணெம்மான்குரைகடல்கடைந்த கோலமாணிக்கம் என்னமான்* செறிகுலைவாழைகமுகு தெங்கணிசூழ் திருச்செங்குன்றூர்த் திருச்சிற்றாறு அறிய * மெய்ம்மையேநின்ற எம்பெருமான் அடியிணையல்லதோரரணே.

ப:—அநந்தரம், ஆஸ்ரிதார்த்தமான த்ரைவிக்ரமஸமுத்ரமதநரூபமான வதிஸயிதவ்யாபாரத்தை யுடையவன் திருவடிகளையொழிய வேறெனக்கொரு ரக்ஷகருமில்லை யென்கிறார்,

(இ-ள்.) பெரிய-மஹாவகாஸமானமூவுலகும்-த்ரைலோக்யமும். நிறைய-நிறையும்படியாக பேர் பெரிய, உருவமாய்-வடிவையுடையனாய்க்கொண்டு, நிமிர்ந்த-வளர்ந்த, குறியமாண்-வாமநப்ரஹ்மசாரியான, எம்மான்-என் ஸ்வாமியாய், குரை-அதிகோஷத்தையுடைத்தான, கடல்-கடலை, கடைந்த-கடைந்த, கோலம் தர்ஸநீயமான, மாணிக்கம்-ரத்நம்போலேயிருக்கிறவடிவை, என்-எனக்கு ப்ரகாஸிப்பித்த, அம்மான் நாதனாய் செறி-செறிந்த, குலை-குலையையுடைய, வாழை வாழை, கமுகு-கமுகு, தெங்கு-தெங்குகளின், அணி-நிரைகள், சூழ்-சூழ்ந்த திருச்செங்குன்றூர் திருச்செங்குன்றூரில், திருச்சிற்றாறு-திருச்சிற்றாறுகிற திருப்பதியில் வர்த்திக்கிறவர்கள், அறிய-தன்னையுள்ளபடியறியும்படியாக, மெய்ம்மையே - யதாவத்ப்ரகாஸம்பண்ணி, நின்ற-எழுந்தருளியிருக்கிற, எம்பெருமான்-ஸர்வேஸ்வரனுடைய, அடியிணை-திருவடிகளை, அல்லது-ஒழிய, பிறிது-வேறு, எனக்கு-எனக்கு, ஓர்-ஏகதேசமும், ஒரு அரண்-ரக்ஷகர், இல்லை-இல்லை. (௪)

ஆறு:—(பிறிதில்லை) நிரதிஸய ரமணீயமான ரூபஸங்க்ருத மதாத்மகனாய், ஸம்வர்த்தித ஸ்வகீய மஹத்ரூப பரிபூர்ணவிஸ்தீர்ண புவநத்ரயனாய், மதிதமஹார்ணவ பயோநிதியாய், ஸௌந்தர்யஸார நீலரத்ந ஸத்ருஸ திவ்யரூபனாய், மத்ஸ்வாமியாய், பஹுள பலபுஞ்ச கதளீ பூக நாளிகேர ராஜிபரிவ்ருதமான திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாற்றங்கரையிலே, ஆஸ்ரிதர்க்குத் தன்னை யுள்ளபடியே யறிய

லாம்படி நின்றருளின வெம்பெருமானடியிணையல்லதோரரண் பிறிதில்லையென்கிறார் (௪)

ஈடு; அவ;—மஹாபலியைவென்றும் கடலைக்கடைந்தும் ஆச்ரிதராபத்தைப்போக்கித் திருச்செங்குன்றூரிலே நின்றருளினவன் திருவடிகளல்லது வேறெனக் கரணில்லையென்கிறார்.

(பிறிதில்லையெனக்கு) அவனையொழிய வேறெனக்குரக்ஷகரில்லை, (பேரியலுலகும் நிறையப் பேருருவமாய்நிமிர்ந்த) ப்ரஹ்ம லோகபர்யந்தமான வாகாசாவகாச மடைய விம்மவளர்ந்த, தொடங்கின கார்யம் வென்ற ப்ரீதிப்ரகர்ஷத்தாலே வளர்ந்தபடி, (குறிய மாணெம்மான்) வளருகைக் குடலாகக்கொண்ட வாமநவேஷத்தையும், அர்த்தித்வத்தையுங் காட்டி யென்னை யடிமைகொண்டவன். மஹாபலியை வெல்லுகைக்குக் கொண்ட வடிவைக்காட்டி பயத்தைக் கெடுத்தபடி, (குரைகடல்கடைந்த) மஹாகோஷமெழும்படி கடலைக்கடைந்தவன். (கோலமாணிக்கம்) பெருவிலையனான ரத்நம் போலே யிருக்கிற வழகிய வடிவைக்கொண்டாயிற்றுக் கடலைக்கடைந்தது, (என்னம்மான்) கடல்கடைந்த ஸாமர்த்த்யத்தையு மழகையுங்காட்டி யென்னை யடிமைகொண்டவன்.

(செறிகுலைவாழையித்யாதி) செறிந்த குலையை யுடைத்தான வாழை, அப்படிபட்ட கமுகு, தெங்கு, இவற்றின் திரளாலேசூழப் பட்டவூர், ஊர்ச்சிறப்பென்று பரணொன்று மிரண்டில்லை, செறிந்த குலைகளாலும் திரண்டு சூழ்ந்திருக்கையாலு முகவாதார்க்குப் புகுரவொண்ணாதிருக்கை, (திருச்சிற்றாறெய) திருச்சிற்றாற்றிலுள்ளார் "ஸர்வேச்வரன்" என்றறியும்படியாக, * மஞ்சா: க்ரோசந்திவத் (மெய்ம்மையேநின்ற வெம்பெருமான்) (௧) "ஆஹ்ராநம் ஐராநாஷம் ஐஜநு-ஆத்மாநம் மாநுஷம்மந்யே" என்றும், (௨) "ஸஹம்வொ வாகொஜாதஃ-அஹம்வோபாந்தவோஜாத:" என்றும், மறைக்கவேண்டாதபடி பத்துப்பத்தாக நின்ற வெஸ்வாமி. (அடியிணையல்லதோரரணே) அவன் திருவடிகளல்லதொரு ரக்ஷகமில்லை. அடியிணையல்லதோரரண்—பிறிதில்லையெனக்கு. (௪)

---

(௧) ரா-யு-௧௨0-௧௧. (௨) வி-பு-ரு-௧௩-௧௩.

ஐந்தாம்பாட்டு.

அல்லதோராரணும் அவனில்வேறில்லை அதுபொருளாகிலும் * அவனையல்லது என்றாவியமர்ந்தணைகில்லாது ஆதலால் அவனுறைகின்ற * நல்லநான்மறையோர்வேள்வியுள்மடுத்த நறும்புகை விசும்பொளிமறைக்கும் * நல்லநீள் மாடத்திருச் செங்குன்றூரில் திருச்சிற்றாறெனக்குநல்லரணே. (ரு)

ப:—அநந்தரம், அர்ச்சாஸ்த்தலாந்தரங்களு மவனை யொழிந்திராதிருக்கத் திருச்செங்குன்றூரில் நிலையொழிய வென்னெஞ்சு பொருந்துகிறதில்லையென்கிறார்.

அல்லது - திருச்செங்குன்றூரொழிந்த, அல்லாத, ஓரரணும்-அர்ச்சாஸ்த்தலங்களான புகலிடமும், அவனில்-அவனையொழிந்து, வேறு-வேறாயிருப்பது இல்லை-இல்லை, அது-அதுவே, பொருள்-அர்த்தஸ்திதி. ஆகிலும்-ஆனாலும், (க) "ஸாவொநாநந்ருஹஷ்தி - பாவோநாந்யத்ரகச்சதி" என்கிறகணக்கிலே அவனை-திருச்செங்றூரில் நிற்கிறவனை, அல்லது-ஒழிய, என் என், ஆவி-ஆத்மவஸ்து, அமர்ந்து-பொருந்தி-அணைகில்லாது-கிடக்கிறதில்லை. ஆதலால்-ஆகையால், அவன்-அவன், உறைகின்ற, நித்யவாஸம்பண்ணும் தேசமாய், நல்ல-ப்ரேமபூயிஷ்டரான, நான்மறையோர்-சதுர்வேதிகள் வேள்வியுள்-யாகாதிகளிலே, மடுத்த-அக்நிமுகத்தில் ஸமர்ப்பித்த, நறும்-ஹவிர்க்கந்தியான, புகை-தூமமானது, விசும்பு-ஆகாசத்தில், ஒளி-ஆதித்யாதிதேஜஸ்ஸை, மறைக்கும்-மறைக்கும்படியாய், நல்ல-விலக்ஷணமாய், நீள்-ஓங்கின, மாடம்-மாடங்களையுடைத்தான, திருச்செங்குன்றூரில்-திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாறு-திருச்சிற்றாறானது, எனக்கு-எனக்கு, நல்-நிர்ப்பயமான. அரண் புகலிடம்.

அன்றியே, கீழ்-அவன் திருவடிகளை யொழிய வுபாயமில்லையென்றாய் அல்லாத கர்மாத்யுபாயங்களும் தத்ஸம்பந்திகளன்றோ வென்கிறசங்கையிலே. அல்லாத ரக்ஷோபாயங்களும் ததாஶ்ரயணரூபங்களாகையாலே அவனையொழிந்திருப்பதொன்றில்லை, அது வேதாந்த ஸித்தமானவர்த்தம், ஆனாலும் ததேகரக்ஷ்யமான வென்னாத்மாவானது அவ்யவஹிதோபாயமான வவனையொழிந்த ஸத்வாரோபாயங்களில் அநுரூப ப்ரவ்ருத்திபண்ணிக் கிட்டமாட்டுகிறதில்லை; ஆதலால் அவன்வர்த்திக்கிற அர்ச்சாஸ்த்தலமே யெனக்குப் புகலிடமென்றாராகவுமாம். (௬)

(க) ரா-உத்தா-௯0-௧௫.

ஆறு:—(அல்லதோரரணும்) மற்றுள்ள திருநகரிகளில் ஸாந்நித்யமுடையனாயிருக்கிறானும் திருச்செங்குன்றூரில் நின்றருளினவவனேயல்லனோ, ஆனபின்பு, அவனே யாமென்னும் நிர்ப்பந்தமென்னெஞ்சினில்.

அல்லாத திருநகரிகளி லானுயிருக்கிறவனும் அவனில் வேறில்லை, பொருளது, ஆகிலுமென்னெஞ்சு அவனையல்லது அமர்ந்தணையில்லாது, ஆதலால், அவனுக்காயதநமாய், பக்தி யுக்த சதுர்வேத விதக்ரேஸரானவர்களுடைய யாகங்களிலே ஹுதமான ஹவிர்க்கந்திஹோம தூமத்தாலே திரஸ்க்ருத சகலநிகிலதேஜஸ்கமாய், தர்ஸநீயாத்யுந்நத ப்ராஸாதாலங்க்ருதமான திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாறெனக்கு நல்லரணென்கிறார்.

ஈடு; அவ; —அல்லாத வுகந்தருளின தேசங்களுமுண்டாயிருக்கத் திருச்செங்குன்றூரிலே நீர் அதிநிர்ப்பந்தம் பண்ணுகிறதென்னென்ன; அதங்ஙனேயிருக்கச்செய்தேயும் திருச்செங்குன்றூரி லல்லது எனக்கு ஹ்ருதயம் சேர்ந்தணையாதென்கிறார்

(அல்லதோரரணுமவனில்வேறில்லை) அல்லாதவிடங்களும் அவனுக்குப் புறம்பாயிருப்பதில்லை (அதுபோருள்) அர்த்ததத்த்வமது, (ஆகிலும்) இங்ஙனேயிருந்ததேயாகிலும், (அவனையல்லதென்னுவியமர்ந்தணைகில்லாது) திருச்செங்குன்றூரிலே நின்றருளினவனையல்லது என்மநஸ்ஸு சேர்ந்தணையாது, ஸ்ரீவைகுண்டநாதன் ஈச்வரனல்லாமையும் ப்ராப்தி யில்லாமையுமோ, திருவடி (க)*ஸ்நேஹோ மே பரமோ ராஜந் த்வயி நித்யம் ப்ரதிஷ்டித: । பக்திஸ்ச நியதா வீர பாவோ நாந்யத்ர கச்சதி என்றது; அப்படியே யிவரும் அமர்ந்தணைகை-உள்வெதுப்பற்றுப்பொருந்துகை.

(ஆதலால்) இப்படியாகையால், (அவனுறைகின்ற) அவன்நித்யவாஸம்பண்ணுகிற - திருச்செங்குன்றூரென்றங்வயம், (நல்லநான்மறையோர்) அநந்யப்ரயோஜநரான ப்ராஹ்மணர், (வேள்வியுள்மடுத்தநறும்புகை) யாகங்களிலே ப்ரவ்ருத்தமான ஹவிர்க்கந்தியான தூமம், அநந்யப்ரயோஜநராகில் இவர்களநுஷ்டாநத்துக்கு ப்ரயோஜநமென்னென்னில்; ஸ்வயம் ப்ரயோஜநமாதல், பகவத்ப்ரதிபக்ஷங்களை யழியச்செய்யுமபிசாரம் பலமாதல், எம்பெருமானுரைப் போலேயாயிற்று. அவ்வூரில் ப்ராஹ்மணரும், (விசும்பொளிமறைக்

(க) ரா-உத்தர-௪0-௧௫.

கும்) ஆகாசத்தி லொளியுள்ள வாதித்யாதிகளை மறைக்குமென்னுதல், விசும்புதன்னி லொளியை மறைக்கு மென்னுதல், (நல்லநீண்மாடம்) ஒருகர்மமும் வேண்டா, ஊரரண்தானே ப்ரதிகூலர்க்கு துஷ்ப்ராபமாயிருக்கும் (திருச்செங்குன்றூரில்-திருச்சிற்றாறு) (க) "மாடமாமயிலைத் திருவல்லிக்கேணி" என்னுமாபோலே (எனக்குநல்லரணே) அஸ்த்தானே பயசங்கைபண்ணு மெனக்கு பயநிவ்ருத்தியுண்டாம் தேசம் அதுவல்லதில்லை, திருச்சிற்றாறென்று-திருப்பதிக்கும்பேர், ஆற்றுக்கும்பேர். (ரு)

ஆறும்பாட்டு.

எனக்கு நல்லரணை எனதாருயிரை இமையவர் தந்தைதாய் தன்னை * தனக்கும்தன்தன்மையறிவரியானைத் தடங்கடற்பள்ளி யம்மானை * மனக்கொள்சீர்மூவாயிரவர் வண்சிவனும் அயனும் தானும் ஒப்பார்வாழ் * கனக்கொள்திண்மாடத் திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாறதனுள்கண்டேனே (சு)

ப:—அநந்தரம், ஸர்வப்ரகாரோபகாரகனாய், க்ஷீரார்ணவசாயியான ஸர்வேஶ்வரனை, பரிவரான வைதிகாக்ரேஸரர் வர்த்திக்கிற திருச்செங்குன்றூரிலே காணப்பெற்றேனென்கிறார்.

(இ-ள்.) எனக்கு-எனக்கு, நல்-நிர்ப்பயமான, அரணை-புகலிடமாய், அவ்வளவன்றியே, எனது-எனக்கு, ஆருயிரை-ஸத்தாதாரகனாய், நித்யஸூரிகள் ஸத்தைக்கும் வ்ருத்திக்கும் ஹேதுபூதனானவனையாலே இமையவர்-அவர்களுக்கும், தந்தைதாய்தன்னை-தந்தைதாயாயிருப்பானாய், தனக்கும்-ஸர்வஜ்ஞனான தனக்கும், தன்-தன், தன்மை-பெருமை, அறிவரியானை-அறியவரியனாயிருக்குமவனாய், ஆஶ்ரிதரக்ஷணார்த்தமாக, தடம்-விஸ்தீர்ணமான, கடல்-கடலிலே பள்ளி-கண்வளர்ந்தருளுமவனான, அம்மானை-ஸர்வேஶ்வரனை, மனம்-நெஞ்சிலே கொள்-கொள்ளப்பட்ட, சீர்-பகவத்குணங்களையுடையரான, மூவாயிரவர்-மூவாயிரவர் வண்-ஜ்ஞாநாதிஸம்பத்தை யுடையரான, சிவனும்-ருத்ரனும், அயனும்-ப்ரஹ்மாவும், தானும்-ஸர்வேஶ்வரனான தானும், ஒப்பார்-ஒக்கும்படி யோரொருவரே ஜகத்ஸ்ருஷ்ட்யாதிகளுக்கு க்ஷமரானவர்கள், வாழ்-(உ) ஜ ...

(க) தி-மா-உ-ரு-உ-

(உ) ப்ரஹ்மஸூ-ச-ச-கஎ.

ஜகத்வ்யாபாரவர்ஜம்" என்கிறபடியே அதில் தாத்பர்யமற்று பகவதநுபவமாகிறவாழ்ச்சியை யுடையராய்க்கொண்டு வர்த்திக்கிறஸ்தலமாய், கனம்-செறிவை, கொள்-உடைத்தாய்க்கொண்டு, திண்-ஸ்த்திரமான, மாடம்-மாடங்களை யுடைத்தான, திருச்செங்குன்றூரில்-திருச்செங்குன்றூரில். திருச்சிற்றாறதனுள்-திருச்சிற்றாறுகிற விலக்ஷணதேசத்துக்குள்ளே. கண்டேன்-காணப்பெற்றேன். (௬)

ஆறு:—(எனக்குநல்லரணை) எனக்கு நித்யரக்ஷகனாய், எனக்குப்ராணனாய், * அயர்வறுமமரர்களுக்குப் பிதாவாய் மாதாவாய் ஸ்வேநாபி துரவபோதஸ்வமஹிமஸ்வபாவனாய், க்ஷீரார்ணவ ஸாயியாயிருந்த வெம்பெருமானை; ஸகலமநோஹர கல்யாணகுணவிசிஷ்டராய், தனித்தனியே ப்ரஹ்ம விஷ்ணு ருத்ரவஜ் ஜகஜ்ஜந்மஸ்த்திதி ஸம்ஹார ஸமர்த்தராய் த்ரிஸஹஸ்ரஸங்க்யா ஸங்க்யாதரான ஜநங்களாலே அத்யாஸ்யமானமாய், த்ருடதர ப்ராஸாத பரிகர்மிதமான திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாறதனுள் கண்டேனென்கிறார்.

ஈடு; அவ;—நித்யஸூரிகளுக்கு ஸர்வவிதபந்துவுமாய், ப்ரஹ்மாதிகளுக் காஸ்ரயணீயனாய்க்கொண்டு திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளுகிறவிவனை "தனக்கென்வருகிறதோ" என்றஞ்சவேண்டாதபடி நிர்ப்பயமான திருச்செங்குன்றூரிலே காணப்பெற்றேனென்கிறார்.

(எனக்குநல்லரணை) (௧)"யதா ஹ்யேவைஷ ஏதஸ்மிந் அத ஸோபயங்கதோபவதி" என்கிறவிஷயத்துக்கு பயப்படுகிறவெனக்கு நிர்ப்பயமான வரணானவனை, (எனதாருயிரை) தன்னுடைய ரக்ஷகத்வத்தைக்காட்டி யெனக்கு தாரகனானவனை, (இமையவர்தந்தை தாய்தன்னை) அஸ்த்தாநேபயஸங்கைபண்ணும் நித்யஸூரிகளுக்கு ஸர்வவிதபந்துவுமானவனை, (௨) "சூழ்ந்திருந்தேத்துவர்பல்லாண்டு" என்னக்கடவதிறே. (தனக்குந்தன்தன்மையறிவரியானை) ஸ்வதஸ் ஸர்வஜ்ஞனான தன்னாலும் தன்னைப்பரிச்சேதிக்கப்போகாது; முதலிலேயத்துக்கவகாசமில்லை. ஒரு வஸ்துவைப் பரிச்சேதித்து நலிய வேணுமே (தடங்கடல்பள்ளியம்மானை) ஸ்வேதத்வீபவாஸிகளாஸ்ரயிக்கைக்கும், மதுகைடபாதிகளையழியச்செய்கைக்கும், ப்ரஹ்மாதிகள் பரிகைக்கும் திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளினவனை.

---

(௧) தை-ஆந-எ- (௨) திருப்பல்-௧௨.

(மனக்கோள்சீர்மூவாயிரவர்) பகவத்குணங்களை மநஸ்ஸிலே கொண்டு, இக்குணங்களுக் கென்வருகிறதோ" என்று அஸ்த்தாநேபயஶங்கைபண்ணி வர்த்திப்பார் மூவாயிரம் ப்ராஹ்மணருண்டு. அவ்வூரில் ப்ராஹ்மணரும் இவர்கோடியிலேயாயிற்று; (௧) "வவெநுநியய தாஜ-நிழ-வவக்தேதியதே-மூநிம்" என்கிற ஸ்ரீ பரத்வாஜமஹாமுநியோடொக்குமவர்கள். தன்னைப்பிரிந்த வன்றுமுதல் ராவணவதம்பண்ணி மீளுமளவும் செல்ல, "இவர்களுக்கென்வருகிறதோ" என்றிந்தையேநினைத்திருந்தவனிறே ஸ்ரீ பரத்வாஜபகவான். (வண்சிவனுமயனும்தானுமொப்பார்வாழ்)மூவர்செய்யுங்காரியமு மோரொருத்தரே செய்யவல்லராயிருப்பர்கள், அதிகாரிபுருஷர்களில் இவர்களுக்குண்டானவேற்றம். (கனக்கோள்திண்மாடம்) செறிந்து திண்ணிதான மாடம், இவர்களும்மிகை, ஊரரண்தானே சிலர்க்கு ப்ரவேசிக்கப்போகாது, (திருச்சிற்றாறதனுட்கண்டேனே) பயப்பட்டதேசத்திலே பயம் நிவ்ருத்தமானாப்போலே, ஸம்ஸாரத்துக்குள்ளே நிர்ப்பயமாயிருப்பதொருதேசமுண்டாய், அதிலேகாணப்பெற்றேன். (௬)

ஏழாம்பாட்டு.

திருச்செங்குன்றூரில்திருச்சிற்றாறதனுள் கண்ட அத்திருவடி என்றும் * திருச்செய்யகமலக்கண்ணும் செவ்வாயும் செவ்வடியும் செய்யகையும் * திருச்செய்யகமலவுந்தியும் செய்ய கமலமார்பும் செய்யவுடையும் * திருச்செய்யமுடியும்ஆரமும்படையும் திகழஎன் சிந்தையுள்ளானே. (௭)

ப:—அநந்தரம், அதிஶயிதமான அவயவாபரணாயுத ஶோபைகளோடே திருச்செங்குன்றூரிலே யெழுந்தருளியிருக்கிறவென் ஸ்வாமியானவன் என் னெஞ்சுக்குள்ளே நித்யஸந்நிஹிதனாகாநின்றா னென்கிறார்.

திருச்செங்குன்றூரில்-திருச்செங்குன்றூரில், திருச்சிற்றாறதனுள்-திருச்சிற்றாற்றில் வர்த்திக்கிற, கண்ட-நான் கண்ட, அத்திருவடி-ஸ்வாமியானவன், செய்ய-சிவந்த, கமலம்-கமலம்போலே யிருக்கிற, திருக்கண்ணும்-திருக்கண்களும், செம்-சிவந்த, வாயும்-திருப்பவளமும், செம்-

---

(௧) ராயு-௧௨௭-௧.

சிவந்த; அடியும்-திருவடிகளும். செய்ய-சிவந்த, கையும்-திருக்கைகளும் செய்ய-சிவந்த; கமலம்-கமலத்தையுடைத்தான, திருவுந்தியும்-திருநாபியும், செய்ய-சிவந்த திருமேனியையுடைய, கமலை-லக்ஷ்மியையுடைத்தான, மார்பும்-திருமார்பும், செய்ய-சிவந்த, உடையும்-திருவுடையாடையும், செய்ய-சிவந்த; திருமுடியும்-திருமுடியும்; ஆரமும்-திருவாரமும், படையும் திவ்யாயுதங்களும்; திகழ விளங்கும்படியாக; என்றும்-என்றும்; என்-என்; சிந்தை-நெஞ்சுக்குள்ளே, உளான்-ஆனான்;

ஆறு: (திருச்செங்குன்றூரில்) திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாறதனுள் கண்ட அந்த ரமணீய தாம்ரகமல ஸத்ருசமான திருக்கண்களும், வித்ருமஸத்ருசமான திருப்பவளமும், கமலஸத்ருசமான திருவடிகளும், கமலஸத்ருசமான திருக்கைகளும், கமலஸத்ருசமான திருநாபியும், நிஜபுஜாந்தர மந்திரேந்திரா திவ்யரூப மயூநாபிபூதமாகையாலே சிவந்த தாமரைபோலேயிருந்த திருமார்வும், திவ்யபீதாம்பரமும், நிரதிசய தேஜோமயமான திருவபிஷேகமும், திவ்யமௌக்திகஹாரமும், ஸங்கசக்ராதி திவ்யாயுதங்களும் திகழ என்சிந்தையுளிருந்தானென்கிறார் (எ)

ஈடு:--அவ; திருச்செங்குன்றூரிலே நின்றருளின சீர்கொள்சிற்றாயன், தன்னழகோடே மறக்கவொண்ணாதபடி யென்னெஞ்சிலே வந்துபுகுந்தானென்கிறார்.

(திருச்செங்குன்றூரிலித்யாதி) நிர்ப்பயஸ்தாநமான திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாற்றிலே காணலாம்படி நின்ற ஸ்வாமி. திருவடி-ஸ்வாமி. (திருச்செய்யகமலக்கண்ணும்) அழகியதாய் சிவந்திருப்பதாய், விகாஸம் செவ்வி முதலானவற்றாலே தாமரைபோலேயிருந்த திருக்கண்களும், (செவ்வாயும்) நோக்கால் பிறந்த முதலுறவை க்ரயம் செலுத்திக்கொடுக்கும் ஸ்மிதமும், (செவ்வடியும்) ஸ்மிதத்துக்குத் தோற்றுவிழும் திருவடிகளும், (செய்யகையும்) திருவடிகளில் விழுந்தாரை யெடுத்தணைக்கும் திருக்கையும்,

(திருச்செய்யகமலவுந்தியும்) அணைத்தார்க்கு திக்யாநுபாவ்யமாய், அழகுக் கெல்லையாய், "ஸர்வோத்பத்திஸ்தாநம்" என்று தோற்றும்படி யிருக்கிற திருநாபியும், (செய்யகமலமார்வும்) பகைத்ஸம்பந்த மில்லாதார்க்கும் பற்றாசானபிராட்டிக் கிருப்பிடமாகையாலே சிவந்த திருமார்வும். கமலையென்றுமாம்.

(செய்யவுடையும்) திருமேனிக்குப்பாபாகமாய், பும்ஸ்த்வாவஹமான திருப்பீதாம்பரமும்.

(திருச்செய்யமுடியும்) அப்படி திருமேனிக்குப் பரபாகமாய் பயந்திரும்படி ரக்ஷகத்வஸூசகமாயிருந்துள்ள திருவபிஷேகமும், (ஆரமும்) (௧) "பெரியவரைமார்பில் பேராரம்பூண்டு" என்கிற படியே திருமார்வுக்குத்தகுதியான திருவாரமும், (படையும்) வினைத்தலையிலாயுதமாய், போகதசையிலாபரணமாயிருந்துள்ள திவ்யாயுதங்களும், (திகழ) (௨) "ஸௌஹ்ருதஜ்ஞகாரண்யாஹ்-ஸௌபயந்தண்டகாரண்யம்" என்கிறபடியே விளங்க, (என்றும்-என்சிந்தையுளானே) அவனென்றுமொக்க வென்சிந்தையிலே வர்த்திக்கையாலே பயத்துக்கொதுங்கவிடமில்லை. (௭)

எட்டாம்பாட்டு.

திகழஎன்சிந்தையுளிருந்தானைச் செழுநிலத்தேவர்நான்மறையோர் * திசைகைகூப்பியேத்தும் திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாற்றங்கரையானை * புகர்கொள்வானவர்கள்புகலிடந்தன்னை அசுரர் வன்கையர்வெங்கூற்றை * புகழுமாறு அறியேன்பொருந்துமூவுலகும் படைப்பொடுகெடுப்புக்காப்பவனே. (௮)

ப:—அநந்தரம், இப்படி யென்னெஞ்சிலே திகழவிருக்கிற ஜகஜ்ஜந்மாதி காரணபூதனாயிருக்கிறவனைப் புகழும்படி யறிகிறிலேனென்கிறார்.

(இ-ள) திகழ-உஜ்ஜ்வலமாம்படி. என்-என், சிந்தையுள்-நெஞ்சுக்குள்ளே, இருந்தானை-இருக்குமவனாய், செழு-விலக்ஷணராய், நிலத்தேவர்-பூமிதேவர்களாய், நான்மறையோர்-நாலுவேதங்களுக்கும் நிர்வாஹகரானவர்கள். திசை-திக்குக்கள்தோறும், கை-கை, கூப்பி-கூப்பி ஏத்தும்-ஏத்தும்படியான, திருச்செங்குன்றூரில்-திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாற்றங்கரையானை - திருச்சிற்றாற்றங்கரையிலே வர்த்திக்குமவனாய், பிறர்க்கு மாஶ்ரயணீயதயாவந்த, புகர்- ஔஜ்ஜ்வல்யத்தை கொள்-உடைய, வானவர்கள்-தேவர்களுக்கு, புகலிடந்தன்னை -ஆஶ்ரணீயனும் ஸ்வபாவத்தையுடையனாய், அவர்களுக்கு விரோதிகளாய்,

(௧) ௩-திருவ ௫௫ (௨) ரா-ஆர-௩௮-௧௫.

திருவாய்மொழி, அ-ப, ச-தி, அ-பா, திகழ வ்யாக்யானம். கடக்க

வன்கையர்•ப்ரபலரான, அசுரர் அஸுரர்க்கு; வெம்-க்ரூரமான, கூற்றை ம்ருத்யுவாய், பொருந்து-தன்னோடேப்ருதக்ஸித்தமான,மூவுலகும்-ஜகத்த்ரயத்தினுடைய, படைப்பொடு- ஸ்ருஷ்டியோடே, கெடுப்புக் காப்பவனே-ப்ரளயரக்ஷணங்களை யுடையனானவனே; புகழுமாறு-ஓராகாரத்தாலே வகையறிந்து புகழும்படி, அறியேன்-அறிகிறிலேன்.

காப்பவன் : காப்பினையுடையவன். (அ)

ஆறு:—(திகழவேன்சிந்தையுள்) ஸ்வகுணாநுரக்த ஸகலபுவந ஸஞ்ஜநநபரிபாலந ஸம்ஹ்ருதிலீலனுப், பக்தியுக்த சதுர்முக பசுபதி பதமகஹாதவஹ ப்ரப்ருதி ஸகலஸுரஜந பரண்யனுப், தத்விரோத்யஸுரஜந ம்ருத்யுபூதனுப், சதுர்வேதவித்ப்ரவரராய் பரமபுருஷ சரணயுகளாநுராகயுக்தராய் க்ருதாஞ்ஜலிகளான பௌமஸுரராலே ஸம்ஸ்துயமாந திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாற்றங்கரையிலே நின்றருளி, என்னெஞ்சிலே நிப்யமாநனுயிருந்தருளினவனை,எத்தைச் சொல்லிப்புகழ்வது, புகழுமாறறியேனென்கிறார் (அ)

ஈடு:—அவ ; இப்படி பூர்ணமாக வநுபவித்த சீர்கொள் சிற்றாயனுடைய விலக்ஷணமான குணங்களிலே மூழ்கி மறுந்தி அவனைப் புகழும்படி யறிகிறிலேனென்கிறார்.

(திகழவேன்சிந்தையுளிருந்தானை) இதுவு மிவர்க்கொருபயநிவ்ருத்திக்குஹேது ; தம்நெஞ்சிலேயிருக்கையாலே ஓரரணுக்குள்ளே யிருக்கிறுப்போலே யிருக்கிறதாயிற்று. உகவாதார் நெஞ்சிலேயிருந்த பயமும் போயிற்று. (க) "இனிப்போய்ப் பிறரொருவர் வன்னெஞ்சம்புக்கிருக்கவொட்டேன் வளைத்துவைத்தேன்" என்றுமவர்களிறே (செழுநிலத்தேவரித்யாதி) நாலுவகைப்பட்ட வேதங்களும் கைவந்து விலக்ஷணராய் பூஸுரரான வைஷ்ணவர்கள், திக்குக்கள்தோறும் நின்று கைகூப்பி பேத்தாநின்றுள்ள திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாற்றங்கரையிலே வர்த்திக்கிறவனை. உகவாதார்க்குக் கிட்டவொண்ணுதபடி அர்க்கமான வூரிலே நிற்கிறபடி.

(புகர்கொளித்யாதி) தங்களையொழிந்தார்க்கெல்லாம் ஆஶ்ரயணீயராகையால் வந்த புகரையுடையரான ப்ரஹ்மாதிகளுக்கும் ஆபத்துவந்தால் புகலிடமாயுள்ளவனை (அசுரர்வன்கையர்வெங்

(க) தி-மொ-எ-உ-எ.

கூற்றை) முன்கைமிடுக்கரான வஸுரவர்க்கத்துக்கு, அந்தகன் தன்னீரென்னும்படி வெவ்வியகூற்றமாயுள்ளவனை (புகழுமாறறியேன்) அவனுக்கொரு குறையில்லை, என் குறைதீரப் புகழுவதொரு ப்ரகாரமறிகிறிலேன். புகழாதொழியவும் மாட்டுகிறிலேன். ஆனால், செய்யவடு ப்பதென்னென்னில் (பொருந்தித்யாதி) தனக்கு விதேயமான ஸர்வஜகத்தினுடையவும் ஸ்ருஷ்ட்யாதிகளைப் பண்ணுமவனென்று திரளச்சொல்லுமத்தனை, பிரித்துவகையிட்டுச்சொல்லப்புக்கால் சொல்லி முடிக்கப்போகாது; ப்ரயோஜநத்திலே சொல்லுமித்தனை. (அ)

ஒன்பதாம் பாட்டு.

படைப்பொடுகெடுப்புக்காப்பவன் பிரமபரம்பரன்சிவப்பிரானவனே * இடைப்புக்கோருருவும்ஒழிவில்லை அவனே புகழ்வில்லை யாவையும்தானே * கொடைப்பெரும்புகழா † ரினையர்தன்னனார் கூறியவிச்சையோடொழுக்கும் * நடைப்பலியியற்கைத்திருச்செங் குன்றூரில் திருச்சிற்றாறமர்ந்தநாதனே (கூ)

ப:—அநந்தரம், ஸ்ருஷ்ட்யாதி கர்த்த்ருகர்மவிபாகமில்லாதபடி ஸர்வாத்மபூதனானவன் திருச்செங்குன்றூரிலே நிற்கிற ஸர்வஸ்வாமியென்கிறார்.

(இ-ள்) கொடை—வித்யாதாநாதிகளான ஔதார்யத்தாலே, பெரும் பெரிய, புகழார்-புகழையுடையராய், எனையர்-அநேகராய், தன்னனார், தான் என்னலாம்படி ஜ்ஞாநஶக்த்யாதி பூர்ணரானவர்களுடைய, கூறிய—ஸூக்ஷ்மாவகாஹியான, விச்சையோடு—வித்யையோடு கூடின. ஒழுக்கம்—அநுஷ்டாநத்தையும், நடை—நித்யயாத்ரையான, பலி-பகவதாராதநத்தையும், இயற்கை-ஸ்வபாவமாகவுடைத்தான, திருச்செங்குன்றூரில். திருச்செங்குன்றூரில், திருச்சிற்றாறு—திருச்சிற்றாற்றிலே, அமர்ந்த—நின்ற, நாதன்—ஸ்வாமியானவன், படைப்பொடு கெடுப்புக்காப்பவன்—ஜகஜ்ஜந்மஸ்த்தேமலயங்களுக்கு நிர்வாஹகனாயிருக்கும்(க) ‘‘[illegible] —ப்ரஹ்மாத்யவஸ்தாபிரஶேஷமூர்த்தி:’’ என்கிறபடியே மநுஷ்யாத்யபேக்ஷயாபரரான விந்த்ராதி

(க) வி-பு க-உ-எஉ. † ‘‘எனையர்’’ என்றும் பாடம்.

களுக்குமவ்வருகாகையாலேபரம்பரனுய்க்கொண்டு, பிரமன்—ஸ்ரஷ்டா வானப்ரஹ்மாவும், சிவப்பிரான்—ததாத்மகனுய்க்கொண்டு ஸம்ஹரிக் கையாலே ஶக்திகுணயுக்தனுய்க் கொண்டு ஈஶ்வரனுன ருத்ரனும், அவனே—தானேயாம்படிப்ரகாரியாய்நிற்பானுய், இடை—இவர்களிருவர் கக்கு மிடையிலே, புக்கு-ரக்ஷகனுய்ப்புகுந்து, ஓர்—ஒரு, உருவம்-பதார்த் தத்தையும், ஒழிவில்லையவனே—ஒழியவிடா திருக்குமவனுய், இப்படி ஸ்ருஷ்டிஸம்ஹாரபாலந கர்த்தாவானவனவன்றியே, யாவையும்—ஸ்ருஜ் யஸம்ஹார்யபால்யமான ஸமஸ்தபதார்த்தங்களும், தானே-தானே யாம்படி தத்ப்காரவிஶிஷ்டனுயிருக்கும் இதில்—புகழ்வு-அர்த்தவாதரூப மானஸ்துதி, இல்லை-இல்லை. (கூ)

ஆறு:—(படைப்பொடு) பரமோதாரராய், வ்யபதேஶ்யராய், ஸ்வஸத்ருஶராய், நிரதிஶய ஸகலவேத தத்வார்த்தஜ்ஞராய் ஜ்ஞாநாநுகுணசரித்ரராய், நித்யமநுஷ்டேயமான பஞ்சமஹாயஜ் ஞாதி ஸகலகர்மகலாபராயிருந்த திவ்யஜநங்களாலே அத்யாஸ்யமாந மான திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாறமர்ந்த நாதன்; ப்ரஹ்ம ருத்ரரூபேண, ஸ்வேநரூபேண, நிகிலஜகத்ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம் ஹாரஹேதுபூதனுய், ஸமஸ்தவஸ்துஜாதாந்தராத் மபூதனுய், ஸர்வ ஶப்த வாச்யனுயிருக்கும்; இவ்வர்த்தத்தில் ஸ்துதியில்லை, புகழுமா றறியேனென்கிறார். (கூ)

ஈடு:—அவ; ப்ரஹ்மாதி ஸகல ஜந்துக்களுடைய ஸ்ருஷ்ட்யாதி களைப் பண்ணுவான் திருச்செங்குன்றூரிலே நின்றருளினவ னென னுமிடம் அர்த்தவாதமன்று, மெய்யென்கிறார்.

(படைப்பொடித்யாதி) ஸ்ருஷ்டி, ஸம்ஹாரம், பாலநம் இவை யெல்லாம் தன்னதீநமாகவுடையவன் (பிரமபரம்பரன்) மநுஷ்யாதி களில் இந்த்ராதிகளுக்குண்டான வேற்றம்போலே, அந்த விந்த்ராதி களி லேற்றமுடையனுன ப்ரஹ்மாவாகிற பராத்பரன் (சிவப்பிரான்) அப்படியே தேவர்களில் தலைவலித்தானுயிருக்கிற ருத்ரன்; அவர்களு மிவனிட்ட வழக்கு, (இடைப்புக்கித்யாதி) நடுவே புக்கொரு பதா ர்த்தமும் ஸ்வதந்த்ரமாயிருப்பதில்லை; அடையப்ரகாரமாய்த் தான் ப்ரகாரியாயிருக்கும் (யாவையுந்தானே) இங்ஙன் பிரித்துச் சொல் லுகிறதென், சேதநாசேதந விபாகமற அவனதீநம் (புகழ்வில்லை) இதிலர்த்தவாதமில்லை; ப்ரஹ்மாதிகளுக்கு மிவ்வேற்றங்கள் சொல்

லக்கடவது; அது உபசாரம், இவ்விஷயத்தில் லர்த்தவாதஸங்கையு மில்லை

இப்படி எல்லாம் ஸ்வாதீநமாம்படி யிருக்கிறவனுரென்ன (திருச் சிற்றுறமர்ந்தநாதன்) என்கிறார். (கொடைப்பெரும்புகழார்) அவ் வூரிலுள்ளார், கொடையால்வந்த பெரும்புகழையுடையார். எதிரி களையும் தானத்தாலே வஸீகரிக்க வல்லராயிருக்கை. தானமும் ஸாமா திகளிலேயொன்றிறே, பெரும்புகழாவது-ஜ்ஞாநதாநம்(௧)விஷ்ரா ஊ நம்விஸிஷ்டு-விக்பாதர்நம்விஸிஷ்யதே'' (இனையர்) ''இன் ஞர், இன்ஞர்'' என்றுப்ரஸித்தராயிருக்குமவர்கள் (உ) ''விஷெஷவ வி விஷ்ரா தா:-விதேஸேஷ்வபிவிக்யாதா:'' என்று ஸத்ருதேசத்தி லும்ப்ரஸித்தரா யிருக்கையாலே, ஸத்ருக்களங்கேசென்றால் மீளப் போகாதென்று இங்குவர நினையாதிருக்கை. (எனையர்) என்றுபாட மானபோது, இப்படி யிருப்பா ரநேகரென்கிறது. (தன்ஞர்) தன்னேடொத்தவர்கள்; அவன்றன்னைப்போலே யதிகரித்த காரியத் தில் வெற்றிக்கொண்டல்லது மீளாதவர்கள்.

(கூறிய விச்சையோ டொழுக்கம்) ஸம்யக்ஜ்ஞாநமும், ஜ்ஞாந நுரூபான ஸமாசாரங்களும்; எதிரிகளையறிந்து பரிஹரிக்கவல்ல ஜ்ஞாநங்களும், எதிரிகளுக்கு நலிய வவகாசமான ஆசாரவைகல்ய மின்றிக்கே யிருக்கையும். இந்த்ரன் திதிகர்ப்பத்தை யழிக்கைக்கு ஆசாரவைகல்யமிறே அவகாஸமாயிற்று(௩) ''ஸத்ரு-ஊணஸஸ-வஜ-த்த தா-ஸத்ருதண்டஸ்ஸவ்ருத்ததா'' (நடைப்பலி) நித்யமானபகவத் ஸமாராதநம். நடையாகை-நிரந்தரமாகை (பலி) பூஜை (இயற்கை) இதுவேயாத்ரையா யிருக்குமவர்கள் (திருச்செங்குன்றூரிலித்யாதி) (திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாற்றில் நித்யவாஸம்பண்ணுகிற ஸர்வேஸ்வரன் - படைப்பொடு கெடுப்புக்காப்பவன்.) (௯)

பத்தாம் பாட்டு.

அமர்ந்தநாதனை அவரவராகி அவர்க்கருளருளும்அம்மானை *அ மர்ந்ததண்பழனத்திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாற்றங்கரையானை அமர்ந்தசீர்மூவாயிரவர்வேதியர்கள் தம்பதி அவனிதேவர்வாழ்வு * அமர்ந்தமாயோனைமுக்கணம்மானை நான்முகனையமர்ந்தேனே (௧௦)

---

(௧) பாரத- (உ) ரா-பா-எ-௧௩ (௩)

ப:—அநந்தரம், நிருபாதிகஶேஷியாகையாலே அவாந்தரஶேஷிகளான ப்ரஹ்மருத்ராதிகளுடைய ஸத்தையும் தானிட்டவழக்காய், தத்ப்ரயோஜநம் ஸ்வயம்ப்ரயோஜநமாம்படி அவர்களுக்கு விபூதிப்ரதனாய்க்கொண்டு திருச்செங்குன்றூரிலேநிற்கிறவாஶ்சர்யபூதனைப் பொருந்தப்பெற்றேனென்கிறார்.

(இ-ள்) அமர்ந்த—ஸகலசேதந நிர்வாஹகனென்றால் தகுதியாம்படியான, நாதனை—நிருபாதிகஶேஷித்வத்தை யுடையனாய், ஔபாதிகஶேஷிகளான - முக்கணம்மானை - மூன்றுகண்ணை யுடையருத்ரனும், நான்முகனை—சதுர்முகனும் தானும்படி தத்ததந்தராத்மாவாய்க்கொண்டு ஸத்தாஹேதுபூதனாய், அமரவர் - ஸ்வவிபூதிகளையர்த்தித்துப்பெறுகிறவர்கள், அவற்றைப்பெற்றுகக்குமாபோலே, ஆகி—(க) "ஸஹைச்வர்ய்யைர் த்ரிதசை:-ஸமேத்யப்ரதிநந்த்யச" என்று அவர்களோடே ஏகீபவித்துக்கொண்டு, அவர்க்கு-அவர்களுக்கு, அருள்—அபீஷ்டபதப்ரதாநாத்யுபகரணங்களை, அருளுமம்மானை- பண்ணுமவனாய், அமர்ந்த செறிந்து தண்-ஶ்ரமஹாரமான, பழனம் - நீர்நிலத்தையுடைய, திருச்செங்குன்றூரில் - திருச்செங்குன்றூரில், திருச்சிற்றாற்றங்கரையானை - திருச்சிற்றாற்றங்கரையை வாஸபூமியாகவுடையனாய், அமர்ந்த-பொருந்தின சீர் - ஆத்மகுணங்களை யுடையரான, மூவாயிரவர் - மூவாயிரவராயுள்ள, வேதியர்கள் - வைதிகர்க்கு, தம்பதி - அஸாதாரணதேஶமாய் அவனிதேவர்-பூஸுரரான பாகவதருடைய, வாழ்வு—பகவதநுபவைஶ்வர்ய பூமியாயுள்ளத்தை, அமர்ந்த-அவர்கள் ஸம்ருத்தியே தனக்கு ஸம்ருத்தியாம்படி யுகந்து பொருந்திவர்த்திக்கிற, மாயோனை - ஆஶ்சர்யபூதனானவனை, அமர்ந்தேன். அநந்ய ப்ரயோஜநனாய்க்கொண்டு பொருந்தப்பெற்றேன்.

வேதியர்கள் தம்பதியாய், அல்லாத பூஸுரர்க்கு வாழ்வான திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாற்றங்கரையானாய் அவர்களை யநுபவிப்பிக்கத் தகுதியான வாஶ்சர்யசேஷ்டிதங்களை யுடையவனை யென்றுமாம்.

ஆறு:—(அமர்ந்தநாதனை) ஆஶ்ரித ஸம்ஶ்லேஷைக ஸ்வபாவனாய், மமநாதனாய், ஆஶ்ரிதஸமீஹித நிர்வர்த்தகனாய், த்ரிணேத்ர சதுர்முக விபூதிகனாய், கமலதடாக பரிவ்ருதமான திருச்செங்குன்

(க) ரா—அயோ—௧௬—௨௭.

றாரில் திருச்சிற்றுற்றங்கரையை போக்யபூமியாக வுடையனும், வேதவிதக்ரேஸர பரமபுருஷசரணாரவிந்த யுகளாநுராக மஹிமாவதாதஹ்ருதயாரவிந்த த்ரிதஸஹஸ்ர திவ்யபூஸுரஜநங்கள்வாழ்வமர்ந்த மாயோனை யமர்ந்தேனென்கிறார். (க௦)

ஈடு:—அவ; ஸர்வேஶ்வரனாய்ஸவத்து ஸகல ஜந்துக்களுக்கு மாஶ்ரயணீயனாகைக்காகத் திருச்செங்குன்றூரிலே நின்றருளினவனையனுபவிக்கப்பெற்றேனென்கிறார்.

(அமர்ந்தநாதனை)†நிருபாதிகசேஷியென்றால் போரும்படியிருக்கிறவனை. (க) "ஒத்ரூ மொாகூ ஶேவி நாமெந யெநவஸாணாய வதா - த்ரைலோக்யமபிநாதேநயேநஸ்யாந்நாதவத்தரம்" என்கிறபடியே த்ரைலோக்யத்தையும் பெருமாளுக்குக்கையடைப்பாக்கினாலும் பின்னையும்ரக்ஷ்யம்சுருங்கிரக்ஷகத்வத்துடிப்பேவிஞ்சியிருக்கும் [யெந நாமெந நாயவத்ரா வஸாகு-யேந நாதேந நாதவத்தரம் ஸ்யாத்] (அவரவராகி) அர்த்திகள் கிட்டினால் அவர்கள் தந்தாமுக்கு நல்லராமாபோலே, அவர்களுக்கும் நல்லனாயிருக்குமவன். அவர்கள் "இதுநமக்குவேணும்" என்றிருக்குமாபோலே, "இவர்களுக்கிது வேணும்" என்றிருக்கை; அங்ஙனன்றிக்கே, அவர்களுக்குப்பெறுகையிலே யர்த்தித்வம்; கொடுக்கக்கொள்ளுகையிலே அர்த்தித்வம் இவனுக்கு; பெற்றோமென்னும் ஹர்ஷம் அவர்களுக்கு, கொடுக்கப்பெற்றோமென்னும் ஹர்ஷம் இவனுக்கு.

(அவர்க்கருளருளும்) அவர்களபேக்ஷிதங்களைத் தன்பேறாகக்கொடுக்கை; கொள்ளுகிறவனுடைய விரப்பைத் தானுடையனாய்க் கொடுக்கை(உ)"ஸஸுரா நருபொநாஊ ஷாஸஒகூ ு ிநஹூ உ-ஸஸர்வாநர்த்திநோத்ருஷ்ட்வா ஸமேத்யப்ரதிநந்த்யச" என்கிறபடியே (அம்மானை) ஸர்வேஶ்வரனை; பூர்ணனையென்னுதல்; ப்ராப்தனையென்னுதல். (அமர்ந்ததண்பழனமித்யாதி) சேர்ந்துகுளிர்ந்த நீர் நிலங்களையுடைய திருச்செங்குன்றூரில் திருச்சிற்றுற்றங்கரையிலே நின்றருளினவனை (அமர்ந்தசீர்) சேர்ந்தகுணங்களையுடைய மூவாயிரம் ப்ராஹ்மணர்; ஶேஷித்வத்துக்கு அவன் தக்கிருக்குமாபோலே சொன்ன சொன்ன வேற்றமெல்லாம் தரும்படியிருப்பர்கள்.

(க) ரா-அயோ-ரு-கரு. (உ) ரா-அயோ-கசு-உஎ.

† "உபய விபூதிக்கும்" அதிகபாடம்.

(வேதியர்கள்தம்பதி) மூவாயிரவரளவன்றிக்கே, ப்ராஹ்மணஜாதிக்காக வாஸஸ்தானம் (அவனிதேவர்வாழ்வு) பூஸுரரான வைஷ்ணவர்களுக்கு ப்ராப்யபூமி.

(அமர்ந்தமாயோனை) அத்தேசத்திலே நித்யவாஸம் பண்ணுகிற வாஸ்சர்யபூதனான ஸர்வேஸ்வரனை (முக்கண்ணம்மானைநான்முகனையமர்ந்தேனே) ப்ரஹ்மாதிகளுடைய ஸத்தாதிகளுக்கு நிர்வாஹகனானவனை; ப்ரஹ்மருத்ரர்களைப் பலகால் சொல்லுகிறது-இவனுடைய நிர்வாஹகத்வம் தோற்றுகைக்காகவும் நிர்வாஹ்யங்களிலே யொன்றால் நலிவுண்டாகை கூடாதென்கைக்கும்; அன்றிக்கே "அமர்ந்தமாயோன்" என்றுவைத்து இவர்களைச் சொல்லித்தலைக் கட்டுகையாலே ஸமானாதிக்ருதபதங்கள் விசேஷ்யத்தில் பர்யவஸிக்கக் கடவதாகையாலே, ப்ரகாரியானவனை, (அமர்ந்தேனே) கிட்டப்பெற்றேனென்கிறார். (க) "ஸ-ரு தா நிவிஷ-ர:-பூதா நிவிஷ்ணு:" இத்யாதிவத்.   க0

பதினோராம் பாட்டு.

தேனை நன்பாலைக் கன்னலையமுதைத் திருந்துலகுண்ட அம்மானை * வானை நான்முகனை மலர்ந்ததண் கொப்பூழ் மலர்மிசைப் படைத்த| மாயோனை * கோனைவண்குருகூர் வண்சடகோபன் சொன்ன ஆயிரத்துள் இப்பத்தும் * வானின்மீதேற்றி அருள்செய்து முடிக்கும் பிறவிமாமாயக்கூத்தினையே   (கக)

ப:—அநந்தரம் இத்திருவாய்மொழி கற்றார்க்கும் பலமாக ஜந்மநிவ்ருத்தி விசிஷ்டமான பரமபத ப்ராப்தியை அருளிச்செய்கிறார்.

தேனை - ஸர்வரஸஸமவாயரூபமான தேனாய். நன் - ஸ்வாபாவிகரஸமான. பாலை-பாலாய். கன்னலை-பர்வந்தோறும் ரஸிக்கும் கரும்புமாய். அமுதை-முடிந்தவுயிரைப் பிழைப்பிக்கு மம்ருதமாய். இப்படி ஸர்வவித போக்யபூதனாய், திருந்துலகு-விலக்ஷண மஹாலோகம் உண்ட-ப்ரளயத்திலேயழியாதபடி யமுதுசெய்துநோக்கின, அம்மானை ஸ்வாமியாய். வானம்-ஊர்த்வலோக வாஸியான, நான்முகனை-சதுர்முகனை, மலர்ந்த-விகஸிதமாய். தண்-செவ்வியையுடைத்தான.

(க) வி-பு-உ-கஉ-நகூ.

கொப்பூழ்மலர்மிசை-திருநாபீகமலத்திலே. படைத்த – ஸ்ருஷ்டித்த. மாயோனை–ஆஶ்சர்யபூதனாய். கோனை–அத்தாலே நிருபாதிகஸ்வாமியானவனை. வண்–நிரதிஶயஸம்பத்தையுடைய. குருகூர்–திருநகரிக்கு நிர்வாஹகராய். வண் – பரமோதாரரான. சடகோபன்–ஆழ்வார். சொன்ன–அருளிச்செய்த. ஆயிரத்துள்–ஆயிரத்துள், இப்பத்தும் இப்பத்தும். வானின்மீது–பரமபதத்திலே. ஏற்றி–ஏறவிட்டு. அருள்–கைங்கர்யஸாம்ராஜ்யமாகிற பகவதங்கீகாரத்தை. செய்து–பண்ணி. பிறவி – ஸம்ஸாரஸம்பந்தரூப பர்யந்தமாயுள்ள, மாமாயக்கூத்தினை–ஆஶ்சர்யநாடகத்தை. முடிக்கும்–முடித்துவிடும்.

இது - எழுசீராசிரியவிருத்தம்

ஆறு:—(தேனை) மதுமதுரபயஃகண்டாம்ருதவத் போக்ய பூதனாய், நிகீர்ண ஸகலலோகனாய், ஸ்வநாபீகமலோத்பூத சதுர் முகனாய், ஆஶ்சர்யபூதனாய் ஸர்வஸ்வாமியாயிருந்த திருச்செங்குன் றூரில் திருச்சிற்றாற்றங்கரையானை, வண்குருகூர்ச்சடகோபன் சொல்லாயிரத்துள் இப்பத்தும், அருள்செய்து வானின்மீதேற்றி, பின்னை ஸம்ஸாரஸம்பந்தத்தைப்போக்குமென்கிறார். (கக)

ஈடு:—நிகமத்தில்-இத்திருவாய்மொழியை யப்யஸிப்பார்க்கு, இதுதானே முதலிலே பரமபதத்தேறக்கொடுபோய், பின்னை ஸம் ஸாரமாகிற மஹாநாடகத்தை யறுக்குமென்கிறார்.

(தேனையித்யாதி) இவருடைய பயஶங்காஹேதுக்கள் சொல் லுகிறது. அவனுடைய ரஸ்யதையிறே இவரை யஞ்சப்பண்ணு கிறது. எனக்கு ஸர்வவிதபோக்யனானவனை (க) "ரஸோ-வை-ஸஃ-ஸர்வ ரஸஃ" என்னக்கடவதிறே. (திருந்துலகுண்டவித்யாதி) மேல் பயநிவ் ருத்தி ஹேதுக்களைச் சொல்லுகிறது. கட்டளைப்பட்ட ஜகத்தை ப்ரளயத்திலே யழியாதபடி திருவயிற்றிலேவைத்துப் பரிஹரித்த பெரியோனை. (வானமித்யாதி) [கொப்பூழ் - மலர்ந்ததண் - மலர் மிசை-வானநான்முகனை - படைத்தமாயோனை] வானிலே யிருக்கிற சதுர்முகனை, ஸ்ருஷ்ட்யநுகுணமான செவ்வியையுடைய திருநாபீ

(க) சாந்தோ-ரு-கச.

கமலத்திலே ஸ்ருஷ்டித்த வாஶ்சர்யபூதனை. (கோனை) நிருபாதிக ஶேஷியை, கீழ் ப்ரஹ்மாதிகளுக்குச் சொன்ன வைக்யம் ஸ்வரூபேணவன்று; கார்யகாரணபாவத்தாலே சொல்லிற்றென்னுமிடம் இங்கே ஸ்பஷ்டம். ஆபத்ஸகனுப், அழிந்தவற்றை யுண்டாக்கவல்லனுப், ப்ராப்தனுபிருக்குமவனென்கை. (வண்குருகூரித்யாதி) அராஜகமானால் ராஜபுத்ரன் தலையிலே முடியைவைத்து விலங்கு வெட்டி விடுமாபோலே இப்பத்துத்தானே முந்துறபரமபதத்தைக் கொடுத்துப் பின்னை ஸம்ஸாரமாகிற மஹாநாடகத்தையு மறுக்கும் (கக)

எட்டாம்பத்து-நான்காம் திருவாய்மொழி முற்றிற்று.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

எட்டாம்பத்து.

ஐந்தாந்திருவாய்மொழி.

மாயக்கூத்தா - ப்ரவேஶங்கள்.

ஆறு;—(மாயக்கூத்தா) இப்படி அந்த தாமரைத்தடாகமிருந்த திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாறேறச் செல்லவேணுமென்று மநோரதித்துப்போக வுத்யோகித்தவர், எம்பெருமானைக் காணப்பெறாத விடாயின் மிகுதியாலே போக க்ஷமரன்றியே, "நான்வர க்ஷமனாகிறிலேன், நீ வாராய்" என்று அத்தாமரைத் தடாகத்தைக் கூப்பிட்டழைக்கிறார். *

ப:—அஞ்சாந் திருவாய்மொழியில், கீழ் - திருச்செங்குன்றூரிலே யெழுந்தருளி நிற்கிறநிலையிலே "திருச்செய்ய கமலக்கண்ணும்" என்று தொடங்கி, திவ்யாவயவஶோபை தொடக்கமானவற்றை ப்ரத்யக்ஷஸமாநாகாரமாம்படி அந்தரங்கமாக வநுபவித்து ஹ்ருஷ்டரானவர், அவ்வடிவழகோடே பாஹ்ய ஸம்ஶ்லேஷம் பண்ணவேணுமென்று அபிஸந்திபண்ணிக் கிட்டாமையாலே ஆர்த்தராய்; அவனுடைய வநுபாவ்யமான வாபிரூப்யாதிஶயத்தையும், ஆர்த்திஹரமான மயிர்முடியையும் ஔதார்ய வைலக்ஷண்யத்தையும், ஆஶ்ரிதோபகாரார்த்தமான அர்ணவஶாயித்வத்தையும், ஆபத்ஸகத்வத்தையும், ஆகர்ஷகஸ்வபாவயோகத்தையும், அசேஷஜந ஸம்ஶ்லேஷத்தையும், ஆஶ்ரிதபக்ஷபாதத்தையும், ஏகாஶ்ரிதனையே அநேகவித கிஞ்சித்காரங் கொள்ளும்படியையும், ஆஶ்ரிதஸுலபனாய்வைத்து அறியவரியனான நிலையையுமநுஸந்தித்து, ஏவம்விதஸ்வபாவனானவனை யதா மநோரதமநுபவிக்கப் பெறாமையாலே அத்யந்தமார்த்தராய் க்லேஶித்த ப்ரகாரத்தை யருளிச்செய்கிறார். இப்படி ப்ராவண்யத்தை ஈஶ்வரன் தன்பக்கலிலே களிப்பித்தது அநுபவப்ரதிபந்தகத்தைக் கழிக்கையிலுண்டான கணிசமென்று கருத்து *

ஈடு:—கீழிரண்டு திருவாய்மொழியாலுமாக பகவத்தத்வம் பிறராலே யழியப்புகுகிறதென்று வெறுத்தார்; இதில் - தம்முடைய வார்த்தநாதத்தாலே அவனை யழிக்கப்பார்க்கிறார்.

கீழ்த்திருவாய்மொழியிலே அவனுக்குப் பரிவருண்டென்று பயமுந்தீர்ந்து வடிவழகையநுபவித்தாராய் நின்றார்; அவ்வழகு, நெஞ்சிலே, ''திகழுவென்சிந்தையுளிருந்தான்'' என்கிறபடியே யூற்றிருந்து, பாஹ்ய ஸம்ஶ்லேஷாபேக்ஷை பிறந்து, அது பெருமையாலே, ''கீழ்ப்பட்ட க்லேஶங்களுமெல்லா மொன்றுமல்ல, இதிலே யொருகலாமாத்ரம்'' என்னும்படி நொந்து, காட்டுத் தீ கதுவினாரைப்போலே தப்தராய், தம்மிற்காட்டிலு மாகுலமான கரணங்களையுடையராய், ''என்விடாயெல்லாந்தீரும்படி திவ்யாவயவங்களோடே வரவேணும், அழகிய திருவபிஷேகத்தோடே வரவேணும், மேகம் போலே வரவேணும், அழகிய வடிவோடே வரவேணும், உதய ஸமயத்திலாதித்யனைப்போலே பெரிய புகரோடே வரவேணும்'' என்றுப்போலே கூப்பிட்டு, பின்னையும் அவன் வந்து முகங்காட்டக் காணாமையாலே, நாமிந்த க்லேஶத்தோடே முடிந்துபோமித்தனையாகாதே யென்று இழவோடே தலைக்கட்டுகிறது. *

முதற்பாட்டு.

மாயக்கூத்தா ! வாமநா ! வினையேன்கண்ணா! கண்கைகால்* தூயசெய்யமலர்களாச் சோதிச்செவ்வாய்முகிழதா * சாயல் சாமத் திருமேனி தண்பாசடையா * தாமரைநீள் வாசத்தடம்போல் வருவானே ! ஒருநாள் காணவாராயே. (க)

ப:—முதற்பாட்டில், நிரதிஶயாநுபாவ்யமான வடிவழகையுடைய வாமநாதி ப்ராதுர்ப்பாவத்தை யநுஸந்தித்து, ஶ்ரமஹரமான பத்மதடாகம்போலே நான்காணும்படி வரவேணுமென்றபேக்ஷிக்கிறார்.

மாயம்-ஆஶ்சர்யரூபமான ஶீலவ்யாபாரங்களையும், கூத்தா-மநோஹாரிசேஷ்டிதத்தையு முடையையாய். வாமநா-மஹாமேருவை மஞ்சாடியாகச் சுருக்கினாப்போலே போக்யமான வாமநவேஷத்தை யுடையையாய். வினையேன்-யதாமநோரதமநுபவிக்கப்பெறாத பாபத்தையுடையவெனக்கு. கண்ணா-ஆஸந்நனாய்ப்பிறந்துவைத்து அவ்வருகுபட்ட க்ருஷ்ணனானவனாய்; கண்-அநுபவிக்க வாசைப்பட்டாரை யங்கீகரிக்கும் திருக்கண்ணும். கை-அபயப்ரதமான திருக்கையும். கால்-ஆஶ்ரயணீயமான திருவடிகளும். தூய-அழுக்கற்று. செய்ய-சிவந்து, மலர்களா-அலர்ந்த பூக்களாகவும். சோதி-மந்தஸ்மிதோஜ்ஜ்வலமான-

செம்-சிவந்த. வாய்-திருவதரம், முகிழதா-முகுளமாகவும். சாயல்-ஒளியையுடைத்தாய். சாமம்-ஶ்யாமளமான. திருமேனி-திருமேனி தண்-குளிர்ந்த. பாசடையா-பச்சிலைச்செறிவாகவும். (க)"உத்புல்லபங்கஜதடாகஇவ-உத்புல்லபங்கஜதடாகமிவ" என்கிறபடியே, தாமரை-அலர்ந்த தாமரைப்பூக்களையுடைத்தாய். நீள்- பெரியதாய், வாசம்-பரிமளோத்தரமான. தடம்போல் தடாகம் நடக்குமாபோலே. வருவானே-வருபவனே, ஒருநாள்-ஒருநாள். காண-காணும்படியாக. வாராய்-வந்தருளவேணும். (க)

ஆறு:—வாமநனும், ஸ்ரீவஸுதேவர் திருமகனும்வந்து திருவவதாரம் பண்ணி, ஆஶ்சர்யமாய் தர்ஶநீயமான திவ்ய சேஷ்டிதங்களைப் பண்ணுகிறது அடியேனுக்காகவன்றோ; பின்னையும் நான் பாக்யஹீநனுகையாலே காணப்பெறுகிறிலேன்; அடியேனுடைய கண்களின் விடாய்தீரும்படி யொருநாள்காண, உன்னுடைய திருக்கண் கை கால்கள் தூயசெய்யமலர்களாகவும், சோதிச்செவ்வாய்முகிழதாகவும், உஜ்ஜ்வலமா யாஶ்சர்யமாயிருந்த திருமேனியைக்குளிர்ந்த இலையாகவுமுடையையாய், புண்யகந்தவாஸிதாநந்தகந்தராளனுமாயிருந்தநீ, ஒருதாமரைத்தடாகம் நடந்துவருமாபோலே வாராயென்று கூப்பிடுகிறார். (க)

ஈடு:—என்விடாயெல்லாந் தீரும்படி, ஒரு தாமரைத்தடாகம் போலே வந்து தோற்றி யருளவேணுமென்கிறார்.

(மாயக்கூத்தா) ஆஶ்சர்யங்களையும் மநோஹாரிசேஷ்டிதங்களையுமுடையவனே. இந்த்ரனுடைய விரப்புத் தலைக்கட்டுகைக்காக அன்றே பிறந்து அன்றேவளர்ந்து அன்றேயிரப்பிலே யதிகரிக்கையும், மஹாபலி யஜ்ஞவாடத்தளவும் தர்ஶநீயமாம்படி நடந்துசென்று "மாவலி" என்றாப்போலே முக்தஜல்பிதங்கள் முதலான மநோஹாரி சேஷ்டிதங்களையு முடையவனே, நடந்துசென்றநடை, வல்லாராடினுப்போலே யிருக்கிறதாயிற்று இவர்க்கு. (வாமனா) இரந்து மிரந்தவர்க் கீகையே ப்ரயோஜநமா யிருக்கிறவனிறே, தன்னைக்காண்கையே ப்ரயோஜநமா யிருக்கிற வென்னை இரப்பாளனுக்கி யிரங்கா திருக்கிறான். (வினையேன்கண்ணா) ஸ்ரீவாமநனாய்

(க) ரஸ்த-சுரு

வந்தவதரித்தது இந்த்ரனுக்காறைப்போலே; க்ருஷ்ணனாய் வந்தவதரித்தது தமக்காகவென்றிருக்கிறார். அவதாராந்தரங்களிற்காட்டில் க்ருஷ்ணாவதாரத்திலண்ணிமையாலே சொல்லுகிறார். ஸர்வஸாதாரணனுடைய அவதாரமாகையாலே, உகந்தவர்களுக்கெல்லாம் "எனக்கு" என்னலாயிருக்கையாலே சொல்லுகிறாரென்றுமாம்; வினையேனென்கிறது - பல்லிலே பட்டுத்தெறித்தாப்போலே, அவதாரத்துக்குப் பிற்பட்டபடியாலே சொல்லுகிறார்.

(கண்கைகால்தூய செய்யமலர்களா) கிட்டினாரோடு முதலுறவுபண்ணும் கண்; நோக்குக்குத்தோற்றவர்களை யணைக்கும் கை, ஸ்பர்சத்துக்குத் தோற்றுவிழுந் திருவடிகள்; அங்கேகிடந்து தலையெடுத்தநுபவிக்குமதாய்க் கண்டபோதே விடாய்தீரும்படி ஸ்யாமமான திருமேனிக்குப் பரபாகமான நிறத்தையுடைத்தான தாமரைப் பூவாக (சோதிச்சேவ்வாய்முகிழதா) புகரையுடைத்தாய்ச் சிவந்திருக்கிற திருவதரமானது, அதில்முகுளமாக. (௧) "அவாகீ அநாதர:– அவாக்யநாதர:" என்கிற தத்வமாகையாலே, காம்பீர்யாதிசயத்தாலே, ஸ்மிதம் விகாஸோந்முகமான வளவாயிறேயிருப்பது; ஆகையாலே - முகுளமென்கிறது. (சாயற்சாமத்திருமேனிதண்பாசடையா) ஒளியையுடைத்தாய் ஸ்யாமமானதிருமேனி, குளிர்ந்த பச்சிலையாக; (௨) "ஸுஸாரோஷ்ட: ஸுநாஸிகாஸ:– புருஷ: புண்டரீகாக்ஷ:" (௩) "அக்கமலத்திலைபோலும்" என்கிறபடியே.

(தாமரை நீள்வாசத் தடம்போல் வருவானே) பரப்புமாறத் தாமரை மலர்ந்திருப்பதாய், ஏகார்ணவத்தை யொருதடாகமாக்கினாற்போலே பரந்திருப்பதாய், அப்பரப்படங்க பரிமளத்தாலே நிரம்பி யிருப்பதொரு தடாகம் நடந்து வருமாபோலேயாயிற்று பரிமளம் முன்பே அலையெறியவருப்போதிருப்பது, (ச) "ஸர்வரஸ:– ஸர்வகந்த:" என்னக்கடவதிறே. (வருவானே) வரும்ஸ்வபாவனே. முன்பு தன்பக்கல் வரும்படியை யுபகாரஸ்ம்ருதியாலே சொல்லுகிறார். (ஒருநாள்) "ஒருகால் நாக்குநினைக்க" என்பாரைப்போலே; (காண) வந்தால் கொள்ளும் ப்ரயோஜநம், காணுமிதுவே. ஒருதேசவிசேஷத்திலும் * ஸதா தர்ஸநத்திலேயிறே அந்வயம். அப்பேறு

(௧) சாந்தோ-௩-௧௪. (௨) வராஹ புராணம்.
(௩) ௯-௭-௩. (ச) சாந்தோ ௩-௧௪

பெறும்படி. (வாராயே) அத்தலையாலே வரக் காணவிருக்குமவ ரிறே; (க) "யமேவைஷ வ்ருணுதே தேந லப்ய - தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதே தநூம் ஸ்வாம்" என்கிறபடியே தாம் கிட்டிக் காணுமது ஸ்வரூப விரோதமென்றிருக்கிறார். (க)

இரண்டாம் பாட்டு.

காணவாராயென்றென்று கண்ணும்வாயுந்துவர்ந்து * அடியேன் நாணிநன்னாட்டு அலமந்தால் இரங்கி ஒருநாள் நீ அந்தோ! * காணவாராய் கருநாயிறுதிக்கும் கருமாமாணிக்க * நாள்நல்மலை போல் சுடர்ச்சோதி முடிசேர்சென்னியம்மானே ! (உ)

ப:—அநந்தரம், தர்சநீயமான மயிர்முடியையுடைய நீ, என் க்லேசந்தீரக்கண்டநுபவிக்கும்படி வந்தருளவேணுமென்கிறார்.

(இ-ள்.) கரு-கறுத்த. நாயிறு-ஆதித்யன். உதிக்கும்-உதித்துக்கிளம்பி யிருப்பதாய். மா-மஹத்தான. கருமாணிக்கம்-நீலரத்நமாய், நாள்-செவ்வியழியாதபடி. நல்-தர்சநீயமான. மலைபோல் - பர்வதம்போலே. சுடர் - பரம்புகிறசுடரையுடைத்தான. சோதி - தேஜஸ்ஸையுடைய. முடி . மயிர்முடியோடே. சேர்-சேர்ந்த. சென்னி-உத்தமாங்கத்தையு டைய. அம்மானே-ஸ்வாமியானவனே. காண உன்வடிவழகைக்காணும் படிவாராய்-வரவேணும். என்றென்று-என்று பலகாலும் பார்த்துக்கூப் பிட்டு. கண்ணும்-பார்க்கிறகண்ணும், வாயும்-கூப்பிடுகிறவாயும். துவ ர்ந்து-பசையறவுலர்ந்து. நாணி-நம்மபேக்ஷை யெங்ஙனே பலப்ராப் தையாயிற்றென்று லஜ்ஜித்து. நல் - ஸ்வாபிமதம்பெற்றுகந்திருக்கிற. நாடு-நாட்டிலே. அடியேன்-சேஷத்வம் நிரூபகமான நான். அலமந் தால்-இப்படி யலமந்தால், ஒருநாள்-ஒருநாள். இரங்கி-க்ருபைபண்ணி நீ-க்ஷணமும் பிரியவொண்ணாதவழகையுடைய நீ. காண-காட்சியாகிற ப்ரயோஜநத்தைப் பெறும்படி. வாராய்-வருகிறிலை. அந்தோ !- ஐயோ !.

ஆசைப்பட்டுக் கூப்பிட்டாலும் முகங்காட்ட வரலாகாதோ. (உ)

ஆறு:—(காணவாராய்) காணவாராயென்றென்று கூப்பிட்டுக் கண்ணும் வாயும் துவர்ந்து, நாணிப்பாடு படச்செய்தேயும் நீ வாரா

(க) கடவல்லி-உ-நு.

தொழிந்தவாறே உன்னை நிர்க்ருணனென்று லோகத்தார் சொல்லுகிறாரென்று அடியேன் லஜ்ஜித்து, உன்னைக்காணப்பெற்று ஸம்ருத்தமான விந்நாட்டிலே நானொருவனு முன்னைக் காணப்பெறாதேகிடந் தலமந்தால். என்பக்கலிலே க்ருபைபண்ணி, ஜாஜ்வல்யமான நீலாளக பந்த பந்துரோத்தமாங்கனும், நீலஜ்யோதிர்மய திவ்ய ரூபனும் உத்யந் நீலகபஸ்தி மாலிவிலஸிதமாய், புஷ்பஹாஸ ஸௌகுமாரமாயிருப்பதொரு கருமாணிக்கமலை நடந்துவருமாபோலே காணவாரா யென்கிறார்.

*

ஈடு; அவ:—என்விடாய் கெடும்படி அழகிய மயிர்முடியுடன் வந்துதோற்றி யருளவேணுமென்கிறார்.

(காணவாராயென்றென்று) ஒருகால் "காணவாராய்" என்றால் வரக்காணவிட்டால், ஆறியிருக்கவல்லரன்றே; பின்னையும் "காணவாராய், காணவாராய்" என்பராயிற்று. (கண்ணும் வாயுந் துவர்ந்து) எங்ஙனே வருமென்றறியாமையாலே, திக்குகள்தோறும் பார்த்துக் கண் பசையறவுலர்ந்தது. (க) "கண்ணநீர்கைகளாலிறைக்கும்" என்னும் தசையும் கழிந்தது. கூப்பிட்டு வாயும்பசையறவுலர்ந்தது. (அடியேன்நாணி) அத்தலையிலவத்யம் நம்மதாம்படியான ஸம்பந்தமுடைய நான்லஜ்ஜித்து. இவனை நாட்டாரென்சொல்லுகிறார்களென்று லஜ்ஜித்தென்னுதல்; ப்ரயோஜநார்த்தியாய்க் கூப்பிடுகையன்றியே, முறையறிந்து காண்கைக்குக் கூப்பிட்ட நமக்குத் தன்படி யழகிதாயிருந்ததென்று லஜ்ஜித்தென்னுதல்.

(நன்னாடு) (உ)* அநந்தக்லேஶபாஜநமாகையாலே விபரீதலக்ஷணையாதல்; விஷயாநுபவத்தாலே களித்துவர்த்திக்கும் தேசமென்னுதல். பிள்ளான், "எம்பெருமானைப்பெற் றநுபவிக்கும் நாடு காண்" என்னுமாம்; "இல்லையாகில் கூப்பிடார்களோ" என்று. (அலமந்தால்) தடுமாறினால் (இரங்கி) உனக்கபேக்ஷையில்லாவிட்டால் பரார்த்தத்துக்கிரங்கவேண்டாவோ?; ருஷிகளுக்குள்ள வாந்ருஶம்ஸ்யமுமில்லையோ. (ஒருநாள்) பலநாள் வேணுமென்கிறேனோ (நீ) கண்டுகொண்டு நிற்கவேண்டும்படி வைலக்ஷண்யத்தையுடைய நீ. (அந்தோ!) உன் வைலக்ஷண்யமறியாதொழிந்தால், என்னார்த்தியு மறியாதொழிவதே! (காணவாராய்) ப்ரயோஜநார்த்தி யாயழைக்கிறேனோ.

(க) எ-உ-க. (உ) ஜிதந்தை.

(கருநாயிறுதிக்கும்) கறுத்திருக்கிற வாதித்யனுதிக்கிற. (கருமாமாணிக்கநாணன்மலைபோல்) அவ்வாதித்யனுதிக்கிற வுதயகிரியிருக்கிறபடி. நீலமாய்ப் பெருவிலையனான ரத்நபர்வதம்போலே. (நாணன்மலை) "நாட்பூ" என்னுமாபோலே, அபிநவமாய் தர்ஸநீயமானமலை. "கருமாமாணிக்கம் - நன்மலைமேல் - கருநாயிறுதிக்கும் பொழுது - போல் - முடிசேர்சென்னியம்மான்" என்றுகூட்டுவது. நாள் - பொழுது. (சுடர்ச்சோதிமுடி) மிக்க புகரையுடையமயிர்முடி; "கருநாயிறுதிக்கும்" என்கிற த்ருஷ்டாந்தபலத்தாலே,முடியென்று மயிர்முடியாகிறது. (சேர்சென்னி) அதுக்காஸ்ரயமான திருமேனி ரத்நபர்வதம்போலே யாயிற்றிருப்பது. (அம்மானே) ஸர்வேஸ்வரனே. ஸம்ஸாரிமுக்தனைச் சென்றால், தாபஹரமாக அவனுக்குச் செய்வது திருக்குழலைப்பேணுமத்தனை. (௨) "கேஸவஃ க்லேஸநாஸநஃ-கேஸவஃக்லேஸநாஸநஃ" என்றிறேயிருப்பது. (௨)

மூன்றாம்பாட்டு.

முடிசேர்சென்னியம்மா! நின்மொய் பூந்தாமத்தண்துழாய் *
கடிசேர்கண்ணிப்பெருமானே! என்றென்றேங்கி அழுதக்கால் *
படிசேர்மகரக்குழைகளும் பவளவாயும்நால்தோளும் * துடிசேரி
டையுமமைந்தது ஓர் தூநீர்முகில்போல்தோன்றாயே. (௩)

ப:—அநந்தரம், ஆபரணாவயவஸோபையையுடைய காளமேகம் போலே உன்னுடைய ஔதார்யம் ப்ரகாசிக்கும்படி வந்துதோற்ற வேணுமென்கிறார்.

(இ-ள்; முடி-உபயவிபூதிநாதத்வத்தால்வந்த வாதிராஜ்யத்துக்கு ஸூசகமான திருவபிஷேகத்தோடு. சேர்-பொருந்தின. சென்னி-திருமுடியையுடைய. அம்மா-ஸ்வாமியானவனே. நின்-உனக்கஸாதாரணமாய். மொய்-செறிந்த. பூ-தர்ஸநீயமாய். தண்-குளிர்ந்த. துழாய்-திருத்துழாயாகிற. கடிசேர்-பரிமளோத்தரமான. கண்ணி மாலையையுடைய. பெருமானே-ஸர்வாதிகனானவனே. என்றென்று-என்றென்று. ஏங்கி பொருமி. அழுதக்கால்-அழுதால். படி-வடிவுக்கு. சேர்-சேர்ந்த. மகரக்குழைகளும் - திருமகரக்குழைகளும். பவளம்-பவளம்போன்ற. வாயும் திருவதரமும். நால்-நாலு. தோளும் - திருத்தோளும். துடிசேர்-துடிபோலேயிருக்கிற, இடையும் - இடையுமுடைத்தாம்படி. அமைந்

தது-சமைந்த. தூ - நிர்மலமான. நீர் - நீர்மையாலே பூர்ணமாய். ஓர் அபூதபூர்வமாயிருப்பதொரு. முகில்போல் - மேகம்போலே, உன்னுடைய உபகாரகத்வம் ப்ரகாசிக்கும்படி. தோன்றாய்-தோன்றவேணும்.

ஆறு:—(முடிசேர்) நிரதிசயபரிமள துளஸீஸிதரமான வளகபாரத்தை யுடையவனே யென்றென்றேங்கி யழுதக்கால், கர்ணபாச ஸம்ஸ்லிஷ்ட மகரகுண்டல வித்ரும ஸத்ருசாதர சதுர்ப்பாஹு தநுதரமத்ய சோபிதமாய் விமலஸலில பரிபூர்ணமா யிருப்பதொரு பயோதம்போலே வந்து தோன்றுகிறிலை யென்கிறார்.

ஈடு அவ:—தெளிந்தநீரைப்பருகின காளமேகம்போலே ச்ரமஹரமான வடிவோடே யென்னார்த்திதீரவந்து தோற்றவேணுமென்கிறார்.

(முடிசேர்சென்னியம்மா) ஆதிராஜ்ய ஸூசகமான திருவபிஷேகம் சேர்ந்த சென்னியையுடைய ஸர்வேச்வரனே. (நின்மோய் பூந்தாமத்தண்டுழாய்) தகுதியாய்ச்செறியத் தொடுக்கப்பட்டு மநோஹரமாய் ஒளியை யுடைத்தாய் ச்ரமஹரமாய், நாட்செல்ல நாட்செல்லப் பரிமளம் மிக்குச்செல்லுகிற திருத்துழாய்மாலையையுடைய ஸர்வேச்வரனே. (என்றென்று) ஒருகால்சொல்லி யாறியிருக்கிறேனுப் தானுறியிருக்கிறோமோ. (ஏங்கியழுதக்கால்) பொருமியழுதக்கால். என்னழுகைக் குரலில் தளர்த்தியைக்கேட்டால் சடக்கென வந்து கொடுநிற்கவேண்டாவோ.

(படிசேர்மகரக்குழைகளும்) படியாய்ச்சேர்ந்தவென்னுதல் படியிலேசேர்ந்தவென்னுதல்; ஸ்வபாவமாய்க்கொண்டு சேர்ந்தவென்னுதல், திருமேனியிலே சேர்ந்தவென்னுதல். (க) "படிகண்டறிதியே" என்னக்கடவதிறே. (பவளவாயும்) பந்தமெல்லாந்தோற்றும் திருப்பவளமும். (நாற்றோளும்) அணைக்கைக்குக் கல்பகதரு பணைத்தாப்போலே நாலுதோளும். (துடியித்யாதி) துடிபோலேயிருந்த விடையுமாய்க்கொண்டு சமைந்ததொரு முகில்போலேயாயிற்று வடிவிருப்பது. இவ்விசேஷணங்கள் கேவலம் முகிலுக்கில்லாமையாலே அபூதோபமை. (தூநீர்முகில்) தெளிந்தநீரை முகந்த முகில். அகவாயில் தண்ணளியெல்லாம் வடிவிலேகாணலாம்படி வந்து தோற்றவேணும். (ரு)

(க) க-திருவ-அரு.

நான்காம்பாட்டு.

தூநீர்முகில்போல்தோன்றும் நின்சுடர்கோள்வடிவும் கனிவாயும் *தேநீர்க்கமலக்கண்களும் வந்துஎன்சிந்தைநிறைந்தவா!* மாநீர்வெள்ளிமலைதன்மேல் வண்கார்நீலமுகில்போல * தூநீர்க்கடலுள்துயில்வானே! எந்தாய்! சொல்லமாட்டேனே. (௪)

ப:—அநந்தரம், ஆஶ்ரிதார்த்தமாக க்ஷீரார்ணவத்திலே கண்வளர்ந்தருளுகிற வுன் வடிவழகு என்னெஞ்சிலேநிறைந்தபடி சொல்லமாட்டுகிறிலே னென்கிறார்.

(இ-ள்.) மா பெரிய. நீர்-நீருக்குள்ளே கிடக்கிறதொரு, வெள்ளிமலை தன்மேல்-வெள்ளிமலையின்மேல். வண்-உதாரமான. கார்-கார்காலத்தில் நீலமுகில்போல -காளமேகம்போலே. தூ-வெளுத்த. நீர்-நீரையுடைய கடலுள்-க்ஷீரார்ணவத்திலே. ஓங்கின திருவரவணையின்மேலே, துயில்வான் கண்வளர்ந்தருளுகிற, எந்தாய் - என்ஸ்வாமியானவனே. தூ தெளிந்த,நீர்-நீராலேபூர்ணமான. முகில்போல்-மேகம்போலே, தோன்றும்-ப்ரகாசியாநிற்கிற. நின் உன்னுடைய. சுடர்-ஒளியை, கொள் உடைத்தான. வடிவும் - வடிவும், கனி - பக்வபலம்போலேயிருக்கிற- வாயும்-திருவதரமும். தேன்நீர் மது ஜலத்தையுடைய. கமலம் கமலம் போலே ஶ்ரமஹரமான. கண்களும்- திருக்கண்களும், வந்து - இங்கே வந்து, என்-என். சிந்தை-நெஞ்சு. நிறைந்தவா-நிறைந்தபடி. சொல்ல மாட்டேன்-பாசுரமிட்டுச்சொல்லமாட்டுகிறிலேன்.

தேனீர்கமலம் - தேனை ஸ்வபாவமாகவுடைய கமலமென்றுமாம். வெள்ளிமலையென்கிற த்ருஷ்டாந்தபலத்தாலே திருவரவணை அத்யாஹார்யம்; அன்றியே, ஶ்லாக்யமான நீர்மையையுடைய வெள்ளிமலையென்று ஓங்கின க்ஷீரார்ணவத்துக்கு த்ருஷ்டாந்தமாகவுமாம். (௪)

ஆறு:- (தூநீர்) விமலஸலில பரிபூர்ணமாயிருப்பதொருபயோதம் போலேயிருந்த வுன்னுடைய வுஜ்ஜ்வலமான திருவடிவும். கனிவாயும், மகரந்தநிர்ப்பரமாய் * கம்பீராப்பஸ்ஸமுத்பூதமாய் * ஸம்ருஷ்டநாளமாய் * ரவிகரவிகஸிதமான புண்டரீகதளம்போலேயிருந்த திருக்கண்களும், நயநகோசரமன்றியே வந்து என் சிந்தை நிறைந்து வ்யஸநகரமாகிறபடி சொல்லநிலமல்லவென்கிறார் (௪)

ஈடு:—அவ; உன்னுடைய வடிவழகுவந்து என்மநஸ்ஸிலே நிறைந்து நலிகிறபடி யென்றால் பேசிமுடிகிறதில்லை யென்கிறார்.

(தூநீர்முகில்போல்தோன்றும்) *கண்டபோதே விடாய்கெடும்படியான வர்ஷுகவலாஹகட்போலே யாயிற்றுத்தோன்றுவது.* (நின்சுடர் கோள்வடிவும்) *ஶுத்தஸத்த்வமயமாகையாலே நிரவதிகதேஜோரூபமான விக்ரஹத்துக்கு, அன்னலும் துன்னலுமாய்த் திரண்ட மேகத்தையொப்பாகக் சொல்லவொண்ணாதிறே.* (௧) * *ஒண்சுடர்க்கற்றையிறே.* (கனிவாயும்) *கண்டபோதே நுகரலாம் கனி* போலேயிருக்கிறவாயும். (தேனீர்கமலக்கண்களும்) *தேனாகிற நீரையுடைத்தான தாமரைப்பூப்போலே யிருந்தகண்களும். இத்தால்-செவ்வியைநினைக்கிறது. தேனினுடைய நீர்மையையுடைய கண்களென்றுமாம். அதாவது-கண்ணாலேபருகலாயிருக்கை.* (வந்தேன்சிந்தைநிறைந்தவா)*[வந்தேன்சிந்தைநிறைந்தவா-சொல்லமாட்டேன்]என்றந்வயம். இதரவிஷயங்களநுபவித்துவிட்டால்விஸ்மரிக்கலாயிருக்கும், இவ்விஷயமநுபவித்துப் பேரநின்றாலும் நெஞ்சிலே யூற்றிருக்கும்.*

(மாநீர் வெள்ளிமலைதன்மேல்) *மிக்கநீர்வெள்ளத்தே யொரு வெள்ளிமலையின்மேலே.* (வண்கார்நீல்முகில்போல) *உதாரமாய்க் கறுத்து நெய்த்திருப்பதொருமுகில் படிந்தாப்போலே யென்னுதல், உதாரமாய்க் கார்காலத்தில் முகில்படிந்தாப்போலே யென்னுதல்.* (தூநீர்க்கடலுள் துயில்வானே) *ஶுத்தஜலத்திலே திருவநந்தாழ்வான்மேலே கண்வளர்ந்தருளுகிறவனே. வெள்ளிமலையென்கிற த்ருஷ்டாந்தபலத்தாலே தார்ஷ்டாந்திகத்திலும் அழைத்துக்கொள்ளுமித்தனை.* (எந்தாய்) *கீழ்ச்சொன்ன வைலக்ஷண்யமில்லையாகிலும் விடவொண்ணாத ப்ராப்தியிருக்கிறபடி.* (எந்தாய்-வந்தேன்சிந்தைநிறைந்தவா-சொல்லமாட்டேன்) *மநஸ்ஸில் ப்ரகாஶம் க்லேஶஹேதுவாகாநின்றது, இதுக்கொரு பாசுரமறிகிறிலேன். விரஹதசையில் குணாநுஸந்தாநம் க்லேஶத்துக்குடலாமத்தனையிறே; தூநீர்க்கடலுள் துயில்வானென்று- "காணவேணும்" என்னுமபேக்ஷையில்லாதார்க்கு முற்பாடனாய்வந்து சாய்ந்தபடிசொல்லுகிறது* (௪)

ஐந்தாம்பாட்டு.

சொல்லமாட்டேன்அடியேன் உன்துளங்குசோதித் திருப்பாதம்* எல்லையில்சீரிளஞாயிறு இரண்டுபோலென்னுள்ளவா! * அல்லலென்னும் இருள்சேர்தற்கு உபாயமென்னே ? * ஆழிசூழ் மல்லைஞாலமுழுதுண்ட மாநீர்க்கொண்டல்வண்ணனே !

(௧) ௧-௭-௪

ப:—அநந்தரம், ஆபத்ஸகனுடைய உன் திருவடிகள், பாலாதித்யர்கள் போலேயென் னெஞ்சிலே ப்ரகாசியாநின்றதுகள்; கிட்டி யநுபவிக்கப் பெறாமல் க்லேசியாதபடி மறக்க விரகேதோவென்கிறார்.

(இ-ள்.) ஆழி-ஸமுத்ரத்தாலே. சூழ்-சூழப்பட்ட-மல்லல், பெரிய. ஞாலம்-ஜகத்தை, முழுது-எல்லாம். உண்ட-ப்ரளயங்கொள்ளாமல் வயிற்றிலேவைத்து. மா நிரம்பின நீர்-நீரையுடைத்தான. கொண்டல்-காளமேகம்போலே யிருக்கிற. வண்ணனே-வடிவையுடையவனே. அடியேன்-உன்னுபத்ஸகத்வத்துக்குத் தோற்றடிமைப்பட்ட நான். என்ன கவியில் ப்ரகாசத்துக்கு சொல்லமாட்டேன்- பாசுரமிட்டுச் சொல்ல மாட்டுகிறிலேன்; உன்- உன்னுடைய. துளங்கு- விளங்குகிற. சோதி தேஜஸ்ஸை யுடைத்தான. திருப்பாதம்-திருவடிகளானவை. எல்லையில் அளவிறந்த. சீர்-அழகை யுடைய. இளநாயிறு-பாலாதித்யர்கள். இரண்டுபோல்- இருவரைப்போலே, என் என். உள்ளவா- உள்ளேயாகாநின்றன. இப்படி ப்ரகாசியாநிற்கக் கண்டு கிட்டி யநுபவிக்கப் பெறாமல் க்லேசியாதபடி, அல்லல்- துக்கரூபம். என்னும்- என்னலாம்படியான. இருள்- மறப்பாகிறவிருளை. சேர்தற்கு- கிட்டுகைக்கு. உபாயம்- வழி, என்னே ஏது. சொல்லவேணும். ஆந்தரமாக ப்ரகாசிக்கச்செய்தே, பாஹ்ய ஸம்ஸ்லேஷம் கிடையாதொழிவதில் மறக்கை யுத்தேஸ்யமென்று கருத்து. பூர்வோத்தரங்களான பாட்டுக்களார்த்தி ஸூசகமாகையாலே யிதுக்குமிதுவேபொருள். (ரு)

ஆறு:— (சொல்லமாட்டேன்) ப்ரளயகால ஸகல ஸலில பரிபூர்ணமான மேகத்தின் நிறம்போலேயிருந்த திருநிறத்தையுடையவனே; உன்னுடைய நிரதிஶயதிப்தியுக்தமான திருவடிகள் நிரதிஶய தேஜோமயமாய் நிரவதிகஸௌந்தர்ய நிதியாயிருப்பது இளநாயிறிரண்டுபோலே யென்னுள்ளே விளங்குகிறபடி மறக்கவும் முடிகிறதில்லையென்கிறார். (ரு)

ஈடு; அவ:—உன்னுடையவழகுஎன் ஹ்ருதயத்திலே ஸ்ம்ருதிவிஷயமாய் நலியாநின்றது, இது மறக்க வொருவிரகுசொல்லவேணுமென்கிறார்.

(சொல்லமாட்டேன்) என் ஹ்ருதயத்திலேநின்று நலிகிறபடிக்குப் பாசுரமிடப்போகிறதில்லை. (அடியேன்) ஸம்பந்தத்தாலே தவிரமாட்டுகிறிலேன். (உன்துளங்கித்யாதி) அதேதென்ன; விளங்

காநின்றுள்ள வொளியையுடைய உன்திருவடிகள். (எல்லேயித்யாதி) அளவிறந்த வழகையுடைய பாலாதித்யர்களிருவரைப்போலேயென் ஹ்ருதயத்தேநின்று நலிகிறபடி. பாலாதித்யர்களென்கிறது - கண்ணுலே பருகலாயிருக்கையாலும், பாதிக்கத்தொடங்கின வித்தனையென்று தோற்றுகையாலும். (இளநாயிறு) என்னை பாதிக்க பாதிக்க விளமைமிகுகிறபடி. [என்னுள்ளவா-சொல்லமாட்டேன்.]

(அல்லலித்யாதி) "உன்னைக்காட்டாதே அருமைப்படுத்தப் பார்த்தாயாகில், நாட்டார் 'தண்ணிது' என்கிற வஜ்ஞாநம் வருவதோருபாயமேதோ" என்றருளிச்செய்வர் பட்டர்; இப்போது மறந்து பிழைக்கலாமென்னுமத்தாலே. "திருவடிகள் என்ஹ்ருதயத்திலே ப்ரகாசியாநிற்க, துஃகாத்மகமா மஜ்ஞாநம் வருகைக்கு உபாயமுண்டோ" என்னுமம்மாள். உண்டாகி லுண்டுடுத்துத் திரியலாமே நாட்டாரோபாதி. (ஆழியித்யாதி) கடல்சூழ்ந்த மஹாப்ருதிவியை யெல்லாம் ப்ரளயத்திலே நசியாமே வயிற்றிலே வைத்து ரக்ஷித்த பரமோதாரனே. ஆழிசூழ்மல்லைஞாலம் முழுதுண்டமாநீரென்று - ஏகார்ணவமாய், அத்தைப்பருகின மேகம்போலே யிருக்கிற வடிவையுடையவனென்னுதல்; மல்லைஞாலம் - மஹாப்ருதிவி (ங)

ஆறும்பாட்டு.

கொண்டல்வண்ணு! குடக்கூத்தா! வினையேன்கண்ணு! கண்ணு! * என் அண்டவாணு! என்றுஎன்னை ஆளக்கூப்பிட் டழைத்தக்கால் * விண்தன்மேல்தான்மண்மேல்தான் விரிநீர்க் கடல்தான்மற்றுத்தான்* தொண்டனேன்உன்கழல்காண ஒருநாள் வந்துதோன்றுயே! (சு)

ப:—அந்தரம், ஆகர்ஷகமான ஸௌந்தர்யசேஷ்டிதாதிகளிலே யகப்பட்டுக்கூப்பிட்டால் ஏதேனுமொருமுகத்தாலே வந்து தோன்ற வேணுமென்கிறுர்.

(இ-ள்) கொண்டல் - ஸ்ரமஹரமான காளமேகம்போன்ற, வண்ணு - வடிவையுடையவனே. அவ்வழகேயன்றியே, குடக்கூத்தா - மநோஹாரி சேஷ்டிதமான குடக்கூத்தையுடையவனே, வினையேன் - அத்தைக் கண்டநுபவிக்கப்பெருத பாபத்தையுடைய வெனக்கு, கண்ணு - த்ருஷ்

டிபூதனானவனே, கண்ணா - ஆச்ரிதபவ்யனுகைக்காக க்ருஷ்ணனானவனே, என் - எனக்கு ப்ராப்யபூதனாகைக்காக, அண்டவாணா-பரமபத நிர்வாஹகனாயிருக்கிறவனே, என்று-என்று, பலகாலு முன்ஸ்வபாவங்களைச் சொல்லி, என்னை - ஆள-அடிமைகொள்ளுகைக்காக, கூப்பிட்டு. என்னார்த்த்ய திசயத்தாலே கூப்பிட்டு, அழைத்தக்கால்-அழைத்தக்கால், காளமேகம்போலே, விண்டன்மேல்தான் - பரமபதத்தில் நின்றுதல், மண்மேல்தான்-அவதாரங்களுக்கு மர்ச்சைகளுக்கும் ஸ்த்தலமான பூமியில்நின்றுதல், விரிநீர்க்கடல்தான் - அவதாரகந்தமான க்ஷீரார்ணவத்தில் நின்றுதல், மற்றுத்தான்-அந்தராத்மாவாய் நிற்கிறவகவாயில் நின்றுதல், தொண்டனேன் - அதிசபலனான நான், உன்னை-உன், கழல் திருவடிகளை, காண-காணும்படியாக, ஒருநாள்-ஒருநாள் வந்து-வந்து, தோன்றாய்-தோன்றவேணும். (சு)

ஆறு:—(கொண்டல்வண்ணா) மேகச்யாமளனே, அசேஷ மனோநயநஹாரி திவ்யசேஷ்டிதங்களை யுடையவனே, பாக்யஹீநனானவென்னுடைய கண்ணா, கண்ணா என்று என்னை யடிமைகொண்டருளுகைக்காகக் கூப்பிட்டழைத்தக்கால், திருநாட்டில் நின்றுதல், பூமியிலுள்ள திருநகரிகளில் நின்றுதல், திருப்பாற்கடலில்நின்றுதல் ஒருதூணில்நின்றுதல், தொண்டனே னுன்கழல்காண வொருநாள் வந்து தோன்றாயென்கிறார். (சு)

ஈடு; அவ:—உன்னுடைய ஸௌந்தர்யாதிகளை நினைத்து "காணவேணும்" என்று கூப்பிடுகிற நான்காணும்படி யேதேனுமோரிடத்திலேவந்து தோற்றியருளவேணுமென்கிறார்.

(கொண்டல்வண்ணா) காணவே விடாயாறும்படியான வடிவையுடையவனே. (குடக்கூத்தா) மனோஹாரியான சேஷ்டிதத்தை யுடையவனே. (வினையேன்கண்ணாகண்ணா) எனக்கு த்ருஷ்டி பூதனான க்ருஷ்ணனே. (வினையேன்) கண்ணை யிழந்திருக்கும்படியான பாபத்தைப் பண்ணினேன். (என்னண்டவாணாவென்று) என்னை விஷயீகரிக்கைக்காக அண்டாதிபதியானவனே! கல்யாணகுணயோகம் ஆச்ரிதார்த்தமா யிருக்குமாபோலே, விபூதியோகமும் தமக்காகவென்றிருக்கிறார். (என்னையாள) ஒரு ப்ரயோஜநாந்தரத்துக்காக வழைக்கிறேனோ, என்னை நித்யகைங்கர்யங் கொள்ளவேணுமென்றன்றோ வழைக்கிறது. (கூப்பிட்டழைத்தக்கால்) க்ரமப்ராப்தி

ஸஹிக்கவல்லேனாய்த்தான் தாழ்க்கிறாயோ. என்றார்த்தநாதங்கேட்டால் "க்ரமத்திலேவருகிறோம்" என்றாறியிருக்கலாயிருந்ததோ.

(விண்டன்மேல்தான்) மாநீர்க்கொண்டல் ஸஞ்சரிக்குமாகாஶத்திலே தோற்றவுமமையும். (விண்டன்மேல்தான்) பரமபதத்திலிருக்கிற விருப்போடேவந்து தோற்றவுமாம். (மண்மேல்தான்) அவதரித்துத்தோற்றவுமாம். (விரிநீர்க்கடல்தான்) க்ஷீராப்தியில் கண்வளர்ந்தருளுகிறபடியே வந்து தோற்றவுமாம். (மற்றுத்தான்) தூணிலேவந்து தோற்றினாப்போலே யாதல், ஆனைக்குவந்து தோற்றினாப்போலே யாதல், தோற்றவுமாம். (தொண்டனேன்) உன் திருவடிகளில் கைங்கர்யத்தில் சபலனான நான். (உன்கழல்காண) எனக்கு ஜீவநமான திருவடிகளைக்காண. (ஒருநாள்வந்துதோன்றாயே) "பலநாள்வேணும்" என்று நிர்ப்பந்திக்கிறேனோ; என் ஸத்தைகிடக்கைக்கு ஒருநாள்வந்து தோற்றியருளவேணும். (௬)

ஏழாம்பாட்டு.

வந்துதோன்றாயன்றேல் உன் வையம்தாயமலரடிக்கீழ் * முந்
திவந்துயான்நிற்ப முகப்பேகூவிப்பணிகொள்ளாய் * செந்தண்
கமலக்கண்கைகால் சிவந்தவாயோர்கருநாயிறு * அந்தமில்லாக்
கதிர்பரப்பி அலர்ந்ததொக்கும் அம்மானே. (௭)

ப:—அநந்தரம், அஸேஜநஸம்ஶ்லேஷஸ்வபாவனாய், அதி ரமணீயமான ஸௌந்தர்யத்தையுடையையா யிருக்கிற நீ, என்முன்னேவந்து தோன்றுதல், உன் முன்னே யழைத் தடிமைகொள்ளுதல் செய்யவேணுமென்கிறார்.

(இ-ள்.) செம் சிவந்து, தண்-குளிர்ந்த, கமலம்-தாமரைபோலேயிருக்கிற, கண்-கண்ணையும், கை-கையையும், கால்-காலையும், சிவந்த-சிவந்த, வாய்-வாயையுமுடைத்தாயிருப்பது; ஓர்-ஒரு, கருநாயிறு-நீலநிறமான நாயிறானது, ஆயிரமென்கிறவளவன்றியே, அந்தம் - முடிவு, இல்லா-இல்லாத, கதிர் - கதிரை, பரம்பி-பரப்பி, அலர்ந்ததொக்கும்-விஸ்தீர்ணமானாப்போலே ருக்கிற, அம்மானே – வடிவழகையுடைய ஸ்வாமியே, வந்து-அவ்வழகோடே வந்து, தோன்றாய் - தோன்றவேணும், அன்றேல்-அந்தநினைவன்றாகில்; வையம் - ஸகலஜகத்தையும்,

தாய-வரையாமல் ஸம்ஶ்லேஷித்த, மலர்-விகஸிதமான தாமரைபோலேயிருக்கிற, அடிக்கீழ் - திருவடிகளின் கீழே, முந்தி - முற்பாடனாய்க்கொண்டு, யான்-நான், வந்து-வந்து, நிற்ப-தரித்து நிற்கும்படியாக, உன்-உன், முகப்பே-திருமுன்பே, கூவி-அழைத்து, பணி - அடிமை. கொள்ளாய் கொண்டருளவேணும். (எ)

ஆறு:—(வந்துதோன்றாய்) ஆதாம்ர ஶீதள ஸரோருஹ ஸத்ருஶமான நயந பாணி பாத வதநங்களையுடைத்தாய், நிரவதிக தீப்தியுக்தமாயிருப்பதொரு கருநாயிறுபோலே யிருந்த நீவந்து தோன்றாய்; அன்றேல், அநாலோசிதவிஶேஷாஶேஷ லோகஶரண்யமாய், லோகவிக்ராந்தமா யிருந்த உன் திருவடிமலர்களின்கீழே, உன் திருவுள்ளத்தி லபேக்ஷிதமான கைங்கர்யத்தை நீயருளிச்செய்வதற்கு முன்பே யறிந்து செய்யக்கடவனாய்ச் சமைந்துநிற்க முகப்பே கூவிப்பணிகொள்ளாயென்கிறார். (எ)

ஈடு; அவ:—இங்கேவந்து தோற்றியருளுதல், அது திருவுள்ளமல்லவாகில் அங்கேயழைத் தடிமைகொள்ளுதல் செய்தருளவேணுமென்கிறார்.

(வந்துதோன்றாய்) என் கண்வட்டத்திலே வந்து தோன்றவேணும் (க) * தந்தைகாலில் விலங்கறவந்து தோன்றியதோன்றலையிறே-வந்து தோன்றுயென்கிறது. (அன்றேல்) என்னார்த்தியைப் பார்த்து உன்னுடைய க்ருபையாலே வந்து முகங்காட்டப் பார்த்திலையாகில். உன் பூர்த்தியையும் என்சிறுமையையும் பார்த்து முகங்காட்டப் பார்த்திலையாகிலென்றுமாம். (உன்வையந்தாயமலரடி) வஸிஷ்ட்டசண்டாலவிபாகம் பாராததிருவடிகள். (மலரடி) ஒரு செவ்விப்பூவைக்கொண்டாயிற்றுக் காடுமேடையுமளந்தது. (மலரடிக்கீழ்முந்திவந்துயான்நிற்ப) நிரதிஶயபோக்யமான திருவடிகளின்கீழே முற்பாடனாய் வந்து நிற்கும்படியாக.

(முகப்பே) கண்வட்டத்திலே. (கூவிப்பணிகொள்ளாய்) சோற்றையிட்டுப் பணிகொள்ளாய். (உ) "க்ரியதாமிதிமாம்வத-க்ரியதாமிதிமாம்வத" என்று கண்முகப்பே யடிமைகொண்டருள வேணும். குணஜ்ஞாநத்தாலேதரித்திருக்கும் ஸ்ரீ பரதாழ்வான் ப்ரக்

(க) தி-மொ-அ ரு.க (உ) ரா ஆர-கரு எ.

ருதி யல்லேன்; (க) "ஜநாநந்த ஸ்ராவிவொஸூதள-ஜலாம்மத்ஸ்யா விவோத்த்ருதௌ" என்னுமிளையபெருமாள் ப்ரக்ருதியான வென்னை யடிமைகொண்டருளவேணும். (உ) "வழுவிலாவடிமை செய்யயவேண்டும்" என்றும் (ங) "நின்னலாலிலேன்" என்றும், இட்டு வைத்தவிடத்தில் கிடக்கமாட்டேன். (ச) "நன்றுமஞ்சுவன் நரகம்நானடைதல்" என்னுமவரிறே.

(செந்தணித்யாதி) சிவந்து குளிர்ந்த தாமரைபோலே, கண்ணையும் கையையும் காலையுமுடையனாய், சிவந்த வாயையுமுடையனாய், நீலமான நிறத்தையுடையனாயிருப்பானோராதித்யன், "ஸஹஸ்ரம்" என்றொரு ஸங்க்யையின்றிக்கே அளவிறந்த கிரணங்களைப் பரப்பிக்கொண்டு விகஸிதமானாப்போலே வந்து தோன்றவேணும் (அம்மானே) உன்மேன்மையைப் பார்த்து அங்கேயழைத் தடிமைகொள்ளுதல், உன்னுடைமை நசியாமைக்கு த்வரையுண்டாகில் இங்கேவந்தடிமைகொள்ளுதல் செய்தருளவேணும். (எ)

எட்டாம்பாட்டு.

ஒக்குமம்மானுருவமென்று உள்ளங்குழைந்துநாளும் *
தோக்கமேகப்பல்குழாங்கள் காணுந்தோறும் தொலைவன்நான் *
தக்கஐவர்தமக்காய் அன்று ஈரைம்பதின்மர்தாள்சாய * புக்கநல்
தேர்த்தனிப்பாகா! வாராய் இதுவோபொருத்தமே? (அ)

ப:—அநந்தரம், போலிகண்டு நான் க்லேஶியாநிற்க, ஆஶ்ரிதபக்ஷபாதியான நீவந்து தோன்றுகிறிலையென்கிறார்.

(இ ள்.) அம்மான்-ஸ்வாமியானவன். உருவம்-வடிவழகு. ஒக்கும்-ஒக்கும். என்று-என்று. உள்ளம்-நெஞ்சு. குழைந்து-ஶிதிலமாய். நாள்நாளும்-நாடோறும். தொக்க-திரண்ட. மேகம்-மேகங்களினுடைய. பல்-பலகுழாங்கள்-ஸமூஹங்களை. காணுந்தோறும்-காணும்பொழுதெல்லாம். நான்-நான். துலைவன்-க்லேஶியாநிற்பன். தக்க-நீயெல்லாவுறவுமாம்படியான தக்கோர்மையையுடைய. ஐவர்தமக்கு-பாண்டவர்களைவர்க்கும். ஆய்-ஏவலாளாய்க்கொண்டு. அன்று-பாரதயுத்தம்ப்ரவ்ருத்தமானவன்று. ஈரைம்பதின்மர்-அவர்களுக்கெதிரிகளானநூற்

(க) ரா-அயோ-ருங-ஙக (உ) ங-ங-க.

(ங) உ-ங-எ. (ச) அ-க-கூ.

றுவரும் தாள்சாய-காலற்றுப்போம்படி. புக்க—ஸேநாமத்யத்திலேப்ரவேஶித்த. நல்-உன்னதிஷ்டாநத்தாலே ஶ்லாக்யமான. தேர்-தேருக்கு. தனிப் பாகா-ரதியான அவன் உன்முதுகின்கீழே யொதுங்கும்படி ஸாரதியானவனே. வாராய் - அவ்வழகோடே வருகிறிலை. இதுவோ—இதுவோ. பொருத்தம்-ஆஶ்ரிதவிஷயத்தில் பொருத்தமிருந்தபடி. (௮)

ஆறு:—(ஒக்குமம்மான்) உன்திருமேனியோடொக்குமென்று தொக்கமேகப்பல்குழாங்கள் காணுந்தோறும் நானுமுள்ளங்குழைந்து துலைவன்நான், உன்னைமறந்திருக்கவொட்டுகிறதில்லை இந்த மேகங்கள்; உன்திருவடிகளையே ப்ராப்யமும் ப்ராபகமுமென்றிருக்குமவர்க்கு ஶேஷபூதனாய், அன்றீரைம்பதின்மர்தாள் சாயப்புக்கநற்றேர்த் தனிப்பாகா, அத்தேரை யிங்ஙனேநிறுத்திக்கொண்டுவாராய், இதுவோ வுன்னுடைய ப்ரணயித்வமென்கிறார். (௮)

ஈடு; அவ:—உனக்குப்போலியான மேகதர்ஶநத்தாலே நோவுபடா நிற்க, வந்து முகங்காட்டுகிறிலை; இதுவோ வுன்ஸங்கஸ்வபாவமென்கிறார்.

(ஒக்குமம்மானுருவமென்று) "ஸர்வேஶ்வரன்வடிவு இதரவிஸஜாதீயம்" என்று புத்திபண்ணுநிற்கச்செய்தே,(௧)* தூமஜ்யோதிஸ்ஸலிலமருதாம் ஸமூஹமானமேகத்தை ஸத்ருஶமென்று ப்ரமிப்பர். (உள்ளங்குழைந்து) இது தோற்புரையன்றியே, அகவாய்ஶிதிலமாய். (நானும்) இந்த ஶைதில்யம் காதாசித்கமன்றிக்கே, இடைவிடாமல்செல்லுகை. (தொக்கமேகப்பல்குழாங்கள்) மேகஶகலங்களுக்கிடையார்; திரண்டமேக ஸமூஹங்களைக் காணுந்தோறும். (நானும்-துலைவன்) தர்மிலோபம் பிறக்கிறதுமில்லை, ஜீவித்திருக்கவும் பெறுகிறிலேன், (நான்) மேகதர்ஶநம் நாட்டார்க்கு ஆஶ்வாஸஹேதுவிறே.

(தக்கவைவர்) என்ன மேகதர்ஶநத்துக்கிடைந்து பாண்டவர்களை நோக்கிற்று; "பந்துக்கள் ஜீவிக்கவேணும், எங்களுக்கும் ஐந்துகுடிக்காடையும்" என்னுந்தக்கோர்மையுடையவைவர். (தமக்காய்) (௨) "ஸேநயோருபயோர்மத்யே ரதம்ஸ்தாபய" என்னும்படி கையாளாய் (அன்று) அவர்கள் தனியானவன்று. (ஈரைம்பதின்மர்தாள்சாய) "பந்துக்கள் ஜீவிக்கில் ஜீவியோம்" என்ற நூற்றுவரும் காலறும்

(௧) மேகஸந்தேசம். (௨) கீதை-௧-௨௧.

திருவாய்மொழி, அ-ப,ஞ-தி, கூ-பா, இதுவோ வ்யாக்யாநம். கஙரு

படியாக. (புக்க) தூசித்தலைபிலேபுக்க. (நற்றேர்) இவனை ஸாரதி யாகவுடைத்தாகையாலே அதிஶ்லாக்யமானதேர். (தனிப்பாகா) தனியே நிர்வாஹகனானவனே. ரதியைக்காண்கிறிலர். (க) "நகாங்க்ஷே விஜயங்க்ருஷ்ண-நகாங்க்ஷே விஜயம்க்ருஷ்ண" என்றவனைச்சேமம் சாத்திவைத்து வ்யாபரிக்கையாலே, ஸாரதியையாயிற்று இவர் காண்கிறது. (வாராய்) (உ) "ஸேநயோருபயோர்மத்யே ரதம்ஸ்தாபய-ஸேநயோருபயோர்மத்யே ரதம்ஸ்தாபய" என்ன, உபயஸேனையின் நடுவே தேரைநிறுத்தினநீ, அத்தேரை யிம்மேகங்களின் நடுவே நடத்தினாலாகாதோ. ஐவருடாய், எதிரிகள் ஸங்க்யாதருமானாலோ வுதவலாவது; தனியனுமாய், மேகஸமூஹங்கள் அஸங்க்யாதமானால் உதவலாகாதோ.

(இதுவோபொருத்தம்) ஆஶ்ரிதரோடு முன்பு நீ பொருந்திப் போந்தபடி யிதுவோ. ஆஶ்ரிதர்க்காக தூத்யஸாரத்யங்கள்பண்ணியும், "ஆயுதமெடேன்" என்றாயுதமெடுத்தும், பகலையிரவாக்கியும் பக்ஷபதித்தது பொய்யோ. (ங) "நாராயணாஶ்ரயா:பார்தா:-நாராயணகதாமிமாம்" என்றவனும் கைக்கூலிகொண்டு புலமைபாடினானாகாதேயென்கிறார். இப்போது தமக்குதவில் அவைமெய்யாவதென்றிருக்கிறார். (வாராய்) எனக்கிதெல்லாம் வேணுமோ, முகங்காட்டவமையாதோ. (அ)

ஒன்பதாம்பாட்டு.

இதுவோபொருத்தம்? மின்னாழிப்படையாய்! ஏறுமிருஞ்சி
றைப்புள் அதுவே * கோடியாவுயர்த்தானே! என்றென்றேங்கிய
ழுதக்கால் * எதுவேயாகக்கருதுங்கொல்? இம்மாஞாலம்பொறை
தீர்ப்பான் * மதுவார்சோலை உத்தரமதுரைப்பிறந்தமாயனே. (கூ)

ப:—அநந்தரம், ஆஶ்ரிதரை அநேகவித கைங்கர்யங்கொள்ளும் ப்ரகாரத்தை நினைத்துக்கூப்பிட்டால், ஆஶ்ரிதவிரோதி நிரஸநார்த்தமாக வவதரித்தவன் என் நினைத்திருக்கிறானென்கிறார்.

(க) கீதை-க-ஙஉ. (உ) கீதை-க-உக.
(ங) பாரதம்.

(இ-ள்.) மின்-ஒளியாலே யாடரண மாம்படியான. ஆழி-திருவாழியை. படையாய்-ஆயுதமாகவுடையவனே. ஏறும் வாஹநமான. இரு-பெரிய சிறை-சிறகையுடையனுன. புள்ளதுவே - பெரியதிருவடிதன்னேயே. கொடியா-கொடியாக. உயர்த்தானே-எடுத்தவனே. இதுவோ இதுவோ. பொருத்தம்-அவர்களளவிலும் பொருத்தமிருக்கும்படி. என்றென்று.என்றுபலகாலுஞ்சொல்லி. ஏங்கி-பொருமி. அழுதக்கால்-அழுதக்கால். இ-இந்த. மாஞாலம்-மஹாப்ருதிவியின் பொறை-பாரத்தை. தீர்ப்பான்-போக்குகைக்காக. மது-மது, வார்-ப்ரவாஹியான. சோலை-சோலையையுடைய. உத்தரமதுரை-வடமதுரையிலே. பிறந்த. ஸர்வேஶ்வரத்வ ஸூசகமான சிஹ்நங்களோடேயவதரித்த. மாயன்-ஆஶ்சர்யபூதனானவன். என் கண்ணநீர் மாறவருவதாக நினைத்திருக்கிறுனே, இப்படி அழுதேபோவனென்று நினைத்திருக்கிறுனே; எதுவேயாக-எதாகவோ. கருதும்-திருவுள்ளம்பற்றுவது. (௧)

ஆறு:—(இதுவோபொருத்தம்) திருவாழியை மின்னுகவுடைய திவ்யரூபமாகிற நீலமேகத்தை யுடையவனே, ஆஶ்ரிதருடைய வாபத்துக்குதவ வருகைக்கீடான பெரியதிருவடியை திவ்யவாஹநமாகவுடையவனே, இதுவோமுடிந்ததென்றென் றேங்கியழுதக்கால் ஆஶ்ரிததுःகாஸஹிஷ்ணுவாகையாலே தத்துःகஹேதுபூத பூபாரநிர்ஹரணார்த்தமாக, மதுவார்சோலையுத்தர மதுரைப்பிறந்த வாஶ்சர்யபூதனே, நீயெதுவாகநினைத்திருக்குமென்கிறுர். (௧)

ஈடு; அவ:—அந்திமதசையில் ஸ்வர்க்கத்தேறப்போன விவர்கள் நிற்கிடீர், திருவாழியாழ்வான்முதலான நித்யரோடும் பொருத்தமிதுவோவென்று ஸ்வகதமாக விசாரிக்கிறுர். இருந்ததேகுடியாக ரக்ஷிக்கவந்தக்ருஷ்ணன், தன்னைக்காண்கையே தேட்டமான வெனக்கு என்செய்தருளுமென்று நினைக்கிறுராகவுமாம்.

(இதுவோபொருத்தம்) இப்படி கூப்பிடச்செய்தேயும் வரக்காணமையாலே கண்ணுஞ்சுழலையிட்டு, மீண்டும் "இதுவோபொருத்தம்" என்கிறுர். (மின்னுழிப்படையாய்) மேகத்திலே மின்னிணுப்போலே, ஆஶ்ரித விரோதிநிரஸநஶீலமான திருவாழியைப் படையாகவுடையவனே. அத்திருவாழியைக்கொண்டு என்னுடைய ப்ரதிபந்தகத்தின்மேலே வ்யாபரித்தாலாதோ. (ஏறுமித்யாதி) ஏறக்கடவ பெரியசிறகையுடைய புள்ளானது தன்னையே த்வஜமாகவெடுத்தவனே. ஆஶ்ரிதரை யெல்லா வடிமையுங் கொள்ளுமவ

திருவாய்மொழி, அ-ப, ரு-தி, கo-பா, பிறந்த வ்யாக்யானம். கருள

னன்றோ. (என்றென்றேங்கியழுதக்கால்) இப்பாசுரம்மாறுதே பொருமிப்பொருமியழாநின்றால்.

(எதுவேயாகக்கருதுங்கோல்) இக்கூப்பீட்டுக்கு முகங்காட்ட நினைக்கிறானே, கூப்பிட்டேபோவானென்றிருக்கிறானே. இக்கூப்பீட்டுக்கு அவன் திருவுள்ளமென்னனே புண்படுகிறதோவென்றுமாம். (இம்மாஞாலம்பொறைதீர்ப்பான்) இம்மஹாப்ருதிவியினுடைய பாரத்தைப்போக்குகைக்காக. (மதுவார்சோலே) மதுஸ்யந்தியான சோலையையுடைய. (உத்தரமதுரை) வடமதுரையிலே, ஶத்ருக்களான கம்ஸாதிகள் நடுவே (பிறந்தமாயனே) ஆவிர்ப்பவிக்கையன்றியே, (க) "ததஸ்து ஸாஶெஸாரெஸெ-ததம்ஸசத்வா தமேஸமாஸே" என்கிறபடியே கர்ப்பவாஸம்பண்ணிப்பிறந்த வாஶ்சர்யபூதனே. "ஹரோஹராநிரஸநஞ்ச - பூபாரநிரஸநம்" என்கிற வ்யாஜத்தாலே. இதரஸஜாதீயனாய்வந்தவதரித்து ஆஶ்ரிதவிரோதிகளைப்போக்கும் ஸ்வபாவனானவன், நங்கூப்பீட்டுக்கென்னினைத்திருக்கிறானென்கை.

பத்தாம் பாட்டு.

பிறந்தமாயா! பாரதம்பொருதமாயா! நீ இன்னே * சிறந்த கால்தீநீர்வான் மண்பிறவுமாயபெருமானே! * கறந்தபாலுள்நெய்யேபோல் இவற்றுளெங்கும்கண்டுகொள் * இறந்துநின்றபெருமாயா! உன்னைஎங்கேகாண்கேனே? (கo)

ப:—அநந்தரம், அவதார ப்ரயுக்த ஸௌலப்யத்துக்குப்பிற்பட்டு, அகவாயில் நிலையு மதீந்த்ரியமானால் எங்கேகாண்பதென்றார்த்தராகிறார்.

(இ-ள்.) பிறந்த - (உ) "அஜொஉபிஸந் அஜோபிஸந்" என்கிறபடியே அஜஹத்ஸ்வபாவனாய்க்கொண்டவதரித்த. மாயா - ஆஶ்சர்யபூதனாய், ஆஶ்ரிதார்த்தமாக, பாரதம்-மஹாபாரதயுத்தத்தைப்பண்ணுமிடத்தில், பொருதமாயா - "ஆயுதமெடேன்" என்றாயுதமெடுத்தல், பகலை இரவாக்குதல் முதலானவாஶ்சர்ய சேஷ்டிதங்களைச் செய்து நடத்தினவனே! நீ-நீ. இன்னே-இப்படி ஸுலபனாயிருக்கச்செய்தே. சிறந்த-ஜகத்தேதுத்வத்தால் வந்த சிறப்பையுடைய. கால்தீநீர்வான் மண் - பஞ்சபூதங்களையும். பிறவும்-மற்றுமுள்ள பௌதிகபதார்த்தங்களையும். ஆய-ப்ரகாரமாகவுடைய. பெருமானே-ஸர்வாதிகனாய். (ந) "ஸூக்ஷ்மவஸ்து ஸர்வபூதேஷு - க்ருதமிவபயஸி நிகூடம்" என்கிற

(க) ரா பா-கஅ-க. (உ) கீதை ச-ரு. (ந) ப்ரஹ்மவிதுபநிஷத்.

க்ஷணத்திலே, கறந்த-கறந்த, பால்-பாலுக்கு. உள்-உள்ளில் நெய்யே போல்-நெய்போலே. மதித்துக்காண்பார்க்கொழிய, கண்டுகொள் - காண. இறந்து-அரிதாம்படி. இவற்றுள் - இப்பதார்த்தத்துக்குள்ளில். எங்கும்-எல்லாவிடத்திலும். நின்ற நின்ற, பெருமாயா-அத்யாஶ்சர்ய பூதனானவனே. உன்னை-இப்படி அதீந்த்ரியனான வுன்னை. எங்கே எவ்விடத்திலே, காண்கேன்-காணக்கடவேன். (௧)

ஆறு:—(பிறந்தமாயா) ஸாதுபரித்ராணார்த்தமாகவும், துஷ்க்ருத்விநாஶார்த்தமாகவும் ஸ்ரீமதுரையிலே பிறந்தருளின வாஶ்சர்யபூதனே, நீ யிப்படி ஸர்வத்ரஸந்நிஹிதனாயிருந்து வைத்து உன்னைக்காட்டியருளுகிறிலை, இனியுன்னை யெங்கேகாண்கேனென்கிறார்.

ஈடு; அவ:—அவதாரத்துக்குப் பிற்பாடனாய், அந்தர்யாமித்வம் கண்ணுக்கவிஷயமானபின்பு, உன்னை நானெவ்விடத்தே காண்பதென்கிறார்.

(பிறந்தமாயா) அகர்மவஶ்யனாய்வைத்து, அப்ராக்ருத திவ்ய ஸம்ஸ்தானத்தை இதரஸஜாதீயமாக்கி வந்தவதரித்த வாஶ்சர்யபூதனே? (பாரதம் பொருதமாயா) பிறந்தாப்போலே யிருப்பதொன்றாயிற்று இவ்வாஶ்சர்யம்; ஸத்யப்ரதிஜ்ஞனானவன் அஸத்யப்ரதிஜ்ஞனான வாஶ்சர்யம்; "ஆயுதமெடேன்" என்றாயுதமெடுக்கையும், பகலை யிரவாக்குகையும். (நீயின்னே) நீயிப்படி ஸுலபனாயிருக்கச் செய்தே. (சிறந்தவித்யாதி) காரணமான ப்ருதிவ்யாதிபூதங்களுக்கும் (பிறவும்) தத்கார்யமான தேவாதிபதார்த்தங்களுக்கு மாத்மாவான ஸர்வேஶ்வரனே. காற்றுக்குச்சிறப்பாவது-காரணத்வமொத்திருக்க தாரகத்வத்தால்வந்தவேற்றம்.

(கறந்தவித்யாதி) கண்ணாலே காண்கிற பாலினுள்ளே நெய்யுண்டாயிருக்கக் காணவரிதானாப்போலே, ஸகல பதார்த்தங்களிலும் நின்று வைத்துக் காணவொண்ணாதபடிநிற்கிற வத்யாஶ்சர்யபூதனே! ப்ராஹ்மவித்துபநிஷத்து, (௧) "𑌗𑌵𑌾𑌮𑌨𑍇𑌕𑌵𑌰𑍍𑌣𑌾𑌨𑌾𑌂 𑌕𑍍𑌷𑍀𑌰𑌸𑍍𑌯𑌾𑌪𑍍𑌯𑍇𑌕𑌵𑌰𑍍𑌣𑌤𑌾 । 𑌕𑍍𑌷𑍀𑌰𑌵𑌤𑍍𑌪𑌶𑍍𑌯𑌤𑍇 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌲𑌿𑌙𑍍𑌗𑌿𑌨𑌸𑍍𑌤𑍁 𑌗𑌵𑌾𑌂 𑌯𑌥𑌾 ॥ 𑌘𑍃𑌤𑌮𑌿𑌵 𑌪𑌯𑌸𑌿 𑌨𑌿𑌗𑍂𑌢𑌂 𑌭𑍂𑌤𑍇 𑌭𑍂𑌤𑍇 𑌚 𑌵𑌸𑌤𑌿 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑍍 । 𑌸𑌤𑌤𑌂 𑌮𑌨𑍍𑌥𑌯𑌿𑌤𑌵𑍍𑌯𑌂 𑌮𑌨𑌸𑌾 𑌮𑌨𑍍𑌥𑌾𑌨𑌭𑍂𑌤𑍇𑌨 ॥ 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌧𑌿𑌵𑌾𑌸𑌂 𑌯𑌦𑍍𑌭𑍂𑌤𑍇𑌷𑍁 𑌚 𑌵𑌸𑌤𑍍𑌯𑌪𑌿 । 𑌸𑌰𑍍𑌵𑌾

(௧) ப்ராஹ்ம விதுபநிஷத்.

ந்ருஹாகல்வேத்ந-த்ஜ்ஞஸ்யஹம் வாஸுதேவஜதி - கவாமேவ கவர்ணாம் க்ஷீரஸ்யத்வேகவர்ணதா॥க்ருதமிவபயஸிநிகூடம் பூதே பூதேசவஸதிவிஜ்ஞாநம் । ஸததம்மந்தேதவ்யம் மநஸாமந்தாநபூதேந ॥ ஸர்வபூதாதிவாஸம்யத் பூதேஷுசவஸத்யபி । ஸர்வாநுக்ராஹகத்வேந-ததஸ்ம்யஹம்வாஸுதேவஇதி" என்கிறபடியே.

(கறந்தபால்) காலத்தாலும் மதநாதியாலுந் தோற்றுகிறநெய், கறந்தகாலத்தில்தோற்றாதிறே. உன்பக்கலிலே ந்யஸ்தபாரனை யாகிற ஸம்ஸ்காரத்தாலல்லது காணவரியையென்கை. (உன்னை யெங்கேகாண்கேனே) பரமபதத்தில் காட்சிக்கு ஶரீரஸம்பந்தமற வேணும். அவதாரத்துக்குப்பிற்பாடனேன், அர்ச்சாவதாரம் நான் நினைத்தபடிகிடையாது, அந்தர்யாமித்வம் கண்ணுக்குவிஷய மன்று, இனி இவ்விழவோடேமுடிந்துபோமித்தனையாகாதே. (கய)

பதினொன்றாம்பாட்டு.

எங்கேகாண்கேன் ! ஈன்துழாயம்மான்தன்னை யான் ? என்றென்று * அங்கேதாழ்ந்தசொற்களால் அந்தண்குருகூர்ச்சடகோபன் * செங்கேழ்சொன்ன ஆயிரத்துள் இவையும்பத்தும்வல்லார்கள் * இங்கேகாண இப்பிறப்பேமகிழ்வர் எல்லியுங்காலையே.

ப:—அநந்தரம், இத்திருவாய்மொழிக்குப் பலமாக, ஸம்ஸாரத்திலே ஸதா பகவதநுபவலாபத்தை யருளிச்செய்கிறார்.

(இ-ள்)ஈன் நிரதிஶயபோக்யமான. துழாய்-திருத்துழாய்மாலையையுடைய அம்மான்றன்னை-ஸர்வேஶ்வரனை, யான்-இப்படி யார்த்தியதிஶயத்தையுடைய நான். எங்கே-எங்கே. காண்கேன்-காணக்கடவேன். என்றென்று-என்று பலகாலுஞ்சொல்லி, அங்கே-அவனுடைய போக்யதையிலும் ஶௌஷித்வத்திலும், தாழ்ந்த-ப்ரவணமான, சொற்களால்-சொற்களாலே, அம் - தர்ஶநீயமாய், தண் - ஶ்ரமஹரமான, குருகூர்-திருநகரிக்கு நிர்வாஹகரான- சடகோபன் ஆழ்வார், பகவத்ஸ்வபாவங்களை ப்ரதிபாதிக்குமிடத்தில், செங்கேழ்-ஆர்ஜவத்தை யுடைத்தாய்க் கொண்டு போரும்படி, சொன்ன அருளிச்செய்த, ஆயிரத்துள்-ஆயிரத்துக்குள்ளே, இவையும்பத்தும்-இவைபத்தையும், வல்லார்கள் - பாவவ்ருத்தியோடே அப்யஸிக்கவல்லவர்கள், இங்கே-இந்தபூமியிலே, காண-

எல்லாரும் காணும்படி, இப்பிறப்பே-இஜ்ஜந்மத்திலே, எல்லியுங்காலையும் ராத்ரிந்திவ மிடைவிடாதபடி, மகிழ்வர் - பகவதநுபவஜநிதாநந்தத்தை யுடையராவர்கள். எல்லி-ராத்ரி. இது-அறுசீராசிரியவிருத்தம்.

ஆறு:—(எங்கேகாண்கேன்) எங்கேகாண்கே னீன்துழாயம் மான்றன்னை யானென்றென்று அங்கே ப்ரவண மநஸ்கராய், ப்ரேமார்த்ர விஹ்வலமான சொற்களாலே அந்தண்குருகூர்ச்சடகோபன் ஆர்ஜவோபேதமாகச்சொன்ன வாயிரத்து ளிவைபத்தும் வல்லார்கள், இந்த லோகத்திலே இஜ்ஜந்மத்திலே யெல்லாருங்காண வெம்பெருமானை யெப்போதும் காணப்பெற்று மகிழ்வரெனகிறார். (கக)

ஈடு ; அவ:—நிகமத்தில் இத்திருவாய்மொழிவல்லார், தாம் பட்ட துஃக்கம்படாதே, இஹலோகத்திலே இஜ்ஜந்மத்திலே அவனைப் பெற்று நிரந்தரமாக ஸுகிப்பரென்கிறார்.

(ஈன்றுழாயம்மான்றன்னையான் - எங்கேகாண்கேன்) ஐஶ்வர்ய ஸூசகமான திருத்துழாய் மாலையையுடைய ஸர்வேஶ்வரனைக் கண்டல்லது தரிக்கமாட்டாதபடி சபலனான நானெங்கே காணக்கடவேன். (என்றென்று) பாத்வாதிகளைப் பெறாத நானுன்னை நிரந்தரமாகச்சொல்லி. ஒருக்கால்சொல்லி “ஆசையையாவிஷ்கரித்தோமிறே” என்றாறியிருக்கிறாரல்லரே, லாபத்தளவும் சொல்லுமித்தனையிறே. (அங்கேதாழ்ந்தசொற்களால்) தோளும், தோள்மாலையிலும், அந்த ஶேஷித்வத்திலும் ப்ரவணமான சொற்களாலே, (அந்தண்குருகூர்ச்சடகோபன்) (க) “உபதிஷ்டே ஸோமதத்தௌ வ்யாதய:-உபதிஷ்டந்துமாம்ஸர்வேவ்யாதய:” என்கிறபடியே இவ்வாற்றாமைக் கெல்லா மாடல்கொடுத்தவாழ்வார்” என்றுளவந்தார் நிர்வாஹம்.

(செங்கேழ்சொன்ன) மநோவாக்காயங்களேகரூபமாய்ச் சொன்ன வாயிரத்திலு மிப்பத்தையும். (வல்லார்கள்) அப்யஸிக்க வல்லார். (இங்கேயித்யாதி) இஹலோகத்திலே இஜ்ஜந்மத்திலே திவாராத்ர விபாகமின்றிக்கே பகவதநுபவம் பண்ணி மகிழப்பெறுவர். “ஆளக்கூப்பிட்டழைத்தக்கால்” என்று-கூப்பிடவந்து முகங்காட்டாதவவத்யத்தை, இப்பத்தை அப்யஸித்தவர்களோடே கடுக வந்து முகங்காட்டித் தீருமாயிற்றீஶ்வரன் ; பார்யையோடே வெறுப்புண்டானால் அவள்பக்கல் முகம்பெறுகைக்காக ப்ரஜைகளை ஶ்லாகிப்பாரைப்போலே. (கக)

எட்டாம்பத்து ஐந்தாம்திருவாய்மொழி முற்றிற்று.

(க) பாரதம்-பீஷ்ம.

ஸ்ரீ

எட்டாம்பத்து.

ஆறாந் திருவாய்மொழி.

எல்லியும் - ப்ரவேஶங்கள்

ஆறு;—(எல்லியும்காலையும்) எம்பெருமானென்னுடைய விடாயெல்லாந் தீரும்படி அருள்செய்தருளினான்.

ப:—ஆறாந்திருவாய்மொழியில், இப்படி அநுபவாபிநிவேஶத்தாலே அத்யந்தமார்த்தராய்க் கூப்பிட்ட விவ்வாழ்வாருடைய வார்த்தி தீருகைக்காக "இவருடைய ஸகலவிரோதிகளையும் போக்கி ஸம்ஶ்லேஷிப்போம்" எனநீஶ்வரன் திருக்கடித்தானத்திலே ஆஸந்நமாக வந்து ஸந்நிஹிதனானபடியை ப்ரகாசிப்பிக்க; அவனுடைய வாஸக்திநிதாநமான ஶேஷித்வத்தையும், அஶேஷவிரோதிநிவர்த்தகமானஸாமர்த்யத்தையும், பராக்ரமைஶ்வர்யத்தால் வந்த வீர ஸ்ரீயோகத்தையும், ஆந்தரவிரோதி நிவர்த்தகமான அந்தஃப்ரவேஶத்தையும், ப்ரத்யாஸத்திக்கடியான ப்ராப்யதேஶவர்த்தித்வத்தையும், அவனிலுமவன தேசம் விரோதிநிவர்த்தகமெனனுமிடத்தையும், தேஶஸ்ம்ருதிமாத்ரமே து:க நிவர்த்தகமெனனுமிடத்தையும், ஆஸந்நதேசத்தினுடையவ ஸாதாரண்யத்தையும், அர்ச்சாந்தரஸ்தலத்திலும் ஸந்நிஹிதனென்னுமிடத்தையும், ஆஸந்நதேசஸ்த்திதி அந்தஃப்ரவேசார்த்தமெனு மிடத்தையு மநுஸந்தித்து நெஞ்சிலேவந்து புகுந்து தம்முடைய விரோதியைப்போக்கி யநுபவிப்பதாக வத்யாஸந்நனான வவனுடைய வபிநிவேசத்தைக்கண்டு தமக்குப் பிறந்த ஹர்ஷத்தை யருளிச்செய்கிறார்.

ஈடு; அவ:—மாயக்கூத்தனில், ஆழ்வார், தமக்கோடின விடாய் பேச்சுக்கு நிலமாகையாலே பேசினார்; ஈஶ்வரனுக்கோடினவிடாய் பேச்சுக்குநிலமல்லாமையாலேபேசிற்றில்லை; (க)"ஊர்த்வம் மாஸாந்நஜீவிஷ்யே" என்றித்தலையில் விடாய்; (உ) "நஜீவேயம்க்ஷணமபி" என்றிறே அத்தலை யிருப்பது. *"மாயக்கூத்த னிவிவர்க்கோடினவிடாய்க்கு உதவப்பெற்றிலோம்" என்னுமதாலேதப்தனாய், ஆகுலனாய், பிற்பாட்

(க) ரா-ஸு-௩அ ௬அ.   (உ) ரா-ஸு. ௬௬-௰

டுக்கு (க) "ஹ்ரீரேஷா ஹிஸோ த்வயா-ஹ்ரீரேஷா ஹி மமாதுலா" என்கிறபடியே லஜ்ஜித்து, "இனிநாம் கடுகமுகங்காட்டில் ப்ரீதியாலே உடைகுலைப்படுவர், ப்ரீதியை ஸாத்மிப்பித்துளராக்கிப் புகமாற வேணும்" என்று, பதினாலாண்டு பிரிவாலே நொந்த ஸ்ரீ பரதாழ்வானை தரிப்பித்து முகங்காட்டுகைக்காகத் திருவடியைப் போக விட்டு, ஸ்ரீ பரத்வாஜபகவாநாஸ்ரமத்திலே யிருந்தாப்போலவும்; பாண்டவர்களுக்காகத் தூதுபோகிறபோது, ப்ரேமபரவஶரான விதுராதிகள் ப்ரீதியை யங்குரிப்படுத்தி முகங்காட்டுகைக்காக, (உ) "க்ஷஸ்ஸ்யெ நிவஸதிவஸமுபாதரிஹைஷ்யதி-குஸஸ்த்தலே நிவஸதிஸப்ராதரிஹேஷ்யதி" என்கிறபடியே - குசஸ்த்தலத்திலே விட்டுக்கொண்டிருந்து, பிற்றைநாள் ஹஸ்திநபுரத்திலே யெழுந்தருளினப்போலவும்; தம்மோடே ஸம்ஶ்லேஷோந்முகனான ஸர்வேஶ்வரன், தம்முடைய ப்ரீதியை ஸாத்மிப்பித்துத் தம்மோடே கலக்கைக்காகத் திருக்கடித்தானத்திலே யெழுந்தருளியிருந்து, தம்பக்கல்பண்ணுகிற வ்யாமோஹத்தை யநுஸந்தித்தினிடராய், அத்தைப்பேசி யநுபவிக்கிறார். கீழ்த்திருவாய்மொழியில் வ்யஸநஹேதுவான நினைவுதானே இப்போது உஜ்ஜீவநமாம்படி பண்ணினான். (ந) * செறுவாரும் நட்பாகுவரீறே செங்கோனருள்பெற்றவாறே

முதற்பாட்டு.

எல்லியுங்காலையும் தன்னைநினைந்தெழ * நல்லவருள்கள் நம
க்கேதந்து அருள்செய்வான் * அல்லியந்தண்ணந்துழாய்முடி அப்
பனூர் * செல்வர்கள்வாழும் திருக்கடித்தானமே. (க)

ப:—முதற்பாட்டில், நமக்கு நிரதிஶயோபகாரம்பண்ணவந்த ஸர்வேஶ்வரனானவன் தேசம் திருக்கடித்தானமென்கிறார்

(இ-ள்) எல்லியுங்காலையும் ராத்ரிதிவாவிபாகமில்லாதபடி. தன்னை உபகாரகனான தன்னை, நினைந்து-ஸ்மரித்து, எழ-உஜ்ஜீவிக்கும்படியாக. நிர்ஹேதுகமாகையாலே, நல்ல - விலக்ஷணமான, அருள்கள் - ஆகமநாஸக்த்யந்தஃப்ரவேஶவிரோதி நிவர்த்தநாநுபவங்களுக்கடியான நிரவதி

(க) ரா-ஸு ஆர கo-சு. (உ) பாரத உத்யோ. (ந) திரு-வி உஎ.

கக்ருபைகளை (க) "தாரேன்பிறர்க்குன்னருளென்னிடை வைத்தாய்" என்கிறகணக்கிலே, நமக்கே - நமக்கே யஸாதாரணமாக, தந்து-தந்து, மேலுமிடைவிடாமல், அருள்-அருள், செய்வான்-செய்வானாய், 'தாமத் தண்டுழாய்க்கடிசேர் கண்ணிப்பெருமான்" என்றிவராசைப்பட்டாப் போலே, அல்லி - பூந்தாரையுடைத்தாய், அம்-தர்ஶநீயமாய், தண்ணம் குளிர்ந்த, துழாய்-திருத்துழாய் மாலையாலே யலங்க்ருதமான, முடி-திருமுடியையுடைய, அப்பன் - ஹேஷியர்யுள்ள வுபகாரகனானவனுடைய, ஊர்-அஸாதாரணதேசம், செல்வர்கள் - பகவத்கைங்கர்யஸம்பத்தையுடையரான பாகவதரானவர்கள், வாழும் - அநுபவாவிச்சேதத்தாலே யாநந்திகளாய் வர்த்திக்கிற, திருக்கடித்தானம் - திருக்கடித்தானமாம். (க)

ஆறு:—"ஒருவன் செய்தருளினபடியே" என்றென்று நினைத்துக் கிடக்கும்படி யருள்செய்தருளினான்; அவ்வருள் தானேதென்றால்; முன்னம் திருக்கடித்தானத்திலேவந்து புகுந்தருளினானென்கிறார். (க)

ஈடு; அவ:—என்னுடையவார்த்தி தீரத்தருளுவான் ஸர்வேஶ்வரனே, அவனூர் திருக்கடித்தானமென்கிறார்.

(எல்லியுங்காலையுமித்யாதி) திவாராத்ர விபாகமின்றிக்கே யெல்லாக்காலத்திலு முபகாரகனான தன்னை நினைத்துஜ்ஜீவிக்கும்படி. (நல்லவருள்கள்) என்குற்றமாதல், தன்ஸார்வஜ்ஞ்யமாதல் பாராதே, தன்பேறாகப் பண்ணினவருள். * மாயக்கூத்தனில் விடாய்க்கருளினானென்றிருக்கிறிலர். (நமக்கேதந்தருள்செய்வான்) "பலரடியார்முன்பருளிய" என்கிறபடியே, நித்யஸூரிகளும் தாம்பெற்றபேறு பெற்றிலரென்றாயிற்று நினைத்திருப்பது.

(அல்லியந்தண்ணந்துழாய்முடி) கீழ்த்திருவாய்மொழியிலே-"மொய்பூந்தாமத்தண்டுழாய்க் கடிசேர்கண்ணிப்பெருமானே" என்றிவராசைப்பட்டபடியே காட்டிக்கொடுத்தான். (ஊர்) இப்படி யுபகாரகனானவன் வர்த்திக்கையாலே நமக்கு ப்ராப்யபூமி திருக்கடித்தானமென்கிறார். (செல்வர்கள்வாழும்) * மாயக்கூத்தனும் * எல்லியுங்காலையுமாகவேண்டாதே, அநுபவத்தோடே காலங்கழிக்கிறவர்கள். (உ) "ஸுக்ஷணோ ஸுக்ஷி ஸஉ ஞ:-லக்ஷ்மணோ லக்ஷ்மிஸம்பந்ந:" என்கிறபடியே யிருப்பார்சிலர்.

(க) தி-மொ எ க ரு. (உ) ரா பால கஅ உக.

எல்லியுமித்யாதி - அப்பனுனவனுரென்னுதல்; செல்வர்கள் வாழும் - ஊர் - திருக்கடித்தானமென்னுதல்.

அல்லியந்தண்ணந்துழாய் முடியப்பன் - நல்லவருள்கள் நமக்கேதந்தருள்செய்வானென்னுதல். (க)

இரண்டாம்பாட்டு.

திருக்கடித்தானமும் என்னுடைச்சிந்தையும் * ஒருக்கடுத்து உள்ளேஉறையும்பிரான்கண்டீர் * செருக்கடுத்து அன்றுதிகைத்த அரக்கரை * உருக்கெட வாளிபொழிந்தஒருவனே. (உ)

ப:—அநந்தரம், அசேஷவிரோதிநிவர்த்தந ஸமர்த்தனுன சக்ரவர்த்திதிருமகன், திருக்கடித்தானத்தையு மென்னெஞ்சையு மொருபடிப்பட நினைத்து வர்த்திக்கு முபகாரசீலனென்கிறுர்.

(இ-ள்) வரபலபுஜபலங்களாலே, செரு-யுத்தத்திலே, கடுத்து-செருக்குமிஞ்சி, அன்று-நீரிலேநெருப்பெழுந்தாப்போலே சீற்றம்விளையும்படி பெருமாளுக்கபராதம்பண்ணினவன்று, திகைத்த - ஆரைவெல்லலாமென்று ப்ரமித்த, அரக்கர்-ராவணுதிராக்ஷஸர், உரு-உருவம், கெட அழிந்துசிந்நமாம்படிக்கீடாக, வாளி ஶரவர்ஷத்தை, பொழிந்த-வர்ஷித்த, ஒருவன்கண்டீர் - ஏகவீரனுனவன்கிடீர், திருக்கடித்தானமும், திருக்கடித்தானமாகிற திருப்பதியையும், அப்படி அபிமதமான, என்னுடை - என் - சிந்தையும் - நெஞ்சையும், ஒருக்கடுத்து ஒருமைப்படப்பிடித்து, உள்ளே இரண்டுக்குள்ளே, உறையும்-வர்த்திக்கிற பிரான்: மஹோபகாரகன்; இரண்டையு மொக்கப்பிடித்து என்னுள்ளே வர்த்திக்கிறவனென்றுமாம். (க)

ஆறு:—(திருக்கடித்தானமும்) பின்னையும் செய்தருளுகிறுன். திருக்கடித்தானத்தையு மென்னெஞ்சையுமொக்கத் தனக்கிருப்பிடமாகக் கொண்டருளினுன். அவனுரென்னில்; செருக்கடுத்தன்று திகைத்தவரக்கரை யுருக்கெடவாளிபொழிந்த வத்விதீயன் கண்டீரென்கிறுர். (உ)

ஈடு; அவ:—என்பக்கல் வருகைக்கு ப்ரதிபந்தகங்களையும் தானேபோக்கி, திருக்கடித்தானத்திலு மென் ஹ்ருதயத்திலு மொக்க வபிநிவேசித்து என்னுள்ளே வர்த்தியாநின்றுனென்கிறுர்.

(ஒருக்கடேத்து) ஒருங்கவடுத்து, அதாகிறது-ஒக்க நினைக்கை. திருக்கடித் தானத்தையும் என் ஹ்ருதயத்தையு மொக்க விரும்பி. (உள்ளே யுறையும்) மநஸ்ஸிலே நித்யவாஸம் பண்ணுநின்றான் விரோதிசெய்ததென்னென்ன; அது ராக்ஷஸர் பட்டது பட்டது (செருக்கடேத்து) யுத்தகண்டேநிவர்த்தித்து, (அன்று) (௧) "ந நஶேயுர்-நநமேயம்" என்றவன்று. (திகைத்தவரக்கரை) சக்ரவர்த்திதிருமகனை வெல்லலாமென்று நினைத்த மதிகேடரான ராக்ஷஸரை, (உருக்கெட) (௨) "ஸஹஸ்ராணி-ஸஹஸ்ராணி ... -சிந்நம்பிந் நம்ஸரைர்த்தக்தம்" (வாளிபொழிந்த) (௩) "ஸரவர்ஷம் வவர்ஷஹ-ஸரவர்ஷம் வவர்ஷஹ" என்கிறபடியே, (ஒருவன்) ஏக வீரனானவன்

மூன்றாம்பாட்டு.

ஒருவர் இருவர் ஓர்மூவரெனநின்று * உருவுகரந்து உள்ளுந்தோறும் தித்திப்பான் * திருவமர்மார்வன் திருக்கடித்தானத்தை * மருவியுறைகின்ற மாயப்பிரானே. (௩)

ப:—அநந்தரம், பராக்ரமைஶ்வர்யத்தாலே வீரஶ்ரீ விஶிஷ்டனானவன், திருக்கடித்தானத்திலே ஸந்நிஹிதனாய், எனக்கு போக்யபூதனாயிராநின்றானென்கிறார்.

(இ-ள்.) மூலபலநிரஸநத்தில் பராக்ரமைஶ்வர்யத்தாலே ஒருவர்-ப்ரதமமொருவராய், இருவர்-பின்னையிருவராய், மூவரென பின் மூவரென்னும்படி, நின்று-நின்று, ஓர்-அத்விதீயமான, உருவு-ரூபம், கரந்து இலக்குக் குறிக்கவொண்ணாதபடி இந்த்ரியாவிஷயமாய்க்கொண்டு உருக்கெட வாளிபொழிந்த வொருவனானவன் அந்த வீரஶ்ரீயோடே வந்தானென்னும்படி திரு-லக்ஷ்மியை, அமர்மார்வன் - திருமார்பிலேயுடையனாய்க்கொண்டு, திருக்கடித்தானத்தை - திருக்கடித்தானத்தை, மருவி பொருந்தி, உறைகின்ற-நித்யவாஸம் பண்ணுகிற, மாயப்பிரான்-ஆஶ்சர்யோபகாரகனாய், உள்ளுந்தோறும்-நினைக்குந்தோறும் தித்திப்பான்-இனியனாகாநின்றான். (௩)

---

(௧) ரா-யு-௩௬ ௧௧. (௨) ரா-யு ௬௪ ௨௨.
(௩) ரா-யு-௬௪-௧௮.

ஆறு:—(ஒருவர்) பின்னையுமொருவரா யிருவராய் மூவராய்த் தோன்றி, உருவுதெரியாதபடி வந்து வாளிபொழிந்தவனென்று அவன் செயலையே யநுபவித்து, அதுக்குமேல், இன்று திருக்கடித் தானத்திலு மென்னெஞ்சிலும் பிராட்டியோடே கூடவந்து புகுந்தருளினானென்கிறார். (ங)

ஈடு; அவ:—பிராட்டியோடு கூடத் திருக்கடித்தானத்திலே நித்யவாஸம் பண்ணுகிற வாஸ்சர்யபூதனான வுபகாரகன் அநுஸந்திக்குந்தோறு மினியனாகாநின்றானென்கிறார்.

(ஒருவரித்யாதி) வாளிபொழிந்தபடி யெங்ஙனேயென்ன; இங்ஙனேயென்கிறார்.

(ஒருவரிருவரோர் மூவரென நின்றுருவுகரந்து) ஒருவராய்த் தோன்ற, இருவராய்த்தோன்ற,மூவராய்த்தோன்ற, பின்னை இந்த்ரியார்த்த ஸம்யோகமில்லாதபடி சாரிகைவந்து, ஒருவரிருவரோர் மூவரென-நின்று உருவுகரந்து-செருக்கடுத்தன்று திகைத்த வரக்கரை யுருக்கெட வாளிபொழிந்த வொருவன் - திருக்கடித்தானமு மென்னுடைச்சிந்தையு மொருக்கடுத்துள்ளே யுறையும்பிரான் கண்டீரென்று கீழ்ப்பாட்டோடே அந்வயமாகக்கடவது.

(திருவமர்மார்வன்) (க) "நகஸ்ஸ்ரீஞாவரயம் தி-நகம்ஸிந்நா பாரத்யதி" என்னும் பிராட்டியோடே கூடவாயிற்று வந்தது. (திருவமர்மார்வன் திருக்கடித்தானத்தை மருவியுறைகின்ற மாயப்பிரான் - உள்ளுந்தோறும்தித்திப்பான்) பெரியபிராட்டியார் நித்ய வாஸம்பண்ணுகிற திருமார்வையுடையனாய், திருக்கடித்தானத்தை மருவியுறையாநின்றுகொண்டு என்பக்கலிலே யாஸ்சர்யமாம்படி ப்ரவணனானவன், அநுஸந்திக்குந்தோறும் புதியனாயினியனாகாநின்றான்

நான்காம்பாட்டு.

மாயப்பிரான் எனவல்வினைமாய்ந்தற * நேசத்தினால் நெஞ்சம் நாடுகுடிகொண்டான் * தேசத்தமரர் திருக்கடித்தானத்தை * வாசப்பொழில் மன்னுகோயில் கொண்டானே. (ச)

(க) ரா யு-ககசு-சச.

ப:—அநந்தரம், திருக்கடித்தானத்தை வாஸஸ்த்தாநமாக ஸ்வீகரித்தவன், என்னுடைய ப்ரபலபாபங்களைப் போக்குகைக்காக நெஞ்சுக்குள்ளே நித்யவாஸம்பண்ணுகின்றானென்கிறார்.

(இ ள்.) தேசம்-நிரதிசயதேஜஸ்விகளான, அமரர்-ஸூரிகளுக்கு ப்ராப்யமாய், வாசம்-பரிமளோத்தரமான, பொழில்-பொழில், மன்னு சேர்ந்த, திருக்கடித்தானத்தை-திருக்கடித்தானத்தை, கோயில்-கோயிலாக, கொண்டான்-கொண்ட, மாயப்பிரான்-ஆஸ்சர்யோபகாரகனானவன், என்-என்னுடைய, வல்-ப்ரபலமான-வினை-பாபங்கள்-மாய்ந்தற நசித்துப்போம்படியாக-நேசத்தினால்-என்பக்கல் ஸங்காதிசயத்தாலே நெஞ்சம் - என்னெஞ்சாகிற, நாடு-விஸ்தீர்ணபூமியை, குடி - தனக்குக் குடியிருப்பாக, கொண்டான்-கொண்டான். (ச)

ஆறு:—(மாயப்பிரான்) இவன் திருக்கடித்தானத்தைக் காட்டிலு மென்னெஞ்சிலே, வல்வினைகள் தீரும்படி ஸ்நேஹத்தைப் பண்ணிக்கொண்டு குடியாக விருந்தருளினானென்கிறார். (ச)

ஈடு ; அவ:—திருக்கடித்தானத்தைப் பகலிருக்கை மாத்ரமாகக் கொண்டு, ஸங்காதிசயத்தாலே என்னெஞ்சையே நிரந்தரவாஸஸ்த்தாநமாகக் கொண்டானென்கிறார்.

• (மாயப்பிரான்) ஆஸ்சர்யமான குணசேஷ்டிதங்களை யுடைய வுபகாரகன் (எனவல்வினைமாய்ந்தற) தன்னைப் பிரிந்து நான்பட்ட க்லேசமெல்லாம் நசித்துப்போம்படி, * மாயக்கூத்தனில் * காணவாராயென்றென்று கண்ணும்வாயும் துவர்ந்து பட்டவிடாயெல்லாம் வாஸனையோடே போம்படி, (நேசத்தினால்) தானென்பக்கல்பண்ணின ஸங்கத்தாலே, (நெஞ்சநாடு) ஸம்ஸ்லேஷவிஸ்லேஷங்களாலே பொரு த்ரிபாத்விபூதிபோலே யாக்கினானாயிற்று இவர் திருவுள்ளத்தை (குடிகொண்டான்) ஸபரிகரமாக நித்யவாஸம்பண்ணுகின்றான்; (க) * அரவத்தமளிப்படியே.

(தேசத்தமரர் திருக்கடித்தானத்தை) நித்யாநுபவம் பண்ணுகையா லுண்டான தேஜஸ்ஸையுடைய நித்யஸூரிகளுக்கு ப்ராப்யமானதிருக்கடித்தானத்தை, (வாசப்பொழில்மன்னு) வாசத்தையுடைய பொழிலோடேகூடின, தேசத்தமரர் திருக்கடித்தானத்தை-கோயில்கொண்டான் - நேசத்தினால் நெஞ்சம்நாடுகுடிகொண்டான்.

(க) பெரியா தி-உ கO.

ஐந்தாம்பாட்டு.

கோயில்கொண்டான்தன் திருக்கடித்தானத்தை * கோயில் கொண்டான் அதனோடுமென்னெஞ்சகம் * கோயில்கொள் தெய்வ மெல்லாம்தொழ * வைகுந்தம் கோயில்கொண்ட குடக்கூத்த அம்மானே. (ரு)

ப:—அநந்தரம், ப்ராப்யமான பரமபதத்திலே வர்த்திக்கிறவன் - திருக்கடித்தானத்தோடே யென்னெஞ்சை வாஸஸ்த்தாநமாகக் கொண்டானென்கிறார்.

(இ-ள்) கோயில்கொள் - விலக்ஷணவிமாநோபேதரான, தெய்வ மெல்லாம்-நித்யஸூரிகள், தொழ-தொழும்படியாக. வைகுந்தம்-ப்ராப் யதேசபரமபதத்தை, கோயில்-வாஸஸ்த்தாநமாக கொண்ட - உடைய னாய், ஆஸ்ரிதார்த்தமாக வவதரித்து, குடக்கூத்த - குடக்கூத்தாகிற மநோஹாரிசேஷ்டிதத்தை யுடைய. அம்மான் - க்ருஷ்ணனான ஸ்வாமி யானவன், திருக்கடித்தானத்தை-திருக்கடித்தானத்தை, தன்கோயில் தனக்கஸாதாரணதேசமாக, கொண்டான்-ஸ்வீகரித்துக்கொண்டு, அத னோடும் - அதுதன்னோடே, என் - என், நெஞ்சையும், கோயில்-தனக் குக் கோயிலாக, கொண்டான் - கொண்டான். -(ரு)

ஆறு:—(கோயில்கொண்டான்) அங்குமிங்குமா யிருந்தரு ளுகை யன்றியே, ஸ்நேஹாதிஶயத்தாலே திருக்கடித்தானத்தையுங் கொண்டு, என்னெஞ்சினுள்ளே புகுந்தருளினனென்கிறார். (ரு)

ஈடு;அவ:—என்பக்கல் ப்ரேமாதிஶயத்தாலே திருக்கடித்தான த்தோடே கூட என்ஹ்ருதயத்திலே புகுந்தருளினானென்கிறார்.

(கோயில்கொண்டானித்யாதி) திருக்கடித்தானத்தைத் தனக் கஸாதாரணமான கோயிலாகக்கொண்டான். (கோயிலித்யர்தி) "செ ருப்புவைத்துத் திருவடிதொழுவாரைப்போலே யாகவொண்ணாது" என்று, திருக்கடித்தானத்தோடே கூடவந்து என்னெஞ்சிலே புகு ந்தருளினான்.

(கோயில்கோளித்யாதி) ஓரோ கோயில்களுண்டாயிருக்கு மிறே, திருவடி, திருவநந்தாழ்வான் ஸேனைமுதலியா ரிவர்களுக்கு; அவர்கள்தொழும்படி ஸ்ரீ வைகுண்டத்தைத் தனக்குக் கோயிலா

கக்கொண்ட ஸர்வேஶ்வரன், க்ருஷ்ணனாயவ் தவதரித்துக் குடக்கூத்தாடி அந்தஸ்ரமமாறும்படி திருக்கடித்தானத்தை - கோயில் கொண்டான்; அத்தோடேகூட வென்ஹ்ருதயத்தை - தனக்குக் கோயிலாகக்கொண்டான்; (க) "அழகியபாற்கடலோடும்" என்கிற படியே, திருக்கடித்தானத்தில் நிலை யென்னைப் பெறுகைக் காகை யாலே, ஸாத்யம் கைப்பட்டால் ஸாதநத்தி லிழிவாரில்லையாயிருக்க, "என்னைப்பெற்றது அத்தேசத்திலே நிற்கையாலே" என்று அத் தேசத்தோடே வந்து புகுந்தான். (ரு)

ஆறும்பாட்டு.

கூத்தஅம்மான் கொடியேனிடர்முற்றவும் * மாய்த்த அம்மான் மதுசூதவம்மானுறை * பூத்தபொழில் தண்திருக்கடித்தானத்தை * ஏத்தநில்லா குறிக்கோண்மின்இடரே. (சு)

ப:—அநந்தரம், விரோதி நிரஸநஸ்வபாவனானவன் வர்த்திக்கிற தேசந்தானே விரோதியைப் போக்குமென்கிறார்.

(இ ள்.) கூத்த-மநோஹாரிசேஷ்டிதங்களாலே, அம்மான்-லோகத்துக்கு ஸ்வாமியாய், கொடியேன் - "காணவேணும்" என்று பலகாலும் நிர்ப்பந்தித்துக் கூப்பிட்ட கொடுமையை யுடைய வென். இடர்-நெஞ்சுதுக்கத்தை' மாய்த்த-போக்கி, அம்மான் - அடிமைகொண்டவனாய், ஆஶ்ரிதவிரோதியை மதுசூதன் - மதுவை யழித்தாப்போலே யழிக்கும், அம்மான்-ஸ்வாமியானவன், உறை-வர்த்திக்கும் தேசமாய், பூத்த-புஷ்பஸம்ருத்தமான, பொழில் - பொழிலையுடைய, தண்-குளிர்ந்த, திருக்கடித்தானத்தை - திருக்கடித்தானத்தை, ஏத்த-ஸ்தோத்ரம்பண்ணின வளவிலே இடர்-துக்கங்கள், முற்றவும் எல்லாம் நில்லா - நிலைகுலைந்துபோம் குறிக்கொண்மின் - இத்தைக் குறிக்கொள்ளுங்கோள். (சு)

ஆறு:—(கூத்தவம்மான்) இஸ்ஸம்ருத்தியெல்லாம் திருக்கடித்தானத்தை யாஶ்ரயித்ததினாலே வந்ததென்னும் ப்ரீதியாலே, மதுகைடபாதி ப்ரதிகூலநிரஸநம் பண்ணினாப்போலே, ஸ்வகீயதுண

(க) பெரியாழ்-தி-ரு-உ-கக.

சேஷ்டிதா விஷ்காரத்தாலே ஸ்வவிஸ்லேஷஜநிதமான வென்னுடைய து:கத்தைப் போக்கியருளினவ னுறைகின்ற திருக்கடித்தானத்தையேத்த வாருங்கோளென்று ஸ்ரீ வைஷ்ணவர்களை யழைத்துக்கொண்டு, அவர்களோடேகூட வேத்திபுஜிக்கிறார். (கூ)

ஈடு ; அவ:—தம்முடைய ப்ரீதிப்ரகர்ஷத்தாலே. திருக்கடித்தானத்தை யெல்லாருமாஸ்ரயியுங்கோ ளென்கிறார்.

(கூத்தவம்மான்) மநோஹாரியான சேஷ்டிதங்களையுடைய ஸர்வேஸ்வரன், (கொடியேன்) மஹாபாபியான வென்னுடைய. (இடர்முற்றவும்மாய்த்தவம்மான்) தன்னைப்பிரிந்து நான்பட்ட க்லேசத்தையெல்லாம் வாஸனையோடேபோக்கின வென்ஸ்வாமி, (மதுசூதனித்யாதி) ப்ரதிகூலநிரஸந ஸ்வபாவனான ஸர்வேஸ்வரன் நித்யவாஸம்பண்ணுகிற தேசம்.

(பூத்தபொழில்) அவன் நித்யவாஸம்பண்ணுகையாலே நித்ய வஸந்தமானபொழில், கடாக்ஷவர்ஷம் மாறிலிறே பூமாறுவது; ஸ்ரமஹரமான திருக்கடித்தானத்தை, (ஏத்தநில்லா-இடர்) இனியத்தைச்செய்ய, இடரானது "நமக்கிதுதேசமன்று" என்று * சும்மெனுதேதனைவிட்டோடும். (குறிக்கொண்மின்) இத்தை "ஓலக்கவார்த்தை" என்றிராதே, புத்திபண்ணுங்கோள். (கூ)

ஏழாம்பாட்டு.

கொண்மின் இடர்கெட உள்ளத்துக்கோவிந்தன் * மண்விண் முழுதும் அளந்த ஒண்தாமரை * மண்ணவர்தாம்தொழ வானவர் தாம்வந்து * நண்ணு திருக்கடித்தானநகரே. (எ)

ப:—அநந்தரம், அவனுடைய தேஸஸ்ம்ருதிமாத்ரமே விரோதி நிவர்த்தகமென்கிறார்.

(இ-ள்.) கோவிந்தன் - ஸர்வஸுலபனான வௌஜ்ஜ்வல்யத்தையுடையவனுடைய, மண்-பூமியையும், விண் - ஊர்த்வலோகத்தையும், முழுதும்-ஒன்றொழியாமல், அளந்த-அளந்துகொண்ட, ஒண்-நிரதிஸய போக்யமான, தாமரை-திருவடித்தாமரைகளை, மண்ணவர் பூமியிலுள்ளார்; தாம்-தங்களுக் கஸாதாரணபோக்யமென்று, தொழ-தொழாநிற்க

வானவர்-நித்யாநுபவம்பண்ணுகிற பரமபதவாஸிகள், தாம்-தாங்களும் வந்து-ஸ்ரீலாதிக்யமநுபவிக்கைக்குவந்து . நண்ணு-ப்ராபிக்கும்படியான திருக்கடித்தானம் திருக்கடித்தானமாகிற, நகரை - நகரத்தை, இடர்-துக்கமெல்லாம். கெட-போகும்படியாக, உள்ளத்து-நெஞ்சிலே,கொண்மின்-கொள்ளும்படியாருங்கோள். (எ)

ஆறு:—(கொண்மின்) கோவிந்தனுடைய மண் விண் முழுது மளந்த வொண்டாமரையை மண்ணவர் தாம் தொழுகிறபடியைக் காண்கைக்காக வானவர் தாம்வந்து நண்ணுதிருக்கடித்தான நகரை நினையுங்கோள், இடர்கெடுமென்கிறார். (எ)

ஈடு ; அவ:—உங்கள் துக்கநிவ்ருத்திக்கு ஏத்தவேண்டா, திருக்கடித்தானத்தை நெஞ்சாலேநினைக்க வமையுமென்கிறார்.

(கொண்மினித்யாதி) உங்கள் ஸமஸ்தது:க்கங்களும் போம்படியான திருக்கடித்தானத்தை மநஸ்ஸாலே நினையுங்கோள். (கோவிந்தன்) ஸர்வஸுலபனானவனுடைய,(மண்விண்முழுதுமளந்தவொண்டாமரை) ஒரு தாமரைப்பூவைக்கொண்டாயிற்று பூம்யந்தரிக்ஷங்களை யளந்துகொண்டது.

(மண்ணவர்தாந்தொழ) இடக்கைவலக்கையறியாத பூமியிலுள்ளார் தொழ; பரமபதம் நித்யர்க்கேயா யிருக்குமாபோலே, உகந்தருளின தேசம்ஸம்ஸாரிகளுக்கேயாயிருக்கை. (வானவரித்யாதி) ஸம்ஸாரிகளுக்கு முகங்கொடுத்துக்கொடுநிற்கிற நீர்மையை யநுஸந்தித்து, நித்யஸூரிகளும் வந்துகிட்டுகிறதேசத்தை-கொண்மினிடர் கெடவுள்ளத்து. இங்குள்ளாரங்குப்போவது மேன்மையை யநுபவிக்க; அங்குள்ளாரிங்குவருவது ஸீலகுணாநுபவம் பண்ணுகைக்கு. (எ)

எட்டாம்பாட்டு.

தானநகர்கள் தலைச்சிறந்துஎங்கேங்கும் * வானிந்நிலம்கடல் முற்றும் எம்மாயற்கே * ஆனவிடத்தும் என்னெஞ்சும்திக்கடிருத்தானநகரும் * தனதாயப்பதியே. (அ)

ப:—அநந்தரம், பரமபதாதி ஸர்வப்ரதேசத்திலும் ஸ்லாக்யமான ஸ்தாநங்களுண்டாயிருக்க என்னெஞ்சும் திருக்கடித்தானமும் அவனுக்கஸாதாரண தேசமாகாநின்றதென்கிறார்.

(இ-ள்.) வான்-பரமபதம், இ-இந்த, நிலம்-பூமி, கடல் - க்ஷீரார்ணவங்களாகிற, எங்கெங்கும், எல்லாவிடத்திலும், தானம்-ஆவாஸஸ்தாநமான, நகர்கள்-நகரங்கள், முற்றும் - முற்றவும், தலை - தலைப்பட்ட, சிறந்து சிறப்பையுடைத்தாய்க்கொண்டு, எம் மாயற்கே-எனக்காம்சர்யபூதனானவனுக்கே, ஆன விடத்து-ஆயிருக்கச்செய்தேயும், என் என்னுடைய, நெஞ்சம்-நெஞ்சும், திருக்கடித்தானம் - இங்கிருக்கைக்காக வந்து ஸந்நிஹிதனான திருக்கடித்தானமாகிற, நகரும் நகரமும், தன தனக்கு, தாயம் தாயப்ராப்தமான, பதியே அஸாதாரணதேசமாயிரா நின்றது. (அ)

ஆறு:—(தானநகர்கள்) இப்படி திருக்கடித்தானத்தை யநுபவித்து, பின்னையும் தன் திறத்துச்செய்தருளின நன்மையைச் சொல்லுகிறார்.

உம்முடையநெஞ்சும், திருக்கடித்தானமும் எம்பெருமானுக்கிருப்பிடமாகச் சொன்னீர், வானிந்நிலங்கடல்முற்றும் அவனுக்கிருப்பிடமல்லவோ வென்னில்; அங்ஙனேயாகிலும் என்னெஞ்சும் திருக்கடித்தானமும் அவனுக்குப்பிறந்துடைய திருநகரியாயிருக்குமென்கிறார். (அ)

ஈடு ; அவ:—அவனுக்கு விலக்ஷணமானநகரங்கள் பலவுமுண்டாயிருக்கச் செய்தேயும், என்னுடையநெஞ்சையும் திருக்கடித்தானத்தையும் தாயப்ராப்தமான ஸ்தாநமாக விரும்பியிருக்குமென்கிறார்.

(தானநகரித்யாதி) (வானிந்நிலங்கடல்-எங்கெங்கும் - தலைச்சிறந்த தானநகர்கள்-முற்றுமெம்மாயற்கேயானவிடத்தும்) மேலில் லோகங்களிலும், பூமியிலும், கடலிலும், கண்டவிடமெல்லாம் மிகவும் ம்லாக்யமான விருப்பிடமான நகரங்கள்முற்றும், என்பக்கலிலே அபிநிவிஷ்டனான வாம்சர்யபூதனுக்கு (ஆனவிடத்தும்) ஆயிருக்கச் செய்தேயும், என்னெஞ்சும் திருக்கடித்தானநகரும் தனக்கு தாயப்ராப்தமான ஸ்தாநமாக விரும்பியிராநின்றான். (அ)

ஒன்பதாம்பாட்டு.

தாயப்பதிகள் தலைச்சிறந்தெங்கெங்கும் *மாயத்தினால் மன்னி வீற்றிருந்தானுறை * தேசத்தமரர் திருக்கடித்தானத்துள் * ஆயர்க்கதிபதி அற்புதன்தானே. (கூ)

ப:—அநந்தரம், திருக்கடித்தானத்திலே நித்யவாஸம்பண்ணுகிற வாச்சர்ய பூதக்ருஷ்ணன்றானே அல்லாத ஸ்த்தலங்களிலுமிருந்தானென்கிறார்.

(இ-ள்.) தேசம்-தேஜஸ்விகளான, அமரர்-நித்யஸூரிகளுக்கு ப்ராப்யமான, திருக்கடித்தானத்துள்-திருக்கடித்தானத்துள்ளே, உறை, வர்த்திக்குமவனாய், ஆயர்க்கு கோபர்களுக்கு, அதிபதி-நிரவதிக ஸ்வாமியான, அற்புதன்றான் - ஆச்சர்யகுணசேஷ்டிதங்களை யுடையவன்றான், தாயம்-அஸாதாரணமான, பதிகள் - அர்ச்சாஸ்த்தலங்கள், எங்கெங்கும்-எல்லாவிடத்திலும், தலை-தலைப்பட்ட, சிறந்து-சீலாதிகுணஸம்பத்தை யுடையவனாய்க்கொண்டு, மாயத்தினல்-ஆச்சர்யஸௌந்தர்யாதி விக்ரஹகுண விசிஷ்டனாய், மன்னி-பொருந்தி, வீற்று பரவ்யூஹாதிகளிற்காட்டில் தன்னுடைய வ்யாவ்ருத்தி தோன்றும்படியாய், இருந்தான்-இருந்தவன். (க)

ஆறு—(தாயப்பதிகள்) எல்லாமவனுக்குத் தாயப்பதிகளன்றோவென்னில்; அதப்படியேயாகிலும் திருக்கடித் தானமென்றால் அவன் திருவுள்ளம் விழுந்துகிடக்கும்படி யாச்சர்யமென்கிறார்.(க)

ஈடு; அவ:—அல்லாத திருப்பதிகளு மெல்லாம் அவனுக் கப்படியேயன்றோவென்னில்; அதப்படியேயாகிலும் "என்னோடே கிட்டுகைக் குறிப்பானநிலம்" என்று திருக்கடித்தானத்திலே அத்யபிநிவிஷ்டனானனென்கிறார்.

(தாயப்பதிகளித்யாதி) (தலைச்சிறந்த - தாயப்பதிகள் - எங்கெங்கும்) மிகவும் விலக்ஷணமாய்ப் பழையதாய்வருகிற ஸ்த்தாநங்களெங்கும். (மாயத்தினல்) அபிநிவேசத்தாலேயென்னுதல், இச்சையாலே யென்னுதல். (க) "ஸாயாவயுநஜ்ஞாநம்-மாயாவயுநம் ஜ்ஞாநம்" (மன்னிவீற்றிருந்தான்) விரும்பி, தன்னைச்வர்யமெல்லாந் தோற்றும்படி யிருந்தருளினவன். ஐச்வர்யத்தால்வந்த வேறுபாடு தோற்ற விருந்தவனென்றுமாம். (உறை) நித்யவாஸம்பண்ணுகிற.

(தேசத்தமரர்) தேஜஸ்ஸையுடைய நித்யஸூரிகளுக்கு ப்ராப்யபூமியான திருக்கடித்தானத்துள். (ஆயர்க்கதிபதி) கோபஸஜாதீயனாய்வந்தவதரித்து, அவர்களில் தலைவனானவன் (அற்புதன்) ஆச்

(க) வேதநிகண்டு.

கஙிச திருவாய்மொழி, அ-ப, ௬-தி, ௧௦-பா, அற்புதன் வ்யாக்யானம்.

சர்யமானபடிகளையுடையவன். உகந்தருளின தேசங்களெல்லாவற்றிலும் விருப்பமுண்டாகிலும், என்னை லபிக்கைக்காகத் திருக்கடித்தானத்திலே, தன்மேன்மையும் நீர்மையுமெல்லாம் ப்ரகாசிக்க நின்றானென்கை. (௯)

பத்தாம்பாட்டு.

அற்புதன்நாராயணன் அரிவாமனன் * நிற்பதுமேவி இருப்பது என்னெஞ்சகம் * நற்புகழ்வேதியர் நான்மறைநின்றதிர் * கற்பகச்சோலைத் திருக்கடித்தானமே. (௧௦)

ப:—அநந்தரம், ஆலந்நமான திருக்கடித்தானத்தில் நிற்கிறது என்னெஞ்சிலே பொருந்தி வர்த்திக்கைக்காக வென்கிறார்.

(இ-ள்) அற்புதன்-அநுபாவ்யமான வாஶ்சர்ய சேஷ்டிதங்களையுடையனும், நாராயணன்-அதுக்கநுரூபமான ஸம்பந்தத்தை யுடையனும், அரி-அநுபவ விரோதிநிரஸநஶீலனும், வாமனன்-அர்த்தியாய்வந்தநுபவிப்பிக்குமவன், மேவி-பொருந்தி, இருப்பது-இருப்பது, என்-என், நெஞ்சகம்-நெஞ்சுக்குள். நிற்பது-அதுக்குறுப்பாகவந்து நிற்பது, நற்புகழ்-அநந்ய ப்ரயோஜநத்வ ப்ரதையையுடையரான, வேதியர்-வைதிகருடைய, நால்-நாலு, மறை-வேதங்களும், நின்று, அதிர்-முழங்கும்படியாய், கற்பகம் - கல்பகமயமான, சோலை - சோலையையுடைத்தான, திருக்கடித்தானம்-திருக்கடித்தானம். (௧௦)

ஆறு:— (அற்புதன்) இப்படி திருநாடு, திருப்பாற்கடல் தொடக்கமாகவுள்ள திருநகரிகளெல்லாவற்றிலும் அத்யந்த அபிமதமாயிருந்த திருக்கடித்தானத்திலே நிற்பது மேவியிருப்ப தென்னெஞ்சகமென்கிறார். (௧௦)

ஈடு; அவ:—என்னைப்பெறுமளவும் திருக்கடித் தானத்திலே நின்றான்; என்னைப்பெற்றபின்பு நிற்பது மிருப்பது மென்னெஞ்சிலேயென்கிறார்.

(நாராயணன்) தன்னுடைமையை விட்டுக்கொடாத வத்ஸலன். (அரி) ஆஶ்ரிதவிரோதிநிரஸநஸமர்த்தன். (வாமனன்) தன்னைச் சிறுகவிட்டு ஆஶ்ரிதருடைய ஸர்வாபேக்ஷிதங்களையும் முடிக்குமவன் (அற்புதன்) இப்படிகளாலே யாஶ்சர்யபூதன்.

(நற்புகழித்யாதி) அநந்யப்ரயோஜநரென்னும் புகழையுடைய வைதிகராலே யுச்சரிக்கப்பட்ட நாலு வேதங்களாலும் முழங்கா நின்றுள்ள கல்பகவநத்தையுடைய திருக்கடித்தானத்திலே - அவன் நிற்பது; மேவியிருப்பதென்னெஞ்சகமென்னுதல்;

திருக்கடித்தானத்து - நாராயணன் அரிவாமனன் - அற்புதன்- நிற்பதும் - என்னெஞ்சகம், மேவியிருப்பதும் - என்னெஞ்சகமென்னுதல். திருக்கடித்தானமென்று - ஸப்தம்யர்த்தே ப்ரதமை. (கo)

பதினொன்றாம்பாட்டு.

சோலைத்திருக்கடித்தானத்து உறைதிருமாலை*மதிள்குருகூர்ச் சடகோபன்சோல் * பாலோடமுதன்ன ஆயிரத்து இப்பத்தும் * மேலைவைகுந்தத்து இருத்தும்வியந்தே. (கக)

ப:—அநந்தரம், இத்திருவாய்மொழிக்கு பலமாக பரமபத ப்ராப்தியை யருளிச்செய்கிறார்.

(இ-ள்.) சோலை-சோலைகளையுடைய, திருக்கடித்தானத்து-திருக்கடித்தானத்திலே, உறை - நித்யவாஸம்பண்ணுகிற, திருமாலை - ஸ்ரிய:பதியைப்பற்ற, மதிள்-அரணான மதிளையுடைய, குருகூர்-திருநகரிக்கு நிர்வாஹகரான, சடகோபன்-ஆழ்வாருடைய, சொல்-சொல்லாய்,வாச்யவாசக ஸம்ஸ்லேஷத்தி லினிமையாலே, பாலோடமுதன்ன- பாலுமமுதுங் கலந்தாப்போலே யிருக்கிற, ஆயிரத்து-ஆயிரந்திருவாய்மொழியில், இப்பத்தும்-இப்பத்தும், மேலை-உத்துங்கதேசமான,வைகுந்தத்து பரமபதத்திலே,இத்திருவாய்மொழியில் ஸம்பந்தமுடையாரை,வியந்து உகந்து, இருத்தும்-ப்ரதிஷ்டிதராக்கும். (கக)

ஆறு:—(சோலை) சோலைத்திருக்கடித்தானத்துறை திருமால் கவிக்குப்ராதிபாத்யன். மதிள்குருகூர்ச்சடகோபன் கவிபாடுகிறானாகையால் இவை யெங்ஙனேயிருக்கிறன. இவைவல்லாரை,எம்பெருமானொருக்ஷணம் பிரியில் தரிக்கமாட்டானென்கிறார். (கக)

ஈடு; அவ:—நிகமத்தில் - இத்திருவாய்மொழி கற்றவர்களை, இது தானே திருநாட்டிலே கொடுபோய் விடுமென்கிறார்.

(சோலையித்யாதி) ப்ரமஹரமாய் தர்ஶநீயமான சோலையையுடைய திருக்கடித்தானத்திலே நித்யவாஸம்பண்ணுகிற ப்ரியபதியை. (மதிட்குருகூர்) ஸாம்ஸாரிகதுரிதங்களுக்குப் புகவொண்ணாத வரணையுடைய திருநகரி. (சடகோபன்சோல்) (க) "ஶ்ரவண-வஹிதகலை-நிஶ்ரூணீதழ-ரகுவரசரிதம்முநிப்ரணீதம்" என்னுமாபோலே.

பாலோடமுதன்னவாயிரமென்னுதல், பாலோடமுதன்ன - இப்பத்தென்னுதல். வாச்யவாசகங்களுடைய சேர்த்தியிருக்கிறபடி. பாலென்கிறது-சோலைத்திருக்கடித்தானத்துறை திருமாலை; அமுதென்கிறது-சடகோபன் சொல்லென்கிற வாசகத்தை. இது-ஆளவந்தார் நிர்வாஹம். (இப்பத்தும்-வியந்து - மேலைவைகுந்தத்திருத்தும்) "ஸம்ஸாரத்திலே இத்தை அப்யஸிப்பாரொருவருண்டாவதே!" என்று விஸ்மயப்பட்டு, ஸர்வாதிகமான பரமபதத்திலே கொடுபோய்வைக்கும். * மாயக்கூத்தனில் விடாய் நடையாடாத தேசத்திலேவைத்து, ஒருநாளும் பிரியாத வநுபவத்தைக் கொடுக்கும்.

எட்டாம்பத்து ஆறுந்திருவாய்மொழி முற்றிற்று.

(க) ரா.பா-உ-சங.

ஸ்ரீ

எட்டாம்பத்து.

ஏழாந்திருவாய்மொழி.

இருந்தும் - ப்ரவேசங்கள்.

ப:—ஏழாந்திருவாய்மொழியில், திருக்கடித்தானத்திலே யெழுந்தருளியிருந்த ஸர்வேச்வரன், தம்முடைய திருவுள்ளத்திலே ஸமஸ்த விரோதிகளும் கழியும்படி புகுந்து பரிபூர்ணமாக வெழுந்தருளி யிருக்கக்கண்டு; அவன்தானே அர்த்தியாய்ப் புகுந்தபடியையும், அவனுடைய விரோதிநிவர்த்தகத்வத்தையும், அஜ்ஞாந தமோநிரஸநத்தையும் அதுக்கடியான அத்யுஜ்ஜ்வல விக்ரஹயோகத்தையும், ஸுஸ்த்திரஸ்த்திதியையும், அத்தால் பிறந்த ஸவயவசோபையையும், அவ்வழகினுடைய ஸுபாவ்யத்வாதிசயத்தையும், நிர்ஹேது கோபகாரத்தையும், அதிசயிதோபகாரத்தினுடைய ஸுஸந்தேயத்வத்தையும், நித்யாநுபாவ்யபரத்வத்தையுமநுஸந்தித்து, ஏவம்பூதனான ஸர்வேச்வரன் தன் திருவுள்ளத்தில் புகுந்திருக்கிற வதிசயிதவ்யாமோஹத்திலே விஸ்மிதராய், "இதுப்ரமமோ, மாயாதிவிகாரமோ" என்று சங்கித்து, நம்மளவில் விப்ரலம்பியானென்று தெளிந்து, "இதோருபகாராதிசயமே!" என்று அத்யந்தம் ஹ்ருஷ்டராகிறார்.

ஈடு; அவ:—இத்திருவாய்மொழியிற் பேற்றுக்கு க்ருஷிபண்ணினபடி கீழுடைய; மேல் - இப்பேற்றுக்கு வேலியாயிருக்கிறது. இத்திருவாய்மொழி தன்னில் செய்கிற தென்னென்னில்!; தாம் அநாதிகாலம் புத்திபூர்வகமாகப் பண்ணிப்போந்த ப்ராதிகூல்யங்களை யடையவிஸ்மரித்து, ஆநுகூல்யம் பிறந்தபின்பு ப்ராமாதிகமாக வுண்டானவற்றைக் காணக் கண்ணிட்டு, தம்முடையபேற்றுக்குத் தாமேயத்நித்து, தமக்குப்பிறந்த விடாய்தீரும்படி ஸம்ச்லேஷித்து, இதுதான் இவர்க்கு உபகரித்தானா யிருக்கையன்றிக்கே தன்பேறாயிருக்கிறபடியை யநுஸந்தித்து, "தானே அர்த்தியாய்த் தன்பேறாக வந்து கலந்தவனை நாமிரப்பாளராய்க் கூப்பிட்டவிடமென்செய்தோமானோம்" என்று லஜ்ஜித்து, "ஒருஸம்ஸாரிசேதநன்

பக்கலிலே ஸர்வேச்வரன் பண்ணும் விஷயீகார மிருக்கும்படியே யிது!" என்றுவித்தராய்.

(௧) "ராவணேநாவதூதஸ்து ஸஹாமாத்யை ராவணாநுஜ:- ராகவேணாபயே தத்தே ஸந்நதோ ராவணாநுஜ:" என்று ராவணன் பின் பிறந்த நாம் ரகுகுலத்திலுள்ளார்க் காளாகப் புகாநின்றோமோ வென்றிருந்தவன், பெருமாள் பாடுநின்றும் அருளப்பாடிட்டு வந்த வாறே, "என்னையே யிப்படிகைக்கொண்டருளுவது, அவன் பின் பிறந்த தண்மை யெங்கேபோயிற்று" என்று, வேரற்றமரம்போலே கூடவந்த நால்வரோடும் திருவடிகளிலேவிழுந்து தறைப்பட்டாப் போலவும்;

ராமகுணங்கள் நடையாடாத வசோகவநிகையிலே திருவடி போய்ப்புக்கு (௨) "ஸம்ச்ருத்ய வசோ ராமவாக்யம் ஸம்ப்ரவேசமதுரம் வாக்யம்" என்று, பிராட்டியுளளாம்படி ராமநாம ஸங்கீர்த்தநத்தைப்பண்ண, இந்நிலத்திலிது பரிமாறுவதொன்றல்ல, (௩) "கிம் நு ஸ்வப்நோ மயாயம் ஹி ஸுவ்யக்தம் த்ருஷ்டமத்ய மே। உதாஹோ ஜாகரவாஸ்யாயம் ஸ்ரமதத்ருஷ்ணிகா- கிந்நுஸ்யாச்சித்த மோஹோ யம்பவேத்வாதகதிஸ்த்வியம் । உந்மாதஜோவிகாரோவா ஸ்யாதியம் ம்ருகத்ருஷ்ணிகா" என்று இது சித்தமோஹத்தால் வந்ததோ, வாதகதியோ, உந்மாதஜவிகாரமோ, ம்ருகத்ருஷ்ணிகையோ" என்று பலபடிகளைச்சங்கித்து, முன்னேநின்று வார்த்தைசொல்லாநின்றான், இதுகேட்டு நாம் விக்ருதராகிறவையு முண்டு, ஆனபின்பு இதுமெய்யாமித்தனை" என்று ஸ்ரீஜநகராஜன் திருமகள் தெளிந்து ஹ்ருஷ்டையானாப்போலவும்;

இவரும், "இதுவும்ப்ரமஸ்வப்நாதிகளிலேயொன்று" என்று ஸங்கித்து, "அங்ஙனல்ல, மெய்" என்று தெளிந்து ப்ரீதராய், "நமக்கு அத்வேஷத்தைப் பிறப்பித்து, ஆபிமுக்யத்தையுண்டாக்கி தன்னையல்லது செல்லாமையைப் பிறப்பித்து, தன் மேன்மைபாராதே யிப்படி தாழநின்று வந்து கலந்து பரிமாறுவதே! இதென்ன வாஸ்ரிதபாரதந்த்ர்யம், இதென்னசீர்மை!" என்று அவன்படிகளை யநுஸந்தித்து ஹ்ருஷ்டராகிறார்.

---

(௧) ரா-யு-௧௯-௧. (௨) ரா-ஸு-௩௧-௧. (௩) ரா-ஸு-௩௪-௨௩.

முதற்பாட்டு.

இருத்தும்வியந்து என்னைத் தன்பொன்னடிக் கீழென்று * அருத்தித்து எனைத்தோர்பலநாளழைத்தேற்கு * பொருத்தமுடை வாமனன் தான்புகுந்து* என்தன் கருத்தையுற வீற்றிருந்தான்கண்டு கொண்டே. (க)

ப:—முதற்பாட்டில், நானர்த்தியாய்க் கூப்பிட்டழைத்த விடா யெல்லாந் தீரும்படி தானர்த்தியாய், என்னெஞ்சிலே பெறுப்பேறு பெற்றானாகப் புகுந்திருந்தானென்கிறார்.

(இ-ள்.) என்னை-தன்னையொழியச் செல்லாமையையுடையேனான வென்னை, என்ப்ராவண்யாதிசயத்தைக்கண்டு, வியந்து-விஸ்மிதனாய், தன்-தன்னுடைய, பொன்-நிரதிசயபோக்யமான, அடிக்கீழ்-திருவடிகளின்கீழே, இருத்தும்-இருத்தும், என்று-என்று, அருத்தித்து-அர்த்தித்து, எனைத்தோர்-அநேககாலம், பலநாள்-ஒருபடிப்பட நாள்தோறும், அழைத்தேற்கு-அழைத்துக்கூப்பிட்டவெனக்கு, தான்-தான், பொருத்தம்-ப்ராவண்யம். உடை-உடையனான, வாமனன்-வாமனனாய்க்கொண்டு புகுந்து மஹாபலியஜ்ஞவாடத்துக்குப்-போனாப்போலே தானேவந்து புகுந்து, என்றன்-என்னுடைய. கருத்தை - அர்த்தித்வவிசிஷ்டமான நெஞ்சிலே, உற-ஸுஸ்த்திரமாம்படிக்கீடாக, வீற்று-என்னிலும் தனக்குப்பிறந்த வயிலக்ஷண்ய வ்யாவ்ருத்திதோற்றும்படி, பெறுப்பேறுபெற்றாப்போலே, கண்டுகொண்டு - பூர்ணாவலோகநம் பண்ணிக்கொண்டு இருந்தான்-இருந்தான். (க

ஆறு:—(இருத்தும்வியந்து) இப்படியென்னெஞ்சிலே புகுந்தருளுகிறான், நான் தன்னைப்பிரிந்து பட்டபாடெல்லா மொன்றன்றென்னும்படி தானென்னைப்பிரிந்து வ்யஸநப்பட்டு * ஒருவண்ணமென்னைக்கண்டு கொண்டு புகுந்து பரிபூர்ணனாயிருந்தருளினான், ஒருவனுடைய ப்ரணயித்வ மிருக்கும்படியென், இவனையாகாதே நான், "இதுவோபொருத்தம்" என்று சொல்லிற்றென்கிறார். (க)

ஈடு ; அவ:—இத்திருவாய்மொழியில் தமக்குண்டான லாபத்தை ஸங்க்ரஹேண வருளிச்செய்கிறார்.

(என்னைத்தன்பொன்னடிக்கீழ் - வியந்து- இருத்தும்-என்று) தன்வாசியறியாதே ஶப்தாதிவிஷயங்களிலே அந்ய பரனானவென்னை

ச்லாக்யமான தன்திருவடிகளின்கீழே (௧) "வாஸுதே³வஸ்ஸர்வமிதி ஸமஹாத்மா ஸுது³ர்லப:" என்று கைவாங்கியிருக்கும் ஸம்ஸாரத்திலே நம்மை யபேக்ஷிப்பா னொருவனுண்டாவதே!" என்று விஸ்மயப்பட்டு, இனியொருநாளும் பிரியாதபடி யிருத்தியடிமை கொள்ளும், இத்தால் - ப்ராப்ய ப்ராபகங்களைச் சொல்லுகிறது. தன்பொன்னடிக்கீழென்று-ப்ராப்யஸ்வரூபம் சொல்லிற்று; இருத்துமென்று-ப்ராபகனுமவனேயென்றது. (வியந்து-இருத்தும்) தன் பேறாகவிருத்தும்.

(அருத்தித்து) சேதநனுனவாசிக் கித்தனையும் வேணுமிறே. (எனைத்தோர்பலநாள்) "நானும்" என்றத்தைச் சொல்லுகிறார். (அழைத்தேற்கு) "என்னையாளக் கூப்பிட்டழைத்தக்கால்" என்றத்தைச்சொல்லுகிறார். 'இவன்ப்ரணயித்வத்தையறியாதே, தாழ்த்தானாகவும், நாமபிநிவிஷ்டராகவும் நினைத்துக்கூப்பிட்டென்னகார்யஞ் செய்தோமென்கிறார்காண்" என்னும் பிள்ளான். அழைக்கவுங்கூடமாட்டாத விவனையோநாமழைத்தது; அத்தலையில் ப்ரணயித்வத்தை யநுஸந்தித்தால், அர்த்தித்வமே தொடங்கி மிகையாயிறேயிருப்பது; * எழுதுமென்னுமிது மிகையாயிறேயிருப்பது.

(பொருத்தமுடை) இப்படி பொருத்தமுடையவனையே "இதுவோபொருத்தம்" என்றது. (வாமனன்) நானர்த்தித்தவிடமென் செய்தேனானேன். தன்னுடைமைபெறுகைக்குத் தானிரப்பாளனானவனை. (தான்புகுந்து) என்னைத்தான் பெறுகைக் கர்த்தியாய்வந்து புகுந்து. (என்றன்கருத்தையுற) "தனக்கேயாக வெனைக்கொள்ளுமீதே" என்ற வென்னினைவைத்தான்கைக்கொண்டான். (வீற்றிருந்தான்) இவரைப்பெற்ற வத்தாலுண்டான வேறுபாடு வடிவிலே தோற்ற க்ருதக்ருத்யனாயிரா நின்றான். (கண்டுகோண்டே) மஹாவ்யாதியைத்தப்பின புத்ரனை மாதாபிதாக்கள் பார்த்துக்கொண்டிருக்குமாபோலே, * மாயக்கூத்தனில் விடாய்க்குத் தப்பினவரென்று பார்த்துக்கொண்டிரா நின்றான். (௧)

---

(௧) கீதை-௭-௧௯.

இரண்டாம்பாட்டு.

இருந்தான்கண்டுகொண்டு எனதேழைநெஞ்சாளும் * திருந் தாதஓரைவரைத் தேய்ந்தறமன்னி * பெருந்தாட்களிற்றுக்கு அருள் செய்தபெருமான் * தருந்தான் அருள்தான் இனியான் அறியேனே.

ப:—அநந்தரம், விரோதியான விந்த்ரியங்கள் பலக்ஷயம்பிறக்கும்படி என்னெஞ்சிலெழுந்தருளியிருந்த வுபகாரத்துக்கு அளவறிகிறிலே னென்கிறார்.

(இ-ள்.) எனது-என்னுடைய, ஏழை-சபலமான, நெஞ்சு-நெஞ்சை தாங்களிட்டவழக்காம்படி, ஆளும்-ஆண்டுகொண்டுபோருவதாய், திருந்தாத - அநியாம்யதயா, ஓர் - அத்விதீயமான, ஐவரை - ஐந்திந்த்ரியங்களும், தேய்ந்து-க்ஷயித்து, அற-முடியும்படியாக, மன்னி - ஸுஸ்திரமாம்படி நெஞ்சிலேபுகுந்து, கண்டுகொண்டு - நிதியெடுத்துக் கண்டுகொண்டிருப்பாரைப்போலே, இருந்தான்-போராமலிருந்தவன், பெரு-பெரிய, தாள்-தாளையுடைத்தான, களிற்றுக்கு - களிற்றுக்கு, அருள் செய்த-ஒருமுதலையால்வந்த க்லேசத்தைத் தீர்த்தருள்செய்த, பெருமான்-ஸர்வாதிகன், தான்-தான், தரும்-அவனுக்குபகரிக்கும், அருள் தான்-உபகாரம், இனி-என்னளவிலருளைக்கண்டபின்பு, யான், அறியேன்-ஓரருளாகவறிகிறிலேன்.

ஐந்திந்த்ரியங்களாகிற முதலையிலே அநாதிகாலமகப்பட்ட வெனக்கு நீ பண்ணின விந்தவுபகாரத்துக்கு அது ஸத்ருசமன்றென்று கருத்து. (உ)

ஆறு—(இருந்தான்) என்னுள்ளே புகுந்தருளுகிறான்; என்னுடைய ஸர்வகரணங்களும் இக்குணமல்லது மற்றொருகுணமறியாததொருபடி யிருந்தருளினான்; ஆதலால், "இதின்மேலில்லை" என்னும்படி பண்டெனக்குச் செய்தருளினவருளை யோரருளாக மதியேனென்கிறார். (உ)

ஈடு; அவ:—என்னுடைய இந்த்ரியவஸ்யதையைத் தன்னழகாலே தவிர்த்து, என்னை விஷயீகரித்த வுபகாரத்தோடொவ்வாது ஸ்ரீகஜேந்த்ராழ்வானுடைய வாபந்நிவாரணமுமென்கிறார்.

(இருந்தான் கண்டுகொண்டு) தரித்ரன் தநலாபமுண்டானால் பார்த்துக்கொண்டிருக்குமாபோலே, பார்த்தபடியே யிராநின்றான்.

(க) "அநேநாநந்யஸிவீக்ஷஜேள நத்ருப்திமுபஜக்மது: - அந்யோந்ய மபிவீக்ஷந்தௌ நத்ருப்திமுபஜக்மது:" என்கிறபடியே சொல்ல எதிர்த்தலையானதம்மைக் காண்கிறிலர். (எனதேழைநெஞ்சாளும்) கண்டதெல்லாவற்றிலும் சபலமாயிருக்கிற வென்னெஞ்சை, அதுவே பற்றாசாக விந்த்ரியங்கள் பொதியெடுக்கத்தொடங்கிற்று. ஒரு ப்ரபலனைப்பற்றாதே நடுவேநின்றவாறே பணிகொள்ளத் தொடங்கிற்று.

(திருந்தாத) ஸர்வஶக்தியான ஸர்வேஶ்வரனும் அநாதிகாலம் திருத்தப்போகாதபடியிறே யிவற்றின் வன்மையிருப்பது. (ஓரைவரை) இனியிப்படி யோரைவரைத் தேடப்போகாது. இவற்றால் பட்ட நலிவின்மிகுதியாலே சொல்லுகிறார். (தேய்ந்தறமன்னி-இருந்தான்) கண்ணுக்கிலக்கான ப்ராக்ருதவிஷயங்களில் பற்று நேராக க்ஷயிக்கும்படி, தன் வடிவழகைக் காட்டிக்கொண்டு புகுந்திருந்தான். விஷயாந்தரங்களிலும் வடிவழகிலேயிறே இவன் துவக்குண்டிருப்பது. ராஜாக்கள் ஶத்ருக்களை ஆஸநபலத்தாலே வெல்லுமாபோலே, "இருப்பாலே யிந்த்ரியங்களை வெல்லவேணும்" என்று வந்து புகுந்திருந்தான் (உ) * போதரேயென்று சொல்லிப் புந்தியிற் புகுந்து தன்பாலாதரம் பெருகவைத்தவழகனிறே.

(பெருந்தாளித்யாதி) பெரியதாள்களையுடைய களிற்றுக்கருளின ஸர்வேஶ்வரன். வடிவில் கனமும் நோவில் பாடாற்றவொண்ணாமைக் குடலென்கை. (பெருமான் - தான் - தரும் - அருள்தான்) தருமருள் - தந்தவருள். "தரும்" என்கிறவிது - காலத்ரயத்திலும் சொல்லலாயிருக்கையாலே சொல்லுகிறார். ஆஶ்ரிதர்க்குச் செய்ததும் தமக்குச்செய்ததாகவிறே இவர் நினைத்திருப்பது. (இனியானறியேன்) எனக்குதவினபின்பு, நானத்தை யொன்றாக நினைத்திரேன்.

ஆனை நோவுபட்டது ஆயிரம்வத்ஸரம், அகப்பட்ட பொய்கை பரிச்சின்னம், முதலையொன்று; எனக்குக் காலமநாதி, அகப்பட்டது ஸம்ஸாரார்ணவத்திலே, முதலையஞ்சு; இத்தை மீட்டுக்கொண்ட மஹாகுணத்துக்கு அதொரு குணமாயற்றதோ. ஸ்ரீ கஜேந்த்ராழ்வான்பக்கல் பண்ணினவருளையிட்டு, புறம்புள்ளாரை வ்யாவர்த்தித்

(க) ரா-கி-ரு-கஅ- (உ) திருமா-கசு-

திருவாய்மொழி, அ-ப, எ-தி, ௩-பா, அருள் வ்யாக்யாநம். ௯௬௩

தார்; தமக்குப்பண்ணின வருளையிட்டு அதுதன்னை வ்யாவர்த்திக்கிறார். (௨)

மூன்றாம்பாட்டு.

அருள்தான் இனியான் அறியேன் அவன்என்னுள் * இருள் தானற வீற்றிருந்தான் இதுவல்லால் * பொருள்தானெனின் மூவுலகும் பொருளல்ல * மருள்தானீதோ? மாயமயக்குமயக்கே. (௩)

ப:—அநந்தரம், என்னுடைய அவித்யாதிரூபமான விருள்போம்படி யென்னெஞ்சிலே புகுந்திருந்தான், இதவனுக்கதிசயித புருஷார்த்தமாயிராநின்றது, இத்தை யிப்போதுஉபகாரமென்று நினைத்திருக்கிறிலேன்; இது ப்ரமமோ, மாமாயமோவென்கிறார்.

(இ-ள்.) அவன்-என்பக்கலிலே அத்யந்தாபி நிவிஷ்டனானவன், என்னுள்-என்னெஞ்சுக்குள்ளான. இருள்தான்-அஜ்ஞாநாதிதமஸ்ஸெல்லாம், அற-போம்படி, வீற்று-பெரிய மேன்மையோடே, இருந்தான் - இருந்தான், அவனுக்கு, இது-இவ்விருப்பு, அல்லால்-ஒழிய, பொருள்தான்-வேறுபுருஷார்த்தம், எனில்-உண்டோவென்னில், மூவுலகும்-த்ரிவித சிதசிச்சேஷத்வமும், பொருளல்ல - ஒரு பொருளாயிருக்கிறதில்லை; இதுஅஸம்பாவித மாகையாலே, இனி-இனி, இத்தை, அருள்தான்-ஓர் உபகாரமாக, யான், அறியேன்-நினைத்திருக்கிறிலேன், ஈது தான்-இதுதான், மருளோ-என்ன ப்ரமமோ, அவன்றான், மாயம்-ஆஸ்சர்யமான, மயக்கு-ப்ராமகசேஷ்டிதங்களாலே, மயக்கே-ப்ரமிப்பிக்கிற படியோ. (௩)

ஆறு:— (அருள்தான்) என்னுள்ளேயிருந்தருளின விவ்வருளல்லது மற்றோரருளை நானோ ரருளாகமதியேன், அவனு மென்னுள்ளேயிருந்தருளின விவ்விருப்பல்லது மற்றுலீலோபகரணமான வண்டங்களையும் திருநாட்டையு மொருபொருளாகமதியானென்று, இப்படி யெம்பெமானுக்குத் தம்பக்கலுள்ள வபிநிவேஶத்தைப் பேசி, தம்முடைய நிகர்ஷத்தை யநுஸந்தித்து, ஏவம்வித பகவதபிநிவேஶ விஷயத்வ ரூபஸம்பத்தானது எனக்கு ஸம்பவியாது, என்னுடைய ப்ரமமாதல், அவனென்னை ப்ரமிப்பித்தானாதலல்லது இதுகூடாதென்கிறார். (௩)

ஈடு ; அவ:—அவாப்த ஸமஸ்தகாமனான ஸர்வேஶ்வரன், தன் பக்கலிப்படி வ்யாமோஹம் பண்ணுகை கூடாததொன்றென்று ஶங்கித்து, இவ்வநுபவம் ப்ரமாதிகளிலே பிறந்ததோவென்கிறார்.

(அருள்தானினியானறியேன்) என்னுடைய விருத்திய வஶ்யதையைத்தவிர்த்த விதுதன்னை யுமிப்போதொன்றாக நினைத்திரேன். எத்தைப் பற்றவென்னில் (அவனித்யாதி) அவன், என்னுடைய ஹ்ருதயத்தி லஜ்ஞாநாந்தகாரமெல்லாம் போம்படி பெறும்பேறு பெற்றானாய், அவ்வேறுபாடுதோற்ற விராநின்றான் ; இனியெனக்கு வேறொன்றுதோற்றுமோ.

(இதுவல்லாலித்யாதி) இதுக்குத் திருமாலையாண்டான் பணிக்கும்படி - "நாட்டார், ஐஶ்வர்யங்களில் தலையாகச்சொல்லுவது - த்ரைலோக் யைஶ்வர்யத்தை யிறே ; அதுவுமெனக்குச் சரக்கல்ல வென்கிறார்" என்று. எம்பெருமானாரருளிச்செய்யும்படி - "என்னுடைய ஹ்ருதயத்திலே புகுந்தெழுந்தருளியிருக்கிற விருப்பொழிய, * வீற்றிருந்தேழுலகும் தனிக்கோல்செல்ல விருக்கு மிருப்பையும் தனக்கைஶ்வர்யமாக நினைத்திருக்குமோவென்று பார்த்தால், அதுவு மொரு சரக்காக நினைத்திருக்கிறிலன்" என்று ; இதுவே ப்ரகரணத்துக்குச்சேருவது.

(மருள்தானீதோ) ஒரு ஸம்ஸாரி சேதநனைப்பெற்று ஸர்வேஶ்வரனிப்படி யிருந்தானென்னுமது கூடுவதொன்றன்று, இது வென்னறிவுகேட்டாலே சொல்லுகிறேனோ. (மாயமயக்குமயக்கே) அன்றிக்கே, அவன் தன்னுடைய வாஶ்சர்யமான ப்ரமஸாதநங்களை யிட்டு ப்ரமிப்பித்தானோ, நெடுநாள் ப்ராக்ருதியையிட் டறிவுகெடுத்தான், இப்போது தன் வ்யாமோஹத்தாலே யென்னை ப்ரமிப்பித்தான். (௩)

நான்காம்பாட்டு.

மாயமயக்கு மயக்கான் என்னைவஞ்சித்து * ஆயன் அமரர்க் கரியேறு எனதம்மான் * தூயசுடர்ச்சோதி தனதென்னுள் வைத்தான் * தேசம்திகழும் தன்திருவருள்செய்தே. (௪)

ப:—அநந்தரம், விலக்ஷண தேஜோரூபமான விக்ரஹத்தை யெனக்குள்ளே வைத்தான், ஆதலால், என்னை ப்ரமிப்பியானென்கிறார்.

(இ - ள்.) ஆயன் - அறிவில்லாத விடையர்க்கு ஸஜாதீயனாய்க் கொண்டு பவ்யனாய், அமரர்க்கு-அறிவுடைய ஸூரிகளுக்கு, அரியேறு-அபரிச்சேத்யமான மேன்மையையுடையனாய், எனதம்மான் - இந்த பரத்வஸௌலப்யங்களை யெனக்கு ப்ரகாசிப்பித்த வென் ஸ்வாமியானவன், தேசந்திகழும் - தேசப்ரஸித்தமாம்படியான, தன் - தன், திரு-அஸாதாரணமான, அருள் - க்ருபையை, செய்து - நிர்ஹேதுகமாகப் பண்ணி, தனது-தனக்கஸாதாரணமாய், தூய - நிர்மலமாய், சுடர் - அத்யுஜ்ஜ்வலமாய், சோதி-தேஜோமயமான திவ்யவிக்ரஹத்தை, என்-என்னுடைய, உள் - நெஞ்சுக்குள்ளே, வைத்தான் - ப்ரதிஷ்டிதமாம்படி வைத்தான். ஆதலால், என்னை - தன்னையொழிய வறியாதவென்னை, வஞ்சித்து-அநாஸ்ரிதரைச் செய்யுமாபோலே வஞ்சித்து, மாயமயக்கு தன்னுடைய வாஸ்சர்ய ப்ரமஸாதநங்களாலே, மயக்கான் - ப்ரமிப்பியான். (ச)

ஆறு:—(மாயமயக்கு) நிரவதிக வாத்ஸல்ய ஸௌஸீல்யத்தையுடையனா யிருந்தவனே, என்னுடைய நிகர்ஷத்தைப்பார்த்து, என்னிறத்துப் பொய்செய்தருளான்; ஆதலால், ஹேயப்ரத்யநீகமானவன் திருவடிவை என்னுள்ளே ஸர்வலோகமுமறியும்படி மெய்யே வைத்தருளினானென்கிறார். (ச)

ஈடு; அவ:—அவனென்னை ப்ரமிப்பித்தானல்லன், என்னுள்ளேகலந்தருளினானே; இதிலொரு ஸம்ஸயமில்லை யென்கிறார்.

(என்னைவஞ்சித்து - மாயமயக்குமயக்கான்) அநாஸ்ரிதரான துர்யோதநாதிகளைக்குறித்து, "ஆயுதமெடேன்" என்றாயுதமெடுத்தும், பகலை யிரவாக்கியும் வஞ்சித்தாணித்தனையல்லது, பாண்டவர்கள் விஷயத்திலத்தைச் செய்தானோ; ஆகையால், தனக்கே பரமான வென்னைவஞ்சித்து, ஆஸ்சர்யமான ப்ரமஸாதநங்களாலே ப்ரமிப்பியான்- ஹேதுவென்னென்ன (ஆயனமரர்க்கரியே றெனதம்மான்) நித்யஸூரிகளுக்கு மவ்வருகான வேற்றத்தை யுடையனாய் வைத்து, க்ருஷ்ணனாய் வந்தவதரித்து, என்னுடைய மோக்ஷத்வத்தை நிர்வஹித்த பரமாப்தன்-என்னை வஞ்சித்து - மாயமயக்கு மயக்கான்;

ஆனுலிப்பேறு வந்தபடி தானென்னென்ன (தேசந்திகழும் தன்றிருவருள்செய்து - தூயசுடர்ச்சோதி தனதென்னுள் வைத்தான்) லோகமெல்லாமறியும்படி என் பக்கலிலே நிர்ஹேதுக க்ருபையைப்பண்ணி. (தன்றிருவருள்) புறம்பொரு வர்க்கின்றிக்கே தனக்கே அஸாதாரணமானவருள். ஹேய ப்ரத்ய நீகமாய், விலக்ஷண தேஜோரூபமாய், ஶுத்தஸத்த்வமயமாய், தனக்கே அஸாதாரணமான வடிவை யென்னுள்ளேவைத்தான். தான் அநந்யஸாத்யனென்னும்படியைக் கொண்டு என்னுள்ளே ப்ரகாசிப்பித்தான்; (க) "த மேவம் வித்வாநம்ருத இஹ பவதி நாந்ய: பந்தா அயநாய வித்யதே தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதே தநூம் ஸ்வாம்" என்கிறபடியே. (ச)

ஐந்தாம்பாட்டு.

திகழும்தன் திருவருள்செய்து உலகத்தார் புகழும் புகழ் * தானதுகாட்டித்தந்து * என்னுள் திகழும்மணிக்குன்ற மொன்றே ஒத்துநின்றான் * புகழும்புகழ் மற்றெனக்கும் ஓர்பொருளே. (ரு)

ப:—அநந்தரம், என்னெஞ்சுக்குள்ளே அசலப்ரதிஷ்டிதனாய்க் கொண்டு நின்றான், இதொழிய வேறொன்றை அவனுக்குப் புகழாக நினைத்திருக்கிறிலேனென்கிறார்.

(இ ள்.) திகழும்-நிர்ஹேதுகமாயும் நிரவதிகமாயு மிருக்கையாலே யிரண்டு தலைக்கு மௌஜ்ஜ்வல்யாவஹமான, தன், திருவருள் - திருவருளை, செய்து-பண்ணி, உலகத்தார்-லோகத்தார், புகழும்-இதுகண்டு புகழுகிற, அது-அந்த, புகழ்-ப்ரஸித்தமானபுகழையும், தான் - தான், காட்டித்தந்து-எனக்கு ப்ரகாசிப்பித்து, என்னுள் - என்னுக்குள்ளே, திகழும் விளங்காநிற்கிறது,ஒன்று-ஒரு. மணிக்குன்றமொத்து—மாணிக்கமலைபோலே,நின்றான்—நின்றான், எனக்கு எனக்கு, இந்நிலையொழிய, மற்று—மற்று,புகழும்-அவனைப்புகழுகிற புகழும் - புகழானதுவும், ஓர்—ஒரு, பொருளே—பொருளாயிருக்கிறதோ. (ரு)

ஆறு:—(திகழும்) லோகமெல்லா மறியும்படி யென்னுள்ளே யிருந்தருளின வத்தனையேயோ, இப்புகழையே லோகமெல்லாம் புகழும்படியாகவு மிருந்தருளினான்; இருந்தருளுகிறான்; தன்னுடைய வுத்கர்ஷத்தையு மென்னுடைய நிகர்ஷத்தையும் பார்த்து,

"தானத்தைவிட்டகலுகிறேன்" என்னும் பயத்தாலே, நான் தன்னை விடமாட்டாதபடியாகத் தன்னழகைக்காட்டி யென்னை வசீகரித்துக் கொண்டருளின புகழல்லது மற்று அவனுடையபுகழை யொரு புகழாக மதியேனென்கிறார். (ரு)

ஈடு ; அவ:—"ஒருவர்பெறும்பேறே!" என்று லோகமடையக்கொண்டாடும்படி யென்னுள்ளே வந்து நின்றருளினான், அத்தால்வந்த புகழையல்லது இவனுடைய மற்றுள்ள புகழையு மொன்றாக மதியேனென்கிறார்.

(திகழுந்தன்றிருவருள்செய்து) பிறருடைய பரிச்சின்னமானவருள் போலன்றிக்கே, இரண்டுதலைக்கும் நிறமாம்படியான தன்க்ருபையை யென்பக்கலிலே பண்ணி. (உலகத்தாரித்யாதி) என்னுடைய பேற்றைக் குறித்து லோகத்தார்பண்ணும் ஸ்தோத்ரத்தைத் தான் காட்டித்தந்தான். (க) "பாலேய்தமிழரிசைகாரர் பத்தர் பரவுமாயிரம்" என்று லோகமாகக்கொண்டாடும்படி பண்ணுகை. (உ) "ஐ2ள உ–ஞீவாயி–வஜஷூணாநிதள க-ுஹீ®உ ளஉா உவிஹா தவஷி வெநள-இமௌமுநீபார்த்திவலக்ஷணோ் விதிளகுஹீலவெளசாபிமஹாதபஸ்விநெள" என்றாப்போலே நாடாகப்புகழாநின்றது. (என்னுளித்யாதி) என்னுள்ளே வந்து புகுந்து, பெறாப்பேறுபெற்றாறாய், நிலைபெற்றுப் புகருடையனாய்க் கால்வாங்கிப்போகமாட்டாதே விளங்காநின்ற வொரு ரத்நபர்வதம்போலே நின்றான்.

(புகழும்புகழ்)என்னுள்ளேநின்ற விம்மஹாகுணத்தை யல்லது மற்றுள்ள புகழை யொருபுகழாகமதியேன். என்னுடைய விந்த்ரியவஶ்யதையைப் போக்கினானென்று நான்சொன்ன விதொருசரக்காக நினைத்திரேன். (ரு)

ஆறும்பாட்டு.

பொருள்மற்றெனக்குமோர்பொருள்தன்னில் சீர்க்கத்தருமேல்* பின்னையார்க்கு அவன் தன்னைக்கொடுக்கும்? * கருமாணிக்கக் குன்றத்துத் தாமரைபோல் * திருமார்புகால்கண்கை செவ்வாயுந் தியானே. (சு)

(க) க-ரு கக. (உ) ரா-பா-ச-ருஉ-

ப:—அநந்தரம், என்னகவாயிலேநின்ற வுபகாரத்தாலே, நிரதிசய ஸௌந்தர்ய விசிஷ்டனானவன் தன்னை ஒருவர்க்குக்கொடுக்கவொண்ணாமல் எனக்குத்தந்தானேயென்கிறார்.

(இ-ள்) எனக்குத்தன்னை த்தந்தவித்தாலே, கருமாணிக்கக்குன்றத்து - கருமாணிக்க மலையின்மேலே, தாமரைபோல் - தாமரைக்காடலர்ந்தாற்போலே செவ்விபெற்ற, திருமார்வு-திருமார்பும், கால்-திருவடிகள், கண்-திருக்கண்கள், கை திருக்கைகள், செ-சிவந்த, வாய்-திருவதரம், உந்தியான்-திருவுந்திகளையுடையனானவன், மற்று-மற்றுமுள்ள பொருள்தன்னில்-புருஷார்த்தங்கள்தன்னிலே, எனக்கும்-எனக்கும், ஓர்-ஒரு பொருள்-புருஷார்த்தத்தை, சீக்க,-சீர்க்க, தருமேல் - தந்துவிட்டானாகில், பின்னை-பின்னை, அவன் தன்னை நிரதிசயபுருஷார்த்தபூதனானதன்னை, ஆருர்க்கு ஆக்கு கொடுக்கும்-கொடுப்பான், புறம்பு கொள்வாரில்லாமல் மறந்தானல்லனே; க்ருபாகார்யமென்று கருத்து.

ஆறு:—(பொருள்மற்றெனக்கும்) தானாகிற ஸம்பத்தையொழிய வேறேசீரியதொருஸம்பத்தை யெனக்குத்தந்தால், நிரவதிக ஸௌந்தர்யஸம்பத்தையுடையனான தன்னை வேறுகொள்வாரில்லையென்று, இப்படி தன்னையெனக்கு போக்யமாகத்தந்தருளினானல்லனிறே, என்பக்கலுள்ள வபிநிவேசமிறே யென்கிறார். (௯)

ஈடு:—எனக்குத் தன்னையொழிய வேறொன்றைத் தந்துவிட்டால், புறம்புதன்னைவேறொருவர் கொள்வாரில்லாமை யெனக்குத் தந்தானே, என்பக்கலபிநிவேசத்தாலே தந்தருளினானென்கிறார்.

(பொருளித்யாதி) (பொருள்தன்னில் - மற்றெனக்குமோர். பொருள்-சீர்க்கத்தருமேல்) புருஷார்த்தவர்க்கத்திலே வேறேகனத்ததொருபுருஷார்த்தத்தை, தருமேல்-தந்துவிட்டால். (பின்னையார்க்கவன் தன்னைக்கொடுக்கும்) பின்னைப்பொருள் கடிதாகக் கைக்கொள்வாருண்டோ.

என், கைக்கொள்வாரில்லையோ வென்னில் (கருமாணிக்கமித்யாதி) இவ்வேப்பங்குடி நீரைப்புறம்பு ஸ்வீகரிப்பாருண்டோ, (கருமாணிக்கக்குன்றத்து) ஆஸ்ரயத்துக்கு த்ருஷ்டாந்தம், (தாமரைபோல்) அவயவசோபைக்கு த்ருஷ்டாந்தம், (திருமார்வு) புருஷகாரமான பிராட்டி யெழுந்தருளி யிருக்கிறமார்வு. (கால்) அச்

யன்றி சேர்த்திக்குத்தோற்றுவிழும் திருவடிகள், (கண்) திருவடிகளிலே விழுந்தாரைக் குளிரநோக்கும்கண், அவர்களை யெடுத்தணைக்கும் கை, இன்சொல்லுச்சொல்லும் திருவதரம், அவர்களுக்கநுபாவ்யமான திருவுந்தி. (க) "உந்திமேலதன்றோ" என்னக்கடவதிறே.

ஏழாம்பாட்டு.

செவ்வாயுந்தி வெண்பல் சுடர்க்குழை † தம்மோடு * எவ்வாய்ச்சுடரும் தம்மில் முன்வளாய்க்கொள்ள * செவ்வாய்முறுவலோடு எனதுள்ளத்திருந்த * அவ்வாயன்றி யான் அறியேன் மற்றருளே. (எ)

ப:—அநந்தரம், இவ்வழகோடே யென்னுள்ளே முறுவல் செய்திருக்கிற விருப்பொழிய வேறோராகாரத்தையு மறிகிறிலேனென்கிறார்.

செ - சிவந்த, வாய் - வாய், செ - சிவந்த, உந்தி - திருநாபி, வெண்-வெளுத்த, பல்-திருமுத்து, சுடர்-ஒளியையுடைத்தான, குழை-திருமகரக்குழை, தன்னொடும்-இவற்றோடேகூட, எவ்வாய்-எல்லாவவயங்களினுடைய, சுடரும் - ஒளியும், தம்மில் - தம்மில்தாம், முன்-முற்பட்டு, வளாய்க்கொள்ள-சூழ்ந்துகொள்ள, திருவுள்ளத்தி லுகப்புக்கு ப்ரகாசகமாம்படி, செ-சிவந்த, வாய்-திருப்பவளத்தின், முறுவலோடு-முறுவலோடே, எனது - என், உள்ளத்து - நெஞ்சுக்குள்ளே, இருந்த-இருந்த, அ-அந்த, வாய்-ப்ரகாரத்தை, அன்றி-ஒழிய, மற்று-வேறொரு-அருள்-ஆகாரத்தையும், யான், அறியேன்-நினைக்கிறிலேன். (எ)

ஆறு;—(செவ்வாயுந்தி) இன்னமும் இவ்வபிநிவேசத்தையே விஸ்தரிக்கிறது.

என்னோடு கலந்தருளின கலவியாலுள்ள நிரவதிக ப்ரீதியாலே, திருப்பவளத்தினழகையும், மற்றுமுள்ள திவ்யாவயவ திவ்யபூஷணகதமான நிரவதிகதேஜஸ்ஸையு மெல்லாம் விளைந்துகொடுவைத்து, என்முன்னே திருமுகத்திலொளி வெள்ளம்பெருகிப் புறப்படும்படியாகச் செவ்வாய் முறுவலோ டெனதுள்ளத்திருந்த வவ்வபிநிவேசகுணமல்லது மற்றொரு குணத்தை குணமாக மதியேனென்கிறார்.

(க) அமலனாதி-ரு. † பா தன்னொடும்.

ஈடு; அவ:—அவன் தம்மோட்டைக் கலவியாலே ஹ்ருஷ்டனாய், அது தன்பேறாக முறுவல்செய்த திருப்பவளத்தை யநுபவித்து ப்ரீதராகிறார்.

(செவ்வாயித்யாதி) சிவந்ததிருவதரம், திருவுந்தி, வெளுத்த திருமுத்து, புகரையுடைத்தான திருமகரக்குழை, இவற்றோடேகூட (எவ்வாய்ச்சுடரும்) மற்றுமெவ்விடத்து முண்டான தேஜஸ்ஸும். வாய்-இடம். (தம்மில் முன்வளாய்க்கோள்ள) ஒன்றுக்கொன்று "நான்" "நான்"என்று தம்மில்தாம் முற்பட்டு வளைத்துக்கொள்ள. அஹமஹமிகையாய் முற்பட்டு வளைத்துக்கொள்ளவென்னுதல், முற்பட்டென்னை வளைத்துக்கொள்ள வென்னுதல்.

(செவ்வாய்முறுவலோடெனதுள்ளத்திருந்த) (க)"அவாக்யநாதரஃ-அவாக்யநாதரஃ" என்றிருக்கக்கடவ தத்த்வம், இவரைப்பெற்று "இதுதன்பேறு" என்றுதோற்ற முறுவல்செய்திருந்தபடி. பூவலரும்போது எங்குமொக்க வொரு செவ்விபிறக்குமாபோலே, திவ்யாவயவங்கள்தோறு மொருவிக்ருதி பிறக்கும்படியாயிற்று ஸ்மிதம்பண்ணிற்று. (அவ்வாயன்றி) அவ்விடமன்றி, ஸ்மிதம் பண்ணிக்கொண்டிருந்த விருப்பல்லது(க) "காந்தஸ்மிதா-காந்தஸ்மிதா" என்று ஸ்வரூபத்தைச் சொல்லி, "ஜாதஹாஸா-ஜாதஹாஸா" என்றதிறே, அப்போதை ஹர்ஷத்தாலுண்டான விக்ருதியென்னுமிடந்தோற்ற- மற்றுண்டானவருளை நானறியேன். இதுவேயமையும், மற்றொன்று வேண்டாவென்கை. (எ)

எட்டாம்பாட்டு.

அறியேன்மற்றருள் என்னையாளும்பிரானார் * வெறிதே அருள் செய்வர் செய்வார்கட்கு உகந்து * சிறியேனுடைச் சிந்தையுள் மூவுலகும் * தன் நெறியாவயிற்றில்கொண்டு நின்றொழிந்தாரே. (அ)

ப:—அநந்தரம், க்ருதஜ்ஞனை வென்னெஞ்சிலே பூர்ணராய்க் கொண்டுவந்து புகுந்துநின்றவர்தாம், உபகரிக்க நினைத்தார்க்கு நிர்ஹேதுகமாக வுபகரிப்பராகாதே யென்கிறார்.

(இ-ள்.) மற்று-வேறொன்றை, அருள் - உபகாரமாக, அறியேன் - நினைத்திருக்கிறிலேன், என்னை - என்னை, ஆளும் - அடிமைகொண்ட,

---

(க) சாந்தோ-ந-கஉ (க) ஆர-அங கஉ.

பிரானுர்-மஹோபகாரகரானவர், செய்வார்கட்கு-தாமுபகரிக்க நினைத் தார்க்கு, வெறிதே-நிர்ஹேதுகமாக, உகந்து-உகந்து, அருள்-உபகாரத் தை. செய்வர்-பண்ணுவர், எங்ஙனேயென்னில், சிறியேனுடை - அதி க்ஷுத்ரனனவென், சிந்தையுள்-நெஞ்சிலே, மூவுலகும்-ஜகத்த்ரயத்தை யும், நெறியா-ரக்ஷ்யரக்ஷகபாவமாகிற முறைதப்பாதபடி, தன்வயற்றில் தமக்குள்ளே, கொண்டு-கூடக்கொண்டு, நின்றொழிந்தார் - நின்றுவிட் டார். ஆதலாலென்றுகருத்து. (அ)

ஆறு:—(அறியேன்மற்றருள்) இப்படி அபிநிவிஷ்டனுய்க் கொண்டு தன்னுடைய ஸர்வைஸ்வர்யத்தோடுங்கூட வென்னுள்ளே புகுந்திருந்தருளுகைக்கு ஹேதுவென்னென்றால்; ஒருஹேதுவின் றியே வெறிதேசெய்தருளினுனென்கிறார். (அ)

ஈடு; அவ:—அவன் தம்மோடேவந்து கலக்கைக்கடி அவன் க்ருபை யென்கிறார்.

(அறியேன்மற்றருள்) வேறருளுமறியேன். (என்னையாளும் பிரானுர்) என்னையடிமைகொள்ளுகிற வுபகாரகரானவர். (வெறி தேயருள்செய்வர்) நிர்ஹேதுகமாக க்ருபைபண்ணுவர்; ஆருக்கென் னில் (செய்வார்கட்கு) (க) "யமேவைஷ வ்ருணுதே-யமேவை ஷவ்ருணுதே" என்று தாம் விஷயீகரிக்க நினைத்தார்க்கு. தாந்தா மொன்று செய்வார்க்கென்னில், "வெறிதே" என்னக்கூடாதிறே; ஆனுலு மொருஹேதுவேண்டாவோ வருளுக்கென்னில்; உகப்பா யிற்றுஹேது. (உ) "ப்ரியதம ஏவ வரணீயோ பவதி-ப்ரியதம ஏவஹிவரணீயோபவதி" என்னக்கடவதிறே. ருசியுண்டானுலும் இவன்சேதநனுனவாசிக்கு - சைதந்யப்ரயுக்தமான ஸ்வபாவமாகக் கொள்ளு மித்தனையல்லது, பேற்றுக்கு ஸாதநமாகச் சொல்ல வொண்ணுதிறே.

நிர்ஹேதுகமாகவருள விப்படியெங்கேகண்டீரென்ன; புறம் புதேடிப்போகவேணுமோ (சிறியேனுடைச் சிந்தையுள்) அத்யல் பனுயிருக்கிற வென்னுடைய ஹ்ருதயத்திலுள்ளே. (மூவுலகுமித் யாதி) உடையவனுடைமையைநோக்குவது முறையாலே யாயிருக் குமிறே. தம்முடையரக்ஷ்யவர்க்கத்தை முறையிலேநோக்குகிறவர், என்னுடைய ஹ்ருதயத்திலே பொருந்தி முறைகெடப் பரிமாறு நின்றார். தம்மைச்சிறுமைக்கெல்லையாக நினைத்தபடியாலே முறை

(க) கடவல்லி-உ. (உ) ஸ்ரீ பாஷ்யம்-ஜிஜ்ஞாஸா.

கேடாய்த் தோற்றுநின்றதாயிற்றிது. அவன் இவரை மூவுலகுக்கு மவ்வருகாக நினைத்திராநின்றான்; இவர், தம்மை மூவுலகுக்குமிவ் வருகாக நினைத்திராநின்றார். (அ)

ஒன்பதாம்பாட்டு.

வயிற்றில்கொண்டு நின்றொழிந்தாரும் யவரும் * வயிற்றில் கொண்டுநின்று ஒருமூவுலகும் * தம் வயிற்றில்கொண்டு நின்ற வண்ணம் நின்றமாலை * வயிற்றில்கொண்டு மன்னவைத்தேன் மதியாலே. (கூ)

ப:—அநந்தரம், அவனுடைய ஸர்வப்ரகார ரக்ஷகத்வத்தை யென் னெஞ்சிலே ஸுஸ்த்திரமாக வைத்தேனென்கிறார்.

(இ-ள்.) வயிற்றிற்கொண்டு - தாயானவள் வயிற்றிலேவைத்து நோக்குமோபாதிரக்ஷகராய் நின்றுபோந்த, நின்றொழிந்தாரும் - க்ஷத்ரி யர்களையும், யவரும்-அவர்களுக்கு மேலான ப்ரஹ்மாதிகளையும், வயிற் றில்-தம்முடைய ஸ்வரூபைகதேசத்திலே, கொண்டு-கொண்டு, நின்று- நின்று, ஒரு-அத்விதீயமான, மூவுலகும் - ஜகத்த்ரயத்தையும், தம்-தம் முடைய, வயிற்றில்-ஸங்கல்பைகதேசத்திலே, கொண்டு-தரித்து, நின் றவண்ணம்-யதாபூர்வாவஸ்த்திதியான ஸ்வரூபத்தோடே, நின்ற-நின்ற மாலை-ஸர்வாதிகரானவரை, மதியாலே- "இசைவித்தென்னை" என்று அவர் தந்தவநுமதியாலே, வயிற்றில் - என்னகவாயிலே, கொண்டு- கொண்டு, மன்ன.பேராதபடி, வைத்தேன்-வைத்தேன். (கூ)

ஆறு:—(வயிற்றிற்கொண்டு) அண்டங்களையும், அண்டாந்தர் வர்த்திகளான சதுர்முகர்களையும், சதுர்முகாஜ்ஞாநுவர்த்திகளான தேவாதி ஸ்த்தாவராந்தமான ஸமஸ்தஜந்துக்களையும், ஸ்வஸங்கல்ப ஸஹஸ்ரைக தேசத்திலே நியமித்தருளுகிற வெம்பெருமான் படியை யறிந்துகொண்டே னிறேயென்கிறார்.

ஈடு; அவ:—இப்படி விஷயீகரிக்கைக்கு நீர் செய்ததென்ன வென்னில், அநுமதிமாத்ரம்பண்ணினே னித்தனையென்கிறார்.

(வயிற்றிற்கொண்டு நின்றொழிந்தாரும்) ஜநநியானவள், ப்ரஜை யை வயிற்றிலேவைத்து நோக்குமாப்போலே, ஜகத்தை நோக்கும் க்ஷத்ரியாதிகளையும். (யவரும்) இந்தக்ஷத்ரியர் தங்களையும் நோக்கிக்

கொண்டுபோருகிற ப்ரஹ்மாதிகளையும். (வயிற்றிலித்யாதி) க்ஷத்ரியாதிகளையும் ப்ரஹ்மாதிகளையும் தன்னுள்ளே கொண்டிருந்துள்ள மூவுலகையும். (தம்வயிற்றிற்கொண்டு) தம்முடைய ஸங்கல்ப ஸஹஸ்ரைகதேசத்தாலே நடத்திக்கொண்டென்னுதல்; "வயிற்றிற்கொண்டு நின்றொழிந்தாரையும் யவரையும் வயிற்றிற்கொண்டு நின்றொரு மூவுலகையும் தம்வயிற்றிற்கொண்டு" என்றுபிரித்துச்சொல்லுதல். (நின்றவண்ணம்நின்றமாலை) இவற்றையடையத்தன் வயிற்றில்கொண்டவிடத்திலும் ஒருவிகாரமின்றிக்கே நின்றஸர்வேஶ்வரனை; ஸவிபூதிகனான ஸர்வேஶ்வரனை;என்னுடைய ஹ்ருதயத்திலேபோராதபடி வைத்தேன் (மதியாலே) "இவன்படியையறிந்து கொண்டேனென்கிறார்" என்னும்மம்மாள். அன்றிக்கே,"மதி:-அநுமதி:" என்றுக்கி, "அநுமதி மாத்ரத்தாலே" என்பர் பட்டர். அதாவது- அவன் புகுருகிற விடத்தில் விலக்கிற்றிலனென்கை. (கூ)

பத்தாம்பாட்டு.

வைத்தேன்மதியால் *எனதுள்ளத்தகத்தே * எய்த்தேயொழிவேனல்லேன் என்றும்எப்போதும் * மொய்த்தேய்திரை மோது தண்பாற்கடலுளால் * பைத்தேய்சுடர்ப் பாம்பணைநம்பரனையே.

ப:—அநந்தரம், ஸர்வஸ்மாத்பரனான க்ஷீராப்திநாதனை யென்னெஞ்சுக்குள்ளே வைத்து, இடைவிடாம லநுபவிப்பேனென்கிறார்.

(இ-ள்.) மொய்த்து-செறிந்து, ஏய் - திருவநந்தாழ்வான் திருமேனிக்குத் தகுதியான, திரை-திரைகள்,மோது-அலையாநிற்பதாய், தண்-ஶ்ரமஹரமான. பாற்கடலுள்-க்ஷீராப்தியினுள்ளே. பைத்து-விரிகிறபணங்களையுடையனாய். ஏய்-ஸ்வாபாவிகமான, சுடர்-தேஜஸ்ஸையுடையனை, பாம்பு-திருவநந்தாழ்வானை, அணை-படுக்கையாக வுடையனாய், நம்-நமக்கு, பரனை - ஶேஷியானவனை, மதியால் - என்னநுமதியாலே, எனது-என்,உள்ளத்தகத்தே-நெஞ்சுக்குள்ளே, வைத்தேன்-வைத்தேன் என்றும்-எல்லாதிவஸத்திலும், எப்போதும்-எல்லாப்போதிலும், எய்த்தேயொழிவே னல்லேன் - இனிவிஶ்லேஷித்துத் தளரக்கடவேனல்லேன். இந்நினைவிலே தவிரக்கடவேனல்லேனென்றுமாம். (கO)

ஆறு:—(வைத்தேன்மதியால்) அவன்படி யெங்ஙனேயாக வறிந்ததென்றால்; ஆஶ்ரிதர்பக்க லபிநிவிஷ்டனாயிருக்கை அவன் படி யென்றறிந்துகொண்டேன்; இது அவன்படியானபின்பு, அவனை நானொருநாளும் விடுவேனல்லேனென்கிறார். (கo)

ஈடு; அவ:—எம்பெருமான் ஸபரிகரமாக வென்னுள்ளேபுகுந் தான், அவனை நானினி யொருநாளும் விஶ்லேஷித்து துஃகப்படே னென்கிறார்.

(வைத்தேன்மதியாலெனதுள்ளத்தகத்தே) அநுமதியாலே யென்னெஞ்சினுள்ளேவைத்தேன். ஓரநுமதிமாத்ரத்துக் கித்தனை பலமுண்டாவதே! (எய்த்தேயொழிவேனல்லேன்) இனியொருநாளு மிளைத்து க்லேசப்படக்கடவேனல்லேன். இவ்வார்த்தை யெத்தனை குளிக்கு நிற்குமென்ன (என்றுமேப்போதும்) எல்லாதிவஸத்திலும் எல்லாவவஸ்த்தையிலும்.

(மோய்த்தேய்திரை) திரண்டுதகுதியான திரைகள் மோதா நின்றுள்ள ப்ரமஹரமான திருப்பாற்கடலிலே. சிறுதிவலைபடி லும் "மோதிற்று" என்னும்படியிறேஸௌகுமார்யமிருப்பது. (பைத்தேய்சுடர்ப்பாம்பணை) திரைகள்வந்து திருமேனியில் படாத படி விகஸிதமான பணங்களையுடையனாய், பகவதநுபவத்தால்வந்த தகுதியான புகரையுடையனான திருவநந்தாழ்வான்மேலே கண் வளர்ந்தருளுகையாலுண்டானவேற்றத்தையுடையவன். (நம்பரனை) அவ்வேற்றத்தை நமக்கு வெளியிட்டுத்தந்தவனை-வைத்தேன் மதி யாலெனதுள்ளத்தகத்தே, எய்த்தேயொழிவேனல்லேனென்றுமெப் போதும். (க) * அரவத்தமளியினோடு மழகியபாற்கடலோடுங்கூனு மிவர்திருவுள்ளத்திலே புகுந்திருந்தது. (கo)

பதினொன்றாம்பாட்டு.

சுடர்ப்பாம்பணை நம்பரனைத் திருமாலை * அடிச்சேர்வகை வண்குருகூர்ச்சடகோபன் * முடிப்பான்சொன்ன ஆயிரத்து இப் பத்தும் சன்மம்விட * தேய்ந்தறநோக்கும் தன்கண்கள் சிவந்தே.

ப:—அநந்தரம் இத்திருவாய்மொழிக்கு பலமாக, ஜந்மஸம்பந்த நிவ்ருத்தியை யருளிச்செய்கிறார்.

(க) பெரியா-தி-ரு-உ-கo.

சுடர்-நிரவதிகதேஜஸ் ஸையுடைய, பாம்பு - திருவநந்தாழ்வானை அணை-படுக்கையாகவுடையனும், நம்-நமக்கு,பரனை-ஶேஷியான, திருமாலை-ஶ்ரியஃபதியை, அடி-திருவடிகளிலே, சேர்வகை-சேரும்படியை, முடிப்பான் - தலைக்கட்டிக்கொள்ளுகைக்காக, வண்-நிரதிஶய ஸம்பத்தையுடைய, குருகூர்-திருநகரிக்கு நிர்வாஹகரான, சடகோபன் - ஆழ்வார், சொன்ன-அருளிச்செய்த, ஆயிரத்து-ஆயிரத்தில், இப்பத்தும்-இப்பத்தும், சன்மம்-பகவதநுபவப்ரதிபந்தகமான ஜந்மம், அற-மிகவும், தேய்ந்து-க்ஷயித்து, விட-நசிக்கும்படியாக, தன்-தன், கண்கள்-கண்கள், சிவந்து-சிவந்து, நோக்கும்-பார்க்கும்.

ஜந்மவிநாசஹேதுத்வத்தால் திருவாய்மொழியை புருஷ ஸமாதியாலே சொல்லுகிறது. இது-கலிவிருத்தம். (கக)

ஆறு:—(சுடர்ப்பாம்பணை) இத்திருவாய்மொழி, பகவதநுபவ விரோதி ஸம்ஸாரத்ருஷ்டி விஷமென்கிறார். (கக)

ஈடு ; அவ:—நிகமத்தில்-இப்பத்தானது, தன்னைக்கற்றவர்கள் ஸம்ஸாரத்துக்கு த்ருஷ்டிவிஷமென்கிறார்.

(சுடர்ப்பாம்பணைநம்பரனைத்திருமாலை) இப்பத்தும் கற்றார்க்கு ஜந்மமறுகையிறே பலமாகச்சொல்லுகிறது; அத்தால்போயநுபவிக்கும் ப்ராப்யத்தைச்சொல்லுகிறது; பர்யங்கவித்யையிற் சொல்லுகிறபடியே திருவநந்தாழ்வான்மடியிலே பெரியபிராட்டியாரோடேயெழுந்தருளியிருக்கக் கண்டநுபவிக்கையிறே முக்தப்ராப்யபோகந்தான். (அடிச்சேர்வகையித்யாதி) திருவடிகளிலே சேருகையே தமக்கு ஸ்வபாவமாகவுடைய வாழ்வார். ஜ்ஞாநாநந்தங்களன்று இவர்க்கு நிரூபகம் ; ஶேஷத்வமாயிற்று.

(முடிப்பான்சொன்னவித்யாதி) ஸம்ஸார ஸம்பந்தத்தை யறுக்கைக்காகச்சொன்ன வாயிரத்திப்பத்து. அடிச்சேர்வகை - முடிப்பானென்றுமாம். சந்மமானது விட்டுப்போம்படியாக நோக்கும். அது செய்யுமிடத்தில், (இப்பத்தும் - தன்கண்கள்சிவந்து - நோக்கும்) அதாவது ஜந்மத்துக்கு இப்பத்து த்ருஷ்டிவிஷமென்கை. இப்பத்துக்கும் ஜந்மத்துக்கும் ஸஹாநவஸ்த்தாந லக்ஷண விரோதமுண்டென்கை. (கக)

எட்டாம்பத்து ஏழாந் திருவாய்மொழி முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

எட்டாம்பத்து

எட்டாந் திருவாய்மொழி

கண்கள்சிவந்து-ப்ரவேஶங்கள்.

ப:—எட்டாந்திருவாய்மொழியில், கீழ் - தம்முடைய நெஞ்சிலே வந்து புகுந்திருந்து இந்த்ரியாதிவிரோதிகளையும் நசிப்பித்துத் தன் பேறாகக்கலந்து ப்ரீதனான ஈஶ்வரன், 'இவருக்கு நிகர்ஷாபாதகமான விரோதிவந்தேறி' என்னுமிட மிவரறியும்படி, இவருடைய ஸ்வரூபமானது நமக்கு ப்ரகாரமாயிருக்கிறபடியையும், விலக்ஷணமாயிருக்கிறபடியையுங்காட்டி நைர்த்தோஷ்யத்தை ப்ரகாஶிப்பிப்போம்'' என்று திருவுள்ளம்பற்றி ; இவருடைய வாத்மஸ்வரூபம் தன்னை யாஶ்ரயித்திருக்கு மென்கைக் குறிப்பாகத் தானிவருடைய ஹ்ருதயத்திலேயிருக்கிறவிருப்பையும், ஸர்வாந்தராத்மபூதனான தன்னுடைய நிரதிஶயஜ்ஞாநாநந்த யோகத்தையும், அஹமர்த்தபூதனான வாத்மாவும் தமக்கு ப்ரகாரபூதனென்னு மிடத்தையும், ஸர்வகாரணபூதனான தான் விலக்ஷணஸாரஸ்யத்தையுடையனான சேதநனுக்கு அப்ருதக்பூதனான நிலையையும், ஸ்வப்ரகாரபூதனான வாத்மாவினுடைய ஜ்ஞாத்ருத்வகர்த்ருத்வத்தையும், நிஷ்க்ருஷ்டாத்மஸ்வரூபத்தினுடைய ப்ராப்யபாவத்தையும் ஏவம்விதாத்மஜ்ஞாந மில்லாதாருடைய ஸம்ஸார ஸம்பந்தத்தையும், ஆத்மப்ராப்தி காமனுடைய வந்திமஸ்ம்ருத்யபேக்ஷையையும், ஸ்வரூபைக்யரூபமான மோக்ஷம் அஸம்பாவிதமென்னுமிடத்தையும், ஏவம்விதனான வாத்மாவுக்குத் தன்பக்கல் ப்ரத்யாஸத்தியே யுஜ்ஜீவநஹேதுவென்னு மிடத்தையும், ப்ரகாஶிப்பித்தபடியை யநுஸந்தித்து, இப்படி விலக்ஷணமான வாத்மாவினுடைய நைர்த்தோஷ்யத்தை ப்ரகாஶிப்பித்துத் தன்திருவடிகளிலே சேர்த்துக்கொண்டானென்று ப்ரீதராகிறார்.

ஈடு ; அவ:— * மாயக்கூத்தனில் இவர்க்கோடின விடாயெல்லா மாறும்படிவந்து ஸம்ஶ்லேஷித்து, தன் விடாயுந்தீர்ந்து, இவரைப் பெற்ற பேற்றாலே ப்ரீதனாய், நினைவின்றிக்கே யிருக்கச்செய்தே யிங்ஙனே சேரவிழுந்தது. ''இனி ப்ரவ்ருத்தமான ஸம்ஶ்லேஷம் ஶிதிலமாக வொண்ணாது ; இவராகிறார்- * வளவேழுலகிலாழ்வா

திருவாய்மொழி, அ-ப. அ-தி, க-பா, கண்கள் வ்யாக்யானம். கண்

ணாராயிற்று; நம்மைக்கிட்டக்கொள்ள 'சிறியேனுடைச் சிந்தை' என்று தம்மபோக்யதையை யநுஸந்தித்தவர், இன்னுமதுபின் னூட்டி அகலப்பார்ப்பர்; 'ஏற்கவே பரிஹரிக்கவேணும்'' என்று பார்த்து, ''இனியிவர்தாமகலப்பார்ப்பதும் 'அநாதிகாலம் ஸம்ஸரித் துப்போந்த வாத்மவஸ்து அங்கத்தைக்கு யோக்யமன்று' என்று யிற்று; இதங்ஙனல்ல, வந்தேறியான விதத்தைப்பாராதே 'அடியைப் பாரீர்'' என்று, ''இவ்வாத்மவஸ்துவினுடைய வைலக்ஷண்யத்தை இவர் நெஞ்சிலே படுத்தவேணும்'' என்றுபார்த்து;

''நித்யமாய், ஜ்ஞாநாநந்த லக்ஷணமாய், நமக்கத்யந்தஶேஷ மாய்க்காணுமிருப்பது, நீர் கிட்டுமது நமக்கவத்யமல்ல, கௌஸ்து பத்தோபாதி பிராட்டிமாரோபாதி நமக்குநிறமாமித்தனை'' என்று இவருடைய ஸ்வரூபவைலக்ஷண்யத்தை இவர்நெஞ்சிலே படுத்து கிறான்; ''அதுசெய்யுமிடத்தில், 'உம்முடைய வாத்மஸ்வரூப மிருக்கும்படி காட்டவாரீர்' என்றால், மின்மினிபோலே யிருக்கிற விதில்சாரக்கென்' என்று இவரிசைவாரொருவரல்லர், ''அவ்வா யன்றி யானறியேன் மற்றருள்' என்று நம்வடிவழகிலே துவக்குண் டிருப்பரொன்றுண்டு, நம்மை முன்னிட்டு நமக்கு ப்ரகாரமாயிருக் கிற ஸ்வரூபத்தைக் காட்டிக்கொடுப்போம்'' என்று பார்த்து, ''வாரீர், நம்முடைய வடிவழகிருக்கிற படிகண்டீரே, நம்மைக்காணும் காட்சியிலே உம்மையுங் காணலாய்க்காணுமிருப்பது'' என்று தன் னுடைய வடிவழகை முற்பட வநுபவிப்பித்து, தனக்கு நூபுராதிக ளோபாதி அத்யந்தபோக்யமுமாய் அத்யந்த ஶேஷமுமாயிருக்கிற வாத்மஸ்வரூபத்தைக் காட்டிக்கொடுக்க, அத்தையநுபவித் தினி யராகிறார்.

இத்திருவாய்மொழியில் முதலிரண்டரைப்பாட்டாலே - தன் னையநுபவிப்பித்து, அநந்தரம் ஆத்மஸ்வரூபத்தைக் காட்டிக்கொ டுத்தானாயிருக்கும். அதுக்கடியென்னென்னில்; ''வஸ்துதான் ஸ்வாஶ்ரயமாயல்லதிராமையாலே ஆஶ்ரயமான தன்னைக்காட்டி, பின்னை ஸ்வரூபத்தைக்காட்டிக்கொடுக்கிறான்'' என்பாருமுண்டு. அன்றிக்கே, ''ஸ்வரூபமிருக்கும்படியைக் காட்டித்தரவாருமென்று விசையார்' என்று தன்னை முற்படக் காட்டிக்கொடுக்கிறான்'' என்

பாருமுண்டு. "இரண்டரைப்பாட்டாலும் - * இருத்தும்வியந்திற் கலவியின்னொட்டுகிறது" என்பாருமுண்டு.

முதற்பாட்டு.

கண்கள்சிவந்துபெரியவாய் வாயும்சிவந்துகனிந்து * உள்ளே
வெண்பலிலகுசுடர் இலகுவிலகுமகர குண்டலத்தன் * கோண்
டல்வண்ணன்சுடர்முடியன் நான்குதோளன் குனிசார்ங்கன் *
ஒண்சங்கதைவாளாழியான் ஒருவன் அடியேனுள்ளானே (க)

ப:—முதற்பாட்டில், ஸர்வப்ரகாரவிலக்ஷணமான வடிவழகோடே யென்னெஞ்சுக்குள்ளே புகுந்திருந்தானென்கிறார்.

(இ-ள்.) ஸம்ஶ்லேஷப்ரீத்யதிஶயத்தாலே, கண்கள்-திருக்கண்கள் சிவந்து-சிவந்து, பெரியவாய்-பெருத்திருப்பனவாய், அப்படியே, வாயும்-திருவதரமும், சிவந்து-சிவந்து, கனிந்து-பழுத்து, உள்ளே-அகவாயிலே, வெண்-வெளுத்த. பல்-திருமுத்து நிரையினுடைய, இலகு-விளங்குகிற, சுடர்-சுடரையும், இலகு-அத்யுஜ்ஜ்வலமாய், விலகு-அசைகிற மகரகுண்டலத்தன்-மகரகுண்டலத்தையுடையனாய், இவ்வவயவஶோபைக்கும் பரபாகரூபமாய், கொண்டல்-காளமேகத்தின், வண்ணம் நிறம்போலேயிருக்கிற ரூபஶோபையையுடையனாய், அவ்வடிவழகுக்கு தகுதியாய், சுடர்-பேரொளியையுடைத்தான. முடியன்-திருவபிஷேகத்தையுடையவனாய், நான்கு தோளன்-அந்த ஸர்வேஶ்வரத்வாநுரூபமான நாலுதிருத்தோள்களையுடையனாய். (க) "ஶ்ரீவத்ஸவக்ஷஸம் நித்யப்ரஸந்நம் கமலேக்ஷணம் ... வஜ்ர-திவ்யாஸ்த்ர புஷ்பிதசதுர்ப்புஜம்" என்கிறபடியே அந்தபுஜகல்பகம் பூத்தாப்போலேயிருக்கிற, குனி-வளைந்த, சார்ங்கம்-ஸ்ரீசார்ங்கம், ஒண்-தர்ஶநீயமான, சங்கு-ஸ்ரீபாஞ்சஜந்யம். கதை-கௌமோதகீ, வாள்-நந்தகம், ஆழியான்-திருவாழியாகிற திவ்யாயுதத்தையுடையனாய், ஒருவன் - இவ்வவயவஶோபையாலும் ஆபரணஶோபையாலும் ஆயுதஶோபையாலும் அத்விதீயாகாரனானவன். அடியேன் இவ்வழகிலே துவக்குண்டடியேனான என்னுடைய, உள்ளான் - அகவாயிலே ப்ரகாஶியாநின்றான்.

சங்குகதையென்கிற வித்தை-சங்கதையென்று கடைக்குறைத்தலாய்ச் சொல்லிற்று. (க)

(க) ர-ஸ்த-க-சுக.

ஆறு:—(கண்கள்சிவந்து) என்றோடே ஸம்ஶ்லேஷித்த ஸம்ஶ்லேஷத்தினுடைய ஸ்த்தைர்யார்த்தமாகத் தன்னுடைய நிரவதிகமான வழகைக்காட்டி யென்னை வசீகரித்துக்கொண்டு என்னுள்ளே யிருந்தருளினனென்கிறார். (க)

ஈடு; அவ:—அவன், தம்போட்டைக்கலவியாலே புதுக்கணித்த திவ்ய ஸௌந்தர்யாதிகளோடே என்னுடைய ஹ்ருதயத்திலே புகுந்திருந்தா னென்கிறார். நம்மாழ்வார்கள், வடிவழகுக் கவ்வருகு ஸ்வரூபகுணங்களி லிழியமாட்டார்கள். திவ்ய விக்ரஹத்தை ஶுபாஶ்ரயமாகப் பற்றினபின்னை அவ்வருகுபோவானென்று ஶாஸ்த்ரங்கள் சொல்லுகிறது- இத்தைவிட்டுப் போகச் சொல்லுகிறதல்ல, ஸ்வரூபகுணங்களு மூபாஸ்யமென்னைக்காகச் சொல்லுகிறது. அவன்றன்னோடு பிராட்டிமாரோடு ஶேஷபூதரோடுவாசியில்லை, எல்லார்க்கு மபிமதமாயிருக்குமாயிற்றுத்திருமேனி.

(கண்கள்சிவந்து) (க) "தஸ்ய யதா கப்யாஸம் புண்டரீகமேவமக்ஷிணீ-தஸ்யயதாகப்யாஸம் புண்டரீகமேவமக்ஷிணீ" என்று கண்களாகில் சிவந்திருக்குமிறே; இப்படியிருக்கச்செய்தே, *மாயக்கூத்தனில் விஶ்லேஷத்தாலே விவர்ணமானது* இருத்தும் வியந்தில் ஸம்ஶ்லேஷத்தாலே தன்னிறம்பெற்றபடி; கண்ணிலேதுவக்குண்டு கால்வாங்கமாட்டாதேயிருக்கிறவிருப்பு, இசையிலே காணுமித்தனை; (பெரியவாய்) வ்ருத்திஹ்ராஸாதிகளுண்டாகிறதாயிற்று. (உ) "ஷட்விகாரா-வர்ஜிதாய-ஸத்தைகரூபரூபாய" என்கிறது- கர்மநிபந்தநமான விகாரங்களில்லையென் றவித்தனையொழிய, ஆஶ்ரிதஸம்ஶ்லேஷத்தாலே பிறக்கும் விகாரத்தை யில்லையென்கிறதன்றே; அப்படியேயானவன்று ஆஶ்ரயணீயனன்றிக்கே யொழியுமே. அவனும் தன்னைவிலை விக்ருதனுக்கடவனிறே. (வாயும் சிவந்து) கண்ணேயன்றிக்கே, திருவதரமும் தன்னிறம்பெற்றபடி சொல்லுகிறது. "செவ்வாய்-வெண்பல் சுடர்க்குழை" என்றது பின்னாட்டுகிறபடி, (கனிந்து) இச்சிவப்பு, தன்னிலேயூறி பெய்த்துத் தோற்றுகின்றதாயிற்று.

(உள்ளே) திருவதரத்தில் சிவப்பைவிட்டு, உள்ளுப்புகுகையிலுண்டான வருமையடையத்தோற்றுகிறது. (வெண்பலிலகு

(க) சாந்தோ-க-கூ-எ. (உ) வி-பு-க-உ-க.

சுடர்) திருவதாத்திற் சிவப்புக்குப் பரபாகமான வெண்மையை யுடைத்தாய், தேஜஸ்ஸு நின்று சுழியாநின்றதாயிற்று. (இலகு விலகுமகரகுண்டலத்தன்) திருக்குழலி லிருட்சிக்கு ப்ரகாசகமாய், அலைந்துவருகிற திருமகரகுண்டலத்தை யுடையவன். "இக் கலவிநமக்கு ஸப்பலிப்பதே!" என்று தலைசெய்த்துப்படாநின்றான் போலே; கடலுடைந்தாப்போலே தன்னளவிலே ஹ்ருஷ்டனாகாநின்றான். (கொண்டல்வண்ணன்) வர்ஷுகவலாஹகம்போலே வடிவும் குளிர்ந்துகறுத்தது. முன்பு விவர்ணமாய்ப்போலே திருமேனியிருந்தது. (சுடர்முடியன்) தன்னழகாலேயல்லாதவழகை முட்டாக்கிடும் திருவபிஷேகத்தையுடையவன். * மாயக்கூத்தனிலிவர் விடாய்தீர்ந்தபின்பாயிற்று முடியும் நற்றரித்தது. "முடிசேர்சென்னியம்மா" என்றிறே கூப்பிட்டது. (நான்குதோளன்) இவரை யணைத்தபின்பு தோள்கள் பணைத்தபடி. (குனிசார்ங்கன்) "மகரகுண்டலத்தன்" என்கிறவோபாதி, இவையும் சிலவாபரணங்களிருக்கிறபடி. வீரர்கள்கையில் வில்லு, வினையில்லாதபோதும் வளைந்தேயிருக்குமிறே.

(ஒண்சங்கு) (க) "உண்பது சொல்லில்," "உன்செல்வம் சால வழகியது" என்னும்படியான வொண்சங்கு (கதைவாளாழியான்) இவற்றையுடையவன். (ஒருவன்) புண்டரீகாக்ஷனுப், காளமேகநிபஸ்யாமளுப், சதுர்ப்புஜனுய், ஸங்கசக்ராதி திவ்யாயுதோபேதனுகையாலே அத்விதீயன் (அடியேன்) அவனுடைய சேஷித்வமத்விதீயமாயிருக்கிறாப்போலே, இவருடைய சேஷத்வமும் அத்விதீயம். அதாவது - ஸ்வரூபஜ்ஞானத்தாலன்றிக்கே அழகுக்குத்தோற்று-அடியேனென்கிறார். (உள்ளானே) பாகர்த்தமான மநஸ்ஸை ப்ரத்யக் விஷயமாக்கினவாறே (உ) "யுவாகுமாரௌ-யுவாகுமார:" என்று கேட்டேபோய்வடிவழகு, வயிரப்பேழை திறந்தாப்போலே அவயவசோபையு மாயுதசோபையு மாபரணசோபையுமாய் மிளிராநின்றதாயிற்று. (க)

இரண்டாம்பாட்டு.

அடியேனுள்ளான் உடலுள்ளான் அண்டத்தகத்தான் புறத்
துள்ளான் * படியேயிது வென்றுரைக்கலாம்படி யனல்லன் பரம்.

(க) நா-தி-எ-அ. (உ)

பரன் * கடிசேர்நாற்றத்துள்ளாலை இன்பத்துன் பக்கழிநேர்மை * ஒடியாவின்பப்பெருமையோன் உணர்விலும்பரொருவனே. (உ)

ப:—அநந்தரம் ஸர்வாந்தராத்மபூதனாய் நிரதிசய ஜ்ஞாநாநந்தயுக்தனானவன், என்னாத்மாவோடு சரீரத்தோடு வாசியறவுள்ளே புகுந்து நின்றானென்கிறார்.

(இ-ள்.) அண்டத்து-அண்டத்தகவாயிலுண்டான ஸமஸ்தபதார்த்தங்களுக்கும், அகத்தான்-அந்தராத்மாவாய், புறத்து - புறவாயில் அவ்யக்த மஹதஹங்காரங்களுக்கும், உள்ளான் - ஆத்மபூதனாய், இதுவே-இதுவே, படி-ப்ரகாரம், என்று-என்று, உரைக்கலாம்படியன் - சொல்லலாம்படி யிருப்பதொரு ப்ரகாரத்தையுடையன், அல்லன்-அல்லனாய் பரம்பரன்-பரரான நித்யமுக்தர்களுக்கும் பரனாயிருப்பானொருவனாய், கடி-விலக்ஷணமான, நாற்றம்-கந்தங்களெல்லாம், சேர்-சேர்ந்த, ஆலையுள்-பரிமளஸமுதாயத்தை அவகாஹித்தநுபவித்து,இன்பம்-இன்பத்தினுடைய, துன்பம்-அல்பாஸ்த்திரத்வாதி நிபந்தநமான துன்பத்தினுடைய, கழி-கழிவையுடைத்தான, நேர்மை-ஸூக்ஷ்மாம் சத்தினுடைய ஒடியா-விச்சேத ரஹிதமாகையாலே நித்யமான, இன்பம் - ஆநந்தத்தினுடைய, பெருமையோன்-அபரிச் சேத்யதையையுடையனாய், உணர்வில் ஜ்ஞாநத்தில்வந்தால், உம்பர்-அந்தவாநந் தம்போலே நித்யத்வாபரிச்சிந்நத்வங்களாலே மேலேயிருப்பான், ஒருவன் - ஒருவன், அடியேன் - சேஷத்வைக நிரூபணீயமான அஹமர்த்தத்தினுடைய, உள்ளான்-அகவாயிலே அந்தராத்மதயா நில்லாநின்றான். உடல்-அத்யந்த ஹேயமான சரீரத்தினுடைய, உள்ளான் - ஹ்ருதயாம்சத்திலேயும் வர்த்தியாநின்றான்.

படியேயிதுவென்று - உபமாநராஹித்யத்தைச் சொல்லிற்றாகவுமாம், கந்தாநுபவஸுகத்ருஷ்டாந்தம் ப்ரதிபத்த்யர்த்தமாகச் சொல்லுகிறது ; உபயலிங்கவிசிஷ்டமாய், ஸ்வேதர ஸமஸ்த விலக்ஷணமான ஜ்ஞாநாநந்த மாஹாத்ம்யத்துக்கு த்ருஷ்டாந்தமில்லாமையாலே. (உ)

ஆறு:—(அடியேனுள்ளான்) அஸங்க்யேயமான வண்டங்களுக்கெல்லாம் நிர்வாஹகனாய்,நிரஸ்தஸமாப்யதிசனாய்,அநாக்ராத துஃக்கந்த நித்யஸித்த நிரவதிகாநந்தத்தையுடையனாய், ஸர்வஜ்ஞனாய், நிரபேக்ஷனாயிருந்துவைத்து, என்னுடைய நிகர்ஷத்தையும் தன்

னுடைய வுத்கர்ஷத்தையுமநுஸந்தித்து, தன்னோடு கலந்து பரிமாறுகைக்கு நானீடல்லேனென்று அகலுகிறேனென்னும் பயத்தாலே யென்றால் தன்னை விடமுடியாதொருபடி தன்னழகைக் காட்டிக்கொண்டு என்னுள்ளே புகுந்தருளுகை யன்றியே என்னுடம்பினுள்ளேயும் புகுந்தருளினானென்கிறார். (உ)

ஈடு; அவ:—என்னுடைய ஹ்ருதயத்திலே புகுந்திருந்த வளவன்றிக்கே, என் ஶரீரத்திலேயும் புகுந்து கலந்தானென்கிறார்.

(அடியேனுள்ளான்) திருக்கோட்டியூர்நம்பி ஸ்ரீபாதத்திலே ஆறுமாஸமாழ்வான் ஸேவித்துநின்று போரப்புக்கவாறே, "ஆழ்வான், ஆழ்வார் 'அடியேனுள்ளான்' என்றபடி கண்டாயே!" என்ன, "க்ருதார்த்தனானேன்" என்று போந்தானாம். "என்னுள்ளான்" என்னவேண்டுமிடத்திலே, "அடியேனுள்ளான்" என்கையாலே-ஜ்ஞாநாநந்தங்களன்று வஸ்துவுக்கு நிரூபகம்; ஶேஷத்வமென்கை; ஜ்ஞாநாநந்தங்களிலும் அந்தரங்கம் பகவச்சேஷத்வமென்கை. (உடலுள்ளான்) சேதநனுக்கு பகவத் ஸ்வரூபத்திலும் திவ்யமங்களவிக்ரஹமே யுத்தேஶ்யமானாப்போலே, ஈஶ்வரனுக்கும், இவர் ஸ்வரூபத்திலும் இவர்கழிக்கிற ஶரீர முத்தேஶ்யமாய்த் தோற்றாநின்றது; செருக்கர் அபிமதவிஷயத்தி லழுக்குகக்குமாபோலே; இத்தால் - "ஜீவபரபேதமும், ஜீவர்களுக்கு பரஸ்பரபேதமும், ஶேஷஶேஷிஸம்பந்தமும் அபரமார்த்தம்." என்கிற பக்ஷங்கள் அர்த்தாத்ப்ரதிக்ஷிப்தங்கள்.

உம்முடைய திருமேனியை விரும்புகிறவனாரென்ன; இன்னானென்கிறதுமேல் (அண்டத்தகத்தான்புறத்துள்ளான்) அண்டாந்தர்ப்பூதமான பதார்த்தங்களோடு, புறம்புள்ள பதார்த்தங்களோடு வாசியற ஸர்வகதனானவன்; ஸர்வகதமான வஸ்துவோர் ஒருவ்யக்தியிலேகதேசமான ஶரீராம்ஶத்திலே யகப்பட்டதென்னை. (படியேயிது) (இதுவே படி.) ஸர்வதா ஸத்ருஶமாயிருப்பதொரு ரூபமாகத்தையுடையவனல்லன். ஸர்வகதமுமாய், ஸர்வநிர்வாஹகமுமாயிருப்பதொரு வஸ்துவுண்டாகிலிறே யொப்புச்சொல்லலாவது, சொல்லும்படிதானென்னென்னில் (பரம்பரன்) மேலானவற்றுக்கெல்லாம் மேலானவன் (க) "நேதி நேதி-நேதிநேதி" என்கிறபடியே-இவ்வளவன்றென்னுமித்தனை.

(க) ப்ருஹ-ச-ரு.

ஆறு மிவ்விஷயத்தை ப்ரதிபத்தி பண்ணும்படி தானென்னென்னில் (கடி சேர்நாற்றத்துள்ளாலெ) ஆலை-மது. "கடி" என்றும், "நாற்றம்" என்றும் - பரிமளமாய், மீமிசைச்சொல்லாய் - மிக்கபரிமளமென்கை, "கடி" என்று-புதுமையாய், செவ்விப்பரிமளமென்றுமாம். பரிமளத்துக்கு உள்ளும்புறம்புமில்லாமையாலே-நாற்றத்திலென்றபடி. (இன்பத்துன்பக்கழிநேர்மை) அதினுடையவநுபவத்தால் வந்த ஸுகத்தில் துக்காம்சத்தைக்கழித்தநேர்மையுண்டு, நுண்மை; ஸுகாம்சம்-புஷ்பத்தில் பரிமளத்தை த்ருஷ்டாந்தமாகச் சொல்லுகையாலே, அதில் அல்பாஸ்த்திரத்வங்கள் துக்காம்சம்; அதுகழிந்தநுண்மை - ஸுகாம்சம். துன்பங்கழிந்த வின்பமென்கிறபடி.

(ஒடியாவின்பப்பெருமையோன்) ஒடியாததுமாய், பெரியதுமான ஸுகம் நித்யமுமாய் நிரதிசயமுமான வாநந்தத்தையுடையவன் (க) "ஆநந்தமய:-ஆநந்தமய:" என்கிறார். (உணர்விலும்பரோருவனே) ஜ்ஞாநத்தில் வந்தால் மேலானவொருவன்; அத்விதீய ஜ்ஞாநாநந்தஸ்வரூபனென்கை. (ஒடியாவின்பப்பெருமையோனுணர்விலும்பரோருவன்-அடியேனுள்ளானுடலுள்ளான்) எல்லார்க்கும் ஸ்ப்ருஹணீயவிஷயமாயிருக்கிறவன்கிடீர் என்பரீரத்தை யாதரிக்கிறான். (உ)

மூன்றாம்பாட்டு.

உணர்விலும்பரோருவனை அவனதருளால் உறற்பொருட்டு * என் உணர்வினுள்ளே இருத்தினேன் அதுவும் அவனது இன்னருளே * உணர்வும் உயிரும்உடம்பும் மற்று உலப்பிலனவும்பழுதேயாம்*உணர்வைப்பெறவூர்ந்திறவேறி யானும்தானாயொழிந்தானே.

ப:—அநந்தரம், தன்க்ருபாதிசயத்தாலே தானென்னுள்ளே புகுந்திருக்கும்படி யென்னை யிசைவிப்பதுஞ்செய்து நான் தனக்கு ப்ரகாரபூதனாயிருக்கிறபடியையும் ப்ரகாசிப்பித்தானென்கிறார்.

(க) தை-ஆந-உ-ரு.

(இ-ள்) உணர்வில்-உணர்வுமிக்கிருக்கக்கடவரான, உம்பர்-நித்ய ஸூரிகளுக்கு ஸர்வப்ரகாரநிர்வாஹகனான, ஒருவனை - அத்விதீயனானவனை, அவனது-அவனுடைய, அருளால் - க்ருபையாலே, உறற்பொருட்டு-ப்ராபிக்கைக்காக, என்-என்னுடைய, உணர்வினுள்ளே-அபேக்ஷாரூபஜ்ஞானத்துக்குள்ளே, இருத்தினேன்-இருத்தினேன், அதுவும்-அந்தவிச்சைதானும், அவனது-அவனுடைய, இன்னருளே - நிர்ஹேதுகக்ருபையடியாகவுண்டானதே, இப்படி யென்னையிசைவித் தென்னுள்ளேபுகுந்தவன்-உணர்வும்-விஷயாவலம்பியான ஜ்ஞாநவ்ருத்திவிசேஷமும், உயிரும்-ப்ரவ்ருத்திஹேதுவான பஞ்சவ்ருத்திப்ராணபேதமும், உடம்பும்-ப்ராணப்ரவ்ருத்திபேதமான ஶரீரபேதமும், மற்று-மற்றும், உலப்பிலனவும் - அஸங்க்யாதமான மஹதஹங்காரேந்த்ரியாதிகளும், பழுது ஹேயம், ஆம்-என்கிற, உணர்வை-உணர்வை, பெற-பெறும்படியாக, ஊர்ந்து-நடத்தி, இறவேறி-விலக்ஷணஸ்வரூபனான வாத்மாவளவும் முடியக்கொண்டேறி, யானும்-ஆத்மவிஷயமான வஹம்புத்திவ்யவஹாரங்களும், தானாயொழிந்தான் ஸ்வவிஷயமாம்படி ஆத்மப்ரகாரவிசிஷ்டனாய்விட்டான். (௩)

ஆறு:—(உணர்விலும்பர்) இப்படி யெம்பெருமான் செய்தருளுகைக்கு ஹேதுவென்னென்னில்; என்னிச்சாமாத்ரமே காரணமாகச் செய்தருளினான்; அதுதானென்னாலே வந்ததொன்றன்று, அதுவுமவனுடைய ப்ரஸாதத்தாலேவந்ததென்றுகொண்டு, இப்படி* இருத்தும் வியந்திற்சொன்னபொருளை யநுபாஷித்து, பின்னையும், இவ்வளவோ அவனெனக்குச் செய்தருளிற்று, வ்ருத்த ஸம்ஶ்லேஷஸ்த்தைர்யார்த்தமாக, தன்னுடைய ஸௌந்தர்யாவிஷ்காரத்தாலே யென்னை வசீகரித்து வைத்ததுவும் போராதே, என்னோடுபண்ணின ஸம்ஶ்லேஷத்துக்குபங்கம் வருகிறதென்னும் பயத்தாலே, ஒன்றையெனக்குச் செய்யவொண்ணாததொருபடி, அஹமர்த்தவிசிஷ்டனானதானே, அஹம் ஶப்தவாச்யனென்று தோற்றும்படி தன்னைக்குறித்து இவ்வாத்மாவுக்குண்டான, நிரவதிகபுருஷார்த்தமாய், ஸாக்ஷாத்காரரூபமாயிருந்த மோக்ஷைககாரணத்வ ஜ்ஞாநத்தையும் தந்தருளினானென்கிறார். (௩)

ஈடு ; அவ:—கேவலக்ருபையாலே ஸ்வவிஷயமாக விச்சையையும் பிறப்பித்து, என்னோடே ஸம்ஶ்லேஷித்து, ஸம்ஶ்லேஷ ஸ்தைர்யார்த்தமாக, விலக்ஷணமுமாய்த் தனக்கநந்யார்ஹமுமான வாத்மஸ்வரூபத்தையுங்காட்டி யருளினனென்கிறார்.

(உணர்விலும்பரொருவனை) உணர்விலேயுளரான நித்யஸித்தர்-ஜ்ஞாநாதிகரான நித்யஸூரிகளுடைய ஸத்தாதிகள் ஸ்வாதீநமாம்படி யிருக்கிற வத்விதீயனை ; இத்தால்-ப்ராப்யஸ்வரூபஞ் சொல்லிற்று. *அயர்வறுமமரர்களதிபதியாயிருக்கு மிருப்பிறே ப்ராப்யம். "அடியார்கள் குழாங்களை-உடன்கூடுவதென்றுகொலோ" என்றிறே இவர் ப்ரார்த்தித்தது. (அவனதருளால்) அவனுடைய ப்ரஸாதத்தாலே. "ப்ராப்யமவனே" என்கிற நிர்ப்பந்தத்தோபாதி, ப்ராபகமுமவன்ப்ரஸாதமேயாயிருக்கிறபடி. (உறற்பொருட்டு) ப்ராபிக்கையின் பொருட்டு.

ப்ராப்யப்ராபக மவனேயாகில், நீரதிலநவயித்த வம்ஶமேதென்ன (என்னுணர்வினுள்ளே யிருத்தினேன்) அவனை யென்னுடைய ஜ்ஞாநத்துக்கு விஷயமாக்கினேன். "வைத்தேன்மதியால்" என்றதுதானிறே. இச்சித்தேனென்கை. இச்சைதான் ஸ்வாதீநமோவென்னில் (அதுவுமவனதின்னருளே) அந்தவிச்சைதான் பிறந்ததும் அவன்ப்ரஸாதத்தாலே. நின்றநின்றவளவுகள்தோறும், "இவ்வளவுமவனாலேபிறந்தது" என்னும்படியாயிற்றிருப்பது அவனுடைய ஸௌஹார்த்தம். "தன்பொன்னடிக்கீழ்-இருத்தும்வியந்து" என்று-ப்ராப்யமும் ப்ராபகமு மவனேயென்று, "அருக்கித்து" என்றதிறே ; அத்தையிறே யிங்குச்சொல்லுகிறது. இரண்டுரைப்பாட்டென்கிறதற்றது.

மேல்-ஆத்மஸ்வரூப வைலக்ஷண்யத்தைக்காட்டித் தந்தானென்கிறது (உணர்வும்) வைஷயிகஜ்ஞாநமும். (உயிரும்) பஞ்சவ்ருத்திப்ராணனும். (உடம்பும்) ஶரீரமும் (மற்றுலப்பிலனவும்) மற்று மபரிச்சேத்யமான மஹதாதிப்ரக்ருதி விகாரங்களும், ப்ராக்ருதியும், (பழுதேயாமுணர்வைப்பெறவூர்ந்து) இவையெல்லாம் ஹேயமென்னும்படியான வறிவை நான் பெறும்படி நடத்தி; அங்வர்த்தப்ரயோஜநத்தேருருமாபோலே இவை அபுருஷார்த்தமென்னு முணர்வுண்டு-மயர்வற்றமதி, அத்தை நானுடையேனும்படி பண்ணி (இற

வேறி) ப்ரக்ருதி ப்ராக்ருதங்கள் அபுருஷார்த்தங்களென்னு மளவே யன்றிக்கே, முடியப்போய் ஜ்ஞாநாநந்தஸ்வரூபமாய், பகவச்சேஷதைக ரஸமாயிருக்கு மாத்மவஸ்துவென்னுமளவும் காட்டித்தந்து. (இறவேறி) முடியவேற்றி. (யானும்தானாயொழிந்தானே) அவ்வளவிலும் பர்யவஸியாதே, என்னைச்சொல்லும் சொல்லாலே தன்னைச் சொல்லலாம்படி தனக்கு ப்ரகாரதயா சேஷமென்னு மிடத்தையுங் காட்டித்தந்தான். "ஆழ்வீர்" என்றால், "ஏன்" என்பானீச்வரன் போலே காணும். அஹம்ஸப்தமுமஹம்புத்தியும் தன்னளவும் செல்லும்படி ப்ரகாரதைக வேஷமாயிருக்கிறபடியைக் காட்டித்தந்தான். * தச்சப்தம் குணவிசிஷ்டவாசியான வேபாதி, * த்வம்ஸப்தமும் அசித் விசிஷ்ட ஜீவாந்தர்யாமியளவும் செல்லக்கடவதிறே.

நான்காம்பாட்டு.

யானும்தானாயொழிந்தானை யாதும்யவர்க்கும்முன்னோனை * தானும்சிவனும்பிரமனுமாகிப் பணைத்ததனிமுதலை * தேனும்பாலும்கன்னலும் அமுதுமாகித்தித்தித்து * என் ஊனில்உயிரில்உணர்வினில் நின்றஒன்றைஉணர்ந்தேனே. (ச)

ப:—அநந்தரம், ஸமஸ்த காரணபூதனானவன், (க) "அஹமந்நம்-அஹமந்நம்" என்கிறபடியே தனக்கு ஸர்வவிதபோக்யபூதனான வாத்மாவைத் தனக்கு அப்ருதக்ஸித்த ப்ரகாரமாகவுடையனாய் நிற்கிறநிலையை யறியப்பெற்றேனென்கிறார்.

(இ-ள்) யாதும்யவர்க்கும்-ஸமஷ்டிரூபமான ஸகலசேதநாசேதநங்களுக்கும், முன்னோனை - நியதபூர்வக்ஷணவர்த்தியான காரணபூதனாய், தானும் - வ்யஷ்டிரூபஸ்ருஷ்ட்யாதிகளுக் குறுப்பாக ரக்ஷணத்துக்குக் கடவதானும். சிவனும்-ஸம்ஹாரத்துக்குக்கடவ ருத்ரனும், பிரமனுமாகிய-ஸ்ருஷ்டிக்குக்கடவ ப்ரஹ்மாவுமாய்க்கொண்டு, பணைத்த-விஸ்த்ருதனை, தனிமுதலை-ப்ரதாநகாரணபூதனாய், தான் இச்சேதநனுக்கு ஸர்வவிதபோக்யமாமாபோலே, தேனும்பாலும் கன்னலுமமுதுமாகி-தனக்கிச் சாநுரூபபோக்யமாய்க்கொண்டு, தித்தித்து - ரஸித்து, என்-என்னுடைய ஊனில்-ஸரீரத்திலும், உயிரில்-ப்ராணனிலும், உணர்வினில் ஜ்ஞாநத்திலும், நின்ற-அப்ருதக்ஸித்தனாய்க்கொண்டு ஏகாகார

(க) தை ப்ருகு-௧௦.

மாயிருக்கிற, ஒன்றை - ஆத்மஸ்வரூபத்தை ஶரீரமாக வுடையனானை யாலே, யானும்-அஹமர்த்தமும், தானாய் யொழிந்தானை-தானாய்விட்டவனை, உணர்ந்தேன்-அறியப்பெற்றேன். (௪)

ஆறா:—(யானும்) நானென்றுகொண்டு என்னுடைய விச்சாநுகுணமாகத் தன்னை யெனக்ககலவொண்ணாதபடி, தன்னைக் குறித்து இவ்வாத்மா ஶேஷதைகஸ்வபாவ னென்னுமிடத்தைக் காட்டித் தந்தருளுகையன்றியே; தன்திருவடிகளை நானே யகல்வே னல்லே னென்றிருக்கும்படியாக ஸ்வஶேஷதைகரஸமான வில்வாத்மா, நூபுராதிதிவ்யபூஷணம்போலே கல்யாணஶாலியா யிருக்கு மென்னுமிடத்தையுங் காட்டித் தந்தருளினானென்கிறார். (௪)

ஈடு ; அவ:—ப்ராப்தியைக் காட்டினவளவேயன்றியே, இவ்வாத்மா தனக்கத்யந்தபோக்யமென்னுமிடத்தையுங் காட்டித் தந்தானென்கிறார்.

(யானும்தானாயொழிந்தானை) கீழ்ச்சொன்ன வநந்யார்ஹஶேஷத்வத்தில் ப்ரீதியாலே யநுபாஷிக்கிறார். (யாதுமித்யாதி.) யாதும் யவர்க்குமென்று-காரணாவஸ்தமான சேதநாசேதநங்களைச் சொல்லுகிறது- (முன்னோனை) கார்யத்துக்கு நியமேந பூர்வக்ஷணவர்த்தியானதிறே காரணமாவது. (தானுமித்யாதி) ப்ரஹ்மருத்ரர்கள் நடுவேயவதரித்த தானும், ப்ரஹ்மருத்ரர்கள்முதலான கார்யவர்க்கமுமாய்க்கொண்டு விஸ்த்ருதமான வத்விதீயகாரணமானவனை. சேதநாசேதநங்க ளடங்க வழிந்தபோது தன்திருமேனியிலே ஶக்த்யவஸ்த்தப்ரபைபோலே ஸூக்ஷ்மரூபேண கிடக்கும்படி யெறட்டுக் கொண்டுநோக்கி, ஸ்ருஷ்டிகாலம் வந்தவாறே தன்பக்கலினின்றும் விபக்தமாக்கி, அண்டஸ்ருஷ்டியளவும் தானேநடத்தி ; அண்டாந்தர்வர்த்திகளில் ப்ரதாநரான ப்ரஹ்மாதிகளையுண்டாக்கி, ஸ்வேநரூபேண நின்று பாலநகர்மத்தைப்பண்ணியும், ப்ரஹ்ம ருத்ரர்களுடைய ஶரீரத்தையு மாத்மாவையு மதிஷ்டித்துக்கொண்டு நின்று ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்களைப்பண்ணியும், அவர்கள் செய்கிற கார்யங்களோடு தான்செய்கிற கார்யங்களோடு வாசியற வெல்லாம் தானே நடத்துகிறவனை.

(தேனும்) இப்படி யினிதாயிருக்கிறதார்க்கென்னில் ; (௧)

(௧) சாந்தோ-௬-௧௪.

"ஸாரஸ: - ஸர்வரஸ:" என்று சேதநனுக்கு அவனினியனு யிருக்குமாபோலே, ஈஶ்வரனுக்கு மிதுஇனிதாயிருக்குமிறே. அவனு க்கு "என்னது" என்றினிதாயிருக்கும்; இவனுக்கு "அவனது" என்றினிதாயிருக்கும். "ஈஶ்வரபரதந்த்ரன்" என்றறிவதற்குமுன் னும், "ஸ்வாநுபவமமையும்" என்னும்படி யினிதாயிருக்கிறதிறே. (என்னூனிலித்யாதி) என்சரீரத்திலும், ப்ராணனிலும், ஜ்ஞாநத் திலும் வ்யாப்தமாய், விலக்ஷணமான வாத்மாவைத் தனக்கு ஶரீர மாகவுடையவனை யறியப்பெற்றேன்.

"நின்றவொன்று" என்கிறது ஜீவாத்மஸ்வரூபவாசியான ஶப் தம் - ஆஶ்ரயமான ப்ரகாரி பர்யந்தாபிதாநம்பண்ணுகிறது. ஸ்வ நிஷ்டமல்லாமையாலே பகவத்பர்யந்தமாயிறேயிருப்பது. ஆத்மா வினுடைய போக்யதையாகில் சொல்லுகிறது, காரணத்வம் சொல் லுகிறதென்னென்னில்; விமுகரானசேதநரை கர்மாநுகுணமாக ஸ்ருஷ்டித்துவிட்டான்; ஐஶ்வர்யகாமரான ப்ரஹ்மாதிகளுக்கு அவர்களுகந்த வைஶ்வர்யத்தைக் கொடுத்துவிட்டான்; எனக்கு, அசிதம்ஶம் த்யாஜ்யமென்னு மிடத்தையும், ஐஶ்வர்ய மபுருஷார்த் தமென்னுமிடத்தையும், ஆத்மவஸ்து தனக்கநந்யார்ஹ சேஷமாய் நிரதிசயபோக்யமா யிருக்குமென்னுமிடத்தையுங் காட்டித் தந்தா னென்கைக்காகச் சொல்லுகிறார். * நின்றனரிருந்தனரிற்போலே இஸ்ஸாமாநாதிகரண்யத்துக்கு விசேஷணாம்ஶமான போக்யதை யிலே தாத்பர்யம். வையதிகரண்யத்துக்கும், நாட்டார் சொல்லுகிற ஶரீராத்மபேதமன்று பொருள்; ஸாமாநாதிகரண்யத்துக்கும், ஸ்வ ரூபைக்ய மன்று பொருள்.

யாதும்யவர்க்கும் முன்னேனை யென்று தொடங்கி, என்னூனி லுயிரிலுணர்வினில் நின்றவொன்றான - யானும் தானாயொழிந்தானை உணர்ந்தேனென்றந்வயம். (அ)

ஐந்தாம்பாட்டு.

நின்றவொன்றையுணர்ந்தேனுக்கு அதனுள்நேர்மை அதுவிது வென்று * ஒன்றும்ஒருவர்க்குணரலாகாது உணர்ந்தும் மேலும் காண்பரிது * சென்றுசென்று பரம்பரமாய் யாதுமின்றித்தேய்ந் தற்று * நன்றுதீதென்றறிவரிதாய் நன்றாய்ஞானம் கடந்ததே. (ரு)

ப:—அநந்தரம்; இப்படி பகவத்ப்ரகாரபூதனான வாத்மாவினுடைய துரவகமத் வாதிஶயத்தை யருளிச்செய்கிறார்.

(இ-ள்.) நஶ்வரமாய் நாநாகாரமான வசித்துப்போலன்றியே, நின்ற - நித்யமாய், ஒன்றை-ஜ்ஞானைகாகாரமான வாத்மவஸ்துவை, உணர்ந்தனுக்கு-அவன்ஸ்வப்ரகாரதயா காட்டக்கண்டவெனக்கு, அதனுள்-அதினுடைய, நேர்மை-ஸூக்ஷ்மமான வைலக்ஷண்யம், ஒன்றும்-ஒன்றும்-ஒருப்ரகாரத்தாலும், ஒருவர்க்கு-நிஷ்பந்ந ஜ்ஞாநராயிருப்பார்க்கும், அதுவிதுவென்று - ஏவம்விதமென்று-அநுபூதஸஜாதீயமாகவும் உணரலாகாது-ஶ்ரவணமநநாதிகளா லறியப்போகாது. உணர்ந்தும், வருந்தியறிந்தாலும், மேலும்-ஸமாதிபர்யந்தமாக வாரோஹித்தவளவிலும், காண்பரிது-அபரோக்ஷித்துக்காணவரிதாயிருக்கும், அவன் காட்டக்கண்டவெனக்கு,* தேஹேந்த்ரியமநஃப்ராணாதிகளில் வைத்துக்கொண்டு, பரம்பரபாய்-ஒன்றுக்கொன்றுமேலாய். சென்றுசென்று-சென்றுசென்று, யாதும் - அவற்றினுடைய விகாராதிஸ்வபாவ மொன்றும், இன்றி-இன்றியே, தேய்ந்து-அத்யந்தஸூக்ஷ்மமாய்; அற்று-தத்ஸம்பர்க்கமற்று, நன்றுதீது அவற்றுக்குண்டான வுத்தரோத்தராபேக்ஷையாய் வருகிறநன்மையும் தீமையுமுடைத்து; என்று-என்று, அறிவு-அறிய, அரிதாய்-அரியதாய், நன்றாய்-ஸர்வப்ரகார வ்யாவ்ருத்தமான ஜ்ஞாநாநந்த வைலக்ஷண்யத்தையுடைத்தாய், ஞானம்-அவற்றையவலம்பிக்கிற ஜ்ஞாநத்துக்கு, கடந்தது-விஷயமன்றியே யிருந்தது. இதில் ஸாங்க்யோக்த மர்யாதையாலே ஆத்மவ்யாவ்ருத்தி சொல்லிற்றாயிற்று, *

ஆறு:—''உணர்வுமுயிருமுடம்பும்'' என்றுதொடங்கி நாலாம் பாட்டளவாக ஆத்மநிதாத்பர்யமாய், நிர்த்தேஶத்தை பகவத்பர்யந்தமாகப் பண்ணிக்கொடுபோந்தது ; இனி, இந்நிர்த்தேசமும் ஆத்ம பர்யந்தமேயாகிறது.

(நின்றவொன்றை) இப்படி யெம்பெருமானுடைய காருண்யத்தாலே யென்னால் ஸாக்ஷாத்க்ருதமாய், ப்ரக்ருதி மஹதஹங்காரைகாதசேந்த்ரிய ப்ருதிவ்யாதிபூத ஶப்தாதிவிஷயரூப சதுர்விம்ஶதி தத்த்வவிலக்ஷணமாய், தத்ஸ்வபாவகந்த ரஹிதமாயிருந்த விவ்வாத்மஸ்வரூபத்தை யொருவர்க்கறிகையுமரிது. யோகத்தினாலே ப்ரத்யக்ஷிக்கையு மரிதென்கிறார். (௫)

ஈடு ; அவ:—“கீழ்-பகவத்ப்ரகாரமாக வாத்மாவநுஸந்திக்கப் பட்டது ; இதுக்குமேல் நாலுபாட்டு-படகதமான ஸௌக்ல்யத்தைப்பிரித்து நிஷ்கர்ஷக ஸம்பந்தத்தையிட்டு வ்யவஹரிக்குமாபோலே, ‘எம்பெம்மானோடு’ என்கிற பாட்டளவும் கேவலாத்மஸ்வரூபத்தைச்சொல்லுகிறது” என்றெம்பாரருளிச்செய்யும்படி. ஆண்டான், “ப்ரகாரமானவேஷத்திலே சொல்லுகிறது” என்னும். “நின்ற வொன்றை” என்கிறவிதில்-பகவத்ப்ரஸாதத்தாலே நானறிந்த விவ்வாத்மவஸ்து வொருவர்க்குமறியப்போகாது, வருந்தியறிந்தாலும் ஸாக்ஷாத்கரிக்கப்போகிறதன்றென்கிறார்.

(நின்றவொன்றை) * தேஹேந்த்ரியமந:ப்ராணாதிகளிற்காட்டிலந்யமாய், இவையழியுமன்று மழியாதே யேகரூபமாய், இவற்றுக்கு நியந்தாவுமாய், விலக்ஷணமுமான வாத்மாவை. (உணர்ந்தேனுக்கு) ஆராய்ந்தேனுக்கு. “உயர்வறவுயர்நலம்” என்று அவனுடைய கல்யாணகுணங்களிலே யிழிந்தவராகையாலே,இதுக்குமுன்பு மின்மினி போலேயிருக்கிற வாத்மஸ்வரூபத்தில் கண்வைத்திலர் ; பரிகரமும் பக்திரூபாபந்ந ஜ்ஞாநமாகையாலே யித்தை யநுஸந்திக்கைக்குப் போதுபெற்றிலர். (முக்தன் (க) * நோபஜநம்ஸ்மரந் பண்ணுமா போலேயிறே, பகவத்குணப்ரவணனுக்கு மாத்மஜ்ஞாநம் அவிஷயமாயிருக்கும்படி.)இத்தையாராய்ந்தேனுக்கு இதிருந்தபடியென்னென்கிறார். (அதனுண்ணேர்மை) அதினுடைய வைலக்ஷண்யம். (அது இதுவென்று) அநுபூதங்களின்படி யென்றுதல், அநுபவிக்கிறவற்றின்படி யென்றுதலறியப்போகாது.

(ஒன்றுமொருவர்க்குணரலாகாது) (ஒருவர்க்கு-ஒன்றும்-உணரலாகாது) எத்தனையேனு மதிஸயிதஜ்ஞாநர்க்கு மேகதேஸமுமறியப்போகாது. (உணர்ந்துமேலுங்காண்பரிது) (௨) “ஜ்ஞாதம் த்ரஷ்டுஞ்ச தத்த்வேந-ஜ்ஞாதும்த்ரஷ்டுஞ்சதத்த்வேந” என்கிறபடியே யறியப்போகாது, அறிந்தால் பின்னை ஸாக்ஷாத்கரிக்கவும்போகாது.

(சென்றுசென்றுபரம்பரமாய்) போய்ப்போயொன்றுக்கொன்றுமேலாயிருக்கிற. * அந்நமயப்ராணமய மநோமயங்களுக் கவ்வருகாய். (யாதுமின்றித்தேய்ந்தற்று) அவற்றின் ஸ்வபாவங்களொன்று மின்றிக்கே அவற்றோடறத்தேய்ந்தற்று. (நன்றுதீதென்றறிவரிதாய்)

(க) சாந்தோ-அ-௧௨-

(௨) கீதை-௧௧-௫௪

திருவாய்மொழி, அ-ப, அ-தி, கூ-பா, நன்றாய் வ்யாக்யானம். ககூக

தேஹம், தேஹத்திற்காட்டி லிந்த்ரியம், அதிற்காட்டில் மநஸ்ஸு, அதிற்காட்டில் ப்ராணன்'' என்று ஒன்றுக்கொன்று வைலக்ஷண்ய முண்டாகிறாப்போலே, ப்ராக்ருதங்களின்படியால் நன்றென்றும் தீதென்று மறியவரிதாயிருக்கும்; (நன்றாய்) ஸ்வதோவ்யாவ்ருத்த மாய். (ஞானங்கடந்ததே) ஐந்த்ரியிகஜ்ஞாநத்துக்கெட்டாதிருக்கும்; கீழிலவையொன்றுக்கொன்று நெடுவாசியாயிருக்கச்செய்தேயும் ஏக ப்ரமாணகம்யத்வ ஸாம்யமுண்டு; அதுவுமில்லையென்கிறது.

ஆக, இப்பாட்டில் - ஸாங்க்யத்தில் தத்த்வஸங்க்யாநக்ரமத் தாலே ஆத்மஸ்வரூபத்தைச் சொல்லும்படியையும் அதுதன்னை யறிகையிலுண்டான வருமையுஞ்சொல்லிற்று. (ரு)

ஆரும்பாட்டு.

நன்றாய் ஞானம்கடந்துபோய் நல்லிந்திரிய மெல்லாமீர்த்து *
ஒன்றாய்க்கிடந்தவரும்பெரும்பாழ்உலப்பிலதனைஉணர்ந்துணர்ந்து*
சென்றாங்கின்பதுன்பங்கள் செற்றுக்களைந்துபசையற்றால் * அன்றே
அப்போதேவீடு அதுவேவீடுவீடாமே. (சூ)

ப:—அநந்தரம், யோகஶாஸ்த்ரத்வாரா நிஷ்கர்ஷித்து வருந்தி அப ரோக்ஷிக்கப்பட்ட வாத்மாவினுடைய ப்ராப்யரூபத்தை யருளிச்செய் கிறார்.

(இ-ள்.) நன்றாய்-ப்ராக்ருத ஸகல பதார்த்தங்களிலும் ஸங்காரா ஹித்யமாகிற ஶக்தியையுடையராய், ஞானம்-அந்தவிஷயங்களிலே ஸங்கிப்பதான வைஷயிக ஜ்ஞாநங்களையும், கடந்து-தப்பி, போய்-அவ்வருகேபோய், நல்-இந்த ஜ்ஞாநஜநநத்வாரா இவனைத்தப்பாமல் ப்ரவர்த்திப்பிக்கும் நன்மையுடைத்தான, இந்திரியம் - இந்த்ரியங்கள் எல்லாம்-எல்லாவற்றையும், ஈர்த்து - தலையழித்து, ஒன்றாய்க்கிடந்த (க) "[illegible] -திலதைலவத்தாருவஹ்நிவத்'' என்கிறபடியே துர்விவேசமாம்படி சேதநனோடு சேர்ந்துகிடப்பதாய், அரும்-துரத்யயமாய், பெரும்(உ) "[illegible] - அநந்தஸ்ய ந தஸ்யாந்தஸ் ஸங்க்யாநம்வாபி வித்யதே'' என்று தானபரிச்சிந்நமாய், உலப்பில்-கார்யமுகத்தாலே அஸங்

(க) ஶ்ரீரங்ககத்யம்.

யாதமுமாயிருக்கிற, பாழதனை-ப்ரக்ருதிதத்த்வத்தை, ஆத்மாவிற்காட்டி லத்யந்தபஹிர்ப்பூதமாம்படி, உணர்ந்துணர்ந்து - ஶ்ரவணமநநாதிகளால் பலகாலுமுணர்ந்துணர்ந்து, சென்று-போய், ஆங்கு-அந்த ஆத்மவிஷயத்தில், இன்பத்துன்பங்கள்-ப்ராக்ருதமாய் புண்யபாபகார்யமான ஸுக துக்கங்களை, செற்றுக்களைந்து-ஸஹேதுகமாகக் கழித்து, பசை-தத்விஷய வாஸநாருசிகளுமாகிற பசையும், அற்றால் - அற்றால், அன்றே-அந்நாளிலே, அப்போதே-அம்முஹூர்த்தத்திலே, வீடு-ஸகல ஸாம்ஸாரிக தோஷ மோக்ஷம்பிறக்கும், அதுவே-அதுவே, வீடு - ஆத்மாநுபவ மோக்ஷமாகிறது. வீடாமே-பகவத்ப்ரகாரபூதமாய் விலக்ஷணமான வாத்மாநுபவமும் ப்ராப்யாந்தர்க்கதமாகக் குறையில்லை. (௬)

ஆறு:—(நன்றாய்) யோகத்தினாலே ஆத்மஸ்வரூபத்தை ஸாக்ஷாத்கரிக்கையி லருமையென்னென்னில்;

ப்ராக்ருதவிஷயங்களினுடைய வஸ்த்ரத்வாதி தோஷாநுஸந்தாநத்தாலே ரஸயுக்தமாக ஸர்வேந்த்ரியங்களையு மாத்மவ்யதிரிக்த ஸர்வவிஷயங்களினின்றும் நிவர்த்திப்பித்தால், இவ்வாத்மஸ்வரூபம் கைவருவது; ஆகையாலே காண்கை யரிதென்கிறார். (௬)

ஈடு; அவ:—யோகஶாஸ்த்ரத்திற் சொல்லுகிறபடியே இந்த்ரியஜயாதிரூபமான யோகத்தினாலே ப்ரக்ருதிவிநிர்முக்தாத்மஸ்வரூபத்தை துஃகேந ஸாக்ஷாத் கரிக்கலாமென்கிறார்.

(நன்றாய் ஞானங்கடந்துபோய்) வ்யாவ்ருத்தமான நன்மையையுடைத்தாய், இந்த்ரியஜ்ஞாநத்துக்கு விஷயமா யிருக்குமென்று அவற்றை யநுபாஷிக்கிறதென்னவுமாம்; நன்றாயென்கிற விது கிடக்க, ஶப்தாதி விஷயங்களைத் தப்பிப்போயென்னுதல்; "ஜ்ஞாயதஇதி ஜ்ஞாயத இதிஜ்ஞாநம்" என்கிற ப்ரக்ரியையாலே-ஜ்ஞாநமென்கிறது- ஜ்ஞாநத்தால் காணப்படும் விஷயங்களை ஜ்ஞாநஶப்தத்தாலே சொல்லுகிறது. (நல்லிந்திரியமெல்லாமீர்த்து) விஷயங்களைத் தப்பிப்போனாலும், அவையிருந்தவிடங்களிலே மூட்டக்கடவதான ஸாமர்த்யத்தையுடைய விந்த்ரியங்களையுங்கழித்து (ஒன்றாய்க்கிடந்தவித்யாதி) அநாதிகாலம் சேதநனோடு ஸம்ஸ்ருஷ்டமாய்க் கிடப்பதாய், (க) "தைவீஹ்யேஷா குணமயீ - மமமாயா துரத்யயா" என்கிறபடியே ஒருவரால் கடக்க வரிதாய், மஹதஹங்காராத்யவஸ்தைகளாலே பரப்பையுடைத்தாய், போகமோக்ஷங்களை விளைத்துக்கொள்ளலாம்படியாய், ப்ரவாஹரூபத்தாலும் ஸ்வரூபத்தாலும்நித்யமாயிருக்கிற வசித்தத்த்வத்தை; ப்ரக்ருதியை கார்யங்களாயும்காரணங்களாயு மிருக்குமென்னுமிடத்தை மிகவுமுணர்ந்து.

(க) கீதை-எ-கச.

(ஆங்கு-நன்றாய்-சென்று) தன்பக்கல் போக்யதா புத்தியைப் பிறப்பிக்கக் கடவதான விதில் கால்தாழாதே, ஆத்ம ஸ்வரூபத்தை யும் சென்று (இன்பத்துன்பமித்யாதி) அத்தை "த்யாஜ்யம்" என்று விட்டாலும், ஸுகதுக்கங்களுக்கு ஹேதுவான புண்ய பாபகர்மங்கள் கிடக்குமாகில் பின்னையும் கொண்டு மூட்டுமிறே ; அவற்றையும் விட்டு; அவற்றைவிட்டாலும் ருசிவாஸனைகள் கிடக்குமாகில் பின் னையும் கர்ப்பிக்கும் (பசையற்றால்) ருசிவாஸனைகளற்றால் (அன்றே யப்போதே) அக்காலத்திலே அம்முஹூர்த்தத்திலே (வீடு) ப்ராக் ருதி ப்ராக்ருதங்களில் தொடர்றறும்; ப்ரக்ருதியின் தனைசுனையும், ஸௌகுமார்யமுமுடையாரில்லை; தன்பக்கல் த்யாஜ்யபுத்தி பண்ணி னானைத் தானும் முகம்பாராது.

(அதுவேவீடு) (க) "அற்றதுபற்றெனிலுற்றது வீடுயிர்" என்று ப்ராக்ருதங்களில் தொற்றற்றவாறே ஆத்மப்ராப்தி லக்ஷண மோக்ஷமாயிருக்கும்; அதுக்கென்னச்செய்யவேண்டுவதில்லை. (வீடா மே) அவனுக்கு ப்ரகாரமாக வாத்மவஸ்துவையநுஸந்தித்து, அவ் வழியாலே இதுதன்னை ப்ராப்யமாகவிறே இவர்தாம் நினைத்திருப் பது; அவ்வளவுபோகமாட்டாதே, இதின் நன்மையைக்கண்டு இவ் வளவிலே கால்தாழ்வார்க்கும் போந்திருந்ததி ! என்கிறார். தம்மு டைய வுத்தேஶ்யத்தி லேகதேசத்தைப் புருஷார்த்தத்தில் சரமா வதியாகக் கொள்ளுகைபாலேயிறே முன்பிவரித்தைச் சிரித்திரு ந்தது. (௬)

ஏழாம்பாட்டு.

அதுவேவீடு வீடுபேற்றின்பந்தானுமதுதேறி * எதுவேதானும் பற்றின்றியாதுமிலிகளாகிற்கில் * அதுவேவீடுவீடு பேற்றின்பந்தானு மதுதேறாது * எதுவேவீடேதின்பமென்றேய்த்தாரேய்த்தா ரேய்த் தாரே.

ப:—அநந்தரம், உக்தப்ரகாரத்திலே ஆத்மாவலோகநம்பண்ணு தார், தததநுபவவித்தியன்றியே ஸம்ஸரிப்பர்களென்கிறார்.

(இ-ள்) அதுவே-கீழ்பகவத்ப்ரகாரதயா ப்ரஸ்துதனான வாத்மாவி னுடைய வநுபவமே, வீடு-மோக்ஷமாவது, வீடுபேறு-அந்த மோக்ஷலாபத்

(க) க-உ-டு.

தால் வரும், இன்பந்தானுமது-ஆநந்தமுமேயாக, தேறி-நிஷ்கர்ஷித்து எதுவேதானும்-ப்ரக்ருதி ப்ராக்ருதங்களெல்லாவற்றிலும், பற்று-போக்யபோகோபகரண போகஸ்த்தாநரூபேண வருகிறஸங்கம், இன்றி-அற்று, யாதும்-அத்தாலேவந்த ருசிவாஸனைகளும், இலிகளாகிற்கில் - இன்றியிலேயொழியப்பெறில், அதுவே - முன்புதானறுதியிட்ட வாத்மாநுபவமே, வீடு-மோக்ஷமும், வீடுபேறு-மோக்ஷலாபஜநிதமான, இன்பந்தானும்-ஆநந்தமும்,அது-அதுவே,தேருது-இப்படி பகவதாத்மகமாக வாத்மாவை நிஷ்கர்ஷிக்கமாட்டாதே,எது-எது, வீடு-மோக்ஷம் இன்பம் அத்தால்வரும் ஸுகம், எது-எது, என்று-என்று,எய்த்தார்-சித்ததௌர்ப்பல்யம்பிறந்தவர்கள், எய்த்தாரெய்த்தாரே-கர்ப்பநரகங்களிரண்டாலு மெய்த்தேவிடுவர்கள். (எ)

ஆறு:—(அதுவேவீடு) இந்தவாத்ம ஸ்வரூபாவிர்ப்பாவமே மோக்ஷமாகிறது, மோக்ஷம்பெற்றால் பெறும் ஸுகமாவது மதுவேயென் றத்யவஸித்துக்கொண்டு வ்யதிரிக்தவிஷய ஸங்கத்தை யெல்லாம் விடில், ஆத்மஸ்வரூபாவிர்ப்பாவலக்ஷணமாயிருந்த மோக்ஷம் கைவரும், இப்படிச் செய்யாதார்க்குக் கைவாராது, அவர்கள் ஸம்ஸரித்தேபோமித்தனையென்கிறார். (எ)

ஈடு ; அவ:—கீழ்ச்சொன்ன வுபாயத்தின்படியே அவ்வஸ்துவை ப்ராபிக்கமாட்டாதே அதிலே ஸம்ஸயமநுவர்த்திக்குமவர்கள் உருவக்லேசப்பட்டே போமித்தனையென்கிறார்.

(அதுவேவீடு) கீழ்ச்சொன்னவதுவே ஆத்ம ப்ராப்திலக்ஷண மோக்ஷமாகிறது. (வீடுபேற்றின்பந்தானுமது) அம்மோக்ஷத்தை ப்ராபித்தால்வரும் ஸுகமுமதுவே (தேறி) இப்படிதெளிந்து (எதுவேதானும்பற்றின்றி) ப்ரக்ருதிப்ராக்ருதங்களிலுண்டான தொற்றற்று (யாதுமிலிகளாகிற்கில்) அதில் ருசிவாஸனைகளுமறப்பெறில் கர்மத்தை யநுஷ்டித்து ஜ்ஞாநத்தையுடையனாய், *ஸ்த்திதப்ரஜ்ஞாக்யாவஸ்த்தைபிறந்து, யோகமும் தலைநின்று, ஆத்மஸாக்ஷாத்காரம்பண்ணப்பெறில்.

(அதுவேவீடு) கீழ்ச்சொன்ன வாத்மப்ராப்தியேமோக்ஷம் (வீடுபேற்றின்பந்தானுமது)மோக்ஷஸித்தியில்வரும்ஸுகமு மந்தவாத்மாநுபவம், (தேருது) இப்படி தெளியமாட்டாதே. (எதுவேவீடேதின்பமென்றெய்த்தார்) மோக்ஷமாகிறதேது, மோக்ஷ ஸுகமாகிறதே

திருவாய்மொழி, அ-ப,° அ-தி, அ-பா, எய்த்தார் வ்யாக்யானம் ககூ ருி

தென்றிளைத்தவர்கள். (எய்த்தாரெய்த்தாரே) இளைத்தாரிளைத்தாரென்று உருவக்லேசப்பட்டேபோமித்தனை; நிராஸ்ரயமாக வாத்மஸ்வரூபத்தை யநுஸந்திக்கை நிஷ்ப்ரயோஜநமென்கை. (எ)

எட்டாம்பாட்டு.

எய்த்தா ரெய்த்தா ரெய்த்தாரென்றில்லத்தாரும் புறத்தாரும் மொய்த்து * ஆங் கலறிமுயங்கத்தாம் போகும்போது * உன்மத்தர் போல் பித்தேயேறியனுராகம் பொழியும்போதெம்பெம்மானோ டொத்தே சென்று * அங்குள்ளங்கூடக்கூடிற்றாகில்நல்லுறைப்பே.

ப:—அநந்தரம், கீழுக்தமான ப்ரக்ரியையாலே ஆத்மப்ராப்திகாமனுக்கு ததவலோகந ரூபமான ஸாதநம்கைப்பட்டாலும், பகவத்விஷயமான வந்திமஸ்ம்ருதியுண்டாகிலு மாயிற்று ப்ராப்தி ஸித்திப்பதென்கிறார்.

(இ-ள்.) எய்த்தார்-அவயவங்கள் வ்யாபாரக்ஷமமல்லாதபடி யிளைத்தார் - எய்த்தார்-இந்த்ரியங்கள் விஷயக்ரஹண ஸமர்த்தங்களாம்படியிளைத்தார். எய்த்தார் - ஸ்வாஸமும் மந்தீபவிக்கும்படி யிளைத்தார். என்று-என்று, இல்லத்தாரும்-க்ருஹத்தில் பார்யா புத்ரப்ருத்யாதிகளும் புறத்தாரும்-புறம்புள்ள ஸம்பந்திபாந்தவப்ரப்ருதிகளும், மொய்த்து-திரண்டு. ஆங்கு-அவ்வவஸ்தையிலே, அலறி-இரியக்கூப்பிட்டு. முயங்க-மேல் விழ(க) "தவ — த்வய — ந்தஸ்ய — வ்யாஸக்தநவநாம் - தம் புத்ரபஶுமித்ரார்த்தவ்யாஸக்த மநஸந்நரம்" என்றிவர்கள் பக்கலிலே நெஞ்சைவைத்து, யமபடரேவழித்துணையாக, தாம் - தாம் போகும் போது-போமவஸ்தையிலே. உன்மத்தர்போல்-உந்மாதங் கொண்டாரைப்போலே, பித்தேயேறி-நெஞ்சுகலங்கி (உ) "ஸ தேக்ஷம் ஸவிஷ்ரேதி-ஏதேகதம்பவிஷயந்தி" என்று. இவற்றின் பக்கல்மமதையாலே, அனுராகம்-அநுராகம், பொழியும்போது-அபிவர்த்திக்கும் காலத்தில் இக்கலக்கமற்றுத் தெளிவுபிறந்து, எம்பெம்மானோடொத்தேசென்று-என்னுடைய னாவீஸ்வரனிவனைத்தனக்கு சேஷமென்று நினைத்திருக்குமாபோலே, இவனும் தன்னை அவனுக்கு ஶேஷமாகவநுஸந்தித்து அங்கு-அவன்பக்கலிலே, உள்ளம்-தன் னெஞ்சு, கூடக்கூடிற்றாகில் சென்று கூடப்பெற்றதாகில், நல்-நல்ல, உறைப்பு உறுதி.

தத்ப்ரகாரபூதனான ஆத்மாவை லபித்ததாகலாம்; இப்படி துஸ்ஸஹமான ஆத்மாவலோகநத்தையிறே யெனக்கெளிதாக ப்ரகாஶிப்பித்ததென்று கருத்து.

ஆறு:—(எய்த்தாரெய்த்தார்) இவ்வாத்ம ஸ்வரூபாவிர்ப்பாவ லக்ஷணமோக்ஷமானது இந்த்ரியஜயமாத்ரத்தாலே கைவாராது, அந்திமதசையிலே பகவத்ஸமாராதநாத்மாநு ஸந்தாநமும் வேண்டுமென்கிறார். (அ)

ஈடு; அவ:—இப்படி துஸ்ஸம்பாதமான ஜ்ஞாநம் கைவந்தாலும், அந்திமஸ்ம்ருதியில்லையாகில் செய்ததெல்லாம் வ்யர்த்தமென்கிறார்.

(எய்த்தாரெய்த்தாரெய்த்தாரென்று) இவனுக்கு உத்க்ரமணதசை பிறப்பதற்குமுன்னே இவன் முடிகை யிஷ்டமாயிருக்கையாலே, "முடிந்தான், முடிந்தான்" என்று பலகாலுஞ் சொல்லாநிற்பர்களாயிற்று; இவன் கலங்கினதசையிலே நெஞ்சைத் தெளிவித்து உத்தேஶ்ய வஸ்துவை யநுஸந்திக்கவல்லனும்படி பண்ணுகையன்றிக்கே, "முடிந்தான், முடிந்தான், முடிந்தான்" என்கிற வித்தையே சொல்லாநிற்பர்களாயிற்று (இல்லத்தாரும் புறத்தாரும்) இவன்றானுள்ளநாளில் இவர்களுக்கொன்றும் கொடாமையாலே, "இவனும் இதொருநடுவிற் பெருங்குடியுமென், இவன் முடிந்து உள்ள த்ரவ்யத்தை நாமே விநியோகங் கொண்டாலாகாதோ" என்றிருப்பர்கள் பார்யாதிகள் (புறத்தாரும்) அவனுமிவர்களுமான ஸமுதாயம் பொறாமையாலே "போகவமையும்" என்றிருப்பர்கள் புறம்புள்ளார் (மொய்த்து) கல்யாணத்துக்கழைத்தாலும் வாராதவர்கள், து:கமுண்டானவாறே தாங்களேவந்து மேல்விழுவர்கள்.

(ஆங்கலறி) இவனுக்குள்ளதெளிவும் போம்படி கூப்பிடாநிற்பர்கள்; மீளுகைக்கு ஶங்கையுண்டான தசையிலே, பயத்தாலே ப்ராணன்போம்படி கூப்பிடுவர்கள். (முயங்க) கட்டிக்கொள்ள; கூப்பீட்டுக்குப்போகாத குறைப்ராணன்களும் போம்படி, ஸ்நேஹிகளைப்போலே மேலேவிழுந்து கட்டிக்கொள்வர்கள். (தாம்போதும்போது) "இவர்களையு மிவ்வைஶ்வர்யத்தையும் விட்டுப்போகா நின்றோம்" என்று நெஞ்சிங்கேயிழுக்க, தன்னால் மீளவொண்ணாமையாலே, ஶரீரத்தைவிட்டுத் தாங்களேபோகாநிற்பர்கள். (தாம்போதும்போது)

என்கிறார்காணு மப்போதைக்லேசத்தைப்பற்ற. (உன்மத்தரித்யாதி) வித்தராகருங்கூட, உந்மாததசையிற்போலே யறிவுகெட்டு, தெளிவு பிறந்து தன்னையும் ஸர்வேஶ்வரனையு மநுஸந்திக்கவேண்டும் தசையிலேகலங்கி (அனுராகம்பொழியும்போது) இளையாளையும் பொன்னையும் பூட்டிக்கொடுவந்து முன்னேநிறுத்துவர்கள்; புத்ராதிகள்பக்கல் ஸ்நேஹியாத நாளைக்கும் போரஸ்நேஹிக்கத்தொடங்கும். ஜீவிக்கும்நாள், லோபத்தாலே யிவற்றுக்கொன்றும்செய்யான்; இப்போதாக, "புதைத்துவைத்ததநத்தை யாபரணமாகப்பூட்டிக் காணப் பெற்றிலோம்" என்று மதகுதிறந்து ஸ்நேஹிக்கும்.

(எம்பெம்மானோடொத்தேசென்றித்யாதி) இப்படி கலங்குகிற ஸமயத்திலே தெளிவுண்டாய், தன்னையுமவனையு மநுஸந்தித்து, "அவனோடொத்த ஸாத்திகையுமிதுடைத்து" என்றநுஸந்திக்கையாகிற விவ்வர்த்தம் கூடிற்றாகில். "அவ்வஸ்துவும் ஜ்ஞாநாநந்தலக்ஷணமாயிருக்கும், இவ்வஸ்துவும் ஜ்ஞாநாநந்த லக்ஷணமாயிருக்கும்" என்றநுஸந்திக்கும்படி அவ்வாத்மவஸ்துவிலே ஹ்ருதயம் சேருகையாகிறவர்த்தம் கூடுமாகில் (நல்லுறைப்பு) நல்லவாய்ப்பு (ஆத்மப்ராப்திஸித்திக்கும்)அல்லாதபோது, செய்ததெல்லாம் வ்யர்த்தம்; உன்மத்தர்போல் பித்தேயேறில் அபிமதம் ஸித்தியாது; அனுராகம் பொழியில் ஆதிபாதனைப்போலே மாறுய்ப்போமித்தனை.

ஆண்டான்பணிக்கும்படி -"நின்றவொன்றையுணர்ந்தேனுக்கு என்னும்பாட்டுத்தொடங்கி, நிஷ்க்ருஷ்டாத்மாநுஸந்தாநமாத்ரமேயன்றிக்கே, பகவச்சேஷத்வ பர்யந்தமாக வநுஸந்திக்கிறது; இப்பாட்டில் 'எம்பெம்மானோடொத்தே சென்றங்குள்ளங் கூடக்கூடிற்றாகில்' என்கிற வந்திமஸ்ம்ருதியும், எம்பெருமான் தனக்கு ஶேஷமாக விவ்வாத்மவஸ்துவை நினைத்திருக்குமாபோலே, இவனுமவனோடொத்து அவன்நினைவோடொத்து அத்தசையிலே ஶேஷத்வாநுஸந்தாநம் கூடுமாகில் நல்லவாய்ப்பு" என்று, பகவத்குணங்களிலே வித்தராயிருக்கிறவிவரிதெல்லா மநுஸந்திக்கிற தென்னென்னில்; "இப்படியரிதாயிருக்கிற வித்தைக்கிடீர்! எனக்குக் காட்டித்தந்தது" என்று அவன் பக்க லுபகாரஸம்ருதியாலே. (அ)

ஒன்பதாம்பாட்டு.

கூடிற்றாகில் நல்லுறைப்புக்கூடாமையைக்கூடினல்* ஆடற் பறவை யுயர்கொடியெம்மாயனவததுவதுவே * வீடைப்பண்ணி யொருபரிசேயெதிர்வுநிகழ்வுங்கழிவுமாய் * ஓடித்திரியு மியோகிகளுமுளருமில்லையல்லரே.

ப:—அநந்தரம். இப்படி ப்ரகாரதயா ப்ராப்தியின்றியே ஸ்வரூபைக்யம் மோக்ஷமென்கிற குத்ருஷ்டிபக்ஷம் அஸம்பவக்ரஸ்தமென்று அதிக்ஷேபிக்கிறார்.

கூடிற்றாகில்-நித்யஸம்ஸாரியான ஜீவஸ்வரூபம் நிரதிசய விலக்ஷண ப்ரஹ்மஸ்வரூபமாகக் கூடுமாகில், நல்-நல்ல, உறைப்பு-பெறுப்பேறன்றோ; கூடாமையை-லோகத்தில் கூடாமையே வடிவாயிருக்கிற ஸஹஸ விஷாணாதிகளை, கூடினல்-லபிக்கப்பெற்றதாகிலிறே, அது-அந்த ஜீவவஸ்து, நிர்த்தோஷப்ரமாண வேதமயனாய், ஆடல்-பகவத்ப்ராத்யாஸத்தியாலே தர்ஸநீயகதியான, பறவை-பெரியதிருவடியை, உயர்கொடி-ஸ்வவைலக்ஷண்ய ப்ரகாஸகமான உச்ச்ரிதத்வஜமாகவுடைய, எம்-ஆஸ்ரிதாநுபாவ்யமான, மாயனவது-ஆஸ்சர்யஸ்வரூப ரூபகுணங்களை யுடையனான ஸர்வேஸ்வரனாய்விடுவது, அதுவே-அந்தஜீவவஸ்துதானே யாமத்தனை; த்ரவ்யம் த்ரவ்யாந்தரமாகை அஸம்பாவிதமிறே, ஆனவிதுக்கு மூலமென்னென்னில்; ஒருபரிசே-ஸ்வபுத்திமர்யாதையா யிருப்பதொருபடியாலே அப்ரமாணமாக, வீடை-மோக்ஷத்தை, பண்ணி-கல்பித்து எதிர்வும்-மேல்வரும்காலத்தோடு, நிகழ்வும்-இப்போது வர்த்திக்கிற காலத்தோடு, கழிவும்-முன்பு கழிந்தகாலத்தோடு வாசியற, ஆய்-ஒருபடிப்பட்ட வுள்ளராய், ஓடி-(க) "ஸம்ஸார வஹ்னிஸம்ஜ்ஞ-ஸம்ஸாரபதவீம்வ்ரஜந்" என்று ஜங்காலராயோடி, திரியும்-திரியக்கடவ, யோகிகளும்-யோகிகளும், உளரும்-உண்டாயிருக்கும், அநாதியானகர்ம ஜநிதயான ஸம்ஸாரப்ரவாஹத்தில், இல்லையல்லரே-இல்லாதாரில்லையிறே.

ஏவம்வித மஹாயோகிகளும் ஸம்பாவித மென்றதிக்ஷேபித்தாராயிற்று. (௯)

ஆறு:—(கூடிற்றாகில்) பரமபுருஷ ஸமாநாகாரதயா ஆத்மஸ்வரூபமநுஸந்தேயமென்று சொல்லுவானென், தத்பிந்நமன்றோவென்னில்;

(க) வி-பு-௯.

பரமபுருஷனுக்கு மிவ்வாத்மாவுக்கு மைக்யங்கூடுவது பாவா பாவங்களுக் கைக்யங்கூடிலன்றோ; ஆதலால் அவனுமவனே, இவனுமிவனே, அவனிவனாகக்கூடாது. இங்ஙனே யிவற்றைச் சொல்லுவார் சிலருளரோவென்னில்; ஸ்வமதி பரிகல்பித நிர்மூலாத்வைதவாதிகளான குத்ருஷ்டிகளென்று முளரென்கிறார். (௯)

ஈடு; அவ:—அந்திமஸம்ருதியிலே ஜீவபரபேதம் ப்ரஸ்துதமானவாறே, இந்த பேத மபரமார்த்தம், தத்த்வஜ்ஞாநம் பிறந்தவாத்மாவும் ப்ரஹ்மாவு மொன்றென்று கொண்டு நித்ய ஸம்ஸாரியான சேதநனையே ப்ரஹ்மமாகச் சொல்லுகிற மாயாவாதிகளை க்ஷேபிக்கிறார்.

(கூடிற்றாகில் நல்லுறைப்பு) அநுபாஷணம் (கூட்டாமையித்யாதி) ஶஶவிஷாணமாதல், ககநகுஸுமமாதல், வந்த்யாஸுதனாதல் அநுபபந்நமானவை கூடுமாகில், "ஸர்வேஶ்வரவாஹநம்" என்னும் ஹர்ஷப்ரகர்ஷத்தாலே யாடாநின்றுள்ள பெரியதிருவடியை த்வஜமாகவுடையவனாய், ஆஶ்சர்யமான குணசேஷ்டிதங்களை யுடையனாய் பெரியதிருவடி திருத்தோளிலே பின்பும் பிரகுவாளியுமாய் ஸம்ஸாரிசேதநனிருப்பது (அதுவதுவே) அவ்வஸ்துவவ்வஸ்துவே; வஸ்து வஸ்த்வந்தரமாகாதிறே.

நித்யஸித்தர்க்கு மவ்வருகாக ஸம்ஸாரிசேதநரைச் சொல்லுவாரும் சிலருண்டோவென்ன (வீடைப்பண்ணியொருபரிசே) (ஒருபரிசே-வீடைப்பண்ணி) ஶாஸ்த்ரமூலமாகவன்றிக்கே, அவித்யா நிவ்ருத்தியே மோக்ஷமென்று ஸ்வபுத்தியாலே யொன்றைக்கட்டி. (எதிர்வும் நிகழ்வும் கழிவுமாய்) பூதபவிஷ்யத்வர்த்தமாந காலத்ரயத்திலுமுளராய் (ஓடித்திரியும் யோகிகளுமுளரும்) நிஷ்ப்ரயோஜநமாகத் தட்டித் திரியும் மஹாயோகிகளுமுளர், (இல்லையல்லரே) இல்லாமையில்லை; காலஜநாதி, பண்ணிவைக்கும் பாபங்களுக் கெல்லையில்லை. இப்படி இருப்பார் சில மஹா புருஷர்களுண்டாகக்கூடாதோ; ஸம்ஸாரத்தில் கூடாததுண்டோ. (௯)

பத்தாம்பாட்டு.

உளருமில்லையல்லரால் உளராய் இல்லையாகியே * உளரேம் மொருவரவர்வந்து என்னுள்ளத்துள்ளே உறைகின்றார் * வளரும் பிறையும் தேய்பிறையும்போல அசைவும் ஆக்கமும் * வளருஞ் சுடரும் இருளும்போல் தெருளும்மருளும்மாய்த்தோமே. (௧௦)

ப:—அநந்தரம், ஏவம்விதமான வாத்மஸ்வரூபத்தை ப்ரகாஶிப்பித்து, பாஹ்ய குத்ருஷ்டி மதங்களில் கைகழலாதபடி யென்னெஞ்சிலே அவன் புகுந்திருக்கையாலே, என்னுடைய ஸாம்ஸாரிக க்லேஶமெல்லாந் தீர்ந்தேனென்கிறார்.

(இ-ள்.) இல்லை-ஆஶ்ரிதவிஷயத்தி லில்லையென்கிற சொல்லுக்கு அல்லராய் - விஷயமல்லராய்க்கொண்டு, உளரும் - என்றுமுளருமாய், இல்லையாகியே-அநாஶ்ரித விஷயத்திலில்லையாயே, உளராய்-உளராமவர், எம்-எங்களுக்குஸ்வரூபரூபகுணவி சிஷ்டராய்க்கொண்டு, ஒருவர்-அத்விதீயராய், உளர்-ப்ரகாஶிப்பித்தார். அவர்-அவர்தாமே, வந்து-அபிநிவிஷ்டராய்வந்து, என்-என், உள்ளத்துள்ளே-நெஞ்சுக்குள்ளே, உறைகின்றார்-நித்யவாஸம்பண்ணுநின்றார். அத்தாலே, வளரும்-வளரும், பிறைபோல-பிறைபோலேயிருக்கிற, ஆக்கமும்-ஆக்கத்தையும், தேய்பிறையும்போல-தேய்பிறைபோலேயிருக்கிற, அசைவும்-அழிவையும், வளரும் சுடரும்போல்-அபிவ்ருத்த தேஜஸ்ஸையுடைய வாதித்யனைப்போலும், தெருளும்-ஜ்ஞாநத்தையும், இருளும்போல்-அந்தகாரம்போலேயிருக்கிற, மருளும்-அஜ்ஞாநத்தையும் மாய்த்தோம் நஶிப்பித்தோம்.

ஔபாதிக வ்ருத்திக்ஷயங்களும் ஜ்ஞாநாஜ்ஞாநங்களும்போய் ஏகரூப ஸ்வபாவனான வாத்மாவை தர்சிக்கப்பெற்றோம் நாமென்றுகருத்து

ஆறு:—(உளரும்) இப்படி தார்த்தர்ஶமாய், பகவச்சேஷைகரஸமாய், விலக்ஷணமுமான வாத்மஸ்வரூபத்தை, வ்ருத்தஸம்ஶ்லேஷஸ்த்தைர்யார்த்தமாக, கேவலம் க்ருபையாலே யெனக்குக்காட்டித் தந்தருளினனிப்போது; முன்பு, இஸ்ஸம்ஶ்லேஷஸ்த்தைர்யார்த்தமாக, * நிரவதிகஸௌந்தர்ய ஸௌகந்த்ய ஸௌகுமார்ய லாவண்ய யௌவநாத்யநந்தகுண விஶிஷ்டனாய், அஸங்க்யேய கல்யாண திவ்யபூஷண திவ்யாயுதோபேதனான தன்னைக்காட்டிக்கொண்டென்னுள்ளே புகுந்தருளினன்; நிரீஶ்வரஸாங்க்ய குத்ருஷ்டிகளில் நான்புகாதபடி தன்னைக்காட்டிக்கொண்டிருந்தருளினன்; ஆதலால், அநர்ஹதாநுஸந்தாந ஜ்ஞாநாஜ்ஞாந வ்ருத்திக்ஷயாதி பகவதநுபவ விரோதிகளெல்லாம் போக்கினேனென்கிறார். (௧௦)

ஈடு; அவ:—ஸாங்க்யாதி குத்ருஷ்டிகளில் நான் புகாதபடி தானே ஸ்வயம்வரித்து, நினைவுக்கு வாய்த்தலையான மநஸ்ஸிலே நித்யவாஸம்பண்ணுகையாலே, என்னுடைய ஸகல துரிதங்களும் போயிற்றென்கிறார்.

(உளருமில்லையல்லராய்) "ஈஶ்வரனென்பானொருவனுளன்; இல்லையென்னவொண்ணாதே அஸ்திமாத்ரமாயிருக்கும்" என்று ஸேஶ்வரஸாங்க்யமதம். விநிவேஷக்ஷமனன்றிக்கேயிருக்கும் பர்த்தாவைப்போலே, ஈஶ்வரனாகிறான் ஜகந்நியமநக்ஷமனன்றிக்கே ஸத்பாவமாத்ரமேயாயிருக்குமென்கை. (உளராயில்லையாகியே) "இல்லையாகியேகாண் அவனுடைய வுண்மை" என்னும் நிரீஶ்வரஸாங்க்யன்; அந்தப்பக்ஷங்களை நிரஸிக்கிறார். அன்றிக்கே, ஆஶ்ரிதாநாஶ்ரிதவிஷயமாக்கி, இல்லையல்லராயுளராயிருப்பர் ஆஶ்ரிதர்க்கு; இல்லையாகியே யுளராயிருப்பர் அநாஶ்ரிதர்க்கு.

(உளரெம்மொருவர்) குணவிபூத்யாதிகளால் பரிபூர்ணராய்க்கொண்டுஉளராய், அவற்றைக்காட்டி யென்னை விஷயீகரித்த வத்விதீயர்; (அவர்வந்தென்னுள்ளத்துள்ளேயுறைகின்றார்) குணாதிகரானவவரென்னளவும்வந்து, * மயர்வறமதிநலமருளித் தாம்திருத்தின நெஞ்சிலே நித்யவாஸம்பண்ணுகின்றார். (வளருமித்யாதி) தீபஸந்நிதியிலந்தகாரம் நில்லாதாப்போலே, அவரென் ஹ்ருதயத்திலே நித்யவாஸம்பண்ணுகையாலே, சந்த்ரனுக்குப்போலே மாறிமாறி வரக்கடவதான வ்ருத்திக்ஷயங்களும், ஆதித்யனு மந்தகாரமும் போலே மாறிமாறிவரக்கடவதான ஜ்ஞாநாஜ்ஞாநங்களும் மாய்க்கப்பெற்றோம். (௧௦)

பதினொன்றாம் பாட்டு.

தெருளும் மருளும் மாய்த்துத்தன்திருந்து செம்பொற்கழலடிக்கீழ் * அருளியிருத்துமம்மானு மயனுஞ்சிவனும் * திருமாலால் அருளப்பட்டசடகோபனோராயிரத்துளிப்பத்தால்* அருளியடிக்கீழிருத்தும் நம்மண்ணல் கருமாணிக்கமே.

ப:— அநந்தரம், இத்திருவாய்மொழிக்குப் பலமாக பகவத்ப்ராப்தியை யருளிச்செய்கிறார்.

(இ-ள்.) தெருளும் மருளும்-ஸாம்ஸாரிகமான ஜ்ஞாநாஜ்ஞாநங்களை, மாய்த்து-போக்கி, தன்-ஆஶ்ரிதரைத் தானேயங்கீகரிக்கும், திருந்து-திருத்தத்தையுடைத்தாய், செ-சிவந்த, பொன்-பொன்னை, கழல்-வீரக்கழலையுடைய, அடிக்கீழ்-திருவடிகளின்கீழே, அருளி-"அடி

க்கீழமர்ந்து புகுந் தடியீர்வாழ்மின்'' என்றருளி, இருத்தும் - புறம்பு போகாதபடி யிருத்தும், அம்மானும்-ஸ்வாமியாம், அயனும் சிவனும்-ஜகத்ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்களுக்குக்கடவ ப்ரஹ்மருத்ராதிகளுக்கு மந்தராத்மபூதனான, திருமாலால்-ஸ்ரிய:பதியாலே, அருளப்பட்ட-*மயர்வற மதிநல மருளப்பட்ட, சடகோபன்-ஆழ்வாருடைய, ஓர்-அத்விதீயமான, ஆயிரத்துள்-ஆயிரந்திருவாய்மொழியில், இப்பத்தால்-இப்பத்துநிமித்தமாக, நம்-நம்முடைய, அண்ணல்-ஸ்வாமியாய், கருமாணிக்கம்-நீலரத்நம்போலே யிருக்கிற திருநிறத்தையுடையவன்; அருளி-நிரவதிகக்ருபையையப்பண்ணி, அடிக்கீழ்-தன் திருவடிகளின் கீழே; இருத்தும்-இருத்தும்.

இதுவும்-அறுசீராசிரியவிருத்தம். (கக)

ஆறு:—(தெருளும்) சதுர்முக பசுபதி ப்ரப்ருதி ஸர்வாத்மாக்களுக்கும் நியந்தாவாய், ஸ்ரிய:பதியாயிருந்து வைத்து, ப்ராக்ருத விஷய ஜ்ஞாநாஜ்ஞாநாதி ஸ்வாநுபவ விரோதிகளைப் போக்கி, ஸ்வாஸ்ரிதரைத் தன்திருவடிகளிலே சேர்விக்கும் ஸ்வபாவனாயிருந்த வெம்பெருமானுடைய வருளுக்கே பாத்ரமான சடகோப னோராயிரத்து ளிப்பத்தும் வல்லாரை யருளியவனடிக்கீழிருத்து மென்கிறார். (கக)

ஈடு; அவ:—நிகமத்தில்-இப்பத்தும் கற்றாரை, தம்மை விஷயீகரித்தாப்போலே விஷயீகரித்துத் தன் திருவடிகளின்கீழே வைத்துக்கொள்ளுமென்கிறார்.

(தெருளும்மருளும்மாய்த்து) ப்ரஹ்மாவின் ராஜஸப்படியாகவந்த குத்ருஷ்டிஜ்ஞானமானதும், ருத்ரன் தாமஸஜ்ஞான மடியாகவந்த வாகமாதி பாஹ்யஜ்ஞாநமான வஜ்ஞாநமும் மாய்த்து. ஸ்வாநுபவ விரோதியான ப்ராக்ருதவிஷய ஜ்ஞாநாஜ்ஞாநங்களை வாஸனையோடே போக்கி, (தன்திருந்து செம்பொற்கழலடிக்கீழ்) ஆஸ்ரிதரை வேறொருவர் காலில் குனியவிடாததாய், ஸ்ப்ருஹணீயமாய், வீரக்கழலையுடைத்தான திருவடிகளின்கீழே, இப்போதை வீரக்கழல், பிராட்டி முன்னாக வாஸ்ரயித்தாரைத் தன் கையிலும் பிறர்கையிலுங் காட்டிக்கொடாதவீரக்கழல், (அருளியிருத்தும்) கேவல க்ருபையாலே யிருத்தும்.

(அம்மானுமயனும் சிவனும் திருமாலால்) ப்ரஹ்மருத்ரப்ரமுக ரான ஸர்வாத்மாக்களுக்கும் நிர்வாஹகனாய், ஸர்வேஶ்வரனை ஸரி யஃபதியாலே, "மயர்வற மதிநலமருளினன்" என்கிறபடியே (அரு ளப்பட்டசடகோபன்) அருளுக்கு விஷய பூதரான ஆழ்வார், இவ் வருளுக்கு வாய்த்தலை பிராட்டியென்கை (ஓராயிரத்துளிப்பத்தால் நம்மண்ணல் கருமாணிக்கமே-அருளியடிக்கீழிருத்தும்) ஸர்வ நிர் வாஹகனாய், ஸ்ப்ருஹணீயமான வடிவழகையும் குணங்களையு முடை யனான ஸர்வேஶ்வரன் தானேயருளித் தன் திருவடிகளின்கீழே சேர்த்துக்கொள்ளும், இத்திருவாய்மொழியப்யஸித்தார்க்குத் தாம் பெற்ற பேறென்கிறார். (கக)

ஆழ்வார் திருவடிகளேசரணம்.

திருவாய்மொழி எட்டாம்பத்து

எட்டாம் திருவாய்மொழி

முற்றிற்று.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

எட்டாம்பத்து.

ஒன்பதாந்திருவாய்மொழி.

கருமாணிக்கமலை-ப்ரவேஶங்கள்.

ஆறு:—(கருமாணிக்கமலை) எம்பெருமான் நிர்ஹேதுகமாகத் தன்னழகைக்காட்டித் தம்மை வசீகரித்துக்கொண்டு, தம்மோடு கலந்தருளின கலவியால் தமக்குவந்த நிர்வ்ருதியை அந்யாபதேசத்தாலே பேசுகிறார். *

ப:—ஒன்பதாந்திருவாய்மொழியில், கீழ்- "ஸௌந்தர்யஶீலாதி விசிஷ்டனான ஸர்வேஶ்வரனுக்கு பரிஶுத்தாத்ம ஸ்வரூபமானது ப்ரகாரதயா ஶேஷம்" என்றுதெளிந்தவர், அந்தஶேஷபூதனான வாத்மாவினுடைய ததேகரக்ஷ்யத்வ ததேகபோக்யத்வங்களை ப்ரதிபாதிப்பதாக, ஶேஷியினுடைய அவயவஶோபையையும், ஆபரண ஶோபையையும், அநிஷ்ட நிவர்த்தகத்வத்தையும், குணவத்தாதிஶயத்தையும், அபரிச்சிந்ந விபூதியோகத்தையும், ஔதார்யோத்கர்ஷத்தையும், ப்ரணயித்வாதிஶயத்தையும், ஸர்வகர்ம ஸமாராத்யதையையும், ஸர்வவேதப்ரதிபாத்யதையையும், ஆஶ்சர்யாவஹத்வத்தையு மநுஸந்தித்து; ஏவம்ப்ரகார விசிஷ்டனாய்த் திருப்புலியூரிலெழுந்தருளியிருக்கிற ஸர்வேஶ்வரனுடைய வநுபவத்திலே யவகாஹித்து ஹ்ருஷ்டரான விவருடைய ரூபாதி வைலக்ஷண்யத்தைக்கண்ட பரிவர்தொடக்கமான பார்ஶ்வஸ்தர், இந்தவைலக்ஷண்யத்திலே ஜிஜ்ஞாஸுக்களாக;

ஸுஹ்ருத்பூதரானவர் அவர்களுக்கறிவித்த பாசுரத்தைத் திருப்புலியூரில் நாயனாருடனே யியற்கையிலே புணர்ந்த நாயகியினுடைய வேறுபாடுகண்டு "ஸம்ஶ்லேஷப்ரவ்ருத்தம்" என்றறிந்த தோழியானவள்; இதறியாதே, இவளுடைய * பதிஸம்யோக ஸுலபமான பருவத்தைக்கண்டுபந்துக்கள்வேறே மணமுரசறைவிக்க; "நாயகிக்கிது அஸஹ்யம்" என்றறிந்து விலக்குவதாக வுத்யோகித்து, இவளுடைய வுக்திப்ரகாரத்தாலும் வடிவில்வேறுபாட்டாலும் நிரூபித்தறிந்தாளாக: பந்துக்களைக்குறித்து, "இவள் திருப்புலியூர் நாயனாருடைய குணநாமங்களையே பலகாலும் பேசாநின்றாள்; இவளுக்கங்கே பாவபந்தமுண்டாகக்கூடும்,

அவனாகிறான்-இவளுக்குத் தகுதியாம்படி அபிரூபனாய், அலங்காரவிசிஷ்டனாய், ஆண்பிள்ளையாய், அதிசயிதகுணனாய், ஐஶ்வர்யயுக்தனாய், அத்யுதாரனாய், ப்ரணயியாய், ஆசாரஸ்த்தனாய், வேதவித்க்ரேஸரனாய், ஆஶ்சர்யபூதனாயிருப்பானொருவன்; ஆதலால், இவள்வடிவில் அநந்யதாஸித்தமான ஸம்ஶ்லேஷஸூசக சிஹ்நங்களுண்டாகையாலும், அவனுக்கே யிவளாம்" என்றறத்தோடு நின்றுரைத்த பாசுரத்தாலே யருளிச்செய்கிறார். *

ஈடு; அவ:—கீழ்த் திருவாய்மொழியில், முதலிரண்டரைப் பாட்டாலே, அவனுடைய ஸௌந்தர்ய ஶீலாதிகளை யநுஸந்தித்து, அவற்றோபாதி விலக்ஷணமுமாய் அநந்யார்ஹமுமாயிருக்கிற வாத்மஸ்வரூபத்தைக் குறைப்பாட்டாலே யநுஸந்தித்தினியரானார்; அந்த போஷத்வரஸத்தாலே ப்ரீதராய், ப்ரீதிபாரவஶ்யத்தாலே தாமான தன்மையழிந்து ஒருபிராட்டிதசையை ப்ராப்தராய், ஸ்வதசையை அந்யாபதேசத்தாலே பேசியினியராகிறார்.

"ப்ரீதியி லந்யாபதேசமுள்ளது இத்திருவாய்மொழி யொன்றமே" என்றாழ்வான் நிர்வஹிக்கும்படி; திருப்புலியூரி லெம்பெருமானோடே யியற்கையிலே புணர்ந்து பிரிந்தாளொருபிராட்டி அவனாலே அபஹ்ருதசித்தையாயிருக்கிறபடியை உயிர்த் தோழியானவள்கண்டு, இவள்வடிவில் வேறுபாட்டாலும் பேச்சில் வேறுபாட்டாலும் "ஸம்ஶ்லேஷம் ப்ரவ்ருத்தம்" என்றறிந்தாள்; இவையொன்றையுமறியாதே (க) "ஏதிஸம்யோகஸத்ருஶம் வயோரூபலக்ஷணம் வெலிதா - பதிஸம்யோக ஸுலபம் வயோத்ருஷ்ட்வாசமேபிதா" என்கிறபடியே, ப்ராப்தயௌவனை யென்று மிவ்வளவேகொண்டு, பித்ராதிகள் "ஸ்வயம்வரத்துக்கு ராஜபுத்ரர்கள்வருவது" என்று நகரத்திலே மணமுரசறைவிக்க, அத்தைக்கேட்ட தோழியானவள், ஸ்ரீபாததாழ்வானை, "நீராஜா" என்றுபண்ணின தூர்யகோஷம்செவிப்பட்டபோது அவன் பட்டதெல்லாம்பட்டு;

"இத்தவதி பெண்பிள்ளை செவிப்படுமாகில் (உ) *மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழாத தன்மையளாயிருக்கிற இவளைக் கிடையாது. ஏற்கவே பரிஹரிக்கவேணும், அது செய்யுமிடத்தில் 'திருப்புலியூர் நாயனாரோடே ஸம்ஶ்லேஷம் ப்ரவ்ருத்தமாயிற்று

(க) ரா அயோ ககஅ நூச (உ) நா-தி-க-ரு

என்போமாகில் நம்மாலவற்சேர்வாலே வந்ததாம், அறிவியாதொழியில் இவளையிழக்கவரும், இனி யிவ்வளவில் செய்யலாவதென்'' என்று பார்த்து, ''இவர்கள் தாங்களும் 'இவளுக்குவடிவிலே யொரு வேறுபாடுண்டு, இதுக்கு ஹேதுவேதோ'' என்று விசாரியாநின்றார்கள், நாமுமிவர்களோடே நிரூபணத்தேயிழிந்து அவ்வழியாலே யறிந்தோமாய் இத்தைவிலக்கவேணும்'' என்று நிரூபித்து இவள் வடிவிருந்தபடியால் இவளுக்குத் திருப்புலியூரில் நாயனாரோடே ஸம்ஶ்லேஷம் ப்ரவ்ருத்தமாயிற்றுப்போலே யிருந்தது, அவனுடைய குணசேஷ்டிதங்களையே வாய்புலற்றாநின்றாள்; நீங்கள் செய்கிறவற்றைத் தவிருங்கோள்'' என்று அறத்தோடு நிற்கிறாளாய்-''இது தர்மமல்ல'' என்ன, ''ஆனால் நீசொல்லுகிற திருப்புலியூரில் நாயனார்க்கு இவளுக்கீடான வைலக்ஷண்யமுண்டாகவேணும், ஒப்பனையும் ஆண்பிள்ளைத்தனமும் குணமும் ஐஶ்வர்யமும் ஔதார்யமும் ப்ராணயித்வமு முண்டாகவேணும், ஸமாசாரனாகவேணும், வேதார்த்த தத்த்வஜ்ஞாந முடையனாகவேணும், இவையெல்லாமுண்டோ'' என்ன, ''நீங்கள்கேட்கிறவளவல்ல, இவையெல்லாம் குறைவற்றவிஷயம், இவையொன்றுமில்லையேயாகிலும் இவள்தான் அங்கே யநந்யார்ஹையானாள், நீங்கள் செய்கிற விவற்றைத்தவிருங்கோள்'' என்று அத்தை விலக்குகிறதா யிருக்கிறது. ''மணவிலக்கு'' என்பதொரு கிளவித்துறையிது.

திருமந்த்ரத்திலே, தனக்கும் பிறர்க்குமாயிருக்கு மிருப்பைக் கழித்து அநந்யார்ஹஶேஷத்வத்தைச் சொல்லக்கடவதிறே; அதிங்குச் சொல்லுகிறது. கீழ்த்திருவாய்மொழியில்-அநந்யார்ஹஶேஷத்வஞ்சொல்லிற்று; இதில்-அநந்யஶேஷத்வமும், ஸ்வஸ்வாதந்த்ர்யமும் அபுருஷார்த்தமென்கிறது. ஒருகந்யகையாகில், ஒருவனுக்கேயாயிருக்கையிறே ஸ்வரூபம். ஒருவனுக்கேயானால் பிறர்க்குரிய ளல்லளாயிருக்கையு *

முதற்பாட்டு.

கருமாணிக்கமலைமேல் மணித்தடந்தாமரைக் காடுகள்போல்*
திருமார்வு வாய்கண் கையுந்திகாலுடையாடைகள் செய்யபிரான்*
திருமாலெம்மான் செழுநீர்வயற்குட்ட நாட்டுத்திருப்புலியூர்* அருமாயன் பேரன்றிப்பேச்சிலளன்னை மீரிதற்கென்செய்கேனோ. (க)

ப:—முதற்பாட்டில், திருப்புலியூரிலே யெழுந்தருளி யிருக்கிறவ னுடைய வவயவ சோபையிலே யகப்பட்டு அவன் திருநாமமன்றிச் சொல்லுகிறிலளென்கிறாள்.

(இ-ள்.) கரு-கறுத்தநிறத்தையுடைய, மாணிக்கமலைமேல்-மாணிக்கமலைமேலில், மணி-தர்ஶநீயமான வொளியையுடைத்தாய், தடம்-பெருத்த, தாமரைக்காடுகள்போல் - தாமரைக்காடுகள்போலே, திருமார்வு-லக்ஷ்மீ கௌஸ்துப லக்ஷிதமான திருமார்பு, வாய்-திருப்பவளம், கண்-திருக்கண்கள், கை-திருக்கைகள், உந்தி-திருவுந்தி, கால்-திருவடிகள்; உடையாடைகள்-திருப்பீதாம்பரங்களினுடைய, செய்ய-சிவப்பையுடையனாய்க்கொண்டு, பிரான்-ஆஶ்ரிதரை யநுபவிப்பிக்கு முபகாரகனாய், திரு-இவ்வழகை நித்யாநுபவம் பண்ணுகிற பிராட்டிக்கு, மால்-வல்லபனாய், எம்மான்-அவ்வழகாலே நமக்கு நாயகனான, செழு-அழகிய நீர்-நீரையுடைத்தான, வயல்-வயலையுடைய, குட்டநாட்டுத்திருப்புலியூர்-குட்டநாட்டுத் திருப்புலியூரில், அரு-பெறுதற்கரியனான, மாயன்-ஆஶ்சர்யபூதனுடைய, பேர்-திருநாமம், அன்றி-ஒழிய, பேச்சு-வேறொருபாசுரம், இலள்-அற்றிராநின்றாள். அன்னைமீர்-அன்னைமீர், இதற்கு-இவள்படிக்கு, என்-ஏது, செய்கேன்-செய்வேனென்று தானுள்பாடையல்லாமையை யறிவித்தாளாயிற்று.

மணித்தடமென்று-ஶ்லாக்யமான தடாகமாகவுமாம்.

ஆறு:—இப்பிராட்டி திருப்புலியூரிலே யிருந்தருளுகிற வெம்பெருமானோடே யியற்கையிலே புணர்ந்தருளின புணர்ச்சியை யறியாமையாலும், (க) "மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்" என்றிருக்கும் ஸ்வபாவத்தை யறியாமையாலும், இவளுடைய தாயாரு முறவுமுறையாரும், மநுஷ்யரிலே யிவளுக்கொருவனை யந்வேஷித்து அவனுக்குக் கொடுக்கையிலே ப்ரவ்ருத்தராகிற படியைக் கண்டு, இவள் ஸ்வபாவத்தையும், இவளெம்பெருமானோடு கலந்த கலவியையு மறிந்திருந்த விவளுடைய தோழியானவள், தான் சொல்லிற்றை அவர்களங்கீகரிக்கைக்காக அவர்களோடே கூடத் தானும் ஸமாநசித்தையாய்க்கொண்டு, "இவள் திருப்புலியூரிலிருந்தருளின வெம்பெருமானுடைய குணங்களாலே வஶீக்ருதையாய், அவன்றிறமல்லது மற்றொன்றறியாள், இனி நாம் கோலி

(க) நா-தி-க-ரு

னவை முடியா, அவனையே வரக் காண்கப் பார்க்கவேணும்" என்று கொண்டு அவர்களை நிவர்த்திப்பிக்க, அவர்களும் "இவனுக்கு அவ னழகொக்குமோ" என்றுகேட்க, அவனுடைய வழகிலேயிறே யிவ ளகப்பட்டதென்கிறாள். (க)

ஈடு ; அவ:—அவனுடைய திவ்யாவயவ ஸௌந்தர்யத்தைக் கண்டு மற்றொன்றறியாதபடி யீடுபட்டாளென்கிறாள். "கருமாணிக் கக்குன்றத்துத்தாமரைபோல் திருமார்வு கால்கண் கை செவ்வாயுந்தி யான்" என்று * இருத்தும் வியந்திலநுபவித்த வித்தைத் தோழி பேச்சாலே பேசி யினியராகிறார்.

(கருமாணிக்கமலைமேல்) அநுபவிப்பார் நெஞ்சு குளிரும்படி கருமையையுடைத்தாய், ப்ரகாசத்தால் மிக்கிருப்பதாய், நிரதிசய போக்யமாயிருப்பதொரு மலைமேலே, கறுத்தே இருள்நீக்குவ தொருமலையென்றுமாம், அபூதோபமை யிருக்கிறபடி (மணித்தடந் தாமரைக்காடுகள்போல்) இப்படி யிருப்பதொரு மலைமேலே, தெளிந் ததொருதடாகமாய், அதுகாடுபடத் தாமரை பூத்தாப்போலேயா யிற்றுத் திருமேனியும் திவ்யாவயவங்களுமிருப்பது.

(திருமார்வு) பற்றுசான பெரியபிராட்டியா ரெழுந்தருளியிருக் கும் திருமார்வு, திருமார்வுக்குச் சிவப்பு பிராட்டி ஸந்நிதாநத்தாலே. (வாய்) அவள்வழியாலே யுறவுபண்ணினார்க்கு அநுகூல பாஷணம் பண்ணுகிற திருப்பவளம் (கண்) இன்சொல்லுச் சொல்லப்புக்கு அநுகூலதர்சநத்தாலே தமோறினால், குறையும் தலைக்கட்டிக்கொ டுக்கும் கண், (கை) நோக்குக்குத் தோற்றாரை யணைக்கும் கை, (உந்தி) உத்தேஸ்யபூமியிலே விழாநின்றால் நடுவே காற்கட்டவல்ல திருவுந்தி;, நடுவே யமுக்கும் சுழியிறே, (கால்) இவையெல்லாவற் றுக்கும் தோற்று விழும்திருவடிகள், (உடையாடைகள்) அங்கே கிடந்தநுபவிக்கும் திருப்பீதம்பரம். "கமலபாதம்" என்று, (க) "சிவந்தவாடை" என்னக்கடவதிறே, (பிரான்) இவ்வவயவசோபை யடைய (உ) "ஐகூ நாலு-பக்தாநாம்" என்றிருக்குமவன்.

(திருமால்) அழகேயன்றிக்கே, இவனுக்கிடான மேன்மையு முண்டு; (ஙு) "யஸ்ய ஸாஜநகாத்ஜா-ஷ ... ஹிதஜ: -

---

(க) அமல-க. (உ) ஜிதந்தே-

(ங) ரா-ஆர-ஙஎ கஅ.

யஸ்யஸாஜநகாத்மஜா-அப்ரமேயம்ஹி தத்தேஜஃ" என்கிறபடியே, (எம்மான்) "இவளையவனுக்குக்கொடுங்கோள்" என்றால், "இவனுக்கவன்தாம்போருமோ" என்னவேண்டாதபடியிருப்பதே யென்றுபனென்கிறாள். (செழுநீர்த்யாதி) அழகிய ஜலஸம்ருத்தியை யுடைத்தான வயல்சூழ்ந்த (குட்டநாட்டுத் திருப்புலியூர்) குட்டநாடென்று-அந்நாட்டுக்குப்பேர்.

(அருமாயன்) பெறுதற்கரிய வாஶ்சர்யபூதன். (பேரன்றிப் பேச்சிலள்) பரவ்யூஹவிபவங்களுக் கேகாந்தமான திருநாமங்களைச் சொல்லுகிறிலள். அல்லாத வுகந்தருளின நிலங்களில் நிற்கிறவர்கள் பேரும் சொல்லுகிறிலள். (அன்னைமீரிதற்கென்செய்கேனோ) "அவர்களோடொக்கத்தானுமிப்போதறிந்துசொல்லுகிறாள்" என்னுமிடந் தோற்ற, இதுக்கு நானெத்தைச் செய்வேனென்கிறாள். (க)

இரண்டாம்பாட்டு.

அன்னைமீரிதற்கென்செய்கே னணிமேருவின்மீதுலவும்,* துன்னுசூழ் சுடர்நாயிறுமன்றியும் பல்சுடர்களும்போல்,* மின்னுநீண் முடியாரம்பல்கலன்றானுடையெம்பெருமான்,* புன்னையம்பொழில் சூழ் திருப்புலியூர் புகழுமிவளே. (உ)

பஃ:—அநந்தரம், அவனுடைய வாபரணசோலையிலே யகப்பட்டு அவனூரைப் புகழாநின்றாளென்கிறாள்.

(இ - ள்) அன்னைமீர் - அன்னைமீர், இதற்கு - நீங்களும் நானுமறியாதபடி யிவளுக்குப்பிறந்த ப்ரகாரத்துக்கு, என்-எத்தை. செய்கேன்- செய்கேன், அணி - அழகிய, மேருவின் - மேருவின், மீது - மேலே, உலவும் - வர்த்திப்பதாய், துன்னு - செறிந்து, சூழ் - சூழ்ந்த, சுடர் - சுடரையுடைத்தான, நாயிறும்-நாயிறும், அன்றியும் - அவ்வளவேயன்றியே, பல் - பலவகைப்பட்ட, சுடர்களும்போல் - க்ரஹ நக்ஷத்ரங்களுடைய தேஜஸ்ஸம்போலேயிருக்கிற, மின்னு - ஒளியை யுடைத்தாய், நீள் - ஓங்கின, முடி - திருவபிஷேகம், ஆரம் - ஆரம் முதலான, பல் - பலவகைப்பட்ட, கலன்றான் - ஆபரணங்களை, உடை - உடையனாய், எம்பெருமான் - அவ்வழகைக்காட்டி நம்மையடிமைகொண்ட ஸர்வாதிகனானவனுடைய, புன்னை - புன்னையையுடைத்தான, அம் - அழகிய,

பொழில் - சோலைகளாலே, சூழ் - சூழப்பட்ட, திருப்புலியூர்-திருப்புலியூரை, இவள், புகழும் - புகழாநின்றாள்.

அணிமேருவென்று-* ருக்மாபமான திருமேனிக்குத்ருஷ்டாந்தம்.

ஆறு:—(அன்னைமீர்) அவனெப்பித் தருளிநு விருக்கு மழகைச்சொல்லி, அவ்வழகிலேயிறே யிவள் விழுந்ததென்கிறாள். (உ)

ஈடு: அவ—அவனுடைய வாபரணசோபையி லகப்பட்டாளென்கிறாள்.

(அன்னைமீரிதற்கென்செய்கேன்) நீங்கள் கற்பித்திலீகோள், நான் கற்பித்திலேன், இதுக்கு நாமெனத்தைச் செய்வேன். (அணியித்யர்தி) அழகிதான மேருவின்மேலே ஸஞ்சரியாநிற்பானுமாய், காண்கிறவளவன்றிக்கே நெருங்கிச் சூழ்ந்த தேஜஸ்ஸையுடைய விலக்ஷணனான வாதித்யனும். (அன்றியம் பல்சுடர்களும் போல்) மற்று மப்படியே யிருக்கிற நக்ஷத்ராதிதேஜ:பதார்த்தங்களும்போலே.

(மின்னுநீண்முடி) "துன்னுசூழ்சுடர் நாயிறு" என்று சொன்ன திருவபிஷேகம். (ஆரம்) (க) "அஞ்சுடர்மதியம்பூண்டு" என்கிறபடியே திருவாரம். (பல்கலன்) அல்லாத திவ்யாபரணங்கள் (எம்பெருமான்) ப்ரீத்யுக்தி - இவ்வைபவம் பொய்யாகாதபடி யிருந்தவென்னையன். (புன்னையம் பொழில்சூழ்) அழகிய புன்னைப் பொழில்சூழ்ந்த, அவ்வூரில் சோலைவாய்ப்பையன்றோ விவள்சொல்லுகிறது. சோலையிலே கலந்தார் வார்த்தையாயன்றோ விருக்கிறது. (திருப்புலியூர் புகழுமிவளே) பிள்ளாய், இவ்வூர் வாசியெங்கேயறிந்தாள்; அவனுடைய வாபரணசோபைபோபாதி அவ்வூரில் சோலையிலு மவ்வூரிலும் குமிழ்நீருண்டாளாய்த் தோற்றுகிறதில்லையோ விவள்வார்த்தையாலே.

(உ)

மூன்றாம்பாட்டு.

புகழுமிவள்நின்றிராப்பகல் பொருநீர்க்கடல் தீப்பட்டு* எடங்
திகழுமெரியோடு செல்வதொப்பச் செழுங்கதிராழிமுதல்* புகழும்
பொருபடையேந்திப் போர்புக்கசுரரைப் பொன்றுவித்தான்* திகழு
மணி நெடுமாடநீடுதிருப் புலியூர்வளமே. (ரு)

(க) திருவா-க

ப:— அநந்தரம், அவனுடைய வீரசரிதத்துக்குத்தோற்று அவள் அவ னூரிலழகைப்புகழாநின்றாளென்கிறாள்.

(இ - ள்.) பொரு - திரைக்கிளப்பத்தாலே யொன்றுக் கொன்று பொருது அலைகிற, நீர் - நீரையுடைத்தான, கடல் - கடலானது, தீப் பட்டு - நெருப்பைக்கொளுத்தி, எங்கும்-எங்கும், திகழும்-விளங்குகிற, எரியொடு - ஜ்வாலைகளோடே, செல்வதொப்ப-செல்வதுபோலே, புக ழும்-ஶத்ருக்களும் புகழும்படியாய், செழும் - மிக்க, கதிர் - ஒளியை யுடைய, ஆழி - திருவாழி, முதல் - முதலாக, பொரு - பொருந்தின' படை - ஆயுதங்களை, எந்தி - எந்தி, போர் - யுத்தத்திலே புக்கு-ப்ரவே சித்து, அசுரரை-அசுரர்களை, பொன்றுவித்தான்-நசிப்பித்தவனுடைய, திகழும் - விளங்குகிற, மணி - மாணிக்கங்களையுடைத்தாய், நெடு ஓங் கின, மாடம் - மாடங்களையுடைத்தான, நீடு - ஆயாமவிஸ்தாரவத்தா யுள்ள, திருப்புலியூர் - திருப்புலியூரினுடைய, வளம் - அழகை, இவள் - இவள், இராப்பகல் - இராப்பகல், நின்று-ஓவாதுநின்று, புகழும்-புகழா நின்றாள்.

பொருபடை - பொருகிறபடையென்றுமாம். (ரு)

ஆறு:—(புகழுமிவள்) அழகியனுமலன், ஆண்பிள்ளைத்தன முடையனுக வேண்டாவோவென்னில்; அந்த ஶௌர்ய வீர்யாதி குணங்களையேகாண் இவளிராப்பகல் புகழாநின்றதென்கிறாள். (ரு)

ஈடு; அவ:—ஒப்பனையழகு ருஷிகளும் சொல்லார்களோ, இது கலவிக்கு ஸூசகமாகவேணுமோவென்ன; (க) "ஹந்தாரம்ஶத்ரூணாம் த்ருஷ்ட்வா - பர்த்தாரம் பரிஷஸ்வஜே" என்றுவீரவாசிகண்டணைக்கும் பிராட்டிபாசுரமாயன்றோ விவள் வார்த்தையிருக்கிறதென்கிறாள்.

(புகழுமிவள்நின்றிராப்பகல்) [இவள்-இராப்பகல்-நின்று - புக ழும்] வீரவாசியறிந்திடும் பருவமன்றிக்கேயிருக்கிறவிவள், கேட் டார்வாய்க்கேட்டொருகால் சொல்லிவிட்டாளோ. அஹோராத்ரம் நின்று வாய்புலற்றுநின்றாள். (புகழும்) நெஞ்சாலேநினைத்துவிட்டவ ளேயோ, வ்ரீளைகுடிபோய் வாய்விட்டுப்புகழுகிறாளல்லளோ. (பொ ருநீர்கடல் தீப்பட்டு) பொராநின்றுள்ள திரையையுடைத்தான கட ல்நெருப்புக்கொளுந்தி. (எங்கும் திகழுமெரியொடு செல்வதொப்ப) பரப்புமாறிக்கொண்டு ஜ்வலியாநின்றுள்ள நெருப்போடேகூடகட

(க) ரா ஆர-ரு0-௩௯-

ந்து செல்லுமாபோலேயாயிற்று, ஆயுதங்களால்வந்த புகரும் திருமேனியுமிருக்கும்படி.

(புகழும்பொருபடையான - செழுங்கதிராழிமுதல்-ஏந்தி) (க) "ஹேதிஹிஸ்ருக்நாவஜ்ஞாரூதீரிதஜயஸ்வநம் - ஹேதிபிஸ்சேதநாவத்பிருதீரிதஜயஸ்வநம்" என்று திவ்யாயுதங்கள்தான் அவனைப் புகழும்படியாதல்; (உ) "ஸத்ரோஃப்ரக்யாதவீர்யஸ்ய ரஞ்ஜநீயஸ்ய விக்ரமைஃ-ஸத்ரோஃப்ரக்யாதவீர்யஸ்ய ரஞ்ஜநீயஸ்ய விக்ரமைஃ" என்கிறபடியே 'கையுமாயுதமுமாய்ப் பொருத்தமிருந்தபடியென்' என்று ஸத்ருக்கள் புகழும்படியைச் சொல்லுகிறது" என்று எம்பெருமானாரருளிச் செய்யும்படி. (பொருபடை) யுத்தோத்யுக்தமானவாயுதம். (செழுங்கதிர்) மிக்கதேஜஸ்ஸையுடைத்தான திருவாழிமுதலான திவ்யாயுதங்களையேந்தி. (போர்புக்கசுரரைப் பொன்றுவித்தான்) ஆயுதனாய் யுத்தத்திலேபுக்கு துஷ்ப்ரக்ருதிகளைமுடித்தான். பொன்றுவிக்கை - முடிக்கை.

(திசழுமித்யாதி) உஜ்ஜ்வலமான மாணிக்கங்களையுடைய ஓங்கினமாடங்களையுடைத்தாய், கல்பாவதியான திருப்புலியூரிலழகை - புகழும். வளம் - அழகு; எதிரிகளுக்குக் கிட்ட வொண்ணாமைக்கு அவன்றான்வேண்டா, அவ்வூரேயமையும். பிராட்டி, ஸ்ரீமிதிலையை விட்டு (ங)"ராவவஸ்நிவேஸநே-ராகவஸ்யநிவேஸநே" என்று திருவயோத்யையைப் புகழுமாப்போலே, இவள் திருநகரியைவிட்டுத் திருப்புலியூர்ப்புகழே புகழாநின்றாள். (ச)"ஸயோயத்ராவராஜிதா-அயோத்யாபராஜிதா" என்கிறபரமபதத்தை நினைத்திருக்குமாபோலேகாணும் இவள் அவ்வூரைநினைத்திருப்பது. (ரு) "மாகவைகுந்தங்காண்பதற் கென்மனமேக மெண்ணுமிராப் பகலின்றியே" என்றிறே அங்கு மிவர்பாசுரம். (ரு)

(க) ரகுவ-கo. (உ) ரா-யு-க௱-க௲.

(ங) ரா-ஸு-ஙஉ-கஅ (ச) ஸ்ரீகுணரத்ந-

(ரு) கூ-ங-எ

நான்காம்பாட்டு.

ஊர்வளங்கிளர்சோலையும் கரும்பும்பெருஞ்செந்நெலுஞ்சூழ்ந்து* ஏர்வளங்கிளர்தண்பணைக்குட்டநாட்டுத்திருப்புலியூர் * சீர்வளங்கிளர்மூவுலகுண்டுமிழ்தேவபிரான்* பேர்வளங்கிளர்ந்தன்றிப் பேச்சிலளின்றிப்புனையிழையே. (௪)

ப:—அநந்தரம், ஆபத்ஸகத்வாதி குணோத்கர்ஷங்களையுடைய வவன்திருநாமங்களைப் பெரியகிளர்த்தியோடே சொல்லாநின்றாளென்கிறாள்.

(இ - ள்.) ஊர் - ஊருக்கு, வளம் - வளப்பமாய், கிளர் உயர்ந்த, சோலையும் - சோலையும், கரும்பும் - அத்தோடணைத்துச் சொல்லலாம் கரும்பும், பெரும்-அதிலும் பெரிய, செந்நெலும்-செந்நெலும், சூழ்ந்து-சூழ்ந்து. ஏர்-ஏரின், வளம் - அழகு. கிளர்-மிகாநிற்கிற தண்-குளிர்ந்த, பணை நீர்நிலங்களையுடைய, குட்டநாட்டுத்திருப்புலியூர்-குட்டநாட்டுத் திருப்புலியூரில், சீர் - ரக்ஷகத்வோபயுக்த குணங்களினுடைய, வளம் - ஸம்ருத்தி, கிளர்-தோற்றும்படி, மூவுலகு-ஜகத் த்ரயத்தையும், உண்டு - அமுதுசெய்து, உமிழ் - உமிழ்ந்த, தேவபிரான் - ஸர்வபோக்யனானவனுடைய, பேர் - திருநாமங்களினுடைய, வளம்-ஸம்ருத்தியை, புனை - அணியப்பட்ட, இவ்விழை - ஆபரணங்களையுடையவிவள், இன்று-இப்போது கிளர்ந்தன்றி - கிளர்ந்தன்றி, பேச்சிலள் - சொல்லுகிறிலள்.

ஏர்வளங்கிளரென்று-அழகிதான ஸம்ருத்தி தோன்றுகிறதென்றுமாம். ஊரின்வளப்பந் தோன்றும்படியான சோலையென்றுமாம். (௪)

ஆறு:—(ஊர்வளம்) ஆண்பிள்ளைத்தனமமையாதிறே, குணவானாயிருக்கவேணுமிறே யென்னில்; அவனுடைய வாபத்ஸகத்வாதி குணங்களிலேயிறே யகப்பட்டதென்கிறாள். (௪)

ஈடு:-அவ:—வெறுமாண்பிள்ளைத்தனமே போராதே, ஆபத்ஸகனாகவேணுமேயென்ன ; அக்குறைதானுண்டோ விவனுக்கென்கிறாள். புனல்தருபுணர்ச்சியையன்றோ விவள்வாய் புலற்றுகிறது.

(ஊர்வளங்கிளர்சோலையும்) ஊரில் ஸம்பத்தைக் கோட்சொல்லிக் கொடுக்கும் சோலையென்னுதல், ஊர்களுக் கிட்டுச்சொல்லும் சிறப்புக்களைத் தெரிவிக்கும் சோலையென்னுதல். (கரும்பும் பெருஞ்செந்நெலுஞ்சூழ்ந்து) வயலடங்கக் கரும்பும், அதுக்கு நிழல்செய்யும்

செந்நெலும் சூழ்ந்துகிடக்கும். (ஏர்வளங்கிளர்) ஏராலுண்டான வழகையுடைத்தாயென்னுதல், ஏரினுடைய ஸமுதாயத்தைச் சொல்லிற்றுதல். அதாவது-உழுவது நடுவதாய்ச் செல்லாநிற்கை. (தண்பணை) மருதநிலமென்னுதல், அழகிய நீர்நிலமென்னுதல். மருதநிலமென்றத்தால்-வயலைச் சொன்னபடி.

(சீர்வளங்கிளர் மூவுலகுண்டுமிழ்) குணங்களின் நன்மையடையச் செயலிலே தெரியும்படி, ஸகலலோகங்களையும் வயிற்றிலே வைத்து, வெளிநாடுகாணவுமிழ்ந்த * அயர்வறுமமரர்களதிபதி (பேர்வளம்) திருநாமங்களினுடைய வழகைச் சொல்லுதல், திருநாமங்களையடங்கவென்னுதல். (கிளர்ந்தன்றிப்பேச்சிலள்) குணசேஷ்டிதங்களுக்கு வாசகமான திருநாமங்களை, கடல்கிளர்ந்தாப்போலேபெரிய கிளர்த்தியோடேயன்றோ இவள்சொல்லுகிறது. (இன்று) இவ்வேறுபாடும் நன்மையும் கேற்றில்லைக்கிடீர். (இப்புனையிழையே) திருநாமஞ் சொல்லச்சொல்ல ஒருபடி ஆபரணம் பூண்டாப்போலே யிராநின்றாள். (௪)

ஐந்தாம்பாட்டு.

புனையிழைகளணிவுமாடையுடையும் புதுக்கணிப்பும்* நினை
யுநீர்மையதன்றிவட்கிதுநின்று நினைக்கப்புக்கால்*சுனையினுள்தட
ந்தாமரைமலருந்தண்திருப்புலியூர் * முனைவன்மூவுலகாளியப்பன்
திருவருள் மூழ்கினளே. (௫)

ப:—அநந்தரம், இவள்வடிவில் புதுமையிருந்தபடியால் அதிஶயிதைஶ்வர்ய விஶிஷ்டனானவனுடைய ஸம்ஶ்லேஷத்திலே யவகாஹித்தாளென்கிறாள்.

(இ-ள்.) புனை-முன்பு புனைந்த, இழைகள்-ஆபரணங்களை. அணிவும் இப்போது ஓரழகுபெறப் பூண்டிருக்கிறபடியும், ஆடையுடையும்-பரியட்டத்தினுடையவழகும், புதுக்கணிப்பும்-வடிவில் பிறந்த புதுமையும், நின்று-தாமுள்ளதனையும்நின்று, நினைக்கப்புக்கால்-நினைக்கப்புக்காலும். இவட்கு-இவளுக்கு, இது-இந்தவைலக்ஷண்யம், நினையும்-லோகமர்யாதையால் நினைக்கலாம். நீர்மையதன்று-ஸ்வபாவமன்று; ஆதலால், சுனையினுள்-சுனைகளுக்குள்ளே, தடம்-பெருத்த, தாமரை-

தாமரைகள் மலரும்-மலராநிற்கிற, தண்-ஸ்ரமஹரமான, திருப்புலியூர்-திருப்புலியூருக்கு முனைவன் - ப்ரதாநநிர்வாஹகனாய், மூவுலகு - ஜகத்துக்கு, ஆளி - ஸ்வாமியான, அப்பன் - உபகாரகனுடைய, திருவருள் - நிரதிஶயோபகாரத்திலே, மூழ்கினள் . அவகாஹித்தாள். (ரு)

ஆறு:—(புனையிழைகள்) "அவன் ஸௌந்தர்யசீலாதிகுணங்களையுடையனாகிலென், அவனை யேறகவே யறியப்பெற்றிலோம், வேறே யொருவனை அந்வேஷித்து அவனுக்குக்கொடுக்கக்கடவதாய்ச் சொல்லாநின்றபின்பு இனிச்செய்ய லாவதில்லை" என்று தாயார் சொல்ல;

தோழியானவள், இயற்கையிற் புணர்ச்சியைச் சொல்லுகை யிடன்றியே யிருக்கச்செய்தே, "இவளையிழக்கிறோம்" என்னும் பயத்தாலே முன்னமே திருப்புலியூர் முனைவனை ஸர்வேஶ்வரனோடே புணர்ந்தருளினாளென்கிறாள். (ரு)

ஈடு: அவ;—வெறுமாபத்ஸகத்வமே போருமோ, இவளுக்குத் தக்க வைஶ்வர்யமு முண்டாகவேணுமேயென்ன; அதுவுமுண்டென்கிறாள்.

(புனையிழைகளணிவும்) ஆபரணங்கள் நாம பூட்டினாப்போலே யிருந்ததோ. (ஆடையுடையும்) முகத்தலையறிந்துடுத்ததா யிருந்ததோ (புதுக்கணிப்பும்) நீர்பாய்ந்த வயல்போலே இவள் வடிவிலேபிறந்த செவ்விபாரீர்கோள். (நினையும்நீர்மையதன்றிவட்கிதுநின்றுநினைக்கப்புக்கால்) [நின்றுநினைக்கப்புக்கால் - நினையும்நீர்மையதன்றிவட்கிது) உபக்ரமித்துவிடுகையன்றிக்கே, காலதத்த்வ முள்ளதனையும் நின்றாராயப்புக்காலும், இவளுக்குப் பிறந்த விவ்வழகுகள் நினைக்கப் போகாது. (க) "யதோவாசோநிவர்த்தந்தே" என்கிறவிஷயத்தைப் பரிச்சேதிக்கிலும், இவள்படி பரிச்சேதிக்கப் போகாது.

இவையெல்லாவற்றாலும் நீ பரிச்சேதித்த வர்ஶமேதென்ன (அப்பன்திருவருள் மூழ்கினள்) (சுனையினுள்தடந் தாமரைமலரும்) ஒருபூவே தடாகத்தைக் கண்செறியிட்டாப்போலே மலரும். அவ்வூரில் பதார்த்தங்கள் இறக்கிடந்தொடாதென்கிறாள். இவளுக்குப்

(க) தைத்-ஆ-க

புறம்புபோக்கில்லை. (திருப்புலியூர் முனைவன்) அவ்வூருக்கு ப்ரதானன். (மூவுலகாளி) ஸமஸ்தலோகங்களுக்கும் நிர்வாஹகன்; ஐஶ்வர்யத்துக்குப் புறம் பொருவரைத் தேடிப்போகவேண்டா. (அப்பன்) "ஐஶ்வர்யத்தாலும் குறைவறப்பெற்றேன்" என்று தன் ப்ரீதியாலே சொல்லுகிறாள். (திருவருள் மூழ்கினளே) கடல்கொண்ட வஸ்துவை யெங்ஙனே மீட்கப்பார்க்கிறபடி. அருட்கடலிலே மூழ்கின விவளை மீட்கலாமோ வுங்களாலே. (௬)

ஆறாம்பாட்டு.

திருவருள்மூழ்கி வைகலுஞ்செழுநீர் நிறக்கண்ணபிரான் * திருவருள்களும் சேர்ந்தமைக்கடையாளந் திருந்தவுள * திருவருளருளாலவன் சென்றுசேர் தண்திருப்புலியூர் * திருவருள்கமுகொண்பழத்ததுமெல்லியல்செவ்விதழே. (௬)

ப:—அநந்தரம், அபிரூபனுய் பவ்யனுனவனுடைய ஸௌந்தர்ய குணத்திலே யவகாஹித்தநுபவித்தமைக் கடையாளமுண்டென்கிறாள்.

(இ - ள்) செழுநீர் - ஸம்ருத்தஜலமான மஹார்ணவத்தின், நிறம்-நிறத்தையுடையனுய், கண்ணன்-ஆஶ்ரிதஸுலபனுன க்ருஷ்ணனுகிற பிரான் - மஹோபகாரகனுடைய, திருவருள் - நிரவதிகமான ஸௌந்தர்யகுணத்திலே, வைகலும் - அநேககாலம், மூழ்கி - அவகாஹித்து, திருவருள்களும் - ஸம்ஶ்லேஷதசையிலவன்பண்ணின வதிஶயிதோபகார பரம்பரைகளையும், சேர்ந்தமைக்கு-இவள்பெற்றபடிக்கு, திருந்த - மறைக்கவொண்ணுத, அடையாளம் அடையாளங்கள், உள உள, அவற்றில்வைத்துக்கொண்டு, திருவருள் - தன்னுடைய நிருபாதிகமான திருவருளை, அருளால் - உபகரிக்கை நிமித்தமாக, அவன் - அவன்தானே, சென்று - சென்று, சேர் - சேர்ந்த, தண் - ப்ரமஹரமான, திருப்புலியூர் - திருப்புலியூரில் திருவருள் - அவனுடையகடாக்ஷோபகார பாத்ரமான, கமுகு - கமுகினுடைய, ஒண் - திரண்டுசிவந்துநன்றான, பழத்தது - பழம்போன்றது. மெல்-மெல்லிய, இயல்-ஸ்வபாவத்தையுடையவிவளுடைய, செ-சிவந்த, இதழ்-இதழ்போலேயிருக்கிற வதரமானது.

ஆறு:—(திருவருள்) இப்புதுக்கணிப்பும், புனையிழைகளணிவும், இவளுடைய பருவத்தாலும் லீலாபேருஷ்சடா விசேஷத்தா

ணும் ஸம்பவியாதோ, திருப்புலியூரெம்பெருமானோடு கலந்தகலவியால் வந்ததென்னுமிடத்துக்கடையாளமென்னென்ன: திருப்புலியூர் சராசரங்களுக்கெல்லா மாத்மதாநம் பண்ணுகைக்காக வவ்வூரிலேபுகுந்து நின்றருளின வெம்பெருமானுடைய திருவருளாலேவளர்ந்த கமுகினுடைய பழம்போலேயன்றோ விவள் திருப்பவளமிருப்பதென்கிறாள். (சு)

ஈடு-அவ:—ஐஶ்வர்யமேபோருமோ, உதாரனுகவேண்டாவோ வென்ன, அவனுடைய வௌதார்யகுணத்திலே யகப்பட்டு ஸம்ஶ்லேஷித்தமைக் கடையாளம் வ்யக்தமாகவுண்டென்கிறாள்.

(வைகலும்-திருவருள்மூழ்கி) அநேககாலம் அவன்ப்ரஸாதத்திலே யவகாஹித்து. நாம, கண்டத்தை யறியுமித்தனையிறே. எதிர்சூழல்புக்கு இப்படிப் பரிமாறித்திரிகிற தெத்தனை காலமுமுண்டு. அறிந்தோமோ. (செழுநீர்நிறக்கண்ணபிரான்) ஸௌந்தர்ய லாவண்யங்களைக்காட்டிக்காணு மிவளையிப்படியகப்படுத்திற்று. (திருவருள்களும் சேர்ந்தமைக்கு) அவனுடைய ப்ரஸாதமெல்லா மிவ்வாஶ்ரயமொன்றிலும் வந்துசேர்ந்தமைக்கு. (அடையாளந் திருந்தவுள) அவன்விஷயீகாரம் பெற்றமைக்கடையாளம் வ்யக்தமாகவுள.

நீயிதென்கொண்டறிந்தாயென்ன; (திருவருளருளால்) குணகுணநிரூபணம் பண்ணாதே விஷயீகரிக்கையாகிற ஸ்வபாவத்தை யுபகரிக்கைக்காக; திருவருளருளுகைக்காக. ஆல் - அசை. (அவன் சென்றித்யாதி) * கலங்காப்பெருநகரம் கலவிருக்கையா யிருக்கவன்றோ அவனிங்குவந்து ஸந்நிஹிதனாயிற்று, (திருவருட்கமுகு) என்று சிலவுண்டு. அதாவது-நீராலேவளருகையன்றிக்கே, பெரியபிராட்டியாரும் ஸர்வேஶ்வரனுமாகக் கடாக்ஷிக்க அத்தால் வளருவனசில; அதினுடைய வழுவிப்பழம்போலேயிராநின்றது; ம்ருதுஸ்வபாவையான விவளுடையவதரம். அவ்வாயிலே யறியலாயன்றோவிருக்கிறது. (சு)

ஏழாம்பாட்டு.

மெல்லிலைச்செல்வவண்கொடிப்புல்க வீங்கிளந்தாள்கமுகின்* மல்லிலைமடல்வாழையீன்கனிசூழ்ந்து மணங்கமழ்ந்து * புல்லிலைத் தெங்கினூடுகாலுலவுந்தண் திருப்புலியூர்* மல்லலஞ்செல்வக் கண்ணன் தாளடைந்தாளிம்மடவரலே. (எ)

ப:—அநந்தரம், தேசத்தில் வ்ருக்ஷலதாதிகளும் பரஸ்பர ஸம்ஶ்லேஷத்தாலே ப்ரணயித்வத்தை ப்ரகாசிப்பிக்கும்படி, பெரியப்ரணயித்வைஶ்வர்யத்தையுடைய க்ருஷ்ணன் திருவடிகளை இவள்கிட்டினளென்கிறாள்.

(இள்.) மெல்-ம்ருதுவான, இலை-இலைத்தழைப்பையும், செல்வம்-ஸௌந்தர்யைஶ்வர்யத்தையும், வண் - தன்னுடைய வுபகாரத்துக்குக் கொடுக்கு மௌதார்யத்தையு முடைத்தான, கொடி - வெற்றிலைக் கொடி, புல்க - சூழ்ந்தணைக்க, வீங்கு - அத்தோட்டை ஸம்ஶ்லேஷத்தாலே புஷ்டமாய், இளம் - இளகிப்பதித்த, தாள் - அடியுரத்தையுடைத்தான, கமுகின் - கமுகுக்குப்பரிஸரவர்த்தியாய், இம்மிதுநபோகத்துக்கு சிசிரோபசாரம்பண்ணும் பரிசாரிகைகள்போலே, மல்-செறிந்த, இலை - இலையையும், மடல்-பரிசாரஸாதநம்போலேயிருக்கிற பூமடலையுமுடைத்தான, வாழை - வாழைகளினுடைய, ஈன் - நிரதிஶய போக்யமாய் ஹ்ருத்யமான, கனி - பக்வபலங்களை, சூழ்ந்து-பரிஷ்வங்கம் பண்ணுகையாலே, மணங்கமழ்ந்து - பரிமளோத்தரமாய், அப்படி பரிஸரவர்த்திகளாய், புல் - செறிந்த, இலை - இலையையுடைத்தான, தெங்கின் - உயர்ந்ததெங்கின், ஊடு - நடுவே, கால் - காமசாரமானதென்றலானது, உலவும் - உலாவும்படியான, தண் - ஶ்ரமஹரமான. திருப்புலியூர்-திருப்புலியூரில், மல்லலம்செல்வம்-அதிஶயிதமான ப்ரணயித்வஸம்பத்தையுடைய, கண்ணன் - க்ருஷ்ணன், தாள்-திருவடிகளை, இம்மடவரல் - முக்தஸ்வபாவையானவிவள். அடைந்தாள்- கிட்டியநுபவித்தாள். (எ)

ஆறு:—(மெல்லிலை) "இவளுக்குத் திருப்பவளத்தி லழகுதான் ஸ்வாபாவிகமன்றோ, இதவனோடு கலந்தமைக்கடையாளமல்ல, அவன்றானிவளோடுகலந்து பரிமாறுகைக்கீடான ப்ரணயித்வமுடையவனே" என்ன; தன்பக்கலடங்காமை அவ்வூரில் ஸ்தாவரங்களிலுங்கூட வெள்ளங்கோத்து, அவையும் பரஸ்பர ஸம்ஶ்லேஷதாரகமாயிருக்கும்படியேபெருகி இவனுடைய ப்ரணயித்வவெள்ளத்திலேயிறே இவளழுந்திற்றென்கிறாள். (எ

ஈடு; அவ:—கேவலமுதாரனாகப் போராதே, ப்ரணயித்வகுணமுண்டாகவேணுமேயென்ன; அவ்வூரில் ஸ்தாவரங்களுங்கூட பர

ஸ்பர மாஶ்ரயமாம்படியன்றோ வவனுடைய ப்ரணயித்வகுண மிருந்தபடி யென்கிறாள்.

(மெல்லிலையித்யாதி) ம்ருதுஸ்வபாவமான விலையையுடைத்தாய். ஸ்ரத்தையையுடைத்தாயிருக்கிற வண்கொடியுண்டு - உதாரமானகொடி. தன்பர்த்தாவான கமுகுக்குத்தன்னுடம்பை முற்றாட்டாகக்கொடுக்கும்போலே. (வீங்கிளந்தாள்கமுகின்) கொடிதழுவத்தழுவவளராநின்று, ஒருகாலைக்கொருகா லிளகாநின்றுள்ள தாளையுடையகமுகு. (க) "யஸ்யஸாஜநகாத்ஜா-ஸ்நுஷையம் ஹிதஜேதஜ:-யஸ்யஸாஜநகாத்மஜா-அப்ரமேயம்ஹிதத்தேஜ:" என்னும் ந்யாயத்தாலே. (உ) "ஊஊளவாஹூ தாஸஸ்ய சௌவீர்ய-நிவாதிநஃ-தத்தௌபாஹுலதாம்ஸ்கந்தே கோபீமதுநிகாதிநஃ"

(கமுகின்மல்லிலை மடல்வாழை) கமுகோடேகூடின பெரிய விலையையும் மடலையுமுடையவாழை. வெற்றிலைக்கொடிக்கும் கமுகுக்கும் வெய்யில் தட்டாதபடி நிழல்செய்து நிற்குமாயிற்றுவாழை (ஈன்கனிசூழ்ந்து)பழத்தாறுகள் தெற்றிக்கிடக்குமாயிற்று. (மணம் கமழ்ந்து) காற்றானது விளைவதறியாதேபுக்கு, பரிமளத்தில் லோபத்தாலே அங்கேயிங்கேசுழித்து, பரிமளத்தை யெறட்டுக்கொண்டு வாழைநெருக்கத்தாலே நெருக்கப்பட்டு அல்பாவகாசமுள்ள தெங்கின்சோலையிலே புறப்பட்டு ஸஞ்சரியாநிற்குமாயிற்று,

(புல்லிலை) புல்லப்பட்டவிலை. அந்யோந்யம் தழுவப்பட்ட விலையையுடைய தெங்கென்னுதல்; வாழையிலையோடே தழுவினவிலையையுடைய தெங்கென்னுதல்; சோலைநெருக்கத்தாலே நேரிதான விலையென்னுதல். (மல்லலம்செல்வக்கண்ணன்) நிரவதிகமாயழகிதான ஸம்பத்தையுடையக்ருஷ்ணன். (தாளடைந்தாள்)ப்ரணயித்வகுணத்துக்குத் தோற்றுத்திருவடிகளைப்பற்றினாள். (இம்மடவரல்) முன்பெணக்கு பவ்யையாய்ப்போந்த விவள்கிடீர்! மீட்கவொண்ணாதபடியானாள். (எ)

எட்டாம்பாட்டு.

மடவரலன்னைமீர்கட்கென்சொல்லிச் சொல்லுகேன் மல்லைச்
செல்வ * வடமொழிமறைவாணர் வேள்வியுள் நெய்யழல்வான்
புகைபோய்* திடவிசும்பிலமரர்நாட்டை மறைக்குந்தண் திருப்புலி
யூர் * படவரவணையான்றன்நாமமல்லால் பரவாளிவளே. (அ)

(க) ரா-ஆர-ருஎ-கஅ (உ) வி-பு-ரு-கரு-ருச

ப:—அநந்தரம், விலக்ஷண ஸமாசாரப்ரியனாய் பர்யங்க விசிஷ்டனானவனுடைய திருநாமத்தைச் சொல்லாநின்றாளென்கிறாள்.

(இ-ள்.) அன்னைமீர்கட்கு - அன்னையாரான வுங்களுக்கு, என் - என்னபாசுரத்தை, சொல்லி - சொல்லி, சொல்லுகேன் - சொல்லுவேன், ஆராதநோபகரணமான, மல்லை - பெரிய, செல்வம் - ஸம்பத்தையுடையராய், வடமொழி - ஆராதநகால வக்தவ்யமான ஸம்ஸ்க்ருதபாஷையையும், மறைவாணர் - ஆராதநப்ரதிபாதகமான வேதநிர்வாஹணத்தையுமுடையவர்களுடைய, வேள்வியுள்-ஆராதநரூபமான யாகாதிகர்மங்களில், நெய் ஆஜ்யாஹுதிவிசிஷ்டமான, அழல்-அக்நியினுடைய, வான் - பெரிய. புகை - புகையானது, போய்-கிளர்ந்துபோய், திடம் - த்ருடமான, விசும்பில்-ஆகாசத்திலே, அமரர்-தேவர்களுடைய, நாட்டை - லோகத்தை, மறைக்கும் - திரைவளைத்தாப்போலே மறைக்கக்கடவதான, தண் - சரமஹரமான, திருப்புலியூர் - திருப்புலியூரிலே, (க) "உத்ஸீதேயுரிமேலோகா நகுர்யாம்கர்மசேதஹம்" என்று லோகஹிதார்த்தமாக வாசாரபரனுகையாலே இவர்களுடையவாசாரஸக்தனுய்க்கொண்டு படம் - ஸ்வஸ்பர்சத்தாலே விரிகிறபணங்களையுடைய, அரவணையான்றன் - திருவநந்தாழ்வானுகிற படுக்கையிலே கர்மத்துக்கு ஆராத்யதயா கண்வளர்ந்தருளுகிறவனுடைய, நாமம் - திருநாமம், அல்லால்- ஒழிய, இவள் - இந்த, மடவரல் - மடந்தையானவள், பரவாள் - பரவுகிறிலள்.

ஆறு:—(மடவரல்) ப்ரணயஸ்வபாவம்போலே வ்ருத்தவத்தையு முண்டாகவேணுமிறேயென்ன;

அவன் வ்ருத்தவத்தை யிருக்கும்படி பார்க்கலாகாதோ, மிக்கிருந்துள்ள ஸம்பத்தையுடையரான வடமொழிமறைவாணர் வேள்வியுள் நெய்யழல்வான் புகைபோய்த் திடவிசும்பி லமரர்நாட்டை மறைக்கும் நிரதிசயபோக்யமான திருப்புலியூரில் திருவநந்தாழ்வானைப் படுக்கையாக வுடையவனுடைய திருநாமமல்லது சொல்லுகிறிலளென்கிறாள். (அ)

ஈடு ; அவ:—வெறும் ப்ரணயித்வமேபோராதே (உ) "கூ...ஸம்

(க) கீதை-ந-உச. (உ) கீதை-ந-உ0

ஸித்தி மாஸ்க்திதாஜநாதய: ” என்றன்றோ குடியிருப்பது, ஆறு விதுக்குத்தக்க வாசாரமுண்டாகவேணுமேயவனுக்கென்ன; ஆனால் வ்வூரிலுள்ளாருடைய வாசாரமிருக்கிறபடியைக் கேட்கலாகாதோ வென்கிறாள்.

(மடவரல்) மடவந்தபடியை. இவளெனக்கு பவ்யையானபடியை. பற்றிற்று விடாதபடியை யென்றுமாம். (அன்னைமீர்கட்கு) என்கையிலே யிவளைக்காட்டித்தந்திருக்கிறவுங்களுக்கு. (என்சொல்லிச்சொல்லுகேன்) இவளென்வழி வாராநின்றாளென்னவோ, இவளெனக்கு பவ்யையென்னவோ.

(மல்லையித்யாதி) நிரவதிகமான ஸம்பத்தையுடையராய், ஸம்ஸ்க்ருதத்துக்கும் வேதத்துக்கும் வ்யாஸபதம் செலுத்தவல்லராயிருந்துள்ள ப்ராஹ்மணருடைய யாகங்களில் நெய்யாலே ஹோமம் பண்ணின வக்நியிலுண்டான செறிந்தபுகையானதுபோய். (திடவிசும்பிலமரர் நாட்டைமறைக்கும்) வ்யவஸ்த்தித ஸ்வபாவமான வாகாசத்தில் தேவலோகத்தைமறைக்கும். ஸ்வர்க்கத்திலுள்ள வைமாநிகரை அப்ஸரஸ்ஸுக்கள் முகங்கண்டநுபவிக்க வொட்டாதே மறைக்கும். போகத்துக்கேகாந்தமாகத்திரைவளையாநின்றதென்றுமாம்.

(தண்திருப்புலியூர்) (க) “ ஸஹஸ்ரவஸ்த்ர ... ஹ நந்த்ராஜிநா ... ஜா-ஸங்கரஸ்யசகர்த்தாஸ்யாமுபஹ்ந்யாமிமா:ப்ரஜா:” என்றிற அவன்படியும். (படவரவித்யாதி) ஸ்வஸ்பர்சத்தாலே விகஸிதபணனான திருவநந்தாழ்வானைப் படுக்கையாகவுடையவனுடைய திருநாமமல்லது வாய்புலற்றுகிறிலள். நானருகேயிருக்க, ஸம்ச்லேஷதசையில் படுக்கையழகையேசொல்லி வாய்புலற்றாநின்றாள். (இவள்) என்னையொழிய வேறொன்றை ப்ரவர்த்திக்க வறியாதவிவள். (அ)

ஒன்பதாம்பாட்டு.

பரவாளிவள்நின்றிராப்பகற்பனிநீர் நிறக்கண்ணபிரான்* விரவாரிசைமறைவேதியரொலிவேலையில் நின்றேலிப்ப* கரவார்தடந்தோறுந்தாமரைக்கயந்தீவிகைநின்றலரும் * புரவார்கழனிகள்சூழ் திருப்புலியூர்ப்புகழன்றிமற்றே. (கூ)

(க) கீ-ரு-உச

ப:—அநந்தரம், வேதவித்ப்ரதாநனான க்ருஷ்ணனுடைய திருப்புலியூர்ப்புகழொழிய வேறொன்றிவள் சொல்லுகிறிலளென்கிறாள்.

(இ-ள்) பனி - குளிர்ந்த, நீர்நிறம்-நீர்நிறத்தையுடைய, கண்ணன்-க்ருஷ்ணனான, பிரான்-மஹோபகாரகனுடைய, விரவு - விரவி, ஆர் - நிரம்பின, இசை - இசையையுடைய, மறை - ஸாமவேதம் தொடக்கமான, வேதங்களாலுண்டான, வேதியர்-வைதிகருடைய, ஒலி-கோஷமானது, வேலையில் - ஸமுத்ரம்போலே, நின்று - நின்று, ஒலிப்ப - முழங்காநிற்க, கரவு - கரவுகள், ஆர் - ஆர்ந்த, தடந்தொறும் - தடாகந்தோறும், தாமரை - தாமரையினுடைய, கயம் - பரப்பானது, தீவிகை-நீராஜனதீபம்போலே, நின்று - நின்று, அலரும் - அலராநிற்பதுமாய், புரவார் - கட்டளைப்பட்ட, கழனிகள் - வயல், சூழ் - சூழ்ந்த, திருப்புலியூர்ப்புகழ் - திருப்புலியூர்ப்புகழ், அன்றி - ஒழிய, மற்று-வேறொன்றை, இவள்-இவள், நின்று-ஒருபடிப்பட, இராப்பகல்-இராப்பகல், பரவாள் - பரவுகிறிலள்.

"தடமும் கயமும் நணியும் பெருமை." தடமென்று-கரையாய், "தடந்தொறும் - கரவார் - தாமரைக்கயம்" என்று-பொய்கையாகவுமாம். கரவு - முதலை, புரவு - கட்டளைச்சேர்த்தி. (கூ)

ஆறு:—(பரவாளிவள்) வ்ருத்தமுண்டானாலும் தத்துருணதத்த்வஜ்ஞாநமுண்டாகவேணுமேயென்ன ;

அதுவுமுண்டு, நிரதிஶயபோக்யமான த்வநியையுடைய ஸாமவேதிகளுடைய வத்யயநகோஷமும், தகர்த்தஸிந்தை பண்ணுவார் கோஷமும் கடல்போலே கோஷியாநிற்க, முதலைமிக்க பொய்கைகள் தோறும் தாமரைகள் நிலைவிளக்கெரியுமாபோலே மலராநிற்பதுஞ் செய்து, தலைத்தரமான கழனிகளையுடைத்தாயிருக்கிற திருப்புலியூரில் பனிநீர்நிறக்கண்ணபிரானுடைய புகழன்றி மற்றொன்று பரவாளிவள் நின்றிராப்பகலென்கிறாள். (கூ)

ஈடு ; அவ:—ஆசாரமேபோருமோ, ப்ரயோகவ்ருத்தியை ப்பார்த்து அநுஷ்டாநத்துக்கு வேண்டுவ தறிந்திருக்கவொண்ணாதோ (க நிஷ்டிதம் ஸர்வஶாஸ்த்ரேஷு ஸர்வவேதேஷு நிஷ்டிதம்-நிஷ்

(க) ரா-பா-கந-உ0

ட்டிதம் ஸர்வசாஸ்த்ரேஷு ஸர்வவேதேஷு நிஷ்டிதம்'' என்றன்றோ இக்குடியிலுள்ளாருடையபடி, இதுக்குத் தக்க வேதார்த்த தத்த்வஜ்ஞாநமுண்டாகவேணுமேயென்ன; அதுக்குமொரு குறையில்லையென்கிறாள்.

(பரவாளிவள் நின்றிராப்பகல்) இவளடைவு கெடப்பேசாநின்றாள்; இராப்பகல் பேசாநின்றாள், இதுக்கு வேறு ப்ரமாணம் தேடவேணுமோ, இவளுக்கிதியேயன்றோ ப்ரமாணம். (பனிநீர்நிறக்கண்ணபிரான்) குளிர்ந்தவடிவையும், அப்படியே யிருக்கிற சீலத்தையுமுடையவன். (விரவாரிசைமறை) விரவி - எங்குமொக்கப் பரம்பி, ஆர்ந்து - மிக்கிருந்துள்ள, ஸ்வரத்தையுடைத்தான வேதமென்னுதல். அன்றிக்கே, (விரைவார்) என்று பாடமாகில், விரையென்று - போக்யதையாய், வாரென்று - அதில் மிகுதியாய், இசைமறையென்று - ஸாமவேதமென்னுதல். (வேதியரொலி) வேதகோஷமும், வேதார்த்தவிசாரம் பண்ணுகிறவர்களுடைய கோஷமும். (வேலையில்நின்றொலிப்ப) ஸமுத்ரகோஷத்திற்காட்டில் நின்று கோஷிக்க.

(கரவார்தடந்தோறும்) முதலை மிக்கிருந்துள்ள பொய்கைதோறும். (தாமரையித்யாதி) (தாமரைக்கயம்) கயமென்று-திரளுக்கும், பெருமைக்கும் பேர், (தீவிகை) விளக்கு. தாமரையினுடைய திரளானது நிலைவிளக்குப்போலே யலர்ந்துநிற்கும். (புரவார்கழனிகள்சூழ்) (புரவு-ஸாரம். பூஸாரமென்றபடி.) புரவார்ந் திருக்கையாவது-தலைத்தரப்பெருக்காயிருக்கை. பட்டர், ''அவ்வூரில் ப்ராஹ்மணர் இறத்துமாய்கிறார்கள், இவருருக்குச் சிறப்புச் சொல்லிப் போருகிறீரே'' என்றருளிச்செய்வர். (திருப்புலியூர்ப்புகழன்றிமற்று - பரவாளிவள்நின்றிராப்பகல்) அவ்வூரிலுள்ளாருடைய வேதகோஷமும், வேதார்த்த விசாரம்பண்ணுகிற வாரவாரமும், அவ்வூரில் போக்யதையுமேயிறே இவளடைவுகெடச் சொல்லாநிற்பது. (கூ)

பத்தாம்பாட்டு.

அன்றிமற்றோருபாயமென்னிவளந்தண்டுழாய்கமழ்தல் * குன்றமாமணிமாடமாளிகைக் கோலக்குழாங்கள்மல்கி * தென்திசைத்திலதம்புரை குட்டநாட்டுத் திருப்புலியூர் * நின்றமாயப்பிரான் திருவருளாமிவள்நேர்பட்டதே. (கO)

ப:— அநந்தரம், ஆஶ்சர்யசேஷ்டித யுக்தனானவனை யிவள் கிட்டினமைக்கு அந்யதா ஸித்தமான வடையாளமுண்டென்கிறாள்.

(இ-ள்.) குன்றம் - குன்றம்போலே, மா-ஶ்லாக்யமாயுள்ள, மணி-மணிமயமான, மாடம்-மாடங்களினுடையவும், மாளிகை-மாளிகைகளினுடையவும், கோலம் - தர்ஶநீயமான, குழாங்கள் - திரளானவை, மல்கி - நெருங்கியிருப்பதாய், தென்திசை-தெற்குத்திக்குக்கு, திலதம் புரை - திலதம்போலும், குட்டநாட்டுத் திருப்புலியூர் - குட்டநாட்டுத் திருப்புலியூரிலே, நின்ற - நின்ற, மாயப்பிரான் - ஆஶ்சர்யபூதனுடைய, திருவருளாம் - க்ருபையேயாம், இவள் - இவள், நேர்பட்டது - கிட்டிற்று, அன்றி - அதன்றி, இவள் - இவள், அம் - அழகிய, தண்-குளிர்ந்த துழாய் - திருத்துழாய், கமழ்தல் - பரிமளத்தை யுடையளாகைக்கு, மற்று - வேறு, ஓர் - ஒரு, உபாயம் - உபாயம், என் - ஏதோ. (௧௦)

ஆறு:—(அன்றி) ஸௌந்தர்ய ஸௌசீல்ய ப்ரணயித்வைஶ்வர்ய வ்ருத்தவத்வ ஸர்வஜ்ஞத்வாதி ஸர்வகுணவிஶிஷ்டனே யிருந்தானேயாகிலும், இங்கு ப்ரவ்ருத்தமான மணத்தைத் தவிர்க்கை யிடலில்லையென்ன;

"அன்றி மற்றோருபாயமென்னிவ ளந்தண்டுழாய் கமழ்தல்" என்று அவர்களுங்கூட விசைவதோ ரடையாளத்தைச் சொல்லிக்கொண்டு, திருப்புலியூர்நின்ற மாயப்பிரானோடே யிவள் புணர்ந்தருளினளென்றுஞ் சொல்லுகிறாள். (௧௦)

ஈடு; அவ:—நீ சொல்லுகிறவை யெல்லாங் கிடக்க, இவளையவனுக்குக் கொடுக்கவேண்டும்படி யஸாதாரண லக்ஷண மேதேனுமுண்டாகில் சொல்லென்னச் சொல்லுகிறாள்.

(அன்றிமற்றோருபாயமென்னிவ ளந்தண்டுழாய்கமழ்தல்) வேறு மற்றுபாயமுண்டோ, இவள்முகிதாய்க் குளிர்ந்த திருத்துழாய் நாறுகைக்கு. ராஜபுத்ரனை யணையாதார்க்குக் கோயிற்சாந்து நாறுகைக்கு விரகுண்டோ. என்னுடம்பாதல் உங்களுடம்பாதல் திருத்துழாய் நாறுகின்றதோ. ஸ்வாபதேசத்தில், "அந்தண்டுழாய் கமழ்தல்" என்கிறவிது, அங்கீகாரஸூசகமாயிருக்கிறது.

(குன்றமித்யாதி) மலைபோலே அதிசால்யமாயிருப்பதாய், பெருநிலையனான ரத்நங்களாலே செய்யப்பட்டிருந்துள்ள, மாடங்களினு

டையவும் மாளிகைகளுடையவும் தர்ஶநீயமான குழாங்களால்மிக்கு தெற்கில் திக்குக்குத் திலகம்போலே யிருக்கிற குட்டநாட்டுத் திருப்புலியூரிலே நின்றருளின வாத்ஸல்யபூதன். "அவனுக்கிவள்போராள்" என்னும் டிருஞ்நிகன்; "இவளுக்கவன்போரான்" என்றன்றோ நீங்களிருக்கிறது, "அவனுக்கிவள்போராள்" என்றன்றோ அவ்வூரிலுள்ளார்வார்த்தை, (திருவருளாமிவள்நேர்பட்டதே) இவள்நேர்பட்டது அவன்திருவருளாம், அவன்திருவருளை யாமென்றாள். இதுவேயோ, இன்னமுடையாளுண்டோவென்ன; அன்றிமற்றோருபாயமென்னிவ ளந்தண்டுழாய்கமழ்தல்; (௧௦)

பதினொன்றாம்பாட்டு.

நேர்பட்டநிறைமூவுலகுக்கும் நாயகன்தன்னடிமை* நேர்பட்டதொண்டர் தொண்டர் தொண்டர் தொண்டன் சடகோபன்சொல் * நேர்பட்டதமிழ்மாலை யாயிரத்துள்ளிவைபத்தும் நேர்பட்டாரவர் * நேர்பட்டார் நெடுமாற்கடிமைசெய்யவே. (கக)

ப:—அநந்தரம், இத்திருவாய்மொழிக்கு பலமாக பகவத்கைங்கர்யத்தை யருளிச் செய்கிறார்.

(இ - ள்.) நிறை - பரிபூர்ணமான, மூவுலகுக்கும் - த்ரிவிதசேதநாசேதநங்களுக்கும், நேர்பட்ட - வாய்த்த, நாயகன்றன் - ஸ்வாமியான ஸர்வேஶ்வரனுடைய, அடிமை-கைங்கர்யத்துக்கு, நேர்பட்ட-வாய்த்த, தொண்டர் - பக்திபரவசருடைய, தொண்டர் தொண்டர் - ஸம்பந்திஸம்பந்திகளுக்கும், தொண்டன - ஶேஷபூதரான, சடகோபன்-ஆழ்வாருடைய சொல்நேர்பட்ட, சொல்வாய்ப்பையுடைத்தாய் தமிழ் - த்ராமிடபாஷையாலே, மாலை - மாலையாகச் சேர்க்கப்பட்டிருக்கிற, ஆயிரத்துள் - ஆயிரத்துள், இவைபத்தும்-இவைபத்தையும், நேர்பட்டாரவர் - அப்யஸித்துக் கிட்டினவர்கள், நெடுமாற்கு - ஆஶ்ரித வ்யாமுக்தனான ஸர்வேஶ்வரனுக்கு, அடிமைசெய்ய - அடிமை செய்கைக்கு, நேர்பட்டார் - வாய்த்தவர்கள்,

இதுவும் - அறுசீராசிரியவிருத்தம். (கக)

ஆறு:—(நேர்பட்ட) ஏவம்வித பகவத்ஸௌந்தர்யாதி குணாநுபவஜநித ப்ரீதியாலே பகவச்சேஷத்வகாஷ்டாபூபகதரான சடகோ

பன்சொல்நேர்பட்ட தமிழ்மாலை யாயிரத்துளிப்பத்தும் நேர்பட்டவர்கள், நெடுமாற்கடிமைசெய்யப்பெற்று வாழ்வரென்கிறார். (கக)

ஈடு:- அவ:—நிகமத்தில் - இப்பத்தைக்கற்றவர், ஸ்வரூபாநுரூபமான கைங்கர்யத்தைப் பண்ணப்பெறுவரென்கிறார்.

(நேர்பட்டநிறை மூவுலகுக்கும் நாயகன்றன்னடிமை) குறைவற்றமூவுலகுக்கும் நேர்பட்டநாயகன். (க) "கௌஸல்யா லோகபர்த்தாரம் ஸுஷுவே யம் மநஸ்விநீ- த்ரைலோக்யமபி நாதேந யேந ஸ்யாந்நாதவத்தரம்" என்று ரக்ஷ்யவர்க்கத்தளவன்றிக்கே யிருக்கிற ரக்ஷகத்வத்துடிப்பு. இத்தால் - நாயகன்படி சொல்லிற்று. (க) "ஸநாதநஸ்ய ஜகதோ நாயக:- அநுரூபஸ்ஸவைநாத:" என்னுமாபோலே. (அடிமைநேர்பட்டதொண்டர்தொண்டர் தொண்டன்சடகோபன்) இவர்தம்படிசொல்லுகிறது அவன் சேஷித்வத்துக் கெல்லையானாப்போலே, இவர் சேஷத்வத்துக் கெல்லையானபடி.

(சொல்நேர்பட்டதமிழ்மாலை) அந்தவாச்யத்துக் குத்தகுதியான வுக்திவாய்த்த தமிழ்த்தொடையாயிரத்திலு மித்திருவாய்மொழிநேர்பட்டவர்கள். (நெடுமாற்கடிமைசெய்ய - நேர்பட்டார்) இப்பாசுரத்தைச் சொன்னவர்கள், இவருடைய வ்ருத்தியிலே அந்வயிக்கப்பெறுவரென்கை. நேர்படுகை-சொல்லப்படுகை. சொல்லப்பட்டாரென்றபடி. ஆக, இப்பாட்டில்-ஸர்வேஶ்வர ஸ்வரூபத்தையும், ஸ்வஸ்வரூபத்தையும். ப்ரதிபாதகமான ப்ரபந்தவைலக்ஷண்யத்தையும், இத்தை யப்யஸித்தாருடைய ப்ராப்யவைலக்ஷண்யத்தையும் சொல்லிற்றாயிற்று. (கக)

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

திருவாய்மொழி

எட்டாம்பத்து ஒன்பதாந் திருவாய்மொழி

முற்றிற்று.

(க) ரா-அயோ-உ-கரு.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

எட்டாம்பத்து.

பத்தாந்திருவாய்மொழி.

நெடுமாற்கடிமை-ப்ரவேசங்கள்.

ஆறு:—(நெடுமாற்கடிமை) இப்படி யெம்பெருமான் தம்மை அநந்யார்ஹமாம்படி யடிமைகொண்டபடியை யநுஸந்தித்து மிகவும் ப்ரீதராய், அந்த ப்ரீதிப்ரகர்ஷத்தாலே அவ்வளவில் பர்யவஸியாதே, “ அவனுடைய ஸௌந்தர்யஶீலாதிகளிலே யீடுபட்டிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஶேஷமாகையே நிரதிஶயபுருஷார்த்தம் ” என்றத்யவஸித்து, ஐஶ்வர்யாதியாய், ஸர்வேஶ்வரத்வ பர்யந்தமான ஸகலபுருஷார்த்தங்களும், தனித்தனியும் திரளவும், இப்பாகவத ஶேஷத்வ புருஷார்த்தத்தோடொவ்வாதென்கிறார். (௧)

ப:—பத்தாந்திருவாய்மொழியில், கீழ்த்திருவாய்மொழியிலே பகவச்சேஷத்வத்தினுடைய நிரதிசயபோக்யதையை ப்ரதிபாதித்து, அந்த போக்யதாதிசயத்தாலே “ நேர்பட்ட தொண்டர் தொண்டர் தொண்டர் தொண்டன் ” என்று ப்ரஸ்துதமான ததீயசேஷத்வ பாரம்யத்திலினிமையானது ப்ரகாஶித்து, அந்த ததீயருடைய போக்யதைக்கு ஹேதுவான; தத்ஸம்பந்தத்துக்கு மூலமாயிருக்கிற வீஶ்வரனுடைய வாஶ்ரிதவ்யாமோஹத்தையும், உதாரரூபத்வத்தையும், அஶேஷஜநஸம்ஶ்லேஷத்தையும். ஆபத்ஸகத்வத்தையும், ஆஶ்சர்யஸ்வபாவத்தையும், ஆஶ்ரிதவிரோதி நிரஸநத்தையும், அகிலகாரணத்வத்தையும், அர்ணவஶாயித்வத்தையும், ஆஶ்ரிதவிரோதிநிராஸகமானவாயுதபூர்த்தியையும், அநுபாவ்யாகாரயோகத்தையு மநுஸந்தித்து, ஏவம்வித பகவத்விஷயத்துக்கபிமதரான பாகவதருடைய வத்யந்த ஶேஷத்வ காஷ்டாவிஶேஷமே அதிசயிதபோக்யமாய், ஐஶ்வர்ய கைவல்ய பகவத்ப்ராப்த்யாதிகள் அதுக்கு ஸத்ருஶமல்லாதபடியான பரமபுருஷார்த்தத்வம் ப்ரகாசிக்கும்படி ப்ரதிபந்தகத்தை நிஶ்ஶேஷமாக நிவர்த்திப்பித்த ப்ரகாரத்தையருளிச்செய்து தலைக்கட்டுகிறார்.

ததீயசேஷத்வபரமான * பயிலுஞ்சுடரொளியில் - தத்ஸம்பந்த நிபந்தநமான ததீயர்க்கும் ஶேஷித்வ ஶரண்யத்வ ப்ராப்யத்வங்களுண்

டாகையாலே, முதலிட்டு நாலுபாட்டாலே-ஶேஷித்வத்தையும், அநந்தரம் மூன்றுபாட்டாலே - ஶரண்யத்வத்தையும் ப்ரதிபாதித்து, "எந்தொழுகுலந்தாங்கள்" என்று ஸங்க்ரஹேண ப்ரதிபாதித்த ப்ராப்யத்வத்தை யிங்கே விஸ்தரேண ப்ரதிபாதித் தருளுகிறார். *

ஈடு;—கீழிரண்டு திருவாய்மொழியாலுமாக வாத்மாவினுடைய வநந்யார்ஹஶேஷத்வம் சொல்லிற்றாய், "அது பிறர்க்குமுரித்தல்ல. தனக்குமுரித்தல்ல" என்றாயிற்றுச் சொல்லிற்று. ப்ரணவத்தில் மத்யமபதத்தாலும், * நமஸ்ஸாலும் சொன்ன வர்த்தமாயிற்றுச் சொல்லிநின்றது. அநந்யார்ஹஶேஷத்வத்துக் கெல்லை ததீயஶேஷத்வ பர்யந்தமாகையிறே. ததீயர்க்கு க்ரயவிக்ரயார்ஹமானவன்றிறே தச்சேஷத்வம் நிலைநின்றதாவது. (௧) "எந்தம்மைவிற்கவும் பெறுவார்கள்" என்றிறே யிருப்பது.

அம்முணியாழ்வான் போசளராஜ்யத்தினின்றும் வந்தநாளிலே பட்டர்கண்டருளி, "'நீ ஸ்ரீவைஷ்ணவர்களுக்குப் போர வடிமை செய்து போந்தாய்' என்று கேட்டோம், உன் ப்ரக்ருதிக்குச்சேர * நெடுமாற்கடிமையைக்கேள்" என்றருளிச் செய்தாராம். "ஈஶ்வர ஶேஷம்" என்றறிந்தவன்று ப்ரமித்து மீளவுமாம்; ததீயஶேஷத்வ பர்யந்தமாக வுணர்ந்தால் மீளவேண்டாவிறே. (௨) "[illegible] ஸாரம் க்ரயவிக்ரயார்ஹ:-தத்பக்திநிக்நமநஸாம்க்ரயவிக்ரயார்ஹ:" என்னக்கடவதிறே.

"ஐஶ்வர்யம் புருஷார்த்தம்" என்றிருப்பார், "ஆத்மலாபம் புருஷார்த்தம்" என்றிருப்பார், "பகவச்சேஷத்வம் புருஷார்த்தம்" என்றிருப்பார், "ஈஶ்வரனாய்," (௩) "[illegible] - ஆநந்தமய:" என்றிருக்கு மிருப்பு புருஷார்த்தம்" என்றிருப்பாராயிறேயிருக்கிறது. "இப்படிப்பட்ட புருஷார்த்தங்கள், தனித்தனியும் திரளவும், நான்பற்றின பாகவதஶேஷத்வமாகிற புருஷார்த்தத் தோடொவ்வாது" என்று எடுத்துக்கழிக்கவும் போராது "இப்படியிருக்கிற விதுவே, காலதத்வமுள்ளதனையு மெனக்கு மென்னோடு ஸம்பந்த முடையார்க்கும் வாய்க்கவேணும்" என்று ப்ரார்த்தித்துத் தலைக் கட்டுகிறார்.

(௧) பெரியா-தி-௪-௪-௧௦. (௨)
(௩) தை-ஆ-௯.

* பயிலும் சுடரொளியிற்காட்டில் இத்திருவாய்மொழிக்கு வாசி யென்னென்னில்; "பாகவதர்கள் ஶேஷிகள்" என்றதங்கு; "பாகவதர்கள் போக்யர்" என்கிறதிங்கு. (க) [கச்சதா மாதுலகுலம் - கச்சதாமாதுலகுலம்] ஸ்ரீஶத்ருக்நாழ்வானுக்காதல், இவ்வாழ்வார்க்காதலிறே யிவ்வர்த்தங்களில் ருசியுள்ளது. [நித்யஶத்ருக்ந: - நித்யஶத்ருக்ந:] "பெருமாள் போக்யர்" என்று அவர்பக்கல் கண்வையானென்றதிறே.

முதற்பாட்டு.

நெடுமாற்கடிமைசெய்வேன் போலவனைக் கருதவஞ்சித்து * தடுமாற்றற்றதீக்கதிகள்முற்றும் தவிர்ந்தசதிர்நினைந்தால் * கொடுமாவினையேனவனடியாரடியே கூடுமிதுவல்லால் * விடுமாறென்பதென்னந்தோவியன் மூவுலகுபெறினுமே. (க)

ப:— முதற்பாட்டில், ஆஶ்ரிதவ்யாமுக்தனான ஸர்வேஶ்வரனுக்கு ஶேஷபூதமான பாகவதவிஷயமான ஶேஷத்வத்துக்கு த்ரைலோக்யைஶ்வர்யமும் தகுதியல்லவென்கிறார்.

(இ-ள்) நெடு - நிரவதிகமான, மாற்கு-ஆஶ்ரிதவ்யாமோஹத்தையுடைய ஸர்வேஶ்வரனுக்கு, அடிமை - அடிமை, செய்வேன்போல் - செய்வேன்போல், அவனை - அவனை, கருத - மநோரதமாக்கினவளவிலே. தடுமாற்றம் - ஓரலைச்சல், அற்ற-அறும்படி, என்பக்கலிலேநிற்கிற, தீக்கதிகள் - து:கஹேதுவான அவித்யாகர்மரூபமாயுள்ள பொல்லாவழிகள், முற்றும் - எல்லாம், வஞ்சித்து - நானறியாதபடி வஞ்சித்து, தவிர்ந்த (க) "காணேனொருங்கிற்றுங்கண்டிலமால்" என்கிறபடியே விட்டுப்போயிற்றின. இனி, சதிர் - உறுவது, நினைந்தால் - பார்த்தால், அவன் - ஆஶ்ரிதவத்ஸலனானவனுக்கு, அடியார் - அடியாரான பாகவதருடைய, அடியே - திருவடிகளையே, கூடுமிதுவல்லால் - ப்ராபிக்குமதொழிய, வியன் - விஸ்தீர்ணமான, மூவுலகு - த்ரைலோக்யைஶ்வர்யத்தை, பெறினும் - பெற்றாலும், கொடு - ஐஶ்வர்யத்திற்காட்டில் ததீயஶேஷத்வத்துக்கு வாசிசொல்லவேண்டும்படி மாவினையேன் - மஹாபாபத்தையுடையநான், அந்த ததீயஶேஷத்வத்தை, விடும்-விடும், ஆறு-

---

(க) ரா-அ-க-க. (உ) பெரியதிருவ-ருச

ப்ரகாரமாக, என்பது - சொல்லப்படுவது, என்-எது, அந்தோ-ஐயோ!, விடவென்றுசொல்ல ப்ரஸங்கமுண்டாவதே.

நெடுமால் - ஸர்வாதிகஶேஷியென்றுமாம். சதிர் - உறுவது. (௧)

ஆறு:—ஆஶ்ரிதர்பக்கல் மிகவும் வ்யாமோஹத்தையுடைய வெம்பெருமான்றனக்கு அடிமைசெய்கையில் எனக்குள்ள விச்சா மாத்ரமே காரணமாக, பகற்றமற்று நின்றுநலிகிற புண்யபாபரூப கர்மங்களெல்லாம் போனபடி தெரியாமேபோக்கி என்னை யடிமை செய்வித்துக்கொண்டருளின விவனடியாரடியே கூடுமிதுவல்லது, விஸ்மயநீயமான த்ரைலோக்யம் பெறினுமல்லனென்கிறார். (௧)

ஈடு: அவ;—நாட்டார் விரும்புகிற வைஶ்வர்ய புருஷார்த்தமும் நான்பற்றினபுருஷார்த்தத்தோடொவ்வாதென்று எடுத்துக்கழிக்கவும் போராதென்கிறார்.

(நெடுமாற்கு) நெடுமாலுக்கென்றபடி; மாலென்று - பெரியோனென்றபடி; நெடுமையால் நினைக்கிறது-அதில் பெருமையை. அறப் பெரியோனென்றபடி. அவன் ஶேஷித்வத்தி னெல்லையைப்பிடிக்கிறார், தாம் ஶேஷத்வத்தி னெல்லையைக் கணிசிக்கிறவராகையாலே. அன்றிக்கே, மாலென்று - வ்யாமோஹமாய், நெடுமையால் - மிக்க வ்யாமோஹத்தையுடையவனென்னுதல், தன்னளவன்றியே தன்னுடையாரளவிலே நிறுத்தும்படிகாணும் வ்யாமோஹம். (௧) "அடியார்க்கென்னை யாட்படுத்தவிமலன்," (அடிமைசெய்வேன் போலவனைக்கருத) அவனுக்கடிமை செய்வாரைப்போலே அவனைநினைக்க. * மித்ரபாவமேயாய், ஆராய்ந்தால் அதுதானும் போட்கன்.

(தடுமாற்றற்றதீக்கதிகள்முற்றுந்தவிர்ந்த) ஒரு ஸத்கர்மத்தை யநுஷ்டித்து, அது நின்று தடுக்குமதில்லாமையாலே தடுமாற்றமற்றுவர்த்திக்கிற வஸித்யாதிகளடங்கத்தவிர்ந்தன. தவிர்ந்தபடி தானென்னென்னில்; வஞ்சித்துத்தவிர்ந்தன. "பகலெல்லாமொக்க வர்த்திக்கக்கடவோம்" என்றுசொல்லிவைத்து, ராத்ரியிலே யொருகலத்திலேயுண்டுவைத்து, ஒக்கக்கிடந்துவிளக்கையெரியவைத்து, போனதறியாமே வஞ்சித்துப்போவாரைப்போலே. "அடிமைசெய்வேன் போலவனை - வஞ்சித்து-கருத" என்னவுமாம். (முற்றுந்தவிர்ந்த) நான்போக்கிக்கொள்ளுமன்றிறே க்ரமத்தாலே போகவேண்டுவது,

(௧) அமல-௧-

(க) "ஸவெஹைவாஹ்வா நஃ ஷ்டு உ-ஹ்யஜை-ஸர்வேபாப்மாந: ப்ரதூயந்தே" (உ) "ஸவ-ஹ்வாவெஹெஹ்ரா ஜா க்ஷயிஷ்ராமி-ஸர்வபாபேப்யோமோக்ஷயிஷ்யாமி" என்றிறே அவன்போக்கும்போதிருப்பது.

(சதிர்நினைந்தால்) அவன் திருவடிகளிலே குனிந்தமாத்ரத்திலே துஷ்கர்மங்களடங்கலும் போனபடியை யநுஸந்தித்தால். புருஷார்த்தத்துக் கெல்லையானவரையன்றோ பற்றவடுப்பது. உறுவது பார்க்கில் ததீயரையன்றோ பற்றவடுப்பது. (கொடுமாவினையேன்) ப்ரீதிதலைமண்டையிட்டுச் சொல்லுகிறார். பாட்டுக்கேட்பார், பாட்டு வருத்தினவாறே "பாவியேன்" என்னுமாபோலே. அன்றிக்கே, ப்ரதமாவதியிலே சரமாவதியைப் பற்றப்பெற்றிலேனென்கிறாராகவுமாம். (அவனடியாரடியேகூடுமிதுவல்லால்) தன் திருவடிகளைப்பற்றினார்திறத்திலே அவன் மிக்கவ்யாமோஹத்தைப் பண்ணுவானானால், அவன்விரும்பினாரையன்றோ நமக்கும் விரும்பவடுப்பது. அவனுஸ்ரிதவ்யாமுக்தனானால் அவனுக்கு ப்ரியவிஷயத்தையன்றோ பற்றவடுப்பது. அவதாரணத்தால்-அங்கு ஸாம்யாபந்நராயிருக்குமவரல்லர்; அவன் சேஷித்வத்தி லெல்லையிலே நிற்குமாபோலே, சேஷத்வத்திலெல்லையிலே நிற்கிறார்.

(அடியேகூடும்) அவர்களோடொப்பூணுண் டிருக்குமவரல்லர், அவர்கள் காலைப்பற்றுவராயிற்று. (விடுமாறென்பதென்) புறம்புண்டான விஷயத்திலே விடுவது பற்றுவதானத்தை இவ்விஷயத்திலும்செய்யவோ (அந்தோ) நான்பற்றினபுருஷார்த்தத்துக்கு நாலுமூன்றுபடி கீழேநிற்கிற வைஸ்வர்ய மித்தோடொவ்வாதென்ன வேண்டுவதே! என்று — அந்தோவென்கிறார். (வியன்மூவுலகுபெறினும்) காடும்மலையுமான வட்ஸத்தைத்திருத்தி, அநுபவயோக்யமாம்படிபண்ணி, த்ரைலோக்யத்தையு மெனக்குக் கையடைப்பாக்கினாலும் - விடுமாறென்பதென்னந்தோ, ஐஸ்வர்யத்துக்கு லோகபரிக்ரஹமுண்டாகையிறே, அத்யந்தவிஸத்ருஸமாயிருக்கச் செய்தேயும், "இது நான்பற்றின பாகவதசேஷத்வத்தோடொவ்வாது" என்ன வேண்டுகிறது. (க)

(க) சாந்தோ-௫-உ௪. (உ) கீதை-க௮-௬௬

இரண்டாம்பாட்டு.

வியன்மூவுலகுபெறினும் போய்த்தானே தானேயானாலும் * புயல்மேகம் போல்திருமேனியம்மான் புனைபூங்கழலடிக்கீழ்* சயமேயடிமைதலைநின்றார் திருத்தாள்வணங்கி * இம்மையே பயனே யின்பம்யான்பெற்றதுறுமோபாவியேனுக்கே. (உ)

ப:—அநந்தரம், வர்ஷுகவலாஹகம்போலே ஆஶ்ரிதவிஷயத்திலுதாரஸ்வபாவமான வடிவையுடைய ஸர்வேஶ்வரன் திருவடிகளிலே யடிமைசெய்கிற பாகவதருக்கு, ஐஶ்வர்யத்தோடுகூடின ஆத்மாநுபவமும் ஸத்ருஶமன்றென்கிறார்.

(இ-ள்.) வியன் - பெரிய, மூவுலகு - த்ரைலோக்யைஶ்வர்யத்தை, பெறினும் - பெறிலும், போய் - இதில் ஸங்கமற்றுப்போய், ஸகல கர்மக்ஷயம்பிறந்து, தானே - தானேயாய், தானே - ஈஶ்வராநுபவத்திலந்வயியாதபடி கேவலம்தானே, ஆனாலும்-அநுபாவ்யனானாலும், புயல்-வர்ஷோந்முகமான, மேகம்போல்-மேகம்போலே, ஆஶ்ரிதோபகாரசீலமான, திருமேனி - திருமேனியையுடையனான, அம்மான் - ஸர்வேஶ்வரனுடைய, புனை - புனையப்பட்ட, பூ - பூவையும், கழல்-வீரக்கழலையுமுடைய, அடிக்கீழ் - திருவடிகளின்கீழே, சயமே - ஸ்வயம்ப்ரயோஜநமாயேயிருக்கிற, அடிமை - அடிமையின், தலை - மேலெல்லையிலே, நின்றார் - நின்றவர்களுடைய, திரு - விலக்ஷணமான, தாள் - திருவடிகளை, வணங்கி - ஶேஷத்வாநுரூபமாக ப்ரணாமம்பண்ணி, இம்மையே - இஹலோகத்திலே, பயனே - ப்ரயோஜநரூபமாகவே, யான் - நான், பெற்றது - பெற்றதான, இன்பம் - ஆநந்தத்துக்கு, பாவியேனுக்கு-புருஷார்த்தாந்தரங்களிலே, வாசி சொல்லவேண்டும்படி பாபத்தைப்பண்ணினவெனக்கு, உறுமோ - அந்தவைஶ்வர்ய கைவல்யங்கள் கனைனக்குச்சேருமோ.

அநுரூபமான ததீயசேஷத்வத்துக்கு, அநநுரூபங்கள் தகுதியன்றென்கை. (உ)

ஆறு:—(வியன்மூவுலகு) சிறப்புடைய வைஶ்வர்யபுருஷார்த்தம் பெறிலும், கேவலாத்மாநுபவம்பண்ணப்பெற்றாலும். வர்ஷுகவலாஹகம்போலேயிருக்கிற வடிவையுடைய ஸர்வேஶ்வரனுடைய நிரதிஶயபோக்யமான திருவடிக்கீழே சயமேயடிமை தலைநின்றார்

திருத்தாள்வணங்கி, இந்தலோகத்திலே நான்பெற்ற புருஷார்த்த ரூப ஸுகத்துக் கொக்குமோ; இவைசொல்லவேண்டிற்றென்னும் கே(வெ)தத்தாலே பாவியேனென்கிறார். (உ)

ஈடு: அவ:—கீழ்ச்சொன்ன வைஶ்வர்யத்தோடே ஆத்மாநுபவத்தைச் சேர்த்துத்தந்தாலும், பாகவதஶேஷத்வமாகிற புருஷார்த்தத்தோ டொவ்வாதென்கிறார்.

(வியன்மூவுலகுபெறினும்) விஸ்மயநீயமான த்ரைலோக்யைஶ்வர்யத்தையு மெனக்கொருவனுக்கே யாக்கினாலும். (போய்த்தானே தானேயானாலும்) ஸம்ஸாரபந்தமற்றுப்போய் கேவலாத்மாநுபவம் பண்ணப்பெற்றாலும். தானே தானேயென்கிற வீப்ஸையாலே- ஸம்ஸாரத்திலே புத்ரபௌத்ராதிகளும் தானுமாய் ஜீவிக்குமத்தையுந் தவிர்ந்து, பரமபதத்தேபோய் (க) " ஹாஉஹாஉஹாஉ - அஹமந்நமஹமந்நமஹமந்நம் " என்று களிக்குமத்தையும்விட்டு, கேவலம் தானேயாகை,

(புயலி த்யாதி) வர்ஷுக வலாஹகம்போலே யிருக்கிற திருமேனியைக்காட்டி ஸர்வலோகத்தையு மெழுதிக்கொண் டிருக்கிறவனுடைய' புனையப்பட்டபூவையும் வீரக்கழலையுமுடைய திருவடிகளின் கீழே; விரும்பானாலும் விடவொண்ணாத ஸம்பந்தத்தை யுடையவனென்கை.(சயமேயடிமைதலைநின்றார்) ஸ்வயம்ப்ரயோஜநமாகவெல்லாவடிமைகளும் செய்யுமவர்களென்னுதல். அவனுடைய ஸௌந்தர்யத்திலேதோற்று எல்லாவடிமைகளும் செய்யுமவர்களென்னுதல். (சயம்) ஸ்வயமென்னுதல், ஜயமென்னுதல். (திருத்தாள்வணங்கி) தேஹாதிரிக்தமாய் நித்யமானவாத்மவஸ்துவை ப்ராபிக்குமதிலும், அவன்வடிவழகிலே தோற்றிருக்குமவர்கள்வடிவிலேகதேஶமமையுமென்கிறார்.

(இம்மையேபயனேயின்பம்) ஶரீரத்தைவிட்டுப்போ யநுபவிக்கு மதன்றிக்கே, இஹலோகத்திலே ப்ரயோஜநரூபமான ஸுகமாயிற்று. யான்பெற்றது, ஒரு ஸாதநாநுஷ்டானம் பண்ணி " கைபுகுரும் " என்று நினைத்திருக்கையன்றிக்கே. (உறுமோ) இத்தோடொக்குமோ. (பாவியேனுக்கே) நிலைநின்றபுருஷார்த்தத்தினெல்லைக்கும் புருஷார்த்தத்துக்கும் வாசி சொல்லும்படியான பாபத்தை

(க) தை-ப்ருகு-கக-

ப்பண்ணினேன். பகவத்விஷயமல்லாமையாலே ஆத்மப்ராப்தி அபுருஷார்த்தம்; ஐஶ்வர்யம்போலே அஸ்த்திரமல்லாமையாலே நிலைநின்றபுருஷார்த்த மென்கை. (௨)

மூன்றாம்பாட்டு.

உறுமோபாவியேனுக்கிவ்வுலகமூன்று முடன்நிறைய * சிறுமாமேனிநிமிர்த்த வெஞ்சேந்தாமரைக்கண்திருக்குறளன் * நறுமாவிரைநாண்மலரடிக்கீழ்ப் புகுதலன்றியவனடியார் * சிறுமாமனிசராயென்னை யாண்டாரிங்கேதிரியவே. (௩)

ப:—அநந்தரம், அபேக்ஷஜ்ஞ ஸம்ஶ்லேஷ ஸ்வபாவனான வாமநன் திருவடிகளைப் பெறுகையும், அவனடியாரான பாகவதரிங்கே ஸந்நிஹிதராயிருக்கிற விதிலும் சீரிதல்ல வென்கிறார்.

(இ - ள்.) இ-தன் வாசியறியாத விந்த, உலகமூன்றும்-ஜகத்த்ரயமும், உடன் - ஏகோத்யோகத்திலே, நிறைய-நிறையும்படியாக, சிறு - சிறுங்கி யநுபவிக்கும்படி சிறியதாய், மா - தர்ஶநீயமான வைலக்ஷண்ய மாஹாத்ம்யத்தையுடைத்தான, மேனி - திருமேனியை, நிமிர்த்த-வளரும்படிபண்ணினவனாய், எம் - எனக்கு நிரதிஶய போக்யமாய், செம் - சிவந்த, தாமரை - தாமரைபோலே யிருக்கிற, கண் - கண்ணையுடையனான, திருக்குறளன் - ஸ்ரீவாமநனுடைய, நறு - பரிமளத்தையுடைத்தாய், மா - ஶ்லாக்யமான, விரை - மதுவையுடைத்தான, நாண்மலர் - செவ்விப்பூப்போலேயிருக்கிற, அடிக்கீழ் - திருவடிகளின்கீழே யடிமை செய்து, புகுதல் - ப்ராபிக்கையாவது, அவன் - அந்தவாமநனுக்கு, அடியார் - சேஷபூதராய், சிறு-மநுஷ்யஸஜாதீயதையாகிற சிறுமை தோற்றச்செய்தே, மாமனிசராய் - ஸம்ஸாரிகளுக்கு மவ்வருகான ப்ரத்யாஸத்தியையுடைய மஹாபுருஷராய், அந்த நீர்மையாலும் மேன்மையாலும் என்னை - என்னை, ஆண்டார் - அடிமைகொண்டவர்கள், இங்கே-இந்த லோகத்திலே, திரிய - கண்காண வர்த்தியாநிற்க, அன்றி-அதன்றியே, பாவியேனுக்கு - ததீயஶேஷத்வமாகிற சரமாவதிக்கும் தச்சேஷத்வமாகிற ப்ரதமாவதிக்கும் வாசி சொல்லவேண்டும்படியான பாபத்தையுடைய வெனக்கு, உறுமோ - சீரிதோ.

ததீயசேஷத்வபர்யந்தமான தச்சேஷத்வமொழிய, தச்சேஷத்வ மாத்ரம் சீரிதன்றென்று கருத்து. (௩)

ஆறு:—(உறுமோபாவியேனுக்கு) வடிவு சிறுத்து மஹாமாஹாத்ம்யங்களையுடையார் என்னையடிமைகொண்ட ஸ்ரீவைஷ்ணவர்களிங்கேதிரிய, அவர்களைத் தவிர்ந்து, இவ்வுலகமூன்று முட்டின்றிநிறையச் சிறுமாமேனி நிமிர்த்தருளின செந்தாமரைக் கண்களையுடையனான ஸ்ரீவாமநனுடைய, நல்ல பரிமளத்தையுடைய நாட்பூப்போலேயிருக்கிற திருவடிக்கீழே புகுகையுறுமோ பாவியேனுக்கென்கிறார். (௩)

ஈடு ; அவ: —ஐஶ்வர்யகைவல்யங்களில் விலக்ஷணமான பகவல்லாபமுண்டானாலும், இங்கேயிருந்து ஸ்ரீவைஷ்ணவர்களுக்கடிமை செய்கைபோலொவ்வாதென்கிறார். * உலகமளந்த பொன்னடிக்கு நல்ல ஸ்ரீவைஷ்ணவர்களிங்கேயிருந்து என்னையடிமைகொள்ளில், உலகமளந்தவன்திருவடிகளிலடிமைதானுறுமோ வென்கிறார்.

(உறுமோ பாவியேனுக்கு) ஆத்மாநுபவத்தையுமைஶ்வர்யத்தையுங் குறித்துச் சொன்னவார்த்தையை, பகவத்விஷயத்திலும் சொல்லுகிறார். (உறுமோ பாவியேனுக்கு) கீழ்ச்சொன்னவைபோலே கழிக்கவொண்ணாது, புருஷார்த்தத்தினெல்லையல்லாமையாலே கழிக்கவேணும். (பாவியேன்) ப்ரதமாவதிக்கும், சரமாவதிக்கும் வாசி சொல்லவேண்டும்படி பாபத்தைப்பண்ணினேன். [உலகமூன்றுமுடன்நிறைய என்று தொடங்கி, நாண்மலரடிக்கீழ்ப் புகுதல் - உறுமோ] (இவ்வுலகமூன்று முட்னிறைய) சிலவேரிகள் வற்றி, பாழாய்க்கிடக்க, நினைவின்றிக்கேவர்ஷியா, நிறைந்துநிற்குமாபோலே, தன்வாசியறியாத மூன்றுலோகங்களுமொருக்காலே நிறையும்படி.

(சிறுமாமேனிநிமிர்த்த) கண்ணாலே முகந்தநுபவிக்கலாம்படி சிறுத்து, வைலக்ஷண்யத்துக் கெல்லையின்றிக்கேயிருக்கிற திருமேனியை நிமிர்த்த. (எம்) (௧) "உன்னைப்பிரமாணித்தார் பெற்றபேறு" என்கிறபடியே. ஆஶ்ரிதர்க்காகச்செய்த செயலிறே, (செந்தாமரை யித்யாதி) விகாஸம், செவ்வி, குளிர்த்திகளுக்குத் தாமரையை யொப்பாகச் சொல்லலாம்படியிருக்கிற கண்ணழகையுடைய ஸ்ரீவாமநனுடைய, அழகிய மிக்கபரிமளத்தையுடைத்தான நாட்பூப்போலேயிருக்கிற திருவடிகளின் கீழே.

---

(௧) உ-திருவ ௬௧

(நறுமாவிரை) நன்றாய் மிக்க பரிமளம் ; இதுகாணு மிவர்க்கு வேப்பங்குடிநீராய், " உறுமோ " என்றுகழிக்கிறது. பகவத்விஷயத்தில் வெளிறுகழிந்த வம்ஶமானது வாய்த்து, இவர்க்கு பாகவத புருஷார்த்தத்தைப்பற்றுக் கழிப்பனுகிறது. (அன்றி) அத்தைத் தவிர்ந்து. (அவனடியார்) ஸ்ரீவாமனனுடைய வழகிலே தோற்றிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்கள்; அவர்களாகிறார் (க) " முன்னைக் குறளுருவாய் மூவடிமண்கொண்டளந்த-மன்னன்சரிதைக்கேமாலாகிப்பொன் பயந்தேன் " என்றிருக்குமவர்கள். (சிறுமாமனிசராய்) வடிவு சிறுத்து ப்ரபாவம் கனத்திருக்குமவர்கள்.

" சிறுமைபெருமையாகிற விருத்த தர்மத்வயத்துக்கு ஏகதர்மியில் ஸமாவேஶம் கூடினபடி யெங்ஙனே " என்று பட்டர் பால்யத்திலே ஆழ்வானைக் கேட்க, " நம்மோடொக்க 'அந்நபாநாதிகள் தாரகம்' என்னலாய். பகவத்விஷயத்தி லவகாஹநம்பார்த்தால் 'நித்யஸூரிகளோடொப்பர்கள்' என்னலாயிருக்கிற ஆண்டான், அருளாளப்பெருமாள், ஸ்ரீகோவிந்தப்பெருமாள், இவர்கள்காண் சிறுமாமனிசராகிறார்கள் " என்று பணித்தான்.

(என்னையாண்டார்) என்னையடிமைகொண்டவர்கள். (இங்கே திரிய) என்கண்வட்டத்திலே ஸஞ்சரியாநிற்க. (அன்றி-அவர்களைத் தவிர்ந்து, நறுமாவிரைநாண்மலரடிக் கீழ்ப்புகுதல் - உறுமோபாவியேனுக்கு) இவருடைய கண்ணிநுண்சிறுத்தாம்பிருக்கிறபடி. ஸ்ரீமதுரகவிகளுக்கு மடியிதிறே. * பொய்ந்நின்ற ஞானந்தொடங்கி * முனியேநான்முகனளவு மிவரையநுவர்த்தித்தவிடத்து, ஆழ்வார், தமக்கு ப்ரயோஜநரூபமாகச்சொன்ன * பயிலுஞ்சுடரொளி, * நெடுமாற்கடிமையே தமக்குத்தஞ்சமாகப்பற்றினர். (உ) " யாந்யஸ்மாகம் ஸுசரிதாநி " என்னக்கடவதிறே. (௩)

நான்காம்பாட்டு.

இங்கேதிரிந்தேற்கிழுக்குற்றென்னிருமாநில முன்னுண்டுமிழ்ந்த* செங்கோலத்தபவளவாய்ச் செந்தாமரைக்கணென்னம்மான்* பொங்கேழ் புகழ்கள்வாயவாய்ப் புலன்கொள்வடி வென்மனத்ததாய் * அங்கேமலர்கள் கையவாய் வழிபட்டோடவருளிலே. (௪)

(க) தி-மொ-௯-அ-உ (உ) தை-ஶிக்ஷா-௧௧

ப:—அநந்தரம், ததீயர் நடையாடுகிற விந்தவிபூதியிலே, அவர்களுக்குகப்பாம்படி ஆபத்ஸகனை வனுடைய கைங்கர்யமும் ஸித்தித்தால் குறையில்லையென்கிறார்.

(இ-ள்.) இரு - விஸ்தீர்ணமாய், மா - ஶ்லாக்யமான, நிலம்-ஜகத்தை, முன் - ப்ரளயாபத்துவந்தவளவிலே, உண்டு-அமுதுசெய்து, உமிழ்ந்த - அநந்தரத்திலே யுமிழுகிறபோதை, செ-சிவந்த, கோலத்த-அழகையுடைத்தான பவளம் - பவளம்போலேயிருக்கிற, வாய்-திருவதரத்தையும், செ - சிவந்த, தாமரை - தாமரைபோலேயிருக்கிற, கண் கண்ணையுமுடையனை, என் - என், அம்மான்-ஸ்வாமியானவன், பொங்கு வர்த்தித்து, ஏழ் - கிளம்புகிற, புகழ்கள் - தன்குணங்களானவை, வாய வாய் - வாக்விஷயமாகவும். புலன்கொள்-ஸர்வேந்த்ரியாபஹாரியான, வடிவு - வடிவு, என், மனத்ததாய் - நெஞ்சிலேயாகவும், அங்கு - அங்குத்தைக்கு, ஏய் - அநுரூபமான, மலர்கள் - புஷ்பங்கள், கையவாய் - கையிலேயாகவும், வழி - பாகவதர், முன்பு கரணத்ரயத்தாலும் பண்ணிப்போந்த கைங்கர்யமார்க்கத்திலே, பட்டு - நானுமுடன்பட்டு ஒட நடக்கும்படியாக, அருளில்-அருளுமாகில், ஒருதேஶவிஶேஷாபேக்ஷையுண்டோ, இங்கே - இந்தவிபூதிதன்னிலே, திரிந்தேற்கு-இப்படித்திரிவேனனவெனக்கு, என் - ஏது, இழுக்குற்று - தாழ்வாயிற்று. (௪)

ஆறு:—(இங்கே) பாகவதகைங்கர்யரூப புருஷார்த்தத்துக்கு வர்த்தகமான பகவதநுபவம் ஸம்பூர்ணமாகக்கிடைக்கைக்கு ஸ்ரீவைகுண்டத்தேறப் போகவேண்டாவோவென்னில்; அவ்வநுபவமிங்கேகிடைக்குமாகில் இங்கேவர்த்தித்தால் சேதமென்னென்கிறார். (௪)

ஈடு; அவ:—ஸ்ரீவைஷ்ணவர்களுக்குகப்பான பகவத்கைங்கர்யம் ஸித்திக்குமாகில், அவர்கள் ஸஞ்சாரத்தாலே ஶ்லாக்யமான விஜ்ஜகத்திலிருப்பே புருஷார்த்தமென்கிறார். (இங்கேதிரிந்தேற்கு) "சிறுமாமனிசர்" என்றீர், "இங்கே" என்றீர், இது * இருள்தருமாஞாலமன்றோ, பாகவதகைங்கர்யத்துக்கு வர்த்தகமான பகவதநுபவம் பூர்ணமாகக்கிடைப்பது பரமபதத்திலே யன்றோவென்னில்; அவ்வநுபவம் அவன்ப்ரஸாதத்தாலே யிங்கேகிடைக்குமாகில் இங்கேவர்த்தித்தால் சேதமென்னென்கிறோமென்றுமாம். அங்குத்தையநுபவத்துக்கும் அவன்ப்ரஸாதமேயிறே ஹேது; அதிங்கே கிட்டுமாகில் சேதமென்னென்கை.

(இழுக்குற்றேன்) தண்மையென்? (இருமாநிலமுன்னுண்டுமிழ்ந்த) மிக்கபரப்பையுடைத்தான பூமியை ப்ரளயகாலத்திலே வயிற்றிலேவைத்துநோக்கி, ஸ்ருஷ்டிகாலம் வந்தவாறேயுமிழ்ந்த. (செங்கோலத்தபவளவாய்) ப்ரளயத்திலேதள்ளினாலும் விடவொண்ணாத திருவதரத்தையுடையவன். சிவந்தழகிதான பவளம்போலேயிருந்துள்ள திருவதரம். (செந்தாமரைக்கணென்னம்மான்) என்னை, நோக்காலே (௧) "ஜிதம்-ஜிதம" என்னப்பண்ணினவன். உத்தமான குணத்தாலுமழகாலுமென்னையெழுதிக் கொண்டவன்.

(பொங்கித்யாதி) பொங்கி - பரந்து; கேழ் - அழகு. பொங்கியெழாநின்றுள்ள கல்யாணகுணங்கள் வாயிலேயுளவாய், ஆற்றுப்பெருக்குப்போலே கிளர்த்தியையுடைத்தாய், புக்காரைக்கொண்டு கிளரவற்றான குணங்கள், (புலன்கொள்வடிவென்மனத்ததாய்) ஸர்வேந்த்ரியாபஹார க்ஷமமானவடிவு என்மநஸ்ஸிலே ஸந்நிஹிதமாய். (அங்கேமலர்கள்கையவாய்) அவ்வடிவுக்கநுரூபமான மலர்கள் கையிலேயுளவாய் (வழிபட்டோடவருளில்) நெறிபட்டுச் செல்லும்படியருளப்பெறில். மநோவாக்காயங்கள் அவன்திருவடிகளிலே நிரந்தரமாக வடிமைசெய்யும்படி அவன் ப்ரஸாதத்தைப்பெறில்-(இங்கேதிரிந்தேற்கிழுக்குற்றென.) பாகவதப்ரீதிரூபமான பகவத்கைங்கர்யத்தை அவன்ப்ரஸாதத்தாலே இங்கேபெறில் எனக்கதுவே புருஷார்த்தமென்கிறார். (௪)

ஐந்தாம்பாட்டு.

வழிபட்டோடவருள்பெற்று மாயன் கோலமலரடிக்கீழ்* சுழிபட்டோடுஞ் சுடர்ச்சோதிவெள்ளத்தின் புற்றிருந்தாலும் * இழிபட்டோடுமுடலினிற்பிறந்து தன்சீரியான்கற்று * மொழிபட்டோடுங்கவியமுதநுகர்ச்சியுறுமோமுழுதுமே. (௫)

ப:— அநந்தரம், ஆஶ்சர்ய ஸ்வரூபஸ்வபாவனான ஸர்வேஶ்வரனுடைய பரமபதத்திலே நிரதிஶயாநந்தியாயிருந்தாலும், அத்தோடே ஐஶ்வர்யாதிகளெல்லாம் கூடினாலும், இங்கே ஹேயஶரீரபரிக்ரஹம் பண்ணியிருந்து பாகவதருக்குகப்பாகத் திருவாய்மொழிபாடி ரஸிக்குமதுக்கு ஸத்ருஶமோவென்கிறார்.

---

(௧) ஜித-௧௧

(இ-ள்.) நித்யகைங்கர்யத்திலே, வழிப்பட்டு - நெறிபட்டு, ஓட-செல்லும்படி, அருள் - அவன்ப்ரஸாதத்தை, பெற்று-லபித்து, மாயன்-ஆஶ்சர்யஸ்வரூபரூபகுண விபூதிகளை ஸர்வேஶ்வரனுடைய, கோலமலர்-நிரதிஶயபோக்யமான, அடிக்கீழ் - திருவடிகளின்கீழே, சுழிபட்டு-சுழித்து, ஓடும்-ஓடுகிற, சுடர்-ப்ரபையையுடைத்தான, சோதிவெள்ளத்து - தேஜோராஶிரூபமான பரமபதத்திலே, இன்புற்று-நிரதிஶயாநந்தியாய், இருந்தாலும் - இருந்தாலும், முழுதும் - கீழ்ச்சொன்ன ஐஶ்வர்யகைவல்யாதிகள் ஸமஸ்தமும் கூடினாலும், இழிபட்டு-தாழ்ச்சியிலே, ஓடும் - மிகவும் கைகழியப்போவதான, உடலினில் - ஶரீரத்திலே, பிறந்து - பிறந்து, தன் - நிரதிசயபோக்யபூதனான தன்னுடைய, சீர் - குணங்களை, யான் - அதுக்கத்யந்ததூரஸ்தனான நான், கற்று - அப்யஸித்து, மொழிபட்டு - அந்தவநுபவஜநிதப்ரீதிசொல்லாய், ஓடும்-ப்ரவஹிக்கிற, கவி-கவியாகிற, அமுதம்-அம்ருதத்தை (க)"தொண்டர்க்கமுதுண்ண," (உ) "அடியார்க்கின்பமாரி," (ங) "கேட்டாரார்வானவர்கள்" என்கிறபடியே, நுகர்ச்சி - ததீயரோடேகூட வநுபவித்து ரஸிக்கையை, உறுமோ - சேரவற்றோ. (ச)

ஆறு:—(வழிபட்டோட) விரோதிரூப ஸம்ஸாரமார்க்க பரிவர்த்திகளான வாத்மாக்களுக்கு, பாகவதஶேஷத்வவர்த்தக பகவதநுபவப்ரீதி ஸித்திக்குமோவென்னில்;

அந்த ஸம்ஸார நிவருத்திபூர்வக பகவதநுபவபர்யந்தான, இங்கே திருவாய்மொழியைக் கொண்டு எம்பெருமானை யநுபவித்தால் வரும் ப்ரீதிக்குப் போருமோவென்கிறார். (ரு)

ஈடு; அவ:—இப்படிப்பட்ட பகவத்ப்ராப்தியும், கீழ்ச்சொன்ன புருஷார்த்தங்களு மெல்லாங்கூடினாலும், (ச)"தொண்டர்க்கமுதுண்ணச் சொன்மாலைகள் சொன்னேன்" என்கிறபடியே, பாகவதர்களுக்கு ப்ரியமாகத் திருவாய்மொழிபாடி யடிமைசெய்யு மித்தோடொக்குமோவென்கிறார்.

(வழிபட்டோடவருள்பெற்று) கைங்கர்யத்திலே நெறிபட்டுச் செல்லும்படி அவன் ப்ரஸாதத்தைப்பெற்று. நித்யகைங்கர்யம்பண்ணும்படியாக. (மாயன்) ஸௌந்தர்ய ஶீலாதிகளா லாஶ்சர்யபூதனு

(க) கூ-ச-கூ (உ) ச-ரு-கo

(ங) கo-கூ-கக (ச) கூ-ச-கூ

னவன். (கோலமலரடிக்கீழ்) தர்ஸநீயமான புஷ்பம்போலேயிருந்துள்ள திருவடிகளின்கீழே. (சுழிபட்டோடும் சுடர்ச்சோதிவெள்ளத்து) ஆற்றுப்பெருக்குப்போலே சுழித்துச்செல்லுகிற தேஜஸ்தரங்கங்களையுடைத்தானபரமபதத்திலே, (க) "ஆதித்யவர்ணம் தமஸ: பரஸ்தாத்—அத்யர்க்காநலதீப்தம் தத்ஸ்தாநம்" என்னக்கடவதிறே. (இன்புற்றிருந்தாலும்) (உ) "ஸஹ ப்ரஹ்மணா விபஶ்சிதா—ஏஷஹ்யேவாநந்தயாதி" என்று அவனாநந்திப்பிக்க, ஆநந்தநிர்ப்பரனாயிருந்தாலும்.

(முழுதும்) கீழ்ச்சொன்ன வைஶ்வர்யாதிகளு மிதோடேகூடப்பெற்றாலும். (இழிபட்டோடுமுடலினிற்பிறந்து) தாழ்வுக்கெல்லையாம்படி கைகழியப்போன ஶரீரத்தோடே பிறந்து. (தன்சீர்) நித்யஸூரிகளும் குமிழிநீருண்ணும் கல்யாணகுணங்களை. (யான்கற்று) நித்யஸம்ஸாரியாய், அந்தக்குணங்களுக்கடைவில்லாத நானறிந்து. (மொழிபட்டோடும்) அவையுள்ளடங்காமையாலே சொல்லாய் ப்ரவஹியாநின்றுள்ள. (கவியமுதநுகர்ச்சியுறுமோ) திருவாய்மொழியாகிற வம்ருதத்தை யநுபவிக்கையோடொக்குமோ- சுடர்ச்சோதிவெள்ளத்தின் புற்றிருந்தாலும் - முழுதும். "அவனடியார் சிறுமாமனிசராயென்னை யாண்டாரிங்கேதிரிய - நறுமாவிரைநாண்மலரடிக்கீழ்ப்புகுதல் - உறுமோ" என்றாரேகீழே; அத்தைவிட்டு (கவியமுதம்நுகர்ச்சி யுறுமோமுழுதும்) என்கிறார். அத்தைவிட்டாராயிருக்கிறதேதவென்னில்; விட்டிலர். (ங) "தொண்டர்க்கமுதுண்ணச் சொன்மாலைகள்" என்கையாலே, அவர்களுக்கடிமை செய்கிறபடி. (ரு)

ஆறாம்பாட்டு.

நுகர்ச்சியுறுமோமூவுலகின்வீடு பேறுதன்கேழில்* புகர்ச்செம்முகத்தகளிறட்ட பொன்னாழிக்கை யென்னம்மான்* நிகர்ச்செம்பங்கியெரிவிழிகள் நீண்டவசுரருயிரெல்லாம் * தகர்த்துண்டுழலும் புட்பாகன் பெரியதனிமாப்புகழே (சு)

(க) பார-ஆர- (உ) தை-ஆ-
(ங. சு-சு-

ப:—அநந்தரம், விரோதிநிரஸந ஶீலனான ஸர்வேஶ்வரனுடைய குணங்களை பாகவதப்ரீணநமான திருவாய்மொழிமுகத்தாலே யநுபவிக்குமதத்தை, ஜகத்காரணபூதனான ஈஶ்வரனாயிருக்கு மிருப்புத்தானெனக்கவற்றோவென்கிறார்.

(இ - ள்.) தன் - தனக்கு, கேழ் - ஒப்பு, இல் - இன்றியேயிருப்பதாய், புகர் - புகரையுடைத்தாய், செ - சீற்றத்தாலேசிவந்த, முகத்த - முகத்தையுடைத்தான, களிறு - ஆனையை, அட்ட - அடர்த்தடித்த. பொன்-ஸ்ப்ருஹணீயமான, ஆழி-திருவாழிமோதிரத்தையுடைய, கை-திருக்கையையுடையனான, என் - என், அம்மான் - ஸ்வாமியாய், நிகர்-ஜாதிக்குஸத்ருஶமாய், செ-சிவந்த. பங்கி-நாலுநிறமயிர்களையும், எரி - அக்நிசக்ரம்போலேயிருக்கிற, விழிகள்-விழிகளையுமுடைத்தாய்,நீண்ட-உத்துங்கசரீரரான, அசுரர் - அசுரர்களுடைய உயிரெல்லாம்-ப்ராணன்களையெல்லாம், தகர்த்து - பீடித்து, உண்டு - க்ரஸித்து, உழலும்-ஸஞ்சரிக்கிற, புள் - பெரியதிருவடிக்கு, பாகன் - நியந்தாவானவனுடைய, பெரிய - அபரிச்சிந்நமாய், தனி - அத்விதீயமாய், மா-அதிசயிதபோக்யமான, புகழ் - குணகணங்களை, நுகர்ச்சி - பாகவதப்ரீணநமான திருவாய்மொழிமுகத்தாலே யநுபவித்தநுபவிக்கையை, மூவுலகின் - ஜகத்த்ரயவிஷயமான, வீடு - ஸ்ரஷ்ட்ருத்வத்தை, பேறு-பெற்றிருக்கு மீஶ்வரத்வமானது. உறுமோ - கிட்டவற்றோ.

உலகின்வீடு - லோகத்தை ஸ்ருஷ்டிக்கை, பங்கி - நான்றகுழல், நிகர்ச்செம்பங்கி யெரிவிழியென்று - கண்ணுக்குவிசேஷணமாய் ஒப்பமிட்ட வொளியையுடைய செம்புகாய்ந்த நெருப்புப்போலே அழலுமிழ்கிற விழியென்றுமாம். (௬)

ஆறு:—(நுகர்ச்சி) ஸம்ஸாரநிவ்ருத்தி பூர்வக பகவதநுபவப்ரீதியும் ஸ்வாதீநாகிலலோக பகவதாநந்தமும் கூடினால்தான், திருவாய்மொழியாலே யெம்பெருமானை யநுபவித்தாலுள்ள ப்ரீதிக்குப்போருமோவென்கிறார். (௬)

ஈடு-அவ:—உத்தமமான வைஶ்வர்யாதிகளும், மோக்ஷியாய் ஜகஜ்ஜந்மாதிகாரணமான ஸர்வேஶ்வரனாய் நிரதிஶயாநந்தியாயிருக்குமிருப்பும், பாகவத ப்ரீதிரூபமாகத் திருவாய்மொழிபாடி யநுபவிக்கும் ரஸத்தோடொவ்வாதென்கிறார். புட்பாகனுடைய பெரியவொப்பில்லாத விலக்ஷணமானபுகழைத் திருவாய்மொழியாலே நுகருமதுக்கு, விபுவான வவனுடைய வாநந்தமும் போராதென்கிறார்.

(நுகர்ச்சியுறுமோ) திருவாய்மொழிமுகத்தாலே பகவத்குணங்களை யநுபவிக்குமத்தோடொக்குமோ. (மூவுலகின்வீடுபேறு) தன் ஸங்கல்பைகதேசத்தாலே ஜகத்ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்களாம்படியிருக்கிற வைஸ்வர்யந்தான் அத்தோடொக்குமோ. அவனுக்கிறே இதைஸ்வர்யமாய்த்தோற்றுவது; இவர்க்கு இது அபுருஷார்த்தமே; (க) "ஜமத்3வ்யாபாரவஜம் - ஜகத்வ்யாபாரவர்ஜம்" என்கிறபடியே. ஸ்வரூபாநுரூபமானவையிறே புருஷார்த்தமாவது. (தன்கேழிலீத்யாதி) மிடுக்குக்குத்தனக்கொப்பின்றிக்கே யிருப்பதாய், புகரையும், சீற்றத்தாலே சிவந்தமுகத்தையுமுடைத்தான களிறுண்டு - குவலயாபீடம், அத்தைமுடித்து. (பொன்னாழிக்கை) அழகியதிருவாழி மோதிரத்தாலே யலங்க்ருதமான திருக்கையையுடையவன். குவலயாபீடத்தின் கதுப்பிலே யடித்தபோது, கையுந்திருவாழிமோதிரமுமிருந்தபடி. (என்னம்மான்) கையுமறுகாழியுமான வடிவைக்காட்டியென்னை யெழுதிக்கொண்டவன். உகவாதாரை மிடுக்காலேயழித்தான், உகந்தாரை அழகாலேயழித்தான்.

(நிகரித்யாதி) ஜாதிப்ரயுக்தமான சிவந்தமயிரை யுடையராய், எரிபோலே விழியாநின்றுள்ள கண்களையுடையராய், பெரியவடிவையுடையரான ஸுராசர்களுடைய வுயிரையெல்லாம் தகர்த்துபுஜித்து, இதுதானே யாத்ரையாயிருக்கிற பெரியதிருவடியைக் கருத்தறிந்து நடத்துகிறவனுடைய, அபரிச்சிந்நமாய் உபமாநரஹிதமாயிருந்துள்ள கல்யாணகுணங்களை - திருவாய்மொழிமுகத்தாலே யநுபவிக்கு மநுபவத்தோடொக்குமோ. (மூவுலகின்வீடுபேறு) திருவாய்மொழிநுகருமாநந்தத்துக்கு, * ஏழுலகுந்தனிக் கோல்செல்லவீற்றிருக்குமாநந்தமும்போராதென்கிறார். (௬)

ஏழாம்பாட்டு.

* தனிமாப்புகழேயெஞ்ஞான்றும் நிற்கும்படியாத்தான்தோன்றி* முனிமாப்பிரமமுதல் வித்தாயுலகமூன்றும்முளைப்பித்த * தனிமாத் தெய்வத்தளிரடிக்கீழ்ப் புகுதலன்றியவனடியார் * நனிமாக்கலவி யின்பமேநாளும் வாய்க்கநங்கட்கே. (எ)

(க) ப்ரஹ்மஸூ ௪-௪-௧எ.

ப:—அநந்தரம், அகில ஜகத்காரணபூதனான ஸர்வேஶ்வரன் திருவடிகளை ப்ராபிக்குமதிலும், அவனுக்கு சேஷபூதரான பாகவதர்களுடைய ஸம்ஶ்லேஷமே நமக்கென்று மொக்கவுண்டாகவேணு மென்கிறார்.

(இ - ள்.) தனி-அத்விதீயமாய், மா-அதிசயிதாகாரமான, புகழே-காரணத்வப்ரயுக்த குணப்ரதையை, எஞ்ஞான்றும் - ஸர்வ காலமும், நிற்கும்படியா - வேதாந்தப்ரஸித்தமாய் நிற்கும்படியாக, ஸ்ருஷ்டிகாலம்வந்தவாறே, அபேக்ஷாநிரபேக்ஷமாக, தான் - தானே, தோன்றி-(க) "ஆஸீதிதம் தமோபூதம்-ப்ராதுராஸீத்தமோநுத:" என்கிறபடியே ஸ்ருஷ்ட்யுந்முகனாயாவிர்ப்பவித்து. முனி - (உ) "பஹுஸ்யாம்" என்கிற ஸங்கல்பத்தாலே ஸ்ருஷ்டிமநநத்தைப்பண்ணுவதாய், மாப்பிரமம் - பரப்ரஹ்மஶப்தவாச்யமாயுள்ள, முதல்-ப்ரதாநமாயுள்ள, வித்தாய் - உபாதாநகாரணமான, உலகமூன்றும் - ஜகத்த்ரயத்தையும், முளைப்பித்த - உத்பாதித்த, தனிமாத்தெய்வம்-அத்விதீயபரதேவதையினுடைய, தளிர்-அத்யந்தஸுகுமாரமான, அடிக்கீழ் - திருவடிகளின்கீழே, புகுதலன்றி - ப்ராபிக்கையன்றிக்கே, அவனடியார்-அந்தகாரணகுணங்களுக்குத்தோற் றடிமைப்பட்ட பாகவதர்களுடைய, நனி - மிகவும், மா - ஶ்லாக்யமான, கலவியின்பமே-ஸம்ஶ்லேஷஸுகமே, நங்கட்கு - நமக்கு, நாளும்-ஸர்வகாலமும், வாய்க்க-வாய்க்கவேணும். நனி - மிகுதி. (எ)

ஆறு;—(தனிமாப்புகழே) இங்கே யிப்போதே நான்பெற்றநுபவிக்கிற பாகவதசேஷத்வத்துக்கு வர்த்தகமான பகவதநுபவமும் இங்கே ஸித்திக்கபின்பு, இதுக்கு விரோதியான பகவதநுபவமும் வேண்டா, இதுக்குவர்த்தகமான பகவதநுபவ ஸம்வர்த்திதமான பாகவத ஸம்ஶ்லேஷஸுகமே நாளும் வாய்க்க நங்கட்கென்கிறார்.

ஈடு-அவ;—ஸ்வயம்புருஷார்த்தமாய்வரும் பகவதநுபவ மெனக்குவேண்டா, பாகவதர்களோடேகூடி யநுபவிக்கும் பகவதநுபவமே காலதத்த்வமுள்ள தனையு மெனக்குண்டாகவேணுமென்கிறார்.

(தனிமாவித்யாதி) உபமாநரஹிதமாய், ஶ்லாக்யமானபுகழே காலதத்த்வமுள்ளதனையும் நிற்கும்படியாக. (தான்தோன்றி) அவ்யக்தஶரீரனானான் (முனிமாப்பிரம முதல்வித்தாய்தோன்றி) அர்த்

(க) மநு ஸ்ம்-க-ரு (உ) சாந்-உ-ரு-உ

திப்பாரின்றிக்கேயிருக்க பூர்ணனாயிருக்கிறதான், தன்பேறாக (க) ,'பஹுஸ்யாம்' - பஹுஸ்யாம்'' என்று தோன்றி. (முனிமாப்பிரமமுதல்வித்தாய்) ஸங்கல்பிக்கிற பரப்ரஹ்மமாகிற பரமகாரணமாய், முனி - துறந்தவன். தேசாந்தரம்போன ப்ரஜையைத் தாய் நினைக்குமாபோலே, "இவையென்பட்டன" என்று திருவுள்ளத்தாலே நினைத்து, பரப்ரஹ்மமானதானே த்ரிவிதகாரணமுமாய். (உலகமூன்றும் முளைப்பித்த) கார்யவர்க்கமடையத் தன்பக்கலிலே யரும்பும்படி பண்ணினனாயிற்று; பஹுபவநஸங்கல்பமிருந்தபடி;

(தனியித்யாதி) ஒப்பில்லாத பரதேவதையினுடைய, தளிர்போலேயிருக்கிற திருவடிகளின்கீழே புகுதல். இதுகாணும் ஸ்ருஷ்டிப்ரயோஜநம், சேதநனாலுபகரித்தவன் திருவடிகளைப் பற்றவிறே ப்ராப்தம். (அன்றி) அத்தைவிட்டு. (அவனடியாரித்யாதி) அவ்வுபகாரத்திலே தோற்றெழுதிக் கொடுக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களோடுண்டான, மிக்கவிலக்ஷணமாயிருந்துள்ள ஸம்ஶ்லேஷ ஸுகமே நாள்தோறும்வாய்க்க. (நங்கட்கே) இத்தைவிரும்பி "இதுவே பேறு" என்றிருக்கிறநமக்கு, இது காலதத்த்வமுள்ளதனையும் கிட்டவேணும். (எ)

எட்டாம்பாட்டு.

நாளும்வாய்க்கநங்கட்கு நளிர்நீர்க்கடலைப் படைத்துத்தன் * தாளுந்தோளுமுடிகளுஞ்சமனிலாதபலபரப்பி* நீளும்படர்பூங்கற்பகக்காவும் நிறைபன்னாயிற்றின்* கோளுமுடைய மணிமலைபோல் கிடந்தான் தமர்கள்கூட்டமே. (அ)

ப:—அநந்தரம், ஏகார்ணவஶாயியான ஸர்வேஶ்வரனுடைய வடியாரோடுண்டான சேர்த்தியே நமக்கென்று முண்டாக வேணுமென்கிறார்.

(இ - ள்.) பூதாந்தர விகாரஸம்ஸர்க்க மில்லாமையாலே, நளிர் - ஶீதளஸ்வபாவமான, நீர் - ஜலத்தையுடைத்தான, கடலை - ஏகார்ணவத்தை, படைத்து-(உ) "அப ஏவ ஸஸர்ஜாதௌ - அப ஏவ ஸஸர்ஜாதௌ" என்கிறபடியே ஸ்ருஷ்டித்து, தன்-அநுபவேதனக்கஸாதாரண

(க) சாந்தோ-உ-சு உ (உ) மநுஸ் க-அ

திருவாய்மொழி, அ-ப, க௦-தி, அ-பா, நாளும் வ்யாக்யாநம். உசித

மாக வேதப்ரதிபாத்யமாய். சமன் - ஒப்பு, இலாத - இன்றியிலேயிருப்பதான, தாளும் - திருவடிகளையும், தோளும் - திருத்தோள்களையும், முடிகளும் - திருமுடிகளையும், பல - ஸஹஸ்ரஸங்க்யாதமாம்படி பலவாக, பரப்பி - பரப்பி, நீளும் - நீளாநிற்பதாய், படர் - பணைத்து, பூ - தர்ஶநீயமான, கற்பகக்காவும் - கற்பகச்சோலையையும், நிறை - நிறைந்த, பல் - கிரணத்தையுமுடையவாய், பலவான, நாயிற்றின்கோளும் - ஆதித்யதேஜஸ்ஸையும், உடைய - உடைத்தான, மணிமலைபோல் - மாணிக்கமலைபோலே, கிடந்தான் - கண்வளர்ந்தருளினவனுடைய, தமர்கள் - தமர்களோடுண்டான, கூட்டம் - சேர்த்தியானது, நங்கட்கு - நமக்கு, நாளும் - காலதத்த்வமுள்ளதனையும், வாய்க்க - உண்டாகவேணும்.

கூட்டம் - சேர்த்தி, அன்றியே, ஸங்கமாய், பாகவதஸங்கம் ஸந்நிஹிதமாகவேணுமென்றுமாம். (அ)

ஆறு;—(நாளும்வாய்க்க) அவர்களோடு ஸம்ஶ்லேஷம்வேணுமோ, ஸஹவாஸமாத்ரமே யென்றும் ஸித்திக்கவமையுமென்கிறார்.

ஈடு-அவ;—பாகவதர்களோட்டை ஸம்ஶ்லேஷஸுகம் வேணுமென்றார்கீழ்; அதெல்லாம்வேணுமோ, அவர்கள்திரளைக் கண்ணாலேகாணவமையுமென்கிறாரிதில்.

(நாளும்வாய்க்கவித்யாதி) இதுவே புருஷார்த்தமென்றிருக்கிறநமக்கு, இதுநாள்தோறும் வாய்க்கவேணும். (நளிர்நீர்க்கடலைப்படைத்து) ஶைத்யமே ஸ்வபாவமான ஜலத்தையுடைய கடலையுண்டாக்கி. கண்வளருகைக்கு ஸத்ருஶமான ஜலமென்கை. (சமனிலாத் தாளுந்தோளும்முடிகளும்) உபமாநரஹிதமான திவ்யாவயவங்கள் (பலபரப்பி) அக்கடலிலே பாழ்நிரும்படி வடிவாலேயலங்கரித்து. (நீளும்படர்பூங்கற்பகக்காவும்) நிரவதிகபோக்யமான பூப்போலேயிருக்கிறதாளும், கற்பகக்காவைப்போலேயிருக்கிற தோளும். தாளுந்தோளுமிருக்கிறபடி. (நிறைபன்னாயிற்றின்கோளும்) (க) "முடிகளாயிரத்தாய்" என்கிறத்தைச் சொல்லுகிறது. கோளென்று - தேஜஸ்ஸு. ஆயிரக்கோடி ஆதித்யர்களைத் திரட்டி முடியாக வகுத்தாப்போலேயிருக்கிறமுடி. கோளென்று - க்ரஹங்களாய், அவை

(க) கூ-க-க௦

தான் தேஜஃபதார்த்தங்களாகையாலே, தேஜஸ்ஸை லக்ஷிக்கிறது என்றுமாம்.

(மணிமலைபோல்கிடந்தான்) ஒருரத்நபர்வதம்சாய்ந்தாப்போலேயாயிற்றுக் கண்வளர்ந்தருளுகிறபடி. (தமர்கள்கூட்டமேநாளும் வாய்க்க) இப்படி வைத்தகண்வாங்கவொண்ணாதபடி கண்வளர்ந்தருளாநிற்கு மவனையன்று. நாளும்வாய்க்கவென்கிறது; (க) "கிடந்ததோர்கிடக்கை" என்று கிடையழகிலேதோற்றிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்கள்திரளிலே நாளுமொருவனை யந்வயிக்கவேணுமென்னுதல், அத்திரளைக்கண்ணாலேகாணவமையுமென்னுதல். பசியர் "கலவிரிசிச்சோறுண்ணவேணும்" என்னுமாபோலே, தம்பிநிவேசந்தோற்ற வருளிச் செய்கிறார். (உ) "ஸஹ்ருதவஸஹாஸீத ஸத்பிரேவஸஹாஸீத" என்றும், (ங) "ஈட்டங்கண்டிடக்கூடுமேல்" என்றும் சொல்லக்கடவதிறே. அவன்பண்ணினவுபகாரத்துக்குத் தோற்றிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களோடே ஸம்ஶ்லேஷிக்க வேணுமென்றார் கீழ்; கிடையழகிலே தோற்றிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்கள் திரளைக் கண்ணாலே காணவமையுமென்கிறாரிதில். (அ)

ஒன்பதாம்பாட்டு.

தமர்கள்கூட்டவல்வினையை நாசஞ்செய்யுஞ் சதுமூர்த்தி * அமர்கொளாழி சங்குவாள்வில்தண்டாதிபல்படையன் * குமரன் கோலவைங்கணைவேள்தாதை கோதிலடியார்தம் * தமர்கள்தமர்கள் தமர்களாஞ்சதிரே வாய்க்கதமியேற்கே. (கூ)

ப:—அநந்தரம், விரோதிநிரஸநோபகரணமான திவ்யாயுதங்களையுடையனான ஸர்வேஶ்வரனுக்கு சேஷபூதரான பாகவதர்களுடைய ஸம்பந்திஸம்பந்திகளுக்கு நாம் சேஷபூதராகையாகிற வுறுதிக்கோளானது நமக்குண்டாகவேணு மென்கிறார்.

(இ-ள்.) தமர்கள் - ஆஶ்ரிதருடைய, கூட்டம்-ஸங்கத்துக்குவரும், வல் - வலிய, வினையை - பாபங்களுடைய, நாசம் - ஸர்வப்ரகாரவிநாஶத்தை, செய்யும்-பண்ணும், சதிர்-ஸாமர்த்யத்தையுடைய, மூர்த்தி-

(க) திருமாலை உங.   (உ) மார்க்கண்டேயபு-
(ங) பெரு-தி-உ-க-

ஸ்வாமியாய், அமர் - விரோதிநிரஸநார்த்தமான யுத்தோத்யோகத்தை கொள் - உடைய, ஆழி சங்கு வாள் வில் தண்டாதி - ஸ்ரீபஞ்சாயுதப்ரமுகமான, பல்படையன் - நாநாவிதா ஸங்க்யேயாயுதங்களை யுடையனாய், குமரன் - விரோதிநிரஸந ஶக்திஸூசகமான பருவத்தி லிளமையை யுடையனாய், கோலம் - வடிவழகுக்கு மதிப்பனாய், ஐங்கணை-பஞ்சபாணனான, வேள் - காமனுக்கு, தாதை - உத்பாதகனான வைலக்ஷண்யத்தை யுடையனானவனுடைய, கோது - ப்ரயோஜநாந்தர ஸம்ஸர்க்கமாகிற கோது, இல் - இல்லாத, அடியார்தம் - அடியார்க்கு, தமர்கள் - ஶேஷபூதரானார்க்கு, தமர்கள் - ஶேஷபூதரானவர்களைப்பற்ற, தமர்களாம் - தாஸ்யஸம்பந்தத்தை யுடையோமாகிற, சதிர் - அருள்சோரானது, தமியேற்கு-ஸம்ஸாரத்தி லஸஹாயரான நமக்கு, வாய்க்க-உண்டாகவேணும்.

கூட்ட வல்வினை யென்று - ஸங்கரூப பாபமாகவுமாம்; சதுமூர்த்தியென்றுபாடமாய், விக்ரஹபேதத்தைச் சொல்லிற்றாகவுமாம். (௬)

ஆர்;—(தமர்கள்) அவர்களோடு ஸஹவாஸந்தான் வேணுமோ, அவர்களடியாரடியா ரடியாராம் சதிரேவாய்க்கவமையுமென்கிறார்.

ஈடு; அவ;—ஸ்ரீவைஷ்ணவர்களுடன் ஸஹவாஸந்தான்வேணுமோ, அவர்களுடைய ஶேஷத்வத்திலே முடிந்த நிலமாகவமையுமென்கிறார்.

(தமர்கள்கூட்ட வல்வினையை நாசஞ்செய்யும்) ஸ்ரீவைஷ்ணவர்களுடைய திரளுக்குவரும் வல்வினையை நாசஞ்செய்யுமென்னவுமாம். அன்றிக்கே, தமர்களுடைய, கூட்டமானவல்வினையை - திரண்டவல்வினையை, நசிப்பிக்குமென்னவுமாம். அன்றிக்கே, தமர்கள் வல்வினையைக்கூட்ட, அத்தை நசிப்பிக்குமென்னுதல். இவனுக்குக் கூட்டுகையே ஸ்வபாவமானாப்போலே, அவனுக்குக் கழிக்கையே யாத்ரையாயிருக்கிறபடி. (சதுமூர்த்தி) விரோதியைப்போக்குகைக்கேகாந்தமான பலவடிவுகளையும் கொள்ளாநிற்கும்: இவர்கள், கைங்கர்யத்துக்குப் பலவடிவுகொள்ளுமாபோலேயாயிற்று, அவன் ரக்ஷணார்த்தமாகப் பலவடிவுகொள்ளும்படி.

(அமர்கொளித்யாதி) விரோதிநிரஸநத்துக் குறுப்பாக யுத்தோத்முகமான திருவாழிதொடக்கமான திவ்யாயுதத்தை யுடைய

வன். (குமரன்) நித்யயுவாவாயிருக்கும். (கோலமித்யாதி) பஞ்சபாணனான காமனுக்கு முத்பாதகனானவன். " அழகுக்கெனக்குமேலில்லை " என்றிருக்கும் காமனுக்கு மழகுக்கு உத்பத்திஸ்த்தாநமாயிருக்குமென்னை. அப்பருவத்துக்கு மழகுக்குந்தோற்றிருக்கு மநந்யப்ரயோஜநரான ஸ்ரீவைஷ்ணவர்களுடைய வடிமையில் முடிந்த நிலமாகவேணுமென்கிறார்.

(சதிரேவாய்க்க) இந்தநிரதிசயபுருஷார்த்த மென்றுமொக்கவேணும். (தமியேற்கே) பூதகாலத்திலும் ஸ்ரீமத்ருக்நாழ்வானைத் தேடிப்பிடிக்கவேண்டுகையாலே, வர்த்தமாநகாலத்தில் தமக்கு உபமாநமின்றிக்கேயிருக்கை. கீழ் " நங்கட்கு " என்றார், * கேசவன் தமர்க்குப்பின்பு தனியரல்லாமையாலே; இங்கு (தமியேற்கு) என்கிறது, ஸம்ஸாரிகளில் தமக்கு உபமாநமில்லாமையாலே. (கூ)

பத்தாம்பாட்டு.

வாய்க்கதமியேற்கூழிதோறூழி யூழிமாகாயாம் * பூக்கோள்
மேனிநான்குதோள்பொன்னாழிக்கை யென்னம்மான்* நீக்கமில்லா
வடியார்தம்மடியாரடியாரடியாரெங் கோக்கள் * அவர்க்கே குடிக
ளாய்ச்செல்லும் நல்லகோட்பாடே. (கo)

ப:—அநந்தரம், அதிசயிதாநுபாவ்யமான வாகாராவயவசோபைகளையுடைய ஸர்வேஸ்வரனுக்கு அப்ருதக்ஸித்தசேஷபூதரானாருடைய ஸய்யந்தி பரம்பரையினுடைய வெல்லையிலே யடிமைசெய்து நடக்கையாகிற வுத்யோகமானது கல்பந்தோறு முண்டாகவேணுமென்கிறார்.

(இ-ள்.) மா - தர்ஸநீயவைலக்ஷண்யத்தை யுடைத்தான, காயாம் பூ - காயாம்பூநிறத்தை, கொள் - கொள்வதான, மேனி-திருமேனியையும், நான்குதோள் - ஆஸ்ரிதர்க் கொதுங்கநிழலான நாலுதிருத்தோள்களையும், பொன் - ஸ்ப்ருஹணீயமான, ஆழி - திருவாழியையுடைய, கை-திருக்கையையுமுடைய, என்-இவ்வடிவழகைக் காட்டி யென்னை யெழுதிக்கொண்ட, அம்மான் - ஸ்வாமியானவனை, நீக்கம்-பிரிவு, இல்லா - இல்லாதபடி யநுபவிக்கிற, அடியார்தம்-அடியார்க்கு, அடியாரடியாரடியார் - அஸாதாரண ஸேஷபரம்பரையிலுள்ளார், எம் - எனக்குமென்னோடு ஸம்பந்தமுடையார்க்கும், கோக்கள் - ஸேஷிகள் அவர்க்

கே - அவர்களுக்கே, குடிகளாய் - சேஷவ்ருத்திபண்ணும் குலமாய், செல்லும் - செல்லும்படியராய், நல்ல - ஶ்லாக்யமான, கோட்பாடு - ஸ்வீகாரப்ரகாரமானது, ஊழிதோறூழி-மஹாகல்பந்தோறுமுண்டான, ஊழி - அவாந்தர கல்பங்களிலும், தமியேற்கு - ததீயபாரதந்த்ர்யத்தி லொப்பின்றியே யிருக்கிறவெனக்கு, வாய்க்க-உண்டாகவேணும்.

ஆறு:—(வாய்க்க) இப்ப்ராப்யமே யெனக்கும் எனபரிக்ரஹத்துக்கும் என்றும் வாய்க்கவேணுமென்கிறார். (௧௦)

ஈடு; அவ;—இப்ப்ராப்யம், எனக்குமென்பரிக்ரஹத்துக்கு மென்றும் வாய்க்கவேணுமென்கிறார்.

(வாய்க்கதமியேற்கு) புருஷார்த்தத்தினெல்லையிலே அவகாஹிக்கையாலே உபமாநரஹிதனானவெனக்கு இப்பேறே வாய்க்கவேணும். (ஊழிதோறூழியூழி) காலதத்த்வமுள்ளதனையு மிடைவிடாதே யாவதாத்மபாவியாக விதுவேபுருஷார்த்தமென்கை. (மாகாயாம் பூவித்யாதி) அழகியகாயாம்பூப்போலேயிருக்கிற திருமேனியையும், கல்பகதருபணைத் தாப்போலேயிருக்கிற திருத்தோள்களையும், கல்பகம்பூத்தாப்போலேயிருக்கிற திருவாழியையுங்காட்டி என்னையநந்யார்ஹமாக்கினவன்.

(நீக்கமில்லாவடியார்) பிரியநினைக்கில் (௧) "க்ஷணமபி வைகுண்டேஷு - குருஷ்வமாம்" என்னவேண்டும்படி விஶ்லேஷிக்கமாட்டாதவர்களில் சரமாவதியானவர்கள் என்ஸ்வாமிகள், "தமர்கள் தமர்கள் தமர்களாம்" என்றுமுடித்தவெல்லையை முதலாகத்தொடங்குகிறார்; சயமேயடிமை தலைநின்றாராகிறார் - ஸ்ரீபரதாழ்வான்போல்வார்; கோதிலடியாராகிறார் - ஸ்ரீசத்ருக்நாழ்வான்போல்வார்; நீக்கமில்லாவடியாராகிறார் - இளையபெருமாள்போல்வார்.

(அவர்க்கேகுடிகளாய்) இருகரையராயிராதே, (உ) "நவெதேஷாம் ஜகந்நாத ஸந்த்ராஸம் ச அபசாரஜம் | காவேரீ யமுநா தூரே ஸமீபே குலம்யுதம் - நதேஷ்ஹராமாந்தரா மத்ஸ்யாஸ்ஸந்தி தாத்ருஶ: | காமவஸ்தாம்ப்ரபத்யந்தே ஜந்தவோஹந்தமாத்ருஶ:" என்றிருக்கப்போலேகாணுமடிப்பது. (அவர்க்கேயித்யாதி) அவர்களுக்கே ஸபரிகரமாக வநந்யார்ஹராய்ச் செல்லும் நல்ல கட்டளை - வாய்க்கதமியேற்கு. கோட்பாடு - கோலுபாடு (௧௦)

---

(௧) ரா-அ-ரு-௧௨- (உ) முக்தகம்.

பதினொன்றாம்பாட்டு.

நல்லகோட்பாட்டுலகங்கள்மூன்றினுள்ளுந்தான் நிறைந்த * அல்லிக்கமலக்கண்ணனையந்தண் குருகூர்ச் சடகோபன் * சொல்லப்பட்டவாயிரத்துளிவையும் பத்தும்வல்லார்கள்* நல்லபதத்தால், மனைவாழ்வர் கொண்டபெண்டீர்மக்களே. (கக)

ப:—அநந்தரம், இத்திருவாய்மொழிக்குப்பலமாக ததீயசேஷத்வ பர்யந்தமான பார்யாபுத்ராதி ஸம்பத்ப்ராப்திகளை யருளிச்செய்கிறார்.

(இ - ள்) நல்ல - விலக்ஷணமான, கோட்பாடு-இடமுடைமையை யுடைத்தான, உலகங்கள் மூன்றினுள்ளும் - ஜகத்த்ரயத்திலும், தான் நிறைந்த - வ்யாப்தனாய், அல்லி - விகஸிதமான, கமலம்-தாமரைப்பூப் போலேயிருக்கிற, கண்ணனை - கண்களையுடையனானவனைப்பற்ற, அம்-தர்ஶநீயமாய், தண் - ஶ்ரமஹரமான, குருகூர் - திருநகரிக்குநிர்வாஹகரான, சடகோபன் - ஆழ்வார், சொல்ல-அருளிச்செய்ய, பட்ட-உண்டான, ஆயிரத்துள் - ஆயிரத்துள், இவையும்பத்தும் - இவைபத்தையும் வல்லார்கள் - அப்யஸிக்கவல்லார்கள், கொண்ட - ஸ்வீகரிக்கப்பட்ட பெண்டீர்மக்களை - பார்யாபுத்ராதிகளை யுடையராய்க்கொண்டு, நல்ல-விலக்ஷணமான, பதத்தால் - ததீயஶேஷத்வபர்யந்தமான பதஸ்த்தையோடே, மனை - கார்ஹஸ்த்யத்திலே, வாழ்வர் - ஜீவிக்கப்பெறுவர்கள்.

இதுவும் அறுசீராசிரியவிருத்தம். (கக)

ஆறு:—(நல்ல) இப்படி பாகவதஶேஷதைகரதிகளான, ஆழ்வாரிருந்தருளின லோகத்திலே † புகுந்தருளிப்பெற்ற ப்ரீதியாலே புதுக்கணித்த திருக்கண்களையுடையனான வெம்பெருமானை ப்ரதிபாதிக்கிற வித்திருவாய்மொழியைவல்லார், பாகவதசேஷத்வத்தை இங்கேபெற்று ஸபரிகரமாக வாழப்பெறுவரென்கிறார். (கக)

ஈடு; அவ:—நிகமத்தில் - இத்திருவாய்மொழிவல்லார், இதிற் சொன்ன பாகவதஶேஷத்வத்தைப்பெற்று ஸபரிகரமாக வாழப்பெறுவரென்கிறார்.

(நல்லகோட்பாட்டுலகங்கள்) இவர் "பாகவதஶேஷத்வமே பரமபுருஷார்த்தம்" என்று * நெடுமாற்கடிமை யருளிச்செய்தபின் புகாணும் லோகம்கட்டளைப்பட்டது. (மூன்றினுள்ளும் தான்நிறைந்த) வ்யாப்தியும், தேவையாகையன்றிக்கே புதுக்கணித்தது (அல்

† (பா) புகுந்தருள-

லிக்கமலக்கண்ணனை) இவர், தன்னைப்பற்றினாரைப்பற்றி விரும்ப விரும்ப, திருக்கண்களும் சிவந்து புதுக்கணித்தன. (அந்தண்குரு கூர்) ஊரும் தர்சநீயமாய் ஸ்ரமஹரமாயிற்று. (சடகோபன்சொல் லப்பட்டவாயிரம்) வேதம்போலே தான்றோன்றியன்றிக்கே யிருக் கை. பரத்வம்போலே வேதம்; அவதாரம்போலே திருவாய்மொழி. (இவையும்பத்தும்வல்லார்கள்) இப்பத்தை யப்யஸிக்கவல்லவர்கள்.

(நல்லவித்யாதி) நல்லபதமாகிறது - பாகவத சேஷத்வமிறே, அத்தை இத்திருவாய்மொழியிலே இவர்நிஷ்கர்ஷித்தபடியாலே; அத்தோடேகூட, (மனைவாழ்வர்) கார்ஹஸ்த்யதர்ம மநுஷ்டிக்கப் பெறுவர். (கொண்டவித்யாதி) தாங்கொளானாறைநினைக்க பரிகரமொ ன்றைநினைக்கையன்றிக்கே, ஸபரிகரமாக பாகவதர்களுக்கு அடிப்பாக வர்த்திக்கப்பெறுவர்.

திருவனந்தபுரத்துக்குச் சாத்தாகப் போகாநிற்கச்செய்தே, திருக்கோட்டியூரிலே செல்வநம்பி திருமாளிகையிலேபோய்ப் புக்கார் களாய், நம்பி தாம் அஸந்நிஹிதராயிருக்க, நங்கையார், நூறுவித்துக் கோட்டைஇடக்க, அவற்றைக்குத்தி ஸ்ரீவைஷ்ணவர்களை யமுது செய்யப்பண்ணிவிட, பிற்றைநாள் நம்பிவந்து "அவைசெய்ததென்" என்ன, "பரமபதத்திலேவிளைவதாகவித்தினேன்" என்றாராய்; "தொண்டனூர்நம்பி, எச்சான்" என்று சிலமஹாபுருஷர்களுண் டிறே-பாகவதசேஷத்வமே யாத்ரையாய்ப்போந்தவர்கள், அவர்கள் படியேயாகப் பெறுவர்கள். (௧௧)

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

திருவாய்மொழி

எட்டாம்பத்து பத்தாந் திருவாய்மொழி

முற்றிற்று.